# பஞ்சகாவிய நிகண்டு



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 418

# பஞ்ச காவிய நிகண்டு

*சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :*
**டாக்டர். ச. அரங்கராசன்,** B.I.M.,
*சித்தமருத்துவ அலுவலர், (ஓய்வு)*
*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*
**சரசுவதி மகால் நூலகம்,**
**தஞ்சாவூர்.**

2008 ] [விலை: ரூ. 165-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : பஞ்சகாவிய நிகண்டு |
| பதிப்பாசிரியர் | டாக்டர் ச. அரங்கராசன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 418 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2008 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 520 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : சித்த மருத்துவம் |
| விலை | : ரூ. 165-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

மன்னர் சரபோஜி அவர்கள் தம் அரண்மனை மருத்துவச் சாலையில் தேர்ந்த மருத்துவத்துறை வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்தும், மரபுவழி அனுபவமாக அறிந்தும் பெற்ற மருத்துவமுறைகள், மருந்து செய்யும் முறைகளைத் தமிழ்ப் புலவர்களைக்கொண்டு செய்யுட்களாக ஓலைச் சுவடியில் எழுதிவைத்தும், மருத்துவச் சுவடிகளைச் சேகரித்தும் வைத்துள்ளார்கள். அம்மருத்துவ முறைகளடங்கிய ஓலைச்சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பெற்றும், நூல்களாக வெளியிடப் பட்டும் வருகின்றன. அவ்வகையில் **பஞ்சகாவிய நிகண்டு** என்னும் இவ்வைத்தியநூல் தற்போது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சுவடி எண்.1303, பஞ்சகாவிய நிகண்டு ஆகும். அந்தாதி நடையிலே இந்நூல் அமைந்துள்ளது. அந்தாதி நடையில்லாத பாடல்களும் பொருளுக்குத் தொடர்பற்றுள்ள பாடல்களும் இந்நூலாசிரியரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. இந்நூலானது சற்றேறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என கருதப்படுகிறது. இந்நூல் "அகத்தியர் ஏமத்துவம்" என்றும் "பஞ்சகாவிய நிகண்டு 800" என்றும் இரு தலைப்புகளில் கூறப்பட்டுள்ளது.

இந்நூலின் தற்போதைய பதிப்பாசிரியரான டாக்டர் ச.அரங்கராசன் அரிதின் முயன்று இந்நூலின் மூலபாடம், பாடவேறுபாடுகள், வடிவ வேறுபாடுகள், பாடவேறுபாடு

களால் நேரும் பிழைகள், தடுமாற்றம் தரும் சொற்கள், பாட எண்களில் உள்ள குழப்பங்கள், விடுபாடுகள், தெளிவுகள், உரைவிளக்கங்கள், அட்டவணைகள் என பன்முக நோக்கில் ஆய்ந்து தெளிவுரை தந்துள்ளார்கள்.

மருத்துவ நிகண்டுகளில் ஒன்றான இந்நூல் சித்த மருத்துவத்துறை ஆய்வாளர்களுக்கும், சித்தமருத்துவ ஆர்வலர்களுக்கும் பெரிதும் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி.சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறைப் பணியாளர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்**
**இயக்குநர்,**
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சாவூர்,
29-1-2008.

# நூல் ஆய்வு

**பஞ்ச காவிய நிகண்டு** என்ற இந்நூலின் ஆசிரியர் அகத்தியர். இவருக்கு குறுமுனி, பொதிகை முனி, கலச முனி, கும்பமுனி, தட்சணாமூர்த்தி போன்ற வேறு பெயர்களும் உள்ளன.

## அகத்தியர்

அகத்தியர் என்ற பெயரில் பல நூல்கள் உள்ளன. மருத்துவத்துறையும் அதற்கு விலக்கல்ல. சித்தமருத்துவத்தில் வழங்கப்படும் 80 நூல்கள் பெரும்பான்மையாக அகத்தியர் பெயரில் வெளிவந்துள்ளன. ஆயின் இவர்கள் எல்லோரும் ஒருவரே அல்லர். பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள். சான்றாக அகத்தியக் குடும்பன்[1] என்பவன் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்தவன். மருத்துவநூல் ஒன்றைச் செய்தான். அகத்தியன் என்று தன்னுடைய நூலில் தன்னைக் கூறிக்கொண்டபடியால், இவனும் அகத்தியன் என்று பிற்காலத்தவர்களால் எண்ணப்பட்டான். இது போன்றே வேளாள மரபில் தோன்றிய ஒருவர், அகத்தியர் இயற்றிய மருத்துவநூல்களை உலகில் பரவச்செய்தார் என்றும் அதனால் இவருக்கு அகத்தியவேளாளன் என்றே பெயர் ஏற்பட்டது.

உலகில் உள்ள உயிரினங்களுக்கு ஏற்படும் பிணிகளையும், நோய்களையும் தீர்ப்பது மருத்துவம். இதை இடைக்காலத்தில் வைத்தியம் எனவும், பண்டுவம் எனவும், கூறினர். மருத்துவம் செய்வோர் பண்டிதர்கள் எனவும் அழைக்கப் பட்டார்கள். பல நூல்களைப்பற்றிய அறிவும், நோய்களை நீக்கும் திறமையும் உள்ளவர்களே வைத்தியர்கள் என இலக்கணம் வகுக்கப்பட்டது. (சோதிடம் எனப்படும்) நாள் நூல், (பஞ்சபட்சி என்ற) ஐவகை பறவைகளின் நிலை

---

1. அகத்தியர் வைத்திய காவியம் 1500-வே. இரா. மாதவன், பக்கம்-38, த.ப.க, தஞ்சாவூர், கே.பி.டி பிரஸ், சிதம்பரம்-1994.

உயிர்க்கலை பற்றிய அறிவு (சரநூல்), இரசவாதம், அகத்தியர் செய்த மருத்துவ நூல்களை அறிந்திருத்தல் என்பவற்றுடன், மனிதர்களுக்கான மருத்துவம்,அரசர்களுக்கான மருத்துவம், அறுவை மருத்துவம் என்ற மூன்று முறைகளையும் மருத்துவர்கள் அறிந்திருத்தல் அவசியம்.

## நிகண்டு

நிகண்டு என்பதற்கு **உரிச்சொல்** பனுவல் என்பது பொருள். வடமொழியில் அமைந்த வேதத்திற்கு பொருள் கொள்ள எழுந்தவை நிகண்டுகள். அதைப்பின்பற்றியே தமிழில் நிகண்டுகள் கி. பி. 9ம் நூற்றாண்டு முதல் தோன்றின. மொழிக்காக ஏற்பட்ட நிகண்டுகள், பின்னர் சித்த மருத்துவத்திற்கும் தோன்றின. குழூக்குறிச் சொற்களுக்கும், மந்திரம் போன்றவற்றிற்கான விளக்கங்களைப் பெறவும், இவை தோன்றும் தேவை ஏற்பட்டிருத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் பல்வேறு நிகண்டுகள் எழுந்தன. சில நிகண்டுகள் வழக்கில் உள்ளன. பல வழக்கற்றுப்போயின. பதிப்பு செய்யப்பட்டவையும், பதிப்பில் வெளிவராத நிகண்டுகளும் உள்ளன.

### நிகண்டு என்ற பெயரில் வந்துள்ளவை

| | | |
|---|---|---|
| 1. | அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு | 1875 |
| 2. | போகர் நிகண்டு | 1883 |
| 3. | நந்தீசர் நிகண்டு | 1918 |
| 5. | சட்டைமுனி நிகண்டு | 1873 |
| 6. | தன்வந்திரி நிகண்டு | 1925 |

யூகி வைத்திய சிந்தாமணி குறிப்பிடும் தமிழ் நிகண்டுகள், 1.உபரச நிகண்டு, 2. பரிபாசை நிகண்டு, 3. அட்டாசர நிகண்டு, இந்நிகண்டுகள் யாவும் வழக்கற்றுப் போனவைகளாகும். இவையன்றி இன்னமும் வெளிவராத சித்த மருத்துவ

நிகண்டுகள்: 1. அறுசுவை நிகண்டு, 2. மாந்திரிக நிகண்டு, 3.நிகண்டு 116, 4. நிகண்டு 110, 5. மூலிகை நிகண்டு, 6. இந்திர சால நிகண்டு 200, 7. இரசவர்க்கம் (சட்ரச), 8. நிகண்டு 100, 9.திருமந்திரம் 3000க்கு நிகண்டு, 10. மச்சமுனி நிகண்டு, 11.சாலநிகண்டு, 12.அகத்தியர் நிகண்டு, 13. தட்சணாமூர்த்தி நிகண்டு, 14. மச்சமுனி தீட்சாவிதி நிகண்டு, 15. இராமதேவர் நிகண்டு,16. சூதமுனி நிகண்டு, 17. அகராதி நிகண்டு, 18. சவ்விய நிகண்டு [1], இதில் பஞ்சகாவிய நிகண்டு 800 என்ற ஏமதத்துவம் தனிச்சிறப்பைக்கொண்டது.

வாத காவியம், பூரண காவியம், ஞான காவியம், மாந்திரிக காவியம், இலட்சண காவியம் என்ற அகத்தியரின் ஐந்து நூல்களுக்கான நிகண்டாகவும் இது விளங்குகிறது. மூலிகைகள், உயிரினங்கள், உப்புகள், உலோகங்கள், உபரசங்கள் போன்றவற்றின் வேறு பெயர்களையும், சில மருந்து செய்முறையையும் எடுத்துரைக்கின்றது. வைத்திய காவியம் தற்போது வழக்கிலில்லை.

## எண்ணூறு

சித்த மருத்துவ நூல்களில் செம்பாதியானது பாடல் தொகையுடன், நூல்களின் பெயர்கள் இணைந்துள்ளன. பாடல்களின் எண்ணிக்கையை அறுதியிட்டுக்கூறுவது. இடைச்செருகல்கள் ஏற்படாமல் தடுக்கும் நோக்கைக் கொண்டதாக இருக்கலாம். எண்ணூறு என்று குறிப்பிடப் பட்டிருந்தாலும், இதில் 970 பாடல்கள் உள்ளன. ஏறத்தாழ 171பாடல்கள் அதிகமாக உள்ளன. பாடல் 970ல் அருளினோம் ஆயிரத்தறுபதுக்குள் என்றதால் 1060 பாடல்கள் இதில் இருத்தல் கூடும் பஞ்ச காவியத்தில் வைத்திய காவியம் ஒன்றல்ல என்று திரு. எஸ். பி. இராமச்சந்திரனின் கருத்து. மாந்திரிக காவியம் உண்டு என அகத்தியர் இதில் கூறுகின்றார். ஆயின் வைத்திய காவியம் பஞ்சகாவியத்தில் தாமரை நூலகம் 1993.

---

1. சித்த மருத்துவ நூலோதி - சே. பிரேமா, த. ப. க. தஞ்சாவூர்.

## நூலமைப்பு

கடவுள் வாழ்த்துடன் தொடங்கி பின்னர் இரசவாதம், முப்பு என்ற வழலையையும் முதல் காண்டத்தில் எடுத்துரைக்கின்றது. இந்நூலாக்கம் செய்யும் முன்னர், முப்பு-300 என்ற சித்த மருத்துவ நூலை இயற்றிய விவரமும் தெரியவரும். முதல் மூன்று காண்டங்கள் இரசவாதம் பற்றியவைகள்; 4, 5ஆம் காண்டங்கள் மருத்துவம் பற்றிய வைத்திய காவியத்திற்கானவை. மாந்திரீகத்துக்கு ஆறாம் காண்டம், ஞான காவியத்திற்காக - ஏழாம் காண்டம். இலட்சண காண்டத்திற்காக எட்டாம் காண்டமும் இயற்றப்பட்டன. மாந்திரீக காவியம் மூன்றாம் காண்டத்திற்கானது என்பதில் முரண்பாடு உள்ளது.

தெளிவான மாந்திரீக காவியத்துக்காக திறமாகச் சொல்லிவிட்டோம் மூன்றாம் காண்டம் (பாடல்-8) பாடல் 5ல் வாணு நீ, வாத காவியம் வழக்காக வசனித்தோம், முதல் காண்டம், இரண்டாம் காண்டம் மூணு நீ, மூன்றாம் காண்டம், இரசவாதம் பற்றியவை போன்ற தோற்றமும், முரண்பாடும் எழ ஏதுவாகிறது. ஏழாம் காண்டமான ஞானகாவியம், சரப்பயிற்சி என்ற மூச்சுக்கலையைப் பற்றியது. இலட்சண காவியத்தில் நாடிகள் பற்றிய விளக்கங்கள் உள்ளன. மேலும் 75,000 பாடல்களைச் சுருக்கி, 50,000 ஆகவும், 35,000, 27,000, 14,000 என்றெல்லாம் குறுக்கி 1000 பாடல்களில் தந்ததாகவும் கூறுகின்றார். 1000ஐயும் மேலும் சுருக்கி 800 பாடல்களில் ஆக்கியதாகவும் தெளிவாக்குகின்றார். இந்த நிகண்டு உதவியின்றி பஞ்ச காவியங்களைத் தெளிவாக அறிதல் இயலாது. பரிபாசை விளக்கம், காவியங்களின் சிறப்பு, சித்தர்களின் மறைப்பு என்பவற்றைக் கூறினார். மருத்துவர்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிகளைச் சிறப்புடன் விளக்குகின்றார். ஆயின் இந்நூல் தமிழ்த்துறை நிகண்டு களைப்போல தெய்வவர்க்கம், மானிட வர்க்கம், அஃறிணை உயிர்ப் பொருட்படலம் போன்றவைகளையோ, சட்டமுனி நிகண்டு போன்று தனிப்பாடல்களாகவும் இல்லாமல்,

அந்தாதி முறையில் அமைந்து தனியாகப் பிரிக்க இயலாமல் உள்ளது. மேலும் மருத்துவ முறைகளும் இடம்பெற்றுள்ளன. வடசொல், நாட்டுப்புறச்சொற்களும் விரவி வருகின்றன.

## பாடப்பட்டுள்ள முறை

பாடல்கள் யாவும் புரியும் வகையில் இயற்றப் பட்டுள்ளன. அகத்தியர் புலத்தியரைப் பார்த்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது. சில இடங்களில் வேறு வகையாகவும் வந்துள்ளது. தான் செய்துள்ள நூல் என்பதை உறுதிப்படுத்தும் தன்மையாகவும் பாடல்கள் காணப் படுகின்றன.

**இரண்டாம் காண்டம்:**

"புகலும் புலத்தியனே, மாசமென்ற துருவின் பேரே"
"பாரப்பா, புலத்தியனே, அப்பாகமானால்"
"வசனித்தோம் புலத்தியனே, சமாதி எரு வென்றபேரே"
"புலத்தியனே, அய்யா செப்பினோம் முழுது முற்றும்"

**நான்காம் காண்டம்:**

"வசனிப்போம், புலத்தியனே, மகிழ்ந்து பாரே"
"புலத்தியனே, மன முகந்து, புகலக் கேளு"
"விரும்பிப்பார், புலத்தியனே, இந்த எண்ணூறு பீடம்"

**ஐந்தாம் காண்டம்:**

"புகழ்ந்து பார், புலத்தியனே அய்யா கேளு"
"தானான புலத்தியனே, அய்யா கேளு"
"காணப்பா, புலத்தியனே, பூபதியே கேளு"

**ஆறாம் காண்டம்:**

"பாரப்பா, புலத்தியனே"
"ஆமோதான், புலத்தியனே, சுந்தரமே கேளு"
"பொய்ப்பா சொல்லவில்லை, புலத்தியா கேள்"
"காணப்பா, புலத்தியனே கருவான நிகண்டிது"

**ஏழாம் காண்டம்:**

“வன்மையென்ற புலத்தியனே, உனக் குரையச் சொல்வோம்”
“கொள்ளப்பா, புலத்தியனே, இராசயோகி”
“வாசப்பா, புலத்தியனே,இந்த வெண்ணீர்”
“வானான சுந்தரமே, புலத்தியனே கேள்”
“அருளினோம், புலத்தியனே, மவுனியின் பேரே”

**எட்டாம் காண்டம்:**

“காணப்பா, சுந்தரமே, புலத்தியனே கேள்”
“சொல்லக்கேள், புலத்தியனே, கேள்”
“கணிதமதாய் சொல்லுகின்றோம், புலத்தியா”
“ஆரா, அகத்திய மா முனிவனுட வாக்கியம்”
“கேளப்பா, சுந்தரமே, புலத்தியனே கேள்”
“காண்நலமாய் புலத்தியனே கரு நளினமிது”
“பாரப்பா, புலத்தியனே மெய்யாய் சொன்னோம்”
“அறிவாகச் சொல்லிவிட்டோம், புலத்தியனே”
“போடப்பா, புலத்தியனே, இராசயோகி”

**முதலாம் காண்டம்:**

“வைய்யப்பா, பூபதியே புலத்தியனே, கேளு”
“பாரப்பா சுந்தரமே, புலத்தியனே கேளு”
“குருவறிய புலத்தியனே சீரகம் சேர்த்தரைத்து”
“ஒகோகோ, பார் புலத்தியனே”
“செய்யப்பா, புலத்தியனே, இராசயோகவானே”

**வேறு:**

“பேசினோம் அயல் பாசை பிரசண்டத்தின் பேரே”
“ கலைக் கோட்டு மாமுனிவர்”
“செகராச பூபதியைச் செப்பினோம் உண்மை”
“துதிராச பூபதியே வாழ் வென்போரே”

**ஐந்தாம் காண்டம் : தன்னிலை**

"குருவியென்ற குருமுனிவர் ஓது மொழிவாக்கு"
"வாரான செந்தமிழ் மாமுனிவர் ஓதும்"
"ஆக்கியமாய் சொல்லிவிட்டோம் அகத்திய மாமுனிவர்"
"அகத்திய மாமுனிவோன் சொன்ன மொழி"
"தட்சண முனிவன் சொல், செந்தமிழ் கவிதான்"

இரண்டாம் காண்டம் பாடல் 138. இது "நிலைபெறுவாய் நெஞ்சமே" என்ற அப்பர் தேவாரத்தின் தாக்கத்தைக் கொண்டுள்ளது.

"பதிமேவும், பதிவாசன் தட்சண மாமுனிவன் செப்பு" தன் உள்ளத்தை முன்னிலைப்படுத்தி ஓர் பாடல் உள்ளது. சம்பந்தர், "நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்" என்று தன்னை குறிப்பது போல இந்நூலாசிரியரும் தமிழுடன் தன்னைத் தொடர்புபடுத்துகின்றார்.

## புலத்தியர்

புலத்தியர் அகத்தியரின் மாணவர், மனைவியின் உடன் பிறந்தவர் என்று புராணங்கள் கூறுகின்றன. சிவராசயோகத்தில் சிறந்தவர், திருமந்திரத்துக்குக் காரணமானவர். இவருக்கு சிவராச யோகி என்றும் பெயர். இவர் சீனப்பகுதியின் கடலோரத்தில் சிலநாள் தங்கியிருந்து, பிறகு தேரையரோடு பொதியமலைச் சாரலில் வந்து சமாதி புகுந்தார். பிறகு சில காலம் சென்று, வெளிவந்து, தேரையருக்குப் புத்தி சொல்லி, மறுபடியும் சமாதி புகுந்து தேகத்தை மறந்தார். இவர் ஆவணி மாதம், அனுசம் 4ம் காலில் தேவரிசி வரத்தால் கமலமுனிக்குப் பிறந்தவர். (சா.சி.பி.அ. பக்கம் 3397 - 5ம் பாகம்)

## சித்த மருந்தியல்

அக்கால கல்வி முறைப்படி, இவரை அகத்தியர் விளித்துப் பாடும் முறையாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நிகண்டில் பல்வேறு செய்திகள் வருகின்றன. பற்பம், லேகியம், செந்தூரம், சுண்ணம், குளிகை, சாரணை, கட்டு,

மாத்திரை, பூபதி மாத்திரை, திராவகம், செயநீர் என்ற மருந்து வகைகள் பாடல் 276முதல் வருகின்றன.

மருந்துகள் செய்யும் முறைகளாக, 1. கிழிச்சுன்னம், 2.கிருதம், 3.கொடி மூலச்சல்லிமை, 4. கொடிச் சுண்ணம், 5.குளிகை, 6. குளிகை, அனுபானம், 7. குளிகையின் பெயர்கள், 8. ஈரல் சுண்ணம், 9.உகாந்த கார செயநீர், 10. எட்டுத்திங்கள் பிண்ட பற்பம், 11. ஐங்காய செயநீர், 12. கலை மெழுகு, 13. அகண்ட சுண்ணம், 14. ஆறாம் காய்ச்சல் உப்பு, 15. பிண்டச் சுண்ணம், 16. பிண்ட உப்பு செயநீர், 17. கொசத்திராவகம், 18. சங்கு திராவகம், 19. சர்வத்திராவகம், 20. சவர்க்காரச் சுண்ணம், 21.முப்பு, 22. லோகத் திராவகம், 23. வழலை உப்பு, 24.பூரணாதி உப்பு, 25. வழலை நாத உப்பு, 26. அண்ட செயநீர், 27. பூநீறு செயநீர்.

இது தாது, தாவர, உயிரினங்களைக் கொண்டு செய்யப்படும் உலோகங்கள் எட்டு, உப்புகள் 25, உபரசங்கள்120, பாடாணங்கள்64, வைப்புச் சரக்குகள், முப்பு ஆகிய அகமருந்துகள் 32, புற மருந்துகள் 32 ஆக 64 வகைப்படும். இவற்றால் மனிதர்களுக்கு ஏற்படும் 4448 வகைகளாலான நோய்களை நீக்கமுடியும் எனக் கண்டறிந்துள்ளார்கள். இன்று வழக்கற்றுப்போன பல மருந்துகளின் செய்முறைகளும் உள்ளன. மந்திரச் சடங்குகளுக்கான "மை" செய்யப்படுவது பற்றியும் உள்ளது.

1. அண்ட செயநீர்
2. அண்டச்சுண்ணம்
3. ஆறாம் காய்ச்சல் உப்பு
4. ஈரல் சுண்ணம்
(8ம் திங்கள் பிண்ட பற்பம்)
5. உகாந்த கார செயநீர்
6. உலோகத் திராவகம்
7. ஐங்காய செயநீர்
8. கிழிச்சுண்ணம்
9. கலை மெழுகு
10. (கிருதம்) நெய்
11. குளிகை
12. கொடிச் சுண்ணம்
13. கொடி மூல சல்லிமை
14. கொச திராவகம்
15. பிண்டச்சுண்ணம்
16. பிண்ட உப்புச் செயநீர்
17. சங்கத்திராவகம்
18. சர்வ திராவகம்

19. சவர்க்காரச்சுண்ணம்
20. வழலை உப்பு
21. வழலை நாத உப்பு
22. பூரணாதி உப்பு
23. பூநீறு செயநீர், மதன லேகியம்
24. மூதண்டச் செந்தூரம்

இவருடைய காலத்தில் இம்முறைகள் மங்கியோ அல்லது வழக்கில் இல்லாத நிலை தோன்றி இருத்தல் கூடும். இவற்றை அறியும் பொருட்டு நூலில் இம்முறைகளை இவர் கூறி இருத்தல் வேண்டும். நிகண்டு இலக்கணம் கூறும்போது மருந்துகளின் செய்முறைகளை விளக்க, இவற்றை கூறி இருத்தலும் ஆகும். இம்முறைகளில் சுண்ணம், செயநீர், உப்பு என்ற வகைகள் அதிகம் கூறப்பட்டுள்ளன. இவைகள் யாவும் எளிதில் செய்யமுடியாத அரிய முறைகளாகும். அகமருந்து 32ல் உப்பு செயநீர், சாரணை என்ற வகைகள் இடம்பெறவில்லை. எனவே அகத்தியர் காலத்தில் இம்மருந்து முறைகள் வழக்கற்றநிலை தோன்ற, அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் எண்ணமுடன், இந்நூலில் சேர்ந்திருக்கலாம். சுண்ண வகைகளும் இன்று வழக்கற்ற நிலையில் உள்ளன. செயநீர் என்பது மருந்தல்ல. மருந்துகளைச் செய்யப்பயன்படும் உலோகங்கள், இரசம் போன்றவைகளை, உருக்கி, உருமாற்றம் செய்யத் தேவையான அடிப்படையான பொருள். இதுவும் அக, புற மருந்துகள் பட்டியலில் இல்லை. எனவே இவற்றின் இலக்கணத்தைக் கூறும் எண்ணத்துடன் இவ்வகை மருந்து செய்முறைகளையும், மருந்து செய்யத் தேவையான, செயநீர், அகத்தியரின் திராவகம் போன்றவைகளையும் கூறியுள்ளார். மகா திராவகம் 800, திராவகம், செயநீர் வகைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கும் நூலாகும். மருந்துகளைப் பற்றிய இலக்கணம் கூறும் வகையில் இம்முறைகளைப் பற்றிக் கூறும் தேவை ஆசிரியருக்கு எழுந்திருக்கலாம்.

## தொகை வகைகள்

மூலிகைகளின் பெயர்களை எல்லாம் விளக்கிக் கூறுகின்றார். சில இடங்களில் எட்டெட்டுப் பெயர்களாகக் குறிப்பிடுகின்றார். சான்றாக 4ம் காண்டத்தில் வேளையின் பெயர்களைக் கூறுகின்றார்.

## இதுபோன்றே ஏனையவை

"ஆகப் பேரெட்டாச்சு வேளையின் பேரே"
"வசனித்தோம் எட்டு, நாவேளையின் பேரே"
"நாம் சொன்னோம் எட்டுப் பேர், செங்கதாரியின் பேரே"
"செப்பினோம் எட்டுப்பேர், முக்கதாரியின் பெயரே"
"ஆக எட்டுப் பேர் சொன்னோம், நிலப்பனையின் பேரே"
"பாடினோம் எட்டுப்பேர், பருத்தியின் பேரே"
"சாற்றினோம் எட்டுப் பேர், செவ்வாமணக்கின் பேரே"
"எட்டென்ற ஆந்தை ஈடன், விழி விலங்கி என்றும்"
"ஆக எட்டுப் பேரதற்கு நெருஞ்சியின் பேரே"
"கருவான எட்டுப்பேர், கொத்தான் பேரரே"
"மடவார்கள் எட்டுப்பேர், முடக்கொத்தான் பேரே"
"செப்பினோம் ஆகஎட்டு, இலுப்பையின் பேரே"
"அருளினோம் சுந்தரமே, எட்டுப்பேரு"
"நவிலும் பேர் எட்டாச்சு, நாய் பாகலதன் பேரே"

**ஐந்தாம் காண்டம்**

"செப்பினோம் கோரோசனைக் கெட்டுப் பேரே"
"கணக்காகும் எட்டுப்பேர், சாராயப் பேரே"
"கணக்காக எட்டுப்பேர், மதனப்பூவின் பேரே"

**ஆறாம் காண்டம்**

"அண்டினமா, மக வெட்டுப் பேரும் சொன்னோம்"
"சமர்த்தான பேரெட்டு, ஈயின் பேரே"
"நாம் சொன்னோம், கொசுவதற்கு எட்டுப் பேரே"

## நோய்கள் பற்றியவை

முதல் காண்டத்தில் பாடல்15இல் கர்ம நோய் தொழுநோய் பற்றி வந்துள்ளது. நாள் நூல் (சோதிடம்) ஆறாம் காண்டத்தில் பாடல் 626 முதல் 629 வரை சோதிடக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சித்திகளுக்கு விவரம் என்ற தலைப்பில் ஏறத்தாழ நான்கு பாடல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எனவே நாள் நூலிலும் இவர் வல்லவர் எனலாம்.

## மருந்துகளின் பெயர்கள்

### நிகண்டு நூலாயினும் சில சித்த மருத்துவ முறைகள் இடம்பெறுகின்றன

| | |
|---|---|
| 6ம் காய்ச்சல் உப்பு | வழலை |
| கல்லுப்பு | மூதண்டச் செந்தூரம் |
| கலை மெழுகு | சிவ பாடாணம் |
| காளகண்ட ஏமம் | மது கிருதம் |
| வழுக்கைச் சாரம் | அண்டமெழுகு |
| அண்ட வெள்ளை உப்பு | அண்டச்சுண்ணம் |
| அண்ட உப்பு | கொடிமூல சல்லிமை |
| கொடிச்சுண்ணம் | கொசத் திராவகம் |
| பிண்டச் சுண்ணம் | பிண்ட உப்பு செயநீர் |
| சங்கத் திராவகம் | சர்வத்திராவகம் |
| சவர்க்காரச் சுண்ணம் | வழலை உப்பு |

வழலை நாத உப்பு, பூரணாதி உப்பு, பூநீறு செயநீர் என்பனவும் இடம்பெறுகின்றன. இன்று வழக்கில் இல்லாத இரசவாத முறைகள் இதில் கூறப்படுகின்றன. தொன்மைக்கால கருத்துகளின் பதிவாக இவற்றை நாம் கொள்ளுதல் வேண்டும்.

## தொகை பற்றிய விளக்கங்கள்

தமிழ் இலக்கிய நிகண்டுகளைப் போல 1.உயர்திணைப் படலம், 2. அஃறிணை உயிர் பொருட்படலம், 3. அஃறிணை உயிரியல் பொருட்படலம், 4. குண நாமப்படலம் என்பது போன்ற பிரிவுகள் இல்லை. இதன் பிரிவுகள் யாவும் எட்டுக் காண்டங்களாக பஞ்ச காவியங்களுக்கு பொருள் தரும் வகையிலேயே உள்ளன. காண்டப்பிரிவு நூல்களின் அடிப்படையிலேயே தொடர்நிலைப் பாடல்களாக உள்ளன. பல பாடல்களில் எட்டு என்ற எண்ணிக்கையுடன் வேறு பெயர்களைக் கூறுதல் வேறு நிகண்டுகளிலிருந்து மாறுபட்டுள்ளது. இதன் மூலம், பாடல்களில் வேறு சொற்களை புகுத்துவது இயலாது.

## அளவுகள்

அளவுகள் பெரும்பாலும் கால அளவே கூறப் பட்டுள்ளன. 48 நாள் உண்ணவும் என்பது போல வருகின்றது. இதில் காயகற்பம், இரசவாதம் தொடர்பானவைகள் உள்ளதால், இவற்றை இக்காலத்தில் செய்வது இயலாத செயலாகும். வழக்கற்ற முறைகளின் பதிவு என்றே கொள்ளவேண்டும். பாடல் 795ல் உள்ள மதனப்பூலேகியம் போன்றவைகளே இன்றைய நிலையில் மருத்துவர்கள் செய்யமுடியும். ஏனையவற்றை இலக்கிய நோக்கிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும்.

## பூசை விதிகள்

மந்திரம், மருந்து, மணி என்பனவும், முப்பு என்ற சிறப்பு மருந்தும் கூறப்பட்டுள்ளன. இலட்சண காவியத்தில் பலவிதமான தீட்சை முறைகள் உள்ளன. மாந்திரிக காவியத்தில் பல்வேறு தெய்வங்களுக்கு செய்யப்படும் பூசைகள், வாமாச்சார வழிபாட்டு முறைகளைக் காணலாம். படைக்கப்படும் படையல்கள், பூசை முறைகள் யாவும் ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டுள்ளன. இவை யாவும் இரசவாதிகளுக்கான பூசை முறைகளாகும்.

"தனமதாய் வைத்துச்சிவபூசை செய்து" - 4ம் காண்டம்
"செபிப்பாய் சிரோமணியை சித்தி பெற" - 6ம் காண்டம்
"செய்யும் செபதீட்சை பெரு சத்தியுட தீட்சை" -7ம் காண்டம்

## பழமொழிகள் (உவமைகள்)

பல இடங்களில் பழமொழிகளும், உவமைகளும் கையாளப்படுகின்றன. சான்றாக மூதண்டச் செந்தூரத்தில் வரும் உவமை "பிறை மேகம் சூழ்ந்தது போல்" (பாடல் 57, முதல் காண்டம்). "முழுநிலவை கருமேகம் மறைத்துக் கொண்டது" எனவும் "பொன்மாரி பொழிந்தது போல " - (பாடல்-703) செகவ சியம் என்ற தலைப்பில் வருகின்றது.

இலக்கியவாதிகளின் சாதாரணமாகக் கையாளும் உவமை இது. இந்நூலில் உள்ளது, பாடல் 387ல் "அரவான திரை அகற்றி", "பூமலரின் வாசம் போல", "புலிமேவு கடமான்" - பாடல் 140, " மாவும், புலியும் மருவி அருவியது போலப் பாயும்" - பாடல் 374, "சந்திரன் போல ஒளியாகும்" - பாடல் 182, "வாசமுள்ள பூமலரின் ஒளியைப் போல" - பாடல் 516 "மவுனகிரிச் சாரல் கண்டேகம்" - பாடல் 519, "சச்சிதானந்த வெளிச்சாரல் கண்டோம்" - பாடல் 521, "கிளிமொழியே கேள் செவியால்" - பாடல் 529, "காசி தீர்த்த மாடினால் கன்மம் போமே" - பாடல் 525, "கொடுத்துக் கெட்டக் கடன்காரன் துணியின்றித் திரிவது போலே" அமைகின்றன.

## வரலாற்றுக் கண்ணோட்டம்

சில சொற்களின் காலம் கி. பி. 9ம் நூற்றாண்டு முதல் 18ம் நூற்றாண்டுவரையில் உள்ளன. மேலும் பிற்கால தாவரங் களான வெங்காயம், பூண்டு என்பனவும் முகலாயர்களின் கால பட்டாணியும் இடம்பெற்றுள்ளன. இதுபோன்றே நீருக்கு வேறு பெயர் கூறும் போது பானி என்ற இந்திச் சொல் கூறப்பட்டுள்ளது. (6ம் காண்டம்) வட இந்தியாவிலிருந்து 1311ல் தமிழகத்தில் முஸ்லீம்கள் படையெடுப்பு நிகழ்ந்தது. மாலிகாபூர் மதுரையைத் தாக்கி பொருள்களைக் கவர்ந்து சென்றான். அப்போது அவர்களின் உணவு வகையான பட்டாணியும் இங்கு வந்திருத்தல் கூடும். எனவே இந்நூலின் காலம் ஏறத்தாழ 14ம் நூற்றாண்டு எனலாம். இக்காலமே சித்தர்களின் காலம். இக்காலத்தில் ஏராளமான சித்த மருத்துவ நூல்கள் புதிய வடிமுடன் வெளிவந்துள்ளன. கி.பி. 1378ல் இரண்டாம் புக்கன் மதுரை சுல்தானை தோற்கடித்து விசயநகர ஆட்சியை நிறுவினன். இவனது ஆட்சிமொழி தெலுங்கு மொழி இம்மொழி பற்றி இந்நூல் குறிப்பிடுவதால் இந்நூலின் காலம் 14ம் நூற்றாண்டு ஆதல் கூடும். ஏறத்தாழ ஆங்கிலேயர்கள் வணிகர்களாக புகுந்து பரவிய காலமும் இதே. அப்போது, வெங்காயம், பூண்டு என்பன உணவு வகைகளில் இடம்பெற்றிருத்தல் கூடும். முசுமுசுக்கையின்

பெயரைக் கூறுமிடத்து "யாழ்மூலி" எனக் கூறுகின்றார். எனவே இவர் இசை மீது விருப்பமுள்ளவர் என்பதுடன், இவர் காலத்தில் யாழ் வழக்கிலிருத்தல் கூடும். செகராசபூபதியைச் செப்பினோம் உண்மை என்று பாடல் 94ல் வருவதால், ஈழமன்னர் செகராச மன்னனுக்கும் இவருக்கும் தொடர்புள்ளதாக அறியலாம். நேர் சான்றாக இதைக் கொள்ள இயலாது. செகராச மன்னன், சித்த மருத்துவ நூல்களுக்கு தந்த ஆதரவைக் கொண்டும் அவரைச் சிறப்பிக்க இவ்வடிகளை, இவர் தன் நூலில் சேர்த்திருத்தல் கூடும். அந்தகக்கவி வீரராகவரின் காலம் பரராச சிங்கனின் காலம். எனவே, இவர்கள் கால மாதலும் கூடும். மேலும் கன்னட நாட்டவர்களுக்கு (பாடல் 19) நூல் தருதல் பற்றிக் கூறுதலால் கன்னடமொழி தமிழிலிருந்து பிரிந்தபின் இயற்றியநூல் எனலாம்.

## முரண்பாடுகள்

பலபாடல்கள் அந்தாதித் தொடையில் அமைய வில்லை. (பாடல் 381) வைத்திய முப்பு பெருந்துளசி (பாடல்-410), சிவத்துளசி (பாடல் 413), தழுதாழை (பாடல்-415), தலைச்சுருளி (பாடல் 417) கரு ஊமத்தை (பாடல் 437) செவ்வாமணக்கு (பாடல் 442), பொன்னூமத்தை (பாடல் 438), காஞ்சுரை (பாடல் 447) யானை நெரிஞ்சல் (பாடல் 451), எட்டிமரம் (பாடல் 487), வெட்டிவேர் (பாடல்-492), மஞ்சள் (பாடல் 539,544), இஞ்சி (பாடல் 548) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இது போன்றே நூலாசிரியர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாடல்கள், காண்டங்களில் அமைய வில்லை. முதல் காண்டத்தில் மட்டும் விதி விலக்காக 130 பாடல்கள் சரியானபடி உள்ளன. இரண்டாம் காண்டத்தில் மிகைப்பாடல் ஒன்றும், மூன்றாம் காண்டத்தில் மிகைப் பாடல்கள் எட்டும், நான்காம் காண்டத்தில் குறைவாக ஒன்றும் உள்ளதைக் குறிப்பிடலாம்.

## பெரியோரைப் போற்றல்

இதுபோன்றே புனுகுவின் வேறு பெயராக குந்த குந்தம் எனப்படுவது உள்ளது சமணரான குந்த குந்தாச்சாரியரைக் குறிப்பிடுவதாகவே தோன்றுகிறது. ஏனெனில் அகத்தியரின் பெயரான குருமுனி, கும்பமுனி என்பன நாரைக்கான பெயராகவும், கஞ்சா கோரக்கரின் மூலி எனவும், கோரக்கர் பூண்டு, குரு மூலி எனவும் குறிப்பிடப்படுகின்றது. சதுரக் கள்ளிக்கு (பாடல் 468) வசிட்டர், ரதி மூலி என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. எனவே, குந்த குந்தம் என்பது குந்த குந்தாச்சாரியரின் பெயரையே கூறுவதாகத் துணியலாம் (பாடல் 510) இதுபோல் ஊர்க்கள்ளியின் வேறு பெயர் (பாடல்467), குருமுனி எனப்பட்டது. மொச்சைக்காயை கூறுமிடத்து அருவாதி என்ற சொல் வந்துள்ளது. சமண சமயப் பற்றுடையவராகக் காட்டுகின்றது.

## இலக்கணம்

இந்நூல் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. பல இடங்களில் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை வந்துள்ளது.

"மவுன கிரிச்சரம் கண்டோம்"
"பூமலரின் ஒளியைப் போல"
"விருட்சமென்று ஆலமரத்தின் பேரே"
"வடபூமி மண் நிறத்தின் பேரே"
"பூமலரின் வாசம் போல"

## பாடவேறுபாடுகள்

பல இடங்களில் பாடவேறுபாடுகள் வருகின்றன. ஞானம் என்ற பாடலில் (354) மாலை

| | |
|---|---|
| வானம் | வர்ணம் |
| உள்மூலம் | புள்மூலம் |
| வெறியதற்கு | தெரிவதற்கு |
| மது பாண்டத்தில் | மறுபாண்டத்தில் |

| | |
|---|---|
| எரித்து | எடுத்து |
| விந்தை | வித்தை |
| ஒரு | எரு |
| நிலத்துளசி | நீலத்துளசி |
| வெறுமை | எருமை |
| மாருதி | மருதி |

## வடிவு மாற்றம்

| | |
|---|---|
| அக்கரக்கி | அக்கரக்கி |
| லோகமென்றும் | லோகதம் |
| கோசத்திராவகம் | கொசத்திராவகம் |
| நசி காந்தம் | நசிவாந்தம் |
| சிக்கலாம் | சிகலம் |
| சத்து | சத்தது |
| அலகலவிட | ஆலகாலவிட |
| தென் செயநீர் | தேன் செயநீர் |
| சடல | சிடல |
| சித்தெல்லாம் | சித்தர்க்கெல்லாம் |
| அதனை | அதனில் |
| எட்டாகில் | எட்டத்தில் |
| வில்லை | பில்லை |
| மூன்று | மூன்றாம் |

## சமயம்

சைவ சமயத்தைச் சேர்த்தவர் என்பது பூசை முறைகளைக் கூறுவதிலிருந்து அறியலாம். மேலும் மருந்துகளின் பெயர்கள் யாவும் சிவனுடைய திருப்பெயரை உடையனவாக உள்ளன. சிவபாடாணம், கால கண்ட ஏமம் இலவங்கப்பூவுக்கு சிவராளம் என்ற வேறு பெயர், கடுகு ரோகணிக்கு காங்கயம் என்று பெயரும் கூறப்பட்டுள்ளது. சமயப் பொறை உள்ளவராக குந்த குந்தம், அருவாதி என்ற சொற்கள் இதை உணர்த்தும். குண்டுணி என்பது ஆடையின்றி திரிவதைக் குறிக்கும். ஆடையற்ற துறவிகள் சமணத்தில்

உள்ளனர். பழிச்சொல்லாக பழமொழி கையாளப் பட்டுள்ளது. காசி நீராடுதல், சைவர்களின் மரபு. இம்மரபை ஒட்டியே இவரும் இப்பழமொழியை பழிக்கும் முறையில் கையாளுகின்றார். சன்மார்க்கம் என்ற சொல்லைக் கையாளுகின்றார். இவை பெரும்பாலும் இடைக்காலத்தில் அருணகிரிநாதர் போன்றவர்கள் பயன்படுத்தியது. தேவார காலத்திற்குப் பின்னர் சைவசித்தாந்த நூல்களில் சன்மார்க்க நெறிகள் கூறப்பட்டுள்ளன. புலால் தவிர்த்தல், கள்ளுண்ணாமை, புறங்கூறாமை என்பன சன்மார்க்க வழிகள். இம்முறையில் பிற சமயக் காழ்ப்பு என்பனவும், சைவ, வைணவ வேறுபாடுகளும், இல்லாத நிலையும், சன்மார்க்க வழிகளாகும். சமண சமய வேற்றுமையை இவர் பொருட்படுத்தாதவர் என்பதுடன், அவரின் பெருமையைக் கூறும்படி புனுகுக்குப் பெயர் சூட்டியதும் போற்றத்தக்கன.

## முடிவுரை

இந்நிகண்டு ஏனைய சித்த மருத்துவ நிகண்டு களிலிருந்து மாறுபட்டும், வேறுபட்டும் உள்ளது. இந்நூலைப் பதிப்பித்து ஏறத்தாழ 100 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை இது பதிப்பாகி உரையுடன் வெளிவரவில்லை. நிகண்டுகளை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தால் பல புதிய கருத்துக்களும், புதிய சொற்களும் கிடைத்தல் கூடும். அவ்வகையில் இந்நூல் சிறப்பாக உள்ளது. வழக்கொழிந்த மருத்துவ முறைகளையும், ஏனைய இலக்கியங்களில் காண இயலாத சொற்களையும் கொண்ட இந்த நிகண்டு ஒரு கலைக்களஞ்சியமாதல் கூடும்.

# பதிப்பாய்வுரை

தமிழகத்திலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழ் மருத்துவச் சுவடிகள் உள்ளன. இவற்றில், இசை, நாடகம், மருத்துவம், சிற்பம், இலக்கணம், கட்டிடம் கட்டும் முறைகள், ஆகமம் என்ற தலைப்புகளில் உள்ளன. இவற்றில் செம்பாதியளவு சுவடிகள் சித்த மருத்துவம் தொடர்புள்ளவையாகும்[1]. அந்த வகையில் சித்த மருத்துச் சுவடிகளின் பதிப்புக்கு முதன்மையைத் தரவேண்டி உள்ளது. அத்துடன் 18ம் நூற்றாண்டு முதல் பதிப்பான நூல்களின் அருமையைக் கருதி, மறுபதிப்பு செய்ய வேண்டி உள்ளது. பல சித்த மருத்துவ நூல்கள் மறுபதிப்பு வராமலும், வெளிவந்த நூல்கள் ஆய்வாளர்களுக்குக் கிடைக்காமலும் உள்ளன. எனவே அனைத்துப் பதிப்புகளையும் ஒப்பிட்டுத் திறனாய்வு முறையில் செம்பதிப்பாக சித்த மருத்துவ நூல்கள் வருவதற்குத் தடையாக இந்நிலை உள்ளது. 18ம் நூற்றாண்டில் வெளியானவைகளான பெரும்பான்மையான சித்த மருத்துவ நூல்களில் மூலம் மட்டுமே உள்ளன. எனவே வெளிவந்த நூல்களுக்கு ஆய்வுரை, அட்டவணைகள், பொருளடக்கம் என்பன எழுத வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒரே நூலுக்கு பல்வேறு தலைப்புகள் உள்ளதும், குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் சித்தமருத்துவம் பற்றிய நூலோதிகளும், அட்டவணைகளும் அதிகமாக இல்லை. கருவி நூல்கள் இல்லாததால் ஒரு நூல் பதிப்பானதா அன்றி இல்லையா ? என்ற விவரம் அறிய, நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும் நிலையும் உள்ளது. எனவே, சுவடிப்பதிப்பித்தல், அரிய நூல்களின் மறுபதிப்பு இவற்றை அறிவியல் அடிப்படையில் செய்யவேண்டி உள்ளது.

அந்த வகையில் சித்த மருத்துவத்திற்கு அடிப்படையாக உள்ளவை நிகண்டுகள் ஆகும். நிகண்டுகள் என்பன

---

1. அகத்திலயர் வைத்திய காவியம் பக்கம் 1, வே. இரா. மாதவன், தமிழ்ப்பல்கலைக் கழகம், 1994.

சொல்லுக்குப் பொருளைத் தருபவை. இவற்றைக்கொண்டு தான் நாம் மறை பொருளுக்கு விளக்கத்தை அறிய முடியும். இதில் பல்வேறு காலங்களில் பல்வேறு சித்த மருத்துவ நிகண்டுகள் தோன்றின. ஒரே சொல்லுக்கு வேறு வேறு பெயர்கள், மருந்துகள் செய்யும் முறைகள் என்பனவும் இவற்றில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில நிகண்டுகள் வழக்கொழிந்துள்ளன. சில பதிப்பாகாமல் உள்ளன. ஓர் சில நிகண்டுகளே பதிப்பு செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னர் வே. கந்தசாமி முதலியார் அவர்களால் இரண்டு முறையும் (1871, 1894) ஆறுமுக சுவாமிகளால் ஒரு முறையும் (1876)[1], மூலம் மட்டும் பதிப்பு செய்யப்பட்டது.

ஆறுமுக சாமிகளுக்குப் பிறகு ஏறத்தாழ 103 ஆண்டு களுக்கு இந்நிகண்டானது பதிப்பு செய்யப்படவில்லை என்பது மிகவும் வருத்தப்படக்கூடியது. இந்நிலையில் மூலமும் உரையுமாக அறிவியல் அடிப்படையில் இந்த நிகண்டைப் பதிப்பிக்கும் நிலை ஏற்பட்டது.

**சுவடி பற்றிய செய்திகள்**

சரசுவதி மகாலில் உள்ள சுவடி எண். 1303, பஞ்சகாவிய நிகண்டு சுவடியாகும். இச்சுவடியை அடிப்படையாகவும், வே. கந்தசாமி முதலியாரின் 1894ஆம் ஆண்டு பதிப்பை ஒப்பு நோக்கி, பாடவேறுபாடுகள், படிகள் வேறுபாடுகள் என்பன இடம்பெறுகின்றன. 32 செ.மீ. அகலமும், 3 செ.மீ. நீளமும் இச்சுவடி கொண்டது. மிகவும் பழுதுபட்ட நிலையில் உள்ளது. முதல் ஏட்டின் பக்கத்தில் குருவாழ்க, குருவே துணை என்று எழுதப்பட்டுள்ளன.

கடைசி ஏட்டில், எண்ணூறும் முற்றே, அகத்தீஸ்வர சுவாமி துணை என்றும் எழுதப்பட்டுள்ளது. இந்த சுவடியை

1. சித்த மருத்துவ நூலோதி, பக்கம் 138, சே. பிரேமா, தமிழ்ப் பல்கலைக் கழகம், 1988.

எழுதியவர், எழுதிய ஆண்டு, எழுதப்பட்டதின் நோக்கம் என்பன, சுவடி சிதைந்துள்ளதால் அறியமுடியவில்லை. ஒரே சுவடியானதால் ஒப்பு நோக்க இயலவில்லை.

## யாப்பு

அந்தாதி நடையிலே இந்நூலானது காணப்படுகின்றது. அந்தாதி நடையில்லாத பாடல்களும் பொருளுக்குத் தொடர்பற்றுள்ள பாடல்களும் இந்நூலாசிரியரால் இனங்காட்டப்பட்டுள்ளன. அந்தாதி நடையிலிருப்பதால், அறிவியல் முறையில் இந்நூலை மாற்றி அமைக்க முடியாமல் உள்ளது. எனவே இந்நூல் காலத்தால் முற்பட்டது என உணரமுடிகின்றது.

## காலம்

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குள் இருக்கலாம். சுவடியின் கடைசியில் ஏடு எழுதியோர், எழுதிய காரணம் என்பன சிதைந்துள்ளதால் அறிய இயலவில்லை. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட அச்சு நூல்களும் ஒப்பிடக்கிடைக்கவில்லை. பதிப்பாசிரியர் தன்னிடமுள்ள நூற்றாண்டு முன்னர் பதிப்பான அச்சு நூலை ஒப்பிட்டு, பாடவேறுபாடுகளை கண்டறிந்துள்ளார். பதிப்பான நூல், எந்தச் சுவடியை அடிப்படையாகக் கொண்டது என்ற விவரம் பதிப்பான நூலில் இல்லை. தெளிவான உரையும் இல்லாததால், பதிப்பாசிரியரே உரை எழுதும் நிலையும் உருவானது.

## நூல் அமைப்பு

இந்நூலானது அகத்தியர் ஏம தத்துவம் என்ற பஞ்ச காவிய நிகண்டு 800 என்ற இரு தலைப்புகளில் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் ஏமதத்துவம் என்பதே முதலில் வழங்கி இருத்தல் வேண்டும். ஏமம் என்பதற்கு இன்பம்,

---

1. கழகக் கையகராதி - பக்கம் 78, சைவ சித்தாந்தக் கழகம்.

களிப்பு, காவல், பள்ளியறை, பாதுகாப்பு, இரா, பொன், உறுதி, ஐயம், மயக்கம், பைத்தியம், இடுதிரை, திருநீறு[1] என்ற பொருள்கள் உள்ளன. இதில் இன்பம், களிப்பு, உறுதி, பொன், காவல் என்பன இத்தலைப்புக்குப் பொருந்தி வருகின்றன. ஏம தத்துவம் என்ற தலைப்பே முதலில் இருந்திருத்தல் வேண்டும். ஆயின் பிற்காலத்தில் எளிதில் விளங்க வேண்டி, பஞ்சகாவிய நிகண்டு 800 என்ற பெயரைத் தந்திருத்தல் கூடும். அகத்தியர் பெயரால் உள்ள நிகண்டு 116, இந்திரசால நிகண்டு 200, (ச.ம.நூ.) அகராதி நிகண்டு (ஜி.ஓ.எம்.எல், திருவனந்தபுரம்.) அகத்தியர் சுவாமி நிகண்டு (உ.வே.சா. நூலகம்) அகத்தியர் நிகண்டு (உ.த.ஆ.நி) சால நிகண்டு (வாரியம்)[1] போன்றவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்ட பஞ்ச காவிய நிகண்டு என்ற தலைப்பைத் தந்திருத்தல் கூடும். இத்தகைய பெருமையுள்ள நூலை நன்முறையில் பதிப்பு செய்வதே, பதிப்பாசிரியரின் நோக்கமாக உள்ளது.

## மூலபாட ஆய்வு

பல படிகள் கொண்டு சுவடிகளில் நுணுகி ஆய்ந்து, எது மூலபாடமாக இருத்தல் கூடும் என்ற ஆய்வை மேற் கொள்ளலாம், ஒரேபடியும், அதற்குள்ள பழைய அச்சுப் படிகளும் கிடைக்காத நிலையில் பதிப்பாசிரியரின் பணிக்கு பெரும் தடையானது ஏற்படுகின்றது.

தனக்குக் கிட்டிய கருவி நூல்களின் வழி, பதிப்பாசிரியர் செயல்படும் நிலை உருவாகின்றது. பாடவேறுபாடுகள், வடிவ வேறுபாடுகள் பொருள் மாறுபாடுகளை, ஒரே சுவடியுடன் பதிப்பான நூலைக்கொண்டு ஒப்பிட்டு பார்ப்பது, துல்லியமாக இராது.

## பாடவேறுபாடுகள்

இந்நூலைப் பொருத்தவரை பாடவேறுபாடுகள் என்பன பதிப்பான படியை ஒப்பிடுவதால் ஏற்படுவன. இவை யாவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

1. சித்த மருத்துவச் சுவடிகள், பக்கம் 104, வே. இரா. மாதவன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1984

### வடிவ வேறுபாடுகள்

வடிவ வேறுபாடுகள் என்பன ஏடு எழுதுவோரின் குற்றத்தாலும், மாவட்டந்தோறும் பேசப்படுகின்ற சொல்லாட்சி, மரபு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவன. எனவே இவற்றையும் கண்டறிந்து, நீக்கியும், தேவையான வடிவத்தைச் சேர்த்தும் பதிப்பு செய்யும் நிலை உள்ளது.

### பிழைகள்

ஏடு எழுதுவோரின் குற்றத்தால் இப்பிழைகள் தோன்றுகின்றன. கவனக்குறைவு விரைவாக நூலை படி எடுக்கும் அவசரம், வழக்கு என்பனவற்றாலும், பிழைகள் தோன்றுகின்றன. குறிப்பிட்ட சில சொற்களில் மாற்றங்கள் பொருள் மாறுபாடு இல்லாமல் செய்யப்பட்டுள்ளன.

### சான்றாக

| | |
|---|---|
| பையவர் | பைரவர் |
| யேமம் | ஏமம் |
| முப்பு | முப்பூ |
| வயித்தியர் | வைத்தியர் |
| பில வசியம் | பிற வசியம் |
| பிற்மக்கல் | பிரம்மக்கல் |
| யிறக்கியே | இறக்கியே |

### தடுமாற்றம் தரும் சொற்கள்

மந்திரம், இரசவாதம் தொடர்பான சொற்களும் தடுமாறும் வகையில் உள்ளன. பல சொற்களின் உண்மை வடிவம் புரியாமலே உள்ளது. இவற்றை ஒப்பு நோக்க, எந்த அகராதிகளிலும் இச்சொற்கள் இல்லை. கிடைத்த சொற்களை கிடைத்தபடியே தந்துள்ளேன்.

### பாடல் எண்களில் குழப்பங்கள்

அச்சுப்படியில் உள்ளபடி சுவடியில் இல்லை. சான்றாக காப்புப்பாடல், சில பாடல்களுக்குப்பின் உள்ளது. வேறு சில

பாடல்கள் இடம் மாறி, சுவடியில் உள்ளன. அவற்றை அடிக்குறிப்பில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

## பாடல்களில் விடுபாடுகள்

இச்சுவடியானது சிதைந்துள்ளதாலும், இராமபாண பூச்சியின் தாக்குதல்களாலும், கால வெள்ளத்தின் கொடுமையாலும், சில இடங்களில் விடுபாடுகள் உள்ளன. இவற்றை அச்சுநூல் வழி அறியவேண்டி இருந்தது. சான்றாக காப்பு செய்யுளில் உள்ள "மான் மழுவேந்துவோன்... ... ..." என்ற வரிகள், "மான் மழுவேந்தும் தேவர் போற்றி " என்று அச்சு நூலின் துணையால் நிரப்பப்பட்டது. பாடல் 4இல் வரும் வரிகள் சுவடியில் "ரெ... .... ... ...பாகு மின்னூல்" என்றிருந்தது. இதை நேர்பாகும் இந்நூல் நிகண்டெண்ணூறு என்று அமைக்கப்பட்டது.

## பாடத்தெளிவுகள்

சுவடிகளில் காண இயலாத நிலையில், பதிப்பான நூல்களில் சிலவற்றைக் காணலாம்.

சான்றாக பாடல் 5இல் முதல் மூன்று காண்டங்கள் இரசவாத முறைகளுக்கானவை. சுவடியில், பாடல் 8இல் 3ம் காண்டம் மாந்திரிக காவியத்திற்கானது என்பது பாடத் தெளிவற்றதாகும். இப்பாடலை அச்சு நூலுடன் ஒப்பிட்டு நோக்க,

"தெளிவாக மாந்திரிய காவியத்துக்காக
திறமாகச் சொல்லிவிட்டோம் ஆறாம் காண்டம்"

என்ற வரிகளால் பாடத்தெளிவு ஏற்படுகின்றது.

## பாடல்கள் விடுபடுதல்

சரசுவதி மகால் சுவடியில் கண்ட சில பாடல்கள், அச்சுப் பதிப்பில் இல்லை, சான்றாக "நயம்பக்கேள்... ... ...ப் பொல்லாந்தான் "(ச.ம.சு.) என்ற பாடலைக் கூறலாம். விடுபட்டவைகளைக் குறிப்பிட்டுள்ளேன்.

### பதிப்பில் திருத்தங்கள்

சுவடியில் உள்ள எழுத்துப்பிழைகள், இலக்கணப் பிழைகளைக் களைந்து, பதிப்பு செய்தலே செம்பதிப்பாகும். இது நூலாசிரியருக்கு பெருமையையே தரும். இப்பதிப்பிலும் மேற்படி பிழைகள் யாவும் நீக்கப்பட்டன.

### உரைவிளக்கங்கள்

சுவடியிலோ அன்றி பதிப்பான நூலிலோ உரையானது இல்லை. எனவே, இக்குறையை நீக்கி, பதிப்பாசியரே, உரை எழுதும் நிலை ஏற்பட்டது. இதிலும் சில வழக்கொழிந்த, வசியம் போன்றவைகளுக்கும், மருத்துவ முறைகள் அல்லாதவைகளுக்கும் உரை தவிர்க்கப்பட்டது. அடிக்குறிப்புகளில் தேவையான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

### அட்டவணைகள்

அறிவியல் அடிப்படையில் விலங்கினத்தொகுதிகள், தாவரத் தொகுதிகள் என்பன இடம்பெற்றுள்ளன. நாம தீப நிகண்டை ஒட்டி, இவ்வட்டவணைகள் அமைக்கப்பட்டன. இதுபோன்றே மருந்து செய்முறைகளுக்கும் தனியாக அட்டவணை உள்ளது. படிப்போர்க்கு நலம் பயக்கும் ஒன்று. இது போன்றே பாடல் முதல் குறிப்பும் இடம்பெறுகின்றன. முடிந்தவரையில் அறிவியல் அடிப்படையில் இச்சுவடியைப் பதிப்பு செய்ய எண்ணி, அவ்வழி செயல்படுத்தப் பட்டது. இது சித்த மருத்துவர்களையும், ஆர்வலர்களையும், அகராதி நிகண்டாய்வாளர்களையும் நிறைவு செய்யும் வகையில் இருக்கும் என எண்ணுகின்றேன். இவ் வகையிலேயே, அறிஞர் பெருமக்களை மகிழ்ச்சிடையச் செய்வதே எம் தலையாய குறிக்கோளாகும்.

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை நல்கிய மாவட்ட ஆட்சித்தலைவரும் மற்றும் நூலக இயக்குநருமாகிய

முனைவர் மு. இராசாராம், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிருவாக அலுவலர் உயர்திரு சாமி. சிவஞானம், எம்.ஏ., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ். அவர்களுக்கும் இந்நூலை நன்முறையில் அச்சிட்டு அளித்துள்ள தஞ்சாவூர் ஸ்டார் பிரிண்ட் அண்ட் பேக் அச்சகத்தினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்பான முறையில் நுண்ணாய்வு செய்தும், தக்க அறிவுரை கூறியும் பதிப்பிக்க உதவி செய்த முனைவர் திரு. வே. ரா. மாதவன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தக்கபடி நல்ல கருத்துக்களை அளித்துள்ள பேராசிரியர் எஸ். பிரேமா, தலைவர், தமிழ்ப்பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை, தஞ்சாவூர், மற்றும் பாவலரேறு திரு. பாலசுந்தரனார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*19 -4 - 2000,* **டாக்டர். அரங்கராசன்**
*தஞ்சாவூர்.*

**நிகண்டு பற்றிய கருத்து**

*மருத்துவ நிகண்டுகள், அகத்தியர் நிகண்டு, விருத்த யாப்பு-8 காண்டங்கள், 1000க்கு மேலும் பாடல்கள் உள்ளன. அக. நிகண்டு 800 என்ற பெயர் பொருத்தமில்லை.*

*(தமிழ் அகராதிக்கலை புலவர் சுந்தர சண்முகனார் கழகம், அப்பர் அச்சகம், சென்னை-1971)*

# பஞ்சகாவிய நிகண்டு - அகரவரிசை

(பாடல் எண்)


### அ

| | |
|---|---|
| அறிவு ஞானம் | 350 |
| அறிவு | 860 |
| அழுகண்ணி | 599 |
| அண்டசுண்ணம் | 144,147 |
| அண்ட உப்பு | 123,124,151 |
| அடிஈரல் | 157 |
| அங்கத்தின் பிச்சு | 158 |
| அரிதாரம் | 217 |
| அத்தினி(4வகைபெண்கள்) | 267 |
| அண்டம் | 303 |
| அண்ட செயநீர் | 345 |
| அஞ்சனக்கல் | 347 |
| அவுரி | 484 |
| அரசமரம் | 470 |
| அத்தி | 501 |
| அகத்தி | 503 |
| அழியா வஸ்து | 527 |
| அபினி | 587 |
| அகாரயோனியசை | 618 |
| அணிப்பிள்ளை | 656 |
| அட்டை | 662 |
| அட்டமாதொழில் | 842 |
| அநாகதம் | 851 |
| அறிவின் பெயர் | 860 |
| அக்கினி மண்டலம் | 869 |
| அனுட்டானம் | 912 |
| அஸ்தக சாதி | 267 |
| அத்தினிபுருஷ லட்சணம் | 981 |
| அன்னபேதி | 322 |
| அதீத சுகாதி | 943 |
| அலரி | 458 |
| அமுக்கிரா | 477 |
| அறம் | 856 |
| அவத்தைகள் | 872 |

### ஆ

| | |
|---|---|
| ஆறாம் காய்ச்சல்உப்பு | 76 |
| ஆசிரியவிருத்தம் | 139 |
| ஆகாயம் | 258 |
| ஆண்டு | 312 |
| ஆடாதோடை | 389 |
| ஆலமரம் | 469 |
| ஆதண்டை | 472 |
| ஆகாச கருடன் | 473 |
| ஆயிரம் ஞானிகள் | 617 |
| ஆனை | 655 |
| ஆக்கினை | 853 |
| ஆதி | 855 |
| ஆண்சாதி | 941 |
| ஆதிஅண்ட உப்பு | 383 |

### இ

| | |
|---|---|
| இளவழுக்கை | 111 |
| இந்துப்பு | 222 |
| இரசகற்பூரம் | 232, 235 |
| இரசம் | 236 |
| இரும்பு | 280 |
| இலந்தை | 455 |
| இலைக்கள்ளி | 466 |
| இலுப்பை | 495 |
| இஞ்சி | 544 |

இந்திரகோபம் 632
இரேசகம் 863
இரசித பற்பம் 755
இராசானந்த யோகம் 822

ஈ

ஈரல் சுண்ணம் 176to178
ஈரல் சுண்ணப் பெயர் 183
ஈ 638

உ

உகாந்தகார செயநீர் 367
உப்பு 329
உளுந்து 572
உடும்பு 674
உணவு 938

ஊ

ஊசிகாந்தம் 284
ஊர்க்கள்ளி 467
ஊர்க்குருவி 686

எ

எலும்பு 195
எருக்கிலை 399
எருக்கம்பால் 400
எருமை முன்னை 422
எட்டி 487
எலுமிச்சை 491
எழுத்தாணிப்பச்சிலை 511
எருமை 641
எலி 660
எட்டு திங்கள் பிண்ட பற்பம் 791

ஏ

ஏலரிசி 550
ஏரழிஞ்சில் 595
ஏமதத்துவம் 87

ஐ

ஐந்து திங்கள் பிண்டம் 61
ஐங்காய செயநீர் 690
ஐயின் பெயர் 774

ஒ

ஒலியின் சத்தம் 257
ஒட்டகத்தின் பெயர் 654
ஒருமுலைப்பால் 820

ஓ

ஓணான் 658
ஓங்காரம் 767

க

கலியும் நாதம் 65
கலை மெழுகு 69
கருவண்டு நாபி 74
கல்லுப்பு 85
கரியுப்பு 225
கருவங்கம் 319
கன்னல் சர்க்கரை 325
கம்மாறு வெற்றிலை 393
கருந்துளசி 411
கண்டங்கத்தரி 418
கறிப்புடலை 421
கவுதும்பை 425
கஞ்சாக்கோரை 446
கற்றாழை 482
கரிசலாங்கண்ணி 460, 500
கடுக்காய் 537
கருஞ்சீரகம் 541
கஸ்தூரி (மான்மதம்) 562
கசகசா 588
கருநொச்சி 601
கருஞ்செம்மை 602

கருந்துளசி 411
கரும்பு 474
கலியும் நாதம் 65
கலை மெழுகு 69
கருவண்டு நாபி 74
கல்லுப்பு 85
கரியுப்பு 225
கன்னல் சர்க்கரை 325
கண்டங்கத்திரி 418
கறிப்புடலை 421
கவுதும்பை 426
கஞ்சாக்கோரை 512
கற்றாழை 482
கரிசலாங்கண்ணி 500
கடுகு 541
கடுகு ரோகணி 547
கண்டதிப்பிலி 567
கடலை 579
கருநொச்சி 601
கணுக்கால் 192
கற்பூரம் 317
கருவூமத்தை 437
கருங்குன்றி 509
கருங்குருவி 686
கனவு 875
கவுரிபாடாணம் 230
கற்பூரவல்லி 603
கட்டுக்கொடி 607
கருவண்டு 631
கருங்குளவி 633
கலைமான் 645
கழுதை 644
கருநாய் 649
கருநாகம் 678
கருங்கூளி 671
கட்டுக்காடை 684
கனயோக சித்தி 781
கனயோகத்துக்கனுமானம் 828
கவசகுண்டலம் 900
கவுபீனம் 904
கஞ்சாக்குடுக்கை 906
கவிலட்சணவான் 963
கல்வலட்சணம் 965
கலிப்பா விருத்தம் 990
கவிவாணர் 994
கலிப்பா 973, 983, 990
கலிவெண்பா 1046

கா

காப்பு 1,131,262,387,515,612,784,918
காவியம் 5க்கு காண்டப்பிரிவு 5
காட்டாமணக்கு 440
காஞ்சூரை 447
காசுக்கட்டி 586
காட்டு முருங்கை 606
காட்டெருமை 643
காவிவேட்டி 903
காசாங்கம் 905

கி

கிராம்பு 563
கிச்சிலி 581
கிழிச்சுண்ணம் 753
கிலியின் பெயர் 775
கிருதம் 91

கீ

கீழ்பூமி 252
கீழ்பூமி சலம் 256
கீழ்காய் நெல்லி 406
கீரிப்பிள்ளை 664

**கு**

குடற்சுண்ணப்பெயர்கள் 172
குங்கிலியம் 286
குலையறி அருணம் 353
குப்பைமேனி 402
குண்டுப்பனை 584
குதிரை 651
குரங்கு 655
குளிகை யோகம் 813
குளிகை அனுபானம் 832
கும்பகம் 856
குண்டலம் 899
குளிகையின் பெயர் 908
குருபத்திக் கட்டு 974
குளிகையின் வகைகள் 900
குய்யபேதி 324

**கெ**

கெந்தி 277
கெம்பு 297

**கொ**

கொத்தமல்லி 556
கொட்டைப்பாக்கு 394
கொழுப்பின் பெயர் 187
கொக்கு 639
கொட்டைக்கரந்தை 448
கொத்தான் 454
கொடிவேலி 499
கொடிமாதுளை 478
கொள்ளு 569
கொடி மூலச்சல்லிமை 161
கொடிச்சுண்ணம் 162
கொட்டைப்பாசி 456
கொன்றை 475
கொசு 639

**கோ**

கோசத்திராவகம் 335
கோரக்கர் மூலி 510
கோரோசனை 541
கோட்டம் 565
கோவை 605
கோதண்டம் 307
கோமேதகம் 295
கோரக்கர் மூலி 510
கோரோசனை 549
கோட்டம் 565
கோவை 605

**ச**

சமாதி உப்பு 46
சமாதிக்கல்லுப்பு 46, 47
சவ்வீரம் 75, 276
சவ்வு, மாங்கிசம் 155
சல்லிக்கொடி 160
சத்திசாரம் 216
சத்தியுப்பு 227
சங்கினி 952
சந்திரகாந்தம் 283
சந்த விருத்தம் 301
சந்தனம் 320
சங்கு திராவகம் 337
சவுட்டு மண் 349
சரக்கொன்றை 476
சங்கிலை 484
சவரிக்காய் 593
சவ்வின் பெயர் 155, 775
சமாதி மண்டலம் 799
சமாதி யோகம் 824
சந்திர மண்டலம் 869

சந்திர கலை 882
சடத்தின் பூசை 914
சித்தினி சாதி பெயர் 951
சர்வவசிய ஈடு 1030
சவர்க்கார சுண்ணம் 976
சங்கினி லட்சணம் 952
சங்கினி சாதி பெயர் 952
சங்கினி சாதி 985
சத்தியுப்பு 227
சத்தினி 1014
சவுட்டுப்பு 349
சதுரக்கள்ளி 468

சா

சாதி முத்து 291
சாகா உப்பு செயநீர் 343
சார்வேளையின் பெயர் 483
சாராயத்தின் பெயர் 591
சாரைப்பாம்பு 669
சாத்திரம் 966
சாத்திர லட்சணம் 966
சாக்கிரம் 872
சாதிலிங்கம் 228
சாதிக்காய் 545
சாலநூல் வகைகள் 762

சி

சிவ பாடாணம் 73
சிறுபூளை 462
சிற்றரத்தை 560
சிறுதுவரை 568
சிறுதும்மட்டி 597
சிறியா நங்கை 598
சித்திகளுக்கு விவரம் 626
சிலந்தி 630
சிறுகாடை 683
சிகாரத்தின் பெயர் 770
சித்தர் நூல் 779
சித்தர் தேறினவர் 888
சித்தினி சாதிப்பெயர் 268, 953
சித்தினி சாதிக்குறி 267
சிவசாரம் 215
சிலாசத்து 339
சிவனார் வேம்பு 404
சிவதை 405
சிவசாரத்தின் பெயர் 215
சிப்பி முத்து 290
சிறுகீரை 390
சிறுகுறிஞ்சான் பெயர் 409
சிவதுளசி பெயர் 413
சிறுமுன்னை பெயர் 423
சிறுதும்பை பெயர் 427
சிற்றாமணக்கு பெயர் 442
சிற்றாமுட்டி பெயர் 445
சிவகரந்தை பெயர் 449
சிறு துவரை 568
சிம்மம் 647

சீ

சீனக்காரம் 219
சீந்தில்கொடி 485
சீவகமூலி 405

சு

சுத்த ரசம் 238
சுக்கு 535
சுழல் வண்டு 635
சுவாதிட்டானம் 849
சுழுத்தி 874
சுவாசலீலை 929

சூ

சூத்திர குலப்பிண்டம் 37

சூடன் பெயர் 278

சூரிய காந்தம் 283

சூரிய மண்டலம் 868

சூரிய கலை 881

செ

செம்பருத்தி 435

செந்நாய் 648

செம்பு 279

செந்தினை 279

செந்தூரம் 748

செங்கதாரி 430

செம்பருந்து 681

செவ்வாமணக்கு 443

செங்குன்றி 509

செங்குளவி 634

செய்யான் 669

செபம் 913

செகவசியம் 703

சே

சேராங்கொட்டை 564

சை

சையோகம் 926

சைத்தன்னியம் 946

சொ

சொப்பனம் 875

சோ

சோதிடர் 890

சோடசம் 894

ஞா

ஞானக்கண் 189

ஞானசக்தி 528

ஞானிகளின் பெயர் 887

ஞானிகளின் உபதேசம் 879

த

தண்டின் பெயர் 241

தங்கம் 244

தகரம் 287

தழுதாழை 415

தலைச்சுருளி 417

தகரை 506

தலையின் பெயர் 102

தத்துவம் 608

தலைவசியம் 714

தா

தாமரையின் பெயர் 480

தாமரைக்கிழங்கு 481

தாணிக்காய் 534

தாளிப்பனை 585

தாயை அறியவிவரம் 619

தான்றிக்காய் 534

தி

திங்கள் 43, 465

திருகு கள்ளி 538

திப்பிலி 600

தில்லைப்பால் 638

திகைப்பூச்சி 636

தீ

தீவதாட்சி 853

தீட்சை 861

தீபார்த்தனை 892

தீவினை 314

து

துத்தநாகம் 302

துருசு 331, 332

தும்பாஷ்டம் 543
துருஞ்சலி 674
துரியாதீதம் 876
துரியம் 875

**தூ**

தூதுவளை 490
தூக்கணாங்குருவி 687
தூபார்த்தனை 893

**தெ**

தென்பூமியின் பெயர் 246, 249
தென்பூமி 249, 254
தென்னங்கள் 589

**தே**

தேள் கொடுக்கிலை 471
தேத்தாங்கொட்டை 559
தேங்காய் 583
தேவாங்கு 675
தேவதைகள் வசியம் 729

**தொ**

தொட்டிபாடாணம் 338
தொகுப்பறியவும் 1049

**ந**

நரம்பு 185
நகம் 188
நவகண்டம் 304,305
நவாச்சாரம் 316
நல்ல மாதுளை 479
நன்னாரி 498
நல்வினை 313, 527
நரிப்பாலை 604
நகாரம் 768
நவகண்ட உப்பு 368
நல்ல பாம்பு 668

**நா**

நாற்றிசை மனிதர் 16,17,18,19,20
நாற்குலம் பிர்மகுலக்கரு 21,22
வைசியர் 24
நான்கு திங்கள் 48முதல்60
நாதம் 65, 240
நால்திசை பூமியின்பெயர் 248
நால் சாதி வருணம் 265
நாய்வேளையின் பேர் 429
நாயுருவி 496
நாய்ப்பாகல் 505
நாகப்பாம்பு 668
நாரை 676
நாடிவிருத்தம் 819, 867
நாதாக்கள் சட்டை 909

**நி**

நிலவேம்பு 403
நிலத்துளசி 412
நிலப்பனை 433
நிகண்டின் வரலாறு 777

**நீ**

நீரின் பெயர் 665

**நூ**

நூற்பெருமை 513
நூல்கொடுத்தவர் சாபம் 15
நூல் விவரமறிய சௌமியம்272

**நெ**

நெல்லிக்காயின் பெயர் 395
நெல்லிப்பருப்பின் பெயர் 396
நெல்லி இலை பெயர் 397
நெருஞ்சியின் பெயர் 450

**நே**

நேர்வாளம் 380

ப

பருத்தி 434
பலகல் சத்து 346
பரவெளி-வைசியப்பிண்டம் 31
பனிநீர் 88,89,118-120
படிக்காரம் 221
பச்சை கற்பூரம் 231
பவழம் 285
பச்சை 296
பலகறை 326
பறங்கிப்பாடாணம் 336
பருந்து 680
பசலை 453
பத்திராட்சி 461
பட்டாணியின் பெயர் 571
பனங்கள் 590
பசுவின் பெயர் 640
பச்சோந்தி 657
பல்லி 659
பச்சைம்பாம்பு 670
பகிரண்டம் 308
பனைசர்க்கரை 321
பத்திராட்சி 461
பஞ்சாட்சரத்தின்விவரம் 765
பஞ்சாட்சரம் 911
பத்மினி 954
பண்டிதர் லட்சணம் 964
பயரபதிசாரதி 944
பழம்புளியின் பெயர் 179
பழுஎலும்பு 194

பா

பாடாணம் 229
பால் 328
பாறைப்பனி 362
பாசிப்பயிறு 570
பாதக்குறடு 907
பாதம் 191

பி

பிண்டமாவின் பெயர்கள் 201
பிரசண்டம் 306
பிரமி இலை 398
பிராணயம் 871
பிர்மகுலம் 22
பிண்டம் 16க்கு விவரம் 39
பிரண்டை 463
பிண்டச்சுண்ணம் 204, 212
பித்தளை 281
பிண்டஉப்பு செயநீர் 341
பிரம்பு 330

பு

புல்லுருவி 486
புளி 555
புனுகு 561
புகையிலை 573
புத்தி 859
புஷ்பராகம் 294
புங்கங்கொட்டை 594
புருச வசியம் 1042
புலியாசனம் 910
புங்கங்கொட்டை 594
புல்லுருவி 486
புருசவசியம் 698
புத்தி 859
புலவரின் பெயர் 889

பூ

பூரணாதி உப்பு 226
பூலோகம் 310
பூமியின் பெயர் 245,247,250

| | |
|---|---|
| பூநீறுப்புச் செயநீர் | 342 |
| பூசணிக்காய் | 489 |
| பூனைக்காலி | 504 |
| பூனை | 650 |
| பூதவசியம் | 726 |
| பூரகம் | 864 |
| பூநீறு | 957, 959 |
| பூமி | 245, 247 |
| பூசை | 914, 916 |

**பெ**

| | |
|---|---|
| பெருங்குறிஞ்சான் | 408 |
| பெருந்துளசி | 410 |
| பெருமருந்து | 416 |
| பெருந்தும்பை | 424 |
| பெருங்காயம் | 542 |
| பெருந்தும்பட்டி | 596 |
| பெருச்சாளி | 661 |
| பெண்கள் சாதி | 265, 266, 949 |

**பே**

| | |
|---|---|
| பேய்ப்புடலை | 420 |
| பேராமணக்கு | 441 |
| பேராமுட்டி | 444 |
| பேரரத்தை | 566 |
| பேரீச்சை | 582 |

**பொ**

| | |
|---|---|
| பொரிகாரம் | 218 |
| பொன் | 243 |
| பொன் ஊமத்தை | 438 |
| பொன்னாங்காணி | 459 |
| பொற்றலைக்கையான் | 460 |
| பொடுதலை | 407 |
| பொன்னங்காய் | 577 |

**ம**

| | |
|---|---|
| மணிக்குடல் | 159 |
| மரகதம் | 299 |
| மனோசிலை | 315 |
| மணத்தக்காளி | 414 |
| மருளுமத்தை | 439 |
| மஞ்சள் | 539 |
| மரமஞ்சள் | 558 |
| மதனப்பூ | 592 |
| ம எழுத்தின் பெயர் | 761 |
| மதனப்பூ லேகியம் | 787, 788, 789, 795 |
| மதியறிவு அறிய | 806 |
| மவுன யோகம் | 818 |
| மணிபூரகம் | 850 |
| மவுனி | 885 |
| மவுனிகளுக்குஉபதேசம் | 896 |
| மரவட்டை | 666 |
| மகாரம் | 769 |
| மருந்து செய்முறை | 931 |

**மா**

| | |
|---|---|
| மாதுநீர் கிருதம் | 91, 92 |
| மாமிசப்பெயர் | 156 |
| மாணிக்கம் | 298 |
| மாவிலங்கு | 488 |
| மாந்திரிகக்கரு | 689 |
| மாத்திரைக்கோல் | 901 |
| மானிடர் எலும்பு | 195 |
| மாங்கிசபேதி | 323 |
| மாந்திரிகம் | 688 |
| மாந்திரிக வைப்பு | 733 |

**மி**

| | |
|---|---|
| மிளகு | 536 |
| மிருகவசியம் | 721 |

**மீ**

| | |
|---|---|
| மீனின் பெயர் | 663 |

**மு**

| | |
|---|---|
| முக்கதாரி | 431 |
| முசுமுசுக்கை | 452, 542 |

| | |
|---|---|
| முந்திரி | 574 |
| முடக்கொத்தான் | 457 |
| முட்டை சிலந்தி | 637 |
| முப்பு வாதிகள் | 891 |
| முப்பு | 958 |
| முப்புக்குரு | 975 |
| முடியண்டத்தின் பெயர் | 105 |
| முழங்கால் | 193 |
| முதல்திங்கள் | 42 |
| முடிமயிர் | 101 |
| முடிமாமிசம் | 103 |
| முயல் | 673 |
| முப்புச்சுன்னம் | 745 |

**மூ**

| | |
|---|---|
| மூலாதாரப்பெயர் | 848 |
| மூளை | 106,107 |
| மூளைசலம் | 108 |
| மூலாதாரப்பெயர் | 848 |
| மூதண்டச்செந்தூரம் | 58 |
| மூஞ்சூறு | 672 |

**மெ**

| | |
|---|---|
| மெலிப்பயிறு | 578 |

**மே**

| | |
|---|---|
| மேல்பூமி | 251 |
| மேல்பூமி நீர் | 255 |
| மேகம் | 259 |

**மொ**

| | |
|---|---|
| மொச்சைக்காய் | 580 |

**ய**

| | |
|---|---|
| யகாரம் | 772 |

**யா**

| | |
|---|---|
| யானை | 653 |
| யானை நெரிஞ்சில் | 451 |
| யாளி | 652 |

**யு**

| | |
|---|---|
| யுகத்தின் பெயர் | 311 |

**யோ**

| | |
|---|---|
| யோனி | 242 |
| யோக கிருதம் | 802 |
| யோகிகள் நிறம் | 811 |
| யோக நிலை | 879 |
| யோகிகள் பெயர் | 886 |
| யோக தண்டு | 902 |
| யோகங்கள் | 847 |
| யோகிகளுக்கு உபதேசம் | 898 |

**ரா**

| | |
|---|---|
| ராச வசியம் | 701 |

**ல**

| | |
|---|---|
| லவங்கப்பூ | 551 |
| லவங்கப்பட்டை | 552 |
| லவங்கப்பத்திரி | 575 |

**லோ**

| | |
|---|---|
| லோக திராவகம் | 334 |
| லோக வசியம் | 724 |

**வ**

| | |
|---|---|
| வளையுலுப்பு | 223 |
| வடபூமி | 253 |
| வழலையுப்பு | 340 |
| வச்சிரக்கல் | 292 |
| வழுதலை | 419 |
| வட்டகிலுகிலுப்பை | 497 |
| வசம்பு | 540 |
| வழலை நாதம் | 740 |
| வழலைநாத முப்பு | 744 |
| வகாரம் | 771 |
| வஸ்துப்பாத்திரம் | 915 |
| வசிய மை | 695 |

**வா**

வாளத்தின் பெயர் 258
வாசிசித்தறிய 789
வாலை ரசம் 237
வாழை 391
வால்மிளகு 546
வாலுறுவை 548
வாசியோகநிலை 789
வாசியோகம் 807
வாலைப்பூநீர் 961
வாசுகின பேதி 322

**வி**

விரிவு நூல் தொகுப்பு(வேறு) 11
விந்து சுத்தி 167
விந்துப் பெயர் 239
விசக்கல் 348
விட்ணு காந்தி 388
விடதாரி 432
வில்வம் 502
விச்சுளி 682
விசக்கல் எடுக்க 840
விசுந்தி 852
விதி 857
விந்துவிட்டால் யோகங்கள் கெடும் 971
விருத்தம் 783,810,984, 977, 1022

**வீ**

வீரம் 275

**வெ**

வெள்ளி 288, 321
வெங்காரம் 218
வெடிகாரம் 220
வெடியுப்பு 224
வெண்பா 962
வெள்வங்கம் 318
வெள்ளிலோத்திரம் 289
வெட்பாலை அரிசி 327
வெற்றிலை 392
வெள்ளெருக்கு 401
வெள்ஊமத்தை 436
வெள்ளை நாயுருவி 464
வெட்டிவேர் 492
வெள்ளைச்சாரணை 493
வெள்ளைக்குன்றி 507
வெங்காயம் 553
வெள்ளைப்பூண்டு 554
வெள்ளாடு 642
வெளிக்கண் 190
வெண்கடுகு 557
வெங்கார உள்ளி 576
வெள்ளைக்கூளி 679

**வே**

வேளை 428
வேக உப்புச் செயநீர் 344
வேதாந்தச்சுருக்கம் 354
வேதமுனி 884
வேதாந்திகள் 883, 895
வேங்கை 646

**வை**

வைசியர் 24
வைசிய குலப்பிண்டம் 31
வைடூரியம் 293
வைத்திய உப்பு 369
வைத்திய முப்புச் சுண்ணம் 373

# பஞ்ச காவிய நிகண்டு

சீரான சிவன் உமையாள் பாதம் போற்றி
செங்கையின் மான் மழுவேந்தும் தேவர் போற்றி
வாரான [1] கணபதியும் கந்தன் போற்றி
கனவீர பைரவர் [2] தன் கமலம் போற்றி
வாரான நந்தி மறையோர்கள் போற்றி
மறைநாலு வேதத்தின் காண்டம் போற்றி
ஆரான தன்வந்திரி [3] அசுவினி போற்றி
அண்டசரா, சரம்சூழ்ந்த [4] அம்பாள் காப்பு. (1)

(உரை:) காப்புச் செய்யுளில், சிவபெருமானின் திருவடிகளைப் போற்றுகின்றார். சிவபெருமானின் பிள்ளைகளான கணபதி, கந்தன் ஆகியோருடன் கால பைரவரும் போற்றப்படுகின்றார். நந்தி-சித்த மருத்துவத்தின் முதலில் கூறப்படும் சித்தர். அவருடைய நூல்களையும், தன்வந்திரி, அசுவினி போன்ற தேவ மருத்துவர்களையும் போற்றுகின்றார். தன்வந்திரி, அசுவினி போன்றவர்கள் ஆயுர்வேத மருத்துவ மரபையும், நந்தி சித்தமருத்துவ மரபையும் சார்ந்தவர்கள். இந்நூலாசிரியருடைய காலத்தில் தமிழகத்தில் இருவேறு மரபுகளையும் பின்பற்றிய நிலை இருந்தது போலும்.

அண்டமெலா நிறைந்தபூ ரணத்தின் பாதம்
அதைச் சூழ்ந்த பிண்டரவி மதியின் பாதம்
சண்டமாருதக் கமலி, விமலோன் பாதம்
சதுர் முகனும் சரசுவதியின் சோதி பாதம்
விண்டமால் திருவுருவின் கருவின் பாதம்
விதித்த ருத்திரன் மகேஸ்வர குருவின் பாதம்
மண்டலங்கள் மூன்றுமுற் பவத்தோன் பாதம்
வாணி [7] பரமேஸ்வரி, வல்லபை காப்பாமே. (2)

---

1. காரான, 2. கனம் போற்றி, 3. தாயே, 4.சரங்கள்,

வாணி சதாசிவ பதத்தின் முன்னோர் காப்பு
மகத்தான முனிவோர்கள் பாதங்காப்பு
வேணியென்ற ஆதியந்தஞ் சோதி காப்பு
மேவு சுடர்,சடாதார பீடங் காப்பு
யோனியென்ற நால் யோனிப்பிண்டங் காப்பு
உதித்த தத்துவ ஞான மவுனங் காப்பு
பாணியென்ற தீவுசூழ் அண்டங் காப்பு
பஞ்ச காவியங் காப்பு, சௌமியங் காப்பாமே. *(3)*

*(உரை:)* உலக உயிரினங்களின் பிறப்பு நான்காகும். முட்டை, வியர்வை, விதை, பை இவ்வுயிரினங்களைக் காக்கும் சக்தி, இந்நூலையும் காக்கட்டும்.

காப்பாகும் பூரணமே சின்மயமே அய்யா
கருதுவோம், பாரிலுள்ள சித்தர்க்கெல்லாம்
சேர்ப்பாகும், சோதியை தட்சணாயன் என்பெயர்
செப்புகிறோம், புலத்தியனே சொல்லக் கேளு[1]
நேர்பாகும் இந்தநூல் நிகண்டெண்ணூறு
தானநிலைப் பெருக்கான பதினாலு இலட்சம்
பட்டான பரிபாசை யில்லாமல் தான்
பரிவாகப் பாடி விட்டோம், இவ்வெண்ணூறில். *(4)*

*(உரை:)* அகத்தியருக்கு தட்சணாயன் என்ற வேறு பெயர் உள்ளதாகக் கூறுகின்றார்.

---

பாடபேதம்: பாடல்-3

ஆதிபரஞ்சோதி காப்பு, மேல் சுடர் சடாசர பீடம்
ஏமென்ற நால்வோன் பிண்டங் காப்பு
உதித்த தத்துவ ஞானம், மவுன.... காப்பு
பரணியென்ற பிருதுவிச் சுழல் காப்பு
பஞ்ச காவியங்காப்பு, சௌமியங் காப்பாமே.

1. சேரப்பாச் சொல்கின்றேன் மற்றதெல்லாம்
தெளிவான நூல்களிடம் இருட்டைக் காணே.

காணுநீ, இந்நூல் தான் காண்ட மென்ற காவியமாம்
கண்ட எண்ணூறு சகலத்துக்கும்
காணுநீ, வாத காவியத்துக்காக வசனித்தோம்
முதற்காண்ட மிரண்டாம் காண்டம்
மூணுநீ, மூன்றாம் காண்டம் சொன்னோம்
முடித்தோம் இதற்குள்ளே கருவெல்லாந்தான்
வேணுமென்று, ஒவ்வொன்றும் கேட்டுவைத்தோம் நாம்
வாதத்தின் பேரைத்தானே. (5)

(உரை:) இந்நூலானது 800 பாடல்களாலானது. மூன்று காண்டங்கள் இரசவாதம் பற்றியவை; இதில் கருப்பொருளை எல்லாம் விளக்கியுரைத்தோம்.

பேரான முப்பூவின் வழலையாதிப்
பேசினதோர் முன்னோர்கள் புரட்டெல்லாந்தான்[1]
மூரான, நிந்நூறு பாடலுக்குள்
முக்கருவின் பேரையெல்லாம், முடித்தோம் நாமும்
வாரான வைத்திய காவியத்துக்காக[2]
வசனித்தோம் நாலாங் காண்டம், ஐந்தாம் காண்டம்[3]
ஏரான இவ்விரண்டு காண்டத்துக்கு[4]
கொடுத்தோமே, மூலியொன்றின் பேரெட்டாம். (6)

---

பாடவேறுபாடு: பாடல்-5

காணுவாய், இந்நூல் காண்ட மொன்று
காவியமா நேருடன் என் நூலாகக் காலத்து
வாணுநீ, வாதகாவியம் வழக்காக
வசனித்தோம், முதற்காண்டமிரண்டாம் காண்டம்
மூணுநீ, மூன்றாம் காண்டம் சொன்னோம்
முடித்தோமோ, இதற்குள்ளே கருவெல்லாந்தான்
வேணு மென்ற ஒவ்வொன்று கேட்டுப்பாரு
உரைத்தோம் யாம், வார்த்தை இரண்டு பேரைத்தானே.

1. மேற்பட்டதெல்லாம், 2. விட்டத்துக்கா, 3. நாலதாக் காண மதைத்தான், 4. எடுத்தோமே இருநூறு பாடலுக்குள்.

குறிப்பு: நூலாசிரியர் இந்நிகண்டுக்கு முன்னர் முப்பு 300 எனும் நூலைச் செய்ததாக இப்பாடலின் வழி அறியலாம்.

*(உரை:)* “முப்பு” என்ற பெயரிலுள்ள வழலையைப் பற்றிய கருத்துக்களையும், முன்னோர்களின் தவறான கொள்கைகளையும் முந்நூறு பாடல்களில் நான் கூறினேன். வைத்திய காவியத்திற்காக, 4, 5 காண்டங்களில் மூலிகைகளின் பெயர்களை எட்டெட்டாக எடுத்துரைத்தோம்.

எட்டான வைத்தியத்தின் கருவெல்லாந்தான்
எடுத்துரைத்தேன் இருநூறு பாடலுக்குள்
தட்டான வனமூலி மறைப்பெல்லாந்தான்
மகத்தான கடைச்சரக்கின் திருட்டெல்லாந்தான்
பட்டான பரிபாசையில்லாமல் தான்
பரிவாகப் பாடிவிட்டோம், இவ்வொண்ணூறில்
திட்டாந்திரத்தினிடப் பொருள் போல் காணும்
சித்தர்களுக்கெல்லாம், குருநூல் தெளிவதாமே. (7)

*(உரை:)* 200 பாடல்களில் சித்தமருத்துவத்தின் சிறப்பெல்லாவற்றையும் எடுத்துரைத்தேன். காடுகளில் காணப்படும் மூலிகைகளின் பெருமைகளையெல்லாம் விளக்கினேன். கடைச் சரக்குகளின் செய்முறைகளை மறைத்துக் கூறாமல் கருணையுடன் பாடினேன். 800 பாடல்களில் பொருளின் (திஷ்டாந்தம்) முடிவை வரையறுத்துக் கூறினேன். இந்நூல், சித்தர்களுக்கெல்லாம் முதல் நூலாகும்.

தெளிவான மாந்திரிக காவியத்துக்காகத்
திறமாகச் சொல்லி விட்டோம் மூன்றாம் காண்டம்[1]
ஒளிவான ஒருநூறு பாடலுக்குள்
ஒளித்துவிட்ட உட்சரத்தினெட்டுப்பேரும்
வளிவான உட்சரத்தினெட்டுப்பேரும்
வசனித்தோம் ஐம்பத்தோரு அட்சரத்துக்குத்தான்
தெளிவான மந்திரத்தின் தொழில்களெல்லாம்
துதி பெறவே பரிபாசை துலங்கச் சொன்னோம். (8)

---

1. பாடல் 5இல் முதல் மூன்று காண்டங்கள் இரசவாதத்துக்குரியவை என்று உள்ளது. இப்பாடலில் மூன்றாங்காண்டம், மாந்திரிக காவியத்திற்கானது ஆகும் என்றுள்ளது முரண்பாடாக உள்ளது.

(உரை:) மூன்றாங் காண்டம், மாந்திரிகக் காவியத்திற்காக இயற்றினேன். நூறு பாடல்களில் மந்திரத்தின் உயிர்ப்பொருளைக் கூறினேன். மறைச்சொற்களை (உச்சாடணம்) மீண்டும் கூறும்படியாக எட்டுப்பெயர்களை, ஐம்பத்தி ஒன்று எழுத்துக்களை உரைத்தோம். மறைத்து வைக்காமல் தெளிவாகத் துலங்கக் கூறினேன்.

சொன்னேமே, ஞான காவியத்துக்காகத்
தொடுகுறிபோல் ஏழாவது காண்டம் சொன்னோம்
என்னோமே, ஓர் கருவிக்கெட்டுப்போகும்
இயம்பினோம், பிராணாயத்தத்துவப் பேர்
ஒன்னோமே, ஒருநூறு பாடலுக்குள்
ஒளிந்திட்டோம், மெய்ஞானப் பாழையெல்லாம்
என்னோமே, எட்டுத்திசை சித்தர்க்கெல்லாம்
எடுத்துரைத்தோம், இவ்வெண்ணூறு
இயம்பக்கேளே. (9)

(உரை:) ஞான காவியம்மென்ற பஞ்சகாவிய நூலுக்கான விளக்கம் ஏழாம் காண்டத்தில் உள்ளது. இது தொடு குறிநூல் போல இருக்கும். 100 பாடல்களில் பிராணாயாமம் என்ற மூச்சுக்கலைப்பயிற்சியைக் கூறியுள்ளேன். எண் திசை களிலும் உள்ள சித்தர்களுக்கெல்லாம், 800 பாடல்களில் அறிவு பற்றிய கொள்கைகளை எடுத்துரைத்தேன் இவற்றை நீங்களும் கேட்கவும்.

இயம்பக்கேள், இலட்சண காவியத்துக்காக
எட்டாவது காண்டமது, இயல்பாய் சொன்னோம்
இயம்பக்கேள், ஒவ்வொரு இலட்சணத்துக்காக
நிலைத்திட்டோம், எட்டுப்பேர் நேரந்தானும்
பயம்பக்கேள், ஒருநூறு பாடலுக்குள்
பரிபாசை ஒவ்வொன்றாய் சொன்னோம்
நயம்பக்கேள், நாடியுடலட்சணங்கள் சொன்னோம்
நான் மறையின் பூட்டெல்லாம் நாம்
சொன்னோமே. (10)

(உரை:) இலட்சண காவியத்துக்காக எட்டாம் காண்டம் கூறினேன். ஒவ்வொரு அமைப்புக்கும் எட்டுப் பெயர்களை நூறு பாடல்களில் ஒளிவு மறைவின்றிக் கூறினேன். மறைக்கப்பட்ட சித்த மருத்துவத்தின் பூட்டை எல்லாம், திறந்து, நாடிகளின் இலக்கணத்தையும் சொன்னேன்.

## விரிவு நூல் தொகுப்பு

சொன்னேமே எழுபத்தியீராயிரந்தான் சொன்னோம்
சுருக்கி ஐம்பதினாயிரமாய் சூட்டினோம் பார்
அன்னோமே, முப்பதினாயிரந்தான் சொன்னோம்
அருளினோம் இருபத்தேழாயிரந்தான் சொன்னோம்
பண்ணோமே, பதினாயிரந்தான் சொன்னோம்
பகர்ந்தோமே, அறுபத்திநால் கலை ஞானம்
வன்னோமே, அறுபத்து நான்கு சாலம்
வசனித்தோம் இலட்சத்தெண் பதினாயிரந்தான்
பார்.(11)

(உரை:) நாடிகளைப் பற்றிய நூல் 72,000 கூறியுள்ளோம். அதைச்சுருக்கி 50,000 ஆகச் செய்தோம். பின்னர் 30,000, 27,000, 17,000 என்று அறுபத்து நான்கு கலைகள், அறுபத்து விளையாட்டுகள் என்பனவும் செய்தோம். இலட்சத்துப் பதினாயிரம் பாடல்கள் உள்ள நூல்களைச் செய்தோம்.

பாரப்பா,ஐம்பத்தோராயிரத்தில்
பதினாறு இலட்சம் நூல் பேரைச் சொன்னேன்
தேரப்பா, ஐயாயிரம் பார், இதற்கெல்லாந்தான்
தெளிவான நிகண்டது வாய்கொண்டு நீபார்
ஆரப்பா, அறிவார்கள் ஆயிரத்தை ?
அதைக் குறுக்கி இவ்வொண்ணூறு அருளினோம்
பார்
வேரப்பா, இந்நூலைச் சித்தர்கள் கண்டால்
விடாரய்யா, ஓர் நாளும், கை விடாரே. (12)

*(உரை:) 51,000 என்ற நூலில் 16 இலட்சம் என்ற நூலின் பெயரைக் கூறினேன் இதை நூல் 5,000 த்தில் காண்பாயாக; தெளிவான நிகண்டு கொண்டு பார்க்கவும். 1,000 என்ற நூலை யார் அறிவார்கள்; 1,000த்தைக் குறுக்கி இந்த 800ஐ அருளினேன். இதை சித்தர்கள் கண்டால் விரும்புவார்கள்.*

*கைவிடார், கனகமது கொடுத்தால் ஈவார்*
*கலியுகத்து மாண்பர் ஒருக்காலும் கூடார்*
*கைவிடார், பெரியோர்கள் மனத்தைக் காண்பார்*
*கருவாளி தனையறிந்து, கைபாகம் காண்பார்*
*கைவிடார், பஞ்சகாவியத்தின் நேர்மை*
*கண்ணாடி ஒளிர்வது போல் இந்நூல் காணும்*
*கைவிடார், முன்னோரில் இந்நூல் எண்ணூறு*
*கைதொழுது அடிபணிந்தார் இந்த நூலை. (13)*

*(உரை:) பொன்னைக் கொடுத்தால், இந்நூலைத் தருவார்கள். கலியுகத்தில் இந்நூல் கிடைக்காது. பெரியோர்கள், இந்நூலைப் புறக்கணிக்காமல் கருப் பொருளை அறிந்து, செய்முறைகளைத் தெரிந்து செய்வார்கள். இந்நூலுக்கு அடிப்படையான பஞ்சகாவிய மானது, கண்ணாடியானது ஒளியைத் தருவதைப்போல இருக்கும். முன்னோர்கள் நூலைக் கை கூப்பி வணங்கிப் பணிவார்கள். இங்கு கண்ணாடியின் ஒளியை உவமையாகக் கையாண்டுள்ளார்.*

*இந்நூலில்லாவிட்டால் ஒன்றுமாகா*
*ஈசன் உத்தாரப்படி இயம்பினோம் நாம்*
*கந்து பரிபாசையெல்லாம் இதிலே சொல்வோம்*
*காவியத்தின் கோர்வை நூல் புரட்டைச் சொல்வோம்*
*பந்து, பதினெண்பேர்களுடை மறைப்பைச் சொல்வோம்*
*பாடியதோர் நூல்களுடைத் திறப்பைச் சொல்வோம்*
*எந்தநூல் புரட்டெல்லாம் இதிலே காணும்*
*என்னாணை, இந்நூலைக் கைவிடாதே. (14)*

---

குறிபபு: பாடல் 13, சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

*(உரை:)* இந்த நூலில்லாமல் பஞ்ச காவியங்களை தெளிவுடன் காணமுடியாது. இதை இறைவனின் திருவுள்ளத்தால் கூறினோம். இந்நூலில் பரிபாசை விளக்கம், காவியங்களின் சிறப்பு, 18 சித்தர்களின் மறைப்பு, நூல்களின் திறப்பு என்பனவற்றைக் கூறினோம். என் ஆணை. இந்நூலை யாரும் விடாமல் பின்பற்றுங்கள்.

### நூல் கொடுத்தால் சாபம்

விடாதே வெளியொருக்காலும்[1] விட்டாயானால்
விழுந்து, முடிதலை தெறித்து, நசித்துப் போவாய்
விடாதே, இவ்வெண்ணூறைப் புலத்தியா கேள்
விருநாவில், கர்மநோய் வினை வந்தெய்தும்
விடாதே, நால்திசையும், விடவே கேளும்
விளங்கும், வட தெற்குவிது இரண்டும் தள்ளு
விடாதே ரண்டு திசை தனிலும் தேடும் பேர்கள்
வீணரப்பா, பொய் புளுகர், கள்ளர் தாமே. (15)

*(உரை:)* தகுதியில்லாதவர்களுக்கு, இந்நூலைத் தந்தால் இடி விழுந்து, முடிதலைத் தெறித்து, நசித்துப் போவாய். 800 பாடல்களை வெளிவிடாதே; விட்டால் கர்மநோய்கள் வரும். நாற்திசைகளில் இந்நூல் வெளியாகாமல் பார்த்துக்கொள். வட தெற்கு இருதிசைகளையும் நீக்கவும். இவ்விரு திசைகளில் வசிக்கும் மக்கள், வீணர்கள் பொய்யும், களவும் உள்ளவர்கள் ஆவர். இவர்களுக்கு இந்நூலைக் கொடுக்காதே.

### நாற்திசை மனிதர்

கள்ளரப்பா தெற்கிலுள்ள[2] மனிதரெல்லாம்
கனபுளுகு பொய்சூது கபடரய்யா
கள்ளரைத்தான் சேர்த்தாயானால் கொல்லுவார்பார்
கருவான நூலிதனைக் கொண்டு போவார்

1. வெளியோர் காண, 2. மேற்கிலுள்ள.

கள்ளருக்குக் கோடியிலே ஒருவனுண்டு
கருவாளி, தருமபுத்திரன்[1] புண்ணியசாலி
கள்ளரிலே அவன் ஒருவன் உன்னிடமே வந்தால்[2]
கருதுவாய் பன்னிரண்டாண்டு மவுனம்[3]
சோதித்தே. *(16)*

*(உரை:)* தெற்கிலுள்ள மக்கள் அனைவரும் பொய், ஏமாற்று, மறைத்துத் திரித்தும் கூறக்கூடியவர்கள் அவர்களிடம் இந்நூலைக் காட்டினால், எடுத்துக்கொண்டு போவார்கள். ஆயின் கோடியில் சில நல்லவர்களும் இருப்பார்கள். அவர்கள் உன்னிடம் வந்தால், 12 ஆண்டுகள் ஆய்ந்து, பின்னர் மாணவனாக ஏற்றுக்கொள்ளவும்.

சோதித்தால் வடக்கிலுள்ள மனிதரெல்லாம்
சூது கள்ளங்களவுமே மெத்தக் கழுத்தறுப்பாரையா
சோதித்து அவர்களைத்தான் கலத்தில்[4] தள்ளு
சொற்கோணா, மனிதரிலே கோடிக் கொன்று
சோதித்தால், ஒருவனுண்டு தருமபுத்திரன்
சோதித்து, அடுக்கடுக்காய்[5] இந்நூலைத்தான்
கருதி, முடிவான இந்த எண்ணூரையா
தொழிலாளி புண்ணிய சாலி, பலர்தான்[6] பாரு. *(17)*

*(உரை:)* ஆய்வு செய்தால், வடக்கில வாழும் மக்கள், பொய் சூது ஆகிய தன்மைகளைக் கொண்டு ஏமாற்றுவார்கள். அவர்களை நீக்கவும், கோடியில் நல்லவன் ஒருவனிருப்பான். அவரைக் கண்டறியவும்.

அவர் வந்து உனதிடமே, சேர்ந்தாரானால்
அவர் மனமே சோதித்தும் பன்னிரண்டாண்டு
அவர்க்கீவாய், இந்த எண்ணூற் கருவைச் சொல்வாய்
அருளினதோர் மறைப்பை எல்லாம்
அவருக்குப்போய்

1. கன்ம புத்திரன், 2. வென்றிடுவான், உன்னிடமே வதா, 3.மனம், 4. களத்தில், 5, அவர், 6. முகமெடுக்க.

அவரான மேற்கு திசை மனிதர் தானும்
அருளினோம், சூது கள்ளம் கபடேயில்லை
அவரான மனிதரெல்லாம் பேதை மாண்பர்
அனைவருக்கும் ஈவிரக்கத் தயாளமாமே. *(18)*

*(உரை:)* உன்னிடம் நல்லவர் வந்தால்,12 ஆண்டுகள் ஆய்ந்து இந்நூலை அளிக்கவும். மேற்குத்திசை மனிதர்கள் குற்றமில்லாத நல்ல உள்ளமுடையவர்கள் ஆவர். ஈவு, இரக்கம், கருணை உள்ளம் கொண்டவர்கள்.

தயாளமென்ற மனிதருக்கு அழிவேயில்லை
தரணியிலே அதிகமேற்கு இராச்சியந்தான்
தயாளமென்ற, இராச்சியத்தில் சித்தர்மெத்தத்
தருவான, மனிதருக்கு அறிவிருந்தால்
தயாளமென்ற, வெகுசித்தர் தேறுவார்கள்,
**தான்தேறும் கன்னடியர் அனேகம் பேர்கள்**
தயாளமென்ற அறிவிருப்போன் இடமே வந்தால்
தருவிப்பாய்,எண்ணூறும் கருசொல்வோமே. *(19)*

*(உரை:)* அருள் உள்ளம் கொண்ட மனிதர்களுக்கு அழிவே இல்லை. நிலவுலகில் அதிகமாக உள்ள மேற்கே உள்ள அரசுதான் அருள் என்ற அரசில் சித்தர்கள் அதிகம் உளர். மனிதர்களுக்கு அறியும் அறிவு காணப்பட்டால், சித்தர்களாகத் தேறுவார்கள். **தேறிய கன்னட நாட்டைச் சேர்ந்தவர்கள்,** அதிகமாக வந்தால் இந்நூலைத் தந்து, செயல்முறைகளை விளக்கிச் சொல்வாயாக.

சொல்லுவாய்,மறைத்ததெல்லாம் சூட்சமாகச்
சூட்டுவாய்[1] பலகலையும் மலர்க்கு
வெல்லுவாய் கிழக்கு[2] திசை மனிதரெல்லாம்
வெகுகல்வி அறிவுடையோர், விவேக முள்ளோர்

---

19. குறிப்பு: 'மனிதருக்கு அழிவே இல்லை' என்றாதல் கூடும். அறிவன் என்ற சொல் சித்தர்களைக் குறிப்பதாகும் இதனை இந்நூலாசிரியர் இங்கு கையாண்டுள்ளார்.

1. சூட்டுவார், 2. நான்கு

தல்லுவாய், தானதர்மம், புண்ணியம் செய்வோர்
சமீப[1] தேவதைக்கு வணக்கம் செய்வோர்
அல்லுவாரையா யிரத்தில் ஒருவனுண்டு
அறிவான பரிபாசை, அறிவான் பாரே. (20)

(உரை:) மறைத்து வைக்கப்பட்ட பொருளை எல்லாம் நுட்பத்துடன் விளக்கிக் காட்டவும். கிழக்கு திசை மனிதர்கள் மிகவும் கல்வி, கேள்வியுடையோராவர். அறம் செய்யும் இயல்பினர் ஆயிரத்தில் ஒருவர், பரிபாசைகளை அறிவார்.

**நால் சாதிக் கரு - பிரம்ம குலக் கரு**

அறிவதற்கு உனதிடமே அவர் தான் வந்தால்
அருளுவாய் இந்த எண்ணூறு, அவர்க்கே ஈவாய்
அறிவதற்கு[2] மூப்பூவின் பொருளைச் சொல்வாய்
அறிவதற்கு கற்பம், அதன் பாகம் சொல்வாய்[3]
அருளுவாய் வாசிநிலை யோகம் சொல்லுவாய்
அறிவதற்கு நாலுதிசை மனிதர் சேதி
அருளினோம் புலத்தியனே ... ....
அருளியதாமே அடவிதானே. (21)

(உரை:) உன்னிடம் பாடங்கேட்க வந்தால், 800ஐத் தந்து, முப்பூவின் நுட்பம், கற்பம் உட்கொள்ளும் முறைகள், அதைச்செய்யும் முறைகள், மூச்சுப்பயிற்சி என்பனவற்றைக் கூறவேண்டும்.

**பிரம்ம குலம்**

அடலான நாற்சாதிக் கருவைக்கேளு
அருளினார் முன்னோர்கள், மறைத்த சூட்சம்
பிடவான பிரம்ம குல கருவெடுத்தால்
பல வசிய யோக சக்தி பிண்டத்தாலே[4]

---

1. சாமீப தேவதை, 2. அட்ட, 3. அட்டமா சித்தருக்கு அடவாய் சொல்வாய், 4. மீண்டதாலே விடைச்சன்.

*மடலான மாது ஈன்ற தலைச்சனாலே*
*மாற்று நாற்பத்தெட்டாம் தலைச்சனாகும்*
*எடவான, சத்திரிய குலத்தில் மாது*
*விடைச்சனையா, அவளீன்ற விடைச்சனாமே. (22)*

*(உரை:) நான்கு வகையான வகுப்புகளின் கருவைப் பற்றிக் கூறுகின்றேன். முன்னோர்கள் மறைத்து வைத்தார்கள். முதல்தர மனிதர்களின் கருவால், வசியம், யோகம் என்பன செய்யலாம். இது 48 நாட்கள் உள்ள முதல் கருப்பிண்டத்தால் செய்யலாம். அரச குலத்தில் உள்ள பெண்ணின் கரு, சத்ரிய குலத்தின் மாது ஈன்றவன், இடைச்சனாவான்.*

*நாமென்ற பெண்ணிடச்ச ஆணுமாகும்*
*நவிலுவோம், வெகுவசியம் மவுனமாகும்*
*ஆமென்ற பிண்டமாம், அதினாலய்யா*
*ஆடலாம் தொண்ணூற்றாறு மாற்றுமாகும்*
*பேமென்ற பிண்டமே, வழலையாதி*
*பெண்ணடியே பூநீறு சவர்க்காரந்தான்*
*மாமென்ற கன்னிபிர விடையா கைகால்*
*மது நாதம் மயங்காதே கனிச்சாறாமே. (23)*

*(உரை:) ஆண் பிண்டத்தால், வசியம் என்பன செய்யலாம். 96 மாற்று கிடைக்கும். வழலைக்கு ஆதியாக உள்ளது பிண்டமாகும். பெண்ணிடத்தில் பூ நீறு, சவர்க்காரம் என்பன; வழலைக்கு அடிப்படை; கன்னி பூப்பெய்தினால் மது நாதம் கனிச்சாறாகும். இதில் மயங்காதே.*

**வைசியர்**

*கனியான வைசியகுல மாதே, கேளு*
*கருவாகும் பெண்ணடிதான் பிண்டமாதி*
*அணியான தலைச்சனவன் ஈன்ற பிண்ட*
*மது சாதியான பெண்ணுமிரண் டுமாகும்*
*பேணுவாய், பிண்டத்தால் பல வசியமாகும்*
*பேரான, மெய்ஞானம் பல வசியமாகும்*

வனியான, பிண்டமதே வழலையாதி
மாப்பிண்ட மிடித்ததுவே, மாவே பூநீர். (24)

*(உரை:)* கனியான வணிகர் வகுப்பைச் சேர்ந்த பெண்ணே கேள்; முதல் குழந்தை ஆண், பெண் இரண்டும் வசியத்திற்கு ஆகும் பிண்டம் வழலைக்கு அடிப்படை யாகும்.

மாவென்று, மயங்கினார், உலகத்தோர்கள்
மண்ணுமேல் விளையுமுப்பை வழலையென்பார்
நீயென்றும் உயிராச்சே, நீ மண்ணாச்சே நிசமாச்சே
நிணமான சேயாகி, அந்த நீயேயாச்சே[1]
ஆவென்ற, கருவாச்சே, எண்சாணாச்சே
எடுத்ததிலே நீராச்சே
தாவென்று முனது சடந்தானாச்சே
சாகிறதும், பிறக்கிறதும் உனதாலாச்சே. (25)

*(உரை:)* உலக மக்கள், மயங்கி, மண்ணில் உள்ள உப்பை வழலை என்பார்கள்.

முனதுருவால் சகல கலை அறிவுண்டாச்சு
முருக்கவ்வுட்கரு உனதேயாச்சே[2]
முனதுருவால், முடியாச்சு, தலையுண்டாச்சு
முடி தனிலே பஞ்சகர்த்தா ஆதாரமாச்சு
முனதுருவால், சவர்க்காரமாச்சு
முனது சடம், கைகால் கண் மூக்காச்சு[3]
முனதுருவால், விந்தாச்சு, உடல் தானாச்சு
மூலமென்ற, தொண்ணூற்றாறு கருவியாச்சே. (26)

*(உரை:)* வழலையே உடலுக்கு அடிப்படை; 96 வகை தத்துவங்கள் இதனால் ஏற்படும்.

---

1. ஆதியந்த நீயே ஆச்சே, 2. முக்கருவும் உட்கருவும் மூன்றேயாச்சு, 3. முன் சடலம் மங்கையர்.

கருவிலே, உரு(வு)மாறி கருவுண்டாச்சு
கருவான உருவதுவே, சொரூபமாச்சு
கருவி யென்ற சுரோணிதத்தில் விந்து வீழ்ந்து
கருவாகித் திரண்டெழும்பிக் கடுஞ் சூலாகி
கருவிலே உருளை யென்ற முட்டை போலாகி
கனத்த கருவாகும் நாள் காண்பீராகில்
கருவிலே, நீயறிந்து மருந்தே யூட்டிக்
கல்லென்ற, பிண்டக்கல் கருவை வாங்கே. (27)

(உரை:) சுரோணிதத்தில், விந்து சேர்ந்தால் கருவாகும். சூல்கள், உருளையென்ற முட்டைகள் போலிருக்கும். இதில் விந்து வீழ்ந்து திரண்டு கருவாகும்.

கருவான, மூன்று திங்கள் கருவைப் பார்த்தால்
கருங்கோழி கன்னி முட்டையது போல் காணும்
கருவான, வெள்ளைக் கல் லதற்குண்டாச்சு
காந்தி சூரியனும், சந்திரனுமாச்சு
கருவான, அரனுரைத்த மொழியைக் கேளும்
கருதினால், பிர்ம்மக்கல் கற்பமென்றார்
கருவான அக்கல்லு, யார்தான் காண்பார் ?
கலியுகமெல்லாம் அதுவே காணலாமே. (28)

(உரை:) மூன்று மாதக்கரு, கருங்கோழியின் முதல் முட்டை போலிருக்கும். இது வெள்ளைக் கல்லாகும். சிவன், இதனைப் பிர்ம்மக்கல் கற்பமென்பார். இக்கல்லை யார் பார்க்க முடியும்? கலியுகத்தில் காணலாம்.

ஆமேதானக் கருவும் லிபியுள்ளோர்க்கு
அரை நொடியிலெய்தும், அகத்தியனும் சொன்னேன்
மாமேதான், கர்மமென்ற பேருண்டாச்சு
மகத்திலே, விளையும் கரு, கல்லாச்சு
காமேதான், காசுமென்று மகமுண்டாச்சு
காமக் கருகல்லென்று, அதற்குண்டாச்சு
வேமேதான், கருங்காக முறுவது போலாச்சு
மேலெல்லா மூன்றரைக் கோடி உரோமமாச்சே. (29)

(உரை:) நல்ல வாய்ப்பு உள்ளவர்க்கு விரைவில் கருவானது கிடைக்கும் என்று அகத்தியன் கூறினேன். கர்மவினை என்ற பெயர் ஏற்பட்டது. இன்பத்தால் கரு கல்லாக மாறியது. உடலில் 3½ கோடி உரோமம் ஏற்பட்டது.

ஆச்சுதே, இந்நூல் எண்ணூறு பீடம்
யாருக்கும் கிடையாது அரிதான நூலு
வாச்சுதே, தனம்கோடி ஈந்தாலும்
வராது ஓர்காலும் வந்தாதானால்
காச்சுதே, தாய்தகப்பன் செய்த பாக்கியம்
கருவுக்குள், விந்து தனயோக ராசி
வேச்சுதே, இந்த எண்ணூறு வெகுபதனம், ரத்தினம்
வெளிவிடாதே, இந்நூலை அடக்கம் பண்ணே. (30)

(உரை:) எண்ணூறு பாடல்கள் கொண்ட இந்நூல் அரிதாக கிடைக்கும். தாய் தந்தையர் செய்த தவப்பயனாய் கிடைக்கும். ரத்தினம் போன்று இதை பத்திரமாக வைக்கவும். யாருக்கும் கூறவேண்டாம்.

## பரவெளி, வைசிய குலப்பிண்டம்

அடக்கமாம், வெளிக்கருவை விளம்பக் கேளு
ஆர்க்கும், வெளியிடாதே என்மேலாணையப்பா
அடக்கமாம்,வைசிய குலஞ் பெண் பிண்டத்தால்
ஆடவா, நூற்று நாற்பத்து நாலு மாற்று
அடக்கமாம், பிண்டமதின் மாவினாலே
ஆதியென்றும், பேராச்சு, அந்தமுமாச்சு
அடக்கமாம், பரவெளியும் அதற்குண்டாச்சு
ஆகாச வெளியென்றும், அதற்குண்டாச்சு. (31)

உண்டான பரவெளியை, யார்தான் காண்பார்
உள்மூலம், புறமூலமும், மூலமாச்சு
உண்டான விந்துவே, ஏகாரமாச்சு[1]
உள்மூலம் அடியென்றும், பேருண்டாச்சு

1. யகாரமாச்சு.

உண்டான நாதமதே, உகாரமாச்சு[1]
உடன் சேர்ந்த, புற மூலமதைக் கண்டாச்சு
உண்டான நடுவென்று, உயிர்தானாச்சு
ஓகோகோ, பிண்டமென்று ஓங்கார மாச்சு[2]. (32)

(உரை:) வெளிக்கருவின் நுட்பத்தைக் கூறுகின்றேன். யாருக்கும் சொல்லாதே. இது என் ஆணையாகும். இரசவாதத்திற்குப் பயன்படும். 144 மாற்றுப் பொன்னாகும். இது ஆதி, அந்தம் என்ற பெயரைப்பெறும். பரவெளியை யாரும் அறியமுடியாது. விந்து, ஏகாரம் என்ற எழுத்தானது நாதம் 'உ' என்ற எழுத்தானது.

சாரமெனும் பிண்டமது[3] ஓங்காரத்தால்
கருவியெல்லாம், முடியாச்சு, கருதானாச்சு
காரமென்ற, சடலமெல்லாம் உப்புண்டாச்சு[4]
கருவியெல்லாம் சாரமதாவேயாச்சு[5]
காரமென்ற, உப்பதனால் அப்புண்டாச்சு[6]
கருவான பாண்டமதில் செயநீராச்சு
காரமென்ற கரபாண்டக் கண்ணியாச்சு
கருவியிலே, கத்தசலம் பனி நீராச்சே. (33)

பனியான மேகசலமெங்கே என்றால்
பாலகன்தான், கருப்பற்றித் திரளும் போது
பனியான, தாயுண்ட சாரமெல்லாம்
பனிக்குடம் போல், பாலகன் தானாக இருக்கும்
பனியான, பாலகத் தான் விழுமுன்னாகப்
பனிக்குடமாகக் கருக் கொடியும் பரிவாக வீழும்
பனியான பனியறிய யாருமில்லை
பனியிருக்கும், எண்சாண் உடம்பிதாச்சே. (34)

உடலான, சரீரமதின்[7] இரசனையெல்லாம் சேர்ந்து
ஒரு முழத்தான் வகையது போல் உருவுண்டாகி
உடலான பையதிலே கமலம்போல
ஓரிலைத் தாமரைத் தண்ணீரும் உண்டாகி

---

1. அடமூலம் காரமாச்சு, 2. மேல், 3. காரமெனும் மரணமது, 4. முப்பு, 5. மாவை, 6. உப்பு, 7. சாரைமதின்.

உடலான, தண்ணீரைச் சலமதாக்கி
ஒரு முலைப்பால் நீராகும், சுத்த சலமாகி
உடலான, சுத்த சலகங்கையாகி
உடலுக்குள் கலாநிதி உண்டதாச்சே. (35)

(உரை:) ஓங்காரத்தால், காரமென்ற பிண்டத்தில் முடியுடன் உள்ள கருவானது தோன்றியது. இதில் உப்புநீர் சாரமாக உள்ளது. உப்புத் தோன்றியதால் நீர் ஏற்பட்டது. தாயின் சத்துக்கள் யாவும், உறிஞ்சப்பட்டது. பனிக்குடம் உடைந்து, நஞ்சுக்கொடியுடன் குழந்தை வெளிவரும். எண் சாண் உடம்பு இதுவாகும்.

உண்டான, சலாநிதியை யார்தான் காண்பார் ?
உடலறிந்த தத்துவம் காண்போர், அவரே காண்பர்
உண்டான, மூலமதை யாரும் காணார்
ஊர்தோறும் திரிந்தலைவார் உலுத்த மாண்பர்[1]
விண்டாலும், கண்டிடார்கள், ஒருக்காலும் தான்
விருதாவர், கெட்டலைவார் வீணர் கோடி
கண்டாலும், பேசார்கள், கருவறிந்தோர்
காணயிந்த நிகண்டெண்ணூறு கருவைக்காணே. (36)

(உரை:) மூலப்பொருளை அறிய இயலாது. ஊர் முழுவதும் அலைவார்கள். "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்" என்ற கம்பனின் பொருளைக் கூறுகின்றார். கண்டவர்கள் பேசமாட்டார்கள். 800 பாடல்களில் கருப் பொருளைக் காணலாம்.

கருவான சூத்திர குலப் பிண்டத்தாலே
கலைவசிய முத்தி, சித்தி, சித்தனாவார்
கருவான, பெண்ணடிதான் ஆதிமூலம்
கன்னிப் பெண்ணாணாகும், கலக்கமில்லை
கருவான, பெண்ணடிதான் ஆதிமூலம்
கருவான உருவந்த வழலையாதி
கருவான, சூத்திர குலவம்சத்தில
கருபேதமில்லையப்பா, காணு, காணே. (37)

---

1, மாந்தர். பாடல் 37ல் 3, 4 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை

*(உரை:)* 4-ம் வகுப்பையுடைய பெண்ணின் கருவால் முத்தி, சித்தி என்பன ஏற்படும். சித்தனாவான். இக்கருவில் எல்லாவிதமான மாறுபாடும் இல்லை என்று காணுவாயாக.

காணுகின்ற கருவாலே[1], பூநீராச்சு
கருவாச்சு உருவாச்சு
காணுகின்ற மாக் கருவே பூநீராச்சு
கல்லென்ற சவட்டுப்புச் சாரமாச்சு[2]
காணுகின்ற மாவதனைச் சுத்த சலம் விட்டுக்
கரைத்து,வன்னி அடுப்பேற்றி இரவியில் பத்து
காணுகின்ற அதையெடுத்துப் பார்த்தீராகில்
கருங்காரஉப்பாச்சு,கல்லுப்பாச்சே. *(38)*

*(உரை:)* கருவே, பூநீறு, சவட்டுப்பு, சாரம், என்பவனவாகும். மாவை நீரிட்டுக் கரைத்து அடுப்பேற்றி சூரியபுடம் பத்துமுறை வைத்து எடுக்கவும். இது கல்லுப்பாகும்.

**பிண்டம் 10க்கு விவரம்**

உப்பான, உப்பு, சலம் விட்டே மத்தி
இரவியில் வைத்திடவே, செய[3] நீராச்சு
உப்பான, சூத்திர குல வம்சத்தில்
ஓகோகோ, பிண்டமே சாதியாகும்
உப்பான,தலைச்சனிலே, மாற்றுப்பத்து
உருவான இடைச் சனிலே பதினாறு மாற்று
உப்பான, உருமூன்றில் மாற்றி ருபத்திரண்டு
உரு நாலில், இருபத்தெட்டு மாற்றே. *(39)*

*(உரை:)* உப்பு நீரிட்டு, மத்தித்து சூரிய புடமிட செயநீர் கிடைக்கும். தலைச்சனின் மூலம் பத்து மாற்றும், இடைச்சனில் பதினாறு மாற்றும் கிடைக்கும். ஏனைய வற்றில் 22 மாற்று, 28 மாற்றும் கிடைக்கும். இதைச் செய்யும் முறைகளை ஆசிரியர் மூலமாகவே அறிதல் வேண்டும்.

---

1. பிண்டத்தாலே, 2. கல்லென்ற வெட்டுப்பூ, சாரமாச்சு, 3. மெய்நீராச்சு.

மாற்றென்ன உருவத்தில், முப்பத்தி நான்கு
மாற்று, அதிக உருவாறில் நாற்பது தானாகும்
மாற்றென்ன உருவேழில், நாற்பத்தாறு
மகத்தான, எட்டாம் பிறப்பு, ஐம்பத்திரண்டு
மாற்றென்ன, உரு ஒன்பதில் ஐம்பத்தெட்டு
மற்ற,பத்தாம் பிறப்பு, அறுபத்து நான்கு
மாற்றென்ன, உரு பதினொன்றில் மாற்று
அருளினோம், எழுபதுதான்,
பன்னிரண்டில்கேளே. *(40)*

இரண்டான, மாற்றில்தான், எழுபத்தாறு
இயம்புகிறோம், பதிமூன்று உருவில் கேளு
இரண்டரை மாற்றுத்தான், எண்பத்திரண்டு
நிலைத்த பதினான்கு, உருஎண்பத்தியெட்டு
இரண்டான, பதினைந்து, உருவில் மாற்று
இயல்பான, தொண்ணூற்று நாலதாகும்
இரண்டான பதினாறும் பெற்று வாழ்வர்
நிச்சயமாய், சொல்லிவிட்டேன், நூறுமாற்றே. *(41)*

*(உரை:)* இதில் இரசவாதம் செய்வது பற்றிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

**முதற்திங்கள், இரண்டாம் திங்கள்**

நூறான [1] பதினாறு மட்டுமாகும்
நுண்மையப்பா, சூத்திரகுல பிறப்பதாகும்
காரான, ஒரு திங்கள் கருவைக் கேளு
கலங்கி இருக்கும் இளநீர்போல வழலைக்காகா
வாரான இளநீர் [2], தொழிலுக்காகும்
மற்ற இரண்டு திங்களிலே, செயநீர்க்காகும்
பாரான பசுமைநிறம், கருப்பற்றாது [3]
பசலையென்ற திராவகத்துக் கூடும்பாரே. *(42)*

1. காரான, 2. ஈரான வழலை நீர், 3. கருப்பதாகும்,

*(உரை:)* ஒருமாதக் கரு இளநீர் போலிருக்கும். இது வழலைக்காகாது. கலங்கி இது காணப்படும். இருதிங்கள் கருவிலிருந்து செயநீர் தயாரிக்கலாம். பச்சை வண்ண திராவகம் செய்யப்பயன்படும்.

**திங்கள்**

கூடான[1], மூன்று திங்கள் கருவைக் கேளு
குருவண்டு, நாபியது,கருவேயாகும்
கூடான, இளநீரின் வழுக்கைப் போலாம்.
குருவான, வழுக்கையின் மேல் சவ்வுண்டாச்சு
கூடான, சவ்விதுவே, கோழிமுட்டைக்
குருவிந்து, நாதமுந்தான் இரவுதனில் சேர்ந்து
கூடான, பரப் பிர்ம்மச் சுருபமாகிக்
கூறினதோர், நாதசத்தி ரூபமாமே. *(43)*

*(உரை:)* 3 மாதக் கரு குருவண்டு, நாபி என்பனவாகும். இது இளநீர் வழுக்கையைப் போலிருக்கும். இதில் சவ்வு தோன்றும். கோழி முட்டைக்கு விந்து, நாதம் என்பன இணைந்து நாதசத்தி உருவாக மாறும்.

ரூபமென்ற ஆகாய வெளி தானாகில்
உலக சத்தசாகரம் அதற்குள்ளாகி
அரூபமென்ற பிருதுவி அப்பு தேயு வாயு
ஆகாசத் தோடு, ஐந்துருவும் அதற்குள்ளாகி
சுரூபமென்ற மூலாதாரம், சுவாதிட்டானம்
குருதி மணிபூரகம் அனாகதம் விகத்தி
கருமென்ற ஆக்கினையோடு ஆறும் சேர்ந்து
கருவி கரணாதி தொண்ணூற்றாறுமாமே. *(44)*

*(உரை:)* உடலில் ஐம்பூதங்களும் காணப்படும் உருவமென்ற ஆகாயத்தில், 7 உடற்கட்டுகளான கடல்கள் தோன்றும். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்கள்.

---

1. கூறான.

ஆறான வாதம்[1] அதற்குள்ளாகி
ஐயும், கிலியும் சவ்வுமென்று மூன்றுமாகி
ஓரான சிவாயமாகி[2], ஓரெழுத்தாய்
மறிமென்று உயிருமாகி
மாறான, மண்டலஞ் சூழக் கண்டமாகி
மதியாகி, உருளையென்ற ரவிதானாகி
பேரான, ஓங்காரம் வில் வளைத்தாற்போல
பிறைமேகம், சூழ்ந்தது போல் பிறவியாச்சே[3]. *(45)*

*(உரை:)* ஐ, கிலி சவ்வு என்ற மந்திர எழுத்துக்களாகி, ஓம் என்ற ஒரு சொல்லாகி, உயிருமாய் வில் வளைத்தால் போல மண்டலங்களான, சூரியன் சந்திரனுடன், பிறை நிலவை மேகம் சூழ்ந்தது போலப் பிறவியாய்த் தோன்றும்.

**சமாதி உப்பு**

பிறவியா மூன்று திங்களண்டமாச்சு
பேசாத ஊமையென்றும் பேருண்டாச்சு
பிறவியா, வெள்ளைக்கல் பிரமமாச்சு
பேர்பெரிய, வெங்கார மதுவேயாச்சு
பிறவியாம், அகமாச்சு, பூர்வமாச்சு
பேசினதோர், விடக்கல்லு மதுதானாச்சு
பிறவியாம், கல்லுப்பு உதித்த வீடு
பிறமூல சமாதியிலே பிறந்ததாமே. *(46)*

பிறந்ததொரு வீடதிலே, சமாதியாச்சு
பிறமூலம், விடக்கல்லும் அதிலுண்டாச்சு
பிறந்த, திங்கள் மூன்றினுட, பெருமை பேசார்
பேசாத ஊமையென்று, கல்லைப் பேசார்
பிறந்த சொரூபத்தில் எடுத்த வழலையாதி
பேர்பெரிய அண்டபிண்ட விந்து நாதம்
பிறந்ததொரு, மூன்று திங்கள் பெருமை சொன்னோம்
பேரான நாலு, திங்கள், கருவைக்கேளே. *(47)*

---

1. ஆதாரம், 2. ஓம் நமசுவமயமாகி, 3. மறவி.

## நான்கு திங்கள்

நாலான[1] , சுரோணிதத்தில் விந்து வீழ்ந்து
நல்ல பனி நீரது போல ருவி பாய்ந்து
வேலான, நாதவிந்து ஒன்றாய்ச் சேர்ந்து
வேல் போல் வளர்ந்து, கட்டி விந்தி முத்தி
நாலானதய்யா, போவாய் நிறமதாகி
தத்துவம் போல் மேற்தோறும் சவ்வுண்டாகி
ஆலான செம்மருந்து2 அண்டம் போல
அது உருளைக் கருவாகிக் கல்லதாகி. *(48)*

கல்லான கல்லுக்குள் கருவுண்டாகி
கண்மூக்கு, செவி காது காலுண்டாகி
கல்லான கல்லதிலே கையுண்டாகிக்
கருவி கரணாதி முதல் பூதமாகிக்
கல்லான ஆதார மாறுண்டாகிக்
கனபூதப்பஞ்சாதி ஊமையாகிக்
கல்லான ஓங்கார வகாரமாகிக்
கருவாகி, உருவாகி உகாரமாமே. *(49)*

உகாரமென்ற அட்சரமே[2] நாதமாகி
உருவான வகாரமதே விந்துவாகி
உகாரமென்ற ஓங்காரம் சவ்வதாகி
உருளையென்ற சவ்வது மேலண்டமாகி
உகாரமென்ற அண்டபிண்ட மொன்றாய்ச் சேர்ந்து
உபான வாயு, அபான வாயு, சமான வாயு
உகாரமென்ற இம் மூன்றால் பையுண்டாகி
ஒருமுடிந்தான் பைக்குள்ளே உருவதாமே. *(50)*

உருவான நாலு திங்கள் பிண்டாகி
ஒருவர் அறியாத கரு உதயமாகி
உருவான, பிண்டமதே சைலமாகி
உபமாகி, நிபமாகி, சொரூபமாகி

---

1. காரான, 2. சௌமது

உருவான இம்மதியு இரவியாகி
ஓரெழுத்தாய், மறிமென்றும் உதித்ததாகி
உருவான மருந்தூட்டிப் பிண்டம் வாங்கி
உருளையென்ற, சவ்வுபோக்கி, இரவில் தாக்கே. (51)

தாக்கி, இடிமாவாக்கி[1], மாக்கரைத்து
தருவான, பனி நீரில் சலமதாக்கி
தாக்கி, வன்னி மூட்டியே, கொதிக்க வைத்துத்
தருவான, இரவி, பத்து, இறுத்தீராகில்
தாக்கி, இறுத்திட பத்து முறை சொன்னாக்கால்
சந்திரன்போல், நாலாங் காய்ச்சலுப்புண்டாகும்
தாக்கியே, உப்பை உரலிலிட்டுப் பனிநீர் வார்த்து
சாடி, மாப்போலிடித்துச் சல மதனில்போடே. (52)

(உரை:) பெண்ணின் சூல்களுடன் விந்து கலந்து கோழிமுட்டையைப் போல் கருவுண்டாகும். கண், காது, என்ற ஐம்பொறிகளும் ஏற்படும். உதானவாயு, அபானவாயு, சமான வாயுக்கள் தோன்றும். 4 திங்களில் பிண்டமுண்டாகும்.

அதனிவிட்டுக் கரைத்து வன்னி அக்கினிமூட்டி
அருள்பெறவே கொதித்தது என்றால் குழம்பைக்
கொண்டு
அதனிவிட்டுக் குழம்பதனை இரவி பத்து நாள்
அக்கசிவையிறுத்து பத்து முறை சென்றாக்கால்
அதனிவிட்ட, இரவியுப்பா ஆறாம் காய்ச்சல்
ஆருமறியார்கள், இந்த உப்பின் நேர்மை
அதனிவிட உப்பதற்கு அனேகம் பேர்கள்
அருளுகிறோ மிரண்டாம் காண்டமறிந்து பாரே. (53)

(உரை:) பிண்டத்திலிருந்து ஆறாம் காய்ச்சல் உப்பெடுக்கும் வழிகளைக் கூறுகின்றார்.

---

1, தாக்கித்தான் மாவிடி, மாவதாக்கி.

அறிந்துபார், ஆறாங் காய்ச்சல் உப்பை வாங்கி
அதனிடைக்கு,[1] ஆண்விந்து சரியாய் சேர்த்து
அறிந்துபார், வஸ்து பிறவசை நாதந்தான்
அது சரியாயிட்டு உரல்,[2] மாபோல் சாடி[3]
அறிந்து பாரும், மாவைப் பாண்டத்திட்டு[4]
அதெடைக்கு சுத்தசலம் வார்த்துக் கரைத்து
அறிந்து பார், வன்னியென்ற அக்கினியைமூட்டி
நன்றாகக் கொதிக்க வைத்து, இறக்கிடாயே. *(54)*

இறக்கியே, பீங்கானுவிரண்டு விட்டு
இயல்பான இரவி பத்தி, மூன்று நாள்தான்
கறக்கியே, வைத்திருத்துப் பார்த்தீராகில்
காரமே செயநீரு மிறங்கும் பாரு
அரக்கியே, அறுபத்து நாலு சரக்கெல்லாம்
அதில் தோய்த்து, வாட்டிடவே, மெழுகதாகும்
நறக்கியே, உபரசங்கள் அதிலே தோய்த்து
நன்றாக, இரவியில்[5], வைக்க மெழுகாய்ப்
போமே. *(55)*

போவென்ற நவரத்தினங்களில் ஊறவைத்துப்
புகழாக, இருநாழி சென்றெடுத்து
தாமென்ற, சரக்கேழு கவசம் கட்டித்
தனிக்காடைப்புடம் போடச் சுன்னமாகும்
ஆமையென்ற ஆறாங் காயச்சல் உப்புப் பலம் கொண்டு
அரைத்துப் பன்னீராலே, வழித்துக் கொண்டு
நாமென்ற, நவரத்தினத்தின் மேல், கவசம் செய்து
நல்ல வெண் கருஞ்சீலை ஏழும் செய்யே. *(56)*

செய்து ஓர்நாள் இரவியில் உலர்த்தி வைத்தெடுத்து
செயம் பெறவே, கோழியென்ற புடத்தில்
போட்டால்
முய்துநீர், முருக்கம் பூ, ஒளி போலாகும்
மூதண்டச் செந்தூரம் இதற்குப் பேரு

---

1. அத்திடைக்கு, 2. இட உலர, 3. ஆகும், 4. பிண்டத்திலிட்டு,
5.கொடிக்க.

வெய்து ஒருசேர் செம்பு செயநீரில் தாக்கி
விளங்க ஒருநாள் ஊறவைத்தெடுத்து
கைய்து மூசையதிலிட்டு உருக்கி நீயும்
கடுகளவு செந்தூரம் போட்டுப் பாரே. (57)

போடயிலே,மணியது போலாடி நிற்கும்
புகழான வேதையிது, யாரும் சொல்லார்
ஆடயிலே, மாற்றும் பதினாறும் காணும்
அதிக மிந்த எண்ணூறு வேதைபாரு
காடையிலே, முள் செயநீர் இறங்கிற்றானால்
கருவான, ஏழாங் காய்ச்சல் கல்லுப்பாரு
தேடயிலே, இந்த எண்ணூறும் தேடவேணும்
தெளிவான சௌமியத்தை, வைத்துச் செய்யே. (58)

(உரை:) ஆறாம் காய்ச்சல் வெடியுப்புச் செயநீரால் அறுபத்து நான்கு சரக்குகளும் நீறும், மெழுகு, நவரத்தினங்களை ஊறவைத்து இருநாழி நேரம் சென்றபின் எடுத்து,கவசம் செய்து காடைப்புடம் போடச் சுன்னமாகும். பலம் உப்பெடுத்து நவரத்தினங்களைப் பன்னீரால் அரைத்து 7சீலை செய்து சூரிய ஒளியில் வைத்து உலர்த்திக் கோழிப்புடம், சிவந்த முருக்கம்பூப் போன்ற ஒளியுடன் செந்தூரம் கிடைக்கும். இது மூதண்டச்செந்தூரம் எனப்பெயர் பெறும்.

வைத்தொரு பூரணமாம் அண்ட பிண்ட
மகத்தான வழலையடா, ஆதியந்தம்
சித்தருக்குத் தோன்றுமடா சடலக் கூறு
செனித்ததடா, கம்பியுப்பு, பரபிரம்மந்தான்
கைத்தவிதி அமைப்பிருந்தால் கருவே காண்பார்
கருவாளிக் கருவறிவார், உருவம் காண்பார்
எத்திசைக்கும் கீர்த்தி பெறும் இந்த எண்ணூறு
இயம்புகிறோம், ஐந்து திங்கள் பிண்டந்தானே.

(உரை:) சித்தர்களுக்கு உடல் பற்றிய அனைத்தையும் அறியும் அறிவுண்டு. கம்பியுப்பு, பரப்பிரம்மம், விதி

இருப்பின், கருவைப் பற்றிய அறிவு தோன்றும் எல்லா திசைகளிலும், இந்த 800 பாடல்களும் புகழ் பெறும். ஐந்தாம் மாதப்பிண்டம் பற்றிக்கூறுகின்றேன்.

பிண்டமென்ற, அண்டமதை யாரும் காணார்
பிரம்மமென்ற ரூபமதை எவரும் காணார்
கண்டோமென்றார் சிலபேர்கள், செகத்தில் கோடி
காசினியில் ஒருவனுண்டு, கண்டோனாசான்
அண்டபிரானவனாகும், விண்டார்கள்
ஆருந்தான், காணரிது, அவரே கண்டால்
கொண்டாடியே, மகிழ்ந்து கருவைச் சொல்வார்
கோடானகோடி சித்தளிப்பார் தானே. (60)

(உரை:) பிண்டமென்ற அண்டமான முட்டையை யாரும் காணமாட்டார்கள், பிரம்மம் என்ற உருவத்தை யாரும் காணவில்லை. சிலபேர் கண்டோம் என்றார்கள். ஆயின் உலகில் கோடியில் ஒருவர் கண்டுள்ளார். அவரே ஆசிரியர். கண்டவரைப் பார்ப்பது இயலாது. அவரைக் கண்டால் மகிழ்ந்து கருவைப் பற்றிக் கூறி, பல்வேறு சித்துகளைச் செய்து காட்டுவார்கள்.

### ஐந்து திங்கள் பிண்டம்

ஐந்து திங்கள் பிண்டமென்றால் பிண்டமல்ல
அத்தியானை, விந்துதித்த ஐந்தாம் திங்கள்
கஞ்சு கதிர்[1] முளை பாய்ந்து யோனிப் பிண்ட
கதிரொளி போல் பவனிவரும், அமிர்தம் போலாம்
நஞ்சுதின்று[2] நெஞ்சடைத்துக் கர்த்தன் தானும்
நவிலும் அதிலைந்துரு; காணியாகி
பஞ்சை அறிவாரோ இப்பவனி மூலம்
பாதாள நங்கையடா, ஐயுந்தானே. (61)

---

1. தஞ்சுகதிர், 2. அஞ்சு தின்று.

குறிப்பு: "வந்துதித்த" என்றாதல் வேண்டும்.

*(உரை:)* 5 மாதக்கரு என்றால் கருவல்ல, யானை போல ஐந்தாம் மாதப்பிண்டம், ஊர்வலமாக வரும். மருந்து போன்றிருக்கும்.

ஐயென்ற அட்சரமாமதற்குப் பீடம்
அறியுமென்ற கோசமடா அகாரபீசம்
மெயென்ற, அவுக்கு இலியும் பிரமேலான
அட்சரமாம் கிரிங் கோசம்... ... ...
உய்யென்ற, உகாரமடா உயிரெழுத்து
உற்றெழுத்து மகாரமடா சவ்வும் கோசம்
தையென்ற தனியெழுத்து முறியும் பீசந்தனில்
தனிப்பேசுதம், தனியெழுத்து ரீம்கோசம்
உவ்வே. (62)

*(உரை:)* ஐ என்ற சொல் அதற்கு அடிப்படையானது (ஹரீம்) அரீம் என்ற கருவூலம். அதற்கு மூலமாகும். உ என்ற உயிரெழுத்து, ம என்பது சவ்வும் கோசம்; தையென்ற தனியாக உள்ள சொல் ரீம் என்ற கருவூலமாகும்.

உவ்வான, அட்சரமாம் ஐம்பத்தொன்று
உயிரதற்குப் பன்னிரண்டு எழுத்துமாகும்
பவ்வான, பலவெழுத்து வேறொன்றில்லை
பாடித்தோர் ஐந்து திங்கள் பிண்டமாகும்
கல்லான, எழுத்து கால்தலையாய்க் கொண்டு
கருவாகப் பதிந்திருக்கக் காண்பாராகில்
எவ்வான வேசி[1] சாதியானா என்ன
இனம் சரியாய்[2] கூடுஞ்சதி, புருசர்தானே. (63)

*(உரை:)* சொல் ஐம்பத்தொன்றும், உயிரெழுத்துக்கள் பன்னிரண்டுமாகும், ப என்பது ஐந்து திங்கள் பிண்டமாகும். கல்லான எழுத்தைக் கால் தலையை வைத்துப்பார்த்தால் க (க,) கருப்போல பதிந்திருக்கும்.

---

1. எச்சி, 2. இன் சாதியால்,

கூடினால் நாற் சாதிக்குள்ளேயாகும்
கோடி கோடி அச்சாதி கூறலையா ?
ஆடினால் விந்து[1] விள்ளலர் கரி[2]
அதில் ஒரு பற்று விந்தாகாதையா
காடி[3] விந்து, சுரோணிதத்தில் வீழ்ந்தால்
கவிதமாகும், வளர்நாதம் கருவதாகும்
தேடினால், அண்ட பிண்டம் ஆரும் காணார்
தேசத்தோர், மௌன[4] குரு நாதமாமே. *(64)*

*(உரை:)* விந்து, நாதத்துடன் சேர, கருவுண்டாகும்.

**கலியும் நாதம்**

நாதமென்ற, விந்ததுவும் ஒன்றாய்ச் சேர்ந்து
நவகோடி, ரவி சூரியன் உதித்தாற்போல
நாதமென்ற[5] அபான வாயு, உபான வாயு
மருவுபஞ்சமான வாயு இது மூன்றுந்தான்
சேமிலாப் பையாகிச் சுரோணிதமிரண்டு
திரண்ட பையதற்குள்ளே நாதவிந்தூறிப்
போதமென்றப்புதையலது, போதலர் தாமாகில்
பூரண சந்திரன் போலப் புகன்றவாரே. *(65)*

*(உரை:)* நாதமும் விந்தும் சூரியனைப் போல எழும். அபான வாயு, உபான வாயு என்ற ஐந்து வாயுக்களின் கூட்டம் என்பன பையாகச் சேர்ந்து, எவ்விதமான சேதமுமின்றி, கருவூலம் நிறைநிலவு போல இருக்கும் நாதவிந்து சேரும். முழுநிலவாக இதைப் புகலுவார்கள்.

வாரான சூரியனும் சந்திரனும் சேர்ந்து
மதி இரவி போல்,[6] ரூபமதாய் திங்கள் முதலாகும்
ஆரான, சிவந்த நிறம் ஐங்காயமாகிய
அண்டம் போல சுரோணிதப்பையை அதிக ரூபமாகி

1. ஆண் விந்து, 2. அதற்கு மரபற்ற விந்து, 3. காடினால், 4.என்ற, 5வாத, 6.துறவி.

வேறான, முப்பதுவும் இரண்டாம் மாதம்
விறான, தேன் வாய் நிசம் பானை போலாகிக்
காரான கருவாகி மூன்றாமா சங்
கால் முகம் வாய் கண் செவி முடியுண்டாமே. (66)

(உரை:) இரண்டாம் மாதம் பானையைப் போல வயிறு காணப்படும் மூன்றாம் மாதம். கால், முகம், வாய், கண், செவி, முடி தோன்றும்.

முடியாகிய உகாரத்தின் பீசமாகி
மூலமாம் பன்னிரண்டும் உடலதாகி
அடியாகாரத்தின், சடலமாகி
ஐந்துருவக் காணியாய், ஐம்பூதமாகி
வடிவாகி, பிருதுவியோடு அப்புமாகி
வசனித்தோம், தேயு ஆகாசமாகி
கடியாகி, கார சார இரண்டாகிக்
கருவான பிண்டம் நாலுக்குள்ளாச்சே. (67)

(உரை:) முடியாகிய **உ** என்ற எழுத்தின் அடிப்படை பன்னிரண்டு எழுத்துக்களும் உடல், **அ** என்பது உடல், குறிஞ்சி, முல்லை,மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலம், ஐவகை பூதம், உருவம், நிலம், நீர், தீ, வளி, விண் மிகுதியான காரசாரம் என்ற இருபிரிவுகளுமாக கரு, சேர்ந்து நான்கு மாதத்திலிருக்கும்.

காலான[1], பொருளறியார்தாமும் மாந்தர்
நலத்த நாளாகதன் கருவாருங் காணார்
காலான, அக்கல்லைக் காண மாண்பர்[2]
கண்டவர்போல், அனேகமெல்லாம் கருதுவர்யார்
தோலான[3] யோனி வந்தவழி காணார்
தொடுவ, அம்புபாணம் வந்த வழி காணாரே. (68)

---

1.நாலான, 2.ஆலான திங்கள் விடிவுண்டாகி ஐந்து திங்கள், அண்டக்கல் விசக்கல்லாகும், 3. கோலான.

*(உரை:)* ஐம்பூதங்களில் நான்கில் பொருளை அறியமாட்டார்கள் மக்கள், ஐந்தாம் மாதம், பிண்டம், அண்டத்தின் கல்போலிருக்கும்.

**கலை மெழுகு - செய்முறை**

கானகப்[1] பொருளப்பா ஐந்தாம் பிண்டம்
கருமருந்தையிட்டு விடக்கல்லை வாங்கி
நாணாத கல்லென்ற பிண்டந்தன்னை
நலிவைந்து சவ்வுதனை, நலமாய் வாங்கி
ஆணாத, உரல் கல்லு அதிலேயிட்டு
அருளினதோர், முன் கலித நாதமாக்கி
மானாத நாழிப்படியாகச் சேர்த்து
மகத்தான பிண்டத்தோடு ஒக்க ஊற்றே. (69)

*(உரை:)* காட்டின் பொருள், ஐந்தாம் மாதப்பிண்டம் ஆகும் விடக்கல்லென்ற பிண்டத்தின் ஐந்து சவ்வை எடுக்கவும். கல்லுரலிலிட்டு, இடித்து, நாழியளவு எடுக்கவும் பிண்டத்துடன் சேர்த்து ஊற்றவும்.

ஊற்றியே இரும்புலக்கைக் கொண்டே சாமம்
உச்சரித்து இடித்து, மா தோண்டிக் கொண்டு
ஆற்றியே, மூன்று உருப்பேற்றெடுத்த மாதா
அவளுடைய பனிக்குடமா சேர்த்துக்கொண்டு
போற்றியே, பாண்டத்திட்ட நீர் தன்னைப்
பூரணமே, என்று மன உறுதியாக
நாற்றிசையாம், மாவதனை இதிலேயிட்டு
நல்ல சித்தி பெறக் கரைத்து, பத்துமுறை
தெளியே. *(70)*

*(உரை:)* இரும்புலக்கையால், ஒரு சாமம் இடித்துப் பின்னர் எடுத்துக்கொள்ளவும். தாயின் பனிக்குட நீரைச் சேர்க்கவும். கரைத்து பத்து முறை தெளிவு நீரெடுக்கவும்.

---

1. காணாத

தெளிய வைத்துத் தெளிவதனைப் பாண்டத்திட்டு
சீரான வன்னியிட்டுக் கொதிக்க வைத்துக் காய்ச்சி
தெளிவதனை, இறக்கி ஆறவைத்துப் பீங்கான்
தெளிய ஒரு, பீங்கானிட்டு நீயும்
வளியாகி,[1] பத்து முறை இரவியில் வைத்து
அதன் கசிவை இறுத்துப் பத்துநாளில் பார்த்தால்
பெரிய பீங்கானடியில் பாறையுப்புக் காணும்
பலத்தவுப்புப் பாறையைத் தான் பெயர்த்திடீரே. *(71)*

*(உரை:)* தெளிவான பாண்டத்தில் சீரான தீயில், எரித்துக் கொதிக்கக் காய்ச்சவும். இறக்கி ஆறவைக்கவும். பின் 10முறை சூரியபுடத்தில் வைக்கவும். இது பாறையுப்பாகும்.

பேர்த்திட்டப் பாறையதைக் கல்வத்திலிட்டுப்
பேணியே, கழிந்த நாதம் விந்தும் சேர்த்து
ஏர்த்திட்ட பாலனுடத் தைலம் சேர்த்து
இல்மாதர், முலைப்பாலும் கூடச்சேர்த்து மதாகப்
பார்த்திட்ட ஒவ்வொன்றுக் கிரு
பாறையதில் விட்டுற்கு சாமமாட்ட
கார்த்திடக் கமல மெழுகு உருகிக்கட்டும்
கசடனுக்கு இம்முறையைக் காட்டிடாதே. *(72)*

*(உரை:)* பாறையுப்புடன், இரசம், கந்தகம் சேர்த்துப் *(பிண்ட)* தைலம், தாய்ப்பால் கூட்டவும். ஒரு சாமம் அரைத்திட, மெழுகு உருகிக்கட்டும். முட்டாள்களுக்கு இம்முறையைக் காட்டாதே.

**சிவபாடாணம் - செய்முறை**

காட்டிடாய், மெழுகுதனில் வெள்ளை நாயுருவி
கருவான செந்நாயுருவி அத்திப்பாலும்
எட்டிடாய் இது மூன்று ஒவ்வொன்றுக்கும்
இருபலந்தான் இயல்பாக விட்டுச் சாடி

---

1. வழியறவே.

ஆட்டிடாய், அரக்கு மெழுகும் பாரு
அனேகம் பேர், இதற்குச்சொல்ல நாவேயில்லை
நாட்டிடாய், அவ்வரக்கில் கற்பூரவல்லி
நல்லயிலைக் கள்ளிச் சாறு, பிரமதண்டாமே. *(73)*

*(உரை:)* மெழுகுடன், வெள்ளை நாயுருவி, சிவப்பு நாயுருவி, அத்திப்பால் இருபலம், விட்டு ஆட்டவும்.சிவந்த நிறமான மெழுகு கிடைக்கும். இத்துடன் கற்பூரவல்லி, இலைக்கள்ளி, பிரமதண்டிச்சாறு.

### கருவண்டு நாபி

தண்டான பலத்தலே இருபலம் வாங்கித்
தருவான, இருசாறில் நாலுபலம் வாங்கி
அண்டான இது மூன்று மரக் காலிட்டு [1]
ஆட்டுவாய் ஒருசாமம், ஆட்டினாக்கால்
தண்டான கருவைக் கொண்டு [2] வண்டேயாச்சு
நல்ல குரு வண்டொன்று, நாபியென்றும்
வண்டான, வண்டென்றும் காமென்றும்
வசனித்தோம், சிவசார பாடாணமாமே. *(74)*

*(உரை:)* பிரமதண்டு 2 பலம், ஏனைய சாறு 4 பலம், மரக்கால் உள்ள குழவியால் ஒரு சாமம் அரைத்தால் சிவபாடாணம் கிடைக்கும்.

### சவ்வீரம்

சாரமென்றும், அதிசாரமென்றும் பேரு
சங்கையில்லா, அண்ட சராசரமென்றும் பேரு
ஆரமென்றக் கருச் சாரமென்றும் பேரு
அலரான [3] மதிச்சாரமென்றும் பேரு
வீரமென்ற சவ்வீனமொன்று பேரு
விசித முள்ள திசை வீரமென்றும் பேரு
சாரமென்ற சாரசிங்கி யென்றும் பேரு
சவ்வீனமென்பதற்கு வஞ்சிப்பேரே[4]. *(75)*

---

1, மரக்கால், 2. நல்லான நல்ல குருவைக்கொண்டு, 3. அவளுனமதி, 4.வஞ்சினப்பேரே.

(உரை:) சவ்வீனத்திற்கான பெயர்கள், சாரம், அதிசாரம், (சங்கையில்லா) அண்ட சராசரம், கருச்சாரம், மதிச்சாரம், சாரசிங்கி என்பனவாகும்.

**ஆறாம் காய்ச்சலுப்புப் பெயர்**

உப்பான, கம்பியுப்பு என்றும் பேரு
உறைந்த, நாதசத்தியென்றும் இதற்குப்பேரு
அப்பான, சவுட்டுப்பு என்றும், பேரு
அருவான கயவல்லி[1] யுப்பென்றும் பேரு
கையான, கசட்டுப்பு என்றும் பேரு
கருவான, வளையலுப்பு இந்துப்பு என்றும்
செப்பார்கள், ஒருவருந்தான் செய உப்பென்றும்
செப்பினோம், ஆறாம் காய்ச்சலுப்பின் பேரே. (76)

(உரை:) கம்பியுப்பு, நாதசத்தி, சவுட்டு, கயவல்லி கசட்டுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, செய உப்பு என்பன. ஆறாம் காய்ச்சலுப்பின் பெயர்களாகும்.

செப்பினோம் உப்பதனைச் சீசாவிலிட்டுச்
சின்மயமாம் பூரணத்தைத் தெரிசித்தப்பா
அப்பினோம், அடிபணிந்து உப்பில் சேர்கொண்டு
ஆறாம் காய்ச்சல் உப்பதனைக் கல்லந்தாக்கி
நம்பினோம், பன்னிரண்டு பலமிட்டு[2]
நாதவிந்து ஒன்றாய் சேர் இரண்டு பலந்தாகி
ஒப்பினோம், பூநீறு ஒரு பலந்தானிட்டு
ஒருசாமம் மெழுகது போல் உறுதிபெறத்
தாக்கே. (77)

(உரை:) உப்பைக் கண்ணாடிக் குடுவையிலிடவும், ஒருசேர் உப்பை கல்வத்திலிட்டு, இரசம், கந்தகம் இரண்டு பலம் பூநீர் 1 பலமிடவும். ஒருசாமம் அரைக்க, மெழுகு உறுதியாகும்.

---

பாடல் 76 சரசுவதி மகால் சுவடியில்லை.

1. கயவல்லி, 2. பரப்பினோம் பனிநீர் இரண்டு பலம் விட்டு.

தாக்கியே வழித்ததனைப் பாண்டத்திலிட்டுத்
தருவான, பனிக்குடத்தில் சலம் படி தானிட்டு
தூக்கி மேனிச் சாற்றைப் படிதானிட்டு
தூவிளங்க காய்ச்சாறு அரைப்படி தானிட்டு
போக்கிப் பொடுதலைச் சாறு அரைப்படி தானிட்டு
பூமுலையாள் முலைப்பால் நாழியிட்டு
ஆக்கி பத்துமுறை அரைத்துத் தெளிவுதனை வாங்கி
அத்தெளிவைப் பாண்டத்திலிட்டு,
வன்னியடுப்பேற்றே. *(78)*

*(உரை:)* மெழுகைப் பாண்டத்தில் போடவும். பனிக்குடநீர் 1 படி விடவும். குப்பைமேனிச்சாறு படி, தூதுவளை, பொடுதலைச்சாறுகள் அரைப்படி, தாய்ப்பால் நாழி இவற்றால் பத்துமுறை அரைக்கவும். பின்னர் தெளிவாக எடுத்து, அடுப்பேற்றிக் காய்ச்சவும்.

ஏற்றியொரு சாமமதைக் கொதிக்க வைத்தீராகில்
என்ன சொல்வேன், குழம்பதுவும் இந்திரகோப
நிறமாம்
ஆற்றியதை இறக்கியாற வைத்தீராகில்
ஆவின் தயிர்போல அதுவுமது பாகம் காணீர்
சாற்றிய பீங்கான் தனிலே குழம்பதனை வார்த்து
சச்சிதானந்தப் பரிபூரணத்தைப் பணிந்து
ஏற்றியே, ஏழாங்காய்ச் சலுப்பு செய்வதாக
எடுத்துநீ, உதயரவி காலமதில் வையே. *(79)*

*(உரை:)* இதை ஒரு சாமம் கொதிக்கவைத்தால் குழம்பு ஈசலின் வண்ணமாயிருக்கும் பசுவின் தயிர்போல ஆறவைத்தால், இருக்கும். பீங்கானில் குழம்பை வார்த்து, காலைச் சூரியனில் வைக்கவும்.

வையப்பா, பூபதியைப் புலத்தியனே கேளு
வளமாகப்பத்தித்து, நாள் முழுவதும் உரைத்தப்பா
பையப்பா, பாகம் பத்துமுறை சென்றதேயாகில்
படருமதில், கல்லுப்புப்பாரு, பாரதனை

பொய்யப்பா, சொல்லவில்லை இந்த நூல் காவியம்
புகழ்பெற்ற சித்தருக்கு, நிகண்டகராதி
கையப்பா, வாச மலர் பரிமளம் போலக்
கருவாகச் சொல்லுகின்றோம் இந்த நூறெட்டே.(80)

(உரை:) பத்து முறை இதைச்செய்ய, பீங்கானில் படரும், கல்லுப்பு, பொய்யாக இதைச் சொல்லவில்லை. மலரின் மணமாக சித்தருக்கு, இந்த நூல் நிகண்டகராதியாகும். 108 பாடல்களைக் கருவாகச் சொல்லுகின்றேன்.

எட்டான ஒன்றிரண்டும் பத்தாய் நின்ற
ஏகபரி பூரணமாம், பிரம சொரூபம்
நெட்டான என்னுயிர்க்கும் பரமாய் நின்ற
நிகழ்ந்த இருதயக் கமல சகார பீடம்
வட்டா ரவிமதி வாழி, அதற்கு ஈடுண்டோ
வன்மை மாணாகக்கவி பிற கைமாறு
தொட்டாலும் புருசசென்மம் புவியில் கோடி
தொல் புவியிலொருவனுக்கு தொடுத்தவாரே.(81)

வாரான முன்சொன்ன ரவியிலுப்பா
மாணாக்கரறிந்து கொள்ளுமே ஏழாங்காய்ச்சல்
காரான இரவிபத்து, அதன் கசிவையிறுத்தால்
காளகண்ட ஏமம் என்ற செமமென்ற செயநீராகும்
சேரான பூபதியே புலத்தியனே கேளு
செயநீரை சீசாவில் பதனம் செய் நீ
தேறான, செகத்தோர்களுண்மை அறிவாரே
செகராச சுந்தரமே செப்புவோமே. (82)

(உரை:) ஏழங்காய்ச்சல் உப்பை, சூரியபுடத்தில் பத்து முறை வைத்து அதன் நீரை வடிகட்டவும். இது காளகண்ட ஏமம் என்ற செயநீராகும். இதை உலகோர் அறிவார்கள்.

## வேறு

செப்புவோ மிந்தப்படி யறிந்து சொன்னோம்
செய்வினையகற்றி நின்றோர்க்கொன்றே ஒன்றுமாம்
இப்புவியில், யாரறிவார், புலத்தியனே கேளு
இந்த எண்ணூற் கரு அறிவோர் அறிவாசனோர்க்கு
தப்பு ஒரு காலத்தில் வாராதய்யா
தகைமையறிந்திடு வோரரிது தரணிதனில்
முப்பூவை யறிந்திடுவோர் முன்னோர்க் கதிக
முறை நாலுவேத விதி அறிவார்தானே. (83)

*(உரை:)* இவ்வாறு அறிந்துகொண்டதை எடுத்துக் கூறினோம். இந்த எண்ணூறு பாடல்களின் கருவை அறிந்தவர்களுக்கு, தவறு வராது, உலகில் முப்பூவைப் பற்றி அறிந்தவர்கள், நான்கு வேதத்தின் விதியை அறிவார்கள்.

தானவன் போலிருந்தப் பரஒளியைக் காணார்
தனித்த பொருள், பூரணத்தை யாரும் காணார்
நீ, அவனே, நான், நீயே என்று சொல்லி
நீடுலகில் திரிவோர்கள் அனந்தங்கோடி
சேனைபதி, மகராச யோகம் பெற்ற
செல்வ பூபதி அவர்தான், சிவயோகியாகும்
ஆனவர்தான், பூமாது வசியம் அவர்க்கிருப்பான்[1]
அளவற்ற சித்தியெல்லாம் அவர்க்கீவான் பாரே. (84)

*(உரை:)* தேவர்கள் போல வானத்திலுள்ள ஒளியைப் பார்க்கமாட்டார்கள். தனியான மூலப்பொருளை யாரும் அறியவில்லை. நீ, அவன், நான், நீ என்று அழைத்து, உலகில் திரிவோர்கள் அனேக கோடிப்பேர்கள். சேனாபதி, மகாராசாவாக வாய்ப்பு உள்ள செல்வம் உள்ள தலைவன் அவரேதான். சிவயோகியாவார். பூவைத்த பெண்ணை, வசியப்படுத்தும் இயல்பு, அவருக்குண்டு. எல்லா வகையான சித்தியெல்லாம் அவருக்குத் தருவாள்.

---

1. அவ வாக்கிருப்பாள்.

### கல்லுப்புப் பெயர்

பாரப்பா சுந்தரமே, புலத்தியனே கேளு
பாடினதோர், ஏழாம் காய்ச்சலுப்பு, கல்லுப்பாம்
ஆரப்பா, வடியென்றும் முடியென்றும் பேர்
அகாரமென்றும், உகாரமென்றும்,
நடுவென்றும்பேர்
ஊரப்பா, ஓங்கார மெனு மூன்றுக்கும் பேர்
ஓகோகோ, காரமென்றும், மகாரமென்றும் பேர்
வாரப்பா, காரமெனும் அதற்குப் பேரு
வாசமென்ற கல்லுப்பு இதற்குப் பேரே. *(85)*

*(உரை:)* புலத்தியரே கேளுங்கள், ஏழாம் காய்ச்சிய உப்பு, கல்லுப்பாகும். இதன் வேறு பெயர்கள், வடி, முடி, அகாரம், நடு, ஓங்காரம் என்ற மூன்றாகும். காரம், மகாரம், வாசம் என்பன வேறு பெயர்களாகும்.

உப்பென்ற உப்புசலம் ஊறிற்றானால்
உதிர, சுக்கிலம் விந்து நாதமாகில்
அம்பென்ற, ஆண்விந்து, சிவமேயாகில்
அதிசாரம், உபரசம் என்றதற்குப் பேரு
கப்பு என்ற கருநாபிக்கருவென்றும் பேர்
காரியமென்ற தற்கும் பேர் வீரமென்றும்
செப்பென்ற சாரசிங்கியென்றும் பேரு
சச்சிதானந்த வெளி, செயநீரி நீரிரண்டு பேரே. *(86)*

*(உரை:)* செயநீரின் பெயர்கள், கருநாபிக்கரு, காரியம், வீரம், சாரசிங்கி, சச்சிதானந்த வெளி, உபரசத்தின் பெயர்கள். ஆண்விந்து அதிசாரம் என்பன.

### ஏம தத்துவம்

இரண்டுபேர் இதனையவர் காணார் பாரு
ஏழாங் காய்ச்சல் ஐந்து திங்கள் கருவிது பாரய்யா
தொண்டு பண்ணும் பெரியோர் கைவிடார் இம்முறையை
தொகையாகச் சொல்லிவிட்டோம், இன்னும்கேளு

அண்டு ஆறாம் திங்களது [illegible] மனிதர்
அவரவர்கள் சாதியென்றால் கட்டுமையா
கொண்டு உமைக் கண்டு, உம்மைக் கொத்தடிமைகொள்வார்
குருவறியப் புலத்தியனே, கூறக்கேளே. *(87)*

*(உரை:)* இருவர் இதனைக் காணமாட்டார்கள் பாருங்கள். ஏழாங்காய்ச்சல் உப்பு, ஐந்தாம் மாதக்கருவாகும் பாருங்கள். பொது நலத்தொண்டர்களான. பெரியவர்கள், இந்த செய்முறையை விலக்கமாட்டார்கள். இதனை, தொகையாகத் தொகுத்துச் சொல்லுவோம். மேலும், கேளுங்கள். உங்களைப் பார்த்து, கொத்தடிமையாக வைத்துக் கொள்ளுவார்கள். ஆறாம் மாதப்பிண்ட உப்புக் கட்டு பற்றிக் கூறுகிறேன்.

**பனிநீரின் பெயர்**

கூறக்கேள் ஆறாமாதப் பிண்டமேயாகில்
கற்றறியச் சுக்கிரனுடப் பிண்டமே வாங்கிச்
சாறக்கேள், நாதமான நீரென்றாக்கால்
சார்வான பெண்ணடியின் பனிநீரதை வாங்கி
கோறக்கேள், கோதை இளமாது பனிநீரில்
குப்பைமேனிச் சாறுபடி ஐந்துபடி வாரு
தேறக்கேணீர், அதனைக் கலக்கி ரவி முகத்தில்
தெளியவைத்து நாட்சென்றெடுத்துப் பாரே. *(88)*

எடுத்ததைப் பார்த்தீரே யாகிலையா
என்னசொல்வே னதற்குப் பேர் சுத்தசலமாகும்[1]
அடுத்த குடப்பனி நீரென்று அதற்குப் பேரு
யாரும் காணாத சலநதி[2] யென்றும் பேர்
கடுத்த அழல் கங்கை யென்றும், கொங்கை யென்றும் பேரு
காரமென்றும்[3], கருமேக சலமென்றும் பேரு
சடுத்த சாகரமென்றும், அப்புவென்றும் பேரு
சலாந்த[4]மென்றதற்குப் பேரு பனிநீரின்[5] பேரே. *(89)*

---

பாடல் 89, சரசுவதி மகால் சுவடியில் இல்லை.
1. பரிசுத்த சலமாகும், 2. சலாநதி, 3. காரொளி, 4. சலாநதி, 5. மணிநிறத்தின்.

(உரை:) ஆறாம் மாத பிண்டத்தின் வெள்ளியை வாங்கவும். பெண்ணின் நாதநீர் குப்பைமேனிச்சாறு ஐந்துபடி வார்க்கவும். அதைக்கலக்கி, சூரியபுடம் வைத்து ஒரு நாள் சென்று எடுக்கவும். இது தூய்மையான நீராகும். குடப்பனிநீர், சலாந்தி, வழலை, கங்கை, சாகரம், சலாந்தம் என்பன பனிநீரின் பெயர்கள்.

நீரான நீர் தன்னை, உலகமதின் விண்டால்[1]
நின் சிரசு வெடித்துத் தலை தெரித்துப் போவாய்
வாரான, இராசரீகம் அதற்காகா, அடுக்காது சித்தர்க்கில்லை
வையகத்திற் கேற்காது, சித்தராகில்
பேரான[2] அவர்க்கடுக்கும் மற்றோர்க்காக
விதியமைப்பு[3] உள்ளவர்களுக்கு உடனே[4] சித்தி
நேரான இதை அறிந்து, நாழி கொண்டு நீயும்
நேராக மூன்று நாளிருபலந்தான் ஆமே. (90)

(உரை:) உலகத்தில் இந்நீரை அறிந்துகொண்டால், தலை வெடிக்கும். சித்தர்களுக்கே இது பொருந்தும். ஏனையோர்க்கு ஆகாது. விதியமைப்பு உள்ளவர்களே, இதைச் செய்து வெற்றியடைய முடியும். இதை தெரிந்துகொண்டு நாழிக்காலம் மூன்று நாள், இருபலம்.

### ம(ா)து நீர்க்கிருதமறியவும்

ஆமப்பா புலத்தியனே சீரகம் சேர்த்தரைத்து
அதில் பனையின் வெட்டு கற்கண்டு சேர்த்து
ஆமப்பா, இரண்டையுந்தான் தூளாகச் செய்து
எடுத்து பனி நீரதிலே இரண்டையுந் தாளிட்டு
ஆமப்பாக் கூட்டியதை மத்தித்துப் பனியில் வைத்திடவே
பனிவிழுந்து மது கிருதமாகும்
நாமப்பா, மனோன் மணிதன், வாலைபூசை செய்து
நலமான மாது, பனி நீர் கிருதமாமே. (91)

---

1. விட்டால், 2. மேலான, 3. உதயம், 4. உள்ளே.

கிருதமென்ற கோடாகோடி வகையதுக் கெல்லாம்
கிருதமதுக்கு ஈடுண்டோ, எதுவும் இதற்கீடோ ?
விருதமென்ற, கிருதமதில் இரண்டுபலம் வாங்கி
விளங்கவே, ரவி சூரியன் உதிக்கு முன்பாக
நிருதமென்று உயிர்க்கிருதம் இருபோதுண்டானால்
நிராமயம் போல் மண்டலத்தில் நீ, பூபதியாவாய்
எருபதுமென்று, ஐயாயிரத்திலொருவனுக்கு சித்தி
எய்துமென்ற, கருமமெல்லா மெய்தும்
அவர்க்காமே. *(92)*

*(உரை:)* சீரகம், பனை (வெல்லம்) கற்கண்டு சேர்த்து பனி நீரில் வைக்கவும். இதைக் குழம்ப, மது (இனிப்பு) கிருதம் (நெய்) இந்த நெய்க்கு ஈடுசொல்ல எதுவுமில்லை. சூரியன் தோன்று முன்பு உண்ண தலைவனாகலாம். ஐயாயிரத்திலேதான் ஒருவனுக்கு இது கிட்டும்.

எய்து மென்ற மானிடர்க்குக் கன்மநோய் வந்தால்
எடுத்ததோடு உயிர்க்கிருதம் குன்றியெடை வாங்கி
கைய்து மென்றவோர் நாளுக்கோர் குன்றியாகும்
கருணை பெற, அதிகாலம் எடை தவறாதெடுத்து
நைது என்ற ஆவின் வெண்ணைய் பாக்களவு கொண்டு
நல்லவிடைக் குன்றி எடுத்ததற்குள்ளே வைத்து
பைது மென்ற பாவத்தால் வந்த நோய்க்குத்தான்
பாய்ச்சுவாய்,பண்டிதம் பொய் வாரா,
என்றோதே. *(93)*

*(உரை:)* மனிதர்களுக்கு கன்ம நோய்களான தொழு நோய், காசம், மூளைக்கேடு என்பனவற்றிற்கு குன்றியளவு நாளுக்குத் தரவும். பசுவின் வெண்ணை பாக்களவுக்குள் வைத்து உண்ணவும். மருத்துவம் பொய்யாகாது என்று கூறுகிறேன்.

ஓதவே, சடலமதிலுதித்த நோயெல்லாம்
ஒரு நொடிக்குள்ளே, ஓடிவிடும் உண்மை, இது பாரீர்
சேதமொருநாளும் உனக்கணுகாது பாரீர்
செகராச பூபதியைச் செப்பினோமுண்மை

வாது இம்முறை செய்து உலகு குருவென்று
வந்தாலும் இவ்வையகத்து மானிடம், கண் மயங்கக்
காதமென்ற இக்கிருதம் குன்றியெடைக்கொண்டால்
கனயோக பூபதிபோல், இராச யோகியாமே. *(94)*

*(உரை:)* உடலில் காணப்படும் பிணிகள், நோய்கள் யாவும் ஒரு வினாடியில் மறைந்துவிடும். இதனால் எவ்விதமான விளைவுகளும் ஏற்படாது.குன்றி எடை உட்கொள்ள இராசயோகியாவார். உலகத்தோர்க்கு ஆசிரியர் என்று மக்கள் மயங்குவார்கள்.

ஆமென்ற, இக்கிருதம் கொள்ளயிலே கேளு
அதிகாரகறியுப்பு அதிகப்புளியாகா
போமென்ற, பெண் போகமாகாது, பாரீர்
புணர்ச்சி செய்தாலும், உடற்சூடு மூலச்சூடு பற்றா
வேதமென்ற விந்துகளில் இம்பகளாவி
விரகத்தால் மேகச் சூடதிக மயலாகி
ஓமென்ற, சடலமெல்லாம் காஞ்சுரை போலுலர்த்தும்
உதட்டியதாம் தடிப்பது போல் கடிக்குமது பாரே.(95)

*(உரை:)* இந்த நெய் உண்ணும் போது பின்பற்ற வேண்டிய முறைகள். அதிகக் காரம், உப்புள்ள பொருட்கள், புளிப்புள்ள உணவுகள் கூடாது. பெண்களுடன் தொடர்பு கூடாது. உடல் வற்றி, காய்ந்த சுரைக்காய் போல் காணப்படும்.

கடிக்கின்ற தேகத்துக்கதிக சூடாகில்
காம வன்னியக்கினிபோல் காந்த துவாகில்
செடிக்க முன் தேகமெல்லாம் தினவது போலாகில்
சடலமெல்லாம், சொறி சிரங்கு, காந்தல் மிகவாகி
அடிக்கு முன், தேகமது அழிந்து போகுமையா
அகத்தியன் மேல் ஆணைப்படி குறைவா
துடிக்குதடி, நொடிக்குள்ளே,வெடித்துப்போம் சடலம்
துரைராசபூபதியே, சொன்னோமிதுவாமே. (96)

(உரை:) அதிகமான வெப்பம் உடலில் ஏற்பட்டால் அரிப்பு, சொறி, சிரங்கு என்பன ஏற்படும். இது அகத்தியன் மேல் ஆணை. பத்தியம் மீறினால் உடல் நொடியில் வெடித்து அழியும்.

சொன்னோமே, அமிர்த சஞ்சீவிக் கிருதமாகும்
துடியான பலம் போலாம், திருதமிதனாலே
வன்னோமே, இராசயோகம் செய்து
வாசியோகம், பிராணயோக மதுவும் செய்து
முன்னோமே, கனயோக புண்ணியசாலி போல்
கயன்ற ஆசைதனை விட்டு பரகதிக்காளாகி
அன்னோமே, அறுபத்துநாலு கலையறிந்து
ஆருமறியாமல், இருப்பார்கள், பண்போரே. (97)

(உரை:) அமிர்த சஞ்சீவி கிருதம் பற்றிச் சொன்னேன். மிக்க வன்மையுள்ளது. இராசயேகம், வாசியோகம், பிராண யோகம் என்பன செய்துள்ள கனயோக புண்ணிய சாலிபோல உள்ளவர்கள். ஆசையை விட்டு அறுபத்து நான்கு கலைகளை அறிந்து, அறியப்படாமல் ஒதுங்கி இருப்பார்கள், பண்புடையவர்கள்.

ஓரான, மாது பனைநீரின் கிருதம்
ஓகோபார், புலத்தியம் உசிதமதுவாகும்
நேரான, கிருதமதைப் பதனமாய் செய்து
நின்றிடமாம், பிண்டமது கண்டதையெடுத்து
வாரான, மாணாக்காள் மலைத்திட்டிரையா
மாதவன் ஈன்ற பிண்டமுன் சொன்னதுவுமாகில்
கூரான, அவப்பிண்டம் உடயதனை வாங்கி
கூச்சமயிர் சவ்வதுவின், கோரையதைப்
போக்கே. (98)

(உரை:) மாது பனைநீரின் நெய், பக்குவமாய் செய்து, நினைப்பது போல் பார்ப்பாயாக. பிண்டத்தின், மயிர், கோரை என்பனவற்றை சவ்விலிருந்து அகற்றவும்.

போக்கான போக்கதுவில் ஆனந்தமுனி [illegible]

போக்கிதுதான் சித்தருக்கிது குருதானமாகும்

வாக்கான அமிர்தமுனி, அகத்தியனை வாக்கிதுதான்

வாலை யெந்நாளும் பதினாறாய் வாழ்ந்திடுவோம்

தூக்கான சேதியெல்லாம் நிறுத்து ஓரெடை யாய்

துதியறவே, சொல்லிவிட்டோம், கருவாளியானால்

நாக்கான எலைக் காண்பார், காலையதைக் காண்பார்

நாலாங்கால், ஐந்தாங்கால், ஆறுமேழும் காணே. *(99)*

*(உரை:)* மருந்துகளைச் சொல்லுவது அகத்தியரின் சொல்லாகும். வாலை எந்நாளும் பதினாறு வயது உடைய வாழ்த்துவோம். எல்லாவற்றையும், நிறுத்துச் சொல்லி விட்டே தம் கருவையறிந்தவரானால் எல்லையை பார்பார். 5, 6, 7 காற்றைக் காணவேண்டும்.

காணும் பெரியோர்களிட[1] அனுமதியே வேண்டும்

கண்ணாடி முகம், பார்த்தப்பா, வினைபோலாகில்

வேணுமொரு புத்தி, கணஞ்சகியா, அல்லோவேண்டும்

ஓதறிவால், நல்வினையைக் கண்டெடுக்கவேண்டும்

ஆணும் பெண்ணும் எந்நாளும் அணுகலாதையா[2]

அதுதள்ளி ஒழிப்பாகும்[3], புத்துவிடமுண்டால்

தேனும் பழம்பால் அமிர்தமுண்ட பாவனைப்போல்

தித்திக்கும், மதியமுத உண்டோர் பெரியோரே. *(100)*

*(உரை:)* பெரியோர்களின் அனுமதியைப் பெறுதல் வேண்டும். கண்ணாடியில் முகம் காண்பது என, செயலை அவர்கள் அறிவார்கள். அறிவு கொண்டு, நற்செயலை அறிய வேண்டும். அது இல்லாவிடில், பாழும் புற்றிலுள்ள பாம்பு நஞ்சை உண்பது போலாகும். இது தேன், பால், அமிழ்தம் என இனிக்கும். மதியமுதம் உண்பார்கள். சித்தர்களான பெரியோர்கள் ஆவர்.

---

1. ஆதி, 2. மருகலாதையா, 3. வெளிப்பாகும்.

## முடிமயிர்

பெரிதான, காலென்றால் காலு மல்ல
பலமான மண்ணடிதான் உருவம்[1] காணார்கள்
அரிதான, அறிவென்றால் அறுபதுமல்ல[2]
அன்று உற்பவித்த மண்டியதனைக் காணார்[3]
எரிதான, நந்தியொளி பேரொளியைக் காணார்
.......... .... ....... ..... ..... ....
கிரிதான பரகதிதான் என்றல்ல
மணந்தால் சடலாவி, பிருதுவியின்
சேருமிடமாமே.(101)

(உரை:) பெரிய காற்று என்றால் காற்றுமில்லை. வன்மையுள்ள மண்ணின் அடி, உருவத்தைப் பார்க்க மாட்டார்கள் அன்று தோன்றிய மண்ணடியை அறியார்கள். நந்தியின் ஒளியைப் பார்க்கமாட்டார்கள்.

## தலையின் பெயர்

முடியான அகாரமதின் முதற்கருதானா[4]கும்
மூலவெளி, சச்சிதானந்த வெளியாகும்
அடியான படியாகும், பரவெளியுமாகும்
அந்தமெனும், ஞானவழி ஆகாயவெளிதான்
குடியான மூலவெளி கயிலை வெளியாகும்
குருவிப்பாரண்ட மெனும் கண்டமெனும் பெயரே
செடியான, அண்டப் பேரொளி என்றும் பெயரே
செப்பினோமிந்தப்படி, சிரசதுவின் பேரே. (102)

(உரை:) முடி என்ற அகார எழுத்து, முதலானது மூலத்தின் சத்து சித்து ஆனந்தம் என்ற ஆகாயமாகும். மூலம் கயிலாசம் எனப்படும் ஆகாயமாகும். அறிவான வழி, ஆகாய

---

பாடல் 101ல் சரசுவதி மகால் சுவடியில் 5,7,8 அடிகள் இல்லை.

1. யாரும், 2. ரூபமதவல்ல, 3. முடியான அகாரமதின் முதற்குருதானால், 4.அகாரமதின்

வழியாகும். தலைக்கு, அண்டப் பேரொளி, கண்டம் என்ற பெயர்கள் உள்ளன.

### முடிமாமிசத்தின் பெயர்

சிரசான சவ்வதன் பேதனைக் கேளு
சிக்கென்று, பிடித்திழுத்தால், நாரது போல் நீளும்
நரசான, நரம்பாணிக்கே வாணியென்றும்
நாதசிரவாணியென்னும் அதீதப்பேரதற்கு
நரசான,[1] கலவமாயென்றும் பேரதற்கு
கருவியுட வெளிவிடுத்தாயென்றும் பேரு
அரசான, அண்டச்சவ்வு, குலச்சவ்வென்றும் பேரு
அருளினோம், முடியண்ட சவ்வின்[2] பேரே. *(103)*

*(உரை:)* தலையின் சவ்வுப் பெயர்கள் இழுத்துப் பார்த்தால் நீளும் நார்போல இருக்கும். நரம்புக்கு வாணி, சிரவாணி, கலவமா, வெளிவிடுத்தாய் என்ற பெயர்கள், அண்டச்சவ்வு, குலச்சவ்வு என்பன தலையிலுள்ள சவ்வின் பெயர்களாகும்.

சவ்வான முடிமயிரின் பேரதனைக் கேளு
சாற்றுகிறோம், சலமர்ச்சாரையது கோரை
இவ்வான, இப்புவியிலறியும் பெரியோர்கள்
இங்கித, சங்கீத உரோமமென்றும்[3] பேரே
பவ்வான பருஞ்சூரை, காரையென்றும் பேரே
பாடினோம், இந்தப்படி பவனி வருவோர்க்கு
ஒவ்வான, உலகமதிலுண்டு, வகையிதுதான்
உசித வடியழகியென்று முடிமயிரின் பேரே. *(104)*

*(உரை)* தலையிலுள்ள மயிரின் பெயர்கள், சலமாச்சாரை, கோரை,உரோமம் இங்கிதம், சங்கீதம், பருந்தரை,காரை, வடியழகி.

---

1. கரசான, 2. சவ்வின, 3. நோமம்.

## முடியண்டத்தின் பெயர்

இனமான ஓங்காரம் சூழாய் நின்ற
எழிலான பிரம்மத்தாலெடுத்த கூறு
வனமான கூடாம் சந்நதமென்றும்[1] பேர்
வசந்த நதிக்கரையென்றும் பெயர்
தனமான கிரியென்றும் மலையென்றும் பெயரே
சச்சிதானந்த வெளி, மேருவென்றும் பெயரே
குணமான, வீடசெபிந்து[2] குறியுமாச்சே
குடிலீடு, முடியண்ட அதீதத்தின் பெயரே. *(105)*

*(உரை:)* வனமான, கூடு, சந்நதம், வசந்தநதிக்கரை, கிரி, மலை, சச்சிதானந்தவெளி, மேரு, முடியண்டத்தின் பெயர்களாகும்.

## மூளையதன் பெயர்

வீடான முடியண்டம் விபரீதமே, சொன்னோம்
வசித குணலட்சணவான் மேவு கொடி கொண்டு
காடான வீடதிலே இருந்தயிளம் பாலை
கன்று விட்ட பாவனைப் போல் சிந்த இளநீர்[3]
தேடான தேன் வழுக்கைப் பால் வழுக்கைத் தயிர்தான்[4]
திட்டும் வெண்ணெய் நெய் மோர், தீவிரசமாகில்
நாடான அமிர்த[5] சஞ்சீவிப் பூடென்றும் பேரு
நல்லசாம்பவி இவை வழுக்கை முடி மூளையதன்
பேரே. *(106)*

*(உரை:)* மூளையில் பெயர்கள் அமிர்த சஞ்சீவிப்பூடு, நல்ல சாம்பவி என்பன.

---

1. சந்து, 2. அகாரமென்றும்.3. கசிந்து சீழ் நீராம், 4. தட்டில் தான், 5.வழுந்த.

குறிப்பு: இப்பாடல் அந்தாதியில் துவங்கவில்லை.முதல் பாடலுடன் தொடர்பற்றுள்ளது.

### மூளை மாமிசத்தின் பெயர்

முளையென்ற மூளையதின் மூலமதைச் சொன்னோம்
மூளை மாங்கிசத்தினுட பேரதனைக் கேளு
காளையென்றும், வாளை யென்றும் வேளையென்றும்
பேரு
கருவி நாவி, சூதமென்றும் பேரு, கோலை[1]
யென்றும் பேரு
வழை இர சூலி யென்றும் பேரு
குருவான நவநீதப்பூடென்றும் பேரு
பூவையென்றும் கண்பூளைப் பாய்ச்சி[2] யென்றும் பேரு
புனிதமென்றே, தலை மூளை மாமிசத்தின்
பேரே.(107)

(உரை:) மூளையின் மாமிசத்தின் பெயர்கள் காளை, வாளை, வேளை, கருவி, நாபி, சூதம், கோழை, பூளை, கண் பூளை, பேய்ச்சி.

### மூளைசலத்தின் பெயர்

மாங்கி சத்திலனேக முண்டு, போதனையைச் செல்ல
மாளாது ஆனாக்கால் மருவின் வீதம்[3] சொன்னேன்
ஆங்கிசத்திலுள்ளபடி அருவிநீரோடும்
அது கங்கைப் பனிநீரென்றும் பேரு
காங்கிசத்தில்[4] நலநீததந்தியென்றும் பேரு
நவிலு பரமானந்த நீரென்றும் பேரு
தூங்கிசத்தின், சுத்தநதி, மெத்த பதியென்றும்
துங்க நதி, செங்கழுநீர், மூளை சலத்தின்பேரே. (108)

(உரை:) மூளையிலுள்ள சலத்தின் பெயர்கள் அருவிநீர், கங்கைப் பனிநீர், நவநீத தந்தி, பரமானந்த நீர், சுத்த நதி, மெத்த பதி, துங்க நதி, செங்கழுநீர் என்பனவாகும்.

---

1. கோழை, 2. பேய்ச்சி, 3. மருவிதம், 4. நாங்கிசத்தில்.

*சலமான முடியதனை மெழுகு*
*சுன்னமாகச் சமர்த்துண்டோ?*
*புலத்தியனே, சமர்த்தறிவாய் நீயும்,*
*சலமான முடியாகச்சே, முடியண்டமாச்சே*
*சகலத்துக்கும் குருவாச்சே உப்புமாச்சே*[1]
*சலமான காயாச்சே மலைக் காயுமாச்சே*
*கத்ததாச்சே,*[2] *கல்லாச்சே, வெள்ளைக் கல்லாச்சே*
*உலமான வாதி கலந்த கல்லென்றும்*
*ஓகோகோ, சேதிக்கல் அண்டக்கற்பெயரே.* *(109)*

*(உரை:)* தலைப்பிண்டத்தை மெழுகு. சுன்னமாக்கும் அறிவைப் புலத்தியரே பெறுதல் வேண்டும். மூளைசலம், முடி, அண்டமாக உள்ளது. உப்பு, எடுக்கலாம். முதன்மையானது ஆகும். காய், மலைக்காய், சத்து கல், வெள்ளைக்கல் என்பன அண்டக்கல்லின் பெயர்களாகும்.

*அண்டமென்றால் அண்டமல்ல அகண்ட வெளியாகில்*
*அதுக்கப்பால் சச்சிதானந்த வெளிபார்க்கில்*
*கண்டமென்ற பிண்டவெளி, பேரொளியுமாகில்*
*கைலாச வெளிப்பருகில் கலந்த தென்று*
*பண்டமதுக் கீடாமோ, அமுத இரசமாகில்*[3]
*பாடினார் முன்னோர்கள் பலகலையனேகம்*
*தொண்டறிவாரோ, இந்த அகண்ட வெளிகாணார்*
*தொல்லும் இன்னூல் காவியந்தானெட்டு*
*நூறாமே.*[4] *(110)*

*(உரை:)* கரு என்றால் கருவல்ல; அகண்ட ஆகாயமாகும். அதனை அடுத்து சச்சிதானந்த வெளி உள்ளது. கண்டம் என்ற பிண்டம், ஆகாயமானால் பெரிய ஒளி தோன்றி கைலாசம் எனப்படும் ஆகாயத்தில் கலந்தது என்று சித்தர்கள் பாடினார்கள். பல கலைகளைக் கற்றவர்களே அகண்ட ஆகாயவெளியைப் பற்றித் தெரிந்துகொள்ளமாட்டார்கள்.

---

1. அப்புமாச்சே, 2. சந்தாச்சே, 3.விழுந்த இரசமாகில, 4.சொல்லும் இந்நூல் இம்மெண்ணூறு அடிவந்து நாட்டுகிறோமே.

இந்த காவியமான நிகண்டில் 800 பாடல்களில் எடுத்துக் கூறுகின்றேன்.

## இளவழுக்கை

நூறான கருவியிலே நோயணு காதாகில்
நுணுக்கங்கள் கண்டறிவார் உண்மையிது பாரு
வாரான மகா முடியைக் கொண்டு சுதந்திரமே
மயிர்க்கோ படிரைச் சவ்வு முதல்தன் விசமே
போக்கிச்
சூரான, அம்முடியைச் சுத்தப் படித்திராய்
சுயம்பெறவே, கல்லுரலின் முடியதனையிட்டு
நேரான[1] ஆதிபுருசன் இரு நாதவிந்தால்
நிரவி, வாரினொளி முடியதுவில் தாக்கே. (111)

(உரை:) உடலில் நோயணுகாமல் நுட்பங்களை கண்டறிதல் வேண்டும். மூளையைத் தூய்மை செய்யவும். கல்லுரலில் இட்டு இடிக்கவும்.

தாக்கி வகை சொல்லு கின்றோம், துரைராசபூபதியே
தரணியே, அறிவோர்கள் யோகசாலி[2]
தாக்கு இரும்புலக்கை கொண்டு ஒரு சாமம்
சாதித்தால், சசியிலே மாவடு போலாகும்
தாக்குவதின் பிறகு, சுத்த நாத மருந்தூட்டித்
தரணியில், ஒருவருமறியாமல் கைக்கொண்டு
தாக்கொரு, விந்து நாதமதையிட்டுச்
சாடினால், இளவழுக்கைச் சாரமதுவாமே. (112)

சாரமென்ற இளவழுக்கைச் சாரமதின் பெயரைச்
சாற்றுகின்றோம், மகனில் ஆரஞ்சாதித்தாலயா[3]
பரமொன்று பச்சையிள நாபி[4] பழச்சாறாம்
பழம் புளியின் மேவரசம் வாலையென்று பேரு
ஆரையென்ற ஆத்துமாவின் சூதமென்றும் பெயரே
அறிவினொளி, அமிர்தரசமென்றும் பேரே
காரமென்ற கருநாபி, வீரமென்றும் பெயரே,
கற்பூர சிலாசத்து சாரத்தின் பெயரே. (113)

---

1. காரான, 2. தரணிலெந்தவம் புரிவோம், 3. தணல், 4. தணல் அசமஞ்சம்.

*(உரை:)* சாரமென்ற இளவழுக்கையின் சாரத்தின் பெயர்களைக் கூறுகின்றோம். பாரம், பச்சை இளநாபி, பழச்சாறு, பழம்புளியின் மேவரசம் வாலை, கற்பூர சிலாசத்தின் வேறு பெயர்கள். ஆத்மாவின் சூதம், அறிவின் ஒளி, அமிர்தரசம், கருநாபி, வீரம் என்பனவாகும்.

சத்தென்றால் சத்தல்ல இடித்த இளவழுக்கைச்
சாற்றுகின்றோம், சகலறிவு அறியும்படியாகச்
சத்தென்றால் மரவழுக்கையாதி[1] அண்டவழுக்கை
தலையண்டவழுக்கை, காரசார வழுக்கை
சத்தென்றால் மேரு இள வழுக்கை யென்றும் பெயர்
சாதிலிங்கக்காரமென்றும்[2] வழுக்கையதன் பெயர்
சத்தென்றால், வேகாத தலை வழுக்கையாச்சே
சராசம் தாங்கி, இளவழுக்கையதன் பெயரே. **(114)**

*(உரை:)* இடித்த இளவழுக்கைப் பற்றி எல்லாரும் அறியும்படியாகக் கூறுகின்றேன். மரவழுக்கை ஆதி அண்ட வழுக்கை தலையண்ட வழுக்கை, கார சார வழுக்கை, மேரு இளவழுக்கை, சாதிலிங்க காரமென்றும், வேகாத தலை வழுக்கை சராசம் தாங்கி என்பன வேறு பெயர்களாகும்.

வழுக்கையென்றால் வழுக்கையல்ல அதில் கேளு
வாலை சுத்த விந்ததினால் நாழியது வாரு
வழுக்கையதில், சுத்த விந்துவிட்டு
ஒருசாமம் மெழுகு போலதை வாட்டிச் சாதித்தால்
வழுக்கை யெல்லாம் போக சுத்தி மெழுகைக் காயமாகும்
வசனித்தோம்[3], பரிபாசையறிந்து அறிவதனால்
வழுக்கைக்கு அனேகம் பேரென்னால், சொல்ல எளிதோ ?
மகமுடியின்[4], அண்ட மெழுகு மகிமையதை
அறியே. **(115)**

*(உரை:)* வாலை இரசத்தில் நாழியளவு ஊற்றவும். ஒருசாமம் ஆட்டவும். மெழுகு போலாகும். மறைவான

---

1. மா வழுக்கை, 2. சாரம், 3. வச்சிரம், 4. மகரமுடி.

பொருளை அறிந்துகொள்ளவே விளக்கினோம். வழுக்கைக்கு ஏராளமான பெயர்கள்; இதை எளிதில் கூறமுடியாது. அண்டமெழுகின் புகழை அறியவும்.

அறியுங்கால் அண்டமெழுகு, அண்ட [1] மெழுகென்று
ஆதிமெழுகு [2], அந்த மெழுகு கருநாபி மெழுகு
அறியும் பச்சை நாபி [3] மெழுகென்றும்
வாலை யென்ற, சூதமெழுகு, ரசமெழுகதாகும்
பரியும் கெந்தி மெழுகென்றும் பாடாண மெழுகென்று
பாடினோ மிந்தப்படி பரிபாஷை யறிந்து
துரிதனாம், இந்த எண்ணூறு நிகண்டகராதித்
துடியண்ட மெழுகின், துறையான பெயரே. *(116)*

*(உரை:)* அண்டமெழுகு ஆதிமெழுகு, பச்சைநாபி மெழுகு, துருசு மெழுகு, வாலை ரச மெழுகு, அந்த மெழுகு, கருநாபி மெழுகு என்பன பல வேறு வகைகளான மெழுகுகளாகும். (பரிபாசையில்) மறை மொழியில் இவற்றைப் பாடினோம்.

துறையான துறையெல்லாம் மாய்ந்து வழி [4] கண்டு
சூட்சாதி சூட்சமெல்லாம், சொல்லறிவால் பிடித்து
வரையான, பரிபாசைகளறிய நாமும்
வசனித்தோம், காவியமாம் இந்த எண்ணூறு
குறையாது, ஒரு பொருளந்துறை காணலாம் பார்
கோடியுப்பு வீழிரு [5] சினைக் கூறதனைவிட்டால்
பரையான, பரகதியில் சாயுச்சியம் பேசலாம்
பானு சதாக் கோடிவரை, பதினாறாம் வாழ்வே. *(117)*

*(உரை:)* நுட்பங்களை எல்லாம் சொல்லும் அறிவால் கண்டறிந்து, பரிபாசைகளில் காவியமாகச் செய்தோம். வான வெளியில் உள்ள சாயுச்சிய பதவியிலிருப்பது போல், பதினாறு பேறுகளும் அடைந்து வாழலாம்.

---

1. அகண்ட, 2. ஆகாத, 3. மெழுகு துருசு, 4. வெளிக்காடு, 5. புளி.

### பனிநீரின் பெயர்

வாழவென்றால் அண்டமெழுகு வழித்ததனை யெடுத்து
வசீகரமாய் பாண்டமதிலிட்டு மெழுகாக்கி
வாழவென்ற உலகமதில் பிறந்த பனிக் குடத்தில்
வாழுவோரிலைத் தாமரை, வஞ்சிக் குளமாகில்
வாழவென்றால், பூர்வகுளமதற்குப் பேரு
வாழையடிவாழை, சங்கு நதியென்றும்
வாழ வென்றால் சலாநதி [1] யென்றும்
வற்றாத சுத்த சலப் பனிநீரின் பெயரே. *(118)*

*(உரை:)* அண்டமெழுகை வழித்தெடுத்து, பாத்திரத்தில் இட்டு வைக்க, மற்றவர்களைக் கவரும் பூர்வகுளம், வாழையடி வாழை, சங்கு நதி, ஓரிலைத் தாமரை, வஞ்சிக் குளம், சலாநதி, வற்றாத சுத்தசலம் என்பன பனிநீரின் வேறு பெயர்கள்.

சுத்தமென்ற ஆண்கூறு, பெண் கூறேயாகில்
சுரோணிதத்தாலுண்டாச்சே, கூறிரண்டாச்சே [2]
அத்தனருள் ஆலயத்தால், காரமதுவாச்சே [3]
அகாரத்தாலுகாரம், தாயையுமதுவாச்சே
பெத்தவாசல், ஒன்றாச்சே, யுகவாசலாச்சே
பேரொளியாம், சொல்லிவிட்டால், வெளிப்படும் காண்
கைத்ததனால் கலவியது, நடுவில் பாழாச்சே
கருவி முன்னே, வெளிப்படுங் காண், கங்கைப் பனிநீரே. *(119)*

*(உரை:)* தூய்மையான ஆண், பெண் என்பன, சுரோணிதத்தால் ஏற்படும். ஆ, உ என்பன தாயைப் போன்றவைகளாகும். தந்தையின் அருளால், காரச்சுவை ஏற்படும். பெரிய ஒளி வழிவிட, கரு வெளிப்படும். கசப்பு ஏற்பட்டால், நடுவில் சுவை குன்றும் பனிக்குடம் கரு வெளியாகும் முன் வெளியாகும்.

---

1. சலனாநதி, 2. சூரியிரண்டாச்சே, 3. பத்தனருள் சலத்தால் சாறதுமாச்சே.

நீரான நீரையெல்லாம் பாண்டமதில் வாங்கி
நிண்ணயமாய் படியதற்குப் பலந்தான் மெழுகிட்டு
நீரான, நீரதைக் கரமதுவால் கரைத்து
நீடு[1], ரவிபடவே ஓர் நாளதை வைத்தால்
நீரான, மெழுகதனால், காரநீராறங்கும்
நீ, மகனே, பனிநீரும் சுத்தப் பனிநீரும்
நீரான தெளிவதீதமென்னால் சொல்ல
நீலை[2] குடத்துச் சலமதனைச் சீசாவில் தாக்கே. *(120)*

*(உரை:)* பனிக்குடநீரை, மண்பாண்டத்தில் படியளவு எடுக்கவும். பலம் மெழுகு சேர்க்கவும். கரைத்து; சூரியபுடம் ஒருநாள் வைக்கவும்.காரமான நீர், மெழுகினால் கிடைக்கும். இதை எடுத்துக்கொள்ளவும்.

அதுவான முன்சொன்ன பாண்ட மெழுகாகில்
அம்மெழுகில், பனிக் குடத்து நீரைந்து படிதான்
அதுவானதுவில், அந்நீர்விட்டு நீகரைத்து
அந்தணனாம், கதிர் சூரியன் ரவிபத்து நாழிகை
அதுவான, அமிர்தமதை ரவியில் வைத்து
அதுபத்து முறையாகில், தெளிவதனை, வாங்கி
இதுவான, நீர்த் தெளிவைப் பாண்ட மதிலிட்டு
இயல்பான அக்கினி வன்னியடுப்பிலேற்றே. *(121)*

*(உரை:)* பாண்ட மெழுகில், பனிக்குடி நீர் படியளவு சேர்க்கவும். கரைத்துக்கொண்டு, சூரியபுடம் நாழிகையளவு வைக்கவும். இவ்வாறு பத்துமுறை செய்து, தெளிவாக இறுத்துக்கொள்ளவும். பின் அடுப்பிலேற்றவும்.

ஏற்றிய மரமொன்றில், விறகெடுத்துத் தீமூட்டி
இருசாமம், ஒரு காலாக்கினியால் மூட்ட
சாற்றிய பொன் மாரியது, வான் மழையாகில்
சாரல் பனிமேகசலம், சாயமதைப் போல
நேற்றி நுரையோங்கி வழிந்து நடமாடும்
நிகரில்லை யிதன் பெயர், நிலையிதனால் சொல்ல

1. நீட்டும், 2. நிறை.

காற்றுத் தீமூட்டி, இடைவிடாதே இருசாமம்
கரு நுரையை யெடுத்து, சிமிழில் பதனமதாய்
செய்யே. *(122)*

*(உரை:)* தகுந்த மர விறகால் தீ மூட்டவும். காலாக் கினியாய் இருசாமம் எரிக்கவும். கருமேகம் போல, நுரை பொங்கி வழியும்.கரு நுரையை எடுத்துப் பதனமாய் வைக்கவும்.

**அண்ட வெள்ளை செயநீர் - உப்பு**

செய்து கார் நீரதனை இறக்கியாற வைத்துச்
சித்திரமாம், பீங்கானில் இரண்டு வாங்கியிட்டு
கொய்து, குழம்பதையிறுத்து, ரவிபத்து நாள்தான்
குழம்பதுவில், சார செயநீரது தானிறங்கும்
தொழுது நந்தி பதம்போற்றி, தியான பூசை செய்து
தூரான, சார செயநீர் பதனம் செய்து
பைது பத்து[1] நாலு முறையும் தவறாதேயாகில்
படருமண்ட வெள்ளைக் கல்படர்ந்து உப்பை
வாங்கே[2]. *(123)*

*(உரை:)* கறுப்பு நிறமுள்ள தண்ணீரை வண்ணப் படங்கள் உள்ள பீங்கான் கிண்ணங்கள் இரண்டில் ஊற்றவும். பின்னர், குழம்பை வடிகட்டி, சூரியபுடத்தில் பத்து நாட்கள் வைக்க சாரச்செயநீர் கிடைக்கும். செயநீரைப் பக்குவமாய் 14முறை தவறாமல் சூரியபுடம் வைக்க, வெள்ளையான அண்ட வெள்ளை உப்பு படரும்.

**அண்டத்தலை முடியுப்பின் பெயர்கள்**

படரான, உப்பதற்குள் அனேக பேர்கள்
பாட என்றா, என் நாவுமில்லைப் பாடக்
கேளுமையா
அடரான, வாதியென்றுமந்தமென்றும் பேரு
அடியென்று முடியென்றும் நடுவென்றும் பேரு

---

1. பாலுள்ள, 2. கல் படர்ந்த உப்பே.

துடரான, சோதியென்றும், சுரூபமென்றும் பேரு
சொல்லாத ஊமையென்றும், உருளை யென்றும் பேரு
மடரான பிருதுவியோடெந்தென்றும் பேரு
மகத்தான அண்டத்தலை முடியுப்பின் பேரே. *(124)*

*(உரை:)* இந்த உப்பின் வேறு பெயர்கள், வாதி, மந்தம், அடி, முடி, நடு, சோதி, சுரூபம், ஊமை, உருளை, பிருதுவியோடு ஐந்து என்பன அண்டத்தலை முடியுப்பின் பெயர்களாகும்.

முடியான, முடியல்ல மூலவுப்பென்றும்
மூலருரை பேசு மொழி வேகாஉப்பென்றும்
சடியான மரணமதில், சாகாஉப் பென்றும்
சலஉப்பு, வநாக[1] உப்புச் சத்தென்றும்
துடியான வேதை தனைக் கொல்லு முப்பு என்றும்
துடியான அகண்டக்கா[2] அண்டஉப்பென்றும்
அடியார்கள் வாழை[3], ஆகாய உப்பென்றும்
அருளினோம், முடியண்டம் படரும் உப்பின் பேரே. *(125)*

*(உரை:)* மூல உப்பு என்று திருமூலர் கூறுவார். வேகா உப்பு, சாகா உப்பு, சல உப்பு, நாக உப்புச்சத்து, வன்மையுள்ள பொருட்களை மாற்றும் உப்பு, அண்ட உப்பு, ஆகாய உப்பு என்பன முடியுண்ட உப்பின் பெயர்கள்.

அண்டமாமென, பூத உப்பென்றும் பேரு
அஞ்சுருக்காணி உப்பதென்றும் பேரு
கண்டோமென்பார், சிலபேர்கள், கண்டோமென்பார்[4]
கல்லான, கல்லண்டக்கருவை யறிவாரோ ?[5]
துண்டமாம், பகிரண்ட இடிமின்னல் சிதறும்
துன்மார்க்க ரொருவர் அறியாதவர்களிது பாரீர்
விண்டோமேயிப் பொருளை வெளியில் விடாதவர்க்கும்
விண்ணிலண்டவிடியது, வால்விழி சிற்றிப்போமே. *(126)*

---

1. வமிர, 2. கரவண்ட், 3. வாழும், 4. விண்டோம், 5. காலண்டக்கருவை.

*(உரை:)* அண்டமான பூத உப்பு, அஞ்சு ஊர்க்காணி உப்பு என்றும் பெயர். இதைப்பற்றி கண்டறிந்துள்ளோம் என்பார்கள் சிலர். அவர் கல்லண்டக்கருவைப் பற்றித் தெரியாதவர்கள்; இடிமின்னலால் தாக்குண்டு சிதறிப் போகும். நல்வழியில செல்லாதவர்களுக்கு, இது பற்றிய கொள்கைகள் தெரியாது. இதைப்பற்றிக் கூறுகின்றோம்.

போவதற்கு யோனியாசை ஆகாதைய்யா
போனாக்கால், உன்பிறகே தொடரும் பாரே
ஆனாக்கால், அறிவாலே, மனவாளைக் கொண்டு[1]
அறுத்துவிடு, சிலேட்டுமத்தையறுத்தாயானால்
ஆனாக்கால், மாயசத்தி, கிரியா சத்தி
அதிமாய்கையற்றுதடா, நமனோயில்லை
கூனாக்கால், குருடாகி இன்னமாகிக்
குறையில்லா சடலமதை செனனமாமே. *(127)*

*(உரை:)* பெண்களின் தொடர்பு கூடாது. அவ்வாசையை அறிவான, வாள்கொண்டு துண்டிக்கவும், கபத்தை நீக்கவும், மாயை, கிரியை என்பன நீங்க, கூற்றுவன் வரமாட்டான். குறையில்லா உடலை அடைந்துள்ள பிறவி கிட்டும்.

செனனம், வருமே யென்றால் தீவினையினாலே
செகத்தோர்கள்,செய்யுமவர் தொழிலினாலே
குன்மம், வரும் காமநோய் வாமத் தோர்க்கு
குருவினுட அனுக்கிரகம் கூடாதாகில்
வன்னச் செந்தமிழ்ப் புலவோர் அகத்திய
மாமுனிவோன், சொன்னமொழி, மறைப்பிராது
என்னத்தால் தமிழ் சிந்தாமணி[2] இந்நூல்தான்
எல்லவரும் அறிந்திடினு அறிவுள்ளோரே ?[3] *(128)*

---

1. மன மழை, 2. தமிழ் வேந்தர், 3. மாந்தினுட ஒளிவுள்ளோ ?

குறிப்பு: அண்மைக்காலத்தில் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வரும் தொழில் முறை நோய்கள் பற்றி ஆய்வுகள் நடைபெறுகின்றன. பல்லாண்டு காலத்திற்கு முன்னரே இக்கொள்கையை சித்தர்கள் அறிந்துள்ளது. வியப்பான ஒன்றாகும்.

அறிவுள்ளோர் நல்வினைக்கே அருளே ஆவார்
அறுபத்து நாலு கலைவாக்குமெய்தும்
நெறியுள்ள அகராதி நிகண்டெண்ணூறிதுதான்
நிலைபெற்ற பதிணென்பேர் பரிபாசை யறிவார்
நெறியுள்ளோர், இந்நூல் நிகண்டு காவியந்தான்
நாலுமறை வேதமொடு பாதையிது பாரீர்
திருவுள்ளோர்க்கு அமைக்குமிந்நூல் முதற்காண்டநூறும்
செப்பியதோர் பாடல் முப்பதுவும் பாரே. *(129)*

*(உரை:)* நல்வினை உள்ளவர்களுக்கே கிடைக்கும் 64கலைகள் பற்றிய அறிவை அடைவார்கள். ஒழுங்கு செய்யப்பட்ட, அகராதி நிகண்டு 800 இதுதான். நான்கு வேதங்களோடும் கூறப்படும் மருத்துவ நூல். இந்த நிகண்டு. இது காவியம் போல் படைக்கப்பட்டது. அருள் பெற்றவர்களே, இதனை அடையமுடியும். முதல் காண்டத்தில் 100 பாடல்கள் உள்ளது. 30 பாடல்களில் இவற்றைக் காணலாம்.

பாரும், கலையறிவு இந்நூலில் பாரு
பரிபாசை, மெஞ்ஞானம், பரகதியைப்பாரு
ஆருமறிந்திடினு, உலகமதெய்தும்
ஆரணியிலொருவர் வர, ஞானியவராவார்
தேறுமனம் புத்தியறிவாலே தெளிவாகும்
திரிபுவன நாதவொளி வாழ்பதியைக் காண்பாய்
கோறு, முதற்காண்டமிது குறைவராதாய்ந்து
குருவான, பரகதியில், தெளிந்துவாழ் முற்றே. *(130)*

*(உரை:)* கலைகளைப் பற்றிய அறிவை இந்நூலில் காணலாம். மனத்தின் மூலமாக அறிவு உண்டாகும். இந்த அறிவை அறிந்தவர் ஞானியாவார். மனம், அறிவினாலே தெளிவடையும். மூன்று உலகத்திலும், ஒளியின் இருப்பிடத்தைக் காணலாம். குற்றமற்ற முதல் காண்டத்தில் ஆய்ந்து, தெளிந்து, முடிவாய் வாழ்வாயாக.

# இரண்டாம் காண்டம்

பரம குரு பூரணத்திலாதி பாதம் பணிந்தவர் கமலை
பண்பாய் போற்றி, பரம குரு பசுபதியின் பாதம்
கண்டு
பரம சுடரொளியின் ரவியே போற்றிப் பரம குரு
பிரம சரசுவதியின் பாதம், பகலிரவாய் அவர் கமலப்
பதமே போற்றி
பரம குரு, ஆதியந்த மெங்கு மெல்லாம்
பாதாள குண்டலித்தாய், பாதம் காப்பே. *(131)*

*(உரை:)* இரண்டாம் காண்டத்தில் கடவுள் வாழ்த்து காப்புச் செய்யுளாக வருகின்றது. இறைவனான ஆசிரியரின் திருவடிகளை பணிந்து போற்றுகின்றேன்.

பாதமென்ற கணபதியின் கந்தன் காப்பு
பசுபதியும் உபயநடம், பரமே காப்பு
வாதமென்ற விசுவனிட உமையாள் காப்பு
வல்லபை குண்டலித்தாயார் வாணி காப்பு
பேதமில்லாப் பேரொளித்தாய், சொரூபம் காப்பு
பிண்டமெனுமண்ட பிண்டம் பிரமன் காப்பு
தாதுவிதி, நாதவிந்தினாதி காப்பு
சச்சிதானந்த, வேதாந்தங்காப்பே. *(132)*

*(உரை:)* இதுவும் காப்பு செய்யுளின் தொடர்ச்சியே ஆகும்.

வேதமென்றவேரு வேதமவுனபீடம்
விளங்குபர மெய்ஞான மூலபீடம்
பூதமென்ற ஐம்பூத வாய்வு [1] பீடம்
போதமென்ற இராசயோக வாசி பீடம்

---

பாடல் 131ல் இரண்டு அடிகள் இல்லை. குறைவாக உள்ளது.

1. ஐந்தும் வாயு.

சாதமென்ற மகாராச பசுபதியின் பீடம்
சச்சிதானந்த வரை ஆதார பீடம்
காலமில்லாக் கருவிதனிலான பீடம்
கரணாதி முதலதனால் காயமாச்சே. (133)

(உரை:) பல்வேறு வகையான இருக்கைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. காலம் கூற இயலாத கருவியால் இவ்வுடல் தோன்றியது. இவ்வுடல் தலைகீழாகப் பிறந்து, உடலாக வெளியாகும்.

காயமென்ற ஐங்காயக் கூறினாலே
கருவி தொண்ணூற்றாறு முதல் அமைந்த கூறு
நாயமென்ற அதின் வழியைத் தள்ளிப்போட்டால்
ஞானபர தேசிகனால் அமைந்த கூறு உபாயமதால்
காயமதைக் காண வேண்டும், ஓடுகின்ற நிலையறிந்து
ஒடுங்க வேண்டும் ... ... ... ... ...
பாய வென்றால் அபயம் வந்து, பழியோர்க்கெய்தும்
பண்புடைய, புண்ணியவான், பார்த்துத்தேறே. (134)

(உரை:) உடல், ஐம்பூதத்தால் ஆனது. 96 தத்துவங்களைக் கொண்டது. ஆசிரியரின் துணையால், ஆகாயத்தைக் காணவேண்டும். மனத்தைக் கட்டுப்படுத்தி, ஐம்புலனை ஒடுக்கவேண்டும். நல்ல பண்புள்ள ஆசிரியரை அணுகி, கற்றுக்கொள்ளவும்.

பார்ப்பதற்குக் கோடியிலே ஒருவர்க் கெய்தும்
பலகோடி அண்டமெல்லாம் பதிவாய்க் காண்பார்
கார்ப்பதற்கு மனமுருகி அறிவதனாலே, காணும்
காணும் புலவோர்கள், உலகோர்களதில் மெத்தப்
பூர்ப்பதற்கு சில மலரில் வாசமது போல
புகலு முதல் காண்டமதின் பூட்டதனை யறியும்
சேர்ப்பதற்கு அருளான பதிமேவும் பதிலாசான்
தெட்சண[1] மாமுனிவர் செப்புமிது நூலே. (135)

1. அகத்தியருக்கு தட்சணாமூர்த்தி என்ற வேறுபெயர் உள்ளது.

நூலான, பதினாறு லட்ச முறையாகில்
நூதனமா மதி நூலைச்சாதனைப் பாரார்
வாலான, மாமறையோர், முன்னோர்களாகில்
மா முனிவோர் சொன்ன வாக்கியத்தைப் பார்த்து
காலான, காலிதுபார் செந்தமிழின் வேதம்
கரைகளிது, யாரறிவார், பாதையின் வழியை
நூலான, வேதத்திற்கதிக மெய்ஞானம்
நந்தியொளி, வாலைச்சுழிநாதம், பரவெளியே. (136)

(உரை:) 16 இலட்சம் முறைகள் இருந்தாலும் புதுமையான அறிவுள்ள இந்த நூலைப் படைத்த ஆற்றலை அறியமாட்டார்கள் பெரியவர்களான மறையோர்கள். முன்னோர்கள், மருத்துவத்தைப் பற்றிய நூல்களைக் கண்டு அறிவார். அடிப்பாகமான தூண் இது. செந்தமிழின் வேதம், வழியைக் கண்டுபிடிப்பது யாரால் இயலும் ? அதிகமான மெய்யறிவு, நந்தியினுடைய ஒளி, வாலையின் சுழிப்புள்ள ஒலியைத் தரவும் ஆகாயமாகும்.

வெளியான வெளியல்ல, சகலருங்காண
வேதாந்தம், வெகுதூரம் விந்துவழியாகில்
களியான, சடலமதைக் காத்தோன், அவனீசன்
காராடால் காயம் புலப்படுகிற[1] தில்லை
வளியான, துறையல்ல மனக்கண்ணில் தோய்த்து
மகாபாவ வெளிக் கண்ணையப்புறத்தே[2] தள்ளு
அளியார்கள், துறையறிவார், கண்ணைக் காண்பார்
அரிதரிது உலக மதி அறிவுள்ளோர் பெரிதே. (137)

(உரை:) யாவரும் காணும்படியான ஆகாயமல்ல வேத முடிவானது மிகவும் தொலைவு; சுக்கிலத்தினால் உடலைக் காத்துள்ளவன் இறைவன். உடல் தெரிவதில்லை. மனக் கண்ணில் தோன்றி, வெளிக்கண்ணால் அறியும் பாவக் கண்ணை அப்புறமாகத் தள்ள வேண்டும். பல்வேறு அறிவியல் துறைகளை அறிந்தவர்கள், காண்பார்கள். உலகத்தில் அறிவுடையோர் மிகவும் அரியதாக இருப்பார்கள்.

---

1. புலப்படுகிறது, 2. காண்பார்.

பெரிதான பேதமையைப் பெரியோர்களறிவார்கள்
பிணமான சுடுகாட்டுப் பிசாசுயறியுமோ ? தான்
கருவானக் கருவதுதான் மனக் கருவைக் கண்டால்
காலதமன் வருஞ் சாயல் ஓலமிடுவாகி
அரிதான வாயெல்லாம் கூட்டமிட்டைய்யா
அதோகதியாய், மனவுரைத்தி மிகவோட்டும்
எருதான, எமன் வெளிப்பட்டதே யாகில்
ஈசன் பிரகாசிப்பார் எண்ணு நெஞ்சே. *(138)*

*(உரை:)* பெரியதான அறியாமையை, பெரியவர்கள் காண்பார்கள். சுடுகாட்டு பிசாசுகளாக கல்லாமாக்கள் அறிவார்களோ? மார்க்கண்டனுக்கு சிவபெருமான் அருள் செய்து, காலனை விரட்டியது போல, யாருமில்லாமல் மனத்தில் நினைக்க, காலமாகிய இயமனை இறைவன் ஓட்டுவார் என்று நெஞ்சம் அறியட்டும்.

**ஆசிரிய விருத்தம்**

நெஞ்சக ஒருவிதம் நிலையாதறிவேகேள்
நிகருமதிபாவதனால் வெகுவீதி பாழாகும்
நேசசம் சார வாழ்க்கை
பஞ்சமா பாதகம் தன்னில் வரும் பாடு கேள்
பாழான சடல மிதுதான், பலகலைகற்றும்
மனமமிர்த ரசக்கலை[1] அறிவழிவித்துக்[2] குருடானால்
அஞ்சவேண்டார் வெட்டுப்பழிக் கொலைக் கஞ்சார்
அறிந்து மனம் நிலையாதவர் அறியுமோ ?
மாறுபடும் தெரியும் மெஞ்ஞான அதிபத்தி[3]
பசுபதிதான்
வெஞ்ச மாமுனியந்தச் செந்தமிழ் சொல்லும் கல்வி[4]
வெகு சித்தரறியவந்தான்[5] விமலத்தனருளிய
குருவித்த[6] இதுபோல மேவும் கைலாசபதியே. *(139)*

*(உரை:)* நிலையற்ற அறிவே, கேட்பாயாக கொடிய பாவங்களான ஐந்தைப் பற்றி கேட்கவும். எல்லா அறிவும்

---

1. முத்த, 2. அறிவித்து, 3, வழிபத்து, 4. சொல்கவி, 5. இந்திரன், 6.கருவித்த.

அறிந்தும், அறிவிழந்து குருடானால் உடல் அழியும். கொலை, பழி, என்பனவற்றைக் கண்டு, அஞ்சமாட்டார்கள், மாறுபாடுகள் ஏற்படும். செந்தமிழால் சித்தர்கள் அறியும்படி கல்வியைச் சொன்னார்கள்.

மேவும் கைலாசபதிமேரு, முக்கோணமிட[1]
மேல்வாச ஆலயந்தான், மெய்ஞானக்கருவில் சித்தர்
எஞ்ஞான இது போலவரும் சொல்வாரிலை
ஆவும் புலிமேவுகடமான்[2], அமிர்தமாகி, இசையது
கூடிநிற்கும்
அளவற்ற நிலையாரு குல வித்தமது
அமிர்தமது கூடியுண்ணுமது பார்
காவுதவி மாவவறுவு தாவுதல், அனேக நிலைகள்
பாவம் வரும் தொழில்களால் கண்டு[3]
தொண்டறிவால்
விண்டறிவால் மொழி, தவறும் கழுதை சென்மப்
புலையர்தான்
மாவும் புலியும் மருவி மன மழியாதே[4]
மனம் சேதறிமெனாகுவார்[5]
அறிவித்தை மவுன வேதாந்தப்பதியே[6]. *(140)*

*(உரை:)* இமயத்தில் வாழும், சிவபெருமான் முக்கோண ஆலயம் வாழுவார் மெய்யறிவை சித்தர்கள் போல் சொல்வாரில்லை மானும், புலியும் ஒன்றாகச் சேர்ந்து உண்ணும்.

மவுன வேதாந்த அறுகோண ஆலையமா எழுந்தரை வீடதா
மவ்வெழுத்தாறு வித, ஒவ்வெழுத்தாலே
கவுன மெய்ஞானம் பெற்று, மவுனமதியொளித்து
காணு, மறுவாலைக் கருவைக் கந்தமென்றால் எனது
சொந்தகுருமெய்யனுடகமலபதமேயறிவாரோ ?
அவனது அறிவானந்த மிர்த

1. அருள், 2. தடமான விழுந்தமாகில், 3. மனத்தொண்டறிவால், 4.மனமறியதே, 5. இயமனாகுவர், 6. படியே.

மவுனபதி மெய்ஞான அறுகோண நிலை கண்டனன்
அவரறியும் பரிபாசை மதியறியும், மனமறியும்
வையகத்தின் அறிவதனால்
கெவுன செந்தமிழ்த் தெளிவு மாமுனிவனோது மொழி
தேறாதபேர், பார் பாத்திடில் தவராசயோகபதி
மகாராசா பூபதியார், செல்மதன யோகபதியே. *(141)*

தனயோகமாவது கேள், இமையோர்கள் அருள்வாக்கை
தவறாத தவசி [1] பலமாம்
தூதமிக்கருஉதித்த [2] வராத மொழிவாசிகர்
உறுதிபலமாம்
கனயோக மொரு நாளும் தவறாத சிவயோகிகருவி
கரணாதியறிவார் ஆதிமோக, மயவாகி,
விடுமாதலால் காமன் மனையை விலகுவார்
மனயோக ஞான மெய் ஞானத்தோர்
அளி [3] வாகுதல் விந்தவினை நோய்கள்ளனார்
மாணாக்களிலரிது, காணார்கள் உலகமதில்
மனக்கண்ணு செய்தவினை பார்
அனைய யோகப் [4] பெருவாசல் மணிநாத
சட்கோணத்தார்
பதிபரகதியதா மாறுமுக [5] பதிசேரும்
பரஞான கதி, அசுரர் வென்ற பதியே. *(142)*

குலமனமே, அதிமதியை, மன விதமயறியார்கள்
குவலயத்து, மனிதர் மிகதான் கொடிய
மனக்கனா [6] வறிவால், படியுமெஞ்ஞானபதி
குருவாசர் அருளும் விதியால் [7]
நில மனமே எட்டாதே [8] கலையும் அருவோட [9]
துன்பவருமே, அறிவுறால் துதிராச பூபதிகள்

---

பாடல் 141, 142, 143 என்பன மூலநூலுக்குத் தொடர்பின்றி உள்ளன.

1. தவறாத தவசி, 2. தாது மிக உறுதி, 3. தெளி, 4. அனுயோக, 5. மேல், 6. கவலை, 7. மாலதில், 8. ஒட்டாதே, 9. மரு ஒட்டடா.

மதிமகிழு, மன்மதன் சொல்லறிவாய் வேத
முறையை
பலமான சலமதையறியாதே[1], குற்றம்வரும் யாருமறி
மேருமறையுமாவான சனையாற்றுவர்[2]
முக்கோணவாசல் வலமாகக்
கிரிசாரல், முக்கோணமது வந்திடினும்,
வாசியதனால் கால குருசாமி[3] பதம், காவிநகர் வரும்
பவனிராசயோகபதியே. (143)

**வேறு (அண்டச்சுண்ணம்)**

யோகமென்ற, முன் சொன்ன உப்புசேர் வாங்கி
உறுதிபெறக் கல்வமதில் உப்பு தனையிட்டு
வாகமென்ற, காரச் செயநீர் பலம் நாலுமிட்டு ஓர்சாமமரை
வசைந்து மெழுகது போலாக
நாக[4] மென்றத்தை, வழித்துச் சதுர பில்லை செய்து
நாயகியாள் நாதமதில் சீலை கொண்டு தேய்த்து
வேகமென்ற வில்லையதை ரவியில் ஐந்துதரம் வைத்து
மேலான, நாதவிந்தால் சிலையேழு செய்யே. (144)

(உரை:) முன்சொன்ன உப்பு ஒருசேர் எடுத்துக் கொள்ளவும். கல்வத்திலிட்டு, 4 பலம் கார செயநீர் விட்டு, ஓர்சாமம் அரைத்து, மெழுகுபதத்தில் எடுத்துக்கொள்ளவும். சதுர வடிவில் வில்லையாகச் செய்யவும். சூதகத்தில் சீலையைத் தோய்க்கவும். சதுர வடிவ வில்லையை சூரிய புடத்தில் 5 முறை வைக்கவும்.

செய்தண்ட ஓட்டினிட, மெழுகு இருபலந்தான்
செயம் பெறவே, பில்லையதன்மேல் கவசம் செய்து
நைய்து[5], ரவி முகந்தனிலே ஒருசாமம் வைத்து
நல்லண்ட உப்பினிட பில்லையதைக்கொண்டு

---

1. பலமான சடலம், 2. மேருரையும் வாசியையும் மாற்றுவார, 3. குருசாதி, 4. வாத, 5. ஐந்து.

பெய்து பாரண்டத்தோர், இரண்டு சத்திரமதாய்[1] செய்து
பண்மை பெறவே அவ்வோட்டில், பில்லையதை
வைத்து
மைது[2] மேலோடு மூடிச்சந்துவாய் சீலை செய்து
மகத்தான மண் சீலையேழு மது செய்யே. (145)

(உரை:) அண்ட ஓட்டின் மெழுகு இருபலம், பில்லையின் மேல் வைத்துக் கவசம் செய்து மூடவும். சூரிய புடம் ஒரு சாமம் வைத்துப் பின்னர், எடுக்கவும், நல்லண்ட உப்பு வில்லையை இரண்டாகப் பிரித்துக் கொள்ளவும். அண்ட உப்பு ஓட்டில் வில்லையை வைக்கவும். மேலோடு கொண்டு மூடி, சீலைமண் செய்து.

சீலையேழும் செய்ததனை ரவி முகத்திலுலர்த்திச்
செயலாகக் கோழிப்புடம் செய்வீரேயாகில்
வாலையாம் அண்டச் சுன்னமது போலேது, முண்டோ?
வசனித்தோம், வாதமதுக்காது பீடம்[3]
சேலை யன்ன, மாது, கிளி, வாலை சிரோமணி பார்[4]
செப்பு ஒரு மாமுனிவன் செந்தமிழால் சொன்னோம்
காலையறிவாய் மனமே, ஞாலமிது அறியேன்
கைலாசலோக, குருசாமியிது பாரே. (146)

(உரை:) சூரிய புடத்தை வைத்து, உலர்த்தவும், கோழிப்புடமிடவும். இவ்வாறு செய்ய அண்டச் சுன்னம் கிடைக்கும். இதுபோல வேறு மருந்து உள்ளதா? பேசினோம், இரசவாதத்துக்கான பீடமாகும். செந்தமிழால் ஓர் மாமுனிவன் கூறுகின்றான். மூச்சுப் பயிற்சியை அறிவாயாக மனமே, கயிலைமலையில் வாழும், குருசாமியான முருகனைப் பார்த்து இவ்வுலகத்தின் மீது பற்றுதலை விரும்பமாட்டேன்.

---

1. சதுரமாய், 2. மைத்து, 3. படம், 4. சிரோமணியான்.

குறிப்பு: துத்தநாகத்திற்கு நாகம் என்று பெயர். ஆயின் இங்கு தாளகத்திற்கு நாகம் என்று பெயர் வந்திருக்கின்றது.

### அகண்ட சுண்ணப்பெயர்

சாரமென்ற சுன்னமதின் பேரதனைக் கேளும்
சகலறிய, வசனமறியச் சாற்றுகின்றோம் நாமும்[1]
பாரமென்றும், துருசுக்கு ஆதியென்றும் பெயர்[2]
பாடாண மென்றதற்கு அந்தமென்றும் பெயர்
காரமென்ற கற்கடகஞ்சோதி[3] யென்றும், பெயரே
கருநாபியதற்கு விடமமிர்த மென்றும்[4] பெயர்
சாரமென்னும் பூநீறுக்கு வேணு[5] என்றும் பெயர்
சலாசத்து, சச்சிதானந்த மென்றும் பேர்
தாரமென்ற அரிதார நாகமென்றும் பேர்
சாற்றினோம், தலைச்சனிடமுடி
சுண்ணப்பேரே. *(147)*

(உரை:)சாரச்சுண்ணத்தின் பெயர்களைக் கேட்கவும். பாரம், ஆதி, துருசு என்பன பாடாணத்தின் வேறு பெயர் அந்தம் என்பதாகும் காரத்திற்கு (சீனாக் காரம் அல்லது வெங்காரம்) கற்கடக சோதி என்று பெயர். கருநாபிக்கு விடம், அமிர்தம் என்று பெயர். பூசாரம் என்ற பூநீறுக்கு வேணு என்று பெயர். தாளகத்திற்கு நாகம் என்று பெயர். முதல் குழந்தையின் முடி சுண்ணப்பெயர்களைக் கூறினோம்.

### பல்வேறு பெயர்கள்

சுன்னமென்ற இரச சூதம் விந்தென்றும் பெயரே
சூட்சமாமிங்கே அக்கினி[6]என்றும் பெயர்
அன்னமாம்6 பூரத்துக்கு ரூபமென்றும்[7] பெயர்
அருளினோம், வீரத்துக்கு அதீதமென்றும் பெயர்
வன்னமாம் இலிங்கத்துக் குருத்திறமென்றும்[8] பெயர்
வண்ணானென்றவனிடத்து வாலையென்றும் பெயர்
சுன்னமென்ற சூடன், கற்பூர மென்றும் பெயர்
கைலை மூர்த்தி யென்று, முடித்தலை சுன்னப்
பெயரே. *(148)*

---

1. நாம், 2. வாரமென்ற துருசுக்கும் அதியென்றும் பேரு, 3. கரகசோதி, 4. அழுத்தம், 5.வேநீர்.6. சுன்னமாய், 7. குரு, 8.கருத்திறம்.

*(உரை:)* இரச சூத சுன்னத்திற்கு விந்தென்று பெயர். கந்தகத்திற்கு அக்கினி என்று பெயர். பூரத்திற்கு ரூபமென்று பெயர். வீரத்திற்கு அதீதம் என்று பெயர். இலிங்கத்திற்கு குருத்திறம் என்று பெயர். பூநீருக்கு வாலை என்று பெயர். சூடத்திற்கு கற்பூரம் என்று பெயர்.கைலை மூர்த்தி என்று முடித்தலை சுன்னப்பெயராகும்.

தலையென்ற முடியுப்பு, வெடியுப்பென்றும் பேர்
சத்துப்பு என்றதற்குவிந்துப்பு என்றும் பெயர்
கலையென்ற கலையுப்பு,கம்பியுப்பு என்றும் பெயர்
கரியுப்பால், சடமெடுத்த காரஉப்பென்றும் பெயர்
வலையென்ற, ரவிமதி வஸ்துப் பென்றும் பெயர்
வாலை, காலை கண்டரென்[1] மாவுப்பென்றும்
பெயர்
சிலையென்ற, குருஉப்புவாதி யென்றும் பெயர்
சிகரத்தால் நடுவிழுந்த, சிகாரமென்றும்[2]
பெயரே.*(149)*

*(உரை:)* தலையென்ற முடியுப்பு, வெடியுப்பு சத்துப்பு, விந்துப்பு, கலையுப்பு, கம்பியும், காரஉப்பு, சூலிமதி, வஸ்துப்பூ, மா உப்பு, வாலை, காலைகண்டர், சிலை, குரு, உப்புவாதி, சிகாரம், சிகரம் என்பன முடியுப்புவின் பெயர்களாகும்.

சிகாரமென்ற, கல்லானை, வெள்ளைக் கல்லென்றும்
பெயர்
சிகாரகிரி, ஓர் நதிக் கிளிஞ்சி யென்றும் பெயர்
மகாரமென்ற மவுனக் கல்லுப்பென்றும் பெயர்
மண் சவுடு பூநீர் என்றிதற்கும் பெயர்
நகாரமென்ற ஆனைக் கண் சுத்த மென்றும்[3] பெயர்
நாட்டுக் கரு, வீட்டுப்பு என்றும் பெயர்
அகாரமென்ற, யானை சப்பாறை[4] என்றும் பெயர்
அது சல்லிய மாமுனி[5], உப்பின் பெயரே. *(150)*

---

149ம் பாடலில் உள்ள 3,4 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் காணப்படவில்லை.
1.கண்டபொன், 2. சிகாஉப்பு, 3. சத்தம், 4. இராசப்பாறை, 5. முனிவன் அல்ல.

(உரை:) கல்லானை, வெள்ளைக்கல், சிகாரகிரி ஓர்நதிக் கிளிஞ்சல், மாவுக்கல், மண்சவுடு, பூநீரின் பெயர்கள், ஆனைக்கண் சுத்தம் நாட்டுக்கரு, வீட்டுப்பு, யானை ரசப்பாறை என்பன சவ்விய மாமுனிவன் சொன்ன அண்ட உப்பின் பெயர்களாகும்.

## அண்ட உப்பின் பெயர்

உப்பான, தலையண்ட முடியின் சுன்னம்
உசிதமென்ற[1] எண்ணூறு இரண்டாம் காண்டம்
தப்பாமல், அதீதநூல் சகலத்திற்கும், சத்குருவாய்
வெள்ளைக்கல் சுண்ணம் சொன்னோம்
அப்பான்[2], பிண்டமதின் கூறெல்லா
அடவெல்லர், இனி மேலுரை[3] பேரறிவாய்[4] கேளு
செப்பான,முடியின் கீழ் பாத முதற்கொண்டு
செப்புகிறோம் பிண்டமென்று கூறக்கேளே. (151)

(உரை:) தலையுண்ட முடியின் சுண்ணம் என்ற உப்புப் பற்றி இரண்டாம் காண்டத்தில் கூறப்படும். இது தவறாமல், இரசவாத நூல்களுக்கு குரு போன்றது. இதில் வெள்ளைக் கல்லை சுண்ணமாக்குவது பற்றி உள்ளது. உப்பான பிண்டத்தின் பகுதிகளை இனிமேல் கூறுகின்றேன் கேட்கவும். தலையின் கீழ் பகுதி முதல் கால் வரை கூறுகின்றேன். கேட்பாயாக.

கூறான வாதமென்ற நூல்கலெல்லாம்
குரு நூலித்த எண்ணூறில் கருவே கண்டோர்
வாரான உலகத்தோரீசனாவான், மாணாக்கர் பாவம்
வாராத்[5] தொழிலே செய்யும்
காரான, மாமுனிவன் மொழிந்தவாக்கு
கருவரின்[6] இந்நூலை கருத்தாய்ந்தால்
சீரான, பிண்டங் கரு அந்தி சித்தி
சித்திக்கும், கரும மெல்லாம் செயமா
வென்றே. (152)

1. உகிதம், 2. உப்பான, 3.மேலுரையா, 4. வழு, 5. கருவறியா.

(உரை:) வாத நூல்களின் பகுதிகள் யாவும், இந்த எண்ணூறில் உள்ளது. தலை சிறந்த நூலாகப் படிப்போர் அறிவார்கள். உலகத்திலுள்ள மக்கள், இறைவன் ஆவர். மாணவர்கள் பாவமில்லாத தொழிலே செய்யவேண்டும். இந்நூல் பெரிய முனிவர் சொன்னதாகும். இதன் கொள்கைகளை ஆய்ந்தால், பிண்டம், கரு இவற்றால் ஏற்படும் மேலான வெற்றி கிடைக்கும். செய்யும் எடுத்த செயல் யாவும் வெற்றியடையும்.

என்றான பிண்டத்தின் கூறெல்லாம் கேள்
இயம்புகிறோம், புலத்தியனே இனிமேது[1] வையா[2]
அண்டான, முடி சனனம் செய்த பின்பு
அண்டத்தின் கூறினிட வடவெல்லாம்[3] கேள்
கண்டாயோ, பிண்ட மென்றால் பிண்டமது[4]
கருவான பிண்டமிது சுந்தரிதானாகும்
தண்டான தேசியென்றும் உரோம குரு என்றும்
செப்பினோம், கேசரியின் கெருன
கருவுண்டோ ?[5] (153)

(உரை:) பிண்டம் பற்றியதெல்லாம் கேட்கவும். இதை எடுத்துக்கூறுகின்றேன். புலத்தியனே, அண்டமுடி பிறவி எடுத்த பின், அதைப்பற்றி கேட்பாயாக. பிண்டத்தின் வேறு பெயர்கள், சுந்தரி, தேசி, உரோமகுரு கெருனக்கரு.

கருவான, கிளிஞ்சியென்றும் பிண்டானை யென்றும்
கருணை பெருஞ்சிப்பி, கும்பிடானையென்றும்
பெயர்
எருவான6 வேரி, வற்றல், மண்ணானையென்றும் பெயர்
இயல்பான அண்ட பிண்ட வங்கமென்றும் பெயர்
தருவான, தலையணை[7] அகண்டமென்றும் பெயர்
தாவித்தோம், பிண்டமதின் நிலையான பெயர்கள்
அருவான, சடலமென்றும் அங்கமதின் கூறு[8]
அருளினோம் கண்ட மென்ற
பிண்டதின்பெயரே. (154)

---

1. இனிமேலிது, 2.அய்வைபார், 3. அடவெல்லாம், 4. பிண்டமதுவல்ல, 5.குருவென்றும், 6.எரிவான, 7. தலையணை, 8. அங்கமதின்.

(உரை:) கருவான கிளிஞ்சல், பிண்டானை, கருணை பெறும் சிப்பி, கும்பிடானை, வேரி, வற்றல், மண்ணானை, அண்ட பிண்டவங்கம், தலையணை அகண்டம், அருவான சடலம், அங்கமதின் கூறு என்பன, பிண்டமதின் வேறு பெயர்களாகும்.

**சவ்வின் பெயர்கள்**

அகண்டமெனு, மந்திராங்கமென்றும் பேரு
அருவான, தலையண்ட மென்றும் பேரு
நகண்டம்[1] எனு நாமத்துருவென்றும் பேரு
நஞ்சுக் குழல், மந்திரீச மென்றும்[2] பேரு
துகண்டதோர், துணிதப்பார்[3], கங்கமென்றும்[4]
சொல்லிவிட்டோம், அவனாதிபிண்ட மென்றும்[5]
அகண்டமென்ற அங்கமதின்[6] சவ்வும் கெட்டு
மாட்டினோம், சுந்தரமாம், சவ்வாம் பேரே. *(155)*

(உரை:) மந்திராங்கம், தலையண்டம், நவகண்டம், நஞ்சுக்குழல், மந்திரீகம், துணிதப்பார், சுங்கம், அவனாதிப் பிண்டம் என்பன சவ்வின் பெயர்கள்.

**மாமிசப் பெயர்**

பேரான, மாங்கிசத்தின் பேரதனைக் கேளும்
பிளியா[7]ரைச் சாரை, கோழிபிக்க[8] மாமிசமாம்
ஆரான, அந்தமென்றும், மாங்கிச மென்றும் பெயர்
அடவான, பூக்கழலையென்றும்[9] பெயர்
வேரான, வேதிய நிசமென்றும் பெயர்
வெள்ளை யானை வேரென்று இதற்குப்பேரு
தேரான, தேவடி, கூறவடியென்றும் பேரு
தெளிவான, மாங்கிசமாமதி, தப்பாதே. *(156)*

---

1. நலகண்டம், 2. மந்திரிசம், 3. துளிதம், 4. சங்கம், 5.சுனாதி, 6.வங்கமதின், 7.புளியாரை, 8. கோழிப்பித்து, 9. பூதக்கழல்.

156 ஆவது பாடலில் 7வது ஏடி சரசுவதி மகால் சவடியில் இல்லை.

மண்ணீரல் பெயர், அடிஈரல் பெயர் எவை எவை என்பன பிரித்துக் காட்டப்பவில்லை.

(உரை:) மாமிசத்தின் பெயர்களைக் கேளும் புளியாரை சாரை, கோழிபித்து, பூக்கழலை,வேதிய நிசம், வெள்ளை யானை வேர், தேகவடி, கூறவடி என்பனவாகும்.

### அடியீரலின்[1] பெயர்

அதீதமாம், சொல்லுகின்றோம், சுந்தரமே கேள்
அடியீரல், மண்ணீரல், பேரதனைக் கேளு
அதீதமென்ற மணிபாச்சி[2], வராளி[3] யென்றும் பெயர்
வாமரோதயவாஞ்சி, மாஞ்சி யென்றும் பெயர்
கதீதமென்ற, காராபி, ரோபி[4]யென்றும் பெயர்
காந்துவி, பேஞ்சா[5]யென்றதற்குப் பெயர்
வதீதிமென்ற, மகராச மூலியென்றும் பெயர்
வசனித்தோம், அடிஈரல், மண்ணீரலின்
பெயரே.(157)

(உரை:) மேலும் சொல்லுகின்றேன். அழகனே கேள், மண்ணீரல், அடிஈரலின் பெயர்களைக் கேட்பாயாக. மணிபாச்சி, வராளி, வாமரோதய வாஞ்சி, மாஞ்சி, காராபி, ரோபி, காந்துவி, பேஞ்சா மகராச மூலி என்பனவாகும்.

### அங்கத்தின் பிச்சியின் பெயர்

பேரென்ன அங்கிசத்தின், பிச்சென்றும்[6] பெயர்
பேசினோம், மோகநிறப் பிச்சென்றும்[7]பெயர்
ஆரென்ற, சுவாசப் பூடென்றும் பெயர்
ஆரும் தின்னாத மூலி, அளப்பமென்றும் பெயர்
நாரென்ற, சமமென்றும், நாற்றமென்றும் பெயர்
நாரே, விடப்பூ டென்று அதற்குப்பெயர்
சேரென்ற[8], மாயமா மூலியென்றும் பெயர்
செப்பினோம், அங்கத்தின் பிச்சதுவின்
பெயரே.(158)

---

1. கல்லீரலின் பெயர், 2. மண்பாச்சி, 3. வாராளி, 4. மாரோபி, 5. பெஞ்சா, 6.இத்தனை, 7. நீதப்பிச்சென்றும், 8. சேருண்ட.

*(உரை:)* அங்கிசப்பிச்சு, மோகநிறப்பிச்சு, கவசப்பூடு, ஆரும் தின்னாத மூலி, அளப்பம், சமம், நாற்றம், விடப்பூடு, மாயமா மூலி என்பன அங்கத்தின் பிச்சாகும்.

### மணிக்குடலின் பெயர்

பேரான, சஞ்சுவிட மணியென்றும்[1] பெயர்
பேசினோம், நஞ்சுமுறிமூலியெ[2]ன்றும்
ஆரான, அரவமணிக்கல்லென்றும் பெயர்
ஆத்துமாவின் கொடி மணியென்றும் பெயர்
தேரான, தேவதாமணியென்றும் பெயர்
தெளிவான, விடக்கல்லு சமாதிக்கல்லென்றும் பேர்
வாரான, மணிக்குடலுக்கு அதீதப் பெயர்கள்
வாசித்தோம், வாச மணிக்குடலின் பெயரே. *(159)*

*(உரை:)* மணிக்குடலின் பெயர்கள் நஞ்சுவிட மூலி நஞ்சு, அரவமணிக்கல் ஆத்துமாவின் கொடி மணி, தேவதாமணி, விடக்கல் சமாதிக்கல் என்பனவாகும்.

### சல்லிக்கொடியின் பெயர்

மணியான, சல்லிவேர் தொட்டியத்திலாடும்
அறுபத்து நாலு சாலம், அவரால்[3] ஆடு
வெணியான, வேனென்ற[4] குடலின் பெயர்
விளங்கும், வைகமூலி[5] முலங்க மென்றும்
கணியான மயக்கியென்று, இயக்கி யென்றும்
கருவான, வெள்ளிவேரென்றும் பெயர்
அணியான, மாலை வன்னியென்றும் பெயர்
அடவான, மேகவேர், சல்லிக் குடலதுவின்
பெயரே. *(160)*

*(உரை:)* பில்லி, சூனியம், வசியம், குறி முதலிய கலைகள் சல்லிவேரால், பயன்படுத்தப்படும். அறுபத்து

---

1. மணிக்குடலின், 2. முறிமூலி என்ற சொல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை. 3. அவரால் என்ற சொல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை. 4. வேனென்ற அக்குடலின், 5. வைகை.

நான்கு வகையான சாலங்கள் செய்யப்படும், சல்லியான குடலின் பெயர்கள் வேன், வைகை மூலி, முலங்கம் மயக்கி, வெள்ளிவேர், மாலைவன்னி.

**கொடிமூல சல்லிமை**

குடலான கொடி மூலமாதிக் கருவாலே
கூத்தாடும்,சகல சித்தும் வசியமாகும்
செடலான, செந்தமிழ் மாமுனிவன் சொன்ன
செகவித்தை, சல்லியமா, ஆயிரத்துக்கையா
நடலான, கொடிமாலைச்சல்லி மூலம்
நாட்டுகிறோம், இந்த எண்ணூறு, கருவைக் கேளு
மடலான, மாக் கொடிதான் முதலே மூலம்,
மகத்தான, சரக்குலத்தே[1], அக்கொடி
வைத்தானே. *(161)*

*(உரை:)* கொடி மூலத்தைக் கருவாக வைத்து எல்லா வகையான சித்துகளும் செய்யப்படும். எல்லாவற்றையும் வசியப்படுத்தலாம் என்று தமிழில் மாமுனிவர் சொன்னார். பில்லி, சூனியம் போன்றவைகள் ஆயிரக்கணக்கான கலைகளுக்கு அடிப்படையானது. கொடிமாலை சல்லி மூலமாகும். இந்த எண்ணூறு பாடல்களில், இதன் சாரத்தைக் கூறுகின்றேன், கேட்கவும்.

**கொடிச்சுண்ணம்**

உலத்த வகைகேளு,நன்றாய் புலத்தியனே அய்யா
உய்யவாய், அமிர்தமென்ற பனிநீர் தன்னில்
வலத்தக் கொடி சல்லி மூலத்துள்ளிருக்கும்
வளமான சாணமதைக் கழட்டி நீயும்
அலத்தியான, பனிநீரில் ஓர் நாள் வைத்து
அதன்பின், ஊறினதோர் கொடியைக் கொண்டு
மலத்த கழுநீர் தன்னில் அப்பிக்கொண்டு
மறுசலமா ஊர்கங்கை[2] சலம் சுத்தி செய்யே. *(162)*

---

1. சற்குலத்தே, 2. ஊரந்த.

*(உரை:)* புலத்தியரே, கேட்பீராக பனிநீரில் ஓர்நாள் தூய்மை செய்த கொடியை ஊறவைக்கவும். பின், ஊறின கொடியை கழுநீரில் அப்பவும். பின் நல்ல நீரில் கழுவவும்.

*செய்து, சுத்த சலமதுவில் கொடியைத் தோய்த்து*
*செயமான, வில்வமதின் கிழிமேல் கட்டி*
*எய்து, ஒரு நாளுக்கு, ஒருதரமே தோய்த்து*
*இந்தப்படி யெட்டு நாளெடுத்துக் கட்டி*
*செய்து, சல்லியத்தினிட விதி தப்பாமல்*
*சாடனமாய்,மேல்வித்தை சகலத்துக்கு*
*எய்து1, இந்தப்பு செய்து, வசியம் செய்*
*ஆடுமப்பா அட்டகச மட்டுந்தானே.* *(163)*

*(உரை:)* தூய நீரில் கொடியைத் தோய்த்து எடுக்கவும். வில்வ மரத்தில் முடிச்சுக் கட்டவும். தூயநீரில் ஒருமுறை தோய்த்து பின்னர் கட்டவும். இவ்விதம் ஏழு முறை செய்யவும். மந்திரவிதி முறைகளைப் பின்பற்றிச் செய்ய, பல்வேறு வித்தைகள் அனைத்திற்கும்,அடிப்படையான உப்பாகும். எல்லா வகையான சித்துகளும் செய்யலாம்.

*எட்டான தேவதைகள் எட்டும் சித்தி*
*ஏகமென்ற மகாசக்தி வசியமாவாள்*
*அட்டான, அம்பாளெனக் கருளானாக்கால்*
*அறுபத்து நாலு சித்தும், சாபம் போச்சு*
*நெட்டானநீ, கோருந் தவங்களெல்லாம்*
*நிச்சயமா அதீத சித்தி, நிலைக்கும் பாரே*
*வட்டான வசிய முதலெட்டும் சித்தி*
*வாலை யென்ற, மனோன் மணித்தாய்,*
*வசியமாமே.* *(164)*

*(உரை:)* தேவதைகள், மகாசத்தியும் வசியமாவாள் அம்மன் அருள் கிடைக்கும். அறுபத்து நான்கு வகையான சித்துகளும் பெறலாம்.மேலான சக்தி அடையலாம். வசியம் முதலான எட்டு வகையான சித்துகள் நிலைக்கும், மனோன்மணி என்ற வாலை வசியமாவாள்.

1. மைய்யத்தனை.

வசியமாமிக் குடலை சொல்[1] வீதஞ் சுத்தி
வளமாகச் செய்து இந்த வீதம், சருகாய்யுலர்த்தி
வசியமாம், ஆண்புத்திரன் முப்பது கீழ்
அகாரஇந்து[2], மருந்தூட்டியதனைக் கேளு
துசியமாம், விந்ததுவும் கால் சேர்வாங்கி
தோதகமாய், பீங்கானில் சரக்கை விட்டு
விசிதமாய், விந்ததுவைப் பனிநீரில் சுத்தி
விளங்கவோர், நாள்வீதம் வைத்து மறுநானே. *(165)*

*(உரை:)* குடலை தூய்மை செய்து. சருகாக உலர்த்தவும். ஆண் மகன் முப்பது வயதுக்கீழ் உள்ளவர் வசியம். இரசம் ¼சேர் வாங்கி, பனிநீரில் ஓர் நாள் முழுவதும் வைக்கவும்.

மறுநாளில் விந்ததனை ஊற வைத்தெடுத்து
மகத்தான மாக் கொடியை சரக்கதுவை[3] நீயும்
ஒருநாளு முழுதுதனை சருக்கது வாயுலர்த்தி
உறுதி, சடநோயில்லா உதகமாக வென்று
நேர் நாளின் சருகென்ற[5] சல்லிவேர்தனை
நீ, மகனே, கல்வதில் நிச்சயமதாய் தாக்கி
பேரி[6] நாளிருவர்[7], சதிபுருடர் புணர்ந்தது தான்
பிசகாமல், குதிடைக் கைப்போடு[8],
பலந்தானே. *(166)*

*(உரை:)* மறுநாள் இரசத்தை ஊறவைத்து எடுக்கவும் கொடியை சருகாக உலர்த்தவும். கல்வத்தில் போட்டு அரைக்கவும்.

## விந்து சுத்தி

போட்டு இரு சாமமது ஆவின் வெண்ணெய் போல
பூட்டுவாய், கல்வமது புகட்டிடும்போது
நாட்டுவாய், சலகங்கை, மயங்காதே கேளு
நாலுபலம், பனிநீர் நன்றாய் தாக்கி

1. முன்சொன்ன, 2. அகாரவித்து, 3. கொடிசுன்ன, 4. சரக்கதுவாய், 5. சற்குரு, 6. பேர், 7. வருசம், 8. இந்திடை.

காட்டுவாயிது, சாம இளவழுக்கை போல
சாதித்தால், பனைநுங்கு சடையது போலாகும்
ஆட்டுவாம், நஞ்சமிர்த பிசினது போலும்
அத்திப்பாலமிர்தமெனு, நிறமது போலாமே. (167)

(உரை:) இருசாமம் கல்வத்தில் அரைக்க, பசுவின் வெண்மை வண்ணத்தில் இரசம் இருக்கும். 4 பலம் பனி நீரில் மீண்டும் சாமநேரம் அரைக்கவும். இளவழுக்கையைப் போல, பனை நுங்கு போலவும், அத்திப்பால் போலவும் வண்ணமாகும்.

ஆமென்ற முடிசயநீர் ஐந்து பலந்தாக்கி
ஆட்டுவாய், இருசாமம்மாட்டி விடும்போது
நாமென்ற, முடிசுன்னம் கடுகளவு தாக்கி
நாட்டியரைத்திடவே, பிசின் நாரது போலாகும்
வாமென்ற, சல்லிவேர், மெழுகுதனை வழித்து
வளமாகச் சதுரமாய் வில்லை செய்து
காமென்ற பனி நீரும், விந்ததுவும் குழைத்து
கருணை பெற வில்லையது கவசமது செய்யே. (168)

(உரை:) முடிசயநீர் 5 பலம் இரசத்துடனே சேர்த்து, இருசாமம் அரைக்கவும். கடுகளவு முடி சுன்னம் போட்டு, அரைக்க, பிசினுடன் கூடிய நார்போல மாறும் சல்லிவேர் மெழுகை வழித்து, சதுரமுள்ள வில்லையாய் செய்யவும். பனிநீர், இரசத்தையும் சேர்த்துக் குழைக்கவும். வில்லையை மூடிக் கவசம் செய்யவும்.

செய்யப்பா, புலத்தியனே, என்ராசயோக வானே
தட்சணா முனிவன் சொல், செந்தமிழ்க் கவிதான்
ஐயப்பா, நிகண்டெண்ணூறு, அகரானாதிபீடம்[1]
அனர்த்தமென்ற சகலஉயிர், அதீத பரிபாசை
உய்யப்பா, ஒருவருக்கும் தோணாத நேர்மையுறுதியுடன்
இரண்டாம் காண்ட உளமுருகச்சொல்வோம்
மையப்பா, இப்பொருளையாரறிவார்[2]? மக்காள்
மனவறிவைச் சோதித்து, மகிழ்ச்சி அருள் காணே. (169)

---

1. சுருதி பீடம், 2. இப்பொருளை யார் அறிவார்?

*(உரை:)* புலத்தியரே, இராசயோகத்தைச் செய்வாயாக, தட்சண முனிவன் கூறுவது, தமிழில் உள்ள பாடல்களாகும். இது 800 பாடல்களாகும். அதிகமான மறை சொற்கள் எல்லா உயிர்களுக்கும் கெடுதலைச் செய்யும். யாருக்கும் தோன்றாத நேர்மையும், உறுதியுடனும், இரண்டாம் காண்டத்தில் உள்ளம் நெகிழ, பிழைக்குமாறுச் சொல்லுகின்றோம். இதனுடைய பொருளை யாரால் அறிய இயலும். மகனே, அறிவை ஆய்வு செய்ய, அருள் கண்டு, மகிழ்ச்சியைக் காணலாம்.

காணுகின்ற வில்லையதன் மேற் கவசமேழு
கருவான, வந்ததுவில் தோய்த்ததனை எடுத்து
வாணுகின்ற,வில்லையதன், மேலேழு செய்து
வட்டவோடு, இரண்டுகொண்டு, வில்லையதை வைத்து
மேணுகின்ற மேலோடுமூடி, நீர்த்தாலும்[1]
மேகநிறமான மண் சீலையேழும் செய்து
ஆணுகின்ற, ரவியில் பதினெட்டு நாளுலர்த்தி
அதையெடுத்து, மயில் புடத்தில் புடம் போடுவாயே. *(170)*

*(உரை:)* வில்லை மேல் 7 கவசம் செய்யவும். இரசத்தில் தோய்த்து, வில்லையை வைத்து ஏழு சீலை மண்ணால் பூசி, மூடவும். சூரியபுடத்தில் 18 நாள் உலர்த்தி, மயில் புடமிடவும்.

போடுவாய் ஓர்நாள் முழுவதும் புடங், குலையாமல்தான்
போட்டெடுத்து, மேலோட்டை பொத்திவிடு நீயும்
ஆடுவாய், வில்லையதன் மேல் கவசமெடுத்து
அரகரா, சீசாவில் சுன்னமதை விட்டு
நாடு, உய்நஞ்சுக்கொடி, சுன்னப்பேர்[2] குறித்து
நாதாந்த, சிரோமணியின் பூசை செய்து
தேருவாய் உலகமதின்[3] மூலியின் பேரெல்லாம்
தெளிவான, சல்லிவேர் சுன்னமதுவாமே. *(171)*

---

1. நீர்தான், 2. சுன்னமேற், 3. யூகமதின்.

(உரை:) மயில் புடத்தை ஒருநாள் முழுவதும் வைத்து எடுக்கவும். சுண்ணம் கிடைக்கும். பூசை செய்து, எடுத்துக் கொள்ளவும். இதுவே சல்லிவேர் சுன்னமாகும்.

### குடற்சுன்னப் பெயர்கள்

மதுவான சுன்னத்து அதீதபேர் சொல்ல
மாளாது கோடான கோடி மாட்ட, வெள்ளேடில்லை
அதுவான, வெண் சாமரைச் சுண்ணமென்று பெயர்
அருளான, நஞ்சுக்கொடி சுண்ண மென்றும் பெயர்
அதுதான், சல்லிக்கொடி சுண்ண மென்றும் பெயர்
வசனித்தோம், வஞ்சிக்கொடி சுண்ணமென்றும் பெயர்
கதுவான, காலகோட்டி விடசுண்ண மென்றும்
காட்டினோம், இந்நூலில் குடற் சுண்ணப்பெயரே. (172)

(உரை:) இதனின் அதீதப்பெயர்களாவன; வெண் தாமரைச் சுண்ணம், நஞ்சுக்கொடி சுண்ணம், சல்லிக்கொடி சுண்ணம், வஞ்சிக்கொடி சுண்ணம், காலகோடி விட சுண்ணம் என்பன குடல் சுண்ணப் பெயர்களாகும்.

பேரான, திகை மூலச் சுண்ணமென்றும் பேரு
பேர்சொல்லாப் பூடதுவின் சுண்ணமென்றும் பேரு
கூரான, குலாமல்லி, மூலிச் சுண்ணமென்றும் பேரு
கூறினோம், வெள்ளாரைச் சுண்ணமென்றும் பேரு
காரான, தைலம் பேரென்னால்1 சொல்ல
கனி நாவும், வசனிக்கக் கனிவாயேயில்லை
தேனான, தட்சணத்துப் புலவனானேன்2
செந்தமிழால் சொல்லு கவி எண்ணூறாமே. (173)

(உரை:) திகை மூலச்சுண்ணம், பேர் சொல்லாப் பூடதுவின் சுண்ணம், குலாமல்லி, மூலிச்சுண்ணம்,

---

1. என்நூல், 2. புலவன் நானே. 173வது பாடலில் 3, 4 வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

வெள்ளாரைச்சுண்ணம் என்பன வேறு பெயர்கள் தட்சணத்துப் புலவனான என்னால் தைலப்பெயரை சொல்ல 800 பாடல்களை, தேன் போன்ற தமிழில் கவியாகச் சொல்லுகின்றேன்.

*நூறான, சவர்க்காரம், கூட்டுவகைக் கெல்லாம்*
*நுண்ணிதாம், இச்சுன்னம் கடுகளவுபோடு*
*பேரான, இச்சுன்னம், போடாவிட்டால்*
*பேர்பொய்த்துப் போம், சித்தியில்லை, காரமில்லை*
*வாரான, வாதமது பொய்த்துப்போமென்றாக்கால்*
*வழலைக்கு, இச்சுன்னம் வேண்டும் பாரு*
*சீரான, திராவகத்திலாடு வித்தைக் கெல்லாம்[1]*
*செய்வீரா, இச்சுன்னம்[2], சித்தியிதுவாமே.* *(174)*

*(உரை:)* சவர்க்காரம் போன்றவைகளுக்கு, இச் சுன்னத்தில் நுட்பமாகக் கடுகளவு இடவேண்டும். அவ்வாறு போடாவிட்டால், இரசவாதம் பலிக்காது. வெற்றியடைய முடியாது. வழலைக்கு இச்சுன்னம் தேவை. திராவகத்தில் செய்யப்படும். விளையாட்டுகளுக்கெல்லாம், இந்த சுன்னம் பயன்படும், வெற்றி கிட்டும்.

*சித்தியாம், சொக்குப்பொடி, சகலத்திற்கும்*
*செகசால அதீதத்துக்குச் சுன்னம் வேண்டும்*
*வத்தியாம்[3], வசிய முதலெட்டுக்குந்தான்*
*வசனித்தோம், இச்சுன்னம் செய்வீராகில்*
*பத்தியாம், சகலத்திற்கும், சல்லிமூலம்*
*பாடினோம், வெகுநூல், யாரும் காணார்*
*வைத்தியா, இந்த எண்ணூறு சகலபேர்க்கும்*
*வெகுசித்தி, இந்நூலில் பதனம் பண்ணே.* *(175)*

*(உரை:)* கவரும் பொடிக்கு இச்சுன்னம் வேண்டும். மந்திர விளையாட்டுகளுக்கு இச்சுன்னம் தேவை. வசியம் செய்வது போன்ற எட்டுவகையான 1) ஆக்கருஷணம், 2) உச்சாடணம், 3) தம்பனம், 4) பேதனம், 5) மாரணம்,

1. செய்வீர், 2. ரவி சுன்னம், 3. அத்தியாவசிய

6)மோகனம், 7) வசியம், 8) வித்துவேஷணம் மந்திரத் தொழில்களுக்குப் பயன்படும். இது அகத்தியர் மாந்திரிக காவியத்தில் வருகின்றது. இது பற்றிக் கூறியுள்ளோம். எல்லாவற்றிற்கும் சல்லி மூலம் அடிப்படையானது. பல்வேறு நூல்களில் இதைக் காண முடியாது. 800 பாடல்களில் எல்லோருக்கும் வெற்றியடையப் பாடினேன். இந்நூலை கவனமுடன் வைத்திருபாயாக (இவற்றை விளக்கமாக சாம்பசிவம்பிள்ளை அகராதியில் முதல் பாகம் பக்கம் 111ல் காண்க.)

**ஈரல் சுன்னம்**

பண்ணப்பா, வீரச்சுன்னம் கேளு
பாடினார், முன்னோர்கள் அதீதமா யிந்நூல்[1]
அண்ணப்பா, யாருந்தான் சொல்லவில்லை
அதீதமாயிந் நூலில் நாமருளக் கேளு
கண்ணப்பா, குலையோட ஈரலதை[2] வாங்கிக்
கருணை பெற, வெந்நீரை ஐந்து படி கொண்டு
அண்ணப்பா, பாண்ட மதில் அந்நீரைவிட்டு
அளவான, ஈரல்தனை, அதிலூறவையே. (176)

(உரை:) வீரமான சுன்னம் செய்முறையைக் கேளுங்கள், முன்னோர்கள், அதிகமாகப் பாடியுள்ளார்கள். யாருந்தான் தெளிவாகக் கூறவில்லை. 800 பாடல்களில் நான் கூறுகின்றேன். ஈரல்குலையை வாங்கி, வெந்நீர் ஐந்துபடியில் ஊறவைக்கவும்.

வைத்தொரு நாள் முழுதும், வைத்தனை யெடுத்து
மகத்தான நீரிலந்த, விதம் செய்து
ஐந்தது[3] விந்து, விந்து வளைப்[4] படிப்படி செய்து
அதன்பிறகு எடுத்ததனையாள் பழங்க விடத்தில்[5]
கைத்ததனை[6] ரவியில் இருபது நாளுலர்த்தி
நவிலும் படி ஆரலதனை கல்வத்திட்டு
கத்து[7] முன் சொன்ன முடியுப்பில் நாலு பலந்தான்
தோதகமாயிட்டு[8] ஆண்விந்து பலமிரண்டே. (177)

1. அதிகம், 2. ஈரல், 3.ஐந்ததனை, 4. வில்லை, 5. ஆள் புழங்கா, 6.நைத்ததனை, 7. கத்து, 8. அமிர்தமாயிட்டு.

*(உரை:)* ஓர்நாள் முழுவது ஊறவைக்கவும். இரசத்தை வெந்நீரில் ஊறவைக்கவும். பின் எடுத்து, மக்கள் தொடர்பற்ற இடத்தில் 20 நாட்கள், சூரியபுடம் வைக்கவும். முடியுப்பின் 4பலம், இரசம் 2 பலம்.

இரண்டான வித்ததனைக் கல்வத்திட்டு
நேர்த்தியதாய்[1], இருசாமம் மாட்டியிடும்போது
நண்டான, ஆவி[2] வெண்ணையது போலவாகும்
நலமாக அப்பாகம் வந்திடும் போது
அண்டான பனிநீர் நாலு பலம் விட்டு
ஆட்டிடுவாய்,இருசாமம் மாட்டிவிடும் போது
எண்டான்[3], புளியது போலாமதுவாகும்
இதற்குப்[4] பேரெண்ணத் தொலையா தென்றே[5]
பாரே.(178)

*(உரை:)* 2 பலம் இரசத்தை மிக அழகாக இருசாமம் கல்வத்தில் அரைக்கவும். பசு வெண்ணெயைப் போல திரளும் பக்குவம் வரும். அப்போது பனிநீர் 4 பலம் விடவும். இருசாமம் அரைக்கவும்.

**பழம்புளியின் பெயர்**

பாரப்பா பூரணாதிக் குரு, நாதி, யுறு நாள்[6]
பாடினோம் சகநாதி என்றும் பேரதற்கு
ஆரப்பா, அந்தநாதி யென்ற தற்குப் பேரு
அடவான, பெருவாதி என்றதற்குப்பேரு
வாரப்பா, வல்லாரை என்று மதன்பேரு
வசனித்தோம்[7], பூநாரையென்றதன்[8] பேரு
தேரப்பா, திருவாதி[9] என்றுமதன் பேரு
தெளிவான பழம்புளியின் தீதவதின் பேரே[10]. (179)

*(உரை:)* பூரணாதிக்குரு, நாதி, உருநாள், சகநாதி, அந்த நாதி, பெருவாதி, வல்லாரை, பூநாரை, திருவாதி என்பன பழம்புளியின் பெயர்கள்.

---

1. பத்தியமாய், 2. ஆவின், 3. என்றான, 4. மட்டியதற்கு, 5.மலையாதென்றே, 6. உருத்தான், 7. வசந்த, 8. அதற்கு, 9. தீ என்றும், 10. தீதமதின்.

பேரெனற், பழம் புளியின் பேரதனைச் சொன்னோம்
பேரான, புளிவருதல் பிசகாமல் கண்டால்
வாரென்ற, வழிதலை சதுரப்பில்லை[1]
வளையமாகச்[2] செய்து ரவி முகத்திலைந்து நாள் தான்
ஆரென்று[3] வைத்து உப்பாகாது[4] ஆனால்
ஆண்பிள்ளை பிச்சதனை அடியோடு கொண்டு
வேரென்ற பிச்சதனைச் சிலைதனில் பூசி
விளங்கவே சீலையேழு, விபரமதாய் செய்யே. (180)

(உரை:) பழம்புளியின் பெயர்களைக் கூறினோம். புளியென்ற பெயரை தவறில்லாமல் வருவதை காணலாம். வழித்துச் சதுரமான வில்லை செய்யவும். சூரியபுடம் 5 நாட்கள் வைக்கவும். பக்குவமானால், உப்பாகாமல் இருக்கும். ஆணின் பித்தை முழுவதும் எடுத்து, சீலையில் தடவவும். ஏழுசீலை சுற்றி மிகவும் விளக்கமாகச் செய்யவும்.

செய்யப்பா, அண்ட மெழு சிலையேழும் செய்து
செயமாக[5], ரவியுலர்த்தி ஓட்டிலதை வைத்து
மெய்யப்பா, மேலோடு மேன்மை[6] பெறச் செய்து
மேலான, மெழுகதனால் சந்துவாய் மூடி
அய்யப்பா, அதன்மேல் சுண்ணாம்பு சீலை[7]
அடவாக ஏழு செய்து ரவியுலர வைத்துப்
பொய்யப்பா, போகாமல் சாவற்புடம் போட்டுப்
புகழாக ஓர் நாளாறின பின்னெடுவே. (181)

(உரை:) அண்டமெழு சிலை ஏழு செய்து சூரிய புடமிடவும். உலர்ந்த பின்னர் ஓட்டில் வைத்து மேலே மூடவும். மெழுகால் ஓட்டைகளை அடைத்து விடவும். இவ்வாறு ஏழு சீலையைச் சுற்றி சேவல் புடத்தில், ஒரு நாள் வைத்து, பின்னர் எடுக்கவும்.

---

1. பில்லையாக, 2. வளமாக, 3. பூரென்று, 4. இப்பாகமானால், 5.நீயமாக, 6. மென்மை, 7 சுண்ணாம்புபூசி

எடுத்த வில்லை சீலையெல்லாம், சுழற்றிநீஎறிந்து[1]
இயலான, மேலோடு என்மகனே எடுத்துத்
தடுத்திடாச் சொன்னமிதைப் பார்த்தீரேயாகில்
சந்திரன் போலொளியாகும் சார்ந்து பாரையா
எடுத்திடாச் சுன்னமதைச் சீசாவிலிட்டுச் .
செயமாக[2] வாலையுட பூசையது செய்து
அடுத்திடாச் சுன்னமதில் அனேக வித்தை
ஆடும், அருளுகிறோம், அன்னமதின்[3]
பெயரே. (182)

(உரை:) சீலையை அகற்றி, மேலோட்டை நீக்கிப் பார்க்கவும். சந்திரனின் ஒளியைப் போல் சுண்ணம் இருக்கும். வாலைக்கு பூசை செய்து, எடுத்துக்கொள்ளவும். இச்சுன்னத்தால் பல சித்துகளைச் செய்ய, அருள் புரிகின்றோம்.

## ஈரல் சுன்னப் பெயர்கள்

சுன்னமென்று தவசு நாதப்பிச் சென்றும் பேரு
சுக சீவாதிச் சுன்ன மென்றதற்குப் பேரு
அன்னமெனற் அவநாதச் சுன்ன[4] மென்றும் பேரு
அத்துனா, வேத்துனர் சுன்னமென்றும் பேரு
வன்ன மென்ற வரலாதி[5] சுன்னமென்றும் பேரு
வாளாதி சுன்னமென்றுமதற்குப் பேரு
சொன்ன[6] மென்ற, சோதிமார்ச் சுன்ன மென்றும் பேரு
சொல்லிவிட்டோம், ஈரலுடசுன்ன மதன்
பெயரே. (183)

(உரை:) ஈரல் சுன்னத்தின் வேறு பெயர்கள், தவநாத பிச்சு, சுகநீவாதி சுன்னம், அவநாத சுன்னம் வேத்துனர், வரலாதிச் சுன்னம், வாளாதிச்சுன்னம் சோதிமார் சுன்னம்.

---

1. எரிந்து, 2. சிவமாக, 3. ஈரல், 4. பிர, 5. வாளாதி, 6. சொர்னம்,

183வது பாடலில் 6ஆவது அடி சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

சொல்லியதோர் சுன்னம், வாத மதுக்காகும்
சூட்சமாய் சொன்னமதால், பத்தரையுமாகும்
அல்லியதோர், ஆடுகின்ற வித்தையதுக் கொல்லாமாகும்
இந்தச் சுன்னந்தொட்டுமாடும், புலத்தியனே
வல்லியதோர் வயித்தியத்திற்கு சுன்னமாகும்
அறுபத்து நான்கு சரக்கதனயே கொல்லும்
எல்லியதோர் எட்டெட்டுச் சுன்னந்தானாகும்
எய்துகின்ற கருமமெல்லாம் இதனாலாமே. *(184)*

*(உரை:)* இது இரசவாதம் செய்யப்பயன்படும். பத்தரை மாற்றுத் தங்கம் கிடைக்கும். மருத்துவம் செய்யவும் ஆகும். அறுபத்து நான்கு சரக்குகளை மாற்ற உதவும். எட்டெட்டாக 64 வகை சுன்னம் செய்யலாம்.

## நரம்பின் பெயர்

ஆமப்பா, புலத்தியனே சொல்லக் கேளாய்
அரைகின்றோம், சடலமதின் நரம்பதுவின்
பெயர்கள்
நாமப்பா, நாற்கழலி, வேர்க்காலியென்று
நாலிடமென்றதற்குப் பேர், வர்க்கமென்றும் பேரு
வாமப்பா, வந்து, நாற்கழலியென்றும் பேரு
வச்சிராதி பூதவேரென்று[1], அதற்குப் பேரு
தாமப்பா, தன்னியமாம் வேரென்றும்[2] பேரு
சரமென்றும், சடலமதின், நரம்பதுவின் பேரே. *(185)*

*(உரை:)* நரம்பின் பெயர்கள், நாற்கழலி, வேர்கழலி, நாவிடம், வர்க்கம், வத்து, வச்சிராதி, பூதவேர் தன்னியமாம் வேர் சரம் என்பனவாகும்.

நரம்பான நரம்பெடுத்து அட்டகம், பட்சணிக்கு[3]
நுண்ணியமாய் அயில முதல் சகலத்திற்குமாகும்[4]
நரம்பான ரசமணிக்கிது நரம்பால்சேர்த்து
நலமாக செபம் செய்ய, எட்டெட்டுமாடும்

---

1. பூதம், 2. மாவேர், 3. சிலைக்கு, 4. சக்கரத்துக்கும்.

நரம்பான, குளிகைக்கு நரம்பதனைச் சேர்த்து
நவிலுவோம், கழுத்ததனில் நன்றாகக் கட்டி
நரம்பான, நரம்பதுவால் சகல துறையாகும்
நன்றாகச் சொல்லிவிட்டோம் சடலநரம்பாமே. *(186)*

*(உரை:)* நரம்பினால் மந்திரத் தொழில்களாக அட்டகம், பட்சணி என்பவற்றுக்கு உதவும். இரசமணியை இதனால் கட்டி, செபம் செய்ய 64 வகையான சித்துகளையும் செய்யலாம். கழுத்தில் குளிகையுடன் கோர்த்துக் கட்டிக் கொள்ளலாம்.

## கொழுப்பின் பெயர்

ஆமேதான், புலத்தியனே, மூன்றாய்க் கேளு
அடவான சடலமதின் கொழுப்பின் பேர்கள்
நாமேதான்[1], சொல்லுகின்றோம், சுந்தரமே கேளு
நாதரவி, வாதரவி[2], பூதரவியென்றும்
வாமேதான், வாதரவியென்றதற்குப் பேரு
வாடபதி[3], நிராடபதி, மால்பதியென்றும்
தேமேதான், திருவான விருவான வென்றும்
செப்பினோம், சடலதின் கொழுப்பதுவின்
பேரே. *(187)*

*(உரை:)* கொழுப்பின் பெயர்கள் நாதரவி, வாதரவி, பூதரவி, வாடபதி, நிராடபதி, மால்பதி என்பனவாகும்.

## நகத்தின் பெயர்

கொழுப்பான தந்த மென்று, ஆனைப்பதியென்று
கூரான மேற்பலகை, குறி தந்த மென்றும்
அழுப்பான அலரிக் கண்ணாடி யென்றும் பெயர்
ஆகாச தந்த மென்று அதற்குப் பேரையா[4]
தழும்பான ஆனந்த மலராதி[5] யென்றும் பேரு
நாம் சொன்னோம், அதீதப்பேர், நன்றாகத்தானும்
வழுவான, புலத்தியனே, இவ்வெண்ணூறில்
வசனித்தோம், சடலமதில் நகத்தின் பெயரே. *(188)*

---

1. காமேதான், 2. விவாதரவி, 3. வாடாதி, 4. பேரு.5. தந்த மலாதி.

*(உரை:)* நகத்தின் பெயர்கள், தந்தம் ஆனைப்பதி கூரான மேற்பலகை குறிதந்தம், அலரிக்கண்ணாடி, ஆகாசதந்தம், ஆனந்தமலர் ஆதி என்பனவாகும்.

**ஞானக்கண்ணின் பெயர்**

*நிகமான நிரஞ்ச மென்றதற்குப் பேரு*
*நிகரில்லா ஆசானென்றதற்குப் பேரு*
*அகமான, வாதிக்கண்[1] ணென்றும் பேரு*
*ஆருமறியாத, விதியறிவு கண்[2] ணென்றும்*
*செகமான[3] சித்திக்கண்ணென்றதற்குப் பேரு*
*செப்பினோம் பூரணமென்றதற்குப் பேரு*
*சுகமான, அசோகக் கண்[4] ரிசி யென்றும் பேரு*
*சொல்லி விட்டோம், சடலமதின் ஞானக் கண்ணின்*
*பெயரே. (189)*

*(உரை:)* ஞானக்கண்ணின் பெயர்கள், ஆசான், வாதிக்கண், விதியறிவுக்கண், சித்திக்கண், பூரணம் அசோகக்கண், ரிசி என்பனவாகும்.

**வெளிக்கண்ணின் பெயர்கள்**

*கண்ணான வெளிப்பாழு, சுத்தப்பாழென்றும்*
*கலங்கு நீர் அழலென்றும், மத்தப்பாழென்றும்*
*விண்ணான வெளியென்றும், செயலென்றும் பேரு*
*மெய்யென்றுஞ்சை[5] யென்றும் இதற்குப்*
*பேரைய்யா*
*வண்ணான்[6], சடலமதின் வெளிக் கண்ணின் பேரு*
*வசனித்தோம் கோடாகோடிப்பேர், பொறுக்கு[7]*
*மணிபோல்*
*தண்ணாகச்[8] சொல்லிவிட்டோம், புலத்தியனேயையா*
*நலமான, சடலமதின்,வெளிக் கண்ணின்*
*பேரே. (190)*

---

1. கண்ணன், 2. கண்ணன், 3. திகமான, 4. சொக்கன், 5. மசை, 6.நண்ணான, 7. பொருத்தம், 8. நன்றாக

*(உரை:)* வெளிப்புறம், சுத்தப்பாழ் கலங்குநீர், அழல், மத்தப்பாழ், வெளி, செயல், மெய், உஞ்சை என்பன வெளிக்கண்ணின் பெயர்கள்.

### பாதத்தின் பெயர்

வெளியான வேந்தர் நிலைக்காலி, நிலையென்றும்
விளக்கினோம் போத நிலையாதமென்றும் பேரு
அளியான[1] வாறு, விதப்பாத மென்றும் பேரு
ஆதாரநிலையென்று[2] அதற்குப் பேரு
களியான, செகமோதும் மடியென்றும் பேரு
காட்டினோம், மூலவேர்ப்[3] பாதமென்றும் பேரு
செளியான[4], சடலத்தின், பாதத்தின் பெயர்கள்
செப்பினோம், இவ்வெண்ணூறு செயலதுவின்
பேரே. *(191)*

*(உரை:)* வேந்தர், நிலைக்காலி, நிலை, போதநிலை, ஆதம், விதப்பாதம், ஆதார நிலை, அடி, உலக வேர் என்பன காலின் பெயர்களாகும்.

### கணுக்கால் எறும்பின் பெயர்

செயலான கச்சி யென்றும், மச்சியென்றும் பேரு
செகதங்கமா குச்சி யென்றதற்குப் பேரு
அயலான5, வச்சிரம், உச்சிரமென்றும்
அருளினோம் மரவாடை எலும்பென்றும் பேரே
குயலான, குறிநட்டென்றதற்குப் பேரு
கோதண்ட வேரெலும்பு என்றதற்குப் பேரு
சயலான, புலத்தியனே, எலும்பதுவின் பெயர்கள்
சாற்றினோம், கணுக்கால்6 எலும்பதுவின்
பெயரே. *(192)*

*(உரை:)* கச்சி, மச்சி, குச்சி, வச்சரம், உச்சிரம், மரவாடை, குறிநட்டு, கோதண்டவேர் என்பன எலும்பின் பெயர்கள்.

---

1. அழியாத, 2. உன்னு, 3. உலக, 4. செழி, 5. கார

### முழங்கால் எலும்பின் பெயர்

*எலும்பான முட்டை, முடக்கெலும்பென்றும் பேரு*
*ஈசுக்கணுவெலும்பென்றதற்குப் பேரையா*
*அறும்பான வக்காவெலும்பென்றும் பேரு*
*அத்தங்கி[1] எலும்பென்று அதற்குப் பேரையா*
*நலும்பான, அஞ்சாத[2] எலும்பென்றும் பேரு*
*நத்திவேர், கத்தெலும்பென்றும்[3]*
*கலும்பான எலும்பினிட அதீதப்பேரீது தான்*
*கட்டினோம், முழங்காலெ[4]லும்பிதுவின்*
*பேரே. (193)*

*(உரை:)* எலும்பான முட்டை, முடக்கெலும்பு, ஈசுக் கணு எலும்பு, வக்கா எலும்பு, அத்தங்கி, அஞ்சா எலும்பு, கத்தெலும்பு என்பன முழங்கால் எலும்பின் பெயர்கள்.

### பழு எலும்பின் பெயர்

*காலான பழுவென்றும் தொடுவென்றும் பேரு*
*கல்லான, கூண்டெலும்பு[5] என்றதற்குப் பேரு*
*சோவான, சிவம் துரதிகம் மென்றும்*
*துத்துவாரெலும்பென்றுமதற்குப் பேரையா*
*ஆலான, துரோணித எலும்பென்றும் பேரு*
*அட்ட நவகண்ட மென்றதற்குப் பேரையா*
*வில்லான, குறிவில்லென்றதற்குப் பேரு*
*விளம்பினோம் பழுவெலும்பின், விசிதமென்றும்*
*பேரே. (194)*

*(உரை:)* பழு, தொழு, கூண்டெலும்பு, சிவம், துரதிகம், துத்துவார் எலும்பு துரோணித எலும்பு, அட்ட நவகண்டம், குறிவில், விசிதம் என்பன பழு எலும்பின் பெயர்கள்.

---

1. தந்தி, 2. நஞ்சா, 3. சித்தெலும்பு, 4. முன், 5. குண்டெலும்பு.

## மானிடர்களின் எலும்புப் பெயர்

*விசிதமென்ற வேர் பூர நாத[1] வேரெலும்பு*
*விபரமென்ற சுக்கெலும்பு என்றதற்குப் பேரு*
*அதீதமென்ற... துருஎலும்பென்றும் பேரு*
*அதிகப் பொன்னாவட மென்றதற்குப் பேரையா*
*நசிதமென்ற நற்கரணாதி எலும்பென்றும்*
*நாகரொட்ட[2] எலும்பென்றதற்குப் பேரு*
*வசிதமென்ற, மார்க்கண்டி என்றதற்குப் பேரு*
*வசனித்தோம், மானிடர் எலும்பதின் பேரே. (195)*

*(உரை:)* விசிதம், வேதபுர நாதவேர், சுக்கெலும்பு, மஞ்சள் துரு, பொன்னாவடம், நற்கரணாதி, நாகரோட்டம், மார்க்கண்டி என்பன மனிதர்களின் எலும்பின் பெயர்கள்.

*மாறான ஒட்டக எலும்பென்றும் பேரு*
*மகத்தான மண்ணாட்டி, உண்ணாட்டி*
*கண்ணாட்டியென்றும்*
*ஆரான, வன்னாட்டு எலும்பென்றும் பேரே*
*அக்கெலும்பு உக்கெலும்பு, அதற்குப் பேரையா*
*வாரான, வடிவெலும்பு, மேனமென்றதற்குப் பேரு*
*வாசமென்ற, முடிச்சுருளை எலும்பென்றும் பேரு*
*...... ... ... ... ... ... ... ... ..... ...[3]*
*நாம்சொன்னோம், புலத்தியனே, கோடாகோடிப்*
*பேரே. (196)*

*(உரை:)* ஒட்டக எலும்பு, மண்ணாட்டி, உண்ணாட்டி, கண்ணாட்டி, வன்னாட்டு எலும்பு, அக்கெலும்பு, உக்கெலும்பு, வடிவெலும்பு வாசம், முடிச்சுருள் என்பன மனிதர்களின் எலும்புப் பெயர்கள் ஆகும்.

---

1. வேதபுர மஞ்சள், இது சரசுவதி மகால் சுவடியில் உள்ளது. 2.நாகரோட்ட, 3. ...நாரான நாகவா எலும்பென்றும் பேரு, இவ்வரி சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

கோடியென்ற பொறுக்கி மணிகோர்த்த பாவனை[1] போல்
கூறினோம், இப்பொருளை யாருக்கும் சொல்லாதே
வாடித்திரியார்க ளிந்நூல் பார்த்த பேரையா
வசனித்தோம், என்னாணை வாதியென்றாவார்
நாடியென்று, நாதாந்த சித்தருக்கதீதம்,
நல்ல பரகதியாவார், நாட்ட மொண்ணாது
பேடியாய் திரியாதே, பேய் மக்காள் கேளும்
பேசினோ மிவ்வெண்ணூறு
காண்டமிரண்டாமே. (197)

*(உரை:)* பொறுக்கி, மணியாக்கிக் கோர்த்து இந்நூலைப் படைத்தோம். இதை யாருக்கும் கூறவேண்டாம். இந்த நூலைப் படித்தவர்கள், வாட்டமுடன் அலையமாட்டார்கள். நாதாந்தசித்தர் அதிகம் நாடி, நல்ல வீடுபேற்றைப் பெறுவார். நல்ல வீடு பேற்றைப் பற்றி சிந்திக்காமல், விருப்பமின்றி உள்ள பேய் போன்ற மனிதர்கள், அலிகளாய் அலைவார்கள். இதைப்பற்றி இரண்டாம் காண்டத்தில், 800 பாடல்களைக் கொண்ட இந்நூலில் சொன்னோம்.

இரண்டான, முன்சொன்ன பிண்டமதை வாங்கி
ஈரல் பிச்சுக் குடலுள்ள, மூலமெல்லாந் தள்ளி
திரண்டான, சலம்விட்டு தன் சுத்தி செய்து
நிலை பெறவே, பிண்டமதை கல்லுரலில் தாக்கி
அரண்டான்[2], சுத்த சலமரைப்படி தான், விட்டு
ஆட்டுவாய், எழு உலக்கை கொண்டிரு சாமம்
இரண்டான, மாங்கிச எலும்பு முதற்கொண்டு
இசைந்த பச்சரிசி மாவது போலாமே. (198)

*(உரை:)* இரண்டாவதாக உள்ள, முன்சொன்ன பிண்டத்தை எடுத்து, ஈரல், பித்து, குடல், மூலம் எல்லாவற்றையும் தள்ளவும், நீர்விட்டுத் தூய்மை செய்யவும். பிண்டத்தை கல்லுரலில் தாக்கவும். அரைப்படி தண்ணீர்

---

1. பாவினை, 2. இரண்டான.

விடவும். உலக்கை கொண்டு உலக்கையால் இருசாமம் அடித்து ஆட்டவும், கொழுப்பு எலும்பு என்பன பச்சரிசி மாவுபோல ஆகும்.

அதுவான, மாங்கிசத்தினதைத் தோண்டி வையையா
அடவான, வாள் புழங்க[1] விடஅதிலேகி
கதுவான, மாங்கிசத்னதப் பலகை மீதிலிட்டு
கன்றாக சரக்கது போல், நலமாக உலர்த்தி
சொதுவான, சித்திர நாளிரு பத்துக் கொன்று மட்டும்
கூறாகச் செய்துலர்த்தியெடுத்துக் கொண்டு
இதுவான கல்லுரலில் சரக்கதனையிட்டு
கயல் மாதுடையவள், தன் முலைப்பால்
நாழிவாரே. (199)

(உரை:) மாமிசத்தைச்சுரண்டி எடுக்கவும். பலகை மேல் வைக்கவும். உலர்த்தவும், பின்னர் தனித்தனியாக கூறுபோடவும். கல்லுரலில் தாய்ப்பால் நாழி வார்க்கவும்.

வார்த்திரு சாமமது, சாடினாலையா
அது பொடியாய் தூளாகும், அத்தூளதனில்
சேர்த்தநீர், சுத்தசலம் நாழியது விட்டு
அளவாக[2] இருசாமம், சூட்டிலிடும் போது
ஆர்த்துவது[3], மாப்போலாம் பிண்டமாவாகும்
ஆருமறியார்கள் இந்தப் பிண்டமாவின் கூறு
சேர்த்து விறி, ஆண்விந்து[4] நாலுபலம் விட்டுச்
சீராகத் தாக்கி விடு, இருசாமந்தானே. (200)

(உரை:) பின்னர் இருசாமம் இடித்துப் பொடியாக தூளாகச் செய்யவும். தூய்மையான நீர் நாழியளவு வார்த்து, தூளைப் போடவும். அடுப்பேற்றிக் காய்ச்சவும். மாவாக மாறியிருக்கும் நிலையில், இறக்கவும். 4 பலம் இரசம் விட்டு, கல்வத்தில் இருசாமம் அரைக்கவும்.

---

1. ஆள்புழங்கா, 2. சுளுவாக, 3. ஆத்துவது, 4. அதிலான.

**பிண்டமாவின் பெயர்கள்**

தானென்ற மாவுக்கனேக பேருண்டு
தாபிக்கென்னாலே[1], சொல்லத் தெரியாதையா
நானென்ற, பிண்டப்பூநீறு என்றும் பேரு
நன்றான, பூமியுடநாதமென்றும் பேரு
சானென்ற, சவுட்டுமண் உழமண்ணென்றும் பேரு
சமர்த்தான, உவர்நாதம் பூநீறு என்றும் பேரு
மாவென்றதனை நாதமென்றும்[2] பேரதற்கு
மாலை பிண்ட மாவுக்குப் பூநீறென்றும்
பெயரே. (201)

(உரை:) இந்த பிண்டமாவுக்கு உள்ள பெயர்கள் பிண்டப்பூநீறு, பூமியுட நாதம், உழமண், சவட்டு மண், உவர் நாதம், பூநீறு, நாதம் என்பனவாகும்.

மாவான, மாவதனைப் பனிநீரில் கரைத்து
வளமாகத் தெளிய வைத்து, பத்து முறையாகில்
பதுவான, இத்தெளிவைப் பாண்டத்திலிட்டுப்
பான்மை பெறப்பாண்டமதை அடுப்பிலதையேற்றி
அதுவான[3], அக்கினியை மூட்டி,அதையையா
அரகாரக் கொதிக்க வைத்துக்[4] குழம்பது போலானால்
நதுவான, இறக்கியாறவைத்து நீயையா
நலமான, பீங்கானிரண்டில் குழம்பதுவை,
வாரே. (202)

(உரை:) பிண்டமாவை, பனிநீர் கொண்டு பத்து முறை கரைக்கவும். மண்பாண்டத்தில் ஊற்றி, அடுப்பிலிட்டுக் காய்ச்சவும். கொதித்துக் குழம்பு போலாகும். இறக்கிப் பீங்கான் தட்டில் வார்க்கவும்.

---

1. தவறாக, 2. மகாநாதமென்றும், ஆவான, 4. அரசுரா என்று வைத்து.

## பூ நீறு உப்பு

வார்த்து பத்து நாள்[1] வீதம் முறை தப்பாதையா
மகத்தான, பூநீறுப்பு, பாறையது போல
பார்த்து பத்துநாள் வீதம் இக்கசிவை யிறுத்தால் எண்ணை
போல்
படரும் பூநீறுப்பு, பாறையது போலச்
சேர்த்து அப்பாறையுப்பை, நாவதனால் சொல்லச்
செவிகேட்க வேறு, செவி செய்ய முடியாது
நாற்றிசையில் இந்தவிதம் செய்யாத கொடுமை
நாதமென்றும், பூநீறு செய்தோர்
மண்ணைத்தானே. *(203)*

*(உரை:)* பத்துநாள் செய்ய, இம்முறையானது வெற்றியடையும். மாவின் கசிவை வடிகட்டவும். எண்ணையைப் போல் இருக்கும். பூநீறு உப்புக் கிடைக்கும். நாதமென்று, பூநீறு மண்ணைத்தான் எடுப்பார்கள்.

## பிண்டச் சுன்னம்

தானான, பிண்டச்சுன்னம் செய்யும் வகை கேளும்
தருவான கல்லுரலில் இருந்தந்த மாவை
வேனா[2] மாவ தனைத் தோண்டி நீயெடுத்து
விளங்கும் பிண்டக் குழித்தைலமிரண்டு சேர்
கொண்டு
கானான கல்வமதில் பிண்ட மாவையிட்டுக்
கருவான, பிண்டக் குழித்தைலமதைத் தாக்கி[3]
ஆனான இருசாமம் மாட்டி விடும் போது
அதுபுளிபோல் அண்மைதாயாகும், அது
காணே. *(204)*

---

1. குறிப்பு: பூநீறு சித்திரை நாளில் நிலத்தில் பூத்துவரும். இதை எடுப்பது மருத்துவர்கள் வழக்கம். அதிலிருந்து மாறுபட்ட முறையைக் கூறுகின்றார்.

1. நாலு, 2. பேணப்பா இருசாமம் பிழிந்து, 3. பிழிந்து.

(உரை:) பிண்டக்கன்னம் செய்வது பற்றிக் கூறுகின்றார். மாவால், பிண்டக்குழித் தைலமெடுக்கவும். 2 சேர் தைலத்தை மாவுடன் சேர்த்து, அரைக்க, புளிபோல் வரும்.

காணப்பா, சுந்தரமே புலத்தியனே கேளும்
கருவான புளியதனில் விந்து சேரிட்டு
நாணப்பா, நாற்சாமமெழுகு போலாட்டி
நாறது போலாகுமது, மாகமதைக் கண்டு
கேளப்பா, சதிபுருஷர்கள் இந்த அவநாதம்
கூறினோம், அரைச்சேர் புளியதனில் தாக்கி
வேணப்பா இருசாமம் பிசினியது போலப்
பலமாக ஆட்டி, வழித்திடு அதைத்தானே. (205)

(உரை:) இரசம் 1 சேர் சேர்த்து 4 சாமம் அரைக்க மெழுகாகும். கணவன் மனைவியான இந்த நாதம் கூறினோம். அரை சேர் புளியில் இரு சாமம் அரைக்க பிசின் போல வரும். இதை வழித்து வைத்துக்கொள்ளவும்.

பலமாக வழித்ததனை வில்லையதாய் செய்து
பேரான, சித்திரை நாள் ரவி முகத்திலையா
மூலமாக, முப்பது நாள் ரவியதை வைத்தால்
முதண்ட வெங்கலமாம் சத்தமதுபோல
கலமாக, இறுகியது, கல்போலது கட்டும்
கசிவெல்லாம் எண்ணையைப்போல்,
கழன்றுபோகும்
வலமாகக்1 கழண்டு, மணியது போலதுவானால்
வச்சிரமாம்2, வில்லையதை எடுத்திடுவாய்
தானே. (206)

(உரை:) வழித்ததை வில்லையதாய் செய்யவும். சித்திரை, ஆண்டுப் பிறப்பன்று சூரிய புடம் வைக்கவும். சித்திரை மாதம் முழுவதும் 30 நாட்கள் வைக்கவும். வெங்கல மணி போல ஒலி கேட்கும். கல் போலக்கட்டும்.

---

1. வளமாக. 2. உச்சி.

எண்ணையாக, கசிவெல்லாம் நீங்கும். மணிபோலாகும். வில்லையை எடுக்கவும்.

எடுத்து, பில்லை அதன் மேலே விந்து சிலைபேழு
இயல்பான அண்டமேழு சிலேயேழும் செய்து
கடுத்து ரவி, முகந்தனிலே வைத்து ஒரு சாமம்
கருவான1 பில்லையதை எடுத்து நீயையா
கடுத்திராயிரண்டாடு2, சதுரமதாய்க் கொண்டு
கருவான, பில்லையதை ஓட்டில் வைத்ததனை
எடுத்து நீ, மேலோடு மூடி மண் செய்து
மேலான, ரவி முகத்தில் உலர வைத்துப்பாரே. (207)

(உரை:) வில்லையை எடுத்து, அதன்மேலே இரசம் சிலை ஏழு, முட்டை ஏழு சீலை ஏழும் செய்யவும். ஒரு சாமம் சூரியபுடம் வைக்கவும். பின் சதுரமாய் செய்யவும். வில்லையை மேல் கீழாக வைத்து மூடவும். மண்ணால் இடைவெளியை அடைக்கவும். மீண்டும் சூரியபுடமிடவும்.

பாரப்பா உலர்ந்த பிறகு எடுத்தனையாப்
பன்றிப் புடம் போட்டு, நீர் பார்த்திரேயாகில்
பேரப்பா, பிண்ட சுன்ன மாறின பின்னெடுத்து
பலத்த மண் சீலையுட கவசமதை வாங்கிச்
சேரப்பா இச்சுன்னம் பார்த்தேயாகில்
துடியான சரக்கு... ...பத்தி நாலையுந்தான்
சூரப்பா சுன்னமுமாம் ... ...
துடியான மெழுகு கட்டும், செயநீரதுவாமே3. (208)

(உரை:) உலர்ந்த பிறகு, எடுத்துப் பன்றிப் புடமிடவும், பின் எடுக்க, சுன்னமாக இருக்கும். வன்மையுள்ள சுன்னத்தால், மெழுகு கட்டும், செயநீர் ஆகும்.

செயமான, உபரசங்களுக்கினங்களாகும்
செய்யுகிற வித்தையெல்லாம் தங்க நிறமாகும்
வயமான, வாதத்துக்காதியாகும்
வைத்தியத்துக்கு இதுவாதி, துறை காணாக்கோடி

1. கருப்பான. 2. கடுக்கிடா. 3. செயநீர் வாமே

அயமான, இரும்பதற்கு இச்சுன்னம் பட்டால்
அப்பனே, இரும்பெல்லாம் பொன்மயமாகப்
போகும்
நயமான, சூதமதில் இச்சுன்னம் பட்டால்
நல்ல சாரணையாகுங் குளிகை[1] மணியாகுமே. (209)

(உரை:) உபரசங்கள் 120யும் உருக்கும். பொன் நிறமாக மாற்றும். இரசவாதத்துக்கு அடிப்படையாகும். இரும்பில் இதைப்போட பொன்நிறமாக மாறும். இரசத்திலிட, சுன்னத்தைப் போட, பிடாலவணமாகுட் குளிகையிலிட, மணியாகும்.

ஆமப்பா, சித்தர்கள்தான் இம்முறைதான் அறிவார்
அனேகம்பேர், நாதாக்களின் இம்முறை தானறியார்
நாமப்பா, சொல்லிவிட்டோம், பொய்யில்லாப் பொருளாய்
நாட்டினோம், இந்நூலில் நாம் சொன்னோமையா
மாமப்பா, ஆணவந்தான், மா[illegible]ய காமியந்தான்
மடித்தோட்டி, விட்டவனே, மவுனச்சி[illegible]மே
ஏமப்பா இது மூன்றால் சாவு வந்தெய்தும்
இது மூன்றும் தள்ளி வைரேக உபமாமே. (210)

உபமான, சுரூபத்தால் ஒன்றருவே யாவாய்
உலகத்தோர், இந்தப்படி உறுதியுடன் நிலைத்தால்
வேமப்பா, கசப்புவந்து, அமிர்தம் போலாகும்
வேதாந்தமலர்களுக்கு, விளங்குவது பாரு
செபமான, தியானமெல்லாம் சித்தியாகும் பாரு
தீட்சை முதல் மந்திரங்கள் செய சித்தியாகும்
கயமான[2], காயமதிலுள்ள கபமெல்லாம்
கழன்றுவிடும் பிண்டச் சுன்னக்கருவது[3]
வாலாமே. (211)

(உரை:) சித்தர்களே இந்த செய்முறைகளை அறிவார்கள். பெரும்பான்மையானவர், இதை அறிய

1. குளிகையாமே, 2. கபமான, 3. சுன்னப் பெயர்.

மாட்டார்கள். பொருளை எல்லாம், சொல்லிவிட்டோம். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் நீங்கியவனே பேசாத சித்தர், இம்மலங்களால் இறப்பு வரும். இவைகளை நீக்கினால், சிஞ்சீவியாகலாம். துவக்கமான உருவத்தால் ஒன்றாக ஆவாய். உறுதியுடன் மும்மலங்களை நீக்கினால் கசப்புணர்வு தோன்றி, பின்னர் அமிர்தம் போலாம். வேதத்தின் பொருளை அவர்கள் உணர்வார்கள். தியானம் செபம் என்பனவற்றால், வெற்றி அடையலாம். (தீட்சை) தூய்மையாக்கல் முதலிய மந்திரங்கள் மூலம் வெற்றி பெறலாம். உடலில் உள்ள நீர்த்துவம், பிண்டச் சுன்னத்தினாலான கருவால் நீங்கும்.

**பிண்டச் சுன்னப் பெயர்**

கருவான, பிண்டச்சுன்ன பேரதனைக் கேளு
கம்பியுப்புச் சுன்ன மென்றதற்குப் பேரு
பருவான, பாறை சுன்னங்கற்சுன்னமென்றும், மந்தச்
சுன்னம்
பரிவான வங்கச் சுன்னமென்றும், மந்தச் சுன்னம்
அருவான களிச்சுன்ன, மறவச் சுன்ன மென்றும்
அடவான விந்திலானவான்[1] சுன்னமென்றும்
தருவான நாதத்தாலான சுன்னமென்றும்
நாம் சொன்னோம், பிண்டக் கருவாலான
சுன்னப்பேரே. *(212)*

(உரை:) பிண்டச்சுன்னப் பெயர்கள், கம்பியுப்புச் சுன்னம், பாறை சுன்னங்கற்சுன்னம், வங்கச் சுன்னம், மந்த சுன்னம், களிச்சுன்னம், மறவாச் சுன்னம், விந்தினான் ஆன சுன்னம், நாதத்தால் ஆன சுன்னம் என்பனவாகும்

பேரான பேர்களெல்லாம் பொறுக்கி போலப்
பேசுகின்றோம் இந்த எண்ணூறு பிரபல்யமாக
காரான இரண்டாவது காண்டமாகில்
கருவியால் எடுத்த வதி கணக்கெல்லாந்தான்

---

1. விந்து வினா.

வேறான வேதாந்தம் பார்த்து நீதேறி
விளங்கும் தினக் கருவியெல்லாம் அறிவார் கண்டு
தேரான, தெளிந்தறிவால் பார்த்திட்டாக்கால்
தேகக்கூறு, கருவியெல்லாந் தெளியுந்தானே. (213)

தெளிவான வாதிகளுக்கு துயரமில்லாமல்
தேறுவதற்குச் சரக்கினிடக் கூறெலாந்தான்
அளியாதே[1], புத்திவானென்றாய், கேளு
அறுபத்து நாலு சரக்கதிகமெல்லாம்
பொழிவாகப் பொன்மாரி பொழிந்தாற்போல
புகலுவோம், இந்த எண்ணூறு புகழோ மெத்த
கனிவாக, விருந்ததினால் ஆவதென்ன ?
கண் கெட்ட மூடர்களே, கருத்தில்[2] காணே. (214)

(உரை:) இந்த எண்ணூறு பாடல்கள் புகழ்பெற்று உள்ளன. இதில் பெயர்களைப் பொறுக்கி பேசுகின்ற வேதாந்தம் அறிந்து தேறினால், தினக் கருவியை கண்டறிவார்கள். தெளிந்த அறிவைக் கொண்டு பார்க்க, உடலில் 96 வகையான தத்துவங்களைத் தெளிவாகக் காணலாம்.

இரசவாதிகளுக்கு வறுமையின் துன்பம் கிடையாது. கடைச்சரக்கின் தன்மைகளை அறிந்து, அறிஞன் என உரைப்பார்கள். அறுபத்து நான்கு வகையான பொருட்களை பொன் மழை பெய்தது போன்று, 800 பாடல்களில் கூறுவோம். இதனால் அதிகப்புகழ், அறிவுக் கண்ணற்ற முட்டாள்களுக்கு, எண்ணங்களால் என்ன பயன் ? கனிவுடன் தரும் விருந்தோம்பலால் என்ன பயன் ? பார்ப்பாயாக.

## சிவசாரத்தின் பெயர்

காணப்பா, புலத்தியனே யோத்திரமென்றும் பேரு
கந்திரமே, யோகட மென்றும் அதீதப் பேரதற்கு
ஆணப்பா, சாரமென்றும் பேரு
ஆதிதரா[3]சிவமென்றதற்குப் பேரு

1. அழியாதே, 2. கருத்தால், 3. தாரசாரம்.

நாணப்பா, நாத சாரமென்றும் பேரு
நாதாந்த மவுன சாரமென்றும் பேரு
சோணப்பா வாராது, குருச்சாரமென்றும்
கூச்சாரமென்றதற்கு, சிவசாரத்தின் பேரே. (215)

(உரை:) புலத்தியரே, கேட்பீராக, யோத்திரம், சுந்திரம், யோகடம், சாரம், ஆதிதராசிவம், நாதசாரம், மவுன சாரம், குருச்சாரம், சச்சாரம், சிவச்சாரம் என்பன சிவசாரத்தின் பெயர்களாகும்.

**சத்திச்சாரத்தின் பெயர்**

சாரமென்றால் சாரமல்ல, ஓமமென்றும் பேரு
சாற்றினோம் ஓங்கிட மாங்கமென்றும் பேரு
வாரமென்ற, அதிசாரமென்றும் பேரு
வாலை சாரமென்றதற்குப் பேருண்டாச்சு
ஆரமென்ற, நருளிகச்[1] சாரமென்றும் பேரு
அடலச்சாரமென்ற[2] தற்குப்பேரு
பாரமென்ற படலச்சாரமென்று[3] பேரு
பதிபரமாஞ் சத்திச் சாரத்தின் பேரே. (216)

(உரை:) ஓமம், ஓங்கிடமாங்கம், அதிசாரம், வாலைச் சாரம், நருளிகச் சாரம், அடவாச்சாரம், படலச்சாரம் என்பன சத்திச் சாரத்தின் பெயர்களாகும்.

**அரிதாரத்தின் பெயர்**

சத்தியென்ற உளிக்காரம் இலிங்கித னென்றும்
சாற்றினோம், மயிர்வோச மென்றும் பேரு
சத்தியென்ற, மலிக்காரமென்றும்[4] பேரு
மண்ணூளிக் காரமென்று அதற்குப் பேரு

---

குறிப்பு: கடைசிவரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

1. ஆடவச்சாரம், 2. அருளிச்சாரம், 3. அடவச்சாரம், 4 மளி.

அத்தியென்ற, வலங்கிதனென்றும் பேரு
அதிசய காரமென்று[1] அதற்குப் பேரு
சித்தியென்று, மாயோன் வித்தென்றும் பேரு
செப்பினோம், நன்றாக அரிதாரத்தின் பெயரே. *(217)*

*(உரை:)* உளிக்காரம் இலிங்கிதம், மயிர்வோசம், மலிக்காரம், மண்ணுளிக்காரம், வலங்கிதன் அவதிசயகாரம், சித்தி, மாயோன் விந்து என்பன, அரிதாரத்தின் பெயர்கள்.

### பொரிகாரத்தின் பெயர்

காரமென்றால் காரமல்ல, புலத்தியனே கேளும்
கருவான, விரிகாரம், படுகாரந்தான்
வாரமென்ற, துரிகாரமென்றும் பேரு
வனமான, வரிகாரம், நரிகாரமென்றும்
சாரமென்ற, குருகார இலகுகாரந்தான்
சாதிக்காரம், பதிகாரமென்றும்[2] பேரு
சாரமென்ற, தெறிகார மென்றும்[3] பேரு
சாற்றினோம், சுந்தரமே, பொரிகாரத்தின்
பெயரே. *(218)*

*(உரை:)* விரிகாரம், துரிகாரம், வரிகாரம், நரிகாரம், குரு காரம், இலகு காரம், சாதிகாரம், பதிக்காரம் என்பன வெங்காரத்தின் பெயர்கள்.

### சீனக்காரத்தின் பெயர்

சாற்றினோம், சிவமூலச் சார்[4]மென்றும் பேரு
சதாசிவத்தி அலரிநாரமென்றும் பேரு[5]
போற்றினோம், பூபதிகாரமென்றும் பேரு
பூட்டினோம், பூவாதிகார மென்றும் பேரு

---

1. சயசாகரம், 2. பேதிக்காரம், 3. எறிக்காரம், 4. சில மூலக்காரம், 5. அரிகாரம்

ஏற்றினோம், வேதியன்கார மென்றும் பேரு
விலாட உரக்காரமென்ற[1] தற்குப் பேரு
வாழ்த்தினோம், வாலை ரகுபதி காரமென்றும்
வளமாக வசனித்தோம், சீனாக்காரத்தின்
பெயரே. (219)

(உரை:) சிவ மூலச்சாரம், சதாசிவத்தின் அலரி நாரம், பூபதிக்காரம், பூவாதிகாரம், வேதியன் காரம், விலாட உரக்காரம், வாலை, ரகுபதி காரம் என்பன சீனக்காரத்தின் பெயரே.

## வெடிகாரத்தின் பெயர்

சீரான சிரோ சக்கர[2] மென்றும் பேரு
சிலைகாரம், வலை[3] காரமென்றதற்குப் பேரு
ஆனான[4], அவரஞ்சக மென்றும்[5] பேரு
அலங்காரமென்றதற்குப் பேருண்டாச்சு
வானான, வாதிகாரமென்றும் பேரு
வசனித்தோம், வடகார மென்றும் பேரு
தேனான, திருக்கடல்[6] வாழ்காரமென்றும் பேரு
செப்பினோம், தெளிவாகவே, வெடிகாரத்தின்
பேரே. (220)

(உரை:) சிரோச்சக்கரம், சிலைகாரம், வலை காரம், அவ்ரஞ்சகம், அலங்காரம், வாதிக்காரம், வடகாரம், திருச்சடல் என்பன வெடிகாரத்தின் பெயர்கள்.

## படிகாரத்தின் பெயர்

வெடியான, வெடிபதிரதியென்றும் பேரு
விரும்பும் வாதிக்காரமென்றதற்குப் பேரு
அடியான, யோகிக்கார மென்றதற்குப் பேரு
அடவான ஒளிக்காரமென்றும் பேரு

---

1. உரக்காரம், 2. ரோசக்காரம், 3. வாலைக்காரம், 4. ஆறான, 5. வாஞ்சகாரம், 6. திருச்சுடல். 221, இத்தலைப்பில் பாடல் 219ல் உள்ளது.

துடியான தனுக்காரமென்றும் பேரு
தனஞ்சய காரமென்று அதற்குப் பேரு
கடியான காலிதமென்றும்[1] பேரு
கவடிக் காரமென்றும்[2], படிகாரத்தின் பெயரே. (221)

(உரை:) வெடி, பதிரதி, வாநிக்காரம், யோகிக்காரம், ஒளிக்காரம், தனுக்காரம், தனஞ்சயக் காரம் (தனஞ்சயன் பத்து வாயுக்களில் ஒன்று) காலிதம், கவடிக்காரம் என்பன படிக்காரத்தின் பெயர்களாகும்.

## இந்துப்பின் பெயர்

படி[3]யான வாணி, மரக்கசமென்றும்[4] பேரு
பரிவான, சைத்தலவணமென்றும் பேரு
சடியான, சந்திலகமென்றும் பேரு
சார்வான, நாக நெய்[5]யென்றும் பேரு
வெடியான, வித்தக மென்றும் பேரு
விளங்கினோ மதிலவண மென்றும் பேரு
கடியான, கடி[6]மாசமென்றும் பேரு
காரக் கஞ்சாரக[7] இந்துப்பினிடப் பேரே. (222)

(உரை:) வாணி, மாக்கசம், சைந்தலவணம், சந்திலகம், நாகநெய், வித்தகம், மதிலவணம், கடிமாசம், காரக்கஞ்சாரகம் என்பன இந்துப்பின் பெயர்கள்.

## வளையலுப்பின் பெயர்

விந்தான, மேடியென்றும், நாடியென்றும் பெயர்
விவேகமதியுப்பென்று இதற்குப்பேரு
விந்தான விராதயுப்பென்றும் பேரு
விசிதயொலி வுப்பென்றுமிதற்குப் பேரு

1. காலிதம், 2. வடி, 3. வடி, 4. சங்கை, 5. நாகதெயம், 6. கன, 7. கார்கஞ்சாரக.

முந்தான, முயலுப்பு வயலுப்பென்றும் பேரு
மூதண்டப் பசுமை வெளியுப்பென்றும் பேரு
சந்தான சயிலுப்பென்றும் பேரிதற்குச்
சரமாகச் சொல்லிவிட்டோம், வளையலுப்பின்
பெயரே.(223)

(உரை:) மேடி, நாடி, விவேக மதியுப்பு, வீராத உப்பு, விசிதஒளி, முயலுப்பு, வயலுப்பு, மூதண்டப் பசுமை, வெளியுப்பு, சந்தானச் சயிலுப்பு என்பன வளையலுப்புவின் பெயர்கள்.

## வெடியுப்பின் பெயர்

உப்பான உபரதம்1 அபரதமென்றும்2
ஒருமாதக் கருவென்றும் பேரு
அப்பான, உருத்திர உப்பென்றும் பேரு
அனந்தனென்ற3 உப்பதற்கு, அதீதப் பெயர்கள்
செப்பான, செயலகவு4ப்பென்றும் பேரு
செங்கடி வாயுப் பென்று மதற்குப் பேரு
தப்பாமல் சொல்லுகின்றோம், தவர்க்குப்பென்றும்
தாபித்தோம், செந்தமிழ் செய்யார், வெடியுப்பின்
பேரே. (224)

(உரை:) வெடியுப்பின் பெயர்கள் உபரதம், அபரதம் ஒரு மாதக்கரு, உருத்திர உப்பு, அனந்தன், என்பன கூடுதலாக உள்ளவை. செயலக ஓம உப்பு, செங்கடிவாய் உப்பு, தவர்க்கு உப்பு என்பன.

---

குறிப்பு: படிக்காரம் உள்நாட்டுப் பொருள். சீனாக்காரம் இறக்குமதிப் பொருள் என்றும் பிரித்தறியலாம்.

1. உபந்தம், 2. அப்ரதான், 3. அங்கதன், 4. தயவு.

குறிப்பு: இப்பாடல் இடைச்செருகல் எனலாம். "தாபித்தோம் செந்தமிழ் செய்தார்" என்ற அடிகள். அடிப்படையாக உள்ளன.

## கரியுப்பின் பெயர்

தமிழ் பெறவே, பிர்ம்ம உப்பு, சத்துப் பென்றும் பேரு
தருவான, நான்மணியுப்பு, கணியுப்[1]பென்றும் பேரு
அமிழ் பெறவே, உரியுப்பு[2], நரியுப்பென்றும் பேரு
ஆதவழியுப்பென்றும்[3] அதற்குப் பேரு
தமிழ் பெறவே, நாதவடி, எரியுப் பென்றும் பேரு
நல்ல, பர முகவுப் பென்றும் பேரு
வளமான வஸ்துப் பென்றும் பேரு
வாதமைய, உப்பென்றும், கரியுப் பென்றும்
பேரே. (225)

(உரை:) பிரும்ம உப்பு, சத்துப்பு, நான்மணி உப்பு, கனியுப்பு,உரியுப்பு, ஆதவழியுப்பு, பரமுக உப்பு, நரியுப்பு, நாதவடி, எரியுப்பு, வஸ்துப்பு, வாதமைய உப்பு என்பன கரியுப்பின் பெயர்கள்.

## பூரணாதி உப்பு

கல்லான கருவியுப் பென்றும் பேரு
கருவாதி[4], உருவாதி உப்பென்றும் பேரு
அல்லான, சிவநாழி[5] உப்பென்றும் பேரு
யாக உப்பென்று பேரதற்குண்டாச்சு
வில்லான, வீர உப்பென்றும் பேரு
விளக்கினோம், சல்லான[6]உப்பென்றதற்குப் பேரு
புல்லான, புனலுப்பென்று இதற்குப் பேரு
பூரணாதி உப்பென்றிதற்குப் பெயரே. (226)

(உரை:) கருவி உப்பு, உருவாதி உப்பு, கருவாதி உப்பு, சிவநாழி உப்பு, வீர உப்பு, சல்லான உப்பு, புனலுப்பு என்று பூரணாதி உப்புக்குப் பெயர்களாகும்.

---

1. கனியுப்பு, 2. அரியுப்பு, 3. ஆகாத, 4. கருவந்த, 5. சிவநாதி, 6.சல்பாப.

குறிப்பு: 7, 8 வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

## சத்தியுப்பு

பூரமென்றும், பூதமென்றுமதற்குப் பேரு
புகழான தீரமென்றதற்குப் பேரு
ஓரமென்றும், பேரமென்று மதற்குப் பேரு
ஓகோகோ, திரிகோண உப்பென்றும் பேரு
காரமென்று, மதிலாதி உப்பென்றும் பேரு
கருவ நாதி உப்பென்று மதற்குப் பேரு
காரணைத்தாலே[1] இருந்தஎல்லா மெய்த்[2]
தும்பை, யென்றும்[3] அதீதப்பேர் சத்தியுப்பின்
பேரே. (227)

(உரை:) பூரம், பூதம், தீரம், ஓரம், பேரம் திரிகோண உப்பு, மதிலாதி உப்பு, கருவநாதி உப்பு, மெய்த்தும்பை, என்பன சத்தியுப்பின் பெயர்களே.

## சாதிலிங்கத்தின் பெயர்

அதீதமென்ற இருலிங்க வட்டி யென்றும் பேரு
அருளான விந்தூகமென்றும் பேரதற்கு
நதீத[4] மென்ற இருக்குமென்ற[5] தற்குப் பேரு
நாட்டமோம் சயிலந்தமென்றும் பேரு
அதீதமென்ற சாணமென்றதற்குப் பேரு
வளமான, பங்கியென்றதற்குப் பேரு
மதீதமென்ற யங்கிஎன்று மதற்குப் பேரு
மகத்தான பேரிதற்குச் சாதிலிங்கத்தின் பேரே. (228)

(உரை:) இருலிங்க வட்டி, விந்தூகம், இருக்கு, சயிலந்தம், சாணம், பங்கி, அங்கி, என்பன சாதிலிங்கத்தின் பெயர்களாகும்.

---

1. வெடி. 2. எய்தும், 3. கதம்பை, 4. ததீ. 5. விருக்கு.

### பாடாணத்தின் பெயர்

சாதியென்ற, எரிமருந்தென்றும் பேரு
சாம்பாங்கி என்றதற்குப் பேருண்டாச்சு
ஆதியென்ற, பிர்ம்ம விந்தென்றும் பேரு
அரக்கியென்று, அருளினோம் அற்கி[1]
யென்றும்பேரு
வாதியென்ற, வாதாக்கி[2] யென்றும் பேரு
வசனித்தோம், அமிர்த தங்கி[3] யென்றும் பேரு
நீதியென்ற,நீடுரமென்றும் பேரு
நிகரில்லாப் பாடாணம[4] தற்குப் பேரே. (229)

*(உரை:)* எரிமருந்து, சாம்பாங்கி, பிர்ம்மவிந்து, அரக்கி, அற்கி, வாதாக்கி, அமிர்த தங்கி, நீடுரம் என்பன பாடாணத்தின் பெயர்கள்.

### கவுரி பாடாணம்

மது[5]வென்று, மடக்கீத, நடக்கீதமென்றும் பேரு
மடவான கவுரி, தவகாளி[6] என்றும் பேரு
அதுவென்று, வானை மடையென்றும் பேரு
அக்காடித மென்றதற்கு அதீதப் பேரு
ததுவென்றும், நன்றாச்சி என்றும் பேரு
நாராயணிதம் என்றதற்குப் பேரு
நது [7]வென்ற தாரைச் சின்னிப்பாடாணமென்றும்
தாபித்தோம் கவுரி பாடாணத்தின் பேரே. (230)

*(உரை:)* மது, மடக்கீதம், நடக்கீதம், கவுரி, தவக்காளி, வானைமடை, அக்காடிதம், நது, நன்றாச்சி, நாராயணிதம், தாரை, சின்னி என்பன கவுரி பாடாணத்தின் பெயர்கள்.

---

1.மேற்கி, 2. வாதாக்கி, 3. அமுந்தங்கி, 4. பிரசான, 5. மரு, 6.தவாணி, 7. தது

குறிப்பு: 7, 8 வரிகள் முன்னதாக வந்தால் தான் அந்தாதி சரியாக இருக்கும்.

### பச்சைக் கற்பூரம் பெயர்கள்

கெந்தகமென்றும், கந்தமென்றும் அகில்
கம்பீரமென்றும்[1], கிரிராளி, மருவாளியென்றும்
பேரே
விந்தமென்றும், விராலி பச்சை[2] யென்றும் பேரு
விலாதுரூடி, கெளுத்திப் பச்சை யென்றும் பேரு
நத்தமென்றும் அவுரிப்பச்சை யென்றும் பேரு
சொன்னோம், புலத்தியனே, மகராசயோகி
சொந்த மென்ற இந்த எண்ணூறு சித்தர்க் கெல்லாம்
சூட்டினோம்[3], சூட்சமதாய், பச்சைக் கற்பூரத்தின்
பேரே. *(231)*

*(உரை:)* கந்தம், கெந்தகம், அகில், கம்பீரம், கிரிராளி, மருவாளி, விந்தம், விராலிப்பச்சை, விலாது ரூடி, கெளுத்திப் பச்சை, நத்தம், அவுரிப்பச்சை, என்பன பச்சைக் கற்பூரத்தின் பெயர்கள்.

### இரசக்கற்பூரம் பெயர்கள், 8சீர் விருத்தம்

பேரான, பூமலராம், இரசக்கற் பூரம்
பெரிதான மேதினியின் பிரம்மாவாகும்[4]
காரான, நீதியுடன் கற்ப மென்று
கருவான, கருவதனை யழிக்கும்[5] ராசன்
சீரான, மாமுனிவர் தேர்ந்த நூலாம்
சித்தர்களுக்கிந்நூல்தான் குருநூலாகும்
வாரான, அமிர்தமென்னும் வட நூலென்றும்
வசனித்தார், குருமுனிவர் வகுத்த வாறே. *(232)*

*(உரை:)* இரச கற்பூரத்தின் பெயர்கள், பிரம்மா, நீதியுடன் கற்பம், கருவதனை அழிக்கும் ராசன் என்பனவாகும்.

---

1. நிறக்கோ மரபென்றும், 2. விராலி, 3. தட்டினோம், 4.பிரம்மாகும் இராசன, 5. அளிக்கும்.

கலியான, நிகண்டெண்ணூறு
கருவிழியால் சகல முறை வருவாகக்கொண்று
மனஉறுதியினால்
அவியாதக் கனியது[1] போலோடியதோர்
திருநடனம் இறவாத[2] கல்வியது வறியனே,
வந்ததனால்
தலிய மூஉலகருக்குச்[3] சாதகமாய் காவியத்தில் முந்றி
பெறவேவாசி
முதற்காண்டம் யோகம் சொல்லுயிர் நிலைகள்
புவியிலுள்ள, மாணாக்கர் புகழ் பெறவே
வேண்டுமென்றால் தவியான, அப்பியாசம்
கண்டறியே. (233)

(உரை:) நிகண்டு 800 பாடல்களைக் கொண்டது. எல்லாவிதமான செய்முறைகளும் உருவாக, மனஉறுதியால் முதல் காண்டத்தில் யோகம் பற்றிச் சொல்லும் நிலைகள் காவியத்தில் வீடுபேறு அடைய, படிக்கவும். உலகிலுள்ள மாணவர்கள் புகழ் அடையவேண்டுமென்றால், சரப் பயிற்சியை காணுதல் வேண்டும்.

கண்டிடினும் பெரியோர்கள் கைமுறைக் காண வென்றால்
எண்திசையில், காமுகர்க்கு எய்துவகை
தோன்றிடினும்
பன்னிரண்டு தொகுப்பாண்டி, அக்காதத்தினால்
விண்டிடா, ஒருக்காலும் வீணர்க்கு பகைவரும் காண்
சண்டி உலகோர், புலையர் தாரணியில் வெகுமடையர்
கொண்டூமை, வருதல் போலக் கொஞ்சி உறவாடி
தொண்டிடில் ஊமன் அடர் தொழு வன்மை அறிவாவதுவே
கொண்ட இதுக்கால், சிதறாக் காட்சியரே. (234)

---

1. அக்கினி, 2. மயில்வாக, 3. மயில்வாக, 4. களம்.

குறிப்பு: 234ஆம் பாடல் சரியாக இல்லை.

## இரசக் கற்பூரம்

இதுவாதை ரசமென்று[1] நிரஞ்சன மாஎன்றும்
இவியாடம்[2], புலியாடமென்றும் பேரு
அதுவான, இரச கற்பூரமென்றும் பேரு
அது அதிலோக மருஞ்சாக[3] மென்றும் பேரு
வது வான, பொருமி நாதமென்றும் பேரு
வசனித்தோம், இந்த எண்ணூறு வாஞ்சை[4] பாரீர்
மதுவான, அமிர்முண்டது போலையா
வசனித்தோம், அதீத இரச கற்பூரத்தின் பேரே. (235)

(உரை:) வாதை இரசம், நிரஞ்சனமா, இவியாடம், புவியாடம், அதிலோக மருஞ்சாகம், பொருமிநாதம் என்பன ரச கற்பூரத்தின் பெயர்கள்.

## இரசத்தின் பெயர்

பூரமாம், சூதமென்றும், வேதமென்றும்[5] பேரு
புகழ் மங்கை வாலையென்றும் இதற்குப் பேரு
சாரமாம், வாத மென்று மிதற்குப் பேரு
சத்திரசமென்றும் இதற்குப் பேரு
காரமாம், நீச்ச தானியமென்றும் பேரு
கருவாளி என்றதற்குப் பேருண்டாச்சு
சூரமாம் அநாதியென்றும் பேரு
சொல்லிவிட்டோம், பூபதிக்கேற்ற ரசத்தின்
பேரே. (236)

(உரை:) சூதம், வேதம், மங்கை, வாலை, வாதம், சத்திரசம், நீச்சதாணி, கருவாளி, அநாதி என்பன ரசத்தின் பெயர்கள்.

---

1. வாதரசம், 2. இரவியடம், 3. மருஞ்றகம், 4. விஞ்சை, 5. வேதை.

### வாலை ரசத்தின் பெயர்

பதியான, வெள்ளானை, அத்தியென்றும் பேரு
பரபிரம்மவிந்தென்றும் இதற்குப் பேரு
சதியான, புருசோத்தமன் என்றும் பேரு
சைத்தன்யமென்றதற்கு அதீதப்பேரு
மதியான, அமிர்த விந்தென்றும் பேரு
மதிரவி யென்றும், சூரியன் விந்தென்றும்
விதியான[1], மாமறையோர் விந்தென்றும் பேரு
விளக்கினோம்வாலை இரசத்தினுடைய பேரே. *(237)*

*(உரை:)* வெள்ளானை, அத்தி, பரபிரும்ம விந்து, புருசோத்தமன், சைத்தன்யம், அமிர்தவிந்து, மதிரவி, சூரியன் விந்து, மாமறையோர் விந்து என்பன வாலை ரசத்தின் பெயர்கள்.

### சுத்த ரசத்தின் பெயர்

பேரான, நாதவிந்து ஒன்றாகச் சேர்ந்தால்
பலத்து, இந்த காயமது சுத்த ரசமாச்சு
வாரான, வாலையாம் சுத்தமுது உண்டால்
வச்சிரமென்றும், அதற்கு அதீதப்பேரு
தேரான, தேகவச்சிரமென்றும் பேரு
திருரசம், உரரசம், குருரசந்தானென்றும்
ஆரான வழலை ரசம்[2], பிண்ட அண்ட ரசந்தான்
அட்டதிசை ரசமென்றும், சுத்த ரசத்தின் பேரே. *(238)*

*(உரை:)* நாதவிந்து என்பது சேர்ந்தால் சுத்த இரசமாகும். வச்சிரம், தேகவச்சிரம், திருரசம், உரரசம், குருரசம், வழலை ரசம், பிண்ட அண்ட ரசம், அட்டதிசை ரசம் என்பன சுத்த ரசத்தின் பெயர்கள்.

---

1. கெதி, 2. பாலை ரசம்.

## விந்தின் பெயர்

இரசமான அனாதி[1]யென்றும், வரமென்றும் பேரு
நகரான, விந்துமாபதி[2] என்றும் பேரு
சமமான[3], சீகாரமென்று, நாபிசுரமென்றும்[4] பேரு
வாசவித்தென்று அதற்குப் பேரு
வசமான[5] வாசுகி யென்றும் பேரு
வாகார[6] மல்லய காரமாம், வன[7] வித்தென்றும்
கசமான, கழிவிந்தென்றும் பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோம், விந்தின்
பேரு. (239)

(உரை:) அனாதி, வரம், விந்து, மாபதி, சீகாரம், நாபி ரசம், வாசவித்து, வகாரம், மவுன விந்து என்பன விந்துவின் பெயர்கள்.

## நாதம் (சூதகம்)

விந்தான, நாதமென்றும் உகாரமென்றும் பேரு
விளக்கினோம், தேசியென்றும், கேசரியென்றும்
முத்தான மூலமென்றும், ஞானமென்றும் பேரு
மூதண்டக் கோதண்டமென்றும் பேரு
நந்தான, மகார சிங்கியென்றும் பேரு
மலை நாதமென்றதற்குப் பேருண்டாச்சு
அந்தான, இந்தப்படி, அறிந்தே சொன்னோம்
அறிவுள்ளோர், எண்ணாதம் அதீதப் பேரே. (240)

(உரை: விந்துநாதம், உகாரம், தேசி, கேசரி, முத்தான மூலம், ஞானம், மூதண்டம், கோதண்டம், மகாரசிங்கி, மலைநாதம், என்பன நாதத்தின் பெயர்களாகும்.

---

1. வனாதி, 2. மாதிபதி, 3. யசமான, 4. நாபிரசம், 5. ஆகாசவித்து, 6.வகாரமல்ல, 7. மவுன.

குறிப்பு: 240ம் பாடல் பொதுவாக நாதமென்பது கந்தகத்தைக் குறிக்கும்.

### தண்டின் பெயர்

நாதமென்றால், மனமுலர்ந்த மென்றும் பேரு
நாம், சொன்னோம், நாகரிகச் செம்பென்றும் பேரு
நாத[1] மென்றாலளவு, தடியளவு,தடியென்றும்
வசனித்தோம், மூலடித்தடி என்றும் பேரு
போத மென்ற, பொலிமதமென்றும் பேரு
புகழான, மன்மதவாளி என்றும் பேரு
பூதமென்ற, வாசிலிங்க மென்றும் பேரு
புகழான அதி ஆண்[2] மோகவிந்தத்தண்டுப்
பேரே. (241)

(உரை:) நாதம் என்றால் மனம், உலர்ந்தம், நாகரிகச் செம்பு, தடியளவு, தடி, மூலடித்தடி, பொலிதம், மன்மதவாளி, வாசி இலிங்கம், ஆண் மோக விந்து என்பன.

### யோனியின் பெயர்

தண்டான பரயோனி என்றும் பேரு
தார்வாசல் பீடமென்றதற்குப் பேரு
உண்டான பிண்டயோனிஎன்றும் பேரு
ஓர்வாசல் பூரண மென்றதற்குப் பேரு
எண்டான வீமையகிரி[3], மகாமுடி என்றும் பேரு
எல்லாவர்க்கும் பெருவழியா இந்தவாசல்
கண்டாயே பூதவழி நாதப் பெருவாசல் நால்மறைகளும்[4]
கருணாத யோனியதின் பேரே. (242)

(உரை:) பரயோனி, தார்வாசல் பீடம், பிண்ட யோனி, ஓர்வாசல், பூரணம், வீமையகிரி, மகாமுடி, பெருவழி, வாசல், பூதவழி, நாதப்பெருவாசல் என்பன யோனியின் பெயரே.

### பொன்னின் பெயர்

இனியான இயலென்று[5], இரணியமென்றும்
நிலையான ஆசையென்று மிதற்குப் பேரு
தனியான ஆடக மருந்து என்று பேரு
தருவான, வருணமென்ற[6]தற்குப் பேரு

1. வாத, 2. இரதிபாண, 3. வெண்மை, 4. உதித்த, 5. வயலென்று, 6.வருளம்.

வளியாடான அந்தமென்றதற்குப்[1]பேரு
வசனித்தோம், அரியென்று[2]மதற்குப் பேரு
துனியான, நாக ஒளி பவனி வரும போதம்
சொல்லிவிட்டோம், பொன்னிடப் பொருளின்
பேரே.(243)

*(உரை:)* தங்கத்தின் பெயர்கள் இயல், இரணியம் ஆசை, ஆடகமருந்து, வருணம், அத்தம், அரி, நாகஒளி, போதம் என்பன.

**தங்கத்தின் பெயர்**

பொருளான, பரியென்றும், திரியென்றும் பேரு
பூமல, குறமென்றதற்குப் பேரு
அருளான அன்னமென்றும்[3], சுன்னமென்றும் பேரு
அசுபதி என்பதற்கு அதீதப்பேரு
மருளான, சகாபரி[4]மாற்றென்றும் பேரு
மக்கனியென்றதற்கு அதீதப் பேரு
இருளான வீரமென்றதற்குப் பேரு
என்ன, சொல்வோம், அதன்பேரு தங்கத்தின்
பேரே.(244)

*(உரை:)* பரி, திரி, பூமலகுறம், அன்னம், சுன்னம், அசுபதி, சகாபரி, மக்கனி, இருளான வீரம் என்பன தங்கத்தின் பெயர்கள்.

---

1. வத்தம், 2. மதி, 3. வன்னம், 4.பெரி.

குறிப்பு: தங்கம், பொன் என்று தனித்தனியாகக் கூறப்பட்டதற்குக் காரணம், இயற்கையில் கிடைப்பதாலும், தரத்தைப் பற்றியதாலும், இருக்கலாம். தென் ஆப்ரிக்காவில் இயற்கையாகவே பொன் கிட்டும். பொன் கலந்துள்ள காரணத்தாலே பொன்னி என்று காவிரி ஆறு அழைக்கப்பட்டது. உலோகங்களைப் பற்றி அறிவு இருந்தபடியால், முன்னோர்கள் தனித்தனிப் பெயரிட்டழைத்தார்கள்.

## பூமியின் பெயர் (NORTH POLE)

தங்கமென்ற, பூமியென்றும், பூக்காலமென்றும்
தரணியென்றும், நீலமென்றும், சஞ்சாரமென்றும்
அங்கமென்ற, அத்தவர்க்குத்தமென்றும்1 பேரு
ஆரணி, காரணியென்றுமதற்குப்2 பேரு
சங்கமென்ற, சயிலாதிஎன்றும் பேரதற்கு
தராதரமென்ற, கண்டத்துக்கும் பூமிக்கும் பேரு
வங்க மென்ற வடபூமி, நிலத்தின் பேர்கள்
வசனித்தோம், சுந்தரமே, பூமியின் பேரே. *(245)*

*(உரை:)* தங்கம், பூமி, பூக்காலம், தரணி, நீலம், சஞ்சாரம், அங்கம், அத்தவர்க்கு உத்தம், ஆரணி, சங்கம், சயிலாதி என்பன வடபூமி, நிலத்தின் பெயர்கள்.

## தென்பூமியின் பெயர்(SOUTH POLE)

பூமியென்ற பூமி, இரசவாமகதியென்றும்
பூட்டினோம், யோகநிலை, சுவர்க்கமென்றும்3 பேரு
வாமியென்ற, சதனகாரி4 பூமியென்றும் பேரு
மாருத புவியென்றும், அதற்குப் பேரு
காமியென்ற, கருதிரச பூமி5யென்றும் பேரு
கனவாதி நிலமென்று5 மதற்குப் பேரு
தாமியென்ற, தார்பதமென்றும் பேரு
சன்னாச பூமி யென்றும் தென்பூமியின் பேரே. *(246)*

*(உரை:)* தென்பூமியின் பெயர்கள், சன்னாச பூமி தார்பதம், கனவாதி நிலம், கருதிரசபூமி, மாருத புவி, சதனகாரி, வாமி, சுவர்க்கம், யோகநிலை, வாமகதி.

---

1. வத்த வாக்குத்தம், 2. எங்கும், 3.சுவாதம், 4. சதன காரி, 5.கரிசபூமி, 6. நிலம்.

; குறிப்பு: பூமி சுழன்றுகொண்டே இருப்பதாக அறிவியல் கூறும். ஒட்டியே பூமிக்குச் சஞ்சாரம் என நம் முன்னோர்கள் பெயர் சூட்டி உள்ளார்கள்.

## பூமியின் பெயர் (EARTH)

*தெனமான*[1], *பீத நிலக்காத நிலமென்றும்*
*தெளிவான, கருவாண்ட பூமியென்றும் பேரு*
*வளமான கிரிவார பூமியென்றும் பேரு*
*வாச சஞ்சீவி பூமி யென்றும் பேரு*
*கனமான, பிலபூமி*[2] *நிலமென்றும் பேரு*
*கத சீரரு*[3] *பூமி யென்றும் பேரு*
*மனமான முரட*[4] *நிலமென்றும் பேரு*
*மகத்தான் துருவடு*[5] *மண்ணென்று பூமியின்*
*பேரே. (247)*

(உரை:) பீதநிலம், காதநிலம், கருவாண்ட பூமி, கிரிசாரம், வாசசஞ்சீவி, கதசீரருபூமி, முரடநிலம், துருவடு என்பன நிலத்தின் பெயர்கள்.

### நால்திசை பூமியின் பெயர்கள்

*மண்ணான, இலட்சண அதிபதி தானென்றும்*
*மறைநில மண்ணென்றும், அன்ன மென்றும் பேரு*
*கண்ணான வெளிக்களிமண், அழிமண்ணாகும்*
*கசித்த, நிலமேக நிலமென்றும் பேரு*
*எண்ணான*[6], *உறுத்த மண்ணென்றும் பேரு*
*உறையபடுநிலபூமி யென்றும் பேரு*
*புண்ணான, காய மண்ணு நிலமென்றும் பேரு*
*போற்றினோம், நூல் திசைமண், கீழ் பூமியின்*
*பெயரே. (248)*

(உரை:) நான்கு திசைகளையும் உடைய நிலத்தின் பெயர். இலட்சண அதிபதி, மறைநிலமண் அன்னம், வெளிக்களிமண், அழிமண், நிலம், மேகநிலம், உறுத்தமண், உறைபடு நிலம், பூமி, காயமண் என்பனவாகும். நால்திசை பூமி என்று கூறும்போது, நிலத்திலுள்ள பாலைவனம்,

---

1. தினமான, 2. கபிலபூமி, 3. தகைப்பாகு, 4. முராட, 5. திருவடி, 6. உண்ணான.

ஆறுகள், கடல் என்பன எல்லாமும் அடங்கிய அண்டத்தைக் குறிக்கும். அன்னம் என்ற சொல் நிலத்திலும், நீரிலும் உண்டான உயிர்வகைகள் பயிர்வகைகள் மனிதர்களும், ஏனைய உயிரினங்களும் உண்பதற்கான சூழ்நிலையைத் தருவதால் ஏற்பட்டது. ஓரிடத்தில் அன்னமும், அதிலுலகு நிற்கும் என்பது சித்தர் பாடல்.

## தென்பூமி மண் நிறப்பெயர் (SOIL)

பூமென்று, புகலமென்றும் திகல்[1] மென்றும் பேரு
பொறிவாசை, நரித்தாசை என்றும் பேரு
காமென்ற, தாமங்கமென்றும் பேரு
கருதுவோம், கமஞ்ச மென்றதற்குப் பேரு
நாமென்ற நாலாசை, யோகாநீதமென்றும்
நவிலு குரு, வேதாந்த மென்றும் பேரு
சேமமென்ற, சனக்கல்வியென்றும் பேரு
செந்தமிழென்ற வனம்[2]தென்பூமி, மண்நிறத்தின்
பேரே.(249)

(உரை:) புகலம், திகிலம், பொறிவாசை, நரித்தாசை, கமஞ்சம், நாலாசை, யோககீதம் குரு, வேதாந்தம், சனக்கல்வி வனம், என்பன தென்பூமியின் மண் நிறப் பெயர்களாகும்.

## வடபூமியின் மண் நிறத்தின் பெயர் (SOIL)

பூமியாம், கருமணந்த மென்றும்[3]பேரு
பூ வாத மாதியென்றதற்குப் பேரு
வேமியாம், வேத மண், பாதமண்ணென்றும்
விளக்கினோம், விதிவர்ண மென்றும்[4]பேரு

---

1. மதி, 2. செந்தமிழேன் நலரான, 3. கருமதந்திரம், 4. பீதா வர்ணம.

குறிப்பு: இப்பாடல் அச்சுநூலில் 250 எண்ணில் உள்ளது. அந்ததாதியில் அமையவில்லை. எனவே பாடல் 250க்கு வடபூமி என்ற தலைப்பு மாற்றப்பட்டுள்ளது.

ஆழியாம்[1], ஆங்காரமென்றும் பேரு
அல்லாதிவர்ணம் மென்று மதற்குப் பேரு
நேமியாம், நெசவக[2]மென்பதற்குப் பேரு
நிறைஞ்சன மாநிறையென்றும் வடபூமி மண்
நிறத்தின் பேரே. (250)

(உரை:) கருமணந்தம், பூவாதமாதி, வேமி, வேதமண், பாதமண், விதவர்ணம், ஆழி, ஆங்காரம், அல்லாதி வர்ணம், நெசவகம், நிறைஞ்சன மாநிறை என்பன. வடபூமி மண் நிறப்பெயர்கள்.

### மேல் பூமி மண் நிறப்பெயர்கள்

நிறமா, நீத செம்மண்ணென்றும் பேரு
நிகர மகுடம் என்று மதற்குப் பேரு
வறமா, நல்லமதமென்றும்[3], வரடராம, துறு
மேலாய் மகத்துவ மென்றும் பேரு
சரமான சாதரிக மென்றும் பேரு[4]
சலவு, சாகாத மென்று மதற்குப் பேரு
மறமான, மறச்செம்பரமென்றும் பேரு
மகத்தான்[5] மண்ணிறத்தின் பேரே. (251)

(உரை:) செம்மண், நிகரமறாடகம், நல்லமதம், மகத்துவம், சாதரிகம், சலவு, சாகாதம், மறச்செம்பரம் என்பன. மேல் பூமியின் மண் நிறப்பெயர்களாகும்.

### கீழ்பூமி மண் நிறப்பெயர்கள்

நிறஞ்சனமாம், விகிதம்[6], சம்பு, கைத்தஞ்சமென்று
நிறமோகமது, அதஞ்சாவென்றும்[7] பேரு
அறஞ்சனமாம், அதலோக ரவி, ராசியண்ட மென்றும்
அருளினோம், அங்கல8 மதமென்றும் பேரு

---

1. ஆதி, 2. தேசலகம், 3. உறமான வல்ல, 4. மறசேரும் பெரு, 5. மேல், 6 விதம், 7. துரஞ்சால், 8. கல்.

குறிப்பு: சரசுவதி மகால் சுவடியில் பெரும்பூவாதமாகி என்று உள்ளது.

வறஞ்சனமாம் வாதை, புருவென்றும் பேரு
வசனித்தோம், முரலாவென்றும் பேரு
கறஞ்சனமாம், கந்து, கஞ்சனென்றும் பேரு
கருவான, கீழ்பூமி மண் நிறத்தின் பேரே. (252)

(உரை:) நிரஞ்சனம், விகிதம், சம்பு, தஞ்சம், மோக மது, அதலோகம், இரவி, இராசி, அண்டம், கல்மதம், வாதை, புரு, மூரல், கந்து கஞ்சன் என்பன கீழ் பூமி மண் நிறத்தின் பெயர்கள்.

### வடபூமித் தண்ணீரின் பெயர்கள்

கீழான கங்கை யெல்லாம், சங்கநீரென்றும்[1]
கேணி, மா, பாறை நீரென்றும் பேரு
வாழான, வாதசல, மோதசலமென்றும்
வளமான காசிவேர், நங்கை சலமென்றும்
மாழான, பழுவெட்டிச் சலமென்றும் பேரு
மாறாக[2], நீரென்று மதற்குப் பேரு
தாழான, துந்து நீரென்றும் பேரு
துருவான, வடபூமி சலத்தின் பேரே. (253)

(உரை:) கங்கை, சங்கநீர், கேணி, மா, பாறை நீர், வாதசலம், மோதசலம், காசிவேர், நங்கை சலம், புழுவெட்டிச்சலம் என்பன வடபூமி சலத்தின் பெயர்கள்.

### தென்பூமித் தண்ணீரின் பெயர்கள்

சலமானநதி, அட்சயமென்றும் பேரு
சாமநீர், பூமிநீர், மாமநீரென்றும் பேரு
வலமான, வசந்த நீர், உகந்த[3], நீரென்றும்
வசனித்தோம், லட்சண நீரென்றும் பேரு
குலமான குருடநீர், வருடநீரென்றும்
கூறினோம், தட்சண நீரென்றும் பேரு
அலமான, வாமன சலமென்றும் பேரு
அருளினோம், தென்பூமி சலமதுவின் பேரே. (254)

---

1. சனி, 2. இராசாசு, 3. உகநீர்,

*(உரை:)* தென்பூமியிலுள்ள நீரின் பெயர்கள், சலமான நதி, அட்சயம், சாமநீர், பூமநீர், மாமநீர், வசந்தநீர், உகந்தநீர், இலட்சண நீர், குருடநீர், வருடநீர், தட்சண நீர், வாமன சலம் என்பனவாகும்.

**மேல்பூமி சலம்**

அருளினோமின்,[1] சலமான சலமென்றும் பேரு
மடலான வேர், ஆதிசலமென்றும் பேரு
அருளினோம்,[2] நன் நாட்டு சலமென்றும் பேரு
நாலாதி சீலமென்று, வாச்சலமென்றும்
அருளினோம்,[3] கம்பீர சலமென்றும் பேரு
நாவாடைச் சாலமென்று[4] மதற்குப் பேரு
அருளினோம், வாருதி சலமென்றும் பேரு
வசனித்தோம், மேல்பூமி சலமதுவின் பேரே. *(255)*

*(உரை:)* சலமான சலம், மடலானவேர், ஆதிசலம், நாட்டு சலம், நாலாதி சீலம், வாச்சலம், கம்பீர சலம் என்பன மேல்பூமி நீரின் பெயர்களாகும்.

**கீழ் பூமி சலத்தின் பெயர்கள் (Under Water)**

வினமான,[5] விராணி[6]சலமென்றும் பேரு
விமலசலம், குமுளசலம், நமனசலமென்றும் பேரு
கனமான, கிரிசலமென்றும் பேரிதற்கு
கிராண, இதுரசல,[7] பேரம[8]சலமென்றும்
மினமான, இதுரசல, பேரம8 சலமென்றும்
மேலாதி, வாலி சலமென்றும் பேரு
வளமான, வாலிசலமென்றும் பேரு
அருளினோம், கீழ்பூமி சலத்தின் பேரே. *(256)*

*(உரை:)* விராணி, விமல சலம், கிரிசலம், கிராண சலம், மதுர சலம், பிரும்ம சலம், மேலாதி சலம், வாவிசலம் என்பன, கீழ்பூமியின் நீரின் பெயர்கள்.

---

1. மீன, 2. மருளினோம், 3. மருனோம், 4. சலம், 5. விற, 6. விராளி, 7.மதுர, 8.பிரும்ம.

### ஒலியின் (சத்தம்) பெயர்

தீனமென்ற கவுனசத்தி, ஆகாச மென்றும்
திரேகம், ஆண் சத்தியென்றும் பேரு
ஆணமென்ற பாசத்த மாறாதித்த[1] கணந்தான்
மேணை[2] மென்று, சத்த குணமென்றும் பேரு
மேருவான, வருவாலுக மென்றும் பேரு[3]
காணமென்றவுடன், சத்த அபான, சத்தமென்றும்
கருணை பெறச் சொல்லிவிட்டோம், சத்தத்தின் பேரே. *(257)*

*(உரை:)* கவுன சத்தி, ஆகாசம், திரேகம், ஆண் சத்தி, பாசத்தம், மாதிறாந்தக்கணம், ஆதி சத்தம், உதயம், சத்த குணம், மேரு, வறுவாலுகம் என்பன ஒலியின் பெயர்கள்.

### வானத்தின் பெயர்கள்

சத்தான சாரி, வாமம், நீர்மடந்தானென்றும்
சாறடி, லோகவிரிஞ்சமென்றும் பேரு
வித்தான, சதாசிவ மென்றும் பேரு
விகுரானந்த, மா மாங்கமென்றும் பேரு
புத்தான, புல்லிவானமென்றும் பேரு
பூசு, கடோடாசமென்றும் அதற்குப் பேரு
முத்தான, சதிராச மென்றும் பேரு
மூதண்ட, சரதங்கரம் ஆகாசத்தின் பேரே. *(258)*

*(உரை:)* சத்தானசாரி, வாமம், நீர் மடம், சாறடி, உலோக விரிஞ்சம், சதாசிவம், மாமாங்கம், விகுரானந்தம், புல்லிவானம், கடோசம், சதிராசம், சரதங்கரம் என்பன வானத்தின் பெயர்கள்.

---

1. மாதிநாந்த, 2. மேன் மன மென்றும், 3.மேலான வார்க்கம்,

குறிப்பு: 258ம் பாடல் வரிகள் 5, 6, 7, 8 என்பன, சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

## மேகம்

ஆகாயபானமென்றும்[1], மது பானமென்றும்
அன்னூறு யோசனை[2] யென்றதற்குப் பேரு
ஆகாயச் சவால், மேகவன்[3] மேகமென்றும் பேரு
மஞ்சள் மேகம், செம்மேக மென்றும் பேரு
பாகாசமென்ற பனுமேக[4] மெனும் பேரு
பனிமேகம், கருமேகமென்றும் பேரு
சேகசானென்ற[5], செகமிருக மேக மென்றும் பேரு
செப்பினோம், ரவயிதனால், மேகத்தின் பேரே. *(259)*

*(உரை:)* ஆகாய பானம், மதுபானம், அன்னூறு யோசனை, ஆகாயச்சவால், மேகவள மேகம், மஞ்சள் மேகம், செம்மேகம், பனிமேகம், கருமேகம், சேகசான், செகமிருக மேகம் என்பன மேகத்தின் பெயர்கள்.

பேரான, தட்சணா மா முனிவனோதும்
பீசாட்சாமாலை பிசகாதொரு நாளும்
வாரான, செந்தமிழால் ஓது மொழி தவறா
மாமுனிவன் சொன்ன, எண்ணூறு வாசமலர் வீசும்
காரான முதற்காண்டம் கருக்கிடையாய் காணும்
கருவான, விண்[6]காண்டக் காட்சிபெறு இந்நூல்
வேரான, பாடலிது[7]நூற்றி முப்பதுக்குள்
விளக்கினோம், சகலக் கலைஞானப் பூரணமே. *(260)*

பூரணமாய், முன்னோர்கள் சொன்ன மொழிக் கெல்லாம்
பூமலரின் வாசம் போல், புகட்டினோம் நாமும்
வாரணமாய், பதினாறு இலட்சம்[8]பாடல்
வசனித்தோம், அதில் மறைந்த சூட்சமெல்லாம்
விண்டோம், காரணமாய் இந்த எண்ணூறு கட்சி
முதலாய் ஈந்தால்[9], கருவாளிப் புலவனென்று
காய்வானாவார்

1. பாணம், 2. யோசனை, 3. மேகவன, 4. பானு, 5. செகசர, 6. இருகாண்ட,
7. பாலிது, 8. கலி, 9 முதலாய் நீ.

ஆரணமா இந்த நூலிரண்டாவது காண்டம்
ஆதி முதல் அந்தத்தோட, அருளினோம்
முற்றே. *(261)*

*(உரை:)* தட்சணா முனிவன் ஓதும், சொல்மாலை ஒரு நாளும், தவறாது, செந்தமிழால் அவரின் ஓதும் சொற்கள் என்றும் பிழையாகாது. நடக்கும். இம்முனிவன் கூறிய 800 பாடல்கள், மணமிக்க பூமாலையாக மணம் வீசும். முதல்காண்டத்தைத் தெளிவாகக் காணமுடியும். இரண்டாம் காண்டத்தை இந்நூலில் 130 பாடல்களால் விளக்கியுள்ளேன்.

முன்னோர்கள், முழுமையுடன் கூறியவற்றை எல்லாம், மலரின் மணம் போல் எடுத்துரைத்தோம். பதினாறு இலட்சம் பாடல்களின் நுணுக்கங்கள் யாவையும் பேசினோம். எண்ணூறு பாடல்களில் கண்டோம். அடிப்படையை அறிந்தால், கருவாளிப் புலவன் என்று பகைமை பாராட்டுவார். அழகுமிக்க நகையைப் போல, முதலும், முடிவும், இரண்டாம் காண்டத்தில், மக்களுக்குக் கருணையுடன் முழுவதும் இயற்றினோம்.

## மூன்றாம் காண்டம்

### காப்புச் செய்யுள்

ஆதிமுதலவர் அருளந்தம் போற்றி
அம்பிகா, சத்தியடிக் கமலம் போற்றி
சோதி, நிரஞ்சனமானக் குண்டலியே போற்றி
சுழி முனையில், கருவறிந்தோம், பிரமன் போற்றி
சாதி, பலவகை குறித்தோன், பாதம் போற்றி
சருவாணி, உமையாள், சரசுவதியே போற்றி
வாதியா, மா முனிவனோது, மறை போற்றி
மகத்தான, வாதகாவியங் காப்பாமே. *(262)*

வாதமென்ற, நூல்களெல்லாம் குருநூல்
கருதியிந்தெண்ணூறும், நிகண்டாய்படி
பாதை வழியாய் பரிபாசையெல்லாம்
பகல் போல, ஒவ்வொன்றாய் ஆய்ந்தாய்ந்து
பூதமெனு வனபூதரிலையே கண்டு
போதறிவாய், வாசியொட்டி அறிவினாலே
காத வழி, போகாமல் கருத்தோடாமல்
காலறிந்து, நிலையில் நின்றுக் கருதினோமே. *(263)*

ஓமென்ற, பூரணத்தாலுலக மாச்சு
ஓகோகோ, பிருதுவியால், பிண்டமாச்சு
வேதமென்ற, நிராமயத்தால், தேயுவாச்சு
விளங்குமே, வாசியது அதனாலே உண்டாச்சு
வாதமென்ற வாசியதால், வாயுவுண்டாச்சு
மகத்தான வாசியதால், சத்தமாச்சு
பூதமென்ற போதமதை யறிந்தோராகிப்
பூபதிபோல், ராசயோகம் பெறுவர் தாமே. *(264)*

*(உரை:)* இரசவாத நூல்களுக்கு பஞ்சகாவிய நிகண்டு *800*. குருநூல், இருளை நீக்கும் பகல் போல, பரிபாசையாம் இருளை நீக்கும். ஐம்பூதங்களை ஆய்ந்து, இயல்புகளைக் கண்டு, அறிவால், பத்து மைல் செல்லாமல், காற்றின் நிலையை அறிந்துள்ளோம்.

ஓம் என்ற ஒலியால் உலகம் தோன்றியது. நிலத்தால் உயிரினங்கள் பிறந்தன. மறைவான, நோயின்மையால் தீ உண்டானது. இரசவாதமென்ற வேறுபாட்டால் காற்றுண்டானது. புகழ்பெற்ற காற்றால் ஒலியுண்டானது. பூதம் என்ற அறிவால், அரசன் போல நல்வாய்ப்பை அடையலாம்.

## பெண்களின் பிரிவுகள்

### (அத்தினி, சங்கினி, சித்தினி, பத்மினி)

*பெறுவதற்குப் பெண்ணினுட சாதி நாலும்*
*பிரித்து நாலாம், ஒவ்வொன்றாய்ப் பேசக்கேளு*
*அறுவதற்கு, அத்தினிதான் பிரும்ம குலமாகும்*
*அடவான, சங்கினிதான் சத்திரிய குலமாகும்*
*அறுவதற்கு வைசியத்தின் சித்தினி தானாகும்*
*வசனித்தோம், பத்மினி தான் சூத்திர குலமாகும்*
*நறுவதற்கு, நால்சாதி குலமே சொன்னோம்*
*நவிலுவோம், நாவினுட வர்ணங்காணே. (265)*

*(உரை:) பெண்களை உடலமைப்பாலும், அவர்களின் நிறத்தாலும் நான்கு வகைகளாகப் பிரித்தோம். அத்தினி, சங்கினி, சித்தினி, பத்மினி என்று கூறலாம். முதல் வகை பெண் அத்தினி, இரண்டாம் வகை சங்கினி; மூன்றாம் வகை சித்தினி, நான்காம் வகை பத்மினி.*

### நால்வகையான பெண்களின் வண்ணங்கள்

*காணப்பா, புலத்தியனே, பெண் சாதி நாலும்*
*கருவறிந்துச் சொல்லுகிறோம்[1] கேளிர்*
*பேணப்பா, அத்தினி பெண் தான் கேளும்*
*பேணிப்பார், வெளுமை வர்ணபேதமில்லை*
*நாணப்பா, சங்கினிதானும் மஞ்சள் நிறமாகும்*
*நலமான, சித்தினிதான் செம்மை நிறமாகும்*
*ஆணப்பா, பத்மினி தான் கறுப்பு வர்ணமாகும்[2]*
*அருளினோம், நால்சாதி வர்ணமிதாமே. (266)*

*(உரை:) பெண்களின் வகைகளை அறிந்து கூறுகின்றேன். அத்தினிப்பெண், வெள்ளைநிறமாய் இருப்பாள். சங்கினி மஞ்சள் நிறமுடன் இருப்பாள். சித்தினிப்பெண்,*

1. வர்ணம், 2. நிறமாகும்.

சிவந்த நிறமுடன் இருப்பாள். பத்மினி கறுப்பு நிறமுடன் இருப்பாள்.

### அத்தினி வகைப் பெண்ணின் பெயர்

வர்ணமாம், புட்பரதி[1], புட்பகரணி யென்றும்
வசனித்தோம், மாது, பூமாது என்றும்
ஆரணமாம், மயப் பிசாங்கி[2] யென்றும் பேரு
அருளினோம், மதுமடந்தை யென்றும் பேரு
சொர்ணமா, மாதி, ரதியென்றும் பேரு
சோதிரவி மாலியென்று[3] மதற்குப் பேரு
கர்ணமாம், புருசாதி யென்றும் பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோம், அத்தினியின்
பேரே. *(267)*

*(உரை:)* அத்தினி வகைப் பெண்ணின் பெயர்கள் புட்பரதி, புட்ப கரணி, மாது, பூமாது, மயப்பிசாங்கி, மது மடந்தை, மாதிரதி, சோதிரவி, மாலி, புருசாதி.

### சித்தினி வகைப் பெண்ணின் பெயர்கள்

சங்கை[4]யென்ற சத்தி [5]யென்றும் பேரு
சாதவல்லி, மாதவல்லியென்றும் பேரு
அங்கமென்ற, அறிவாணி[6] யென்றும் பேரு
அத்தி[7] புருசரத்தின மென்றுமதற்குப் பேரு
நங்கமென்ற, நலமல்லியென்றும் பேரு
நளின கங்கை என்றதற்குப் பேருண்டாச்சு
புங்கமென்ற, பூதக்கன்னிமாரென்றும் பேரு
புகழாகச் சொல்லி விட்டோம், சித்தினியின்
பேரே. *(268)*

*(உரை:)* சித்தினி வகைப் பெண்ணின் பெயர்கள் சங்கை, சாதவல்லி, மாதவல்லி, அறிவாணி, அத்தி,

---

1. புட்ஜாதி, 2. அபிசாங்கி, 3. மாதிரதி, 4. கை, 5. தசமி, 6. அரி, 7. அல்லி.

புருசரத்தினம், நவவல்லி, நளின கங்கை, பூதக்கன்னிமார் என்பனவாகும்.

**பத்மினி வகைப் பெண்களின் பெயர்கள்**

புகழான சித்தினியா நந்தியென்றும் பேரு
பேர்த்தமையா, சாகிரதியென்றும் பேரு
அகழான, வபடங்கி, ஏமதங்கி[1] யென்றும் பேரு
அடவான, சீலரத்தினமென்றும் பேரு
நகழான, நராசி[2] யென்றும் பேரு
நல்லிட்டா மாசியென்றுமதற்குப் பேரு
துகழான, தொண்டத்தி மண்டத்தியென்றும்
சூட்டினோம், சூட்சமதாய் பத்மினியின்
பேரே[3]. *(269)*

*(உரை:)* ஆநந்தி, சாகிரதி, வபடங்கி, ஏமதங்கி, சீலரத்தினம், நராசி, மாசி, தொண்டத்தி, மண்டத்தி என்பன பத்மினி வகைப் பெண்களின் பெயர்களாகும்.

பாரப்பா, சுந்தரமே, புலத்தியரே கேளு
பாடினோம் இந்நூல்போல் பாரினிலுண்டோ ?
ஆரப்பா, இந்நூலை அறியார் மாண்பர்,
அறிவறியார், பரிபாசை யாருங் காணார்
நேரப்பா, நாம் சொன்னோ இந்த நூல் நிகருண்டோ ?
இந்நூலும், எதிர் நூலுண்டோ ?[4]
காரப்பா, காவியமாம் நிகண்டெண்ணூறு தான்
கருவறிவோர்க்கு, இந்நூல் குரு நூலாமே. *(270)*

குருவான, குருவறியார் குருட்டு மாண்பர்
குணமறியார், பிணம்[5]போலத் திரிவாரையா
அருவான, பதியறியார் யாருங்காணார்
ஆதியென்றும்,அந்தமென்று மிரண்டைக் காணார்

---

1.மதங்கி, 2. நாராசி, 3. பேர்பாரே, 4. விண்ணுலகக் கதியுண்டோ ? 5.பின்.

திருவான்[1]கருவறியார், உருவும் காணார்
சிதம்பரத்தின் நடன சபை பவனி காணார்
மருவான, பூமலரின் வாசம்போல
வசனித்தோம், கடைக்காண்டம் பிராணயம்
பாரே.(271)

(உரை:) புலத்தியரே, கேளும், இந்நூல் போல உலகில் நிகண்டு உள்ளதா? மாண்புள்ளவர்கள் இந்த நிகண்டை படிப்பார்கள். மறைபொருளான, பரிபாசை அறிவில்லாத யாரும் படிக்கமாட்டார்கள். காவியமான ஐந்து நூல்களுக்கு, இது 800 பாடல்களைக்கொண்ட நிகண்டு தலையானது.

ஆசிரியர்களை அறியமாட்டார்கள். இயல்புகளை உணரமாட்டார்கள். பிணம் போலத் திரிவார்கள், தலைவனை அறியமாட்டார்கள். முதலும், முடிவுமான பொருளை யாரும் அறியவில்லை. செல்வமான அடிப்படையைக் காண மாட்டார்கள். இதன் உருவத்தையும் காணமாட்டார்கள். தில்லைக் கோவிலில் உள்ள கூத்தாடும் பெருமானின் விழாவான ஆனித் திருமஞ்சனம் மார்கழி மாத ஆருத்திரா தரிசனத்தையும் கண்குளிரப் பார்க்கமாட்டார்கள். மலரின் மணம் போல, கடைக் காண்டத்தை இயற்றினோம்.

## நூல் விவரமறிய சவுமியம்

காண்டமென்று வசனித்தக்[2] காண்டம் நூலில்
கனயோகம், நிலை சிந்திக் காண்பீராகில்
காண்டமாம், சவுமியத்தின் சூத்திரமெண்ணூறு
அறிந்திடுவாய், எண்ணூறு பாடல் மேலே
நாண்டமாம், பலதிரட்டு எண்ணூறுக்குள்
நாட்டினோம், விந்து பலம் நன்றாய் காணும்
வாண்டமாம், இது நூற்று அம்பதுக்குள்[3]
வசனித்தோம், இரசிதபற்பம் வாழுவோர்க்கே. (272)

1. தரு, 2. அசுவினிதான், 3. இருநூற்று அம்பதுக்குள்,

குறிப்பு: 270, 271 ஆகிய பாடல்கள் நூலுடன் தொடர்பற்றவைகளாக உள்ளன. நூலின் ஓட்டத்தைத் தடை செய்கின்றன.

*வாழவென்றால், ஞானகாவியத்தைப் பார்த்து*
*மகத்தான, சிவஞானதீட்சையேது*
*ஆழ*[1] *வென்றால், வேதாந்தத் தெண்ணூறு பார்*
*அனுதினமென்ற, கருத்தோன்று என்நூல் தன்னில்*
*ஊழ*[2] *லென்றால் மாந்திரிகம், ஆயிரத்தைப் பாரு*
*உறுதிபெற, சித்தியெல்லா முடனே காணும்*
*மாழ*[3]*வென்ற, இலட்சண மாயிரத்தை ப்பாரு*
*அதன் கோர்வை, முச்சூடுமறிந்து பாரே.* **(273)**

(உரை: காண்டம் நான்கில், கனயோகம், எட்டு வகையான சித்துகள்,என்பன அறியலாம். அழகான, அடிப்படையான பாடல்கள் நிகண்டு 800ஐ அறியவும். பலவகைகளான கலைகளை 800 பாடல்களில் திரட்டிக் கூறியுள்ளோம். இரசத்தின் வன்மையை நன்கு நிலை நாட்டியுள்ளோம். 150 பாடல்களில் உலகில் வாழும் மக்களுக்கு இரச பற்பத்தைச் செய்வது பற்றி உரைத்தோம்.

ஞான காவியத்தைப் படித்து, தூய்மை செய்து, சிவஞானத்தை ஓதவும். வேதாந்தம் 800ல் பாடல்களை படிக்கவும். படித்தால், என்னுடைய நூலின், சாரத்தை அறியலாம். மாந்திரிக காவியம் 1000த்தைப் படிக்கவும். உறுதியுடன் வெற்றி கிடைக்கும். இலட்சண காவியம் 1000த்தைப் படிக்கவும்.தொகுப்பாக முழுவதையும் அறிந்து கொள்ளவும்.

*அறிந்ததுபார்,வைத்திய காவியத்தில் சொன்ன*
*மகத்துவந்தான், மெத்தவுண்டு, உடல் நோய்க்கூறு*
*அறிந்துபார்,பண்டிதத்தின் துறை சொன்னோம்*
*வசனித்தோம், அதன்கோர்வை, வளமாய்ப் பாரு*

---

1. ஆள, 2. ஊன, 3. மான

குறிப்பு: பாடல் 273ல் அகத்தியரின் ஐந்து நூல்களான ஞான காவியம், மாந்திரிக காவியம், இலட்சண காவியம் என்பன கூறப்படுகின்றன. வேதாந்தம் 800 என்ற நூலும் கூறப்படுகிறது.

அறிந்துபார், அறுபத்து கலைஞானம்
அருளினோம், மகாசாலம், அறுபத்து நாலும்
அறிந்துபார், சவுமியத்தில் கருவைப்பாரு
கடைத்தேறப் பஞ்சகாவியத்தைப் பாரே. (274)

*(உரை:)* வைத்திய காவியம் 1000இல் உள்ள உடல் நோய்களின் தன்மைகளைப் பற்றி அறியலாம். மிகவும் முதன்மையான புகழ்பெறலாம். பல்வேறு மருத்துவத்தின் பிரிவுகளை வைத்தியகாவியத்தில் கூறினோம். செழிப்புடன், தொடர்ந்து, கோவையாக பாடினோம். இதில் 64 வகைகளான கலைகளைப் பற்றி அருளியுள்ளோம். சவுமிய சாகர நூலில் மூலப் பொருளைப் பார்க்கவும். மருத்துவத்தில், பஞ்ச காவியங்களைப் பார்க்கவும்.

**வீரத்தின் பெயர்**

பார்க்கவென்றால், அருளியென்றும்,முருளி[1]யென்றும் பேரு
பழுவீரமென்பதற்குப் பேருண்டாச்சு
ஆர்க்க வென்றால், ஆனை, வீரமய சுத்தானென்று
அருளினோம், புதிராக மென்றும் பேரு
நார்க்கவென்றால், நாவத்தாறு என்றும் பேரு
நல்லபசு வீரமென்றதற்குப் பேரு
ஏர்க்கவென்றால், ஏய்வக்கமென்றும் பேரு
இயம்பினோம் அதீதப்பேர் வீரத்தின் பேரே. (275)

*(உரை:)* அருளி, முருளி, பழுவீரம், ஆனைவீரம், புதிராகம், நாவத்தாறு, பசுவீரம், ஏய்வக்கம் என்பன வீரத்தின் பெயர்கள்.

---

குறிப்பு: பாடல் 274, பஞ்சகாவியங்களில் 4 மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது. வாதகாவியம் விடப்பட்டுள்ளது. ஐந்தாவது காவியம் எது என்ற பாடல் விடப்பட்டுள்ளது.

1. உருளி

### சவ்வீரத்தின் பெயர்

வீரமென்றகாரு, சிதம்மெல்லாமென்று
மட்டமடா1, என்றதற்கும் பேருண்டாச்சு
ஆரமென்ற, வத்தி2 வீரமென்றதற்குப் பேரு
அடவான, சிறியான3, வீரமென்றும் பேரு
பாரமென்ற, பலவீர4 மென்றும் பேரு
பசுபதியின் வீரமென்றதற்குப் பேரு
காரமென்றும், பலபேரு சொன்னோமே
நன்றாகச் சவ்வீரத்தின் பேரே. (276)

(உரை:) சவ்வீரத்தின் பெயர்கள், மட்டம், சிதம், வத்தி, வீரம், சிறியானை, பாரவீரம், பசுபதியின் வீரம், காரம் என்பன.

### கெந்தி (கந்தகத்தின்) பெயர்

பேரென்ற, கேடரி5 யென்றும், கவுன மென்றும் பேரு
பேரான, பிரோணித6 மென்றும் பேரு
ஆரென்ற, சிறுமான வித்தென்றும் பேர்
அசுவியென்றும், அறு சோகமென்றஅதீதப்பேரு
நானென்ற, நவகந்தியென்றும் பேரு
நாற்பாச கெந்தியென்று, அதற்குப் பேரு
ஊனென்ற, நாத பீசகந்தி யென்று ரைத்தோம்
புலத்தியனே, கந்தியதன் பேரே. (277)

(உரை:) கேடரி, கவுனம், பிரோணிதம், சிறுமான வித்து, அசுவி, அறுசோகம், நவகந்தி, நாற்பாசகந்தி என்பன கந்தகத்தின் பெயர்.

### சூடன் பெயர்

கந்தமென்ற, சீராடக்கார மந்த மென்றும்
கணிதமென்றும், நித்தருவென்றும் பேரு
சொந்தமென்ற, தீபசோதியென்றும் பேரு
சுடரொளி என்றதற்குப் பேரதீதப்பேரு

---

1. மாட்டா, 2. அத்தி, 3. கிரியானை, 4. பாரவீரம், 5. காடேரி, 6. பிரோணிதம்

கந்தமென்ற, காருவென்று அதற்குப் பேரு
கருவான, பூரமென்று அதற்குப் பேரு
விந்தமென்ற,விசச்சோளி[1] யென்றதற்கும் பேரு
மேலான, சூடனென்றும், கற்பூரத்தின் பேரே. (278)

(உரை:) கந்தம், சீராடக்காரம், மந்தம், கணிதம்,நித்தரு, தீபசோதி, சுடரொளி, காரு,பூரம், விச்சோளி என்பன சூடனின் பெயர்கள்.

## செம்பின் பெயர்கள்

பூரமென்ற ஆராட்ட[2] உதும்பர மென்றும் பேரு
புகழான, தாமிரமென்றதற்குப் பேரு
காரமென்ற,கருவையென்று, வடுவை[3] யென்றும் பேரு
கட்டுவையென்றதற்கு அதீதப் பேரு
வாரமென்ற, வட்டசிங்கி என்றும் பேரு
வாதுமை என்றதற்குப் பேருண்டாச்சு
தாரமென்றதா, பதி யென்றும் பேரு
தருவான, செம்பினிட அதீதப்பேரே. (279)

(உரை:) உதும்பரம், கடுவை, வடுவை, கட்டுவை, வட்டசிங்கி, வாதுமை, தாபதி என்பன செம்பின் பெயர்கள்.

## இரும்பின் பெயர்கள்

அதீதமென்ற, வாதிப் பச்சைக்கு கரும்பொன்னென்றும் பேரு
அடலான, நிளும் பொன் னென்று மதற்குப் பேரு
அதீதமென்ற, சுரும் பொன்னென்றும தற்குப் பேரு
வசனித்தோம், துரும் பொன்னென்றும தற்குப் பேரு
நிதமென்ற, மாசற்ற கதக மென்றும்[4]பேரு
நிலையான, தாம்பர சங்கமென்றும் பேரு
அதீதமென்றும், திரும்பனென்று[5]மதற்குப் பேரு
சாற்றினோம், அதீதப்பேரு இரும்பின் பேரே. (280)

1. வீச்சோளி, 2. வராட்ட, 3. மடுவை, 4. சதகம், 5. திருப்பன்.

*(உரை:)* வாத பச்சை, கரும்பொன், நிரும்பொன், சுரும்பொன், துரும்பொன், கதகம், தாம்பரசங்கம், திரும்பன் என்பன இரும்பின் பெயர்கள்.

**பித்தளையின் பெயர்கள்**

நிரும்பான, நீர்க் கூடமாதக்[1] கூடாது
நிலைக்கூட என்பதற்குப் பேருண்டாச்சு
அரும்பான, வங்குடு, சிங்கக்குடு என்றும்
அருளினோம், அக்கிரந்த[2] மென்றதற்குப் பேரு
வரும்பான, வாளைக்கம்[3] என்றும் பேரு
வரு கூடமென்றதற்குப் பேருண்டாச்சு
கரும்பான[4], தலைநித்தமென்றும் பேரு
தருவித்தோம், புலத்தியனே, பித்தளையின்
பேரே. *(281)*

*(உரை:)* நீர்க்கூடம், மாதக்கூடம், நிலைக்கூடம், வங்குடு, சிங்கக்குடு, அக்கிரந்தம், வாளைக்கம், வருகூடம், தலை, நித்தம் என்பன பித்தளையின் பெயர்கள்.

**சூரியகாந்தத்தின் பெயர்கள்**

தனையான, தணுவென்றும், கங்கமென்றும் பேரு
தனுவங்க மென்றதற்கு அதீதப் பேரு
வனையான, வாரி, சோனி[5]யென்றும் பேரு
வசநீலி யென்றதற்குப் பேருண்டாச்சு
அணையான, வங்கமென்றும் பேரு
அத்திசங்க மென்றதற்கு, அனேகம் பேரு
கணையான, கரிபுங்க மென்றும் பேரு
கருணை பெற சொல்லிவிட்டோம், சூரிய
காந்தத்தின்பேரே. *(282)*

---

1. மாறக்கூடாது, 2. கிரந்தம், 3 வளையக்கம், 4. தரும்பான, 5.சொறி, 282ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

*(உரை:)* சூரிய காந்தக் கல்லின் பெயர்கள் தணு, கங்கம், தனுவங்கம், வாரி, சோளி, வசநீலி, வங்கம், சங்கம், கரிபுங்கம்.

**சந்திரகாந்தத்தின் பெயர்கள்**

காந்தமென்ற, மதிகாந்த மென்றும் பேரு
கடுக்காந்தம், சிறு காந்தமென்றும் பேரு
வாந்தமென்ற, வருக்காந்தமென்றும் பேரு
வரந்தி[1] காந்த மென்று மதற்குப் பேரு
ஆனந்தமென்ற, வனக் காந்தமென்றும் பேரு
ஆதியொளி காந்தமென்று மதற்குப் பேரு
நாந்தமென்ற, நாவல் காந்த மென்றும் பேரு
நாம் சொன்னோம் சுந்தரமே, சந்திரகாந்தத்தின்
பேரே. *(283)*

*(உரை:)* மதிக்காந்தம், கருக்காந்தம், சிறுகாந்தம், வருக்காந்தம், வரந்தி காந்தம், வளைக்காந்தம், ஆதியொளி காந்தம் என்பன சந்திர காந்தக்கல்லின் பெயர்கள்.

**ஊசி காந்தத்தின் பெயர்**

சந்தமென்ற, சத்தறிவு அரிதானென்றும்
மாக்கடி காந்த மென்றதற்குப் பேரு
விந்தமென்ற[2], வீர காந்தமென்றும் பேரு
விமஞ்சி காந்த மென்று அதற்குப் பேரு
அந்தமென்று, மந்தன காந்த மென்று பேரு
அகோரமென்றதற்கு அதீதப் பேராச்சு
நாபியுரு காந்த மென்றும் பேரு
நலமாகச் சொல்லிவிட்டோம், ஊசி காந்தத்தின்
பேரே. *(284)*

*(உரை:)* சந்தம், சத்தறிவு, அரி, மாக்கடி, விந்தம், வீரகாந்தம், விமஞ்சி, மந்தனம், அந்தம், அகோரம் என்பன ஊசி காந்தத்தின் பெயர்.

---

1. வரதி, 283வது பாடலில் 4வது அடி சரசுவதி மகால் சுவடியில் இல்லை. 2. வீந்தம்.

### பவழம்

ஊசியா[1] மா மூக்கு, அராசிய அந்தமென்றும் பேரு
உசிதமாது காமமென்றும், துப்பு என்றும் பேரு
வாசியாய் இலிங்க மென்றிதற்குப் பேரு
வசனித்தோம் வடமென்றதற்குப் பேரு
ஆதியாம்[2], வங்கத்தூறுசம் என்றும் பேரு
அடவான வக்கண என்றும் பேரு
பாசியாம் பதிக் கடக[3] மென்றும் பேரு
பாடினோம், இந்தப்படி, பவழத்தின் பேரே. (285)

(உரை:) ஊசியா மா, மூக்கு, அராசிய அந்தம், உசிதமாது, காமம், துப்பு, இலிங்கம், வடம், (வங்கத்தாறு என்றாதல் வேண்டும்) வங்கத்தூறுசம், வக்கணம், பதி கடகம் என்பன பவழத்தின் பெயர்கள்.

### குங்கிலியம்

படியான[4]துவச மென்று, மது சமென்றும் பேரு
பாடினோம், தேவ கந்தமென்றும் பேரு
அடியான, தெருகந்த, மென்றும் பேரு
அருளினோம், தேவதார மென்றும் பேரு
அடியான, அக்கரு[5], மந்த மென்றும் பேரு
வளமான, விந்து தேகமென்றும் பேரு
சடியான, சலிகந்த மென்றும் பேரு
சார்வாகச் சொல்லிவிட்டோம், குங்கிலியத்தின்
பேரே. (286)

(உரை:) துவசம், மதுசம், தேவகந்தம், தெரு கந்தம், தேவதாரம், அக்கரு மந்தம், விந்து தேகம், சலிகந்தம் என்பன குங்கிலியத்தின் பெயர்கள்.

---

1. ஊசிய, 2. ஆசியாம், 3. பதிக்கத்தடம், 4. பாடியானதுசம்,
5.வக்கு

## தகரம்

குங்குமா துருவனென்றும் துசன்ன[1] னென்றும் பேரு
தோதமென்றும், வீதமென்று மதற்குப் பேரு
அங்கமாம், சூலியென்றும், நாலியென்றும் பேரு
அருளினோம், புலத்தியனே, உனக்காய் நானும்
வங்கமாம் வாசல மென்றும் பேரு
வளமாகக் கோமள மென்றும்[2] பேரு
சிங்கமாம், சடமதற்குப்[3] பேரு
செப்பினோம் சுந்தரமே, தகரத்தின் பேரு. (287)

(உரை:) குங்குமா துருவன், தோதம், குசன்னன், வீதம், சூலி, நாலி, வாசலம், கோமளம், சிங்கம், சடம் என்பன தகரத்தின் பெயர்கள்.

## வெள்ளி

தகரமென்றால், இரசிதம் உசிதமென்றும் பேரு
தருவான, நீத இரசித[4]மென்றும் பேரு
அகரமென்ற அதி[5]ரத்தின மென்றதற்குப் பேரு
அல்ல சங்கமென்றதற்கு அதீதப் பேரு
பகரமென்ற, பருரசிதமென்றதற்குப் பேரு
பரிவல மென்றதற்கு அதீதப்பேரு
சகரமென்றும்[6], சில்லதக மென்றும் பேரு
செப்பிவிட்டோம், சித்தருக்கு, வெள்ளியின்
பேரே. (288)

(உரை:) இரசிதம், உசிதம், நீதம், இரசிதம், உதிரத்தினம், அல்ல சங்கம், பருரசிதம், பரிவலம், சகரம், சில்லதகம் என்பன வெள்ளியின் பெயர்கள்.

---

1. துவசன், 2. கோமரசம், 3. சிடம், 4. நிதம், சீதம், 5. உதிரத்தினம். 6.சிகர

### வெள்ளிலோத்திரம் (லோத்ரா)

*உண்மையாம், சிருட்டிகம், அம்பியாக மென்றும்[1]*
*ஓகோகோ, பார் அதிலவத[2] மென்றும் பேரு*
*தண்மையாம், வதலமென்றும்[3] பேரு*
*தருவான, தரித்தியமென்றும்[4] பேரு*
*வண்மையாம் வஞ்சகுனி[5] யென்றும் பேரு*
*வாட்சி[6] யென்றதற்கு அதீதப் பேரு*
*அண்மையாம் அப்ரகமென்றும் பேரு*
*அருளினோம், பூபதியே, வெள்ளிலோத்திரத்தின்*
*பேரே. (289)*

*(உரை:)* சங்க இலக்கியத்தில் "ஐங்குறுநூறில்" உள்ள ஒரே வடமொழி பெயருள்ள மரவகை இதுவாகும். சிருட்டிகம், சுபியாசம், அதிலவம், தவதம், தரிதரியம், வனஞ்சகுனி, வாட்சி, அப்ரகம் என்பன வெள்ளி லோத்திரத்தின் பேரே.

### சிப்பி முத்து

*லோத்தமென்ற குண்டு இப்பி[7], குறு சிப்பி யென்றும்*
*லோக சிப்பி, வால் சிப்பி[8] என்று பேரு*
*சாத்தமென்ற [9], சாரச்சிப்பி[10] முத்தென்று மதற்குப் பேரு*
*சாலமுத்து, சிப்பியென்று தற்குப் பேரு*
*வாத்தமென்ற, வக்க சிப்பி முத்தென்றும் பேரு*
*வட சிப்பி என்றதற்கும் பேருண்டாச்சு*
*பூத்தமென்ற[11], பூச்சி[12] முத்தென்றும் பேரு*
*புகட்டினோம், புலத்தியனே, சிப்பிமுத்தின்*
*பேரே. (290)*

---

1. கபியாசம், 2. அதிவலம், 3. தவதம், 4. தரித்திரியம், 5. வனஞ்சகுனி, 6. வறட்சி, 7. இப்பி, 8. வாலசிப்பி, 9. வாத்தமென்று, 10. வக்க சிப்பி, 11. பூத்த, 12. ச்த்த சிப்பி

*(உரை:)* குண்டு சிப்பி, குறு சிப்பி, உலோக சிப்பி, வால் சிப்பி, வாத்தம், வக்க சிப்பி, முத்து, முத்து சிப்பி, வட சிப்பி, பூத்தம், பூச்சி முத்து என்பன முத்து சிப்பியின் பெயர்கள்.

### சாதி முத்து

*முத்தென்றால், முருகபம், அருகபந்தா[1] னென்றும்*
*மூதண்ட சீர் மரமென்றும் பேரு*
*சித்தென்றால், குத்தசி யென்றும் பேரு*
*சீரான, சிரைக்கி[2] முத்தென்றும் பேரு*
*அத்தென்றால், அதிடகமென்றும்[3] பேரு*
*ஆலவரு முத்தென்று அதற்குப் பேரு*
*வித்தென்றால், வீரமுத்தென்றும் பேரு*
*விளக்கினோம், அதீதமாம் சாதிமுத்தின்*
*பெயரே.(291)*

*(உரை:)* முத்தின் பெயர்கள், முருகபம், அருகபம், சீர்மரம், குத்தசி, சிரைக்கி, அதிடகம், வீரமுத்து.

### வச்சிரக்கல்லின் பெயர்

*சாதியென்றும் ரவி, வச்சிரம், அதவச்சிரமென்றும்*
*சாரவச்சிரம், மாற வச்சிர மென்றும் பேரு*
*ஆதிஎனு அவமதி[4] யென்றதற்குப் பேரு*
*அல்லப்பா, சாதிவண்ட அதீதப் பேரு*
*நீதியெனு, நிலவச்சிர[5] மென்றும் பேரு*
*நேரு குழைச் சலிக் குழையென்றும் பேரு*
*வாதி யெனும், பூதிருடமென்றும்[6] பேரு*
*வசனித்தோம், என் மகனே, வச்சிரக் கல்லின்*
*பேரே.(292)*

---

1. முருகா மருகபந்தான், 2. சிரைக்கி, 3. ஆடதிகம், 4. அவவதி, 5. நிலவச்சரிம், 6. விடித்திருடம்.

*(உரை:)* ரவி வச்சிரம், வச்சிரம், சாரவச்சிரம், மாறவச்சிரம், அவவதி, சாதியண்டம், நீல வச்சிரம், வாதி, என்பன வச்சிரக் கல்லின் பெயர்கள்.

### வைடூரியத்தின் பெயர்

கல்லான[1], புருசமதி, புருசமென்றும்
கருக்கல்லு, வச்சிரமென்றதற்குப் பேரு
சொல்லான, சொர்ண கன[2]மென்றும் பேரு
சோதிதன மென்றதற்கு அதீதப் பேரு
வில்லான, விவேக ரஞ்சித மென்றும் பேரு
மேதினிட[3] வச்சிர மென்றதற்குப் பேரு
அல்லான, அழைப்பு[4] ராதி என்றும் பேரு
அதீத புசங் கூற[5], பாசை, வைடூரியத்தின் பேரே. *(293)*

*(உரை:)* புருசமதி, புருசம், கருக்கல், வச்சிரம், சொர்ண கனம், சோதிதனம், விவேகரஞ்சிதம், அழைப்பு ராதி, புசங்கரம், பாசை என்பன வைடூரியத்தின் பெயர்கள்.

### புஷ்பராகப் பெயர்கள்

ஊரியா உக்கின் முக்க ஒளியென்றும்
ஊடு பூசாவதி யென்றும் பேரு
வாரியாம், வத்தறக் கில்லி யென்றும் பேரு
வாழுகின்ற ராக மென்றதற்கும் பேரு[6]
தாரியாத வடகதியென்றும் பேரு
தருப்பதி[7]வர மென்றதற்குப் பேருண்டாச்சு
மாரியாம் அராகமென்றும்[8] பேரு
வாரி புகழ், செந்தமிழ்தனை புஷ்பராகத்தின்
பேரே. *(294)*

---

1. கன, 2. தன, 3. மேதிட, 4. வாழைப்பாதி, 5. புசங்கர, 6. வாழ் குறடு விரகம், 7. பதிவிரம், 8. வராகம்.

*(உரை:)* உக்கின் முக்க ஒளி, பூசாவதி, வத்தறக்கில்லி, இராகம், வடகதி, தருபதி, அராகம், வரம் என்பன புஷ்பராகப் பெயர்கள்.

**கோமேதகப் பெயர்கள்**

இராகமென்னும் விபரத்தசமென்றும் பேரு
நன்றகதகம், புலயார்த்த மென்றும் பேரு
ஆகமென்னு, மேகபதியென்றும் பேரு
அருளினோம், என்றதற்குப் பேருண்டாச்சு
வாகமெனும், தேவலோகமென்றும் பேரு
வடிநாமமென்றதற்கு, அதீதப்பேரு
தேகமெனும், தெளிசரமென்றும் பேரு
தெளிந்த தமிழால், சொல்லிவிட்டோம்
கோமேதகத்தின் பேரே. *(295)*

*(உரை:)* இராகம், விபரத்தசம், கதகம், புலி யார்த்தம், மேகபதி, பாகம், தேவலோகம், வடிநாமம், தெளிரசம் என்பன கோமேதகத்தின் பெயர்கள்.

**பச்சையின் பெயர்கள்**

தகமான, தாளிலாம் கைலா[1] மென்றும்
சசிகாங்க மென்றதற்கும்[2], பேருண்டாச்சு
அகமான, வயிவீத[3] மென்றும் பேரு
அக்கிராட மென்றதற்கு அதீதப்பேரு
செகமான, திலதமா[4] வென்றும் பேரு
சேலை சாட யென்றதற்கு அதீதப்பேரு
நக[5]மான, நடனாதி[6] யென்று பேரு
நாம் சொன்னோம், அத்தாரபாசை[7]?, பச்சைக்
கல்லின் பேரே. *(296)*

---

1. மனா, 2. சசிகாங்கம், 3. வைவீதம், 4. திலமா, 5. நபமான, 6. நாகி, 7. அத்தார்.

(உரை:) தாளிலாம், கைலா, சசிகாங்கம், வயிவீதம், அக்கிராடம்,திலதம், சேலை, சாட நடனாதி, அத்தாரப் பச்சை என்பன பச்சையின் பெயர்கள்.

**கெம்பின் பெயர்கள்**

பச்சை யென்ற மித்துரோகம், சத்துரோக மென்றும்
பண்மை யரா என்றதற்குப் பேருண்டாச்சு
அச்சை யென்ற வாக்கை ரவி யென்றும் பேரு
அடவான, வலச்செழுமை யென்றும் பேரு
மச்சையென்ற, வளபூத[1] மென்றும் பேரு
மகிசாரமென்றதற்குப் பேருண்டாச்சு
நச்சை யென்ற தகரோஎன்றும் பேரு
தருவித்தோம், சகல கரா[2] கெம்பினிடப் பேரே. (297)

(உரை:) மித்துரோகம், சத்துரோகம், பண்மை அரா, அச்சை, வலச்செழுமை, ஆக்கை, ரவி மச்சை என்ற வளபூதம், மகிசாரம், தகரோ என்பன கெம்பின் பெயர்கள்.

**மாணிக்கத்தின் பெயர்கள்**

கெம்பென்ற திவ்விய ராம ரத்தின மென்றும்
கேணருளம், ரத்தினமென்றதற்குப் பேரு
நம்பென்ற[3] சீலரத்தினமென்றும் பேரு
நாகமாணிக்க மென்றதற்குப் பேரு[4]
அம்பென்ற[5], வாதி ரத்தின மென்றும் பேரு
அனை மனோயதி, அயீசியென்று மதற்குப் பேரு
பென்ற, துரை பூபதி யென்றும் பேரு
துறவான[6], பாசை, மாணிக்கத்தின் பேரே. (298)

(உரை:)திவ்வியராம ரத்தினம், கேணி உளம், ரத்தினம், சீவரத்தினம், நாகமாணிக்கம், வாதிரத்தினம், மனோயதி அசி, துரைபூபதி, பாசை என்பன மாணிக்கத்தின் பெயர்கள்.

---

1. வளபதி, 2. சகலகளு, 3. நாம், 4. அலைமரோசிய, 5. தும்மென்ற, 6. வயவான

### மரகதத்தின் பெயர்கள்

மாணிக்க ராலமென்றும், புக்க மா வென்றும்
மகாவிம்பபென்றதற்கு அதீதப்பேரு
ஆணிக்க, அரமாதியென்றதற்குப் பேரு
அசலாய[1] மன்றுதற்கு அதீதப் பேரு
ஏணியென்றால், இல்லறத்தின் புலியென்றும் பேரு
இத்தமான, தனமென்ற அதீதப்பேரு
பாணியென்றால் கை நீடு[2], ரத்தின மென்றும்[3]
பாவித்தோம், நயனபாசை, மரகதத்தின் பேரே. *(299)*

(உரை:) மாணிக்கம், ஆரவம், புக்கமா, மாவிம்பம், ஆணிக்கம், அரமாதி, அசலாயம், இல்லறப்புலி, தனம், பாணி, கைநீடு, ரத்தினம், நயனபாசை என்பன மரகதத்தின் பெயர்கள்.

### கலிவெண்பா

மரகத வாழ் மானே, கேள்
மாநிலத்தோர், எல்லோருமறியப்
பிரகிதமாய் சொல்லிவிட்டோம்
பேசக்கேள், மாதரசே
விரகத்தாலுன் விழியும்[4]
விந்தை விட்டால் வெளிப்பாழ்
துரகதித்தால், வழுமோசம்[5] சொல்லக்கேள்
மதிவினையால், உரக்கப் பூவாகில்[6]
புகை சிதறும், வாசிப்பலன்
திருமறையோர் சொன்னமொழி
சிதறாது வாய்மையிட்டால்
நகரத்துக்கு[7] இவரானாம்[8] சொன்னோம் உள்ளபடி
பரகிதமாம், நவரத்தினப் பண்ணுமிதே. *(300)*

---

1. அகலாய, 2. நீடுர், 3. கைநிறு சில, 4. வீரத்தால் அழியும், 5. துர்கித்தால் வரு, 6. பூணா, 7. நாக, 8. உயிருவார்நாம்.

*(உரை:)* பச்சையாக உள்ள பெண்ணே, கேள். விந்தை விட வெளியான ஆகாயம் வெட்டவெளி.

**சந்த விருத்தம்**

நவரத்தின மொடுமொழி, ரத்தினத் தமிழ்
உய[1]ரத்தினை இது முயலுப்படி
அறிகருவித்தனை, விதம் உலகங்களிலிது
வருகும், முயலனெ மூன்றும் வினை
குருவின் இன்னருள் புரி, மறுவின்
மறு உணர் கருவிதியாகில்,
மவ[2]ரத்தினபதி உயிரத்ததியென
புருசனத்தனபதி உயிரத்தமத
மருவித்து கருகுரு யோகம மகராசபதி
கன யோகத்தினில் நெறியாத
பலமறியதொரு[3]
வருங்கயென ஒருவனிவரே காண்[4]
அவரத்தினமெனும் குணவெத்தனை இது உறவித்தது
மொழிமதுரம் அவரவர் மது நாதத்தனை[5]
விரக்காணீரோ ஆத்ருக்கவது யோதித்தவர்பல
தீதித்தமிழ் இதுவாதுக்கு[6] உயிரஞ்சாதித்த
அருள்மிக வாழ்வார்
அதிவாதமெனும் குருரத்தினபதி மொழிபெற்றவர்
முதயெனை[7] அத்தினை ஒருமனமற்றவர்
துறைகாண நடன பதிவரும் பவனிப்படியா
உலக உலகம் பதிமருவளர் செந்தமிழ்
தனவாழ் பதியே*(301)*

**துத்தி நாதம்**

பதியான, மூதண்டராகமெனும் பேரு
பாசை[8], பசினாலமென்றுமதற்குப் பேரு

---

1. புய, 2. குணமாலேவினை, 3. பலமறியா, 4.வளி இவரே, 6. மதுரத்தினை, 6. கருவது, 7. அமுத, 8. பாசையனால்.

அதியான, சிகாரடமென்றும் பேரு
ஆனது, துரிய நாக மென்றதற்குப் பேரு
சதியான, சீவரத்தின நாத[1] மென்றும் பேரு
சாமி, பதுரோட பாரதி[2]யென்றும் பேரு
நதியான, நாதத்து[3]ப்பீட மென்றும் பேரு
நலமான, நாதசத்தி நாகத்தின் பேரே. *(302)*

(உரை:) மூதண்டராகம், பாசை, பசினாலம், சிகாடம், துரிய நாகம், சீவரெத்தின நாகம், பதுரோடபாரதி, நாததத்துப் பீடம், நாதசத்தி நாகம் என்பன துத்தி நாதத்தின் பெயர்.

**அண்டத்தின் பெயர்**

அனாகதம்[4], சத்தராட அக்கிரோதய மென்றும் பேரு
ஆகாசதம், விதாய மவுகால மென்றும் பேரு
வினாகதமெவாம், புருசமென்றும் பேரு
விளங்கினோம், திராடமென்றும் பேரு
மனாதக மச்சாளென்று, மதுச்சாள மென்றும் பேரு
மருவினோம், மாணாக்காள் விதம் பரிபாடை
வனாதக மாமுனியுரைத்த[5] மொழி, எண்ணூறு நிகண்டு
அகராதி சித்த மெனும் அண்டத்தின் பேரே. *(303)*

(உரை:) அண்டத்தின் பெயர் அனாதகம், சத்தடை, அக்கிரோதயம், ஆகாசதம், விதாய மவுகாலம் வினாகதம், விதாயமவுகாலம், திராடம், மச்சாளம், மதுசாளம் என்பன.

**நவகண்டம்**

சித்தமென்ற, திரிசாம[6] செயாதியென்றும் பேரு
சிமாம[7], ஆமகீதமென்று எரிதாக்கு மாகும்
அந்தமென்ற, வயிராசானியென்றும் பேரு
அதமாத, கயை மாதகனமென்ற[8]
தற்குப்பேருண்டாச்சு

---

1. நாகம், 2. பாராதி, 3. நத்தது, 4. அனுகதமா, 5. அகத்தியர், 6. திரியீடு, 7.சீழாபழம், 8. யமாதகன.

சொந்தமென்ற, சூட்சரமென்றும் பேரு
சூட்டினோம், சந்திராழனம் இதற்குப்பேரு
நந்தமென்ற நலோச் சடாச்சியென்றும் பேரு
நாம் சொன்னோம், சுந்தரமே, நவகண்டத்தின்
பேரே. *(304)*

*(உரை:)* சித்தம், திரிசாமம், செயாதி, சீழாழம், அதமாதம், கயை, மாதகனம், சூட்சரம், சந்திராழனம், நலோச்சடாச்சி என்பன நவகண்டத்தின் பெயர்கள்.

**நவகண்ட மூதண்டத்தின் பெயர்**

கண்டமெனும் கலாட்சரமென்றும் பேரு
கற்கலாசரஎன்றுமதற்கு அதீதப் பேரு
அண்டவெனும் பகிரழமென்றதற்கு அதீதப்பேரு
ஆக்கழாகம்[1] என்றதற்கு அதீதப் பேரு
சண்டமெனும், சத்திறி[2]யென்றும் பேரு
சலாதீட மென்றதற்கு வெகு பேரையா
விண்டோம் இந்நூல் அறிவுடையோர்க் கிலையா
விளம்பினோம், நவகண்டம், மூதண்டத்தின்
பேரே. *(305)*

*(உரை:)* கலாட்சரம், கற்கலாசா, பகிறழும், ஆத்தழகம், சண்டம், சலாநீடம் என்பன அறுகின் பெயர்கள்.

**பிரசண்டத்தின் பெயர்**

மூதண்டவிசாவாழி, உத்திராமி, மாகமென்றும்
மூலராட கநிஞ்சமென்றும் பேரு
ஊதண்ட உபநீதமென்றும் பேரு
உல்லாராட மென்றதற்கு அதீதப்பேரு
வாதாண்ட வயலாதிப மென்றும் பேரு
வல்லபை குண்டல மென்றும் பேரு
ஆதண்டமெனும், அபிமேக சடாதமென்றும் பேரு
அருளினோ மயிலபாசை பிரசண்டத்தின் பேரே. *(306)*

---

1. ஆத்தடிகம், 2. சற்றா.

*(உரை:)* விசாலாழி, உத்திராபதி, மாகம், மூலராடகம், நிஞ்சம், ஊதண்ட உபநீதம், உல்லாராடம், வயலாதிபம், வல்லபை, குண்டலகம், அபிமேகம், சடாதம், கோரையின் வன்மையான பெயர்கள்.

**கோதண்டத்தின் பெயர் (வீல்) தடைக்கயிறு**

சண்டமாருதம்,குருவிமதியென்றும் பேரு
சக்கிலிடி, மாலையென்றும் பேரு
பிண்டமாம் பிற மடையமதாம் உடையமென்றும் பேரு
பேசினோம் முமலாதி யென்றும் பேரு
உண்டமா, உலகரதரமென்றும் பேரு
உத்தண்டமென்றதற்கும் பேருண்டாச்சு
அண்டமாமறை உரைக்கிலா மென்றும் பேரு
அதீதமே,யாரும் சொல்லார், கோதண்டத்தின்
பேரே.*(307)*

*(உரை:)* சண்டமாரம், குருவிமதி, சக்சிலிடி, மாலை, உடையம், முமலாதி, உலகரதரம், உதண்டம், அண்ட மாமறை என்பன வில்லின் பெயர்கள் (தடைக்கயிற்றின்)

**பகிரண்டத்தின் பெயர்**

கோதமென்ற, அழருப்பிரு, அதப்பிரு என்றும் கூறினோம்
தெப்பாறென்றதற்குப் பேரு
வேதமென்றும், பிசாச மென்றும் பேரு
விமலனாமென்றதற்கு அதீதப் பேரு
நாதமென்றும், நாட்டிதமென்றும் பேரு
நடபவனி[1] யென்றதற்குப் பேருண்டாச்சு
வாதமென்றும், விதாரச[2] மென்றும் பேரு
வசனித்தோம், ஆனாக்கால் பகிரண்டத்தின்பேரே. *(308)*

*(உரை:)* பகிரண்டத்தின் பெயர்கள்,அழருப்பிரு, அதப்பிரு, வேதம், பிசாசம், விமலன், நாதம், நாட்டிதம், நடபவனி, விதாரசம் என்பன.

---

1. நடபவுனி, 2. ராசாம்.

பகிரதமாம், விற்பூகம்[1], விலகண்ட மென்றும்
பாடினோம், பூகவிகமென்றும் பேரு
அதிரமாம், அஞ்சி வாழமென்றும் பேரு
துகிரமாபதி[2] என்றதற்கு அதீதப்பேரு
நகிரகமாம், ஆனாலாஎன்றும் பேரு
நாலாமா என்றதற்குப் பேரு
வக்கிரமாம்[3], தூடாநாடி யென்றும் பேரு
தொகுத்துப்பார், பவுனங்கள் அதீதப்
பேரே. *(309)*

*(உரை:)* பகிரதம், விற்பூகம், விலகண்டம், பூகவிகம், அதிரம், அஞ்சி வாழ் வக்கிரமாபதி, நகிரகம், துகிரகம், தூடாநாடி என்பன பூமியின் பெயர்களாகும்.

**பூலோகத்தின் பெயர்**

பவுனமெனற் முதலாதி தாழியென்றும் பெயர்
பரிலோகமாமென்று மதற்குப் பேரு
அவுனமென்ற வதவாயிலோகமென்றும் பேரு
அருளினோம், இதழாயாஎன்றும் பேரு
நவுனமென்று, நாலாக, ஏழாக வென்றும் பேரு
நதிமேலாம், லோகமென்று மதற்குப் பேரு
கவனமென்றும், காயாதிலோக மென்றும் பேரு
கருவிடையறிந்து, சொன்னோம், லோகத்தின் பேரே. *(310)*

*(உரை:)* பூலோகத்தின் பெயர்கள், பவனம், முதல், ஆதி, தாழி, பரிலோகம், அவுனம், வதவாயிலோகம், இதழாய், நவுனம், நாலு, ஏழு, உலோகம், கவனம் காயாதி லோகம், கருவிடை என்பன.

**யுகத்தின் பெயர்**

நவசனாம்[4] யோக மென்றும் பேரு
நாயான்[5] யுக மென்றுமதற்குப் பேரு
அலோகமெனும், கடாம்பதியோக
.... .... ... யென்றதற்குப்பேரு

1. பூதம், 2. வகாரமாம், 3. தமாம்.4. நாச, 5. நாயார.

காலமெனும்[1], கருத்திரா[2] லோகமென்றும் பேரு
தருவித்தோமிந்த எண்ணூறில் யுகத்தின் பேரே
லோகமென்றும்[3] பூவாவந்த மாதிரா யூதமென்றும்
லோசவலாலோ, அதீதமென்றும் பேரு. *(311)*

(உரை:) நவசனாம் யோகம், நாயார யுகம், அலோகம், கடாம்பதியோகம், தாலம், கருந்திரா, லோகம் என்பன யுகத்தின் பெயர்கள்.

**ஆண்டின் பெயர்**

உலகமெனவும், வரலேயா ஆண்டென்றும் பேரு
உலகறிதம், நலம் புரித மென்றும் பேரு
துகமெனவும், தூதலா ஆண்டென்றும் பேரு
தொகுதாகாய், ஆண்டென்றும் அதற்குப் பேரு
வகமெனவும், வளிறிடி தாமென்றும் பேரு
வழலை அறமென்றதற்கு அதீதப்பேரு
அகமெனவும், அடகநாலாமென்றும் பேரு
அதீதப்பேரிதுரைதான், வருசத்தின் பேரே. *(312)*

(உரை:) உகம், வருலேயா, ஆண்டு, உலகறிதம், நவம், துகம், முதூதலா ஆண்டு, தொகுதாகாய், வகம், வளிறிடி தாம், வழலை, அறம், அகம், அடக நாலாகும் என்பன ஆண்டின் பெயர்கள்.

**நல்வினையின் பெயர்**

நாளான வாதி, விமுசோலமென்றதற்குப் பேரு
நவர் பதவிமோ என்றதற்குப் பேரு
நாளான, நாமோசனமென்றதற்குப் பேரு
நாளாயுக மென்றதற்குப் பேரு
நாளான வாருத[4] மென்றும் பேரு
நால்கீத மோட்சமென்றதற்குப் பேரு
நாளான செயலத[5] மென்றும் பேரு
நாம் சொன்னோம் அறிவுடையார் நல்வினையின்
பேரே. *(313)*

---

1. தாலம், 2. திரிந்திரா, 3. பவனம் காற்று, 4. வாருத, 5. செயதலம்.

*(உரை:)* வாதிவிகம், முசோலம், நவபதவி, மோசனம், நாளாயுகம், வாருதம், நால் கீதம், மோட்சம், செயலதம் என்பன நல்வினையின் பெயர்கள்.

**தீபாத்திவினையின் பெயர்கள்**

விளையான, பாவகதி நாமென்றும்[1]
விளமருகல், சிசுதோட மென்றும் பேரு
தினையான, கிடும்பென்று, விரும்பென்று பேரு
தீர்க்சா மென்றதற் கதீதப்பேரு
தனையான, கடுரடகமென்றும்[2] பேரு
காதபல மென்றதற்கதீதப் பேரு
முளையான, உத்தண்ட உசமென்றும்[3] பேரு
முதலான, தீபாத்தி வினையின் பேரே. *(314)*

*(உரை:)* தீவினையின் பெயர்கள், பாவாகதி, விளமருகல், சிகதோடம், தினை, கிடும்பு, விரும்பு, தீர்க்சா, கடுரடகம், உத்தண்ட உசம் என்பன.

**மனோசிலையின் பெயர்**

பேரான, சீலமென்றும்,சீலையென்றும் பேரு
பேசினோம், சேசமென்றதற்குப் பேரு
வாரான,வாலைக் குற மென்றும் பேரு
வசனித்தோம், மாசிலமென்றும் பேரு
நாரான,நாரவளி யென்றும் பேரு சொன்னோம்
அஞ்ஞான மென்றதற்குப் பேரு
யாரான, அஞ்சலென்று[4] அதற்குப் பேரு
அருளினோம், மனோ சிலை அதீதப்பேரே. *(315)*

*(உரை:)* மனோசிலையின் பெயர்கள், சீலம், சேசம், வாலைக் குறம், மாசிலம், நாரவசி, அஞ்ஞானம், அஞ்சலை என்பன.

**நவச்சாரத்தின் பெயர்**

அதீதமென்னும் சாரமென்றும்[5] கூறமென்றும் பேரு
அடவான, நிறமென்றதற்குப் பேரு

1. வாசு, 2. கடுதடகம், 3. அசம், 4. வஞ்சலென, 5. சீதமெனும்.

வதீதமெனும், வார்ப்படமென்றும் பேரு
வனமான நீதமென்றதற்குப் பேரு
நதீதமெனும்[1], நரசீல[2] மென்றும் பேரு
நவச்சாரமென்றதற்க தீதப் பேரு
மதீதமெனு, மது சாரமென்றும் பேரு
வசனித்தோம், மகாபேரு, நவச்சாரத்தின் பேரே. *(316)*

*(உரை:)* நவச்சாரத்தின் பெயர்கள், சாரம், கூறம், நிறம், வார்ப்படம், நீதம், நதீதம், நற்சீலன், மது சாரம் என்பன.

**கற்பூரம்**

சாரமாம் சத்தி யென்று மதியென்றும் பேரு
சன்னதம், மதுராபதியென்று மதற்குப் பேரு
ஆராமா, மயக்கி[3] யென்றும் பேரு, பாசுகி, தாரணி
ஆக தாரணியென்று மதற்குப் பேரு
வேரமாம்,விடரொளி[4] யென்றும் பேரு
வில்லாதியென்றதற்கு அதீதப்பேரு
பேரமாம், பிணிக்கி யென்றும் பேரு
சொல்லிவிட்டோம் கற்பூரத்தின் பேரே. *(317)*

*(உரை:)* சத்தி, மதி, சன்னதம், மதுராபதி, மயக்கி, பாசுகி, தாரணி, அசுசித ராணி, விடரொளி, வில்வாதி, பிணிக்கி என்பன கற்பூரத்தின் பெயர்கள். கற்பூரம் என்பது கர்பூரத் தைலத்திலிருந்து எடுப்பதாகவும், சூடன் என்பன கற்பூரத்தைலத்தை மெழுகுடன் சேர்த்து செயற்கை முறையில் செய்யப்படுவது எனவும் கொள்ளலாம்.

**வெள்வங்கம் (ஈயம்)**

பூரமெனும் வெள்வங்க நங்கமென்றும்4 பேரு
பூஆரமென்றதற்கு அதீதப் பேரு
நாரமெனும், நல்வங்கமென்றும் பேரு
நரசிங்க வங்கமென்று மதற்குப்பேரு

1. சீதமெனும், 2. நற்சீலன், 3. அக்கினி, 4. விடரோதி.
குறிப்பு: பாடல் 278லும் சூடனின் பெயர்கள் கூறப்பட்டுள்ளது.

காரடிகமெனும், கடல் வங்கமென்றும் பேரு
கானாழி[1] யென்றதற்கு அதீதப்பேரு
ஆரமெனும் அல்வட்டங்கி என்றும் பேரு
அதீதமாய், சொல்லிவிட்டோம்,
வெள்ளீயத்தின்பேரே. (318)

(உரை:) பூரம், வெள்வங்கம், நங்கம், பூசுரம், நாரம், நல்வங்கம், நரசிங்கவங்கம், காரடிகம், கானாழி, அல்வட்டங்கி என்பன வெள்ளீயத்தின் பெயர்கள்.

**கருவங்கம்**

ஈயமெனும் இருவங்கமென்றும் பேரு
இதலத,மதலத மென்றும் பேரு
ஆயமெனும் அத்திவங்க மென்றும் பேரு
அகடவங்க மென்றதற்கு அதீதப் பேரு
உத்தி வங்கமென்றும் பேரு
எல்லி, தடவங்கமென்றுமதற்குப்பேரு
சாயமெனும், சத்திவங்கம், அடுரகம் என்றும் பேரு
கருவாகச் சொல்லிவிட்டோம், காரீயத்தின்
பேரே.(319)

(உரை:) கருவங்கத்தின் பெயர்கள், இருவங்கம், இதலதம், மதலதம், அத்திவங்கம், அசுடவங்கம், உத்திவங்கம், எல்லி தடவங்கம், சத்திவங்கம், கற்றேகம், காரீயம் என்பன.

**சந்தனம்**

காரியமாம், நற்படிரம், முற்படிரமென்றும் பேரு
கார்[2] வடப்படி யென்றுமதற்கும் பேரு
வாரிய, மாவரிப்படிரென்றும்[3] பேரு
வளமான, குளம்பலென்று மதற்குப் பேரு

1. கானாழி, 2. கால், 3. படிரம்.

ஆரியமாம், யாழ்வடி[1], படிரமென்றும் பேரு
அருளிடாம் படிரமென்றும் பேரு
நாரியமாம், சந்தனச் செந் தென்றும் பேரு
நளினமதாய், சொல்லிவிட்டோம், சந்தனத்தின்
பேரே. *(320)*

(உரை:) நற்படிரம், முற்படிரம், கால், வடப்படி, மாவரிப்படிரம், குளம்பல், யாழ்வடி, படிரம், செந்தென்று என்பன சந்தனத்தின் பெயர்கள்.

**பனை சர்க்கரையின் பெயர்**

சந்தமாம், மனப் பாகா யென்றும் பேரு
ஊழிப் பனஞ் சர்க்கரை யென்றதற்குப் பேரு
அந்தணமாம், அளைப்பிடி யென்றதற்குப் பேரு
அக்கு பாகாயென்றதற்கு அதீதப்பேரு
பந்தனமாம், பகீரதமாமென்றும் பேரு
பாங்கான, சிகாபுடலமென்னும் பேர்
அந்தனம், மயக்க அதிசக்கரை தானென்றும்
உள்ளபடி, நாமுரைத்தோம், பனை சர்க்கரையின்
பேரே. *(321)*

(உரை:) சந்தம், மணப்பாகு, ஊழி, அந்தனம், அளைப்பிடி, அக்குபாகு, பகீரதம், சிகாபுடலம், அதி சர்க்கரை என்பன (நாட்டுச்சர்க்கரை) பழுப்பு சர்க்கரையின் பெயர்கள்.

**வாசுகின பேதி (அன்னபேதி)**

சக்கரமாம், அதிரபேதியன்ன பேதி
பேதி[2], அதீதபேதி, சத்தபேதியென்றும்
நக்கரமாம், நவபேதி, சுகபேதியென்றும்
நன்றாக வசனித்தோம், முயல்பேதியென்றும்

---

1. ஆள், 2. சடாபேதி.
பாடல் 321, சரசுவதி மகால் சுவடியில் அடிகள் மாறியுள்ளன.

அக்கரமாம், சரக்கினுட பேரெல்லாந்தான்
அறிந்து, வெகு இது தள்ளி ஆய்ந்தபேரெல்லாம்
வர்க்கமெல்லாம் மணிபோல[1], பொறுக்கிச் சேர்த்து
வசனித்தோம், வாசுகியின் பேதியின் பேரே. *(322)*

*(உரை:)* சக்கரம், அதிரபேதி, அதீதபேதி, சத்தபேதி, நவபேதி, சுகபேதி, முயல்பேதி என்பன பேதியின் பெயர்.

**மாங்கிச பேதியின் பெயர்கள்**

வாசமெனும், மயங்குசம்[2], மாங்கிசமென்றும் பேரு
வாங்கு சதாகாசமென்ற[3] தற்குப் பேரு
யாசமெனும், பேசங்கமென்றும் பேரு
அடவான, குலபேதியென்றும் பேரு
யோசமெனும், பூதங்குசமென்றும் பேரு
புரைய கடிபேதியென்றதற்குப் பேரு
கோசமெனும், பீசாங்கமென்றும்[4] பேரு
கொடியரி, பாசையிது, மாங்கிசபேதியின்
பெயரே. *(323)*

*(உரை:)* வாசம், மயங்குசம், மாங்குசம்,சதாகாசம், பேசங்கம், குலபேதி, யோசம், பூதங்குசம், கடிபேதி, பீசாங்கம் என்பன மாங்கிச பேதியின் பெயர்கள்.

**குய்ய பேதி**

அங்கழமா[5], துரிசனபேதியென்றும் பேரு
அருளினோம், குயபேதி, அத்தினா பேதி
மங்கிச[6] மாமதிபேதி, வைய பேதி
மகத்தான ரவிபேதி யென்றும் பேரு
நங்கமாம், நடபேதி யென்றும் பேரு
நாமபேதி யென்றதற்குப் பேருண்டாச்சு
வங்கிசமாம் வராடபேதி யென்றும் பேரு
மகத்துவமாம், குய்ய பேதியின் பேரே. *(324)*

---

1. அணி, 2. அங்குசம், 3. சரசம், 4. பீசாங்கம், 5. அங்கறமா, 6. வாங்கிசம்.

(உரை:) அங்களம், துரிசனபேதி, குயபேதி, அத்தினா பேதி, மாமதிபேதி, வையபேதி, ரவிபேதி, நடபேதி, நாமபேதி, வராடபேதி என்பன குய்யபேதியின் பெயர்கள்.

**கன்னல் சர்க்கரை (கரும்பு)**

பேதமென்றும் கன பாகமென்றும் பேரு
பெருமை மதச் சக்கரையென்றதற்குப் பேரு
பேதமெனும், புனல் சக்கரை யென்றும் பேரு
பூதகனயென்றதற்குப் பேருண்டாச்சு
சாத மென்று[1], சன்னச் சக்கரை தானென்றும் பேரு
மதனம்[2], வருமதன மென்றும் பேரு
சோதமெனும், சோதரி, மாதரந்தரனென்றும் பேரு
சொல்லிவிட்டோம், கன்னல் சக்கரையின்
பேரே. *(325)*

(உரை:) பேதம், கனபாகம், பெருமை, மதச்சக்கரை, புனல் சக்கரை என்பன கரும்புச் சர்க்கரையின் பெயர்கள்.

**பலகறையின் பெயர்**

கன்னமென்ற அங்குயாசக்காயா[3], என்றும்
ஆதருயான, தருயா என்றும் பேரு
அன்னமென்று[4], அத்திக்கரமென்றும் பேரு
அலவாகு, ஆவென்றதற்கு அதீதப்பேரு
அன்னமென்ற, வகூடா[5] யென்றும் பேரு
தூயா[6] யென்றதற்கு, அதீதப்பேரு
மன்னமென்ற, மாகூதாயென்றும் பேரு
வளமா, வகுத்திட்டோம், பலகறையின் பேரே. *(326)*

(உரை:) சோழியின் பெயர்கள், சுன்னம், அங்குயாசம், காயா, ஆதருயாதன், தருயா, அத்திக்கரம், அலவாகு, அன்னம், வகூடாதூயா, மன்னம், மாகூதா என்பன.

---

1. சாந்தம், 2. தருமதனம், 3. அக்கு சகாயா, 4. மன்னமென்ற, 5. வரகடா, 6. வாதூயா

### வெட்பாலையரிசி

*கறையான, வருண அரிசியோ அரிசியென்றும்*
*அருளினோம், விளாவரி[1] யென்றும் பேரு*
*அரையான உலாவரிசி யென்றும் பேரு*
*அருளினோம், பாலரிசி யென்றும் பேரு*
*மறையான மதியரிசி இரவியரிசி யென்றும்*
*வசனித்தோம், இரு அரிசி யென்றும் பேரு*
*வரையான, வாமரிசி யென்றும் பேரு*
*வசனித்தோம், கருக்கிடையாய், வெட்பாலை*
*யரிசியின் பேரே. (327)*

*(உரை:)* வெட்பாலை அரிசியின் பெயர்கள், வருண அரிசி, விளாவரிசி, உவா அரிசி, பால் அரிசி, மதியரிசி, இரவியரிசி, இரு அரிசி, வாமரிசி என்பன.

### பாலின் பெயர்

*அரியென்றும், சுவரென்றும் பேரு*
*அசடுவா, நிசடுவா யென்றும் பேரு*
*பரிசியென்றும், பால்வாயென்றும் பேரு*
*பலப்பல வா யென்றதற்குப் பேருண்டாச்சு*
*நரிசியெனும், நம்மிட கலாயென்றும் பேரு*
*நாரா குண்டா மென்றதற்குப் பேரு*
*வரிசியெனு, வாலப்பூவா யென்றும் பேரு*
*வசனித்தோம், இந்நூலின் பாலின் பேரே. (328)*

*(உரை:)* அரி, சுவர், அசடுவா நிசடுவா, பரிசி, பால்வாய், வாய், நரிசி, கலா, நாராகுண்டா, வரிசி, வாலாப்பூவாய் என்பன பாலின் பெயர்கள்.

### உப்பின் பெயர்

*பாலான லவண மெனும், வணமென்[2]றும் பேரு*
*பறிலவண்[3] உப்பென்று மதற்குப் பேரு*

---

1. விளாவரிசி, 2. வனம், 3. நிலவணம்.

ஆலான, அவுள மென்றதற்குப் பேரு
அளமென்றும்[1] குளமென்று[2] மதற்குப் பேரு
கோலான, குறிலவண மென்றும் பேரு
கூறினோ மேனகமென்றும் பேரு
காலான, அங்கலவணமென்றும்[3] பேரு
மகத்தான, லவணமென்றும்[4] உப்பின்பேரே. (329)

(உரை:) பால் லவணம், வணம், பறிலவணம், அவுளம், அளம், குளம், குறிலவணம், மேனகம், அங்கலவணம் என்பன உப்பின் பெயர்கள்.

### பிரம்பு

உப்பான, சூரவென்றும், சூசலென்றும் பேரு
உரலென்றும், சர[5]லென்றும் பேரு
அப்பான, விவிலமது என்றும் பேரு
இறைப்பாரமென்றதற்கு அதீதப்பேரு
செப்பாதே, ஒருவருக்குமே என்னாணை
சிலசிவா, வீண்[6] வரபாசையாகும்
நப்பான, நாலென்றும், குரலென்றும் பேரு
நாம் சொன்னோம், அதிபதியே, பிரம்பின்
பெயரே. (330)

(உரை:) உப்பான குரல், குசல், உரல், சரல், விவிலம், இறைபாரம், நால், குரல் என்பன பிரம்பின் பெயர்கள்.

### துருசு

பிரம்பான, சன்னலென்றும், முன்னலென்றும் பேரு
செழயச்[7] சுவை[8] மனைனயமென்றும் பேரு
அரம்பான, வலைநிக்கி யென்றும் பேரு
அக்கரங்கியென்று[9], அதற்கு அதீதப்பேரு

---

1. அவுணம், 2. அகம், 3. குலம், 4. வங்க லவணம், 5. சூலமென்றும், 6. வீச, 7. செழமனை, 8. கனையம், 9. அக்கசங்கி.

குறிப்பு: இதன் தலைப்பு செந்தினை என்று தவறாக அச்சுநூலில் உள்ளது; இங்கு திருத்தப்பட்டது.

நரம்பான, நல சென்னை யென்றும் பேரு
நாவ சென்னை யென்றதற்கு அதீதப்பேரு
அதீதமாம், சலநீருயென்றும் பேரு
அருளினோம், அதீதப்பேர்துருசிடை பேரே. *(331)*

### துருசு பெயர்

அதீதமாம் நிலமென்றும் நீலமென்றும் பேரு
அருளினோம் அவுனுக்கு[1] என்றும் பேரு
அதீதமாம், வலகறல[2] மென்றும் பேரு
வசனித்தோம், அக நில மென்றும்[3] பேரு
நதீதமாம், நவநிலமென்றும்[4] பேரு
நாமலை, கிரிலமென்று[5] மதற்குப் பேரு
அதீதமதாம், சல[6] நீரென்றும் பேரு
அருளினோம், அதீதப்பேருதுருசுணிடப் பேரே. *(332)*

(உரை:) துருசின் பெயர்கள், நிலம், நீலம், வலகறலம், அகநிலம், நவநிலம், நாமலை, கிரிலம், சலநீர் என்பன.

### சங்கத் திராவகம்

அருளினதோர், என்ன வென்றால், புலத்தியா கேள்
அங்கச[7], திங்கச, மான சந்தா[8] என்றும் பேர்
அருளினதோர், மகமகன் திராவக மென்றும் பேரு
மதி மயக்கி, திராவக மென்றதற்குப் பேரு
நருளினதோர், மந்தி[9], திராவகம் தானென்றும்
நஞ்சுருவி, திராவகந்தா னென்றும்,
அருளினதோர், வாம திராவகந்தா னென்றும்,
வசனித்தோம், சங்கு திராவகத்தின் பேரே. *(333)*

(உரை:) அங்கசம், திங்கசம், மான சந்தா, மகமகன், மதிமயக்கி, மந்தி திராவகம், நஞ்சுருவித் திராவகம், வாம திராவகம் என்பன சங்கு திராவகத்தின் பெயர்கள்.

---

1. மவுனம், 2. வல், 3. மகநீலம், 4. நந்நீலம், 5. நந்திலம், 6. நீலம், 7. அங்கச்சனி
8. சங்கபல சந்தா, 9. நந்தி

## உலோகத்திராவகம்

சங்கான, லோக[1] மென்றும் பேரு
சாநீகம்,வாணிநீகமென்றும் பேரு
அங்கான, விம்மென்றுமதற்குப் பேரு
அருளினோம், விநோதயமென்று பேரு
நங்கான, நல்விடதமென்றும் பேரு
நலமான, சன்னிபல[2] மென்றும் பேரு
துங்கான உலக[3] மென்றதற்குப் பேரு
சொல்லிவிட்டோம், உலோக திராவகத்தின்
பேரு.*(334)*

*(உரை:)* சங்கானலோகம், சாநீகம், வாணிநீகம், அங்காவி, விம், விநோதயம், நல்விடதம், சன்னிபலம், உலகம் என்பன உலோக திராவகத்தின் பெயர்கள்.

## கோசத்திராவகத்தின் பெயர்

லோகமெனும்,லோக பாகமென்[4]றும் பேரு
ஓகோகோ, நீலச்சாயமென்றும் பேரு
அலோகமெனு, வலந்தியென்றும் பேரு
அடவான, வசித[5] மென்றதற்குப் பேரு
நவலோக மெனு, நவிப்பான மென்றும் பேரு
நாதாந்த மென்றதற்கு அதீதப் பேரு
வலோகமெனும், வாதியுட[6] மென்றும் பேரு
வசனித்தோம், கோசத்திராவகத்தின் பேரே. *(335)*

*(உரை:)* லோகம், லோக பாகம், நீலச்சாயம், அலோகம், வலந்தி, வசிதம், நவலோக, நலிப்பளம், நாதாந்தம், வாதியடம் என்பன கோசத்திராவகத்தின் பெயர்கள்.

---

1.லோகதம், 2. கன்னியலம், 3. துரகம், 4. லோக தாயதம், 5. சீதம், 6.வாதியபம்.

### பரங்கிப் பாடாணப்பெயர்

*இராக மெனு படிக்காந்த[1] மென்றும் பேரு*
*நசிகாந்த[2] மென்றதற்கு அதீதப் பேரு*
*நாகமெனும், சலவேட மென்றதற்கு பேரு*
*கத்தி[3], சின்4ன்றத்துவ அதீதப் பேரு*
*வாத மெனும் வல்லி, கோ நகமென்றும் பேரு*
*வஞ்ச வஞ்சமென்பதற்கு அதீதப்பேரு*
*அராகமெனும், சிக்கலா[4] மென்றும் பேரு*
*அருளினோம், நிலைபாடாணம்*
*பரங்கிப்பாடாணத்தின் பேரே.* ***(336)***

*(உரை:) பரங்கிப் பாடணத்தின் பெயர்கள் படி காந்தம், நசிகாந்தம், நாகம், சலவேடம், கத்தி, சின்னன், தத்துவம், வல்லி, கோநகர், வஞ்சம், உஞ்சம், அராகம், சிக்கனம், நிலைப்பாடாணம்.*

### சர்வ திராவகம்

*திறமான, திதோயம், சத வயந்தானென்றும்*
*தெளிய[5] வயமென்று மதற்கு அதீதப்பேரு*
*வளவான[6], வலக்காரமென்றும் பேரு*
*வாழவத்தின மென்றதற்குப் பேரு*
*அறவான வக்கா[7] சீதமென்றும் பேரு*
*அறவாழி யென்பதற்கு அதீதப்பேரு*
*துறமான, சாதி[8] திராவகத்தானென்றும்*
*மாதோக[9]மாய் சொல்லிவிட்டோம்,*
*சர்வதிராவகத்தின் பேரே.* ***(337)***

---

1. உவர்ந்தம், 2. சீதம், 3. நந்தி, 4. சின, 5. சிகலம், 6. பிற, 2. வறமான, 7. அவக்கார, 8. துஞ்சாதி, 9. தோதகமாய்.

336ம் பாடல் அந்தாதி முறையில் அமையவில்லை. மேலும் திராவகங்களைப்பற்றிக் கூறுமிடத்தில் பாடாணம் வருவதும் பொருத்தமற்றது எனலாம்

337ம் பாடலும் அந்தாதியில் அமையவில்லை.

*(உரை:)* திதோயம், சதவயம், வயம், வலக்காரம், வாழளத்தினம், அறம், வக்கா, சீதம், அறவாழி, துஞ்சாதி, மதோதகம் என்பன சர்வ திராவகத்தின் பெயர்.

**தொட்டி பாடாணப் பெயர்கள்**

பாசமெனும், பானு கோதமனு[1] தோமென்றும்[2] பேரு
பலகாரியென்றதற்கு அதீதப் பேரு
வப்பவ[3] னாமென்றும் பேரு
வாடா வசியென்றதற்குப் பேரு
பூசமெனும், புக்கர மென்றும் பேரு
பொற்கமலாயென்றதற்குப் பேருண்டாச்சு
தாசமெனும், துத்தாந்த[4] மென்றும் பேரு
தாவித்தார், தொட்டி பாடாணத்தின் பேரு. *(338)*

*(உரை:)* பாசம், பனுகோதம், தோமென், பலகாரி, வப்பவன், வாடாவசி, புக்கரம், பொற்கமலா, தாசம், தத்தாந்தி என்பன தொட்டிபாடாணப் பெயர்கள்.

**சிலாசத்தின் பெயர்கள்**

பழமையாம், மலர்[5]வலா, சலசத்தென்றும்[6] பேரு
பரிவான, நீர் சத்தென்றும் பேரு
அழைமையாய சத்தென்றும்[7] பேரு
அடியுப்பு மங்கசத்தென்று மதற்குப் பேரு
வழை[8]மையா, வலசத்தென்றும் பேரு
வாலசத்து, புலிச்சத்து மென்றும் பேரு
தழைமயாம், சலைசத்தென்றும் பேரு
தழைத்த சலாசத்தினிடதீதப் பேரே. *(339)*

*(உரை:)* பழமை, மலர்வலாம், சலசத்து, நீர்சத்து, சத்து, அடியுப்பு, மங்சத்து, வாலசத்து, புலிச்சத்து, சலைசத்து என்பன சிலாசத்தின் பெயர்கள்.

---

1. பதுகோதமன், 2. தோதமென்றும், 3. வாசமெனும், 4. தந்தந்த, 5. ஓர், 6. சலசதமென்றும், 7. சத்தது, 8. வள.

குறிப்பு: சிலாசத்து என்ற தலைப்பிலுள்ள பாடலும் அந்தாதியாக இல்லை.

## வழலையுப்புச் செயநீர்

அதினுடையாம், ஆதிசெயநீர், தார[1]செயநீர்
அந்த செயநீர் முதல் செயக் கருவி செயநீர்
அதினுடைய வாலைச்[2]செயநீர், தூலச்[3] செயநீர்
அடிசெயநீர், முடிசெயநீர், நடுசெயநீர்
அதனுடைய[4] கதிரொளி போல், வசனித்தோம் நாம்
பாடல் பதினாறு லட்ச மதீதத்துக்கு
சதினோடையாய், சகலத்துக்கும் நிகண்டாய் சொன்னோம்
சாதித்தார், அறிவுடை, வழலையுப்பு செயநீரின்
பேரே. *(340)*

*(உரை:)* வழலையுப்புச் செயநீரின் பெயர்கள்; ஆதிசெயநீர், தாரசெயநீர், வாலை செயநீர், தூல செயநீர், அடிச்செயநீர், முடிச்செயநீர், நடுச்செயநீர் என்பனவாகும்.

## பிண்ட உப்புச் செயநீர்

செயமென்றால், குருஉப்பு[5], கருவுப்பென்றும்
செப்பினோ, மதியுப்பு, ரவியுப்பென்றும்
அயமென்றால் அப்புவுப்பு என்றதற்குப் பேரு
அருளினோம், உபஉப்[6]பென்றதற்குப் பேரு
தயமென்றால், தனவிந்தி[7]செயநீரென்றும் பேரு
தலைப் பிண்டச் செயநீரென்றும் பேரு
துய்மென்றால், துலக்கினி[8]யென்றும் பேரு
தொண்டுடையான, பிண்ட உப்புச் செயநீரின்
பேரே. *(341)*

*(உரை:)* பிண்ட உப்புச் செயநீரின் பெயர்கள்; குரு உப்பு, கருஉப்பு, மதியுப்பு, இரவியுப்பு, அப்புவுப்பு, உப உப்பு, தன விந்திச் செயநீர், தலைப்பிண்டச் செயநீர், துலக்கினி, தொண்டுடையான் பிண்ட உப்பு என்பன.

---

1. அடி, 2. வழலை, 3. அடி, 4. பதி, 5. வகுத்ததற்கு, 6. கரு, 7. அழுப்பு, 8. விந்து, 9. சல.

## பூ நீறுப்புச் செயநீர்

பிண்ட மெனும் பிருதுவி, தாசலவிதி யென்றும்
பேசினோம் நாதயோனி, செயநீரென்றும் பேரு
குண்டமெனும், குரு செயநீர், கிளிசெயநீரென்றும்
கூறினோம், மதி[1] பூரணஞ் செயநீரென்றும் பேரு
துண்டமெனும், துதிபால செயநீரென்றும் அதோர்
கவுனக் குளிகை செயநீர், ஞானச் செயநீரென்றும்
விண்ட மெனு, மூனுப்பு செயநீரென்றும்
உறுதி பெறச் சொல்லிவிட்டோம், பூநீறுப்பின்
பெயரே. *(342)*

*(உரை:)* பிருதுவி, தாசலநிதி, நாதயோனி, குரு செயநீர், கிளிசெயநீர், மதிபூரண செயநீர், துதிபால செயநீர், கவுனக் குளிகை செயநீர், ஞான செயநீர், மூனுப்பு செயநீர் என்பன பூநீருப்பின் செயநீரின் பெயர்கள்.

## சாகா உப்புச் செயநீர்

நீரான[2], நீலகண்ட செயநீரென்றும் பேரு
நீடுவொளி செயநீரென்றும தற்குப் பேரு
ஆரான, அச்செயநீர், பூர்வ செயநீர்
அலகல[3] விடச் செயநீர், நஞ்சுசெயநீர்
வாரான, வஞ்சுக்கொடி, நஞ்சுக்கொடி செயநீர்
வளவான வல்லிக் கொடி, மூலசெயநீர்
காரான, கன்னி செயநீர், சரக்கின் செயநீர்
கருதினோம், சாகா உப்புச் செயநீரின் பேரே. *(343)*

*(உரை:)* நீலகண்ட செயநீர், நீடுவொளி செயநீர், பூர்வ செயநீர், அலகல விடசெயநீர், நஞ்சு செயநீர், வஞ்சுக்கொடி, நஞ்சுக்கொடி செயநீர், வல்லிக்கொடி, மூல செயநீர், கன்னி செயநீர், சரக்கின் செயநீர் என்பன சாகா உப்புச் செயநீரின் பெயர்கள்.

---

1. அதி, 2. நீறா, 3. ஆலகால
342ம் பாடலில் 7, 8 வரிகள் என்பன சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

## வேக உப்புச் செயநீர்

துப்பான, துலாகீத[1] செயநீரென்றும் பேரு
துவரின்[2] மூலி செயநீரென்றும் பேரு
அப்பான, பலசரக்கு செயநீரென்றும் பேரு
அச்சடல[3] செயநீரென்றதற்குப் பேரு
கப்பான, கலசியநீர்[4], விலசியநீரென்றும்
கண[5]செயநீர், விண் செயநீரென்றும் பேரு
தப்பான, ரச செயநீர், சர்வ செயநீரென்றும்
தருவித்தோம், வேகாஉப்புச் செயநீரென்று
பேரே. *(344)*

(உரை:) திரேகித செயநீர், துவரின மூலிசெயநீர், பல சரக்கு செயநீர், அட்சடலசெயநீர், கலசியநீர், விலசியநீர், கண செயநீர், விண் செயநீர், இரச செயநீர், சர்வ செயநீர் என்பன, வேகா உப்புச் செயநீரென்று பெயர்கள்.

## அண்டச் செயநீர்

நீரான, முட்டைக்கல செயநீரென்றும் பேரு
நிராமயமாம் செயநீரென்ற தற்குப் பேரு
தேனான, தெளிந்த அமிர்த செயநீரென்றும் பேரு
தென்[6]செயநீர், சார[7] செயநீரென்றும் பேரு
ஆரான வாதி[8], தலையோடு செயநீரென்றும் பேரு
அடரான, வெள்ளைக்கல் செயநீரென்றும் பேரு
சேரான, செயநீரென்றும் பேரு
செப்பிவிட்டோம், அண்டதன் செயநீரின்
பேரே. *(345)*

(உரை:) முட்டைக்கல செயநீர், நிராமய செயநீர், அமிர்த செயநீர், தேன் செயநீர், சார செயநீர், வாதி செயநீர், தலையொடு செயநீர், வெள்ளைக்கல் செயநீர் என்பன

---

1. திரேகித, 2. துசுவேரின், 3. அட்சடல, 4. கலச செயநீர், 5. கன, 6.தேன், 7.கார, 8. வத்தி.

அண்டச்செயநீரின் பெயர்கள் இச்செயநீர், சித்த மருத்துவத்தில் இன்றும் வழக்கிலுள்ளது.

**பலகல் சத்தின் பெயர்**

நீரென்று, மண் கல்லு[1]ச்சத்தென்றும் பேரு
நேரான நிமின்[2] கல் சத்தென்றும் பேரு
ஆரென்று, மரவச்[3] சத்தென்றும் பேரு
அருளினோம், நிலப்பாறை சத்தென்றும் பேரு
நாரென்ற[4], நாவக்கல்[5], பூர்வ சத்தென்றும்
நாமச் சத்து, லிங்கச்சத்து, ரசத்தின் பேரு
வாரென்றும்[6], வழலைசத்து, வய சத்தென்றும் பேரு
வருசித்தோம், பலகல் சத்தின் பேரே. (346)

(உரை:) மண் கல் சத்து, நிமின் சத்து, நிலப்பாறை சத்து, நாவக்கல் சத்து, பூர்வ சத்து, நாமச்சத்து, லிங்கச்சத்து, வழலைச் சத்து, வயச்சத்து என்பன. பலகல் சத்தின் பேரே.

**அஞ்சனக்கல்**

கல்லான, வானை, நிமிளை வன்னி மிளை யென்றும்
கருநிமிளை, திருநிமிளை யென்றும் பேரு
அல்லான, வத்திரா நிமிளை யென்றும் பேரு
அருளினோம், வையநிமிளை[7], பசுநிமிளை யென்றும்
வல்லான, விசநிமிளை, வேங்கையாகிமேவும்
படிவப் பாங்க[8] மென்றும் பேரு
சொல்லான, சோதி நிமிளையென்றும் பேரு
சொல்லிவிட்டோம், அஞ்சனக் கல்லடலின் பேரே. (347)

---

1. சூல, 2. மிகலை, 3. அ....வரல, 4. நானெ, 5. நாவு, 6. வானெ, 7 வைய, 8. படிவம் பரங்கம்.

(உரை:) வானை நிமிளை, வன்னிநிமிளை, திருநிமிளை, வத்திராநிமிளை, வையநிமிளை, பசு நிமிளை, விசநிமிளை, வேங்கை, படிவப் பாங்கம், சோதி நிமிளை என்பன அஞ்சனக் கல்லின் பெயர்கள்.

## விசக்கல்லின் பெயர்

அஞ்சனமா, மண்ணுதலை, விசக்கல்லென்றும்
ஆதிப்பேரண்ட முடி, விசக்கல்லென்றும் பேரு
முஞ்சனம்[1], மூலக்கால், விசமென்றும் பேரு
முடிவீச[2], நடுவிசக் கல்லென்றும் பேரு
வெஞ்சனமாம், விவேகக்கல் விசமென்றும் பேரு
வேதாந்த அத்தினிமார் பிண்டத்தலை முடிதான்
கஞ்சனமாம், நால்சாதி, விசக்கல்லென்றும் பேரு
கருவான, சிரசோட விசக்கல் விடப்பேரே. *(348)*

(உரை:) அஞ்சனம், மண்ணுதலை, விசக்கல், ஆதிபேரண்ட, முடி, விசக்கல், முஞ்சனம், மூலக்கால், விசம், முடிவிசம், நடுவிசக்கல், வெஞ்சனம், விவேகக்கல், வேதாந்தம், அத்தினு மாப்பிண்டத்தலைமுடி கஞ்சனம், நால் சாதி சிரசோட விடக்கல் என்பன விசக்கல் பெயர்கள்.

## சவுட்டுப்பின் பெயர்

ஓடான நரிதலம், ஆமென்றும்[3]
ஒரு முலைப்பா, கலமுன்னென்றும் பேரு
ஆடான, சுவாச[4] மென்றதற்குப் பேரு
அதர் வாயு, உதாசியம்[5], அங்கமெண்ணென்றும்
நாடான, நல்லாதி மண்ணென்றும் பேரு
நகராசிடமண் ணென்று மதற்குப் பேரு
பாடான பரி[6] சவுட்டுழ மண்ணென்றும்
பாவித்தோம், சுந்தரமே, சவுட்டு மண்ணின்
பேரே. *(349)*

---

1. மா, 2. மருவி, 3. தலை மரமென்றும் பேரு, 4. சூவாடி, 5.வேர்த்தவாசி, 6.பரிசியிட்டு.

(உரை:) நரித்தலம், ஆ, ஒரு முலைப்பால், கலமுன் சுவாசம், அதர் வாயு, உதவாசியம், அங்கமண், நல்லாதிமண், நகராசிட மண், பரி, சவுட்டு மண் என்பன உழமண்ணின் பெயர்கள்.

## அறிவு (ஞானம்)

மண்ணான, பிருதுவியோடப்பு, தேயு
வாயு ஆகாசத் தோடஞ்சும் சேர்த்து
விண்ணான, மலை[1] யாகிக் கிரியுமாகி
வித்துக்குள் மரமாகி, செடியுமாகி
கண்ணான, கருவாகி[2] உருவாகிக்
காத்துக்குள், நாலாவின் நின்ற கருவியாகி
நண்ணான, சடலமதாய்[3], தேகமாகிப்
பேய்ச் சுரைக் கொடியாகிப் பிறந்த வாரே. (350)

(உரை:) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன இணைந்து மலை, விதை, கரு, என்பன தோன்றின. உயிர்க்காற்று உடலுக்குள் சென்று, சுரைக் கொடியாகிப் பிறக்கும்.

வாரான, அண்டபிண்ட உருவி(ல்) நின்று
விண்ணும், அஸ்தூம், விண்டு முதலாடமாகி
ஏரான, இது நடுவில் பிரபஞ்சமாகி
எட்டுத்திசைக்கும், கோணமதாய் வெவ்வேறாகி
மாறான, உலகமதாய் வானமாகில்[4]
வழி[5]யெம்புக்கனடலரை குழுஉயிர்தான் வாழி[6]
நேரான, நேர் மேல் நெருப்பாய்த்தரா தரந்தானாகி[7]
நிரஞ்சனமாய் சர்வ மெனும் நலைதானே[8]. (351)

(உரை: அண்டம், பிண்டம் என்பன மனித உருவில் உள்ளன.

1. மாலை, 2. கருவாஉருவ, 3. சிடல, 4. வர்ண, 5. முட்டின், 6.வளி, 7. தராதர, 8. கருப்பமெனும் நிலை தானாமே.
பாடல் 350, 351 பொருத்தமாக இல்லை.

நிலையான, பராபரம் பூரண மெய்ஞான
நிராதரமனம் மருவே[1], குருவே கண்டால்
அலையாதே, நெஞ்சகமே, அறிவு பாழாகி
அங்கமெனும், நோய் விதியா, அமைக்குமாறு
கலையாதேயுறுதி மனம், கசப்பாய் போகும்
காமசித்தி[2] வெகு, அரிது, நாளே சொல்லும்
அலையாதே, பேய் போலே அலைந்திட
மதிகெட்ட, மாணாக்கள் அறிவால் நில்லே. (352)

(உரை:) நிலையான, பராபரமான இறைவன் முழு அறிவு உள்ள மனம், ஆசிரியரே காண மனமே அலையாது. அறிவு அழிந்து, உடல் உறுப்புக்களில் நோய் (மன) தலை விதியாக அமையும். உறுதியான மனம் மாறினால், கசப்பாக இருக்கும். காதல் வாழ்வு மிகவும் எளிதில் கிடைக்காது. வாழ்க்கைச் சொல்லும். பேய் போல மூளை கெட்ட மாணவர்களே மனத்தை அலையவிடாமல், அறிவுடன் நிற்கவும்.

### குலையாரி அருணம்

மனமான, அறிவைவிட்டால் மனம் பாழாகும்
மனதுதான், பரமானால் மதியங்கேது
கனமான மதியதினால், குருவுண்டாச்சு
கருவியதால், மாணாக்காள் சென்ம மனேகமாச்சு
தனமான, களஞ்சியமாம் இராசயோகம் செய்தால்
தளகாந்தன ராதிபதி[3], யோகவான், ஆவான்
செனமான, புருச ரத்தின மவரேயாகும்
செகமதிலே, சேனாபதி, பூபதிதாம், நாமே. (353)

(உரை:) அறிவை கைவிட்டால், வாழ்க்கை துன்பமுடையதாகும். நல்ல அறிவு, ஆசிரியராக ஆக்கும், செல்வமிக்க, கருவூலமாம் இராசயோக முறையைக்

---

1. முருவே, 2. காயசித்தி, 3. கந்தன் ராபதி போல
353ம் பாடலும் மூலநூலுக்கு தொடர்பற்று உள்ளது.

கடைப்பிடிக்க அரசவாழ்வு கிடைக்கும். ஆண்களில் வைரம் போலாவான். உலகத்தில் படைத்தளபதி, அரசர் நாம்.

## வேதாந்தச் சருக்கம்

*பதிவிரத மாதே கேள், பகடினோம்[1] இந்தப்படி*
*விதியமைப்பு உள்ளதனால், மேவினோம் இப்புவியில்*
*அதிகரு, வேதாந்தமல்ல, வருமே, பார்த்தால்*
*கெதியமைப்பு, உண்டாமோ, கிளிமொழியே கேள்,*
*செவியால். (354)*

(உரை:) கணவனின் நலத்திற்காக பல்வேறு நோன்புகளைப் பின்பற்றும் பெண்ணே அறியவும். தலைவிதியால், இவ்வுலகில் மனிதனாகப் பிறந்தோம். இது அடிப்படை, தத்துவமல்ல. நல்வாழ்க்கை வாழ்ந்தால், பேரின்ப வாழ்வு கிடைக்கும். காது கொடுத்துக் கேட்பாயாக, பெண்ணே. பெண்ணை முன்னிலைப்படுத்தி இப்பாடல் உள்ளது.

*சதி புருசர், அதன் சாதாக அவ்வேறே அத்*
*ததி யதுதான் செய்தவர்கள், தானறிவான், நெஞ்சமே,*
*நதியிலறு, கோணப்பதினாறும் கண்டோம்*
*..........சொல்வார், இறையாவார் அனேகம் செய். (355)*

*செப்பு மட மாதேகேள், செய்வினைப் பயனதனால்*
*இப்புவியில் மானிடர்க்கு, மெய்வினையவர்*
*தொழிலாய்*
*செப்புமடமாதேகேள், செய்வினையே யென்றால்*
*அப்பறையாய்[2], திரியுமட்டி, சுகமாலனேகருண்டு*
*செப்புமடமாதேகேள், சிசுவந்து செய்யும் வினை*
*அப்பனிட வருமதியால் வருவாண்மை உனை விடா*
*செப்பு மடமாதேகேள், செப்பினேனிப்படிவார்[3]*
*தப்பிலாத் தன் பதிபோல் தனையறியே. (356)*

---

1. பாடி, பகடி என்ற சொல் ஈழத்தைச் சேர்ந்தது. கேலி செய்வதைக் குறிக்கும். 355ம் பாடல் சரிவர இல்லை. 2. கப்பறை. 3. கந்தனே.

(உரை:) பெண்களுக்குள்ள நான்குவகைத் தன்மைகளில் ஒன்றான மடமையைக் கொண்ட பெண்ணே, கேட்கவும். இவ்வுலகில் மனிதர்கள் பிறவியில் செய்த நன்மை, தீமைகளால் ஆன செயல்களால் துறவியாகி அதிகமாய் திரிவார்கள் அவர்கள் வீணர்கள். தந்தையிடமிருந்து வெளிப்படும் விந்துவினால், அவனது மரபு என்பன குழந்தைக்கும் வரும். இவ்வாறு எடுத்துரைத்தேன்; பிழையில்லாத கணவனை அறிவது போல், உன்னை நீ உணர்ந்து கொள்ளுவாயாக. இப்பாடலில், தற்காலத்தில் கூறப்படும் மரபுவழிப் பற்றிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன. தந்தை தாயின் வழி குழந்தைக்கு மரபு வழியான கருத்துகள், அவர்களுக்கான நோய்கள் என்பன வருகின்றது. இவற்றை இப்பாடலில் காணலாம்.

தனதறிவு, மனதொழிய சஞ்சலந்தானே [1]
தன்றா [2] யுனையறியார் யாவரும், வருமூடாத பார்
மனமறிய, சுரணையறியா[3], கரமுகற்குச்
சொன்னாலும், மதி வருமோ, கலிகால
மனுச, சென்னக் கசடா[4] கேள்
குலையறியிது, பனையறிவாய் துண்டம்
எனப்படுமே, மனத்தையொழிய அன்னை யெருவி [5]
துணையதற்கு
அரிதோ, சொல்வதறியா
இணையதற்கு, மாமேரு எதிருண்டோ ?
ஆண்மை[6] கொலைபாதகஞ் செய்தோர் குறி. (357)

(உரை:) தன்னை அறியாத மனத்திற்கு, அலையும் நிலை இருக்கும். உன்னை அறியார். அவர்கள். காண்பாயாக. உணர்ச்சியில்லா காம உணர்வு மட்டுமுள்ளவர்களுக்கு, எடுத்துக் கூறினாலும், எடுபடாது, கலியுகத்தில் மனிதப்பிறவி, இழுக்குடையதாகும்., கேள்.

1. தனே, 2. என், 3. கால் மூர்க்கருக்கு, 4. கசடா, 5. ஆணை, 6. வரு.

## விருத்தம்

குறியான, பதியறிய[1] புலத்தியனே, அய்யா,
கூறினோம், சகலருக்கும் அதீதமெல்லாம்
நெறியாக இதை[2] விட்டோம், இவ்வெண்நீறு[3]
நிலை தவறாப்புண்ணியர்க்கு எய்துமெய்தும்
புரியான, வகாராதி அதிக பீடம்
புருட இலட்சண அதீதான அதீதவாக்கியம்
அறியார்க்கு, பிரிய மெந்நூல், நீத மெல்லாம்
அறிவோர்கள், வேதாந்த மறிந்த பேரே. (358)

(உரை:) குறிப்பான படி, இறைவனை அறியும்படி இந்நூலில் எல்லாருக்கும் எடுத்துக்கூறினோம். அதிகப்படி ஒழுங்குடன் இதைச் சொல்லிவிட்டோம். தன்னுடைய நிலைமாறாத நல்வினை செய்யக்கூடியவர்களுக்கே, கிடைக்கும். இரசவாதம் உள்ள இடம் ஆண்களில், இலக்கணமாக அதிகச்சொற்கள் அறிந்துகொள்வார்கள். வேதத்தின் முடிவை அறிந்தவர்கள் அறிவார்கள்.

## வைத்தியத்தின் கரு - செய்முறை

அறிவதற்கு, வைத்தியத்தின் குருவைக்கேளு
அருளுகின்றோம், புலத்தியனே,அறிவுள்ளோர்க்கே
தெரிவதற்கு, தேகமதின், கருவைச் சொல்வோம்
தெளிவான தேகமதின், கருவைச் சொல்வோம்
அறிவதற்கு, ஆறுதிங்கள் பிண்டம் வாங்கி
அதிகமாய் சுத்தி, உள்மூலம்[4], வளமாய் செய்து
வெளி[5]யதற்கு, வெண்வேலஞ் சாராயம்படி நாலு[6]
விளங்குமந்தப் பாண்டத்தில் விசிதமாய் வாரே. (359)

வார்த்து நீ, பிண்டமுடி சவ்வுக்கோரை மயிர்தான்
வளமாகச் சுத்தித்து, சமூலமதைக் கொண்டு
பார்த்து நீ, சாராயக் கண்டத்திட்டுப்[7]
பரிவான மண் சீலை சந்து செய்து

---

1. வல்ல, 2. மகுடி, 3. வெண்நீறு என்பது இவ்வெண்நூறு என்றாதல் வேண்டும்.
4. புள், 5. தெரிவதற்கு, 6. நாலு மூணு, 7. பாண்டத்திட்டு.

கோர்த்து நீ, ரவி முகத்தில்[1] பதினைந்து நாள்தான்
கூறினோம், பாகமதாய் வைத்தெடுத்து
ஆர்த்து நீ, அன்னுள் பதினைந்து மட்டும் சென்றால்
அற்றுமி[2], வாசமிணங்கும் அறிந்து, பாரே. (360)

பாரப்பா,புலத்தியனே,அப்பாகமானால்
பாண்டமதை யெடுத்து, மண்சீலைகட்டி
ஆரப்பா, அறிவார்கள் இதுவல்லோ சூட்சம்
அங்கமெல்லா மென்றாய் சேர்த்துப்பாகு போலாம்
ஏரப்பா, இறைச்சி யெல்லாம் கூழாய்ப் போகும்
எலும்பெல்லாம்,சதையை புண்டு வெவ்வேறாய்
காரம்பா, இப்பா, பாகமயாரும், காணார்
கன யோக, சித்தற்கு வித்தை தானே. (361)

**(உரை:) மூன்று பாடல்களில், கரு செய்முறை உள்ளது. ஆறுமாத கருவை தூய்மைசெய்யவும், வேலம்பட்டை சாராயம் 4 படியில் ஊற வைக்கவும். முடி சவ்வு, கோரை, மயிர் என்பனவற்றை தூய்மை செய்யவும். சமூலத்தை சாராயக் குடுவையிலிடவும். சீலை மண்ணால் இடைவெளியை மூடவும். சூரிய புடத்தில் 15 நாட்கள் வைக்கவும். பின் எடுத்துப் பார்க்க, பாகு போல் இருக்கும். இதுவே மருத்துவக்கரு ஆகும். கனயோக சித்தற்கு இது உதவும்.**

**பாறைப்புளி**

வித்தையென்றால், வித்தைக்கெல்லாம் அதீதவித்தை
மேலான வித்தையிது, சித்தெல்லாம்[3]
செத்தைவித்தை, கேளு, சுந்தரமே, அய்யா[4]
செப்பினதோர், பாண்டமதை எடுத்துக் கொண்டு
பத்தையென்ற, பாண்டமதிலிருந்த அங்கமெல்லாம்
பாறையென்ற, கல்லுரலில், பாகேயிட்டு
அத்தையென்றயேகு உலக்கை வலுவாய்க் கொண்டு
இருநாழி, பன்னீருவதிலேயே,தாக்கு. (362)

1. நீர் விழுமுகத்தில், 2. ஆற்றுமி, 3. சித்தர்கலெல்லாம், 4. தீர்மையாய்

தாக்கி இடி இருசாமம், இடித்தாயானால்
சவாது, பரிமளம் போல, வாசம், காணும்
ஆக்கியிடி, உன்கையெல்லாம் வாசம்பட்டால்
அங்கமெல்லாம் பாவித்து லட்சணமே ஆவாய்
ஆக்கியமாய்[1], சொல்லிவிட்டோம், அகத்தியமாமுனிவர்
வசனித்தோம், செந்தமிழால் வளமாய்க்கேளு
பாக்கி இடித்திட்டதைப் பார்த்தீராகில்
பாறையினிப்[2] போலது தான் பக்குவமாமே. *(363)*

பக்குவமாய்ப்பிழியதனை வழித்தெடுத்துப்
பாண்டமென்ற பழம்பாண்டமதன் நீராக்கி[3]
அக்குலமா, மாயிழை மார் குடத்து நீரில்
அஞ்ஞான சுத்த சலந்தனில் வார்த்து
பக்குவமாய், கரைத்ததனை ரவியிலோர்நாள்
வசனித்தோம், வைத்தோம்[4], மறுநாள்
தனிலெடுத்தால்
சக்குவமாம் நீர் தெளிந்து சலம் போலாகும்
சார்வான, சலமதனை மறு பாண்டத்திலிறுவே. *(364)*

இறுத்து, மறு[5]பாண்டமதில் தெளிவேயாற்று[6], உறுதி
பெறக்கேசரி
இதன் தைலம் வாங்கி ... ... ... ...
வறுத்துச் சர்க்கரை[7] சீலை பாண்டந்தான் முழுவதும்
வளமாக ஏழு செய்து, மேலோடு செய்து
அறுத்ததின் மேல்[8], சீலையேழும் செய்து
அப்பூவில்[9] குழி, தோண்டி உச்சனாகல்
எறத்தின[10] மேல், சமாதியோடு கொண்டுமூடி
இயம்பு வாய், மண்டலம் சென்றெரித்துப்[11]
பாரே. *(365)*

பார்த்து, மண் சீலை மூடி ஓடெடுத்துக் கவசம்
பாண்டமதைப் பார்த்திட்டால், பழுப்புநிறங்காணும்

---

1. வாக்கியமே, 2. புளி, 3. அதனில் தாக்கி, 4. வைத்து ஓர்நாள், 5. மது, 6. வார்த்து, 7. சக்கரானால், 8. மண், 9. அப்புவியில், 10 ஏற்றதின், 11. சுடுத்து.

*ஆர்த்து, வடிக் குழம்பாக மேல், இரசந்தானிறங்கும்*
*அடியில், நின்ற பூநீறு அண்டபிண்டநீறும் சார*
*ஊர்த்துவதன் மேல்நின்ற, வகார கார சாரம்*
*ஓங்கார செயநீர் அமிர்த சஞ்சீவிதான்*
*ஆர்த்து, பீங்கான் தன்னில் செஞ்சிவை[1]யிட்டு*
*நாதாத்த, சிரோமணித் தாய், பாதம் போற்றே[2]. (366)*

*(உரை:) பாடல் 362 முதல் 366 வரை செய்முறையானது தொடர்கின்றது. வைத்தியக் கருவைக் கொண்டு பாறைப்புளி என்ற முறை இடம்பெறுகின்றது. மருத்துவக்கருவை கல்லுரலில் இட்டு, இருநாழி பன்னீர் ஊற்றவும். 2 சாமம், உலக்கையால் பலமாக இடிக்கவும். பக்குவமானவுடன், சவ்வாது மணம் வீசும். இதை பிழிந்து, வேறு குடுவையில் மாற்றவும், தூய்மையான நீர் விடவும். கரைத்து, சூரியபுடம் ஒருநாள் வைக்கவும். மறுநாள், பார்க்க, தெளிவாக இருக்கும். இதை வடிகட்டி வேறு பாண்டத்திலிடவும். மூடி, 7சீலை மண்ணால் பூசவும். பூமிப்புடம் வைக்கவும். 1 மண்டலம் ஆனவுடன் எடுக்கவும். பழுப்பு நிறமான குழம்பு இருக்கும். இது பூநீறு அண்டபிண்ட நீறும் சாறு ஆகும். மேலே உள்ள நீர், ஓங்கார செயநீர், இது ரசவாத, கார சாரமாகும். இது அமிர்த சஞ்சீவி. இதை பீங்கான் குடுவையில் இட்டு வைக்கவும்.*

**உகாந்தக் கார செயநீர்**

*போற்றியே, அடியில் நின்ற குழம்பைப் பார்த்தால்*
*பூப்பொறி, போலப் பொறிந்து செம்மேகம் போல்*
*காணும்*
*ஆற்றியே, பொறியைத் தான் கையில் வாங்கி*
*வைத்திடுவாய், சித்திரைநாள் ரவி யெட்டாகில்[3]*
*மாற்றியே, பனியில் மதிரவியில் பரியைத்தான்*
*எடுத்துப் பாண்டமதில் வளமாயிட்டுச்[4]*
*சாற்றியே, பிரணமாம் இந்த வாடைச்*
*சலக குடைத்து[5], நீரில் படி சாத்துவாயே. (367)*

---

1. சஞ்சீவி, 2. பாரே, 3. எட்டதில், 4. விட்டு, 5. குடத்து

## நவகண்ட உப்பு

*சாற்றியே, சமாதி, எலும்பது வினாலே[1] தைல மோர்சேர்*
*வாங்கிப் பாண்டத்திலிட்டு*
*ஆற்றியே, முன் சொன்ன உகாந்த ரச[2] மதிலிட்டு*
*தைலந்தான் சீலையேழும் செய்து*
*ஆற்றியே[3], மண்டலந்தான், பூமிக்குழி[4] தன்னில்*
*வாசியேமூடி*
*அவ்விதமேயாகில்*
*ஆற்றியே[5], பாண்டமதையெடுத்து, மண் வாங்கிப்*
*பாண்டத்துக்குள்ளிருக்கும், நலகண்ட உப்பை*
*வாங்கே.(368)*

(உரை:) நாதாந்த சிரோமணித் தாயின் பாதத்தை வணங்கவும். பின்னர் அடியில் உள்ள குழம்பைப் பார்க்கவும். அது பூ போல மென்மையாக பொறிந்துள்ளதாகவும். செம்மேக வண்ணத்திலும் இருக்கும். இதை கையில் எடுத்துக்கொள்ளவும். சித்திரை மாத வெய்யிலில் எட்டு நாள் வைக்கவும். பின் நிலவு உள்ள பனிப்புடத்தில் வைக்கவும். (1மாதம் பனிப்புடத்தில் வைக்கவும்) பின் பாண்டத்திலிட்டு, 1படி நீரில் சேர்க்கவும்.

எலும்புத்தைலம் 1 சேர் விட்டு, உகாந்த ரசம் விட்டு, ஏழுசீலையைச்சுற்றி, மூடி, மண்புடம் 48 நாள் வைக்கவும். பின்னர்,எடுத்துப் பார்க்க "நவகண்ட உப்பு" காணப்படும்.

## வைத்திய உப்பு

*உப்பான வைத்திய சிந்தாமணி தானிங்கு[6]*
*உலக ருக்கும்,தீவினையோட்டு மிக்குரு தான்*
*அப்பான, வெளுமை நிறம் சக்கரை போலப் பொறியும்*
*அப்பொறியைப் பாண்டத்திலிட்டு, பனிநீர் படிநீர்*
*வார்த்தால்*

---

1. சாமாகிவெல்லும் மதுவினாலே, 2. சபலத்தால், 3. வாழ்த்தியே, 4. பூமிக்குள், 5. பாற்றியே, 6. இதற்கு

*கப்பான்[1], கல் சுண்ணாம்பில் நீரை வார்த்தப்பா*
*சுத்தசலம் தெளித்தது போலெல்லாமாகும்*
*மப்பான சலமதனைப்[2] பீங்கானிலிறுத்து*
*மண்டலங்கால், ரவியில்வைத்தால் வைத்திய*
*வுப்பாமே[3]. (369)*

(உரை:) நவகண்ட உப்பு, வைத்தியங்களுக்கு சிந்தாமணி போன்றது. உலக மக்களின் தீவினைகளை நீக்கும். வெள்ளை நிறமுள்ள சர்க்கரை போல பொறியும் தன்மை கொண்டது. மண் பாண்டத்தில் போட்டு, பனி நீர் 1 படி ஊற்றவும். பின்னர் தெளிவாக வடிகட்டி, 1 மண்டலம் சூரிய வெளிச்சத்தில் வைக்க, வைத்திய உப்புக் கிடைக்கும்.

*மண்டலங்கால் ரவி முகத்தில் வைத்தீராகில்*
*வாலை செயநீர் அருவியது பேலே பாயும்*
*அண்டமெல்லாம் நிமைந்து நின்ற பூரணத்தைக்*
*காண, ஆதியிது வாலை செயநீர் மண்டலந்தான்*
*தொண்டால் தொண்டரைப் போலா, இடுவார்*
*வாசி சித்தர் துதி[4] செய்து வாலை செயநீர் பதனம்*
*பண்ணு*
*சண்டமாருதக் காலாக்கினி போலாகில்*
*சத்ராதினோர்[5], எல்லாம் சாதிக்குந்தானே6. (370)*

(உரை:) 1 மண்டலம் சூரியபுடம் வைக்க வாலை செயநீர் அருவியைப் போல வரும். இதை மண்டலம் உட்கொண்டால் எல்லா வகையான சித்துகளையும் கையாள முடியும். எனவே இதை பக்குவமாக வைக்கவும்.

---

1. மப்பான, 2. சவமதனை, 3. முண்டாமே, 4. தூதுபோய், 5.சித்தி.

பாடல் 369க்கும் பாடல் 370க்கும் பொருல் மாறுபாடு உல்ளது. பாடல் 369ல் வைத்தியழுப்பு செய்முறையும், பாடல் 370ல் செயநீர் பற்றியும் உள்ளது. முரண்பாடாக பொருத்தமின்றி உள்ளது.எனவே பாடல்கள் மாறியிருத்தல் வேண்டும்

தானான உப்பதனைப் பீங்கான் தனிலிட்டுத்
தருவான, உகாந்த செயநீர்க்கல் சரியிட்டு
வானான, பீங்கானதை ரவிமுகத்தில் சாமம்
வைத்திடு களீறியது[1] வெண்பாகாகும்[2]
ஆணவமா, அப்பாகை[3] பொட்டகத்தில் பத்து நாள்
அதையாற்று[4], அறுபத்து நாலு நாள் சென்றால்
கேளு போகரம் ஆதியுப்பு விதின் பேர்
தேசமதில் பண்டிதர்க்கு, செயக்குரு தானாமே. *(371)*

*(உரை:)* வைத்திய உப்பை பீங்கானில் இடவும். உப்புக்கு சமஎடை உகாந்த செயநீர் உப்புக்கல்லைப் போடவும். ஒரு சாமம் சூரிய புடமிட வெண்மையான பாகு கிடைக்கும். 10 நாட்கள் பெட்டகத்தில் வைக்கவும். 64நாட்கள் செல்ல, பண்டிதர்களுக்கு ஆதியுப்பு உண்டாகும். இது செயக்குருவாகும்.

செயலான்[5] முப்பு பீங்கான நிறைத்தான்
செப்பினோம் அதன் வர்ணம் சந்திரன் போலாகில்
அயமான, மனோன்மணி பூசையது, வேது
அப்பூவை பீங்கானில் அருள் பெறவேயிட்டு
வெயமான6, நாதவிந்து இரண்டு சேர் கொண்டு
விட்டு அதிலிரு சாமம் மெழுகு போலாட்டி
மயமான, மெழுகதனை வழித்துப்பில்லை செய்து
வைத்திய சிகாமணி யென்று வாழ்த்துவாயே. *(372)*

*(உரை:)* வைத்திய உப்பைப் பீங்கானில் நிறைக்கவும். அதன் வண்ணம், நிலவைப் போல வெண்மையாகும். பின்னர் இரசம், கந்தகம் 2 சேர் கொள்ளவும். கல்வத்திலிட்டு, வைத்திய உப்புடன் ஒரு சாமம் அரைக்க, மெழுகு கிடைக்கும். இதை வில்லை செய்யவும். இதை "வைத்திய சிகாமணி" என்று வாழ்த்தலாம்.

---

1. நீறியது, 2. மாவாகும், 3. அப்பாலை, 4. காத்து, 5. செயமான.

369-வது பாடலுக்குப் பின்னர் 371-வது பாடல் வருவதாகக் கொள்ளலாம்.

## வைத்திய முப்புச் சுண்ணம்

வாழ்த்துவாய், பில்லையதை[1], ரவிமண்டலமே வைத்து
வறமறகவதின்[2] பிறகு பில்லையதைக் கொண்டு
ஆழ்த்துவாய், அதன் மேலே நாதவிந்து சிலை
அருள் பெறவேயெழுந்து[3], அன்பாகச்[4] செய்து
தாழ்த்துவாய், சிலாசத்து, துத்திநாகமிரண்டு
நளினமதாய், ஒவ்வொன்று மஞ்சு பலந்தாங்கி
மாழ்த்துவாய், அண்டவிந்து[5] விட்டு வைத்துக் குகைபோல
மகத்தான சதுர மதாய் வில்லை போல் செய்யே. *(373)*

செய்து ரவியுலரவைத்து, குகை தனை எடுத்து
செயம் பெயம் பெறவே, அதற்குள்ளே
பில்லையதை வைத்து
அய்து[6] விந்து, சிலையேழு அன்பாகச் செய்து
அண்டமேழு கவசம் செய்தும், மண்
சீலை யேழு செய்தும்
நைது[7]ரவி முன்று நாளுலர[8] யதைச் செய்து
நளின மதாய் எடுத்ததனை மயில்புடந்தான் போட்டால்
வைதுமது[9] சந்திரன் போல் நீறியது போகும்
ஆனாக்கால், குகையெடுத்து சுன்னமதை வாங்கே. *(374)*

வாங்குவாய் வைத்தியமுப்புச் சுன்னமது பாரீர்
மைந்தனே யதை எடுத்துச் சீசாதன்னிலிட்டு
ஆங்குவாய், சோடச நாளேழும் செய்து
ஆத்தாள் மனம் பூரிக்க அன்பு செய்தையா
நாங்குவாய், தேவதைகள் பூசையதைச் செய்து
நலமான சுண்ணமதைப் பணித்து வணங்கி[10]
தாங்குவாம்[11], சின்னமிதால்[12] வாதவைத்தியமாடும்
சகலதொழில், வசியமுதலெட்டு மாடும்பாரே. *(375)*

*(உரை:)* ஒருமண்டலம் சூரியபுடத்தில் பில்லையை வைக்கவும். பின்னர் எடுத்து வில்லையின் மேலே, இரசம்,

---

1. வில்லை, 2. வரமாக அதன், 3. எழுமது, 4. அன்பாய், 5. எடை, 6.ஐந்து, 7.நைய்த்து, 8. நாளுலர, 9. நைய்து, 10.நளிமான சுண்ணமிதால், 11.தாங்குவாய், 12. சுண்ணமிதால்.

கந்தகம், மனோசிலை இவற்றை வைக்கவும். வில்லையின் அடியில் சிலாசத்து, நாகம் 5 பலம் வைக்கவும். முட்டையை அரைத்துக் குகை போலச் செய்து கொள்ளவும். இதை சூரிய ஒளியில் உலர்த்தவும். பின்னர் வில்லையை இதில் வைத்து கவசம் செய்து 7சீலை மண் கொண்டு மூடவும். மூன்று நாள் சூரியபுடம் வைத்துப் பின் மயில் புடம் போட்டால், நிலவு போன்ற வெண்மையான சுண்ணம் கிடைக்கும். இது வைத்தியமுப்புச் சுண்ணம் இதை எடுத்து 7 நாள் பூசை செய்யவும். இதனால் இரசவாதம், மருத்துவ முதலானவை களுக்கும் மந்திர வேலைகளுக்கும் அடிப்படையாக இருக்கும்.

பாரப்பா, யோகத்துக்கும் மவுனத்துக்கும்
பரிவான, வேதாந்த ஞானத்துக்கும்
வேரப்பா, இச்சுண்ணத் தொட்டாடு இயல்பான
வேதையெல்லாம் மீதி நாலாகும்[1]
தேரப்பா, பற்பத்துக்கு, லேகியத்துக்காகும்
செந்தூர, சுண்ண முதல் சித்தத்துக்குமாகும்
கூரப்பா, குளிகைக்கும், சாரணைக்குமாகும்
கொடிய கட்டு, மாத்திரைக்கிதுவே யாகும்
நேரப்பா சகல பூபதிக்குமாகும்
கொடி[2] வித்தைக்கும் நிலையிது தாமே. *(376)*

இது வான, திராவக மாம் செயநீர்க்காகும்
எடுத்தாடு, முறைக் கெல்லாம், சுண்ணம் வேண்டும்
அதுவான, வாதியது வைத்தியக் குருவாகும்
ஆருக்கு வெளிவிடாதே, இந்த வித்தை
பதுவான, பண்டிதரே, இந்த முறையறிந்து
பாடுபட்டுத் தொழிலாட, பலிக்கும் சித்தி
சதுவான, பேய்மக்காள் மலைத்திடாதே
சாதித்தாலிக்குருவைக் கொண்டு சாபம் போமே. *(377)*

சாபமெல்லாந் தொலைத்துவிடும் சத்தியவசமானால்
சகல தொழில் கருக்கெல்லாந்தானே யாடும்

---

1. இதனாலாகும், 2. நிகழ்கோடி. 376ம் பாடலில் 2அடிகள் மிகையாக உள்ளன.

வாயமெல்லாம் மனிதர் செய்யும் வாமமதுக்கெல்லாம்
மாணாக்கா வல்லி வசியமது வானால்
லாபமென்ன, அறுபத்து நாலுஞ்சித்தி, சித்தி நாதாந்த
வைத்தியக்குரு வசமானால்
நாபமென்னும், நாதாந்த சித்தராவார்[1], மூன்று
நாம் சொன்னோமிந்த, எண்ணூறு மூன்றாம்[2]
காண்டமாமே. *(378)*

ஆமப்பா புலத்தியனே அய்யா, கேளு
அருளினோம் வாதநூல் ஆயிரந்தான், நிகண்டு
ஆமப்பா அதைச் சுருக்கி[3], எண்ணூறாக
வசனித்தோம், காண்டமெட்டு இந்நூல் பீடம்
வாமப்பா நூற்று முப்பது பாடலுக்குள்
வசனித்தோம், ஒவ்வொன்று காண்டமெட்டாய்
நாமப்பா, சொல்லிவிட்டோமிந்த நூல்
நல்வினை செய், உத்தமர்க்கே வாய்க்குந்தானே. *(379)*

*(உரை:)* பாடல் *376* முதல் *379* வரை சுண்ணத்தின் இயல்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. யோகம், பேசாத நிலை, (மவுனம்) வேதாந்த அறிவு என்பன இச்சுண்ணத்தால் ஏற்படும். இரசவாதத்திற்கும் இது பயன்படும். மருத்துவத்தில் பற்பம், லேகியம், செந்தூரம், சுண்ணம், சாரணை, குளிகை, கட்டு, மாத்திரை என்பன செய்ய உதவும். (மணி) திராவகம், செயநீர் என்பன தயாரிக்கலாம். மருத்துவமுறைகளுக்கு அடிப்படையான அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்து செய்யலாம். எண்ணூறு பாடல்களில் மூன்றாம் காண்டத்தில் கூறியுள்ளேன். புலத்தியரே கேட்கவும். இரசவாதநூல் *1000* பாடல்களில் செய்தேன். அதைச் சுருக்கி, *800* பாடல்களில் பஞ்சகாவிய நிகண்டை இயற்றினேன். இந்நூல் அடிப்படையானது. எட்டு காண்டங்களைக் கொண்டது. காண்டம் *130* பாடல்களைக் கொண்டது. நல்லவர்களுக்கே இது கிட்டும். செய்முறையும் வெற்றி பெற இயலும்.

---

1. சித்தர், 2. மூன்று, 3. குறுக்கி.

## நேர்வாளப் பெயர்கள்

*வாய்க்கின்ற தந்தி, பீசவந்தி, பீசமென்றும்*
*வசனித்தோம், நந்திபீசம், சிறந்த பீசம்*
*ஆய்கின்ற அனல் விந்தை[1] யென்றும் பேரு*
*அருளினோம் செவ்வாலங் கொட்டையென்றும் பேரு*
*மாய்கின்ற, மனவாளமென்றும் பேரு*
*மகத்தான தீரோம்பமென்றும் பேரு*
*காய்க்கின்ற[2], தனாவுதை சந்தி[3] யென்றும் பேரு*
*தருவித்தோம், வாளு மென்ற நேர்வாளத்தின் பேரே.* ***(380)***

*(உரை:)* **தந்தி, பீசவந்தி, பீசம், நந்திபீசம், சிறந்த பீசம், அனல் விந்தை, செவ்வாலங்கொட்டை, மனவாளம், தீரோம்பம், உதயசந்தி என்பன நேர்வாளப்பெயர்கள்.**

## வைத்திய முப்புவின் பெயர்கள்

*பேரான, வைத்தியத்தின் முப்பின் பேர், கேள்*
*பிரபல்லிய மெத்தவுண்டு, பேசார் பேசார்*
*வாரான மதிமயக்கி, வெள்ளைப் பூடு*
*மகத்தான, திகைப்பூடு[4], சல்லிப்பூடு*
*சேரான, சிறியாநங்கை, பிரியாநங்கை[5]*
*செப்பினோ மழுகண்ணி, தொழுகண்ணி யென்றும்*
*வேரான வெண்சாரை, குலாமல்லி யென்றும்*
*விளக்கினோம், வெண் நாகக்கல்[6]லென்றும், வைத்திய முப்பின்பேரே.* ***(381)***

*(உரை:)* **வைத்திய முப்பின் பெயர்கள், மதிமயக்கி, வெள்ளைப்பூடு, திகைப்பூடு, சல்லிப்பூடு, சிறியாநங்கை, பெரியாநங்கை, பெண்சாரை, குலாமல்லி, நாகக்கல் என்பன.**

---

1. வித்தை, 2. தாக்குகின்ற, 3. சந்திரன், 4. சிகைப்பூடு, 5. பெரியாநங்கை, 6.வெண் நாகல்.

முப்பான, தேசியெரு, கேசியெருவென்று
மூதண்ட உடன்கட்டையே றுவரென்றும்
அப்பான,வாதியொரு[1],வந்தவெருயென்றும்
அருளினோம், வஞ்சியெரு என்றும் பேரு
செப்பான, தில்லையெருஎன்றும் பேரு
தீயெரு, தானென்றதற்குப் பேருண்டாச்சு
அப்பான, மண்டவெரு, பிண்டஎரு தானென்றும்
வசனித்தோம், புலத்தியனே சமாதிஎருவென்றும்
பேரு. *(382)*

**ஆதி அண்ட உப்பின் பெயர்கள்**

ஆதியென்ற முப்புவினண்டப்பேர்கள்
அருளுகின்றோம், சுந்தரமேயருளக் கேள்
வாதியென்ற, வெண் கரத்தினண்டமென்றும் பேரு
வளமான, கருங்காகம், செம்பருந்தண்ட[2] மென்றும்
காதியென்ற, கருங்கோழி, வெண்கோழியண்ட மென்றும்
கவுதரா அண்டமென்றும், கூறியண்டமென்றும்
நீதி[3]யென்றக்கருங்கூளி, மாடப்புறா அண்டமென்றும் பேரு
நேரான, கருவண்டமென்று, ஆதியண்டபிண்ட
உப்பின் பேரே. *(383)*

பேரென்ற பேரெல்லாம் பொறுக்கிமணி போலே
பேசினோம், மூன்றாம் காண்டம் பெருமை மெத்த
நூரென்ற[4], பாடல் நூற்று முப்பதுக்குள்
நுண்மையாய் சொல்லிவிட்டோம் அதீதப்பேர்கள்
ஆரென்ற, மாமுனிவனோது மொழி, எண்ணூறு
அனைவருமே, இனமொழியைக் கண்டருந்தான்
வாழி
தேரென்ற, மூன்றாம்[6] காண்டம், புலத்தியனே, அய்யா
செப்பினோம், முழுது முற்றும், பூரணமா
முற்றே. *(384)*

---

1. வாதியெரு, 2. செம்பருந்தாண்டம், 3. ஆதி, 4. தூரென்று, 5.ஒளி, 6.மூன்று.

*(உரை:)* தேசி எரு, கேசரி எரு, உடன் கட்டை ஏறினவன், வாதிஎரு, வந்த எரு, வஞ்சி எரு, தில்லை எரு, தீஎரு, அண்ட எரு, பிண்ட எரு, சமாதி எரு என்பன. வெங்கார அண்டம், கருங்காகம், செம்பருந்து, கருங்கோழி அண்டம், வெண்கோழி அண்டம், கவுதாரி அண்டம், கூளி அண்டம், கருங்கூளி அண்டம், மாடப்புறா அண்டம், கழுவண்டம் என்பன ஆதியண்ட உப்பின் பெயர்கள்.

இப்பெயர்களைத் தொகுத்து மணி போலாக்கி யுள்ளோம். மூன்றாம் காண்டத்தில் 130 பாடல்களில் நுணுக்கமாகச் சொல்லிவிட்டோம். 800 பாடல்களில் இதை இயற்றியுள்ளேன். மூன்றாம் காண்டத்தில் முழுமையாக எடுத்துக்காட்டியுள்ளேன்.

## நான்காம் காண்டம்
### வைத்திய காண்டம் (காப்பு)

*பூரணமாம், காவிய நூல் நிகண்டே சொல்வோம்*
*புலத்தியனே, மனமுகத்து புகலக் கேளும்*
*வாரணமாம், பூமாது வாலை தேவி*
*வசனித்தாளதற்கு மவுனம் சொன்னாள்*
*காரணமாம், கருக்களெல்லாம் கண்டு தேறி*
*கருக்குக் குருவாயிந்த எண்ணூறு கவியாய் பாடி*
*சீரணமாய், போகாமல் சித்தருக்குச்*
*செப்பினோம், நாலாங் காண்டத்திறமதாமே. (385)*

*திறமாகச் சொல்லுகின்றோம், இரண்டு காண்டம்*
*செப்பியதோர், மூலியிட கூறெல்லாந்தான்*
*வரமான, வனமூலி, இப்பூண்டின் கூறு*
*மகத்தான விருட்சத்தின், மரத்தின் கூறும்*
*பரமான மிருகங்கள், பட்சிக் கூறும்*
*புகழ் பெற்ற[1], சீவசந்து சரக்கின் கூறும்*
*தரமான, கருங்களிடப்பாவைக் கூறும்*
*தருணை[2] பெறச் சொல்லுகின்றோம்,*
*கருவாய்த்தானே. (386)*

---

1. புகழ்மெத்த, 2. கருணை.

கருவான, முன்னோர்கள் மறைத்த தெல்லாம்
கணக்காகப் பாடுகிறோம், இந்த எண்ணூறில்
உருவான பூட்டெல்லாம் வெளியாய்த் தோன்றும்
உதித்த கருவான, முதலண்டம் தோன்றும்
அருவான, திரையகற்றி, பூரணந்தான் போல
அருளுகின்றோம், தீபவொளி சோதிகாண
வருவான, பூமலரின் வாசம் போல
வசனிப்போம், புலத்தியனே மகிழ்ந்துபாரே. *(387)*

(உரை:) முழுமையான பஞ்ச காவியத்திற்கான நிகண்டைச் சொல்லுகின்றேன். வாலை தேவி அன்னை இயற்ற ஆணையிட்டாள். இந்நூலுக்கு அடிப்படையானவைகளை 800 பாடல்களாக இயற்றினேன். அழியாமலிருக்க, சித்தர்களுக்குக் கூறினோம். திறமையுடன் 4ம் காண்டத்தைக் கூறுகின்றேன். காட்டில் விளையும் தாவரங்கள், பூண்டுகள், மூலிகைகள், மரங்கள், உயிரினங்கள், பொருட்கள் என்பன இரண்டு காண்டங்களில் எடுத்துரைக்கின்றேன். முன்னோர்கள் மறைத்த பொருட்களை எல்லாம், 800 பாடல்களில் வெளிப்படுத்துவேன். திரையை நீக்கி, தீப ஒளியைக் காண அருளுகின்றேன். பூவின் மணம் போல, மனம் குளிர வீசும்.

### விட்ணு காந்தி

மகிழ்ந்து பார், கருடாபதி யென்றும் பேரு
மகத்தான, நாகஞ்சா[1] யென்றும் பேரு
ஆழ்ந்து பார்[3], காகந்தமென்றும் பேரு
கருவான, வெண்ணு[3] குட்டி யென்றும் பேரு
அகழ்ந்து பார், திருமால் காந்தி யென்றும் பேரு
அடவான, நிலத்தழக னென்றும் பேரு
நெகிழ்ந்து[4] பார், திருடி நாயகன்சோதி[5] யென்ற
தெளிவான விட்ணு காந்தியதற்குப் பேரே. *(388)*

---

1. நாலாசாம், 2. தவழ்ந்து, 3. பெண்ணு, 4. நெகிழிந்து, 5. ஒளி.

(உரை:) கருடாபதி, நாகஞ்சா, காகந்தம், வெண்ணுருட்டி, திருமால் காந்தி, நிலத்தழகன், திருடி நாயகன், சோதி என்பன விட்ணு காந்தியின் பெயர்கள்.

**ஆடாதோடையின் பெயர்**

அதுவான, அட்டாச்சரம், வாசரதியென்றும்
ஆடஞ்சரம், நாலோடகமென்றும் பேரு
தவான, தடியாத்தடை ★ யென்றும் பேரு
தருவான, தூவனாதிபதியென்றும் பேரு
மதுவான, யகோதேவதமென்றும் பேரு
மாட்டினோம், அலங்கார சரமென்றும் பேரு
வதுவாகச் சொல்லிவிட்டோம் இந்த எண்ணூறு
வசனித்தோம், ஆடாதோடையதற்குப் பேரே. *(389)*

(உரை:) அட்டாச்சரம் (திருமாலின் எட்டெழுத்து) வாசரதி, ஆடஞ்சரம், நாலோடகம், தடியாத்தடை தூவனாபதி, யகோ, தேவதம், அலங்காரசரம் என்பன ஆடாதோடையின் பெயர்கள்.

**சிறுகீரை**

வசனித்தோம் நாகநாத மென்றும் பேரு[1]
வளமான சாகிலியனென்றும் பேரு
நகனி[2]த்தா ரோதய மென்றும் பேரு
நளினமென்ற, சாரிதங்களென்றும் பேரு
வெதனித்த[3]ஒக்கனி[4]மாதரென்றும் பேரு
விளங்கியதோர், முகச்சுருதியென்றும் பேரு
தெசனித்த கனர் வாகம், கூண்டி என்றும் பேரு
தென்பான்,சிறுகீரையிதற்குப் பேரே. *(390)*

---

★தண்டை மாட்டினோம்....... என்ற அடியானது சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

1. வசனித்த மேகநாதம் என்றும் பேரு, 2. நானித்த, 3. விசனித்த, 4.வோக்கி.

*(உரை:)* நாகநாதம், சாகிலியன், தடரோதயம், சாரிதங்கள், ஒக்கனி மாதர் முகச்சுருதி, கனர்வாகம் கண்டி என்பன சிறுகீரையின் பெயர்கள்.

### வாழையின் பெயர்

தென்பான, ரோக்கமென்றும்[1] பேரு
தெளிவான, கதலியென்றும் பேரு[2]
தன்பான[3], தாயைக் கொன்றான் என்றும் பேரு
தற்பயல் பதேத்தகமென்று[4] இதற்குப் பேரு
அன்பான, வங்குரமென்றும் பேரு
அருனினோமதா, மலயமென்று இதற்குப் பேரு
வன்பான, தேவகன்னியென்றும் பேரு
வளமான, சுக்ர மென்றும் வாழையின் பேரே. *(391)*

*(உரை:)* ரோக்கம், கதலி, தாயைக் கொன்றான், தற்பயல், பதேத்தம், வங்குரம், மலயம், தேவகன்னி என்பன வாழையின் பெயர்கள்.

### வெற்றிலையின் பெயர்

என்றான, நாகவல்லியென்றும் பேரு
இயல்பான, சீதாங்கினி[5] யென்றும் பேரு
வன்றான, வடிவழகி யென்றும் பேரு
வளமான, சித்திரப் பெண்ணென்றும் பேரு
நன்றான, அக்கணிதானென்றும் பேரு
நலமான, சுந்தரமாதென்றும் பேரு
கென்றாகினி, முக்கழகியென்றும் பேரு
கெணிதமென்ற, உத்தரியென்று வெற்றிலையின்
பேரே. *(392)*

---

1. ரோசுகம், 2. இயல்பான சிதாங்கனி, 3. கன்பான, 4. தற்பயப்புத் தேத்தம், 5. சீதளம்

★அன்பான என்ற வரியானது சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

(உரை:) நாகவல்லி, சீதாங்கினி,வடிவழகி, சித்திரப் பெண், அக்கணி, அந்தரமாது, முக்கழகி (வெற்றிலை பாக்கு,சுண்ணாம்புடன் உண்பதால் ஏற்பட்டது) என்பன வெற்றிலையின் பெயர்கள்.

## கம்மாறு வெற்றிலை

இனமான, கவீழ்தியென்றும் பேரு
இத்தகத்தாரணியென்று, இதற்குப் பேரு
வளமான வை போக நாதியென்றும் பேரு
வளமான, திலோத்தமை என்றதற்குப் பேரு
யனமான, அபரஞ்சி யென்றும் பேரு
அல்லோரிடம்,வசீகரத்தி[1] என்றும் பேரு
செனமான[2] , சிங்காரவல்லிக்கொடி என்றும் பேரு
செப்பினோம் கம்மாறு வெற்றிலையின் பேரே. *(393)*

(உரை:) கவீழ்தி, இத்தகத்தாரணி, போக நாதி, திலோத்தமை, அபரஞ்சி, வசீகரத்தி, சிங்கார வல்லி என்பன கம்மாறு வெற்றிலையின் பெயர்கள்.

## கொட்டைப்பாக்கு

செப்புவேன், முதூசு[3] யென்றிதற்குப் பேரு
செயலான, மூர்கண்டல[4] னென்றும் பேரு
அப்பக்கேளாளி வாசனென்றும் பேரு
அடவான, வாவொட்டானென்றும் பேரு[5]
தப்பக்கேள், தனஞ்சயனென்றும் பேரு
தருவான, கோடக்கனென்றும் பேரு
மப்பக்கேள், மண்டலிகள் தராசனென்றும் பேரு
மகத்தான கொட்டைப் பாக்கதற்குப் பேரே. *(394)*

(உரை:) மூதூசு, மூர்க்கண்டலன், வாசன், வாய் ஒட்டான், தனஞ்செயன், கோடக்கன், மண்டலிகன், தராசன் என்பன கொட்டைப்பாக்கின் பெயர்கள்.

---

1. வைடூரியம் என்றும் பேரு, 2. சினமான, 3 மூதூசுன, 4. முற்கண்டன, 5.வரோடன். 393வது பாடலில் அந்தாதியில் இப்பாடல் இல்லை.

### நெல்லிக்காயின் பெயர்கள்

அதுவென்ற, வந்திக் கோரமென்றும் பேரு
சன்னத மா[1]மயல், நதிக்காரனென்றும்[2] பேரு
யது வென்ற, ஆமலகியென்றும் பேரு
யதுவான, அமிர்தமென்று மிதற்குப் பேரு
மதுவென்ற, மாமலக்காயென்றும் பேரு
வதுவென்ற, அவுடாஞ்சி[3] துத்தரிகமென்றும்
அருளினோம், நெல்லிக்காயிதற்குப் பேரே. *(395)*

*(உரை:)* வந்திக் கோரம், சன்னத மாமயில், நதிகாரன், ஆமலகி (வடமொழிப் பெயர்) அமிர்தம், ஆமலக்காயன், ஆமலகம், அவுடாஞ்சி, துத்தரிவு என்பன நெல்லிக்காயின் பெயர்கள்.

### நெல்லிப்பருப்பின் பெயர்

அருளான, தாணாக்கா[4]யென்றும் பேரு
அடவான, ஆமலக மென்றும் பேரு
மருளான, மங்களக் காயென்றும் பேரு
மடவான, மாம்பல மென்றும் பேரு
வருளான, குருவழம்பு[5] மென்றும் பேரு
வளமான, பூரத்தங்க மென்றும் பேரு
உருளான, ஊத்திர யோனி[6] , வாணாக்காயென்று[7]
உற்பவித்தோம், நெல்லிப் பருப்பின் பேரே. *(396)*

*(உரை:)* தாணாக்காய், ஆமலகம், மங்களக்காய், மாம்பலம், குருவழம்பம், பூரத்தங்கம், ஊத்திர யோனி, வானாக்காய் என்பன நெல்லிப்பருப்பின் பெயர்கள்.

---

1. சன்னமதாம், 2. யலாந்திசாரம், 3. வித்தவதம், 4. தானாக்கம், 5.மாம்பலம், 6. ஊந்திர, 7. வானக்காய்.

## நெல்லி இலையின் பெயர்

உடலான, கவரன சமென்றும்[1] பேரு
உக்கிரமஞ்சயிலை என்றுமிதற்குப் பேரு
அடவான்[2], அமிர்தப்பச்சை[3] யென்றும் பேரு
அகார பித்த முறியிலை என்றும் பேரு
படலான, வக்கிரமதி[4]யென்றும் பேரு
அகலாத, செஞ்சிலை யென்றும் பேரு
மடலான, மகிவாகி, உதயபாணி யென்றும்
வசனித்தோம், நெல்லியிடயிலையின் பேரே. *(397)*

*(உரை:)* கவரநசம், உக்கிரமஞ்ச இலை, அமிர்த பச்சை, பித்தமுறி, வக்கிரமதி, செஞ்சிலை, மகிலாகி உதயபாணி என்பன நெல்லி இலையின் பேரே.

## பிரமி இலைப் பெயர்

பேரான முளைச்சாறு[5] மூலியென்றும் பேரு
பேசுகின்றேன், மூதண்டக் கன்னி[6] யென்றும் பேரு
வாரான, வங்கமூலி யென்றும் பேரு
மதுரதிப் பூடென்றிதற்குப் பேரு
தேரான, சிங்கமாமூலி யென்றும் பேரு
தெகட்டாத மாலியென்று மிதற்குப் பேரு
யாரான[7], வாசுரங்க மூலியென்றும் பேரு
அகண்ட, பூண்டித்துக்குப் பிரமியின் பேரே. *(398)*

*(உரை:)* முளைச்சாறு மூலி, மூதண்டக் கன்னி, வங்க மூலி, மதுரதிப்பூடு, சிங்கமா மூலி, தெகட்டாத மாலி, சுரங்க மூலி, என்பன பிரமியிலையின் பெயர்கள்.

---

1. வேற்படை, 2 மடலான, 3. விழுந்த, 4. வைக்கிரதி, 5. முனை, 6.மதுரதிப்பூடென்றும், 7. பாரான,

## எருக்கிலையின் பெயர்

எத்தான,அட்டமூலி யென்றும் பேரு
இயல்பான[1], வாத்தென்று மிதற்குப் பேரு
அத்தான, வாதமென்றிதற்குப் பேரு
அடவான வர்க்க நிலை யென்றும் பேரு
வித்தான வாகுரூடமென்றும் பேரு
விளங்கியதோர் நாதிருடி என்றும் பேரு
மகத்தான, மங்கையோ[2], சன்மார்க்க மென்றும்
அருளினோம், எருக்கினிட இலையின் பேரே. *(399)*

(உரை:) அட்டமூலி, வாத்து, வாதம், வர்க்க நிலை, வாகுரூடம், நாதிருடி, மங்கை, யோசனை, சன்மார்க்கம் என்பன எருக்கினிலைப் பெயர்கள். (சமரச சன்மார்க்கம் இராமலிங்க சுவாமிகளின் கொள்கை,பிற்கால வழக்கு ஆகும். எருக்கிலை இப்பெயர் பெற்றுள்ளது விந்தையாக உள்ளது.) இச்சொல் இடைச் செருகலாதல் கூடும்.

## எருக்கம் பாலின் பெயர்

அருளினோம், மதிக்கடப்பாலெ[3]ன்றும் பேரு
மகத்தான, ரவி சாதிப்பாலென்றும்[4] பேரு
அருளினோம், மான்ற கம்பா[5] லென்றும் பேரு
அருளான, விந்தனப்பா லென்றும் பேரு
அருளினோம், மனோதயப் பாலென்றும் பேரு
வளமான, புகழ் மங்கைப் பாலென்றும் பேரு
செருளினோம், சீவகப்பால், சிவகாமப்பால்
செப்பினோம், எருக்கினுட பாலின் பேரே. *(400)*

(உரை:) மதிகடப்பால், ரவி சாதிப்பால், மான்றகம் பால், விந்தனப்பால், மனோதயப்பால், புகழ் மங்கைப் பால், சீவகப்பால், சிவகாமப்பால் என்பன எருக்கின் பாலின் பெயர்கள்.

---

1 இயலான, 2. யோசனை, 3.விகடப்பால், 4. சந்தி, 5. மாறைகம்பால்.

### வெள்ளெருக்கின் பெயர்

செப்பக்கேள், அளக்கமென்றிதற்குப் பேரு
செயலான, வழுந்தமென்[1] றிதற்குப் பேரு
வப்பக்கேள், வேதநாதமென்றும் பேரு
வளமான, வங்கணந்தா னென்றும் பேரு
நப்பக்கேள், நாதகிங்கண மென்றும் பேரு
நலமான, பரமோதய மென்றும் பேரு
மப்பக்கேள், பகவனாதி, தேவனாதி[2] யென்றும்
மடவான, வெள்ளெருக்கனதற்குப் பேரு. *(401)*

*(உரை:)* அளக்கம், வழுந்தம், வேநாதம், வங்கணத்தான், நாத கிங்கணம், பரமோதயம், பகவன், ஆதி தேவனாதி என்பன வெள் எருக்குப் பெயர்கள்.

### குப்பைமேனியின் பெயர்

மடவான, திரிபுரமெரித்தானென்றும்
மகத்தான, திருமேனி, அழகியென்றும்
அடவான, அண்டகமென்[3] றிதற்குப் பேரு
அருளான, சுரூப நாயாகி யென்றும் பேரு
வடவான, பைரவிஎன்றதற்குப் பேரு
மாய கன்னி வால் பருதியென்னும் பேரு
செடலான்[5], மேனகை வாரி யென்றும் பேரு
செயலான, குப்பை மேனியதற்குப்பேரே. *(402)*

*(உரை:)* திரிபுரமெரித்தான், திருமேனி, அழகி, அண்டகம், சொரூப நாயகி, பைரவி, மாய கன்னி, வால்ப்பருதி, மேனகை, வாரி என்பன குப்பை மேனியின் பெயர்கள்.

### நிலவேம்பின் பெயர்கள்

செயலான, பூமிநிம்ப மென்றும் பேரு
செயபூமி, சிம்ம மென்றிதற்குப் பேரு

---

1. வழுத்தம், 2. தேவந்தி, 3. வட்டகம், 4. நாதி, 5. சேனலான

மயலான, தறுனாறுதி யென்றும் பேரு[1]
அரிட்ட மென்று இந்திரரேகை யென்றும் பேரு
கயலான, களங்க[2] மென்றிதற்குப் பேரு
கவுடகம் எறிதற்குப் பேருண்டாச்சு
நயலான, ஆட்சஞ்ச மென்றும் பேரு
நளின மென்ற, நிலவேம்பினதற்குப் பேரு. *(403)*

*(உரை:)* நிலவேம்பின் பெயர்கள், பூமிநிம்பம், சிம்மம், அரிட்டம், இந்திரரேகை, களங்கம், கவுடகம், ஆட்சஞ்சம் என்பன.

**சிவனார் வேம்பு**

நளினமென்ற, தேவதந்தமென்றும் பேரு
நனிமான, சேவுகன், பூண்டிதற்குப் பேரு
கொளின மென்ற, கூத்த வாதி யென்றும் பேரு
கூர்மகன்னி யென்றிதற்குப் பேருண்டாச்சு
தெளினமென்ற, திருவஞ்சகன்[3], திருக்கையத்தானென்றும்[4]
தெளிவான,முப்புரமாலியென்றும் பேரு
செளினமென்ற, மூலகல்[5] நாதி யென்றும் பேரு
செப்பினதோர், சிவனார் வேம்பதற்குப் பேரு. *(404)*

*(உரை:)* சிவனார் வேம்பின் பெயர்கள் தேவதந்தம், சேவுகன், பூண்டி, கூத்தவாதி, கூர்ம கன்னி, திருஞ்சகன், திருகையத்தான், முப்புரமாலி, மூலகல்நாதி என்பன.

**சீவக மூலியின் பெயர்**

செப்பினதோர் கொண்ட[6] காரணி யென்றும் பேரு
செலான, பத்தினிமாயென்றும் பேரு
மப்பினதோர், கேச ரத்தின[7] முடையாளென்று
மகா பாபத்தழகி யென்றும் பேரு

---

1. மயலான வருணாறுதி, 2. கலங்கம், 3. திருவஞ்சகம், 4. கங்கை, 5. மூலக்கற, 6. தெண்ட, 7. கேசுரத்தின்.

அப்பினதோர், கொத்தார் குழலி, அசோகி யென்றும் பேரு
அஞ்சின திரை யென்றுமிதற்குப் பேரு
தெப்பினதோர், சுசிமுகம்[1] மாசி யென்றும் பேரு
தெளிவாகச் சொல்லிவிட்டோம், சீவகமூலியின் பேரே. *(405)*

*(உரை:)* கொண்ட காரணி, பத்தினிமா, கேச ரத்தின முடையாள், பாபத்தழகி, கொத்தார் குழலி, அசோகி, அஞ்சின திரை, சுசிமுகம் மாசி என்பன சீவகமூலியின் பெயர்கள்.

## கீழா நெல்லியின் பெயர்கள்

தெளிவான அவக்கலென்று[2] பேரு
திருவாம்பல் என்று மதற்குப் பேருண்டாச்சு
சளிவான, சங்கனாட்டு, ஈசன்னென்றும் பேரு
சார்வான, சமர்த்தான திரி[3] யென்றும் பேரு
கொளிவான, கோலாவதீகமென்றும் பேரு
கூர்ப்படை, தரைவொன்பட இலை[4] வஞ்சியென்றும் பேரு
மளிவான... ... குட்டக்கலக்கனென்று பேரு
மகத்தான கீழ்காய் நெல்லியதற்குப் பேரே. *(406)*

*(உரை:)* அவக்கல், திருவாம்பல், சங்கனாட்டு, ஈசன், தரி, கோலாவதீகம், கூர்ப்படை, தரை, இலை, வஞ்சி, குட்டக் கலக்கன் என்பன கீழ்காய் நெல்லியின் பெயர்கள்.

## பொடுதலை

மகத்தான, வதிராப்பை[5] யென்றும் பேரு
மகக்கமான, தகரை[6] யென்றும் பேரு
சுகத்தான[7], கன்னி முளை யென்றும் பேரு
காரு கலிப் பாலென்று[8] மதற்குப் பேரு

---

1. சுசி முகம், 2. அகவல், 3. தரி, 4. வேலை, 5. வறுதிராப்பை, 6. யானைக்கீரை, 7. சத்தான, 8. கலிப்பான,

தெகத்தான்[1], திரு முதலாடை [2] என்றும் பேரு
சிங்க முரதப் பூடென்று மதற்குப் பேரு
செகத்தான்[3], சிறு பெண்ணாகி, சீவகநாங்கி
சீராகச் சொல்லிவிட்டோம், பொடுதலையின்
பேரே. (407)

(உரை:) வெதிராப்பை, தகரை, கள்ளி முளை, கலிப்பால், திருமுதலாடை, சிங்க முதரப்பூடு, சிறுபெண், சீவக நாங்கி என்பன பொடுதலையின் பெயர்கள்.

### பெருங்குறிஞ்சானின் பெயர்கள்

சீரான, ஆங்காரவாளியென்றும் பேரு
திருவராடி[4] தாசனென்றும் பேரு
ஊரான, ஓரடி வாலி[5] யென்றும் பேரு
ஊகோ, காய்ச்ச ஓங்காரி யென்றும் பேரு
நாரான, அண்டத்தா கயமென்றும் பேரு
அறியா அண்டத்துக்கும்[6] பேருண்டாச்சு
காரான, வனமுள், ஆளி காரெட்டி, வாசனென்றும்
கருணை பெறச் சொல்லிவிட்டோம்,
பெருங்குறிஞ்சான் பேரே. (408)

(உரை:) ஆங்காரவாளி, திருவராடி, ஓரடி, வாலி, காய்ச்சவோங்காரி, அண்டதா கயம், அண்டம், வனமுள், ஆளி, காரெட்டி, வாசன் என்பன பெருங்குறிஞ்சானின் பெயர்கள்.

### சிறுகுறிஞ்சானின் பெயர்

சொல்லான, முத்துப் பரப்பி யென்றும் பேரு
சொர்ணவாதி, அமதுக[7] மென்றும் பேரு
அல்லான, வடியா நாளுருத்தி[8] யென்றும் பேரு
ஆதலாம் கனி[9] யென்று மதற்குப் பேரு

---

1. தேத்தான, 2. முதலாசை, 3. சிகத்தான, 4. திருவாரடி, 5. வாளி, 6. நாட்டு அறியானேடைக்கும். 7. அமாது, 8. வடியான் உருக்கி, 9. யாதவாக்கினி.

குஷ்லான குழலி தச்சமென்றும் பேரு
சுரான வாடத்தடங்கழி1 யென்றும் பேரு
நஷ்லான நாத அந்தனம் 2, சரிகோடி வஞ்சியென்றும்
நன்றாகச் சொஷ்லிவிட்டோம், சிறு குறிஞ்சான்
பேரே (409)

(உரை:) முத்துப்பரப்பி, சொர்ணாதி, அமதுக வடியாள், உருக்கி, ஆலம்கனி குழலி தச்சம், அங்கழி நாத அந்தனம், சரிகொடி வஞ்சி என்பன சிறு குறிஞ்சானின் பெயர்கள்.

## பெருந்துளசி

குறியான விசபாக மென்றும் பேரு
கூறிய, அலங்கலென்று மிதற்குப் பேரு
திரியானந்தி, கந்து துறை3 யென்றும் பேரு
திருந்தணையென்றதற்குப் பேருண்டாச்சு
அரியான வெருடன், மாதென்றும் பேரு
அருளான திருவாசி, அதாவருமாசி
அரியான4, மாதரழகி யென்றும் பேரு
மகத்தானபெருந்துளசியதற்குப் பேரே. (410)

(உரை:) விசபாகம், அலங்கல், திரியான், அந்தி கந்துதுறை திருந்தணை மாது, திருவாசி, வருமாசி, மாதரழகி என்பன பெருந்துளசியின் பெயர்கள்.

## கருந்துளசியின் பெயர்கள்

பேரறிய, மலர்ச் சுணையாணென்றும் பேரு
பேரான விணுமலர்க் 5கை யென்றதற்குப் பேரு
மாரறிவார், மாதவிரெட்டி8 யென்றும் பேரு
மதுல நாத தசமென்று இதற்குப் பேரு

---

1. துடங்கிழி, 2. நாலையந்தான், 3. திகத்துரை, 4. மரியான, 5. மலர்வேதை, 6.மாதவரெட்டி.

யாரறியார், ஆந்துடனாதி[1] என்றும் பேரு
அறிவான, நரசிங்கி தக்க கருகண்டோங்கியென்றும்
காரறிவார், காமென்ற நதி[2] யென்றும் பேரு
கருவான, கருந்துளசியதற்குப் பேரு. (411)

(உரை:) மலர்ச்சுனை, ஆள், விட்ணு, மலர்க்கை, மாதவரெட்டி, நாததசம், ஆந்துடனாதி, நரசிங்கி, கருக்கண்டோங்கி, நதி என்பன கருந்துளசியின் பெயர்கள்.

## நிலத்துளசியின் பெயர்கள்

கருவான, குழந்தை மதக்கனி யென்றும் பேரு
கடகநாதி, அபநாதி[3] யென்றும் பேரு
அருவான, அங்கை ப்பூடென்றும் பேரு
அடவான, கெளிச்சாறென்றும் பேரு
மருவான, கடங்க மூலி யென்றும் பேரு
மருவாதிக் கொழுந்தென்றதற்குப் பேரு
நிருவான, நிரஞ்சத்தி மூலி யென்றும் பேரு
நிகழ்த்தினோம், நிலத்துளசிய[4] தற்குப் பேரே. (412)

(உரை:) குழந்தை, மதக்கனி, கடகநாதி, அபநாதி, அங்கையப்பூடு, கெளிச்சாறு, கடங்க மூலி, மருவாதிக் கொழுந்து, நிரஞ்சத்தி மூலி, நீலத்துளசி என்பன நிலத்துளசியின் பெயர்கள்.

## சிவத்துளசியின் பெயர்கள்

நிகரான, நிலக்கடகமென்று பேரு
நிரஞ்சனாதிமூலி யென்று மதற்குப்பேரு
அகரான, விடப்பனத்தின் பூடென்றும் பேரு
அரணி மூலி, வசனாதியென்றும் பேரு
மகரான, மாத்துளசியென்றும் பேரு
மண்ணுள்ளி மூலி யென்றுமதற்குப் பேரு
செகரான[5], சிவன் மாலை யென்றும் பேரு
செப்பியதோர், சிவதுளசியதற்குப் பேரே. (413)

---

1. வாதறியா துடனாதி, 2. காமன்ரதி, 3. அனாதி, பனாதி, 4. நீலத்துளசி, 5.சிவரான.

(உரை:) நிலக்கடகம், நிரஞ்சனாதி மூலி, விடப் பனத்தின் பூடு, அரணி மூலி, வசநாதி, மாத்துளசி, மண்ணுள்ளிமூலி, சிவன் மாலை என்பன சிவத்துளசியின் பெயர்கள்.

### மணத்தக்காளியின் பெயர்கள்

பேரெண்ட,உக்கிரமென்றும் பேரு
பேரான புசித மென்றதற்குப் பேரு
நாகரண்ட, நரசி[1] வாலென்றும் பேரு
நால்வரோதய[2] மென்றதற்குப் பேரு
ஆண்ட, ஆமையா[3], மையாடை[4] நயனமென்றும்[5] பேரு
பல்கண்ட[6] னென்ற தற்குப் பேருண்டாச்சு
மாரெண்ட, கங்கைச் சாரதி[7] யென்றும் பேரு
அளவற்ற, பேரிதற்கு, மணத்தக்காளியின்
பேரே. (414)

(உரை:) உக்கிரம்,புசிதம், வரோதயம், ஆண்ட ஆமை, மையாடை, நயனம், சாற்றி, பல்கண்டன், கங்கைச்சாரதி என்பன மணத்தக்களியின் பெயர்கள்.

### தழுதாழையின் பெயர்கள்

வைத்த வாத மடக்கி யென்று இதற்குப் பேரு
வாட்டிப் பிடிப்பா னென்றிதற்குப் பேரு
ஐத்த[8], அடிபுனஞ்சானென்றிதற்குப் பேரு
அல்லோடாக மென்றிதற்குப் பேருண்டாச்சு
பெத்தப்படி, திரியா[9] னென்றிதற்குப் பேரு
பெரி[10] மாதப் பூடென்றிதற்குப் பேரு
மைத்த[11] யாழையங்கிணி[12], கடைக்கறுப்பதியென்று
வளமாக வசனித்தோம், தழூதாழையின் பேரே. (415)

---

1. நாசி, 2. வருதயம், 3. யாவண்ட ஆமை, 4. வாடை, 5. நயன, 6. ஆம்பல், 7. சாற்றி, 8. வைத்த, 9. தியான, 10. பேரி, 11. மத்த, 12. பங்கினி.

*(உரை:)* வாதமடக்கி, வாட்டிப் பிடிப்பான், அடிபுனஞ்சான், அல்லோடாகம், திரியான், மாதப்பூண்டு, யாழை, யங்கினி, கடைக்கறுப்பதி என்பன தழுதாழையின் பெயர்கள்.

### பெருமருந்து பெயர்கள்

வளமான, முசுறு மூலி யென்றும் பேரு
வசனித்தோம், சொரி காந்தியென்றும் பேரு
வலமான, மாமதையோ[1] னென்றும் பேரு
வட்டத்திரி முறையென்று மிதற்குப் பேரு
சளமான, சங்கை மூலி, சாரங்கத்தேசி[2] யென்றும்
காசி[3], மாந்திப்பூடென்றும் பேரு
பலமான, பலிவல மூலி[4] யென்றும் பேரு
வசனித்தோம்,பெருமருந்தின் இதற்குப்பேரே. (416)

*(உரை:)* முசுறு மூலி, சொரி காந்தி, மாமறையோன், வட்டத்திரி முறை, சங்கை மூலி, சாரங்க தேசி (வில்) காசி, மாந்திப்பூ, பலிவல மூலி என்பன பெருமருந்தின் பெயர்கள்.

### தலைச்சுருளியின் பெயர்கள்

பேசுகின்றோம், ஈசுரமூலியென்றும் பேரு
பேரான, ருத்திரப் பூண்டென்றும் பேரே
கூசுகோவக் காரியென்றும், கோரசண்டியென்றும் பேரு
கூறான, நவநீதப்பாணியென்றும் பேரு
வாசுவலாலா[5], வைரவியென்றும் நடனக்கருமூலி யென்று
வளமாகச் சொன்னோம் ... ... ...
நாசுகிறோம், நாலாவி தட்சணி[6] யென்றும்
நாம் சொன்னோம், நன்றாக தலைச் சுருளியின்
பேரே. (417)

---

1. மறைகோன், 2. சாறுங்காதசி, 3. தாசி, 4. பெலிவலை, 5. வாசுவமலாலா, 6.விதிசனி.

*(உரை:)* ஈசுரமூலி, உருத்திரப்பூண்டு, கோவக்காரி, கோரச்சண்டி, நவநீதபாணி, வாசுவலாலா, வைரவி, நடனக்கரு மூலி, விதட்சணி என்பன தலைச்சுருளியின் பெயர்கள்.

**கண்டங்கத்திரியின் பெயர்கள்**

நன்றான, வியக் குறித[1] மென்றும் பேரு
நல்ல கண்டங்[2] காரியென்று மிதற்குப்பேரு
அன்றான, அண்டதாசியென்றும் பேரு
அமராகடகமென்றும், இதற்குப் பேருண்டாச்சு
வென்றான,வைக்கத் தடத்தை[3] யென்றும் பேரு
வேல்விழி, மாக்கன்றும்[4] காட்டுவா, கடந்தா
னென்றும்
கன்றான பூட்டு, கனி மாதரசி யென்றும்
காட்டினோம், இந்த எண்ணூறில்
கண்டங்கத்திரியின் பேரே. *(418)*

*(உரை:)* கண்டங்கத்திரியின் பெயர்கள் குறிதம், கண்டங்காரி, அண்டதாசி, அமராடகம், வெக்கடந்தை, வேல்விழி, மாக்கன்று, கனிமாதரசி என்பன.

**வழுதலையின் பெயர்கள்**

திரியான தாது, வழுதலை யென்றும் பேரு
இயல்பான, முருக்கனிக் காயென்றும் பேரு
மரியான[5], மதுரக்காயென்றும் பேரு
மலாதிப் பூடென்று இதற்குப் பேரு
வரியான, வல்லாதி, மூலியென்று பேரு
வணிக்க[6], காய் கன்றிப்[7] பூண்டிதற்குப் பேரு
நரியான, மிளகு தூதடாரியென்றும் பேரு
நாம் சொன்னோம், வழுதலைக் கெட்டுப்
பேரே. *(419)*

---

1. குன்மி, 2. வண்ட, 3. வெக்கடந்தை, 4. தண்டு, 5. மதி, 6. வனி, 7. கடும்.

*(உரை:)* தாது, வழுதலை, முருக்கனிக்காய், மதுரக்காய், மலமாதிப்பூடு, வல்லாதி மூலி, வணிகக்காய், கன்றிப் பூண்டு, மிளகு, தூதடாரி என்பன வழுதலையின் பெயர்கள்.

**பேய்ப்புடலையின் பெயர்கள்**

சொன்னோமே, அசபல மென்றும் பேரு
சொற்பெரிய, இடு புடலை யென்றும் பேரு
வன்னோமே, வாடநாழி சிரோமணி மாது
வளமான, அலாரனழகி யென்றும் பேரு
அன்னோமே, உடுத்திய அங்கை[1] யென்றும் பேரு
அருளான, நாட்டுமாதரை யென்றும் பேரு
நன்னோமே, சோடுபறிப்[2] பூண்டென்றும்
நாம் சொன்னோம், புலத்தியனே, பேய்ப்புடலின்
பேரே. *(420)*

*(உரை:)* அசபலம், இடுபுடலை, வாடநாழி, சிரோமணி மாது, அலாரணழகி, அங்கை, நாட்டு மாதமரை, சோடுபரிப் பூண்டு என்பன பேய்ப்புடலையின் பெயர்கள்.

**கறிப்புடலையின் பெயர்கள்**

புடலான, பூரணியென்றதற்குப் பேரு
பொரி, கறி, மாப்பூடென்றும், கொடியா னென்றும்
அடலான, ஆடவாய்[3] மூலி யென்றும் பேரு
அயை, மாதயங்காயென்றிதற்குப்[4] பேரு
வடவான, பாப்பாரக்கனி[5] யென்றும் பேரு
வாரிலிங்க மூலி யென்றிதற்குப் பேரு
நசலான்[6], நரசிம்மக்கனி[7] யென்றும் பேரு
நாம் சொன்னோம், சுந்தரமே, கறிப்புடலின்
பேரே. *(421)*

---

1. நாகை, 2. சோடுபுரி, 3. ஆகாய, 4. அனமோதக, 5. பறதனி, 6. நடவான, 7. நடசி, பதினி என்றும்.

*(உரை:)* புடலங்காயின் பெயர்கள், பூரணி, பொரி, கறி, மாப்பூ, கொடியான், ஆடவாயமூலி, மாதயங்காய், பாப்பாரக்கனி, வாரி லிங்க மூலி, நரசிம்மக்கனி என்பன.

## எருமை முன்னையின் பெயர்கள்

சுந்தரந்தான், ஒன்றாக[1] சொல்லக் கேளு
சீராடவல்லோன், செழுமலரோ[2] னென்றும் பேரு
உந்திர மாய்[3], உந்தரனா, உகந்தானென்றும்
உயிர்கலி[4], வாசுகிந்த னென்றும் பேரு
அந்த ரந்தான்[5], வாலாயடி[6] மாரனென்றும்
அடவான, கலகமிடாண்டி யென்றும்
சுந்தர[7]ந்தான், கந்தனா[8] ருசி யென்றும் பேரு
கருணையென்ற வெருமை[9] முன்னையதற்குப்
பேரே. *(422)*

*(உரை:)* **எருமை முன்னையின் பெயர்கள், சீராட வல்லோன், செழுமலரோன், உந்தரனா உகந்தான், உயிர்க்கலி, வாசு கிந்தன், வாலா அடி மாரன், கலகமிடாண்டி, கற்றனா ருசி என்பன.**

## சிறு முன்னையின் பெயர்கள்

கருணையென்ற சிறு மாலி[10] யென்றும் பேரு
கரநாட்டுப் பூண்டென்று மித ற்குப் பேரு
வருணையென்ற மகநாலி[11] மூலி யென்றும் பேரு
அமத்தாகி, மூலி யென்றிதற்குப் பேரு
அருணையென்ற அபநங்கைப் பூடென்றும் பேரு
அமத்தாகி மூலியென்றிதற்குப் பேரு
திரு[12]ணை யென்ற தீவாந்திரயிலை யென்றும் பேரு
திருவான, சிறு முன்னையிதற்குப் பேரே.[13] *(423)*

---

1. நன்றாக, 2. மேலோரன், 3. புந்தரமாய், 4. ரண, 5. மைந்தரந்தான், 6. வாலாடி, 7. கந்திரந்தான், 8. கற்றனாருசி, 9.எருமை, 10 இருமாலி, 11. நாதி, 12. செரு, 13. செப்பினோம், பங்கதாசி யென்றும் பேரு.

*(உரை:)* கருணை, சிறுமாலி, கரநாட்டுப் பூண்டு, வருணை, மகநாலி மூலி, கரஞ்சம், அருணை, அபநங்கைப் பூண்டு, அமத்தாகி மூலி, தீவாந்திர இலை என்பன சிறு முன்னையின் பெயர்கள்.

### பெருந்தும்பையின்★ பெயர்கள்

திருவான, மோகனக் கோடி யென்றும் பேரு
தெளிவான, விரும்புலியிழை இதற்குப் பேரு
வருவான, வஞ்சியல் மயக்கி யென்றும் பேரு
மகத்தான, கடக் கொடி, வர்க்கை பசப்பி
அருவான, வசிய மதாசி யென்றும் பேரு
அடவான, புட்ப சூரணி யென்றும் பேரு
செருவான, செயதீபக்காரியென்றும் பேரு
செயலறிந்து, சொல்லிவிட்டோம்,
பெருந்தும்பையின் பேரே. *(424)*

*(உரை:)* மோகனக்கோடி (கொடி) விகும்புலி இழை, வஞ்சியல் மயக்கி, கடக்கொடி, வர்க்கை பசப்பி, வசிய மதாசி, புட்ப சூரணி, செயதீபக்காரி என்பன பெருந் தும்பையின் பெயர்கள்.

### கவிழ் தும்பையின் பெயர்கள்

சொல்லியதோர், ஆரா அம்பையென்றும் பேரு
சொற்பெரிய கட்டளக் கொடி, கவடிக கண்டி
அல்லியதோர், காலக் கோட்டரசி யென்றும் பேரு
அருநான, சிலையுடைத்தாளென்றும் பேரு
செல்லி, சிங்கி, மாதமுவாளென்றும் பேரு
செப்பினோம், பங்கதாசி யென்றும் பேரு
எல்லியங்களே, சனி என்றிதற்குப் பேரு
எட்டுப்பேர், கவுது ம்பையிதற்குப் பேரே. *(425)*

---

★இப்பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

(உரை:) ஆரா அம்பை, கட்டளைக்கொடி, கவடிக கண்டி, சிலையுடைத்தாள், காலக் கோட்டரசி, செல்லி, சிங்கி, மாதமுவாள், பங்கதாசி, சனி என்பன கவிழ் தும்பையின் எட்டுப் பெயர்கள்.

## கழுதும்பையின் பெயர்கள்

எட்டான வீம மந்திவி, இராணி[1] யென்றும் பேரு
இயல்பான, இரத்த மண்டலி[2] யென்றும் பேரு
அட்டான, வரோணி, தம் கபாலி யென்றும் பேரு
அடவான, கருமாமித[3] யென்றிதற்குப் பேரு
வட்டான, மனோதய ஞானத்தீயென்றும்
வளமான, கரைகாணுமா அதென்றும்
சிட்டான, சிறுஞ்சி மூலியென்றும் பேரு
சீரான கழு தும்பையதற்குப் பேரே. (426)

(உரை:) இராணி, வீம மந்திவி, இரத்த மண்டலி, வரோணி, கபாலி, கருமாமிதம், மனோதயம், ஞானத்தீ, கரை காணுமா, சிறுஞ்சிமூலி என்பன கழுதும்பையின் பெயர்கள்.

## சிறுதும்பையின் பெயர்கள்

சீராகச் சொல்லுகின்றோம், மடறுங்கி[4] யென்றும்
சிவதும்பை, சத்திப்பாசமென்றதற்குப் பேரு
வாராகும், சூலநாதி[5] மூலி யென்றும் பேரு
வனராசாப்பூண்டென்றும் பேருண்டாச்சு
ஆராகும், அங்குசாதி மூலி யென்றும் பேரு
அருளான பாசி, மாவேலை யென்றும் பேரு
தூராகும், துருநாதி தும்பை யென்றும் பேரு
துதி பெறவே, சொல்லிவிட்டோம்,சிறு தும்பைப் பேரே. (427)

(உரை:) மடறுங்கி, சிவதும்பை, சத்திப் பாசம், சூலநாதி மூலி, வனராசப் பூண்டு, அங்கு சாதி மூலி, பாசி, மாவேலை, துருநாதி, தும்பை என்பன சிறு தும்பையின் பெயர்கள்.

---

1. விராணி, 2. மணலி, 3. கருமரம், 4. மடங்கி, 5. மூலநாதி.

## வேளையின் பெயர்கள்

சிறுவான, வசுண்டிக்காயென்று பேரு
செப்பியதோர், காய் கண்டிதமென்றும் பேரு
தருவான, தமனோரு பணி[1] யென்றும் பேரு
தருவானிப்[2] பூண்டென்று, வருகாளி[3],
கொடிக்காயென்றும்
ஒருவான, கொடி மாதளத்தியென்றும் பேரு
குழ லொளி, விரிவானென்று[4] மிதற்குப் பேரு
அறுவான், வானவடி[5] மந்த மென்றும் பேரு
ஆகப் பேரெட்டாச்சு, வேளையின் பேரே. *(428)*

(உரை:) வகண்டிக்காய், காய்கண்டிதம், தமனோரு பணி, தருவாணிப் பூண்டு, வருகாளி, கொடிக்காய், கொடி மாதளத்தி, குழலொளி, விரிவான், வானவடி, மந்தம், அறுவான் என்பன வேளையின் பெயர்கள். எட்டுப் பெயர்கள் எனக் கூறப்பட்டிருந்தாலும், 12 பெயர்கள் பாட்டில் உள்ளன. எனவே 4 பெயர்கள் பின்னர் சேர்க்கப்பட்டிருத்தல் கூடும்.

## நாய்வேளையின் பெயர்கள்

ஆச்சிந்த வட்டமென்றும், கட்டவங்கமென்றும்
அருளினோம், அடக்கமென்றிதற்குப் பேரு
மாச்சென்ற, மாருதியென்றதற்குப் பேரு
வழலகரமென்றதற்கு இப்பேருண்டாச்சு
நாச்சென்ற,நட்டசாரி மூலி யென்றும் பேரு
நல்லவேதை, கனிப்பூடென்றும் பேரு
ஆச்சிந்த, விருதுண்டங்கமென்றும் பேரே
வசனித்தோம் எட்டு, நாய்வேளையின் பேரே. *(429)*

(உரை:) வட்டம், கட்டவங்கம், அடக்கம், மாருதி, வழலகரம், நட்டசாரி மூலி, நல்லவேதை கனிப்பூடு, விருதுண்டங்கம் என்ற எட்டுப்பேர்கள் நாய்வேளையின் பெயர்கள்.

---

1. பாவனி, 2. தருவாளி, 3. தருவாளி, 4. விடுவான், 5. வெடி.

## செங்கதாரியின் பெயர்கள்

வசனிப்போம், யாம் கலந்தக மென்றும் பேரு
வளமான, பந்தலமென்று மிதற்குப் பேரு
வசனிப்போம், தாரியோடகமென்றும் பேரு
உண்டி வாசம், உருட்டி மங்கலமென்றிதற்குப் பேரு
அசனிப்போம், பூங்கணை நிதழானென்றும்
அகோர வச்சிரத் தோகை யென்று மிதற்குப் பேரு
நசனிப்போம், அச்செஞ்சடைப் பூடென்றும் பேரு
நாம் சொன்னோம், எட்டுப்பேர், செங்கதாரியின்
பேரே. *(430)*

*(உரை:)* கலந்தகம், பந்தலம், தாரியோடகம், உண்டி வாசம், உருட்டி மங்கலம், பூங்கணை நிதழான், வச்சிரத்தோகை, அச்செஞ்சடைப்பூடு என்ற எட்டுப் பெயர்கள், செங்கதாரிக்கு உள்ளன.

## முக்கதாரியின் பெயர்

நாம் சொல்வோம், கறுப்பு நாயென்றும் பேரு
நலமான, உப்பிலத[1] மென்றும் பேரு
வாம்பான, வனதாரியென்றும் பேரு
வானாதிப்பூண்டென்றும்[2] மிதற்குப் பேரு
ஆம்பான, வஞ்சனாதி லோதாரியென்றும் பேரு
ஆரணிய அசதா[3] மூலி யென்றும் பேரு
சேம்பான, சிலோவாரிப் பூடென்றும் பேரு
செப்பினோம், எட்டுப்பேர், முக்கதாரியின்
பேரே. *(431)*

*(உரை:)* முக்கதாரியின் எட்டுப்பெயர்கள், கறுப்பு நாய், உப்பிலதம், வனதாரி, வானாதிப் பூண்டு, வஞ்சனாதி, லோதாரி, ஆரணிய அசதாமூலி, சிலோவாரிப்பூடு என்பன.

---

1. உப்பாலதம், 2. வாரிதி, 3. சதா.

### விசதாரியின் பெயர்கள்

மேடான, கருங்காலியென்றும் பேரு
மேலான, உத்தனாதிப்பூண்டென்றும் பேரு
வாடான, வாஞ்சிழலை[1] யென்றும் பேரு
வரக்கஞ்ச[2] மலையாறி யென்றும் பேரு
நாடான,நக்கவாரி[3] மூலி யென்றும் பேரு
நல்பேதி மூலி யென்றிதற்குப் பேரு
ஏடான[4], வீரமாதிப் பூண்டென்றும் பேரு
இயல்பாகச் சொல்லிவிட்டோம், விடதாரியின்
பேரே. *(432)*

*(உரை:)* கருங்காலி, உத்தனாதிப்பூண்டு, வாஞ்சிழலை, வரக்கஞ்சம், மலையாறி, நக்கவாரி, நல்பேதி மூலி, வீரமாதிப் பூண்டு என்பன விசதாரியின் எட்டுப்பெயர்கள்.

### நிலப்பனையின் பெயர்கள்

இயல்பான இஞ்சி[5] யென்றும் பேரு
இக்கயலூதி[6] யென்று மிதற்குப் பேரு
கயலான[7], கன்னத்தாளி[8], பன்னரதியென்றும்
கருவான, குறும்பவந்தானென்றும் பேரு
தயவான, தட்டிக் கமாறென்றும்[9] பேரு
தருவான, மயில் நீலமாசியென்றும் பேரு
அயலான, மற்றோதய மூலி யென்றும் பேரு
ஆக எட்டுப்பேர் சொன்னோம், நிலப்பனையின்
பேரே. *(433)*

*(உரை:)* இஞ்சி, கயலூதி, கன்னதாளி, பன்னரதி, குறும்பவன், தட்டிக்கமாறு, மயில், நீலமாசி, மற்றோதய மூலி என்பன நிலப்பனையின் எட்டுப் பெயர்கள்.

---

1. இலை, 2. வரக்கஞ்ச இலை, 3. நக. 4. ஈடான, 5.வயிஞ்சி, 6. பூரத்தி, 7. கல்லான, 8. கன்னதாரி, 9. மாரு.

### பருத்தியின் பெயர்கள்

சொன்னதொரு போசமென்று[1], மாதகாந்தமென்றும்
சொல்லிவிட்டோம், நிமைகாடி[2] மூலியென்றும்
கன்னதொரு, கங்கானந்தமென்றும்[3] பேரு
கருவான, வடமாலிகை மூலி யென்றும் பேரு
பன்னக்கொரு, வத்திரோதப்பூண்டென்றும்[4] பேரு
பதலான[5], அங்கணிதம்[6] பூண்டென்றும் பேரு
பன்னத்தட்டா, சதுர் மூலி யென்றும் பேரு
பாடினோமெட்டுப்பேர், பருத்தியின் பேரே. *(434)*

*(உரை:)* பருத்தியின் எட்டுப்பெயர்கள், போசம் மாதகாந்தம், நிமைகாடி மூலி, கங்கானந்தம், வடமாலிகை மூலி, வத்திரோதயப்பூண்டு, அங்கணிதம், சதுர்மூலி என்பன.

### செம்பருத்தியின் பெயர்கள்

பாடினோம் பருநீலி மூலியென்றும் பேரு
பலவாடைப்பூண்டென்று மிதற்குப் பேரு
ஆடினோம், செழுமை தெளி நீலியென்றும் பேரு
அருத்திராளி, ஆடனத்தி மூலி யென்றும் பேரு
நாடினோம், கன்னியொளிப் பூடென்றும் பேரு
நல்ல பூராட மாஞ்சி என்றும் பேரு
தேடினோம் சிவகளியானென்றும் பேரு
செப்பினோமெட்டுப் பேர், செம்பருத்தியின்
பேரே. *(435)*

*(உரை:)* பருநீலி மூலி, பலவாடைப்பூண்டு, செழுமை தெளி, நீலி, அருத்திராளி, ஆடனத்தி மூலி, கன்னி ஒளிப்பூடு, பூராட மாஞ்சி, சிவகளியான் என்பன செம்பருத்தியின் எட்டுப் பெயர்கள்.

---

1. வரோசம், 2. நிமசாலி மூலி, 3. கங்காந்தம், 4. பூடு, 5. பரிவான, 6. வங்கனிட.

435ம் பாடலின் முதலிரண்டுவரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை. அச்சுப்புத்தகத்தில் பாடல் வரிகள் மாறி முதலிரண்டு வரிகள் கடைசியில் வந்துள்ளன. ஆனால் அந்தாதிப்படி இப்பாடலே சரியானது.

## வெள்ளூமத்தையின் பெயர்கள்

பேரென்ற வைத்த மயூர[1] மென்றும் பேரு
பேரான வெம்மாலி ஏமமாலியென்றும் பேரு
நாரென்ற, மகாராணி[2] யென்றும் பேரு
நல்ல வாரள மத்தாழி[3] யென்றும் பேரு
வாரென்ற, வந்தூலமது வென்றும் பேரு
வளமான துண்டால் பித்தியென்றும் பேரு
வேரென்ற, வெளிக்கொண்ட மூலி யென்றும் பேரு
விளக்கினோம், புலத்தியனே, வெள்ளூமத்தையின் பேரே. *(436)*

*(உரை:)* வெள்ளை ஊமத்தையின் பெயர்கள், மயூரம், வெம்மாலி, ஏமமாலி, காமகாரி, மகாராணி, வாரளமத்தாடி, வந்தூல மது, துண்டால் பித்தி, வெளிகொண்ட மூலி என்பன.

## கரு ஊமத்தையின் பெயர்கள்

உபமான, காட்டேரி மூலி யென்றும் பேரு
ஒகோகோ, விருசியென்றும் பூடென்றும் பேரு
அபமான, வாதகண்டம், பலாதி[4] யென்றும்
அருளினோம், அதமத்தி மூலி யென்றும் பேரு
நயமான, தம்பிரான் பூடென்றும் பேரு
நல்ல கூளிவாச மூலி யென்றும் பேரு
சபமான சாரூபக் கன்னி யென்றும் பேரு
சாற்றினோம், கருவூமத்தையின் பேரே. *(437)*

*(உரை:)* காட்டேரி மூலி, விருசி, பூடு, வாதகண்டம், பலாதி, அதமத்தி மூலி, தம்பிரான் பூடு, நல்ல கூளி, வாச மூலி, சாரூபக் கன்னி என்பன கரு ஊமத்தையின் பெயர்கள்.

---

1. கமயூரம், 2. காமகாரி, 3. வாதள மதாடி, 4. பகலாதி,

### பொன் ஊமத்தையின் பெயர்கள்

அதீதமென்ற, பொன்னுனியின் மூலி யென்றும் பேரு
அடவான, புடப்பூடு[1], வர்க்க மூலி யென்றும்
அதீதமென்ற, வசநாண்டி, பேயாண்டி யென்றும்
வளமான, காரணித மூலி யென்றும் பேரு
சித்தமென்ற[2] சாமீப மூலி[3] யென்றும் பேரு
சகதேவிப் பூடதற்கு அனேகப் பேருண்டு
நதீதமென்ற, பேரெல்லாம் பொறுக்கியெட்டுப் பேராய்
நாம் சொன்னோம், சுந்தரமே, பொன்னூமத்தையின்
பேரே. *(438)*

*(உரை:)* பொன்னூமத்தையின் பெயர்கள் எட்டு, பொன்னூனி மூலி, புடப்பூடு, வர்க்க மூலி, வசநாண்டி, பேயாண்டி, காரணித மூலி, சாமீப மூலி, சகதேவிப்பூடு.

### மருள் ஊமத்தையின் பெயர்கள்

பொன்னான, செயக்கானப் பூடென்றும் பேரு
போற்றி இரச மூலி யென்றும், மற்ற[4] மாக்காள்
அன்னான, அக்கரடிப் பூடென்றும் பேரு
யாதவச மூலி, அதற்கனேகம் பேருண்டு
வன்னான[5], வன மாலைப்[6] பூடென்று பேரு
மதியாலடி மூலி யென்றும் பேரு
நன்னான[7], தகை ரதப்பூடென்றும் பேரு
சமர்த்தாகச் சொல்லிவிட்டோம், மருளூமத்தையின்
பேரே. *(439)*

*(உரை:)* கானப்பூடு, இரசமூலி, கரடிப்பூடு, வசமூலி, வனமாலைப் பூடு, மதியாலடி மூலி, தகை ரதப்பூடு என்பன மருள் ஊமத்தையின் பெயர்கள்.

---

1. படப்பூடு, 2. கதம், 3. சாம்ப, 4. மத்த, 5. மண்ணான, 6. வல்லாலை, 7. சன்னான.

438ம் பாடலில், 3,4 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

### காட்டாமணக்கின் பெயர்கள்

சமர்த்தான, ஆதாளை எலிமாதரென்றும்
சார்வான, கொலிப்பூடு[1] என்றதற்குப் பேரு
அமத்தான, வேலிநாயகமென்றும் பேரு
அருளான துங்கை, துடங்கை[2] யென்றும் பேரு
நமத்தான, பீசராக்கண்டி யென்றும் பேரு
நலமான, கொசலமா மூலி யென்றும் பேரு
மத்தான, அசோகனாதிப்பூடென்றும் பேரு
மாட்டினோம், காட்டாமணக்கின் பேரே. (440)

(உரை:) ஆதாளை, எலிமாதர், கொலிப்பூடு, வேலிநாயகம், துங்கை, துடங்கை, பீசராக் கண்டி, கொசலமாமூலி, அசோக நாதிப்பூடு என்பன காட்டா மணக்கின் பெயர்கள்.

### பேராமணக்கின் பெயர்கள்

மணமான வாழகம், என்றிதற்குப் பேரு
மகத்தான், ஊர்பலம்[3], பேரண்டாதி யென்றும்
அனமான, வெரண்டாங்கி[4] மூலி யென்றும் பேரு
அடவான, வாலாதிக மென்றிதற்குப் பேரு
பண[5] மான, பருமணி முத்துப் பூடென்றும்
பரிவான, எண்ணைக் காவாளன்றும் பேரு
தனமான, வெங்குமரிப் பூடென்றும் பேரு
தருவித்தோம், பேராமணக்கின் பேரே. (441)

(உரை:) வாழகம், ஊர் பலம், பேரண்டாதி, வெரண்டாங்கி மூலி, வாலாதிகம், பருமணி முத்து, எண்ணைக் காவாள், வெங்குமரிப் பூடு என்பன பேராமணக்கின் எட்டுப்பெயர்கள்.

---

1. கோலி, 2. துடன், 3. ஊரப்புலம், 4. வேரண்டாங்கி, 5. பனமான.

### சிற்றாமணக்கின் பெயர்கள்

தருவித்த,சிற்றிடையாளென்றும்[1]
தருவான மோதனங்க மூலி யென்றும்
அருவித்த, சிற்றண்டப்பூண்டென்றும் பேரு
அரவருளி[2] மூலியென்று மிதற்குப் பேரு
தருவித்த, சத்தசடாமூலியென்றும் பேரு
கருணை நாடக[3] விருட்சமென்றிதற்குப் பேரு
செருவித்த, திருவாதிரை மூலி யென்றும் பேரு
செயலாகச் சொல்லிவிட்டோம், சிற்றாமணக்கின்
பேரே. *(442)*

*(உரை:)* சிற்றாமணக்கின் பெயர்கள், சிற்றிடையாள், மோதனங்க மூலி, சிற்றண்டப்பூண்டு, அருவருளி மூலி, சத்த சடாமூலி, நாடக விருட்சம், திருவாதிரை மூலி என்பன.

### செவ்வாமணக்கின் பெயர்கள்

நக்கமென்ற, திருவால மூலி யென்றும் பேரு
நாளையச்[4] செவ்வாலியென்று மிதற்குப் பேரு
வக்க மென்ற, வாலைப் பெண், ரேணுகாமூலி[5] யென்றும்
மதுவண்டப் பூடென்று, மிதற்குப் பேரு
அக்க மென்ற[3], வாசா ராணி[7] மூலி யென்றும் பேரு
யாதுடையான் பூடென்று மிதற்குப் பேரு
சக்கமென்ற[8] வெக்கலாதேவி[9] யென்றும் பேரு
சாற்றினோ மெட்டுப்பேர், செவ்வா மணக்கின்
பேரே. *(443)*

*(உரை:)* திருவாலமூலி, செவ்வாலி, வாலைப்பெண், ரேணுகா மூலி, மதுவண்டப்பூடு, வாசா ராணி மூலி, யாதுடையாள்பூடு, வெக்கலா தேவி என்ற எட்டுப் பெயர்கள், செவ்வாமணக்கின் பெயர்கள்.

---

1. பேரிடையாள், 2. வரளி, 3. நாடாக, 4. நனைய, 5. தேனூற், 6.புக்க, 7.வாசானி, 8. கக்கமென்ற, 9. வெக்கற.

## பேராமுட்டியின் பெயர்கள்

*எட்டென்ற, ஆந்தை ஈடன்[1], விழி விலங்கியென்றும்*
*இயம்பியதோர்க்குரு, விச்சியார் பூடென்றும் பேரு[2]*
*பட்டென்ற படைப்பறிய னென்றும் பேரு*
*பரிவான,கொண்டலங்க மென்றும் பேரு*
*நட்டென்ற, பழு துடைய நெட்டி யென்றும் பேரு*
*நலமான, வாடை வல னென்றும்[3] பேரு*
*வட்டென்ற, நாட்டுக் கந்த மென்றும் பேரு*
*வசனித்தோம், நன்றாகப் பேரா முட்டியின்*
*பேரே.(444)*

(உரை:) ஆந்தை ஈடன், விழி விலங்கி, குரு விச்சியார் பூடு, படைப்பறியன், கொண்டலங்கம், பழுதுடையநெட்டி, வாடை வலன், நாட்டுக் கந்தம் என்பன எட்டுப் பெயர்களாக பேராமுட்டிக்குள்ளன.

## சிற்றாமுட்டியின் பெயர்கள்

*நன்றாக, சீருடன் முத்தி யென்றும்*
*நல்ல செல்வக் குமரி யென்றும், செயல் மாதரி*
*தானென்றும்*
*அன்றான, வாடுவாள் கண்ட னென்றும்[4] பேரு*
*அருளான, வாழ திகந்த மென்றும்[5] பேரு*
*மூன்றான, முடியகங்க மென்றும்[6] பேரு*
*மூதண்டத்தாடும், வடங்க மென்றும் பேரு*
*என்றானவேலை, ருசிவஞ்சியென்றும் பேரு*
*என்ன சொல்லுவோம், வெகுபெருமை*
*சிற்றாமுட்டியின் பேரே.(445)*

(உரை:) முத்தி, செல்வக்குமரி, மாதரி, வாடு வாள் கண்டன், வாழதிகந்தம், முடியங்கம், வடங்கம், ருசி, வஞ்சி என்ற எட்டுப்பெயர்கள் சிற்றாமுட்டிக்குண்டு.

---

1. வரந்தை, 2. இயதோடல் குறிஞ்சியாற் பூடென்றும், 3. வாடையான், 4. மாகரி, 5. மிடுவான், 6. வாடிதி, 7. முடியங்கம்.

### கஞ்சாக்கோரையின் பெயர்கள்

*வெகு பெருமை, கஞ்சமென்றும், கனசமா வென்றும்*[1]
*விசிதமுள்ள, கரை விழியாளென்றும் பேரு*
*வெகு பெருமை, ஆனந்தாய் மூலி யென்றும் பேரு*
*விரைஞ்சாடிப்பூடென்று மிதற்குப் பேரு*
*வெகுபெருமை, தனமுத்து*[2] *மாதரென்றும் பேரு*
*விக்கினார மூலி*[3] *யென்று பேரு... ... ...*
*வெகுபெருமை, அசல் சாதி மூலி யென்றும் பேரு*
*விதரணையாய், சொல்லிவிட்டோம்*
*கஞ்சாக்கோரையின் பேரே. (446)*

*(உரை:)* கஞ்சாக்கோரையின் பெயர்கள், கஞ்சம், கனசமா, கரைவிழி, ஆனந்தாய் மூலி, விரைஞ்சாடிப்பூடு, தனமுத்து மாதர், விக்கினாரமூலி, அசல் சாதி மூலி என்பன.

### காஞ்சூரையின் பெயர்கள்

விட்டகப்பூக[4] மென்று மான் தாதி யென்றும்
விசிதமுள்ள கண் முரமென்றும் பேரு
கட்டத்தொட்டா[5] சொரிய னென்றும் பேரு
கருவான, கலங்கமென்[6] றிதற்குப் பேரு
வட்ட, வங்கரமென்றிதற்குப் பேரு
மகத்தான, செவ்வரளி என்றிதற்குப் பேரு
வட்ட, சடலத்தழகனென்றும்[7] பேரு
இயம்பினோம், காஞ்சூரையினெட்டுப் பேரே. (447)

*(உரை:)* காஞ்சூரையின் எட்டுப்பெயர்கள் கஞ்சம் விட்டகப்பூகம், மான்தாதி, கண்முரம், சொரியன், கலங்கம், செவ்வரளி, சடலத்தழகன் என்பன.

---

குறிப்பு: கஞ்சாக்கோரை, குல்லை என்று சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

1. கஞ்சமால், 2. மத முத்து, 3. அல்லி, 4. கஞ்சம், 5. கட்டாம், 6. அங்கம், 7. கட உதழகம்.

### கொட்டக்கரந்தையின் பெயர்

அருளான, வால மதரை[1] யென்றும் பேரு
ஆனவராளி[2], கோரகண்ட னென்றும் பேரு
மருளான, மாசு மங்கையரென்றும் பேரு
கத்தான, மிட[3] கருவாளென்றும் பேரு
பொருளான பெண்ட[4] முதமூலி யென்றும் பேரு
பேரான, தெண்டுப் பூங்கொடி யென்றும் பேரு
தெருளான[5], திருக்கனிப் பூடென்றும் பேரு
செப்பினோம், கொட்டை கரந்தையின் பேரே. *(448)*

*(உரை:)* கொட்டக்கரந்தையின் பெயர்கள், வாலமதரை, வராளி, கோர கண்டன், மாசு மங்கை, மிடகருவாள், (பிண்ட) பெண்டமுத மூலி, பூங்கொடி, திருக்கனிப் பூடு என்பன எட்டுப்பெயர்கள்.

### சிவ கரந்தையின் பெயர்கள்

செப்பினதோர், சிவராள நங்கை யென்றும் பேரு
செயவல்லிப் பற்பனு மூலி யென்றும் பேரு
மப்பினதோர், பரிமளாதி மூலி யென்றும் பேரு
மையல் தரு, மகாமோக மூலி யென்றும் பேரு
வப்பினதோர், வாச்சங்க மென்றிதற்குப் பேரு
வளமான, யோனிப்பூ என்றிதற்குப் பேரே
தீவா, ஆனந்த மண் மூலி என்றும் பேரு
திறமாகச் சொல்லிவிட்டோம்,சிவகரந்தையின் பேரே. *(449)*

*(உரை:)* சிவராள நங்கை, செயவல்லி, பற்பனு மூலி, மகா மோகமூலி, வாச்சங்கம், யோனிப் பூ, ஆனந்த மண் மூலி, பரிமளாதி மூலி என்பன சிவகரந்தையின் எட்டுப் பெயர்கள்.

---

1. வால மதானம், 2. ஆரான வரளி, 3. பிடக்கருவான், 4. பெண்ட, 5.செருவான.

குறிப்பு: 449ம் பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

## நெருஞ்சியின் பெயர்கள்

*திறமான, விங்குடாவக[1] மென்றும் பேரு*
*திருவார்த்தை வாட்டமென்றும், பரமாதரை*
*யென்றும்*
*கரமான, காது நெட்டி[2] யென்றும் பேரு*
*கருணைபெறு மோர் ஒரு தாளியென்றும் பேரு*
*வரமான, அக்கவாலாதி யென்றும் பேரு*
*வசனித்தோம், கொக்கூறப்பூடென்றும்[3] பேரு*
*நரமான[4], நாட்டிடு வாதிக மென்றும் பேரு*
*நன்றாகச் சொல்லிவிட்டோம், நெருஞ்சியதன்*
*பேரே. (450)*

*(உரை:)* விளங்குடாவகம், வாட்டம், பரமாதரை, காது நெட்டி, ஒரு தாளி, அக்கவாலாதி கொக்கூறப்பூடு, நாட்டிடு வாதிகம் என்பன நெருஞ்சியின் எட்டுப் பெயர்கள்.

## யானை நெருஞ்சியின் பெயர்கள்

விட்ட யானைவணங்கியென்றும், கொட்டப்பூ[5] வென்றும்
விடாத்தாலி மூலி யென்றும், விளம்பினோம் யாம்
விட்ட மஞ்சதை[6], முள்ளுப்பூ டென்றும் பேரு
வெட்டத்திரா மூலியென்றும், வெகு பேரதற்குண்டு
விட்டகணை நெருஞ்சினத[7]ற்குப் பேரு
வீரமத்தாளியென்று மது பேரையா
அட்ட வத்தி, நெருஞ்சி மயன்றதற்குப் பேரு
ஆக எட்டுப் பேரதற்கு, நெருஞ்சியின் பேரே. *(451)*

*(உரை:)* யானை நெரிஞ்சியின் எட்டுப் பெயர்கள் கொட்டப்பூ, விடாதாலி மூலி, மஞ்சதை, முள்ளுப் பூடு, வெட்டத்திரா மூலி, விட்ட கணை, வீரமத்தாளி, அட்டவத்தி என்பன.

---

1. விங்குடாலம், 2. காத்துடன், 3. கோங்கூரப்பூடு, 4. கரமான, 5.கொட்ட, 6. மாமஞ்சதை, 7. நாகநேரினது.

## முசுமுசுக்கையின் பெயர்கள்

பேரான,விரங்கு மாதிரை[1] யென்றும் பேரு
பேசினோம், மய[2] கண்ட மயங்குறுதியென்றும்
ஆரான, வாலனட்டக மென்றும் பேரு
அருளான, தாங்கி[3] ப்பிடிப்பா னென்றும் பேரு
சூரான, கணை[4] மேலாதி யென்றதற்குப் பேரு
செடிமேல் படரியென்றதற்குப் பேரு
பாரான[5], பரங்கொடி[6], யாழ் மூலி[7] யென்றும் பேரு
பாடினோம், முசுமுசுக்கையதற்குப் பேரே. *(452)*

*(உரை:)* விரங்கு, மாதிரை, மயகண்ட, மயங்குறுதி, வாலனட்டகம், தாங்கிப்பிடிப்பான், கணை, மேலாதி, செடிமேல் படரி, பரங்கொடி, யாழ் மூலி என்பன முசுமுசுக்கையின் பெயர்கள்.

## பசலையின் பெயர்கள்

பாடினோம், மிஞ்சி அடவங்கமென்றும்
பரிவான, பவநாதமென்றும் பேரு
ஏடினோர்[8], இருப்பவளே[9], தைரமென்றும் பேரு
அவரக்கனி[10], மறை மூலியென்றதற்குப் பேரு
தாடி[11], கன்ற மறையாதிக் குழைச்சாறுடாது
தருவான, மலர் சிவஞ்ச[12]மென்றும் பேரு
ஆடினோம், அண்டோதயக்[13]கரடி மூலியென்றும்
அறியாவச் சொல்லிவிட்டோம், பசலையின்
பேரே. *(453)*

*(உரை:)* பசலையின் பெயர்கள், மிஞ்சி, அடவங்கம், பவநாதம், தைரம், அவரக்கனி, மறையாதி, மறைமூலி, மலரி, சிவஞ்சம், அண்டோதயம், கரடி மூலி என்பன.

---

1. மாத்திரை, 2. யவ, 3. தாங்கி, 4. சுணை, 5. வாரான, 6. பருங்கொடி, 7. யாழ்மூலி என்று பெயரிட்டது, இசையின் மேல் வைத்துள்ள நாட்டத்தால் என்று அறியலாம். 8. தேடி, 9. பவுளேதரை, 10. ஆவற்கனி, 11. நோடி தன்ற, 12. மலரிசி, 13. மண்டோதை.

### கொத்தானின் பெயர்கள்

அறுவான, சவட்டுமானஞ்சியென்றும் பேரு
அருளான, இந்திரவல்லி, ஏமதங்கி[1]
ஒறுவான, உதய வாளிதமென்றும் பேரு
ஓகோகோ, வஞ்சி மாலிதழி[2] யென்றும் பேரு
நெறுவான, நொடி யாதிப் பூடென்றும்
நிலையான, காருள நாங்கி[3] மூரியென்றும்
கருவான, கருங்குடையாள் மூலி யென்றும்
கருவான எட்டுப்பேர், கொத்தான் பேரே. *(454)*

(உரை:) கொத்தானின் எட்டுப் பெயர்கள்: சவட்டு மானஞ்சி, இந்திரவல்லி, ஏமதங்கி, உதயவாளிதம், வஞ்சி, மாலிதழி, நொடியாதிப்பூடு, காருளநாங்கி மூரி, கருங்குடையாள் மூலி எனபன.

### இலந்தையின் பெயர்கள்

கருவான குலத்தியென்று, உலத்தியென்றும் பேரு
காம ஞாலத்தி[4] யென்றதற்குப் பேரு
வருவான, வாலரோதய மென்றும் பேரு
வருவாளுண்டி மூலி யென்றதற்குப் பேரு
முருவான, முன்னடிமாதென்றதற்குப் பேரு
முருகக் கடந்தை யென்று மூலியேயா[5]
உருவான, உதிரும் பழக்கனியென்றும் பேரு
உறுதி பெறச் சொல்லிவிட்டோம், இலந்தையின்
பேரே. *(456)*

(உரை:) குலத்தி, உலத்தி, காம ஞாலத்தி, வாலரோதயம், வாளுண்டி மூலி, முன்னடி மாது, முருகக் கடந்தை, உதிரும் பழக்கனி என்பன இலந்தையின் பெயர்கள்.

---

1. நாதங்கி, 2. வ்ஞ்சிப்பொழி தனி, 3. தாங்கி, 4. ஞாலதி, 5. பேரையா.

## கொட்டைப்பாசியின் பெயர்கள்

இலமான[1], ஆகாசத் தாமரை யென்றும்[2] பேரு
இயல்பான ஆலோதய மாவம்பதி[3], யென்றும்
அலமான, வரோதயத்தியென்றும் பேரு
அருளான, பாசி, வர மாசு என்றும் பேரு
மலமான, மாச வாருள்ளி யென்றும் பேரு
வாடப்பூமாது மூலி யென்றும் பேரு
துலமான, தோடு துதி பெறவே[4] சொல்லிவிட்டோம்
கொட்டைப் பாசியின் பேரே. *(456)*

*(உரை:)* கொட்டைப்பாசியின் பெயர்கள், ஆகாசத் தாமரை, ஆலோதய மாவம்பதி, வரோதயத்தி, பாசி, வரமாசு, மாசவாருள்ளி, வாடப்பூமாது மூலி, தோடு என்பன.

## முடக்கொத்தானின் பெயர்கள்

துதியான நடராளப்பூ[5], குரு வென்றும்
துருவான பதந்திரவல்லி[6] மகோதர ரூபி[7]
செதியான, சிசுவின் வணக்கமென்றும் பேரு
செவிக் கொடியாளென்று மதற்குப் பேரு
அதியான, தேகமாதரசி[8] யென்றும் பேரு
அடவான முகா மொத்ததை மூலி யென்றும் பேரு
மதியான, மதனிப்பாளிப் பூடென்றும் பேரு
மடவார்களெட்டுப்பேர், முடக்கொத்தான்
பேரே. *(457)*

*(உரை:)* நடராளப்பூ, குரு, பதந்திரவல்லி, மகோதரரூபி, சிசுவின் வணக்கம், செவிக்கொடியாள், தேகமாதரசி, முகாமொத்தை மூலி, மதளிப்பாளிப் பூடு என்பன முடக்கொத்தானின் எட்டுப்பெயர்கள்.

---

1. விலமான, 2. எட்டும், 3. மாபவதி, 4. தொகு தொட்டாசி, 5.வாராளப்புக, 6. பாந்திர, 7. கரூபி, 8. நரே.

## அலரியின் பெயர்கள்

மடவான, அதிரப் புரசந்தா[1] னென்றும்
மகத்தான, கடம்பலக் காணிப் பூடென்றும்
கொடவான[2], கோக நேரளி மூலி யென்றும்
கூறினோம், நீலாம்புரியாள்[3], நேரிதழ்நாலி[4]
அடவான, ஊசிக்கணு, வலம் பூடென்றும்
அருளினோம், முங்கை, ஆனந்த மூலியென்றும்
வடவான, ஊட்டிப்பறிப்பான் பூடென்றும்
வசனித்தோம், அதிகமதாய் அலரியின் பேரே. *(458)*

*(உரை:)* அதிரப்புரசம், கடம்பலக் காணிப்பூடு, நேரளி மூலி, நீலாம்பரியாள், நேரிதழ் நாலி, ஊசிக்கண், வலம்பூடு, முங்கை, ஆனந்த மூலி, ஊட்டிப்பறிப்பான் பூடு என்பன அலரியின் பெயர்கள்.

## பொன்னாங்கண்ணியின் பெயர்கள்

அதீதமென்ற, இருஞ்சாடு ஞானப்பூவென்றும்[5]
மகத்தான, சீதேவி என்றதற்குப் பேரு
அதீதமென்ற, மைசாட்சி என்றும் பேரு
அடவான, கண்ணுக்கனி மூலியென்றும் பேரு
கதீதமென்ற, காளவடித்தழசி[6] என்றும் பேரு
கருவான, நேத்திரநாசி, மூசி என்றும் பேரு
நதீதமென்ற, நிரோவடி, மாதுப் பூடென்றும் பேரு
நாம், சொன்னோம், நன்றாகப் பொன்னாங்காண்ணியின்
பேரே. *(459)*

*(உரை:)* இருஞ்சாடு, ஞானப்பூ, சீதேவி, மைசாட்சி, கண்ணுக்கனி மூலி, காளவடித்தழசி, நேத்திரநாசி, மூசி, நிரோவடி, மாதுப்பூடு என்பன பொன்னாங்கண்ணியின் பெயர்கள்.

---

1. மதிற்புற சந்தான், 2. குட, 3. நீலாம்புரி என்பது ஒரு ராகம், 4. நேரிதழ், 5. விரிஞ்ச வெரு பூடு, 6.வடிவழகி,

### பொற்றலைக்கையானின் பெயர்கள்

நன்றான, வசலோமிய அமீத மென்றும்
நளினி மென்ற, வக்க தாரி மூலி யென்றும் பேரு
அன்றான வனோத வாடமூலி[1] என்றும் பேரு
அங்கையா, அஞ்சப் பூடென்று[2] மதற்குப் பேரு
வன்றான[3], வாழ் செடிப் பூண்டென்றும்[4] பேரு
மதுர காடக மூலி என்றதற்குப் பேரு
குன்றான, நுவழலோசை[5] ப்பூடென்றும் பேரு
கூறினோ மாகாத்தெளிவு, பொற்றலைகையான்
பேரே. *(460)*

(உரை:) பொற்றலைக்கையானின் பெயர்கள் வசலோமிய அமீதம், வாக்கதாரி மூலி, வனோத வாடமூலி, அஞ்சப்பூடு, வாழ் செடிப்பூண்டு, மதுரகாடக மூல்லி, நுவழலோசைப்பூடு என்பன.

### பத்திராட்சியின் பெயர்

தெளிவான, புனலுடமா தென்றும் பேரு
திருவான, பருவதி[6], கந்த மென்றும் பேரு
துளிவான, கரட்டரணை, இந்து[7] மிப்பூடு
துணைவன், விழியாள்[8] மூலி யென்றும் பேரு
தளிவான, சன்னத வாளி என்றும் பேரு
சடி கழங்காதிப்பூ[9] டென்றதற்குப் பேரு
வெளியான, வென்னவேர் விழியாள் மூலியென்றும்
விளம்பினோம், பண்டிதர்க்கு, பத்திராட்சியின்
பேரே. *(461)*

(உரை:) பத்திராட்சியின் பெயர்கள், புனுலுடமாது, பருவதி, கந்தம், கரட்டரணை, இந்துமிப்பூடு, துணைவன், விழியாள் மூலி, சன்னதவாளி, கழங்காதிப்பூடு, வேர் விழியாள் மூலி என்பன.

---

1. வரோதவாட, 2. நஞ்ச, 3. வண்டான வாதை, 4. செடிப்பூ, 5. வள, 6. பதிப்பதி, 7. சிந்து, 8. வழியாள், 9. களங்காதிப்பூடு.

## சிறுபீளையின் பெயர்கள்

விளங்கக்கேள், சனுங்கு ஊசையென்றும் பேரு
வீரான, ஊனின் பூடென்றிதற்குப் பேரு
உளங்கக்கேள், உரதமென்றும்[1] அதீதப்பேரு
உறுதி பெறு ஊட்டுப்[2] பர மூலியென்றும் பேரு
மளங்கக்கேள், ஊங்கனிமூலி[3] யென்றும் பேரு
அருளினோம், தூங்கு மூதாரம்[4] என்றும் பேரு
முளங்கக்கேள், மூதேவி மூல மென்றும் பேரு
முக்கியமாய், சொல்லிவிட்டோம், சிறு பூளையின்
பேரே. *(462)*

*(உரை:)* சனுங்கு ஊசை, ஊனின்பூடு, உரதம், ஊட்டுப்பர மூலி, ஊங்கனிமூலி, தூங்கு மூதாரம், மூதேவி மூலம் என்பன சிறுபீளையின் பெயர்கள்.

## பிரண்டையின் பெயர்

முக்கியமென்ற, அருகணி, வச்சிரவல்லி என்றும்
மூதண்ட சூதகளிதமென்றும் பேரு
வக்கிய[5] முள்ள பாலை[6], மாருதமூலி யென்றும்
மடவான, வலந்த யுத்த மூலியென்றும் பேரு
கக்கிய காத்த கண்டுயா மூலி யென்றும்
கருவான, வேதரிக் கண்டப்பூடென்றும்[7] பேரு
மக்கயிமுள்ள, மிதுனக் குடைமீலி[8] யென்றும்
மாட்டினோம், வெளியாகப் பிரண்டையின்
பேரே. *(463)*

*(உரை:)* அருகணி, வச்சிரவல்லி, மூதண்ட சூதக்களிதம், பாலை, மாருத மூலி, வலந்தயுத்த மூலி, கண்டுயா மூலி, வேதரிக்கண்டப்பூடு, மிதுனக்குடை என்பன பிரண்டையின் பெயர்கள்.

---

1. உறங்கும், 2. உளட்டு, 3. உளங்கனி, 4. முதூமம், 5. கதீத, 6. கபலை, 7. வெறி, 8. மிது,

## வெள்ளைநாயுருவியின் பெயர்கள்

வெளியான, உபா மாருத மூலி யென்றும் பேரு
விளங்கினோம், காட்டமஞ்சனாதி யென்றும் பேரு
குளியான, கூர்மை, கருமூலியென்றும் பேரு
குருவான, வாள நாதிக்க[1] மென்றும் பேரு
அளியான, விரு[2] வினாடி மூலி யென்றும் பேரு
அருளான, விர விழியான்[3] பூடென்றும் பேரு
ஊளியான, ஊர்தோறும்[4] மங்கைமூலி யென்றதற்குப் பேரு
உசிதமென்ற, வெள்ளை நாயுருவியத்தனைப்
பேரே. (464)

(உரை:) மாருத மூலி, மஞ்சனாதி, கூர்மை கருடமூலி, வாள நாதிக்கம், வினாடி மூலி, விழியான் பூடு, மங்கை மூலி என்ற எட்டுப் பெயர்கள் நாயுருவிக்கு.

## திருகு கள்ளியின் பெயர்கள்

உசித மென்ற, கலைமான் மூலி[5] யென்றும் பேரு
உறுதி பெறும், அகோரவேலி, நாக்க[6] னென்றும்
பேரு
விசித மென்ற, நால் மறைவல்லி யென்றும் பேரு
விளங்கினோம், பேசும் பாலடி யென்றும் பேரு
உசிதமென்ற, கனப்பாலி[7] என்றும் பேரு
வளமான, கருவம்பம் என்றதற்குப் பேரு
அசிதமென்ற, அவுக்கிர கந்த மென்றும்[8] பேரு
அருளினோம், புலத்தியனே, திருகு கள்ளியின்
பேரே. (465)

(உரை:) கலைமான்மூலி, அகோரமூலி, நாகக்கனி, நால் மறைவல்லி, பேசும்பாலடி, களப்பாலி, கருவம்பம், அவுக்கிரகந்தம் என்பன. திருகு கள்ளியின் பெயர்கள் எட்டாகும்.

---

1. காமம், 2. வரி, 3. வினி, 4. கோரு, 5. மானாமூலி, 6. நாக்கன்னி, 7.வானப்பால், 8. உக்கிரகந்தம்.

## இலைக்கள்ளியின் பெயர்கள்

அருளினதோர், முருத்திருக்கனென்றதற்குப் பேரு
அடவான, முடகபாணி, முலைத்தாசி என்றும் பேரு
கருளினதோர், கள்ளியிடையாளென்றும் பேரு
கருவான, வத்தாம்ப[1] மென்றும் பேரு
பருளினதோரானைத்தருக்களென்றும்[2] பேரு
பரிவான, கூனிக்குடையாள் மூலி யென்றும்
அருளினதோர் குறிஞ்சி மாதரையென்றும் பேரு
வசனித்தோம், என்பா[3], இலைக்கள்ளியின் பேரே. *(466)*

*(உரை:)* முத்திருக்கன், முடகபாணி, கள்ளி இடையாள், வத்தாம்பம், ஆனைத்தருக்கள், கூனிக்குடை யாள் மூலி, குறிஞ்சி மாதரை, முலைத்தாசி என்ற எட்டுப் பெயர்கள் இலைக்கள்ளியின் பெயர்கள்.

## ஊர் கள்ளியின் பெயர்கள்

தென்பான[4], வெந்துரு கசை[5], என்றும் பேரு
தெளிவான, விபேகநாதமூலி[6] என்றும் பேரு
கனம்பான[7] கயாக் கடிவாசி என்றும் பேரு
கண்டபேர், கழுவாள[8] என்றும் கொழுந்துடைமாதென்றும்
சொன்பான, குருமுனி, அழகியென்றும் கூறினோம்
மூரினிட நிறப்பவளென்றும் ... ... ...
தனம்பான[9], தாணுவன மூலி என்றும்
தாபித்தோமிந்த, எண்ணூறு, ஊர்க்கள்ளியின்
பேரே. *(467)*

*(உரை:)* வெந்துருக்காசை, வியேக நாதமூலி, கடிவாசி, கழுவாள், கொழுந்துடை மாது, குருமுனி, அழகி, மூரினிட நிறப்பவள், தாணுவன மூலி என்பன ஊற்கள்ளியின் பெயர்கள்.

---

1. வத்தரம்பம், 2. தோரணத்தருக்கள், 3. தென்பாக்கிலை, 4. வென்பான, 5. தாசை, 6. வேகநாதமூலி, 7. கன்பான, 8. தழுவாள், 9. தன்பான.

466வது பாடலில் 3, 4 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

### சதுரக்கள்ளியின் பெயர்கள்

தாபித்தோம், கண்டியென்று, உச்சிரமென்றும்[1]
தருவான, காமோதக மென்றும் பேரு
தாபித்தோம், கற்காடக மாத ரென்றும் பேரு
நலமான, கருவு மறப்பளி யென்றும் பேரு
வாபித்தோம், கங்கைப் பாலிலை என்றும் பேரு
வாசிட்ட[2], ரதி மூலிஎன்றும் பேரு
யாபித்த, மாக்கணுடையாள் மூலி என்றும் பேரு
அதீதமாய் சொல்லிவிட்டோம், சதுரக்கள்ளியின்
பேரே. *(468)*

*(உரை:)* உச்சிரம், காமோமதகம், கற்காடக மாதர், மறப்பளி, கங்கைப்பால் இலை, இரதி மூலி, மாக்கணுடையாள் மூலி என்பன சதுரக்கள்ளியின் பெயர்கள்.

### ஆலமரத்தின் பெயர்கள்

அதீதப்பழு மரமென்றும், வட்ட மரமென்று
அடவான, கொறடமென்றும்[3] பேரு
மதீத, தேவாதீதமூலி என்றும் பேரு
மகத்தான, விருட்சாந்திர மென்றதற்குப் பேரு
வதீத, விழுதுடந்தியென்று, அதற்குப் பேரு
வளமான, யோசனையளாவி என்றும் பேரு
அதீத, தேவ காணாதி[4] என்றும் பேரு
பன்னம் பெறு, வாசவி விருட்சமென்று
ஆலமரத்தின் பேரே. *(469)*

*(உரை:)* பழுமரம், வட்டமரம், கொறடம், தேவாதீத மூலி, விருட்சாந்திரம், விழுதுடந்தி, யோசனை அளாவி, தேவகணாதி, வாசவி விருட்சம் என்பன ஆலமரத்தின் பெயர்கள்.

---

1. முச்சிரம், 2. வாசிட்டாதி, 3.கோறடம், 4. கணாதி

## அரசமரப் பெயர்கள்

பன்மை பெறு, சாக மென்றும், மகேதயமென்றும்
பாடினோம், மாருதி சிங்கி என்றும் பேரு
வன்மை பெறு, அரச விருட்ச[1], மென்றும் பேரு
வளமான சோதி நிகர[2] மென்றும் பேரு
தண்மை பெறும், சுந்தர நங்கை என்றும் பேரு
தருவான, யந்திர மாதென்றும் பேரு
வெண்மை யென்ற விழிபண்பனென்றும்[3] பேரு
விளங்கினோம், அரசமரத்தினிட பேரே. (470)

(உரை:) சாகம், மகோதயம், மாருதிசிங்கி, அரச விருட்சம், சோதிநிகரம், சுந்தர நங்கை, யந்திர மாது, விழி பண்பன் என்பன அரசமரத்தின் எட்டுப்பெயர்கள்.

## தேள் கொடுக்கிலையின் பெயர்கள்

விளங்கு மதவானை[4], அதுவழங்கி[5] என்றும்
விசித மென்றதான, தாயைக் கொண்ணோ,
நூடமாரென்றும்[6]
அளங்குமுடைய, அளவஞ்சி மூலி என்றும் பேரு
அருளான சடைப்பூடென்றும்[7] பேரு
நளங்கு, மாதர்[8], வாசியாய்[9] பூடென்றும்
நளின மென்ற, மங்கை நாத மென்றும் பேரு
தெலுங்கும், வானச் செடங்கி[10] என்றும் பேரு
தெளிவான, தேள் கொடுக்கினிலையின் பேரே. (471)

(உரை:) மதவானை, வழங்கி, தாயைக் கொண்ணோ நூடமார், அளவஞ்சிமூலி, சடைப்பூடு, மாதர் வாசிப்பூடு, மங்கை நாதம், வானச் சடங்கி என்பன தேள் கொடுக்கிலையின் பெயர்கள்.

---

1. வாசவிருட்சம், 2. நிகர, 3. நண்பன், 4. மதயானை, 5. வளங்கி, 6. செடமார், 7. சொடைப்பூடு, 8. மாடா, 9. வாசிக்காய், 10. வான் சேடலை,

குறிப்பு:- தெலுங்கு என்று கூறப்பட்டுள்ளதால் விசயநகர அரசு தோன்றிய பின்னர், இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம். (கி.பி. 1509ல் கிருட்டிணதேவராயர் காலத்தில் தமிழகம், விசயநகர அரசின்கீழ் வந்தது)

## ஆதண்டையின் பெயர்கள்

தெளியும், காதொட்டிஎன்றும், ஆலாவாருத மென்றும்
தெளிவான, உக்கிரக, கிரந்த[1] மென்றும் பேரு
களியு, முத்தண்டவாசி மூலி என்றும் பேரு
கருணை பெறு, ஒருமுலை மாதரென்றும் பேரு
நளியுமான, வசியக்கன்னி[2] என்றும் பேரு
நலமான, ஒண்டிப் பார்ப்பனென்றும்[3] பேரு
ஒளியு[4] மொட்டுப் பலாதி என்றும் பட்டல ரதம்
உக்கிரமதாய், சொல்லிவிட்டோம்,
ஆதண்டையின்[5] பேரே. *(472)*

*(உரை:)* காதொட்டி, ஆலாவாருதம், உக்கிரக கிரந்தம், முதண்டவாசி மூலி, ஒருமுலை மாதர், வசியக்கன்னி, ஒண்டிப் பார்ப்பன், மொட்டு, பலாதி என்பன ஆதண்டையின் பெயர்கள்.

## ஆகாசக்கருடனின் பெயர்கள்

உக்கிரப் புதையீர லென்றும், இந்திரா பதியென்றும்
ஓகோகோ, யாறக[6] மென்றதற்குப் பேரு
அக்கிரபதி,பாங்கய[7] யென்றதற்குப் பேரு
அருளினோம்,மனோமாசி[8] யென்றும் பேரு
வக்கிர, வனமதைத்தாங்கி யென்றும் பேரு
வாருக்கதிரோனென்றும் பேரு[9]
மக்கிர[10], பத்திராதி என்றும் பேரு
மாட்டினோம், ஆகாச கருடனிதன் பேரே. *(473)*

*(உரை:)* உக்கிரப் புதையீரல், இந்திராபதி, யாறகம், அக்கிரபதி, பாங்கயம், மனோமாசி, வனமதைத்தாங்கி, வாருக்கதிரோன், பத்திராதி என்பன ஆகாச கருடன்கிழங்கின் பெயர்கள்.

---

1. சுகந்தம், 2. கனி, 3. வொன, 4. ஒளியுமே, 5. மாதண்டை.., 6.யார்க்கம், 7. பாங்காய், 8. மணமாலை, 9. வளமான, 10. மக்கிரய

### கரும்பின் பெயர்கள்

மாட்டினோம், கன்னலென்று,உயிக்கு என்றும்[1]
மதியிக்கா, என்றதற்குப் பேருண்டாச்சு
காட்டினோம், கணையென்றிதற்குப் பேரு
கங்குமென்று[2] மதற்குப் பேர், கருவாய்
வாட்டினோம், வள்ள[3] ஆதமென்றும் பேரு
மகத்தான, கருணை விருட்ச மென்றும் பேரு
நாட்டினோம், கோர விருட்ச மென்றும் பேரு
நாம் சொன்னோம், நளினமதாய்,கரும்பினிட பேரே.(474)

(உரை:) கரும்பின் பெயர்கள், கன்னல், உயிக்கு மதியிக்காய், கணை, கங்கு, வள்ள ஆதமம், கருணை விருட்சம், கோரவிருட்சம் என்பன.

### கொன்றையின் பெயர்கள்

சொன்னதொரு, இதழி[4] யென்றும், மதலை யென்றும்
சொற்பெரிய அரி, செயமங் கென்றும்
அன்னதொரு, ஆக்கரு[5] என்றும் பேரு
அருளான, விதனவிஎன்றும் பேரு
என்னதொரு, இருளி[6] என்றதற்குப் பேரு
இராவங்க மென்ற[7] இப்பேருண்டாச்சு
நன்னதொரு, இராசவி[8] இரத மென்றும்
நாம், சொன்னோ மிந்நூலில், கொன்றையின்
பேரே.(475)

(உரை:) இதழி, மதலை, பெரிய அரி, செயமங்கு, ஆக்கரு, விதனவி, இருளி, இராவங்கம், இரதம் என்பன கொன்றையின் பெயர்கள்.

### சரக்கொன்றையின் பெயர்கள்

இன்னமென்ற, சரக்கொடி என்றும் பேரு
மேலான கடிரக வாக்க மென்றும் பேரு
அன்ன மென்ற, தாளிமாருட மென்றும் பேரு
அருளான,துங்க மண்டமென்றும் பேரு

1.இக்கு, 2.கங்கம், 3. வள்ளாத, 4. வித்தி, 5. யாக்கரு, 6. விருளி, 7. மறரா, 8.இராசரோகம்.

சன்னமென்ற, சாருண்டகமென்றும் பேரு
சார்வான, சூடரேச்சாதி என்றும் பேரு
முன்னமென்று, முடியின் தரித்தானென்றும் பேரு
மூதண்டமென்ற, சரக் கொன்றையின் பேரே. *(476)*

*(உரை:)* சரக்கொடி, கடி ரகவாக்கம், தாளி மாருடம், துங்க மண்டம், சாருமண்டகம், குடரோச்சாதி, முடியில் தரித்தான் என்பன சரக்கொன்றையின் பெயர்கள்.

**அமுக்ராவின் பெயர்கள்**

மூதண்ட அசுவகந்தி, கெந்திய சுன்ன [1] னென்றும்
முறையான வாசி என்றும் பேரு
வாதண்ட, வலக்க மென்றும் பேரு
ஆனந்த ராசி என்று மதற்குப் பேரு
விதண்டவல்லி, வாதாளி என்றும், விரகேந்திரமங்கை என்றும்
கேதண்டக் கினிந்த [2], நயமா தென்றும்
கெணிதமதாய்ச் சொல்லிவிட்டோம், அமுக்ராவின் பேரே. *(477)*

*(உரை:)* அசுவகந்தி, கன்னன், வாசி, வலக்கம், ஆனந்த ராசி, வீதண்டவல்லி, வாதாளி, வீரகேந்திர மங்கை, நலமாது என்பன அமுக்ராவின் பெயர்கள்.

**கொடி மாதுளையின் பெயர்கள்**

கெணித மென்ற, கெபூரமயப் [3] பூரந்தனமென்றும்
கெடியான, வாலாவட்டி [4] என்றும் பேரு
நணித மென்ற, வந்தாரஞ்சன மென்றும் நவிலுவோம்,
நாலாங்காண்டமென்ற பேரு
வனித மென்ற, வானோதய மென்றும் பேரு
வளமான, வடிதம் [5], கொடியென்றும் பேரு
மனிதமென்ற, மரமாதளை [6] என்றும் பேரு
மகத்தான, பேரதற்குக் கொடி மாதளையின்
பேரே. *(478)*

---

476வது பாடல் அந்தாதியில் துவக்கப்படவில்லை. எனவே இப்பாடல் மாறி வந்துள்ளதாக எண்ணலாம். 1. அனகன், 2. கிளிங்கழுவபானு, 3. கெபுறமாய, 4. வெலாவட்டி, 5. வனிதன், 6. மருமாதழை. 477ஆம் பாடலில் கடைசியில் உள்ள அடி குறைவாக உள்ளது.

(உரை:) கெபூரமயம், பூரந்தனம், வாலா வட்டி, வந்தாரஞ்சனம், நாலாங்காண்டம், வானோதயம், வடிதம், கொடி, மரமாதளை என்பன கொடி மாதளையின் பெயர்கள்.

### நல் மாதளையின் பெயர்கள்

மகத்தான, தாளிம்பம், அதிவிரோத மென்றும்
வளமான, குருமுளிம்பமென்றும் பேரு
குகத்தான், கூறு சட்டமென்றும்[1] பேரு
கூறினோம், விரையோடக மென்றும் பேரு
அகத்தான[2], மணிமாதரி என்றும் பேரு
அருளினோம், வரையுடகமென்றும் பேரு
வகத்தான, வரை மதனசம்[3] என்றும் பேரு
வசனித்தோம், மொழி தவறா, நல்ல மாதளையின்
பேரே. (479)

(உரை:) தாளிம்பம், அதி விரோதம், குரு, முளிம்பம், சட்டம், விரை யோடகம், மணி மாதரி, வரையுடகம், வரைமதனசம் என்பன நல்ல மாதுளையின் பெயர்கள்.

### தாமரையின் பெயர்கள்

மொழியான, வசம்பு, செசங்[4] சுய மென்றும்
மூதண்ட வான, வாலிசை என்றும் பேரு
தழியான, தண்டுளதாசி என்றும்
தருவான, நீர்மேல் செவந்தி[5] என்றும்
தழியான, தடாகத்தோடு உயரெதும் பேரு
கருவான, மலையாட்டு உயரென்றும்[6] பேரு
மழியான, மாதவம் புரிவாளென்றும் பேரு
மகத்தான, பேரிதற்குத் தாமரையின் பேரே. (480)

(உரை:) வசம்பு, செசங்கயல், வாலிசை, தண்டுளதாசி, நீர்மேல் செவந்தி, தடாகத்தோடு, மலையாட்டு, மாதவம் புரிவாள் என்பன தாமரையின் பெயர்கள்.

---

1. சடம், 2. இகத்தான, 3. மதசம், 4. கேசம், 5. சிவந்தி, 6. உயா

## தாமரைக்கிழங்கின் பெயர்கள்

இதரான, பதும கந்தம்[1], நல்மலையாதி
இடியான, பாதாள மிரட்டி என்று
பதிரான, பழுதுடைய நாயக மென்றும்
பட்டுடை அலங்கமென்[2] றிதற்குப் பேரு
மிதரான, குழலாதி[3] என்றும், விளக்கினோம்
வெண் கருக் குழலென்றும் பேரு
செதரான, வேதாந்த சாரத்துக்குப் பேரு
செப்பினோம், தாமரைக் கிழங்கின் பேரே. *(481)*

*(உரை:)* தாமரைக் கிழங்கின் பெயர்கள், பதும கந்தம், மலையாதி, பாதாள மிரட்டி, பழுதுடைய நாயகம், அலங்கம், குழலாதி, வெண் கருக்குழல், வேதாந்த சாரம் என்பன.

## கற்றாழையின் பெயர்கள்

செப்பினோம், குமரி யென்றும், கன்னியென்றும்
செயலான, பூமா தென்றும் பேரு
அப்பினோம், அக்கினி மூலி என்றும் பேரு
அடவான, திரி சூலி என்றும் பேரு
ஒப்பினோம், யோசித மென்றும் பேரு
ஒகோகோ, கருவவாசனி என்றும் பேரு
தெப்பினோம், சொக்குநிதானி என்றும்
செயமான, கற்றாழை அதன் பேரே. *(482)*

*(உரை:)* குமரி, கன்னி, பூமாது, அக்கினி மூலி, திரிசூலி, யோசிதம், கருவ வாசனி, சொக்கு நிதானி என்பன, கற்றாழையின் பெயர்கள்.

## சார்[4] வேளையின் பெயர்கள்

தாழையென்ற, சாரணைத் திருப்புரை தானென்றும்
தருவான, பானந்தி என்றும் பேரு

---

1. நப்பக, 2. வங்கம், 3. மெய் குழலாதி, 4.சாரணை.

யாழை யென்ற, அயிராவத மென்றும் பேரு
அபிராமி மூலி என்றதற்குப் பேரு
நாழையென்ற நாகேந்திர[1] னென்றும் பேரு
நலமான, லோகமெத்தை என்றும் பேரு
ஏழை யென்ற, மோகத்திரிவா ளென்றும் பேரு
எடுத்துரைத்தோம், எட்டுப்பேர், சார் வேளை[2] யின்
பேரே. *(483)*

*(உரை:)* சாரணை, திருப்புரை, பானந்தி, அயிராவதம், அபிராமி மூலி, நாகேந்திரன், லோக மெத்தை, மோகந்திரிவாள் என்பன சாரணையின் எட்டுப்பெயர்கள்.

**அவுரியின் பெயர்கள்**

எடுத்துரைத்தோம், உலகங்கரைத்தான் நீலிஎன்றும்
ஓகோகோ, சாலிக்கண்ணி[3] என்றும் பேரு
அடுத்துரைத்தோமே, கத்தோனியா[4] ளென்றும் பேரு
அருளான, வெழல் கணை யாதிஎன்றும் பேரு
தடுத்துரைத்தோம், தாமரைக் கண்ணி[5] என்றும் பேரு
தருவான கடூரநோய்[6] யென்றும் பேரு
கடுத்துரைத்தோம், அங்காள[7] கண்டகி என்றும் பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோம், அவுரியதன்
பேரே. *(484)*

*(உரை:)* அவுரியின் பெயர்கள், உலகங்கரைத்தான், நீலி, சாலிக்கன்னி, கத்தோனியாள், வெழல், கணையாதி, தாமரைக் கண்ணி, கடூரநோய், அங்காளக் கண்டகி என்பன.

**சீந்தில் கொடியின் பெயர்கள்**

சொல்லியதோர், அமிர்தவல்லி, அருக்குசளி[8] என்றும்
சொற்பெரிய, மோதிரை கங்கை என்றும் பேரு
சல்லியதோர், குலப்பசிமா தென்றும் பேரு
சார்வான, மூலகம் பகைத்தானென்றும்

---

1. நாகந்தித் திறன், 2.சாரணை, 3. சாலிக்கண்ணி, 4. தோணியாள், 5.தாமரைக்கன்னி, 6. நோய், 7. காளக்கண்டகி, 8. சலி.

முல்லியதோர், மூதண்டக் கொடி என்றும் பேரு
மூர்க்கமென்ற, வெடியாதி என்றும் பேரு
எல்லியதோர், வெங்கை[1] ப்படு கனி என்றும் பேரு
விபரமதாய், நாம் சொன்னோம், சீந்தில் கொடியதின்
பேரே. (485)

(உரை:) அமிர்தவல்லி, அருக்குச்சளி, மோதிரை, கங்கை, குலப்பசிமாது, மூலகம் பகைத்தான், மூதண்டக் கொடி, வெடியாதி, வேங்கைப்படு கனி என்பன சீந்தில் கொடியின் பெயர்கள்.

### புல்லுருவியின் பெயர்கள்

கொடியென்று, மச்சமாமுகம்[2] என்றும் பேரு
கூறான, வத்துக் கனவுச்சி[3] விருட்சம் என்றும் பேரு
செடி என்றும், செடி முளை இந்த கந்தான்[4] என்றும்
செய வாகச் சவுருவி என்றும் பேரு
அழ என்றும், மண்ணுடையாளி என்றும் பேரு
மயக்கிக்குண்ணி, சரித்துடை என்றும் பேரு
வடி என்றும், மரவெட்டி என்றதற்குப் பேரே
மகத்தான, புல்லுருவியதற்குப் பேரே. (486)

(உரை:) புல்லுருவியின் பெயர்கள், மச்ச மாமூகம், வத்தக்கனவுச்சி விருட்சம், செடிமுளை, சவுருவி, மண்ணுடையாளி, மயக்கிக்குண்ணி, சரித்துடை, வடி, மரவெட்டி என்பன.

### எட்டி மரத்தின் பெயர்கள்

அதுவான, அக்கினி ஆடனென்றும்
அருளினோம், தேரொட்டாதி, பூதக்கணையாதி
அதுவான[5], வன முழுதாளி என்றும் பேரு
அப்பயத்துடராக மென்றும் பேரு

1. வேங்கை, 2. முகம், 3. வட்சி, 4. கத்தான், 5. சதுவான.

நதுவான, வசி மாறத்தி[1] என்றும் பேரு
நலமான, குசடதக்க னென்றும் பேரு
பதுவான, பழமடையாதி என்றும் பேரு
பாடினோம், எட்டி மரத்தினுடப் பேரே. (487)

(உரை:) அக்கினி ஆடன், தேரொட்டாதி, வன முழுதாளி, அப்பயத்துடராகம், வசிமாறத்தி, குசடதக்கன், பழமடையாதி, பூத கணையாதி என்பன எட்டி மரத்தின் எட்டுப்பெயர்கள்.

**மாவிலங்கின் பெயர்கள்**

பாடியுரி மலமென்றும், அரிய சாரணமென்றும்[2]
பன்மைபெறும் புரி, மாத்தமென்றும்[3] பேரு
வாழ[4], பூத நாத மென்றும் பேரு, மகத்தான
வரையாப்படங்கி என்றும் பேரு
காடிக் கட்டுண்டமுவா[5]ளென்றும் பேரு
கறியுணத்தி, உறியோனென்றதற்குப் பேரு
தாழ மாதா[6], சாந்த நாதீத மென்றும் பேரு
சாற்றினோம், மாவிலங்கதற்குப் பேரு. (488)

(உரை:) பாடியுரிமலம், அரிய சாரணம், புரிமாற்றம், பூதநாதம், வரையாப்படங்கி, கட்டுண்டமுவாள், கறியுணத்தி, உறியோன், தாழமாதா, சாந்த நாதீதம் என்பன மாவிலங்கையின் பெயர்கள்.

**பூசணிக்காயின் பெயர்கள்**

சாற்றினோம், மணி முலை மாதென்றும் பேரு
சார்வான கனி, பலமா முலை என்றும் பேரு
காத்தினோம், மகத்துப்[7] பரிச்சுனை என்றும் பேரு
கருணை பெறு மடியுண்டடிப்பாள் என்றும் பேரு

1. சிமார்த்தி, 2. சாருணம், 3. மாற்றம், 4. மாடிய, 5. எழுவாள், 6.தேடியமாதா, 7. சூரைக்கது.

யாத்தினோ, மண்டவுருளென்றும் பேரு
அகண்ட மாரிசனென்று அதற்குப் பேரு
வாத்தினோம், வாலசூலக் காங்கையன், சூரிய புடத்தான்
வசனித்தோம், பூசணிக்காயதன் பேரே. (489)

(உரை:) மணிமுலை மாது, கனி, பலமாமுலை, மகந்து, பரிச்சுனை, மடியுண்டடிப்பாள், மண்ட உருள், அகண்டமாரிசன், வால சூலக்காங்கையன், சூரிய புடத்தான் என்பன பூசணிக்காயின் பெயர்கள்.

## தூதுவளையின் பெயர்கள்

காயான, வருளகமய மருளாதி என்றும்
கருவான, வாழ நாழி என்றும் பேரு
சோயான, சோரிதம்[1] என்றும் பேரு
சொற்பொரிய, மணி வித்தை உள்ளேனென்றும் பேரு
ஏயான, வேலை முலை மாதரென்றும் பேரு
எங்குமணிச் சோதி, ஒளி தீபமென்றும் பேரு
சேயான, சிங்கரந்தகமென்றும்[2] பேரு
செப்பினோம், தூதுவளையதன் பேரு. (490)

(உரை:) வருளக்கமயம், மருளாதி, வாழநாழி, சோரிதம், சொற்பெரிய மணி வித்தை, உள்ளோன், வேலை, முலை மாதர், மணிச் சோதி, ஒளிதீபம், சிங்கரந்தகம் என்பன தூதுவளையின் பெயர்கள்.

## எலுமிச்சைப் பழத்தின் பெயர்கள்

செப்பினதோர், தேசிநீர், கூதழச்சாறென்றும்[3]
சிறுகிளியின் பழச்சாறென்றும் பேரு
நெப்பினதோர், நிம்பவளச்சாறென்றும் பேரு
நோவாலி[4] மாதரசி என்றும் பேரு

1. சோமரிதம், 2. சிங்குவர்க்கம், 3. கூகாச்சூரம், 4. நோயாளி.

உப்பினதோர், உபனோரஞ்சகனென்றும் பேரு
உடல் பித்த[1] முறிமாத ரென்றும் பேரு
சிப்பிபெறும் பேசும் கனிமாத ரென்றும் பேரு
செயலான, எலுமிச்சம்பழத்தின் பேரே. (491)

(உரை:) தேசி நீர், கூதழச்சாறு, சிறுகிளி, பழச்சாறு, நிம்பவளச்சாறு, நோவாலி மாதரசி, உபனோரஞ்சகம், பித்த முறி மாதர், பேசும் கனி மாதர் என்பன எலுமிச்சம்பழத்தின் பெயர்கள்.

### வெட்டிவேரின் பெயர்கள்

மதுவிலாமிச்சமென்று மசலா மாங்கமென்றும்
மகத்தான, கோரைப்பூ[2] டென்றும் பேரு
குது, குதியைப்[3] பாதியென்றும் பேரு
குலவஞ்ச நாதி[4] என்றும் பேரு
நிது, நிதி நாயக னென்றும் பேரு
நெரு மதங்கைக் குறியா னென்றிதற்குப் பேரு
சது, சன்னக் காரணை[5] யென்றும் பேரு
கருவான, வெட்டிவேரிதனுடைய பேரே. (492)

(உரை:) விலாமிச்சம், மசாலா மாங்கம், கோரைப்பூடு, குதியைப் பாதி, குலவஞ்சநாதி, நிதி நாயகன், நெரு மதங்கைக் குறியான், சன்னக் காரணை என்பன வெட்டிவேரின் பெயர்கள்.

### வெள்ளைச்சாரணையின் பெயர்கள்

கருவான, கன்னியா குமரி என்றும்
கட்டிய, மா மதுரஞ்சமென்றும் பேரு
முருவான, மும்மூலவஞ்சி என்றும் பேரு
முக்கியமுள்ள, வத்த வாரூடமென்[6]றும் பேரு

---

1. அழல், 2. கோரோசனைப்பூடு, 3. குடையை, 4. சானதனி, 5. கரதுளை, 6. வாரூடம்.

அருவான, வம்பை அடந்தமென்றும் பேரு
அருளினோம், பூதநாதீதமென்றும் பேரு
அருவான, புருசக்கரணாதி[1] செயல் பூடென்றும் பேரு
புகழான, வெள்ளைச் சாரணையின் பேரே. *(493)*

*(உரை:)* கன்னியாகுமரி, மாமதுரஞ்சம், மும்மூல வஞ்சி, வத்தவாரூடம், வம்பையடந்தம், பூத நாதீதம், புருசக்கரணாதி, செயல்பூடு என்பன வெள்ளைச்சாரணையின் பெயர்கள்.

**சங்கிலையின் பெயர்கள்**

புகழ் பெற்ற உச்சித்தங்கமென்றும் பேரு
புகழான, கமரோதயமென்றும் பேரு
புகழ் பெற்ற, மானிட மருதை என்றும் பேரு
மலர்க் கன்னி, அச்சஉத்தித மென்றும் பேரு
அகழ்பெற்ற, வாருடநாத மென்றும் பேரு
அகோர வல்லதகி பதி என்றும் பேரு
வெகழ் பெற்ற, வீரு பங்கயமென்றும் பேரு
விளம்பினோம், சங்கிலையின் விசிதமதின்
பேரே. *(494)*

*(உரை:)* உச்சித்தங்கம், கமரோதயம், மானிட் மருதை, மலர்க்கன்னி, அச்ச உச்சிதம், வாருடநாதம், அகோர வல்லத்தகி பதி, வீரு பங்கயம் என்பன. சங்கிலையின் பெயர்கள்.

**இலுப்பையின் பெயர்கள்**

விசிதமென்ற, மருங்க வனமென்றும்[2] பேரு
விளம்பினோம், மாஞ்சிப் பொருத மென்றும் பேரு
உருசிதமென்றவோர், அரையிந்த மென்றும் பேரு
உடுவிதிப்பாளமென்று மதீதப் பேரு

---

1 புட்கனூதி, 2. வணங்கம்.

அசிதமென்ற, வாக்கத்த சமூலி[1] என்றும் பேரு
அருளினோம், செங்கருக[2] மதி நீல மென்றும் பேரு
தெசிதமென்று, சேல்விழி வஞ்சியென்றும் பேரு
செப்பினோம், ஆகயெட்டு, இலுப்பையின்
பேரே. (495)

(உரை:) மருங்கவனம், மாஞ்சிப் பொருதம், அரையிந்தம், விதிப்பாளம், வாக்கத்த சமூலி (வர்த்தக சமூலி), செங்கருகம் மதி நீலம், சேல்விழி வஞ்சி என்ற எட்டுப் பெயர்கள் இலுப்பைக்குண்டு.

### நாயுருவியின் பெயர்கள்

பேரான கடவங்க, கமங்களமென்றும் பேரு
பேசினோம், மகத்தூரம் என்றும் பேரு
தேரான கரக்காதி என்றும் பேரு
தெளிவான, கருமலாகி[3] என்றதற்குப் பேருண்டாச்சு
காரான, காகரண்ட[4] மென்றும் பேரு
கருவான, கவூடமென்றதற்குப் பேரு
சாறான, கல்வக்காமாதி என்றும் பேரு
சைத்தன்னியமாம்[5], நாயுருதன் பேரே. (496)

(உரை:) கடவங்கம், கமங்களம், மகத்தூரம், கரக்காதி, கருமலாகி, காகரண்டம், கவூடம், கல்வக்காமாதி என்பன நாயுருவியின் பெயர்கள்.

### வட்டக்கிலுகிலுப்பையின் பெயர்கள் ★

பேர்க்கிடையாமசல், சலமாதரென்றும் பேரு
பேரான, தந்தியாவம்தேசம், மதவானை என்றும் பேரு
ஆர்க்கிடையா, மதமான தம்பலக் காருதமென்றும் பேரு
மகத்தானவ்வரதி மாதென்றும் பேரு

---

1. வர்க்கத்த திமிலி, 2. கருங்க, 3. பலாகி, 4. பாசுரண்ட, 5. மாநாயுருதன்,
★ 497ம் பாடலில் 7, 8 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

யார்க்கிடையா மாலத் தழகி என்றும் பேரு
அருளினோம் சுந்தரமே எட்டுப் பேரு
தோர்க்கிடையா, இந்நூல் தான் எண்ணூறு[1] தன்னில்
தெளிவாகச் சொன்னோம், வட்டகிலுகிலுப்பையின்
பேரே. (497)

(உரை:) மசல், சலமாதர், தந்தியாவம், தேசம், மதவானை, தம்பலக்காருதம், வரதிமாது, மாலத்தழகி, மதம் என்பன வட்டகிறு இலுப்பையின் எட்டுப் பெயர்கள்.

**நன்னாரியின் பெயர்கள்**

வட்டப்பாழி[2] மாலினியாராரிய மாதென்றும்
வசனித்தோம், இமயவல்லி மாதென்றும் பேரு
அட்டவென்ற, அகிலாமா[3] மூலியென்றும் பேரு
அழகி வனமாமூலி யென்றும் பேரு
சட்டமென்ற, தோகை நார்ப்பூடென்றும் பேரு
சார்வான, நட்டுவழியா ளென்றும் பேரு
கட்டவென்ற காட்டினா வாடை என்றும் பேரு
கலக்கமில்லை, சொல்லிவிட்டோம், நன்னாரியின்
பேரே. (496)

(உரை:) வட்டப்பாழி, மாலினியார், ஆரியமாது, இமயவல்லிமாது, அகிலமாமூலி, வனமாமூலி, தோகை நார்ப்பூடு, நட்டு வழியாள், காட்டினா வாடை என்பன நன்னாரியின் பெயர்கள்.

**கொடிவேலியின் பெயர்கள்**

கலக்கமில்லா, வனாதிப் பூடென்றும் பேரு
கருவான, அக்கினி கோமுச்சிரவல்லி[4]
உலக்கமில்லா உபவரளித மென்றும் பேரு
ஓகிகா[5], வாழான நக்தி, வந்த ரக்களென்றும்

1. இந்நூல்தா னிகண்டெண்ணூற், 2. வட்டவாளி, 3. வயில, 4. மூச்சுர, 5. ஒகிவா,

மலக்கமில்லாமல், கோடி வராள[1] மென்றும் பேரு
வசனித்தோம், சித்த ருக்கா எட்டெட்டுப் பேரு
அலக்கமென்ற, நடக்கையறிலானென்றும் பேரு
அருளினோம், கொடி வேலியதற்குப் பேரே. *(499)*

(உரை:) வனாதிப்பூடு, அக்கினி, கோமுச்சிர வல்லி, உபவரளிதம், வாழான நக்தி, கோடி வராளம், நடக்கை அறிவான் என்பன கொடிவேலியின் பெயர்கள்.

**கரிசாலையின் பெயர்கள்**

அருளினோம், வாழக்குழல் மாதென்றும் பேரு
அடவான, குடிமகன் நாதனென்றும்[2] பேரு
அருளினோம், இருமுட்க நில்லா னென்றும் பேரு
வளமானத் தண்ணீரு[3] தாங்கலென்றும் பேரு
நெருளினோம், நிழல்மயிர் வளத்திநேரிட்ட தானக[4]
நிகரிலக்கறை[5], திறையில்லா னென்றும் பேரு
புருளினோ, புருங்கி னென்றும் பேரு புகழாக நாம்
சொன்னோம், கரிசலாங்கண்ணியதன் பேரே. *(500)*

(உரை:) வாழக் குழல் மாது, குடிமகன் நாதன், இருமுட்சு நில்லான், தண்ணீர்தாங்கல், நிழல் மயிர் வளத்தி, திறையில்லான், புருங்கி என்பன கரிசாலையின் பெயர்கள்.

**அத்தியின் பெயர்கள்**

கண்ணி[6] யென்ற வாத வியாசமென்றும் பேரு
கருவான, வானக்[7] கண்ணனென்றும் பேரு
வன்னியென்ற கடி யென்றும் பேரு
வளமான, கடகமென்றதற்குப் பேரு
கன்னியென்ற, கேசகா[8] யென்றும் பேரு
கெடியான வேத சன்னிமென்றும் பேரு
நன்னியென்ற, பூவில் கன்னி[9] என்றும் பேரு
நன்றாகச் சொல்லிவிட்டோம், அத்தியதின் பேரே. *(501)*

---

1. வருளம், 2. சன்னாசன், 3. தன்னிரு, 4. தானகதான், 5. நிகரில்லாக்கரை, 6. கன்னி, 7. வாதேவி, 8. கேசாகரம், 9. பூவிரகன்னி.

*(உரை:)* வாதவியாசம், வானக் கண்ணன், கடி, கடகம், கேசகா, வேத சன்னி, பூவில் கன்னி என்பன அத்தியின் பெயர்கள்.

## வில்வத்தின் பெயர்கள்

நன்றான, குவள[1] மென்றும், மல்லூரென்றும்[2]
நளினமென்ற, வில்லங்கமென்றும் பேரு
சென்றான, சிலாங்க[3] மென்றும் பேரு
சிந்தமென்றுமதீதப் பேரதற்குண்டாச்சு
வன்றான, நாலசிகர[4] மென்றும் பேரு
வளமான, வற்சுனை யாதி யென்றும் பேரு
மூல முக்கணையென்று பேரு[5]
மூதண்ட மூலியது, வில்வத்தின் பேரே. (502)

**(உரை:) குவளம், மல்லூர், வில்லங்கம், சிலாங்கம், சிந்தம், நாலசிகரம், வர்ச்சுனையாதி, முக்கணை என்பன வில்வத்தின் பெயர்கள்.**

## அகத்தியின் பெயர்கள்

மூதண்ட அச்சமென்று, மசகமென்றும்[6] பேரு
முக்கியமுள்ள அசோக[7] மென்றும் பேரு
யாதண்ட வாணிதமென்றதற்குப் பேரு
யாதகமென்றதற்கும் பேருண்டாச்சு
தாண்டமென்ற, அவப்பித்தாண்டி என்றும் பேரு[8]
ஆரோக்கிய மாதரென்றதற்கும் பேரு
தண்டமென்ற, பத்திய முறிச்சா னென்றும் பேரு
பாடினோ மெட்டும் பேர், அகத்தியின் பேரே. (503)

---

1. கூவளம், 2. மல்லூரம், 3. சீவரங்கம், 4. காவசிகரம், 5. முன்றான முல முக்கணை, 6. அசகம், 7. வழுசாகம், 8. அவவயிகண்ட பத்திய முறிச்சானென்றும் பேரு.

(உரை:)அச்சம், மசகம், அசோகம், வாணிதம், யாதகம், அவபித்தாண்டி, ஆரோக்கியமாதர், பத்திய முறிச்சான் என்ற எட்டுப்பெயர்கள் அகத்திக்குண்டு.

## பூனைக்காலியின் பெயர்கள்

ஓமென்ற, வருக்கியதாக[1] மென்றும் பேரு
ஓகோகோ, வனந்தவங்கமென்றும்[2] பேரு
ஆமென்ற, வாலக் காட்டுயரென்றும் பேரு
அகண்டகாலி[3], வேதகனென்றும் பேரு
வாமென்ற, வாய்வட சங்கம், பூனைப்புதைத்தான்
வசனித்தோம், மனைக்கிடங்கென்றும் பேரு
தாமென்ற, புலிமிரட்டி[4], ஈசனென்றும் பேரு
தருவான, பூனைக் காலியிதன் பேரே. (504)

(உரை:) வருக்கியாதகம், வனந்தவங்கம், வாலக் காட்டுயர், அகண்டகாலி, வேதகன், வாய்வடசங்கம், பூனைப்புதைத்தான், மனைக்கிடங்கு, புலிமிரட்டி, ஈசன் என்பன பூனைக்காலியின் பெயர்கள்.

## நாய்ப்பாகலின் பெயர்கள்

கருவக்கிரப் பூவிளை[5], சிற்றுவென்றும் பேரு
தன்மைபெறு, கணிரென்றும்[6] பேரு
அருவல, வங்கிதம்[7] என்றதற்குப் பேரு
அருள், ருத்திராட்சந்தம், பத்திரமடந்தை
பருவாரித்தூட்டுவன் என்றதற்குப் பேரு
பண்புபெறும், வாதாவிப்பூடென்றும் பேரு
நறு சமுறுச்சாதி மூலி யென்றும் பேரு
நவிலுறும் பேரெட்டாச்சு, நாய்ப்பாகலதன் பேரே. (505)

---

1. முக்கியாதகம், 2. வங்கண, 3. ஆகண்ட, 4. மாலிமிரட்டி,

5. தருக்கிரபூவினை என்று இருத்தல் வேண்டும், 6. மா அணி, 7.வலங்கீதம்,

(உரை:) கருவக்கிரப் பூவிளை, கணி, சிற்று, வலங்கீதம், ருத்திராட்சந்தம், பத்திர மடந்தை, பருவாரித்தூட்டுவாள், வாதாவிப்பூடு, சமுறு, சாதிமூலி என்பன எட்டு நாய்ப்பாகலின் பெயர்கள்.

## தகரையின் பெயர்கள்

நவிலும், அப்பூனண்ட மென்றும்[1], மயக்கண்டோதய
மென்றும்
நண்பான, வனப்பாச்சி[2] யென்றும் பேரு
பவிலும், பாவத்துடந்தங்கமென்றும் பேரு
பரிஏரிடையாதி என்றும் பேரு
மவிலும்[3], நக்க வாதக[4] மென்றும் பேரு
மகத்தான, நஞ்சுரிவாளி என்றும் பேரு
கொவிலும், கோணக்கோதயர் என்றதற்குப் பேரு
கூறினோம், புலத்தியனே, தகரையதன் பேரே. (506)

(உரை:) பூன் அண்டம், மயக்கண்டோதயம், வனப்பார்ச்சி, பாவத்துடந்தங்கம், பரியேரி, அடையாதி நக்கவாதகம், நஞ்சுரிவாளி, கோணக் கோதையர் என்பன தகரையின் எட்டுப்பெயர்கள்.

## வெள்ளைக் குன்றியின் பெயர்கள்

கூறினோம், தெளியலாம், புலத்தியனே சொல்லக்கேளு
குருச[5] மென்றும், குறியென்றும் பேருண்டாச்சு
அறியலாம், கோபனாதி பகனாதி என்று மதற்குப் பேரு
வசனித்தோம், கனிவல்லி[6] என்று மதற்குப் பேரு
அறியலா மாங்காரி மூலி என்றும் பேரு
அருளான, வாசவட மென்றதற்குப் பேரு
நறியலாம், நாமருதை என்றதற்குப் பேரு
நலமான, வெள்ளைக் குன்றி மணியதன் பேரே.(507)

1. மப்பூ கண்டமென்று, 2. வனப்பாசி, 3. நவிலும், 4. காலாதகம், 5. குரிசம், 6. கனி என்றும்,

(உரை:) குருசம், குறி, கோபனாதி, பகனாதி, கனிவல்லி, மாங்காரி மூலி, வாசவடம், நாமருதை என்பன வெள்ளைக் குன்றிமணியின் பெயர்கள்.

### கருங்குன்றியின் பெயர்கள்

நலமான, நாத சிரோமணி யென்றும் பேரு
நளினமென்ற, நடவலைமாலை என்றும் பேரு
குலமான, குறத்தி சன்னி என்றும் பேரு
கூறு மாகரளி[1] என்றும் மதற்குப் பேரு
வலமான[2], வர்க்க சஞ்சீவி யென்றும் பேரு
வசனித்தோம், வாலாவி என்றும் பேரு
சலமான, சமாதி மூலி என்றும் பேரு
சார்வான, கருங்குன்றி, சஞ்சீவியின் பேரே. (508)

(உரை:) நாதசிரோமணி, நடவலைமாலை குறத்தி சன்னி, மாகரளி, வர்க்க சஞ்சீவி, வாலாவி, சமாதிமூலி சஞ்சீவி என்பன கருங்குன்றியின் பெயர்கள்.

### செங்குன்றியின் பெயர்கள்

சார்வான, சாசங்க மூலி என்றும் பேரு
சமனப்பூடம், கோதமூலி என்றும் பேரு
ஆர்வமான, அம்மலர்தம் மூலி என்றும் பேரு
அகோர காளமேக மதற்குப் பேரு
நார்வான, நகாசாலி மூலி என்றும் பேரு
நலமான, சிங்களப்பூடிதற்குப் பேரு
ஓர்வான, விரோச்சன மாமூலி யென்றும் பேரு
விளக்கினோம், செங்குண்டுமணியின் பேரே. (509)

(உரை:) சாசங்க மூலி, கோதமூலி, மலர்தம்மூலி, அகோர காளமேகம், நகாசாலி மூலி, சிங்களப்பூடு விரேச்சன மா மூலி என்பன செங்குன்றி மணியின் பெயர்கள்.

---

1. காளி, 2. வளமான.

## கோரக்கர் மூலியின் பெயர்கள்

விளக்கினோம், கோரக்கர் மூலி யென்றும் பேரு
விதமுள், கோரக்கர் பூண்டென்றும் பேரு
அளங்கினோம், மதங்கமூலி[1] என்றுமதற்குப் பேரு
அண்டுதாரை[2], மயக்கியென்றதற்குப் பேரு
குளங்கினோம், குறு[3] மூலி என்றும் பேரு
கூறினோம், அனுவல்லிப்[4] பூடென்றும் பேரு
தளங்கினோம், தனை மயக்கி[5] மூலி என்றும் பேரு
தரை மாதென்றும் பேர், கஞ்சாவின் பேரே. *(510)*

*(உரை:)* கோரக்கர் மூலி, கோரக்கர் பூண்டு, மதங்க மூலி, அண்டுதாரை, மயக்கி, குறுமூலி, அனுவல்லிப்பூடு, தனைமயக்கி, மூலி, தரைமாது என்பன கஞ்சாவின் பெயர்கள்.

## எழுத்தாணி பச்சிலையின் பெயர்

என்றும், கொடரிசட்டி[6] என்றும் பேர்
மெனாதி, மூலிசங்க மென்றும் பேரு
அன்றுமய, மூவானறி[7] என்றதற்குப் பேரு
அருள் மடங்கைப் பூடென்றும் பேரு
சென்று, சில கங்கை என்றும் பேரு
சேல்விழி மாதரென்றும் பேரு
கண்டு, கருவஞ்சி[8] என்றும் பேரு
கருவான, எழுந்தாணி பச்சிலையின் பேரே. *(511)*

*(உரை:)* கொடரிச்சட்டி, மூலி சங்கம், மூவானறி, அருள் மடங்கைப்பூடு, சிலகங்கை, சேல்விழி மாதர், கருவஞ்சி என்பன எழுத்தாணிப் பச்சிலையின் பெயர்கள்.

---

1. ஆதங்க மூலி, 2. அடுத்தாரை, 3. குருமூலி, 4. மனுவல்லி, 5. தளைமயக்கி, 6. கோடரிமட்டி, 7. மூவான்றி, 8. கரு.

பேரான, பேர்களெல்லாம் பொறுக்கி, மணிபோல
பிரபல்லியமாக வல்லோ, பேசினோமிந்நூலில்
மாரான[1] கன மூலிகருக்கள் கண்டறிந்து
கருணை பெறச் சொல்லிவிட்டோ மிந்த எண்ணூறில்
வாரான, புலவர், சித்தர், சிவயோகியறிவார்கள்
மகத்தான லட்சணமாம் என் நூல் காரர்[2]
வேரான[3], வேதாந்தி கவுன[4] ஞானத் தோர்கள்
விசிதமிந் நூல், இலட்சத்தை விரும்பிப் பாரென்றே. (512)

*(உரை:)* பெயர்களை எல்லாம் பொறுக்கி, அணிகலனாக ஆக்கினோம், இந்நூலில் மூலிகைகளின் கருப்போன்றவைகளைக் கண்டுபிடித்து, அருளுடன் சொல்லி யுள்ளோம், எண்ணூறு பாடல்களில் இதை, புலவர்கள், சித்தர்கள் சிவயோகிகள் அறியமுடியும்.

**நூற் பெருமை**

விரும்பிப்பார், மகராச பூபதியே கேளும்
விரும்பினோம்[5], வைத்திய காண்டம், பண்டிதர்கள் தேற
விரும்பிப்பார், முதற்காண்ட நூற்று முப்பதுக்குள்
விளங்கும், சகல மூலியுட கருக்களளெல்லாம் சொன்னோம்
விரும்பிப்பார், புலத்தியனே, இந்தெண்ணூரிவிடம் விடாதே
செகமனிதரிலே, விட்டோ ரேயானால்
விரும்பிப்பார், அண்டயிடி, தலை தெறித்துப் போகும்
விசிதமுள்ள, இந்தெண்ணூறு, வெகுபதனம் பண்ணே. (513)

*(உரை:)* வைத்திய காண்டம், மருத்துவத்தில் தேர்ச்சியடைய, மருத்துவர்களுக்கு எடுத்துக்கூறினோம். முதல் காண்டம் 130 பாடல்களில் எல்லாவகையான

---

1. காரான, 2. எண்ணூற்காணார், 3. பேரான, 4. மவுன, 5. விளங்கினோம்.

மூலிகைகளின் இயல்புகளைக் கூறினோம். 800 பாடல்கள் உள்ள நிகண்டைத்தராதே. தந்தால் இடியால் தலை வெடிக்கும். 800 பாடல்களையும் கவனமாக காப்பாற்றுவாயாக.

*பதனமதாய் வைத்து, சிவபூசையது செய்து*
*பண்புடையவே, வேதாந்தப் பரிபூரண எண்ணூறில்*
*பதனமதாய், வைத்துத்தரிசிப்பாய், புலத்தியனே*
*பரிவான, பஞ்சகாவியம், சவுமியமும்*
*பதனமதாய் வைத்து,எண்ணூறு பணிந்துவிடுவீராகில்*
*பராபரமாய்[1], எந்நாளும் பாவித்து, வாழ்வாய்*
*பதனமதாய், நாலாவதிந்த[2] காண்டமதைச் சொன்னோம்*
*பாடினோம், வன மூலி, பரிபூரண முற்றே. (514)*

(உரை:) கவனமாய் பாதுகாத்து,சிவபூசை செய்யவும். 800 பாடல்களையும், வைத்துத் தூய நூலாகக் காண்பாய். பஞ்சகாவியம், சவுமியமும், கவனமாக வைத்து, எண்ணூறை வணங்கிட, நன்கு வாழ்வாய். நாலாம் காண்டத்தில் காட்டில் வளர்ந்துள்ள மூலிகைகளைப் பற்றி முழுமையாகப் பாடினோம்.

## ஐந்தாம் காண்டம்

### காப்புச் செய்யுள்

*பூரணமாம், சதுர்முகத்தன் பாதம் போற்றி*
*பொன்னடி வாழ், மாது சரசுவதியே போற்றி*
*வாரணமாம், கசமுகவன், வல்லபையே[3] போற்றி*
*வசனித்த[4] வாத காவியமே போற்றி*
*காரணமாம், பொதிகை தட்சணாானாகிக்*
*கவி பதினாறு லட்சம் பாடல் போற்றி*
*ஆரணமாம், ஆதியந்தம் விளங்கும்*
*அம்பரத்தின் சூட்ச சடாதாரம் காப்பே. (515)*

1. பரபரம்போல், 2. நாலாவதிந்த, 3. வல்லபயைப், 4. வசனித்தேன்.

சூட்சமென்ற, நூல்களெல்லாமாய்ந்து
சுருதிமுடிவான, இந்த எண்ணூறு பாடி
தேகமென்ற, திசையிலுள்ள சித்தர்க்கெல்லாம்
திரட்டி, இந்தக் காவியமாய் நிகண்டெண்ணூறாய்
பாசமதாய், சொல்லுகின்றோம், பதிணென்பேர்கள்
பாடியதோர், நூல்களுக்குக் குரு நூலாகும்
வாசமுள்ள, பூமலரின் ஒளியைப் போல
வசனிப்போம், பஞ்சகாண்டம் வகுத்துப்பாரே. (516)

(உரை:) நான்முகனின் திருவடிகளை வணங்குகின்றேன், ஆனைமுகனை வணங்குகின்றேன். வாத காவியத்தைப் போற்றுகின்றேன். 16 இலட்சம் பாடிய தட்சணாமூர்த்தியின் பாடல்களைப் போற்றி வணங்குகின்றோன். இறைவன் காப்பாற்றட்டும்.

நுணுக்கமாக மருத்துவநூல்களை ஆய்ந்து, கேட்கப்பட்ட இந்த எண்ணூறு பாடல்களை முடிவுடன் பாடியுள்ளேன். நான்கு திசைகளில் உள்ள சித்தர்களுக்காக 800 பாடல்களாகத் திரட்டி, அன்புடன் சொல்லுகின்றேன். எல்லா சித்த மருத்துவ நூல்களுக்கெல்லாம் குருநூலாகும். மணமிக்க பூவின் ஒளியைப் போல, ஐந்தாம் காண்டத்தில் வகுத்துக் கூறுவேன்.

வகுத்துப்பார், தொண்டனுக்குத் தொண்டனாகி
வளமான, குருவிடத்தில் பன்னிரண்டாண்டு
வகுத்துப்பார், அவரிடத்தில் கேள்வி கேட்டு
மவுனப் பொருளான உபதேசம் கேட்டு
வகுத்துப்பார், கேட்கும் பாகமறிந்து[1],
மகத்தான, பூரணத்தை அறிவால் கண்டு
வகுத்துப்பார், செய் குருவை பணிந்தீராகில்
வாசியது, ஒடுங்குமிடம், வசனிப்பாரே. (517)

(உரை:) ஆசிரியரிடத்தில் பன்னிரண்டு ஆண்டுகள், தொண்டுசெய்து, வினாக்களால் பொருளறிந்து கொள்ளவும். யோகப்பயிற்சியை அறிந்து முழுமையை அறிவால் கண்டு,

1. ரேசகும்பக.

பின் ஆசிரியரைப் பணிந்து வணங்க, மூச்சுப் பயிற்சி ஒழுங்குபடும்.

வசனிப்போம், சுந்தரமே நன்றாய்க் கேளு
வரந்தானெந்தனுக்கு, வாலை [1]
அசனிப்போம், அவ்வாலை, காலை கண்டோம்
அனுக்கிரக, அடியேனுக்கு அம்பாளி [2] தந்தான்
புசனிப்போம், பூமாதே கண்ட போதே
பூரணமாம், திரேக, வச்சிர பொன்னிறமேயாச்சு
துசனிப்போம், அவளிடத்தில், தொண்டு செய்தோர்
துதித்தால், அகத்தியற்குப் பக்கந்தாளே[3]. *(518)*

*(உரை:)* நன்றாக, கேள்,வாலை எனக்கு வரந்தந்தாள், அருள் செய்தாள், இதனால் உடல் பொன் வண்ணமாக இடம் கொடுத்தாள்.

பதியான, பதியறிந்தோர் பதியில் நின்றோம்
பராபரனை எந்நாளும், பதித்து வாழ்ந்தோம்
கெதியான, விதியதனாலெல்லா மாச்சே
கேசரமா, மவுனகிரிச்சாரல் கண்டோம்
மதியான, பூரணமே அறிவிதென்று சச்சிதானந்த
வெளிச்சாரலது விட்டோம்
மதியான, மகிபதியை மவுனத் தூட்டி
மகிழ்ந்து நின்றோம், வேதாந்த
மவுனங்கண்டோமே. *(519)*

கண்ட கருவறியார்கள், உலகமாண்பர்
கன்மவினை, அகத்தறியார் கசட்டு மாண்பர்
விண்ட, பொருளாதி அந்தம், விளக்கங்காணார்
விருதாவில்லை, தலைவர், விவேகங் காணார்
அண்டர் தொழு, மண்டலத்தின் கருவைக் காணார்
அந்த மென்று, நிலைகாணா ரசட்டு [4] மாண்பர்
மண்டலங்கள், ரவிமதியால் சூழாய் நின்ற
மகத்தான பிருதுவியின் சாரமாமே. *(520)*

---

1. வாலை வாலை, 2. அன்பால், 3. பதிகந்தானே. 4. செட்டு.

சாரமென்ற சலாநதியின், அமிர்தங்கொண்டால்
சாகாத கால தட்சிண சித்தி காண்பார்
சாரமென்ற அமிர்தம்[1], நாமே கண்டோம்
சச்சிதானந்த வெளிச்சாரல் கண்டோம்
சாரமென்ற, தீவரச வாலை வாலை
சங்கையில்லாசை, தன்னிய பூர்வங்கண்டோம்
சாரமென்ற, அறுபத்து நாலு சாரம்
சாயுச்சிய நிலையில்[2] சார்வதாமே. (521)

சார் மணிப்பேரி[3], பெரியோர்கள் பதமே போற்றி
சங்கையில்லா, அவரிடத்தில் தொண்டு பண்ணு
தேர்வு[4], எண்ணூறு நிகண்டினுட பொருளே கேட்டால்
நிகரில்லா, அனுக்கிரகம், நிலையைச் சொல்வார்
வார்வு, பெறு மதியமுர்த உண்ணாய்[5] சொல்வார்
வளமான, சமாதி தந்து வருசிப் பார்கள்
தூர்வு[6], மதி அறிவு தனைச் சொல்வாரையோ
துதிராச பூபதியே, வாழ்வென்பாரே[7]. (522)

(உரை:) இறைவனை அறிந்து,இடத்தில் இருந்தோம் இறைவனை நாள்தோறும் உள்ளத்தில் நினைத்து வாழ்ந்து, விதியால் எல்லாமும் ஆச்சு. பேசாமை என்ற குன்றில் சாரலைப் பார்த்தோம். முழுமையான அறிவு சச்சிதானந்த வெளி இதைவிட்டோம். வேதாந்தமான பேசாமையைப் பார்த்தோம் மகிழ்ச்சியுடன் இருந்தோம்.

உலகமக்கள் கருவைப் பற்றிய உண்மைகளை தெரிந்து கொள்ளவில்லை. விதியான கன்மவினைகளை மனதில் அறியமாட்டார்கள். சூரியன், சந்திரன் என்ற கோளங்களால் சூழ்ந்தது பூமி. இதில் உயிரினங்களை கன்ம வினைகளால் சூரிய, சந்திரன் பாதிப்பது பற்றிய வான இயலின் தன்மைகள் கூறப்பட்டுள்ளன.

---

1. மதி அமிர்தம், 2. மருவில், 3. போர், 4. நேரவும், 5. உண்ண, 6.துறவு, 7. வாழ்வென்பாரே.

சாரமென்ற அமிர்தம் அருந்தினால், சாகாமலிருக்க முடியும். இதனால் தட்சிண சித்தி கிடைக்கும். இந்த அமிர்தத்தை அருந்தினேன். 64 வகையான சாரம், உயர்ந்த நிலையான சாயுச்சியப்பதவியை அணுகி இருக்கும்.

பெரியோர்களின் திருவடிகளைப் போற்றி, தொண்டு செய்யவேண்டும். 800 பாடல்காளாலான நிகண்டை அறிதல் வேண்டும். ஒப்பிட முடியாத அருளுடன் பொருளைக் கூறுவார். மதியமுதம் உண்ணச்சொல்வார். சமாதிநிலையை அடைய அருள்கூர்ந்து, பொழிவார்கள்.

**அழியா வத்து அறிய**

வாழான, பெருவாழ்வு வாழ வேணும்
அனுக்கிரகம், சாகா வாழ்வாயிருக்க வேணும்
வாழ்வான, சடலமிதை நிறுத்த வேணும்
மயக்க மற்றபிறவி சென்மம் தடுக்க வேணும்
வாழ்வான, விந்ததனைக் கட்ட வேணும்
மதியால், வரு, நோயதனைத் தள்ள வேணும்
வாழ்வான, மாயா சத்தி, கிரியா சத்தி
மனதினில் நினைந்திட்டாக் காலழிவுறாதே. (523)

அழியாமல் இருக்க வென்றால், அபியைக் காணும்
மவுனவித்து உற்பவித்த மார்க்கங் காணும்
அழியாதே, வேதாந்த சாரங் கொண்டால்
அரக்கது போலாகும், சடலமழியாதையா
பழியாதே, பெரியோர்கள் மனம் வேராகும்
பழித்ததினால், நீயழிந்து பட்டுப்போவாய்
வழியாத தவமூர்[1] தமது வழித்திட்டாக்கால்[2]
வாள் கொண்டு, நமன் வந்து வாட்டுவாரே. (524)

வாட்டி, எடுத்தங்களையே, சென்று தானால்
வாயு வென்றவாசியது, சிதறிப்[3] போகும்
மாட்டியே, தொந்திடுவாய், திரேகம் புண்ணாம்
திரேகம், புண்ணானால், மாண்டு போவாய்

1. அம்பிகையை, 2. விழுந்தமது, 3. தேறி.

காட்டிவிடும், கன்ம நோயுனை விடாது
காசி தீர்த்தமாடினால், கன்மம் போமே
நாட்டிலே ஒருவனுண்டு, நல்ல சித்தி
நமனுக்கெமனென்று நவிலுவோமே. (525)

நவிலுவோம் சிவயோகி சித்தர்க்கெல்லாம்
நாட்டினோ மித்த எண்ணூறு, நடத்தை பாரீர்
அவலுவோம்[1], சீரென்ற புத்தி மாண்பர்
அரிதரிது, அறிவுடையோர் உலகந்தன்னில்
பவிலுவோம், மகராதி[2] வேதாந்த சாரம்
பண்புடையோர், பலகலையின் மருமம்[3] காண்பர்
செவிலுவோர், முன்மொழி கேளாதோர்
சிவயோகி, அவரெல்லாம் செகத்தோராமே. (526)

*(உரை:)* பெரியவாழ்வு அடைதல் வேண்டும். சாகா நிலையை அடைய அருள் வேண்டும். சடலமாவதை நிறுத்தல் வேண்டும். மீண்டும் பிறவாமல் இருக்க, விந்துவைக் கட்டி, புலனடக்கமாய் இருக்கவேண்டும். அறிவால் வரும் நோய்களைத் தடுத்தல் வேண்டும். மாயாசக்தி, கிரியா சக்தி என்பனவற்றை நினைத்தால், அழியமாட்டோம்.

இறைவியை நினைக்க அழிவு வராது. வேதத்தின் சாரத்தை அறிந்தால் அழிவு ஏற்படாது. பெரியோர்களின் மனம் நோகப் பழிக்காதே, பழித்தால், அழிவு உண்டாகும். நமன் வந்து, கதையால் வதைப்பார். (எமனது ஆயுதம் கதை; இங்கு வாள் என்று குறிப்பிடப்படுகிறது.)

வாயு என்ற வாசி கலையும். உடல்நோகும். உடல் புண்ணாகும். தொடரும் கன்மநோய் விடாது. இது நீங்க, காசிக்குச் சென்று கங்கையில் குளித்தல் வேண்டும். இறைவனே, எல்லாவகையான வெற்றிகளையும் உடையவன். நமனுக்கு எமன் என்று கூறுவோம்.

---

1. கவறுவோம், 2. கருதி, 3. பரிவு.

சிவயோகி, சித்தர்களுக்கு விதிகளை இந்த 800ல் எடுத்துக் கூறியுள்ளோம். அறிவுள்ளோர், அரியவராக உலகில் இருப்பார்கள். வேதாந்த சாரத்தை அகராதியில் பல கலைகளையும் பார்க்கலாம். இந்த விதிகளைப் பற்றி தெரிந்துகொள்ளாதவர்கள், சிவயோகிகள் ஆகமாட்டார் என்று உலகத்தார் உணர்தல் வேண்டும்.

## நல்வினை அறிதல்

செகத்தோருக்குள், நல்வினை இருக்கமாட்டார்
தீவினை, பல நாளும் செய்வோர்க்கையா
வகுத்த தோழனமுள்ள படி வறுமை எய்தும்
வன் வினைவந்தெய்தும், உண்மை வசனித்தோம்
போக்கற்ற மதி, அணை கெட்டலையருக்கும்
பொறுக்காது, சிவபதவிபொல்லாதோர்க்கு
ஆகாத, ஆண்மைதனைத் தள்ள மாட்டார்
அறிவுவரு, மன்மதனை அறியார் பாரே. (527)

(உரை:) உலகில், நல்ல செயல் செய்வோர் இருக்க மாட்டார்கள். தீச்செயல்களை பல நாட்கள் செய்வோர்கள் வறுமையை அடைவார்கள். சிவபதவி பொல்லாதவர்களுக்கு ஆகாது. ஆண்மையைத் தள்ளமாட்டார்கள். மன்மதனை அறியமாட்டார்கள்.

## ஞான சக்தி

அறிவோர்கள், நல்வினையை அறிந்தோரானால்
அப்பவல்லோ, சிவஞான மறிந்துண்மை
தெளிவார்கள் பரிபாசை தெளிவாரையா
அதிரியான, கரு வறிவார், அறிவுள்ளோர்கள்
கறியான பல தின்றி, கன்மத்தோர்க்கு
கருதாது கருணை விந்து எய்தாரையா
அறிவோர்கள், இந்த எண்ணூறு சூட்சம் காண்பார்
மகத்தான, பரிபாசை அறிவார் நன்றே. (528)

*(உரை:)* நல்வினையை அறிந்தவர்களே, சிவ ஞானத்தின் உண்மை தெரிவார்கள். பரிபாஷையை அறிவார்கள். கருவை அறியமாட்டார்கள் கருணையான விந்துவை அடைவார்கள் அறிவுள்ளவர்கள். (800 பாடல்கள் உள்ள நிகண்டில் நுணுக்கத்தை கண்டறிவார்கள்; பரிபாஷையை நன்றாக அறிந்துகொள்வார்கள்)

அறிவார்கள் சடலமதின் பரிபாஷை கண்டு
மகத்தான தொண்ணூறு தத்துவங்களாய்ந்து [1]
அறிவார்கள், திரேகத்தின் ஆரம்பதனைக் கண்டு
அடவான, நாடியுட செயலே கண்டு
அறிவார்கள், மருந்தினிட மித்த செத்துருக் கண்டு
வாதத்துக்காம், பித்தத்துக்காம்,
சிலேத்துமத்துக்காமென்றும்
அறிவார்கள், பாவமில்லாப் பண்டிதம் செய்வோர்க்கு
பாடினோம், அகராதி பரிபாஷை பாரே. (529)

*(உரை:)* உடலின் பரிபாஷை, 96 தத்துவங்களை ஆய்வு செய்து கண்டறிவார்கள். நாடியின் செயல்கண்டு வாதம், பித்த, கபம் என்பனவற்றையும், அதனால் ஏற்படும் நோய்களையும் கண்டு, மருத்துவம் செய்வார்கள். அவர்களுக்காக, அகராதி, பரிபாஷை என்பதற்கான மருத்துவ நூற்களைப் பாடினோம்.

காண்பீராய், இலட்சணத்தைத் தெரிந்தவறிவாலே
கருவான, குருவதனை மனதால் கண்டு
காண்பீராய், சிவயோகம், வாசியோகம்
கனயோகம், பிராண மவுன யோகம் [2]
காண்பீராய், கவுன குளிஞான யோகம்
கண்ட நிலையறிந்து, களி கூர்ந்தப்பால்
காண்பீராய், புலத்தியனே, பூரணத்தைக்கண்டு
கருணை பெறு சித்தராய், கனிந்து நில்லே. (530)

1. அடவான நாடியுச்சியதைக்கண்டு, 2. கன.
530ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

கனிந்து, ஒரு மன்மதனைக் கருத்துள்ளாக்கி
கருத்துப்பதி, புத்தியினா லறிவதாக்கி
கனிந்து, வேதாந்த எண்ணூறு [1] பீடம்
கனயோக, சித்தர்க்கெல்லாம், குருவாய்ச்
சொன்னோம்
தனிந்து [2], இந்நூல் அகராதிபார்த்தப்பண்பர்
கனவறிவால், பெரியோர்கள் களி கூர்வர்
கனிந்து, பாரிந்த எண்ணூரொருவர்க்கும்
காட்டினால் கன்மநோய் லபிக்குந்தானே. (531)

லபிக்கலராய், பாடுகிறோம், சுந்தரமே கேள்
லட்சணமாய், பண்டிதநிலை எல்லாந்தான்
லபித்தவராய், கடை சரக்கின் பேரே சொல்வோம்
நிலைத் திருந்த மாண்பர், கரம், நேர்மை, நேர்மை
லபித்தவராய், ஒவ்வொன்றுக் கெட்டுப் பேரு
நிகரில்லா, அகராதி நிகண்டு தன்னில்
லபித்தவராய், சொல்லுகின்றோம், புலத்தியனே கேளு
நிகரில்லா, சரக்கினுட நேர்மை காணே. (532)

(உரை:) இலக்கணத்தின்படி ஆய்வு செய்து அறியவும். ஆசிரியரை மனத்தால் அறிந்து, சிவயோகம், வாசியோகம், கனயோகம், பிராணமவுன யோகம், கவுன குளி ஞான யோகம் இவற்றை அறிந்து முழுமையை அறியவும். அருள் கண்ட சித்தராகக் கனிவுடன் இருப்பீர்களாக.

கனிவுடன், ஒருமையுடன் கொள்கையை அறிவதாக்கவும். வேதாந்த எண்ணூறு பீடத்தை ஆசிரியராக சித்தர்களுக்குச் சொன்னோம். இந்த நூலை பார்த்த பண்பாளர்கள், மகிழ்ச்சியுடன், இருப்பார்கள். 800ஐ தகுதியற்றவர்களுக்கு காட்டினால் கன்ம நோய்கள் ஏற்படும்.

அழகனே, பாடுகின்றேன், கேட்கவும், மருத்துவத்தின் உயர்வான நிலைகளைக் கூறுகின்றேன். கடைச்சரக்கின்

1. இந்நுல், 2. கனிந்து.

பெயர்கள் அகராதி நிகண்டில் சொல்லுகின்றேன். இது ஒவ்வொன்றுக்கு எட்டுப் பெயர்களைக் கூறுகின்றேன். சரக்கின் இயல்பைக்காண ஒப்புமையில்லாமல் எடுத்து விளக்குகின்றேன்.

### கடுக்காயின் பெயர்கள்

*காணுகின்ற அரக்கியென்று, அடைப்பனென்றும் பேரு*
*கருவான, அமிர்த சித்தி என்றும் பேரு*
*ஆணுகின்ற, அரோகணி என்றதற்குப் பேரு*
*அறைத்தி, சிதேகி என்றதற்குப் பேரு*
*வாணுகின்ற, வெந்த[1] மென்றதற்குப் பேரு*
*வளமான அமிர்த மென்ற[2] தற்குப் பேரு*
*நாணுகின்ற, சில சத்தி என்றதற்குப் பேரு*
*நன்றாகச் சொல்லிவிட்டோம், கடுக்காயின் பேரே.* (533)

(உரை:) அரக்கி, அடைப்பன், அமிர்த சித்தி, அரோகணி, சிதேகி, உலந்தம்,அமிர்தம் சிவசத்தி என்பன கடுக்காயின் பெயர்கள்.

### தான்றிக்காயின் பெயர்கள்

*பேரான அசுக்கிற அம்பத்தி என்றும் பேசினோம்*
*மதி ரூபம் என்றும் பேரு ... ... ...*
*வாரான, வனத்தி என்றுமதற்குப் பேரு*
*வளமான வடம்பி என்று மதற்குப் பேரு*
*காரான, கவிழ்ந்த துருச மென்றும் பேரு*
*காந்த ரூபமென்றதற்குப் பேரு*
*மாரான, நாதியென்றதற்குப் பேரு*
*மகத்தான தான்றிக்காயின் பேரே.* (534)

(உரை:) அகக்கிறம், அம்பத்தி, மதி ரூபம், வனந்தி, வடம்பி, கவிழ்ந்த துருசம், காந்த ரூபம், நாதி என்பன தான்றிக்காயின் எட்டுப்பெயர்கள்.

---

1. வந்த, 2. குழுந்தம்.

## சுக்கின் பெயர்கள்

மகத்தான வர்க்கமென்று, நாகராதி என்று
மடவான, வீயமென்றதற்குப் பேரு
அகத்தான, வசுநாதமென்றும் பேரு
அருளினோம், வலதமென்றதற்குப் பேரு
வகத்தான, வர்க்கொம் பென்றும் பேரு
வசனித்தோம், மஞ்சத்த மென்றும் பேரு [1]
நகத்தான, நாக்கு [2] மென்றும் பேரு
நளினமதாய், சொல்லிவிட்டேன், சுக்கின்
பேரே. *(535)*

*(உரை:)* வர்க்கம்,நாகராதி, வீயம், வசுநாதம்,வலதம், வர்க்கொம்பு, மஞ்சத்தம், நாக்கும் என்பன சுக்கின் பெயர்கள்.

## மிளகின் பெயர்கள்

சொல்லியதோர், அருட்டென்றி [3] தற்குப் பெயர்
சொற்பெரிய, மதங்க னென்றும் பேருண்டாச்சு
அதுலியதோர், மலைத்திருக்கலென்றும் பேரு
அட்டமாசாதி என்று மிதற்குப் பேரு
கல்லியதோர், கத்திசன் னென்றும் பேரு
கத்துரும் பயனன்று [4] நேர் வனந்தானென்றும் பேரு
மல்லியரோர்க்கு, தாயென்றி [5] தற்குப் பேரு
வசனித்தோம், மிளகினிட அதீதப் பேரே. *(536)*

*(உரை:)* அருட்டென்று, மதங்கன், மலைத்திருக்கல், அட்டமா சாதி, கத்திசன், கத்துருப்பயன், நேர்வனைந்தான், தாய் என்ற எட்டுப் பெயர்கள், மிளகுக்குண்டு.

---

1. வசநித்தம், சத்தமென்றும், 2. நாகும்மம், 3. குட்டுடன், 4.கருத்துப்பயன், 5. கந்தநன்றி,

### கருஞ்சீரகப் பெயர்கள்

*அதீதமென்ற வரத்து வாக்கிறே னென்றும் பேரு*
*அருளினோம், சீதாரிப் பிலச்ச மென்றும் பேரு*
*அதீதமென்ற மலட்டாக்கு[1], தென் பென்றும் பேரு*
*அடவான உப்புக் குஞ்ச[2] மென்றும் பேரு*
*அதீதமென்ற மசியமென்றதற்குப் பேரு*
*மகத்தான குடம்பனென்று அதற்குப் பேரு*
*வநீதமென்ற, குட்ட னென்றதற்குப் பேரு*
*வசனித்தோம், கருஞ்சீரகத்தின் பேரே.* *(537)*

*(உரை:)* மலட்டாக்கு, தென்பெணி, உப்புக்குஞ்சம், மசியம், குடம்பண், குட்டன் என்பன கருஞ்சீரகத்தின் பெயர்கள்.

### [illegible]லியின் பெயர்கள்

***வசனித்த, வலமான, காணாவதி என்றதற்குப் பேரு***
***துசனித்த, தேவனாதி என்றும் பேரு,***
***துதியான காணி[3] யென்றிதற்குப் பேரு***
***நசனித்த வெலிவாரி[4] என்றும் பேரு***
***கருவான வேகாந்தி[5] என்றிதற்குப் பேரு***
***[illegible]மசனித்த போதகம்[6] என்றிதற்குப் பேரு***
*[illegible]சனித்தோம், திப்பிலி அக்கிய அதீதப் பேரே.* *(538)*

*([illegible]ரை:)* காணாவதி, தேவானதி, காணி, வெலிவாரி, [illegible] போதகம் என்பன திப்பிலியின் பெயர்கள்.

### மஞ்சளின் பெயர்கள்

*[illegible] வருச மக்கிரமென்றும் பேரு*
*[illegible]யல்பான, கட்டில[7] மென்றிலற்குப் பேரு*
*[illegible],வறிசினம் என்றிதற்குப் பேரு*
*அடவாபி[8], தனஞ்சராகம்[9] என்றும் பேரு*

---

1. மரிசித பரிபிலச்சம், 2.உப்ப[illegible], 3.[illegible]ணி, 4. லேவாரி, 5.காந்தம், 6.போதம், 7. சட்டில, 8. சாள, 9. பிஞ்[illegible]

★நது வாராகும், பொன்னென்றும் பேரு
★நலமான குருத்திறம் என்றிதற்குப் பேரு
செதுவானகம், பசன்னிய மென்றும் பேரு
செப்பினோம், புலத்தியனே, மஞ்சளின் பேரே. *(539)*

*(உரை:)* வருச மருக்கிரம், கட்டிலம், வறிசினம், வாபி, தனஞ்சராகம், பொன், குருத்திறம், செதுவானகம், பசன்னியம் என்பன மஞ்சளின் பெயர்கள்.

**வசம்பின் பெயர்கள்**

செப்பினதோர், சாதியட்டகமென்றும் பேரு
செயலான, சிரதோளி[1] என்றும் பேரு
மப்பியதோர், ராட்டிடமாபதி[2] என்றும் பேரு
அருளான, நாபிதாரி என்றும் பேரு
மப்பியதோர், ஆகார வேசி என்றும் பேரு
மகத்தான, சீதகந்தமென்றும் பேரு
கப்பியதோர், மாதவி[3] என்றும் பேரு
கருவாகச் சொல்லிவிட்டோம், வசம்பின் பேரே. *(540)*

*(உரை:)* சாதியட்டகம், சீர்தோளி, சட்டமாபதி, நாபித்தாரி, ஆகாரவேசி, சீதகந்தம், மாதவி என்பன வசம்பின் பெயர்கள்.

**கடுகின் பெயர்கள்**

விட்டவலி விண்ணென்று இதற்குப் பேரு
விளக்கினோம், அய்யாலு சீன மென்றும் பேரு
எட்டவென்றும், பள்ள னென்று இதற்குப் பேரு
எனது, மகத்தான[4] துருஞ்சி என்றதற்குப் பேரு
நட்டராச் சிதறி என்றிதற்குப் பேரு
நல்ல பத்தரவமென்றிதற்குப் பேரு
அட்டவத்தனாதி என்று, இதற்குப் பேரு
அருளினோம், புலத்தியனே, கடுகின் பேரே. *(541)*

---

★ இவ்வரிகள் சரசுவதி மகால் சுவடியில் உள்ளது.

1. சீர்தோளி, 2. சட்டமாபதி, 3. மாதவி, 4. மக்க.

(உரை:) விட்டவலி, விண், அய்யாலு, சீனம், எட்டம், பள்ளன், துருஞ்சி, நட்டராச்சிதறி, நல்ல பத்தரவம் என்பன கடுகின் பெயர்கள்.

### பெருங்காயத்தின் பெயர்

அருளினோம், சோம நாதி என்றும் பேரு
ஆட கண்டகாரி யாதி என்றும் பேரு
எருளினோம் இந்தத் தூளி என்றும் பேரு
இறங்கு, ராமென்ற[1] தற்குப் பேருண்டாச்சு
உருளினோம், உக்கித மென்றிதற்குப் பேரு
உசிதமுள்ள, குந்ததமென்றதற்குப் பேரு
குருளினோம், குட்டாமென்றதற்குப் பேரு
கூறினோம், பெருங்காய அதீதப் பேரே. *(542)*

(உரை:) சோமனாதி, ஆடகண்ட காரி, ஆதி, இந்தூளி, கூராம்,உக்கிதம், குந்ததம், குட்டாம் என்பன பெருங் காயத்தின் எட்டுப்பெயர்கள்.

### தும்பராட்டகத்தின் பெயர்கள்

கூறினோம், சாரலிபேரத்தை என்றும்
கூறான, தூரணி என்றும் பேரு
கூறினோம், கொத்தாரை என்றும் பேரு
குருவான மூலவெளி, என்றும் பேரு
கூறினோம், அக்குலாதி[2] என்றும் பேரு
குலப்புடக்னி[3] என்றுமதற்குப் பேரு
தேறினோம், பூரண்ட[4] மென்றும் பேரு
தெளிவாகச் சொல்லிவிட்டோம் தும்பராட்டகத்தின்
பேரே. *(543)*

(உரை:) சாரலி, பேரத்தை, தூரணி, கொத்தாரை மூலவெளி, குலாதி, புடக்கனி, பூரண்டம் என்பன தும்பராட்டகத்தின் எட்டுப்பெயர்கள்.

---

1. கூறு, 2. மாகுலாதி, 3. கன்னி, 4. புரண்டம்.

## இஞ்சியின் பெயர்கள்

*கனமான, அறுகாத வல்ல மென்றும்*
*கருவான, ஆதரமாத்து வாக மென்றும்* [1]
*மெதமான* [2]*, மேலாதி*[3] *என்று பேரு*
*மேகக் கருவாதி* [4] *என்று இதற்குப் பேரு*
*மதமான, மதுரமென்றதற்குப் பேரு*
*மானாகி மூலி என்றிதற்குப் பேரு*
*நரமான நரம் பென்றிதற்குப் பேரு*
*நாம் சொன்னோம் இஞ்சியின் நல்ல பேரே.* *(544)*

*(உரை:)* அறுகாத வல்லம், ஆதாரமாத்துவாகம், மேலாதி, மேகக் கருவாதி, மதுரம், மானாகி மூலி, நரமான நரம்பு என்பன இஞ்சியின் பெயர்கள்.

## சாதிக்காயின் பெயர்கள்

*நல்லவாதி மலமென்றும், சீலிக்காயென்றும்* [5]
*நலமான வாதிரோதய மென்றும் பேரு*
*சொல்லக்கேள், சிவசிகித மென்றும் பேருண்டாச்சு*
*சீரிட மென்றிதற்குப் பேர் செப்பினோம் நாம்*
*சொல்ல சித* [6] *மென்றிதற்குப் பேரு*
*சுதேவனாதி* [7]*தமென்றிதற்குப் பேரு*
*அல்லலங்காரமென்றிதற்குப் பேரு*
*அருளினோம், சாதிக்காயதற்குப் பேரே.* *(545)*

*(உரை:)* நல்லவாதிமலம், சீலிக்காய், வாதி ரோதயம், சிவசிகிதம், சீரிடம், சிதம், சுதேவனாதிதம், அல்லலங்காரம் என்ற எட்டுப்பெயர்கள் சாதிக்காய்க்கு உள்ளன.

---

1. வகம், 2. மெனமான, 3. மோலாதி, 4. மோக்க, 5. பேரு, 6. சொல்லக் கேளு, சீதம், 7.சூதலானா சீத.

544ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

## வால்மிளகின் பெயர்கள்

அருளினோம் ரேணுக மென்றும் பேரு
அத்துராதி[1] வட்ட மென்றிதற்குப் பேரு
அருளினோம், அலங்கார மென்றும் பேரு
அசோரித மென்றிதற்குப் பேருண்டாச்சு
மருளினோம், தூலாதி என்றும் பேரு
மகத்தான, தக்கோல மென்றிதற்குப் பேரு
சருளினோம் , சதுட்டமெ[2] ன்றிதற்குப் பேரு
சமத்தாகச் சொல்லிவிட்டோம், வால்மிளகின்
பேரே. *(546)*

*(உரை:)* ரேணுகம், அத்துராதி வட்டம், அலங்காரம், அசோரிதம், தூலாலதி, தக்கோலம், சதுட்டம் என்பன வால் மிளகின் பெயர்கள்.

## கடுகு ரோகணியின் பெயர்கள்

சமத்தான குட்டம்[3], வடிமாலை[4] என்றும் பேரு
சார்வான நரநாதி, சங்கு பாகமென்றும் பேரு
சமத்தான, காங்கய மென்றதற்குப் பேரு
கருவான, செகராட்டி என்றும் பேருண்டாச்சு
உத்தான, உலகாலி என்றும் பேரு
உருவான, பதுமாட மென்றும் பேரு
குலத்தான, கூவதிரை என்றும் பேரு குணமாகச்
சொல்லிவிட்டோம், கடுகு ரோகணியின்
பேரே. *(547)*

*(உரை:)* குட்டம், வடிமாலை, நரநாதி, சங்கு பாகம், காங்கயம், செகராட்டி, உவகாலி, பதுமாடம், கூவத்திரை என்ற எட்டுப்பெயர்கள் கடுகுரோகணிக்கு உண்டு.

---

1. அத்தராதி, 2. அலட்டம், 3.வருட்டம், 4. வாலை

547ம் பாடலில் உள்ள 3, 4 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

## வாலுளுவையின் பெயர்

குணமான அதிபதி, சங்க மென்றும் பேரு
கூறான, அக்கராசி[1] என்றும் பேரு
குணமான, குக்கலாதி[2], நடுமாதிரை என்றும்
குலவி, மனாடாதித்திரை[3] யென்றிதற்குப் பேரு
குணமான, துருங்க நாதி என்றும் பேரு
குருவான, மூத்திரகாலி என்றும் பேரு
கணமான, வல கங்கணம்[4] என்றும் பேரு
அருளினோம், வாலுளுவை அதீதப் பேரே. *(548)*

*(உரை:)* அதிபதி, சங்கம், குக்கலாதி, நடுமாதிரை, மனாடாதிதிரை, துருங்கநாதி, மூத்திரக்காலி, வல கங்கணம் என்ற எட்டுப்பெயர்கள் வாலுளுவைக்கு உள்ளன.

## கோரோசனையின் பெயர்கள்

அதீதமென்ற, வடரு[5], சொல் மாருவாங்கி யென்றும்
அருளான, கலஞ்சி, வாரி என்றும் பேரு
மதீதமென்ற, வண்ண மதை[6] என்றும் பேரு
மகத்தான, திருவமென்று மதற்குப் பேரு
பொதீதமென்ற, புங்காட்டி என்றும் பேரு
புகழான, ஞானக் கண்ணாடி[7] என்றும் பேரு
செதீதமென்ற[8], சேரோந்தி என்றும் பேரு
செப்பினோம், கோரோசனைக் கெட்டுப் பேரே. *(549)*

*(உரை:)* வடரு, சொல்மாரு வாங்கி, கலஞ்சி, வாரி, வண்ணமதை, திருவம், புங்காட்டி, ஞாலக்கண்ணாடி, சேரோந்தி என்ற எட்டுப்பெயர்கள் கோரோசனைக்குண்டு.

---

1. வக்கராசி, 2. கலாதி, 3. மவாடா, 4. வங்கணம், 5. அடருவு, 6. அன்ன வலனமதை, 7. கன்னடி, 8. செதீத.

## ஏலரிசியின் பெயர்கள்

எட்டான, திருவணிதம், திருகந்தூடி[1]
இயல்பான, வாலாளி என்றும் பேரு
குட்டான, கூன மென்றிதற்குப் பேரு
கூறான நாலெட்டு[2], யர்படிலமென்று பேரு
நட்டான, மாதநாலி[3] யென்றும் பேரு
நலமான, சிங்காரமென்றிதற்குப் பேரு
கட்டான, கட்ட மென்றிதற்குப் பேரு
கருவான, ஏலரிசியதற்குப் பேரு. *(550)*

*(உரை:)* திருவணிதம், திருகந்தூடி, வாலாளி, கூனம், நாலெட்டு, படிவம், மாதநாலி, சிங்காரம், கட்டம் என்பன ஏலரிசியின் பெயர்கள்.

## இலவங்கப்பூவின் பெயர்கள்

அதற்குப்பேர், திரிசாவாதியென்றும் பேரு
அடகான, திருகாதத்திரு, மாதிரை[4] என்று மதற்குப் பேரு
வருவாணிதமென்றதற்குப் பேரு
வாருளமென்றதற்குப் பேரதீதமாச்சு
வதற்குப் பேரடாஞ்சி[5] என்றும் பேரு
மகத்தான, அட்டதர்க்க மென்றும் பேரு
செதற்குப் பேர், சிவரானமென்றும் பேரு
சீராகச் சொல்லிவிட்டோம், இலவங்கப்பூவின் பேரே. *(551)*

*(உரை:)* திரிசாவாதி, திருகாதந்திரு, மாதிரை, வாணிதம், வாருளம், பேரடாஞ்சி, அட்டதர்க்கம், சிவரானம் என்ற எட்டும் இலவங்கப்பூவின் பெயர்கள்.

---

1. திருகந்தூட்டி, 2. நாலாட்டு, 3. நாளி, 4. மாத்திரை, 5. பேர் இஞ்சி.

### இலவங்கப்பட்டையின் பெயர்கள்

பூவான திரிகோண மாலி என்றும் பேரு
பூரணமா, அரியவநாதி என்றும் பேரு
ஆவான, அவற் சாதி என்றும் பேரு
அங்க பறைநாதி என்று மதற்குப் பேரு
தோவான[1] கொண்ட அவ்வமென்றும் பேரு
கூறினோம், அவாரண மிதற்குப் பேரு
ஏவான, வேரையாட்டுப்[2] பயிரென்றும் பேரு
இயம்பினோம், இலவங்கப்பட்டை அதீதப்
பேரே. *(552)*

*(உரை:)* திரிகோண மாலி, அரியவநாதி, அவற்சாதி, அங்கபறை நாதி, அவ்வம், அவாரணம், வேரையாட்டுப் பயிர் என்பன இலவங்கப்பட்டையின் பெயர்கள்.

### வெங்காயத்தின் பெயர்கள்

இயம்பினோம், முள்ளித்தாதி[3] என்றும்
இயல்பான, வள்ளிமாதரை ஏத முறிச்சான்[4]
செயம்பினோம், கேசரம் புரண்ட மென்றும்[5]
கெணிதமுள்ள பேருள்ள தாதி[6] என்றும் பேரு
தயம்பினோம்[7] கருமா[8] மாத்தி என்றும் பேரு
கருவான, முத்துப் பூவாழி என்றும் பேரு
பயம்பினோம், பச்சை வஞ்சி என்றும் பேரு
பன்மை பெறச் சொல்லிவிட்டோம்,
வெங்காயத்தின் பேரே. *(553)*

*(உரை:)* வெங்காயத்தின் பெயர்கள் முள்ளித்தாதி, வள்ளிமாதரை, ஏதமுறிச்சான், கேசரம், புரண்டம், தாதி, கருமாத்தி, முத்துப்பூவாழி, பச்சை வஞ்சி என்பன.

---

1. கோவான, 2. பிரையாட்டு, 3. தாலாதி, 4. முறிச்சால், 5. புரண்டம், 6. ததாதி, 7. கயம்பினோம், 8. கருமாத்தி.

குறிப்பு: வெங்காயம் இந்தியத் தாவரமல்ல. இது 14ம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழகம் வந்தது.

## வெள்ளைப்பூண்டின் பெயர்கள்

பன்மையென்ற, மலசனாதி, மகோரக் கட்டம்[1]
பரிவான, நாட்டோரிசி என்றும் பேரு
கண்மை யென்ற, காலிங்கப் பூண்டென்றும் பேரு
கருவான, எரி பூண்டென்றும்,[2] பேரு
வன்மையென்ற, வாரித்தழல்[3] என்றும் பேரு
வளமான, கட்டதாரி[4] என்றதற்குப் பேரு
அண்மை என்ற வாட்டங்காலென்றும் பேரு
அடரான[5], வெள்ளைப் பூண்டதனின் பேரே. *(554)*

(உரை:) மல சனாதி, மகோரக் கட்டம், நாட்டோரிசி, காலிங்கப்பூண்டு, எரிப்பூண்டு, வாரித்தழல், கட்டதாரி, வாட்டங்கால் என்ற எட்டுப்பெயர்கள் பூண்டுக்கு உண்டு.

## புளியின் பெயர்கள்

அடவான, உக்கிலாதி அணிப்பூ[6] வென்றும் பேரு
அருளினோம், முன்னுந்தி[7] என்றும் பேரு
வடவானக்கு தராதி[8] என்றும் பேரு
வாழாண்டி[9] என்றதற்குப் பேருண்டாச்சு
மடவான, வடமாதென்றும் பேரு
வசனித்தோம், துரோநாடமென்றும் பேரு
தடவான, வாட்டி வஞ்ச மென்றும் பேரு
தருவான, புளியதுவின் உசிதப் பேரே. *(555)*

(உரை:) உக்கிலாதி, அணிப்பூ, முன்னுந்தி, குதராதி, வாழாண்டி, வடமாது, துரோநாடம், வஞ்சம் என்ற எட்டுப் பெயர்கள் புளிக்கு உண்டு.

---

1. கூட்டம், 2. வெரிப்பூண்டு, 3. வாரிதழ், 4. கண்டதாரி, 5. அடவான, 6. யூணிப்பூ, 7. மூன்றுநதி, 8. குடராதி, 9. வாளாடை.

குறிப்பு: புளியும் இந்தியத் தாவரமல்ல.

## கொத்தமல்லியின் பெயர்கள்

உச்சிதமா, உருளரிசி[1], உரையி கழவென்றும்[2]
முற்பனமாம், குளிர்மாதி என்றும் பேரு
அச்சிதமாம், கருஞ்செங்கை என்றும் பேரு
அருளினோம், நடமா[3] திரை யென்றும் பேரு
நச்சிதமாம், தனித்தாலிக மென்றும் பேரு
நளினமதாய், சொல்லிவிட்டோம்,
கொத்தமல்லியின் பேரே. *(556)*

(உரை:) உருளரிசி, இகழ்வு, குளிர்மாதி, மறைநீலி, அனாதிக் குழி, கருஞ்செங்கை, நடபாதிரை, தனித்தாலிகம் என்பன கொத்தமல்லியின் பெயர்கள்.

## வெண்கடுகின் பெயர்கள் (ஐயவி)

பேரு, பெருங்க கட்டபதி, கட்டிம்ப மென்றும்
பேரானதால், நாட்டஞ் சினக்கூட[4] மென்றும் பேரு
பேரு, பெரும்வாடை என்றும் பேரு
பேசுமாங் கண்டி என்றிதற்குப் பேரு
ஆருபெரு, அகந்தனலென்றும் பேரு
அருளினோம், நட்டசெலி யென்றும் பேரு
வாரு, பெரு, புலத்தியனே, நன்றாய் சொன்னோம்
வளமான, வெண் கடுகின் மகிமைபாரே. *(557)*

(உரை:) பெருங்கட்டபதி, கடிம்பம், நாட்டம், சினக்கூடம், பெரும்வாடை, பேசுமாம், கண்டி, அகந்தனல், நட்டசெலி என்பன வெண்கடுகின் பெயர்கள்.

---

1. முருளரிசி, 2. இகளி, 3. நடபா, 4. சிக்கட

குறிப்பு: இது இந்தியத் தாவரம், சங்கப்பாடல்களில் ஐயவி எனப்பெயர் பெறும். இதை நெருப்பிலிட்டுப்புகை உண்டாக்கி, தொன்மை காலத்தில் பயன்படுத்தினார்கள். ஐயவி என்ற சங்க இலக்கியப் பெயர் இங்கு கூறப்படவில்லை.

### மரமஞ்சளின் பெயர்கள்

மகிமையென்ற, கடேரிடம், பூதமாரி என்றும்
மகத்தான காலியென்ற தற்குப் பேரு
செகின[1] மென்ற செகிப்புட[2] லென்றும்,
மலக நீராரி என்றும் பேரு
செயமான, நாவித ழோனி என்றும் பேரு
கருவான நிறம் சோதி என்றும் பேரு
கருனமென்ற கலகநிறணி என்றும் பேரு
அகிமையென்ற வத்து மடந்தை[3] என்றும் பேரு
அருளினோம் மரமஞ்சளதீதப் பேரே. *(558)*

*(உரை:)* கடேரிடம், பூதமாரி, காலி, செகினம், செகிப்புடல், மலக நீராரி, நிறஞ்சோதி, கலக நிறணி என்ற எட்டுப் பெயர்கள் மரமஞ்சளுக்குண்டு.

### தேற்றாங்கொட்டையின் பெயர்கள்

அருளான, கந்த கண(ம்) சந்தான முறை என்றும்
அபிநாத[4] மென்றுமிதற்குப் பேரு
வருளான, நாவடங்கக்கன மென்றும் பேரு
வசனித்தோம், சில்வித மென்றும் பேரு
தருளான, தலை முகரத்தள னென்றும் பேரு
கருவான கடியாமலிதை என்றும்
வெருளான, வெண்ணீர் தெளி[5] வென்றும் பேரு
விபரமதாய் சொல்லிவிட்டோம், தேற்றான்
விதையின் பேரே. *(559)*

*(உரை:)* கந்தகணம், சந்தானமுறை, அபிநாகிதம், நாவடங்க கனம், சில்விதம், தலை முகரத்தளம், கடியாமலிதை, வெண்ணீர் தெளிவு என்பன தேற்றாங் கொட்டையின் பெயர்கள்.

---

1. செகிளம், 2. செரிப்புடல், 3. வடந்தை, 4. அபிநாகிதம், 5.ஒளி.

### சிற்றரத்தையின் பெயர்கள்

*விபரமென்ற, கடி, அடுத்தனகப்படுரதி என்றும்*
*விளக்கினோம், கலிந்த னென்றும் பேரு*
*அபரமென்ற, நிகரோதய மென்றும் பேரு*
*அதீதமென்ற, நீடுருவாணி என்றும் பேரு*
*நிபரமென்ற, நிட்சை மாருத மென்றும் பேரு*
*நிலை பெற்ற அலாதீக் கரமென்றும்[1] பேரு*
*பரமென்ற வசந்தங்கரு என்றும் பேரு*
*கருணைபெறச் சொல்லிவிட்டோம்,*
*சிற்றரத்தையின் பேரே.* ***(560)***

*(உரை:)* கடி, அடுத்தன், அகப்படுரதி, கலிந்தன், நிகரோதயம்,நீடுருவாணி, நிட்சை, மாருதம், அலாதீக்கரம், வசந்தங்கரு என்ற எட்டுப்பெயர்கள் சிற்றரத்தைக்குண்டு.

### புனுகின் பெயர்

*அரத்தை யென்ற, கரனாபதி என்றும் பேரு*
*அசோக வாசவாடை யென்றிதற்குப் பேரு*
*வரத்தைக்[2] குந்த குந்த மென்றும் பேரு*
*வரத்தைக் குரு படாதி என்றிதற்குப் பேரு*
*தரத்தை என்ற திக்குவாசம், செலிமாதரை[3] என்றும்*
*தருங்கொள்ளிப்[4] பூடென்றிதற்குப் பேரு*
*கரத்தைக் கண் காஞ்சா[5] னென்றிதற்குப் பேரு*
*வசனித்தோம், புனுகதுவினதீதப் பேரே.* ***(561)***

*(உரை:)* கரனாபதி, அசோக வாசவாடை,குந்த குந்தம், குருபடாதி, திக்குவாசம், செலிபிதரை, தருங்கொள்ளிப்பூடு, கண் காஞ்சான் என்ற எட்டுப்பெயர்கள் புனுகுக்குண்டு.

---

1. வாதீசர், 2. வரைத்த, 3. செலியரத்தை, 4. திரு,5. காஞ்சான்.

குறிப்பு: குந்த குந்தம் என்பது சமண நூலாசிரியரான குந்த குந்தாச்சாரியாரை குறிப்பதாக உள்ளது. இது நூலாசிரியரின் சமயப்பொறையைக்காட்டுகின்றது.

## கத்தூரியின் பெயர்

வசனித்த, கலிமுதளை, கையச் சொல்லாதி [1]
வளமான, சந்தனது துரை பைப்பதாதி
வசனித்த, வெந்தாவாசம் [2], விருவாத்துடி என்றும் பேரே
விதிதமென்ற [3], மருமாலிசை என்றும் பேரு
அசனித்தவாறு, முறைமதி என்றும் பேரு
அடவான, நிகரில்லாப் பேருமதைச் சொல்வோம்
துசனித்த, செங்கதிர் வாழி என்றும் பேரு
துங்கையெனும், கத்தூரிவாசமதன் பேரே. *(562)*

*(உரை:)* கலி முதளை, கையச் சொல்லாதி, சந்தனது துரை, பைப்பதாதி, வெந்தாவாசம், மரு மாலிசை, முறைமதி, செங்கதிர் வாழி என்ற எட்டுப்பெயர்கள் கத்தூரிக்குண்டு.

## கிராம்பின் பெயர்கள்

வாசமென்ற, கையலறிங்கம் கொண்டாக
வனவஞ்சகம், முறை நெஞ்சமதிலே, மகத்தாம் பேரு
கோசமென்ற [4], திரிகெந்தூர மென்றும் [5] பேரு
ஓகோகோ, கோச்சரிப்பூடக மென்றும் பேரு
தாசமென்றாவது, நாடிவேரென்றும் பேரு
தயவான, அலரங்கரணை என்றும் பேரு
சேமென்ற, விடைக்கரு [6] கந்தமென்றும் பேரு
சூட்சாதி [7] கிராம்பினுட அதீதப் பேரே. *(563)*

*(உரை:)* கையலறிங்கம், வனவஞ்சகம், முறை நெஞ்சம், திரிகெந்தூரம், கோச்சரிப்பூடகம், நாடிவேர், அலரங்கரணை, விடைக் கருகந்தம் என்ற எட்டும் கிராம்பின் பெயர்கள்.

---

1. சேர, 2. துரை வேந்தர், 3. விசிதமென்ற, 4. கொஞ்ச, 5. கேந்தூரம், 6. கருவித்தம், 7. பிடசாதி,

## சேராங்கொட்டையின் பெயர்கள்

*அதீதமென்ற, காளமேகம்[1], அமுதாகி*
*அருளா[2] நேசச் சடலமோதிக் கிடங் கொள்ளாமல்*
*வதீதமென்ற, வண்ணான் குறி[3], யென்றும் பேரு*
*வசனித்தோம், துறை முகந்த மென்றும் பேரு*
*மதீதமென்ற, வாதார[4] வாணிச் செயலென்றும் பேரு*
*மப்பேரெட்டாதிப்[5] பேரெட்டு ... ... ...*
*நதீதமென்ற அதீதப்பேரா, ஆரும் சொல்லர்*
*நாம் சொன்னோம், புலத்தியனே,*
*சேராங்கொட்டையதன் பேரே. (564)*

(உரை:) காளமேகம், அமுதாகி, கடல மோதி, கிடங்கொள்ளான், வண்ணான் குறி, துறை முகந்தம், வாதரவாணி, செயல் என்பன சேராங்கொட்டையின் எட்டுப்பெயர்கள்.

## கோட்டத்தின் பெயர்கள்

கொட்டை என்றத்தோம்[6] பலமென்றும் பேரு
கூறான, சிகமாலி என்றும் பேரு
*அட்டை யென்ற, வயிநாராட தயவாம், அரானிதம்*
*அதீதப்பேர், புலத்தியனே இந்நூலில்*
வட்டை யென்ற பிள்ளைக்[7] கோசமென்றும் பேரு
வளமான, சடமாக மென்றதற்குப் பேரு
மட்டை[8] என்ற, சிலா, தாரத்திந்தானென்றும்
*அருளினோம், இடபநாதி[9] கோட்டத்தின்*
*பேரே. (565)*

(உரை:) தோமபலம், சீரகப்பாலி, வயிநார், ஆடதயவாம், அரானிதம், பிள்ளைக் கோசம், சடமாகம், சிலாதாரம், இடபநாதி என்ற எட்டுப்பெயர்கள் கோட்டத்திற்கு உண்டு.

---

1. கெழுதாசி, 2. முன்னே, 3. வண்ணானம், 4. நவாதர, 5. மூருப்பரே, 6.தோமலம், 7. மீமீனை, 8. தாரத்தின், 9. பவானதி.

## பேரரத்தையின் பெயர்கள்

கோட்டமென்ற கந்தசாமத்தா[1] னென்றும் பேரு
கொண்டு கந்தநரணி[2] என்றும் பேரு
ஆட்டமென்ற சீதகம்[3], பஞ்சசுரதாக்குதம்[4]
அடவாம், செருகம்ப வனமென்றும் பேரு
நாட்டமெனற் தித்தீபமென்[5] றதன் பேரு
நாத நாதமென்றதற்குப் பேரு
பூட்டமென்ற, சரமாருத மென்றதற்குப் பேரு
புகழாகச் சொல்லிவிட்டோம், பேரரத்தையின்
பேரே. *(566)*

*(உரை:)* கந்தசாமம், கந்த நரணி, சீதகம், பஞ்ச சுரதாக்குதம், செருகம்பவனம், தித்தீபம்,நாதநாதம், சரமாருதம் என்ற எட்டுப்பெயர்கள் பேரரத்தையினுடையது.

## கண்டத்திப்பிலியின் பெயர்கள்

அரமான, சவுண்டாம், சிகலாகி என்றும் பேரு
அருளினோம், சாடி என்று மிதற்குப் பேரு
வரமான சிறு மூலி யென்றும் பேரு
வாமான பாடலமின்றி தற்குப் பேரு
சிரமான பிர வலி யென்றும் பேரு
செப்பினோம், நாகமென்றதற்குப் பேரு
உரமான, உலரமென்று இதற்குப் பேரு
உறுதிபெறச் சொல்லிவிட்டோம்
கண்டத்திப்பிலியின் பேரே. *(567)*

*(உரை:)* சவுண்டாம், சிகலாகி, சாடி, சிறுமூலி, பாடலம், பிரவலி, நாகம், உலரம் என்பன கண்டத்திப்பிலி எட்டுப்பெயர்கள்.

---

1. கந்தசரம், 2. தாரத்தரணி, 3. சீதகம்பம், 4. தேதீரம், 5. நவிலுகிறேன்.

குறிப்பு: 567ம் பாடல் அச்சுப்புத்தகத்தில் 579ம் பாடலாக வந்துள்ளது.

## சிறுதுவரையின் பெயர்கள்

வரையான, சிறு கன்னிக்கு, குறு கன்னி என்றும் பேரு
வசனித்தாய், என்று மதற்குப் பேரு
துரையான, துக்காசிப்பயிரென்றும் பேரு
துடம்பாரி, என்றதற்குப் பேருண்டாச்சு
கரையான, கருநஞ்சிப்பயரென்றும்
கவடமிஞ்சி என்றதற்குப் பேரு
மரையான, நெய் பயரென்றும் பேரு
மதியுடையோரிந்த வுரை, சிறு துவரையின்
பேரே. (568)

(உரை:) சிறுகன்னி, குறுகன்னி, வசனித்தாய், துக்காசிப் பயறு, துடம்பாரி, கருநஞ்சிப் பயறு, கவடமிஞ்சி, நெற்பயிறு என்ற எட்டுப் பெயர்கள் சிறுதுவரைக்குண்டு.

## கொள்ளின் பெயர்

சீரும் சிக்காலின்ன மென்றும் பேரு
செப்பியதோர், கமினி, நபில மென்றும் பேரு
ஆறுமரு, பஞ்சிட்ட மென்றும் பேரு
அலங்கார வாயுடலென்றும் பேரு
வாரு கொண்டப்பம், யார் கொண்டமென்றும் பேரு
வருஞ்சட்டிக் கலப்பமென்றிதற்குப் பேரு
கடக் கொள்ளென்றதற்குப் பேரு
கணக்காகச் சொல்லிவிட்டோம், கொள்ளதுவின்
பேரே. (569)

(உரை:) சிக்காலின்னம், கமினி, நபிலம், பஞ்சிட்டம், அலங்கார வாயுடல், கொண்டப்பம், கொண்டம், சட்டி கலப்பம் என்ற எட்டுப்பெயர்கள் கொள்ளுக்குண்டு.

## பாசிப்பயிற்றின் பெயர்கள்

கணக்காகப் பாசி பயறென்றும் பேரு
கருதவே, பூணிப்பயிறு, கட்டங்கமென்றும் பேரு
வணக்கான,வாதிராதி குண்ட மென்றும் பேரு
வகையான, மாலிசாலியென்றும் பேரு
அணக்கான, வங்கடத்தனென்றும் பேரு
அரகண்டரி என்றதற்குப் பேரு
புனங்காணப் பூமரிப்பயிறென்றும் பேரு
போற்றிவிட்டோம், பாசிப்பயறதுவின் பேரே. (570)

(உரை:) பூணிப்பயறு,கட்டங்கம், வாதிராதி, குண்டம், மாலிசாலி, வங்கடத்தான், அரகண்டரி, பூமரி என்ற எட்டுப் பெயர்கள், பாசிப் பயறுக்குண்டு.

## பட்டாணியின் பெயர்

போற்றினோம்,பாரண்டம், பாண்டி யென்றும்
போதயத்த மென்றதற்குப் பேருண்டாச்சு
வாத்தினோ, மடாக்கீத, மென்றும் பேரு
வள்ளச் சிறொலி, கந்தமென்றும் பேரு
ஆத்தினோம், மாலிவஞ்சி யென்றும் பேரு
அம்மடிங்கப்பருப்பென்றும் பேரு
நாத்தினோம், நல்ல மணியென்றும் பேரு
நவின்றிட்டோம்,இந்தநூலில் பட்டாணியின்
பேரே.(571)

(உரை:) பட்டாணியின் எட்டுப்பெயர்கள், பாரண்டம், பாண்டி, மடாக்கீதம், வள்ளச் சிறொலி, கந்தம், மாலிவஞ்சி, அம்மடிங்கப் பருப்பு, நல்ல மணி என்பனவாகும்.

## உளுந்தின் பெயர்

ஆணியென்ற, வபரங்கப் பருப்பென்றும் பேரு
அனந்தவக்க வண்ணானென்றும் பேரு
வாணியென்ற, வடையமென்றும் பேரு
வசனித்தோம், மதிபதிங்க மென்றும் பேரு
காணியென்ற, காணியென்றும், காந்த சந்தியென்றும்[1]
கருவான, புருவுளிந்தென்றும் பேரு
சேணியென்ற, செல்லப் பயறென்றும் பேரு
செப்பினோ மதீதப்பேருளுந்தின் பேரே. *(572)*

*(உரை:)* வபரங்கப் பருப்பு, அனந்த வக்கம், வண்ணான், வடையம், மதிபதிங்கம், காணி, காந்தசந்தி, புருவுளிந்தன் என்ற எட்டுப்பெயர்கள் பெரிய உளுந்துக்குண்டு.

## புகையிலை

இடமான, பித்தக் கோரி என்றும் பேரு
ஈங்காரிய கோரமென்றிதற்குப் பேரு
அடமான, பைத்தியங்காரியென்றும் பேரு
அபானவாயு செரிச்சானென்றும் பேரு
தடமான, தத்திநக்கி என்றும் பேரு
களைப்படானென்றதற்குப் பேருண்டாச்சு
கெடமான, விருட்டி சிங்க மென்றும் பேரு
கெணிதமாய், சொல்லிவிட்டோம், புகையிலையின்
பேரே. *(573)*

*(உரை:)* பித்தகோரி, ஈங்காரிய கோரம், பைத்தியங்காரி, அபான வாயு, செரிச்சான், தத்திநக்கி, களைப்படான், விருட்டி சிங்கம் என்பன புகையிலையின் எட்டுப்பெயர்கள்.

---

1. காந்த சக்தி.

குறிப்பு: 573ம் பாடலில் புகையிலையால் செய்யப்பட்ட சுருட்டுகளை மலம் வெளியேற அதிகாலையில் சிலர் புகைப்பார்கள். இதனாலேயே, இது அபான வாயு செரிச்சான் என்று கூறப்பட்டுள்ளது.

## முந்திரிகையின் பெயர்கள்

புகலக்கேள்,அரிமுந்திரை, விதாட்சை என்றும் பேரு
புகட்டினோம், கரிமுந்திரை என்றதற்குப் பேரு
அகலக்கேள், டகரி என்றதற்குப் பேரு
அருந்தங்கமென்றதற்குப் பேருண்டாச்சு
வகலக்கேள், வடிநிரையான் என்றும் பேரு
வளப்பதென்ற மங்கைக் குணமாதரென்றும் பேரு
செகலக்கேள், சிட்டிரத்த மென்றும் பேரு
செப்பினோ மதீதப்பேர், முந்திரிகையின்
பேரே. *(574)*

*(உரை:)* அரிமுந்திரை, விதாட்சை, கரிமுந்திரை, டகரி, அருந்தங்கம், வடிநிரையான், மங்கைக் குணமாதர், சிட்டி ரத்தம் என்ற எட்டுப்பெயர்கள் முந்திரிகைக்குண்டு.

## இலவங்கப் பத்திரியின் பெயர்கள்

பரமான, சிவாங்க [1] மென்றும் பேரு
பத்திரித் தருதமென்றிதற்குப் பேரு
வரமான, வைகசரமென்றும் பேரு
வைபோக சாதிவல மென்றும் பேரு
திறமான, தெய்வரந்த மென்றும் பேரு
தெளிவான [2] வருடமென்றதற்குப் பேருண்டாச்சு
நரமான, நாத்தி [3] யென்றும் பேரு
நன்றான பேரிதற்கு, இலவங்கப்பத்திரியின்
பேரே. *(575)*

*(உரை:)* சிவாங்கம், பத்தரித்தருதம், வைகசரம், சாதிவலம், தெய்வரந்தம், வருடம், நாத்தி, இலவங்கப் பத்திரிக்கு எட்டுப்பெயர்கள்.

---

574ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

1. சீவாங்கம், 2. தெளிவருடம், 3. நாம சாற்றி,

575ம் பாடலும் அந்தாதியில் அமையவில்லை.

## வெங்கார உள்ளியின் பெயர்

இராத்தியென்று, லட்சண[1] மாயென்றும் பேரு
நலமான, நல்லவாந்த முசிதமென்றும் பேரு
வாதி[2] யென்ற வரைபனாதி யென்றும் பேரு
வகரமாஞ்சி[3] கச்சியென்றும் பேரு
ஆத்தியென்ற[4] லவண மென்றதற்குப் பேரு
அலை கங்கண மென்றதற்குப் பேருண்டாச்சு
ஓத்தியென்ற, ஓகரமட மென்றும்[5] பேரு
ஓகோகோ, வெங்கார உள்ளி[6] யதற்கதீதப்
பேரே.(576)

*(உரை:)* லட்சணம், நல்ல வாந்த முசிதம், வரைபனாதி, வகரமாஞ்சி, கச்சி, லவணம், கங்கணம், ஓகரமடம் எட்டுப் பெயர்கள் வெங்காயத்திற்குண்டு.

## பொன்னாங்காயின் பெயர்

ஓ மென்றும், பித்திப்பழ மென்றும்[7] பேரு
ஒருத்தாரையம், பணத்திப்பழ மென்றும் பேரு
வாகுமென்று, மலாக்கப்பழ மென்றும் பேரு
வாரோடி நுரை யென்றதற்குப் பேரு
ஆமென்று மத்தனுப் பழமென்றும் பேரு
அன்ற வாடிக்கிளியென்று மதற்குப் பேரு
தேமென்று, காயம்பிடி என்றும் பேரு
செப்பினோம், பொன்னங்காயதற்குப்[8] பேரே.(577)

*(உரை:)* பித்திப்பழம், ஒருத்தாரையம், பணத்திப்பழம், மலாக்காப்பழம், வாரோடி நுரை, மத்தனுப்பழம், வாடிக்கிளி, காயம்பிடி என்பன எட்டுப்பெயர்கள் பொன்னாங்காய்க்கு உண்டு.

---

1. லட்சணபம், 2. வத்தி, 3. சிக்கச்சி, 4. லத்தி, 5. மடந்தை, 6.கள்ளி, 7.புத்து, 8. கன்னி.

குறிப்பு: 553ம் பாடலில் வெங்காயத்தின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இப்பாடலும் அந்தாதியில் அமையவில்லை.

## மெலிப்பயறின் பெயர்கள்

*காயான, பில்லபஞ்சமென்றும் பேரு*
*கருவான, அப்பிரபஞ்சம், கருவாபிஞ்சும்*
*வயான, துவட்டிப்பயிரென்றும்[1] பேரு*
*வாரோக்கிய, முதுகரி என்றும் பேரு*
*சேயான, சிரவஞ்ச மென்றும் பேரு*
*செங்கதிவர்[2], வாதென்று மிதற்குப் பேரு*
*பேயான, பெண்ணோட்ட மென்றும் பேரு*
*பேசினோம், மெலிப்[3] பயரதற்கும் பேரே. (578)*

*(உரை:)* பில்லபஞ்சம், அப்பிரபஞ்சம், கருவாபிஞ்சம், துவட்டிப்பயிர், வாரோக்கிய முதுகரி, சிரவஞ்சம், செங்கதிவர் வாது, பெண்ணோட்டம் என்ற எட்டுப்பெயர்கள் மெலிப்பயறுக்குண்டு.

## கடலையின் பெயர்கள்

*பயரான[4], பகண்ட மென்று[5] முகண்ட[6] மென்றும் பேரு*
*பதுமலர்ச்சி யென்றதற்குப் பேருண்டாச்சு*
*வயரான[7], வரிமண்டையென்றும் பேரு*
*வக்கிரஞ்ச[8] ப்பயறு என்றிதற்குப் பேரு*
*துயராகு, துக்கரஞ்ச[9] மென்றும் பேரு*
*துதிப்பாண்டி என்றதற்குப் பேருண்டாச்சு*
*கயரான, முத்த[10] கம் பயிரென்றும் பேரு*
*காட்டினோ மிந்தப்படி, கடலை யின் பேரே. (579)*

*(உரை:)* பகண்டம், முகண்டம், பதுமலச்சி, வரி மண்டை, வக்கிரஞ்சப்பயறு, துக்கரஞ்சம், துதிப்பாண்டி, முத்துகப்பயிர் என்ற எட்டுப் பெயர்கள் கடலைக்குண்டு.

---

1. வதுலாட்டி, 2. செந்தியுர, 3. மேலிப்பயறதற்கு, 4. பேரான, 5.கண்டம், 6. முண்டம், 7. சயரான, 8. வரகஞ்ச, 9. துக்கது, 10.முந்து.

## மொச்சையின் பெயர்கள்

*படியான கதிர்வளை என்றும் பேரு*
*பரிவாட சரிங்க மென்றதற்குப் பேரு*
*அடியான அக்காடிப் பயிரென்றும் பேரு*
*அருவாதி என்றதற்குப் பேருண்டாச்சு*
*குடியான குலத்தம் பயரென்றும் பேரு*
*கூட்டி விப்பநாதி[1] என்றதற்குப் பேரு*
*தடியான, தலைக்கணை[2] என்றதற்குப் பேரு*
*தருவித்தோம் மொச்சைக் காயிடை பேரே. (580)*

*(உரை:) கதிர்வளை, பரிவாடம், சரிங்கம், அங்காடிப் பயறு, அருவாதி, குலத்தம் பயறு, விப்பநாதி, தலைக்கணை என்ற எட்டுப்பெயர்கள் மொச்சைக்குண்டு.*

## கிச்சிலியின் பெயர்கள்

*அதியக்கிச் சிலியென்றதற்குப் பேரு*
*அடவான, மரக்கிச்சிலி இப்பழமச்சி என்றும்*
*எதியெதி, வாசவிலை என்றும் பேரு*
*ஏமபங்கமென்றதற்குப் பேருண்டாச்சு*
*கதிகருணை வாசி, என்று மதற்குப் பேரு*
*கற்கடகநாதி[3] என்றுமதற்குப் பேரு*
*விதி, ரசிகா வாடை யென்றுமதற்குப் பேரு*
*விசிதமென்ற, இக்கிச்சிலியின் விளக்கம் பாரே. (582)*

*(உரை:) அதியக்கிச்சிலி, மரக்கிச்சிலி, பழமச்சி, வாசவிலை, ஏமபங்கம், கருணை வாசி, கற்கடகநாதி, ரசிகாவாடை என்ற எட்டுப்பெயர்கள் கிச்சிலியுடையவை.*

---

1. நதி, 2. மணை, 3. ஓதி.

இதுவும் ஐரோப்பியர்களால் கொண்டுவரப்பட்ட தாவரம். முதலிரண்டு பெயர்களும் கிச்சிலிப்பழ வகைகளாகவே தோன்றுகின்றன.

### பேரீச்சம்பழப் பெயர்கள்

விளங்கு குமரிசை என்று மதற்குப் பேரு
விழல் மூரி, ருசியாந்த மென்றும் பேரு
அளங்குச, பிகாரி என்றுமதற்குப் பேரு
அப்பிரதிப்பழ மென்றதற்குப் பேரு
குலங்கரு மாலிசை[1] என்று மதற்குப் பேரு
குத்துநாப் பழ[2] மென்று மதற்குப் பேரு
வளங்க கடிக முதனையா என்றும் பேரு
வகுத்தோம் நாம், பேரீச்சன், வெகுமகிமை
பாரே. *(582)*

*(உரை:)* பேரீச்சம்பழத்தின் பெயர்கள், குமரிசை, விழல் மூரி, ருசியாந்தம், அளங்குச பிகாரி, அப்பிரதிப்பழம், கருமாலிசை, குத்து நாப்பழம், கடிக முதனை என்ற எட்டாகும்.

### தேங்காயின் பெயர்கள்

வெகுமகிமை, திராவிட்ச செனவாரி, சுவமென்றும்
விளக்கினோ மாதிக்கே, கபகாரனென்றும் பேரு
வெகுமகிமை, கடலக்க மென்றும் பேரு
வீராந்த[3] மதி நிலைப்பேர், விசிதப் பேரு
வெகுமகிமை, மாதர்க்காயென்றும் பேரு
விளம்பினோம், அஞ்சிலேறப்பின்[4] பாலென்றும் பேரு
வெகுமகிமை, மேகதண்ட மென்றும் பேரு
விதமான, தேங்காயதற்கு, விண்டோம் பேரே. *(583)*

*(உரை:)* திராவிட்ச செனவாரி, சுவம், கபகாரன், கடலக்கம், மதிநிலை, மாதர்க்காய், அஞ்சிலேறப்பின் பால், மேகதண்டம் தேங்காயின் எட்டுப்பெயர்கள்.

---

1. கிளங்கு, 2. கித்து, 3. பிந்த, 4. சிலேற்பன.

552ம் பாடலில் வந்த பழம் அரேபியாவிலிருந்து வந்த ஒன்று.

553ம் பாடலில் வந்தது இந்திய மர வகுப்பைச் சேர்ந்ததல்ல.

## குண்டுப் பனையின் பெயர்கள்

விண்டோம் நாம், பாரிசாதி விருட்சமென்றும் பேரு
விருங்கயசோலை, கலாதனு என்றும் பேரு
மண்டோம் நாம், அரிவாரி[1] என்றும் பேரு
அலறி விழுந்தலை, அழுவா ளென்றும் பேரு
கண்டோம் நாம் கண் காரி என்றும் பேரு
கருதஞ்சிமை, வாசகி[2] என்றதற்குப் பேரு
மண்டோம் நாம், சன்னாச கய மென்றும் பேரு
அனேகம், பேரிதற்கு, குண்டுப்பனையின்
பேரே. *(584)*

*(உரை:)* பாரிசாதி விருட்சம், விருங்கயசோலை, கலாதனு அரிவாரி, அலறி விழுந்தலை, அழுவாள், கண்காரி, கருதஞ்சிமை, வாசகி, சன்னாசக்கயம் என்பன குண்டுப் பனையின் பெயர்கள்.

## தாளிப் பனையின் பெயர்கள்

உண்டு கணதாளி என்று மதற்குப் பேரு
ஓர் திரிகை விருட்ச மென்றதற்குப் பேரு
கண்டு, திவ்விய விருட்ச மென்றதற்குப் பேரு
காமதேனு, வரிதாளி என்றும் பேரு
வெண்டும்[3], பிரும்ம தாக வென்றும் பேரு
விளங்கினோம், தேவனாகி விருட்சமென்றும் பேரு
கண்டு, சடாவேலை சக்கரமென்றும் பேரு
சமர்த்தான, தாளிப்பனை யதற்குப் பேரே. *(585)*

*(உரை:)* கணத்தாளி, ஓர் கிரிகை விருட்சம், திவ்விய விருட்சம், காமதேனு, வரி தாளி பிரும்ம விருட்சம், தேவனாகி விருட்சம், சடாவோலை எட்டுப்பெயர்கள் தாளிப்பனைக்குண்டு.

---

1. வாரி, 2. வாச்சி, 3 வேண்டும் என்றாதல் கூடும்.

### காசுக்கட்டியின் பெயர்கள்

சமர்த்தான கரிக்கட்டி[1] என்றும் பேரு
சங்கையில்லா, வெமக்கடலிங் கட்டி யென்றும்
அமத்தான, வக்காலட்டி என்றும் பேரு
அப்புரத்தை ஒட்டி வைத்தானென்றும் பேரு
பமத்தான பலச காடி என்றும் பேரு
பரிவாட்டி[2] என்றதற்குப் பேருண்டாச்சு
நமத்தான, நல்லாட்டி[3] க்கட்டி யென்றும் பேரு
நலமான காரை, காசுக்கட்டியின் பேரே. (586)

(உரை:) கரிக்கட்டி, வெமக்கடலின்கட்டி, வக்கலாட்டி, அப்புரத்தை ஒட்டிவைத்தான், பலசகாடி, பரிவாட்டி, நல்லாக் கட்டி என்பன காசுக்கட்டியின் பெயர்கள்.

### அபினியின் பெயர்கள்

கட்டி யென்ற காம சாரமென்றதற்குப் பேரு
அட்டியென்ற வதனமயமென்றும் பேரு
திட்டமென்ற[4] திரோ நாட்டி யென்றும் பேரு
திரிகசக்காயென்றதற்குப் பேரு
மட்டி யென்று[5] மாதருடைய மவுனாதி என்றும் பேரு
மகத்தான அபினியிட அதீதப் பேரே. (587)

(உரை:) காமசாரம், வதனமயம், திரோ நாட்டி, திரிகசக்காய், மாதருடைய மவுனாதி என்பன அபினியின் பெயர்கள்.

### கசகசாவின் பெயர்கள்

மகமென்ற, சாசவின[6] மயிர்தாளி என்றும் பேரு
மகத்தான, கசாவணிப மென்றும் பேரு
அகமென்ற[7], வசரக்கமென்றும்[8] பேரு
அதிலாம் பருக்க மென்றதற்குப் பேருண்டாச்சு

---

1. கீரிக்கட்டி, 2. வீமக்கடல், 3. வாட்டம், 4. கிட்டம், 5. மட்டம், 6.சரசவினை, 7. உக, 8. வர்க்கம்.

587ஆவது பாடல் இரண்டடிகள் குறைவாக உள்ளது.

செகமான[1], செகத்தாண்டி யென்றும் பேரு
செயமாகச் சொல்லிவிட்டோம் கசகசாவின் பேரே
(நிகமென்ற நிலைதாரி யென்றும் பேரு
நெகட்டிச் சாவரிட மதற்குப் பேரு.)[2] *(588)*

*(உரை:)* சாசவினமயிர் தாளி, கசாவாணிபம், வசரக்கம், அதிலாம் பருக்கம், செகத்தாணடி, நிலைதாரி, சாவரிடம், செத்தாழை என்பன கசகசாவின் பெயர்கள்.

### தென்னங்கள்ளின் பெயர்கள்

சொல்லியதோர் மதுபான மென்றும்[3] பேரு
சொற்பெரிய, சத்தமுர்த மென்றும் பேரு
அல்லியதோர் ஆகாச அமிர்த மென்றும் பேரு
அட்டமது ரச பான மென்றும் பேரு
வல்லியதோர் அழல் நீரென்றும் பேரு
வசனித்தோம், மௌ வாசல[4] மென்றும் பேரு
உல்லியதோர், பாலகங்கய[5] மென்றும் பேரு
உற்பனமாம் தென்னங்கள்ளதின் பேரே. *(589)*

*(உரை:)* மதுபானம், சத்தமுர்தம், அகாச அமிர்தம், அட்டமது ரசபானம், அழல்நீர், மௌவாசலம், பால கங்காயம் என்பன தென்னங்கள்ளின் எட்டுப்பெயர்கள்.

### பனங்கள்ளின் பெயர்கள்

உற்பனமாம் படரிப்பா லென்றும் பேரு
ஓகோகோ, மடப்பளிப்பாலென்றும் பேரு
அற்பனமாம், சித்தநிலையமரப்பாலென்றும்
அருளான, வட்டையின் பாலதற்குப் பேரு
நிற்பனமாம்[6], நேந்திரப்பா[7]லென்றும் பேரு
நேரான, ஓலைப்பாலென்றும் பேரு
கற்பன, மாங்காடிப்பாலென்றும் பேரு
கருணை பெரும், பனங்கள்ளினமுதப் பேரே.[8] *(590)*

---

1 சிக, 2. சரசுவதி மகால் சுவடியில் உள்ள வரிகள். 3. கானகம், 4. மேள, 5. கங்கா, 6. நெறப்பான, 7. மாமனே படானென்றும், 8. கறப்பான மாங்கயப்பா லென்றும் பேரு,கருது

*(உரை:)* படரிப்பால், மடப்பளிப்பால், சித்த நிலையம் மரப்பால், வட்டையின் பால், நேந்திரப்பால், ஓலைப்பால், மாங்காடிப்பால் என்ற எட்டுப்பெயர்கள் பனங்கள்ளுக்கு உண்டு.

**சாராயத்தின் பெயர்கள்**

அமிர்தமென்றும், வாமமென்றும், வத்த என்றும் பேரு
அடவான, கருவாம[1]மென்றும் பேரு
நமுர்தமென்ற, நாபிப் பாலமுர்த மென்றும் பேரு
நலமான, சீனப்பாலென்றும் பேரு
வமுர்தமென்ற, வத்துபான மென்றும் பேரு
மதியகத் திருநாபி அமுர்த மென்றும் பேரு
கமுர்தமென்ற குடிக்கின்ற வத்து வென்றும் பேரு
கணக்காகும், எட்டுப்பேர், சாராயப் பேரே. *(591)*

*(உரை:)* அமிர்தம், வாமம், வத்து, கருவாமம், நாபிப்பாலமுர்தம், சீனப்பால், வத்து பானம், இருநாபி அமுர்தம், குடிக்கின்ற வத்து என்ற எட்டுப்பெயர்கள் சாராயத்திற்கு உண்டு.

**மதனப்பூவின் பெயர்கள்**

சாரமென்ற அக்குரோதம்[2], வேழக்கையாதி[3]என்றும் பேரு
சமத்தான[4], விராட மென்றதற்குப் பேரு
ஆரமென்ற, வாதி மொக்கென்றும் பேரு
ஆண்மதப்பூ, அதற்கதீதப் பேரு
வாரமென்ற, வாலப்பூ வென்றும் பேரு
வாலாதி, மொக்கொன்ற தற்குப் பேரு
காரமென்ற, முராடகர[5]மென்றும் பேரு
கணக்காகயெட்டுப் பேர், மதனப்பூவின் பேரே. *(592)*

---

1. சருவான, 2. வக்ரோதம், 3. வேழ்க்கை, 4. சரக்கான, 5. முடைக்காரம்.

குறிப்பு: சீனப்பால் என்பது ஐரோப்பிய மதுவகைகளையே குறிக்கும்.

*(உரை:)* அக்குரோதம், வேழக்கையாதி, விராடம் வாதிமொக்கு, ஆண்மதப்பூ, வாலப்பூ, வாலாதி மொக்கு, முராடகம் என்ற எட்டுப்பேர் மதனப்பூவின் பெயர்கள்.

### சவரிக்காயின் பெயர்கள்

பூவான[1] சாதிக்காய், சன்னக்காயென்றும்
பூரிக்காயென்றதற்கு அதீதப் பேரு
நாவான[2], சிகப்பி[3] யென்றும் பேரு
நல்ல வர்ணக்காரி என்று மதற்குப் பேரு
பாவான, பவுரிக்காயென்று மதற்குப் பேரு
பரிதி, சடாலரிசி யென்று மதற்குப் பேரு
ஆவான[4], வாத[5] நாசிப் பழமென்றும் பேரு
அருளினோம், சவுரிக்காய தீதப் பேரே. **(593)**

*(உரை:)* சாதிக்காய், சன்னக்காய், பூரிக்காய், சிகப்பி, நல்ல வர்ணக்காரி, பவரிக்காய், பரிதி, சடாவாரி, வாதநாசிப்பழம் என்று எட்டுப்பெயர்கள் சவரிக்காய்க்கு உண்டு.

### புங்கங்கொட்டையின் பெயர்கள்

சவுரியென்றும், புங்கங்கொட்டை, லிங்கப்பருப்பென்றும் பேரு
சார்வான, லக்கணக்காயென்றும் பேரு
நவுரி[6]யென்ற, நந்திநிலை, போவாரிலை யென்றும் பேரு
நலமான, அதன் மரம் பேர் நங்கை மரமென்றும்
வாரி[7] யென்ற வடக் கொட்டை என்றும் பேரு
மதலாய[8] பருப்பென்றுமதற்குப் பேரு
கவுரி யென்ற, கட்டாங்கிக்கொட்டை[9] என்றும் பேரு
கருவான, புங்கங் கொட்டைப் பருப்பின்
பேரே. **(594)**

---

1. மது, 2. நது, 3. இரண, 4. வதுவான, 5. வரத, 6. கலரி, 7. மவரி, 8. மதுனாய, 9. கட்டாருங்கிக்கோட்டை.

*(உரை:)* சவரி, புங்கங்கொட்டை, லிங்கப்பருப்பு, வக்கணக்காய், நந்தி நிலை, போவார் இலை, நங்கைமரம், வடக்கொட்டை, மதுவாய்ப்பருப்பு, கட்டாங்கிக்கொட்டை என்பன புங்கன்கொட்டை பருப்பின் பெயர்கள்.

**ஏரழிஞ்சிலின் பெயர்கள்**

பருப்பான[1], விழிஞ்சி என்றும் கழஞ்சிவி[2]ரை யென்றும்
பண்பான, ஐங்கோலத் தாளாவி என்றும் பேரு
அரும்பான[3], வண்ண நங்கை வித்தென்றும் பேரு
ஆடறுப்பான் கொட்டை என்று மதற்குப் பேரு
வருப்பான, வழிஞ்சியெரி என்றும் பேரு
வாடமையான்[4] பரப்பென்று மதற்குப் பேரு
விருப்பான, இதராஞ்சி[5] இலை என்றும் பேரு
விளம்பினோம், ஏரழிஞ்சலிதற்குப் பேரே. *(595)*

*(உரை:)* விழிஞ்சி, இளஞ்சி விரை, ஐங்கோலத்தாள், ஆவி, வண்ண நங்கை வித்து, ஆடறுபான் கொட்டை, வழிஞ்சி எரி, வாடாமையான் பருப்பு, இதராஞ்சி என்பன ஏரழிஞ்சியின் எட்டுப்பெயர்கள்.

**பெருந்தும்மட்டியின் பெயர்கள்**

விளம்பினோம்[6], மம்மடிக்காய்,விலாயிலை என்றும் பேரு
விட்டித்தா[7]ட்டிக்காயென்று மதற்குப் பேரு
அளம்பினோம், குணாசிக்காயென்றும் பேரு
அட்டநாதிப்பூடென்று மதற்குப் பேரு
உளம்பினோம், உருட்டிக்[8]காயென்றும் பேரு
ஒராத்துவேளை[9]யென்றும்,கொடி[10]யென்றும்பேரு
வளம்பினோம், வால சண்டக்கா[11] யென்றும் பேரு
வசனித்தோம், பெருந்தும்பட்டிக்காயதன் பேரே.*(596)*

---

1.கரும்பான, 2. இளஞ்சி, 3. உறும்பான, 4. வாடகை, 5.விதராஞ்சி. 6.மட்டிக்காய், 7. வெடித்தாட, 8. முருட்டிக்காய், 9. வேளை, 10. கேட்டி, 11.சண்டக்காம்.

(உரை) மம்மடிக்காய், விலா இலை, விட்டிதாட்டிக் காய், குணாசிகாய், அட்டநாதிப்பூடு, உருட்டிக்காய், வேளை, கொடி, வால சண்டக்காய் என்பன பெருந்தும்மட்டிக்காயின் பெயர்கள்.

## சிறுதும்மட்டிக்காய் பெயர்கள்

வீணமென்ற விரும்பசரி[1], விக்கா முசட்டி யென்றும்
விளம்பினோம், கங்கடிக்காயென்றும் பேரு
மாணமென்ற மறதிக்கா[2] யென்றும் பேரு
மகத்தான வருந்தும் தும்மட்டிக்காயென்றும் பேரு
ஆணமென்ற[3] தகரவித்தென்றும்[4] பேரு
அட்ட சிக்காயென்று மதற்குப் பேரு
வாணமென்ற[5] லோகநாத மூலி[6] யென்றும் பேரு
வருப்பான, சிறுதும்மட்டடிக்காயென்றும் பேரு.*(597)*

(உரை:) விரும்பசரி, விக்காமுசட்டி, கங்கடிக்காய், மறதிக்காய், தும்மட்டிக்காய், தகரவித்து, அட்டசிக்காய், லோக நாத மூலி என்ற எட்டுப்பெயர்கள் சிறு தும்மட்டிக் காய்க்கு உண்டு.

## சிறியாநங்கையின் பெயர்கள்

வரும்பாகு[7], மதியாக் கங்கை, ரவிநங்கை யென்று
மகத்தானது, சக்கார மூலி யென்றும் பேரு
அரும்பாகு[8], வட்டமாம் பூடென்றும் பேரு
அரி, சிங்கார மூலி யென்றும் பேரு
திரும்பாகும் மதிவரந்த மூலி[9] யென்றும் பேரு
சேனைப் படையரவமெனும், வீழி, மூலியதன் பேரு
துரும்பாகும், மருநாதிப் பூடென்றும் பேரு
சொல்லக்கேள், இதன் பேரு சிறியாநங்கையின்
பேரே.*(598)*

---

1. வரும்பசரி, 2. மனாதிக்காய், 3. இனமென்ற, 4. களரங்க, 5.வனமென்ற, 6.பேர்க்கனா, 7. நிம்பாகும், 8. தீவரந்த, 9. சொரும்.

(உரை:) மதியா கங்கை, இரவி நங்கை, சக்காரமூலி, அரும்பாகு, வட்டமாம் பூடு, அரிசிங்கார மூலி, வரந்தமூலி, மருநாதிப்பூடு என்ற எட்டுப்பெயர்கள் சிறியாநங்கைக்கு உண்டு.

**அழுகண்ணியின் பெயர்**

சொல்லாத அழுகை வாடி மூலி என்றும் பேரு
சூராதிப் பூடென்றும், நாரை மூலி யென்றும் பேரு
கல்லாத, சிறு கண்ணி யென்றும் பேரு
கல்லிரா மூலி யென்று மதற்குப் பேரு
இல்லாத [1] விரும்பாடி மூலி யென்றும் பேரு
விழ மாருதப்பூ [2] டென்றுமதற்குப் பேரு
புல்லாத, பதனாறு [3] வியென்றும் பேரு
புகழான, அழுகண்ணிய தனுடைய பேரே. (599)

(உரை:) அழுகைவாடி மூலி, சூராதிப்பூடு, நாரை மூலி, சிறுகண்ணி, கல்லிரா மூலி, விரும்பாடி மூலி, மாருதப்பூடு, பதனாறுவி என்பன அழுகண்ணியின் எட்டுப்பெயர்கள்.

**தில்லைப்பாலின் பெயர்கள்**

அதனுடைய, மாதரிப் [4] பாலென்றும் பேரு
அசகங்கையிலைஎன்றும் அக்கரமென்றும்
அதனுடைய, திருசாடிப்பாலென்றும் பேரு
வளமான, பேதரம் பாலென்றும் பேரு
பதினுடைய பரிவித்திப்பா லென்றதற்குப் பேரு
பஞ்சகரணாதி யிலை என்றும் பேரு
திரு [5] வுடைய வனத்தில்லைப் பாலென்றும் பேரு
செப்பினோம், தில்லைப் பாலென்றும் பேரே. (600)

(உரை:) மாதரிப்பால், அசகங்கை இலை, அக்கரம், திருசாடிப்பால், பேதரப்பால், பரிவிந்திப்பால், பஞ்சகரணாதி இலை, வனத்தில்லைப்பால் என்ற எட்டுப்பெயர்கள் தில்லைப்பாலுக்கு உண்டு.

---

1. வில்லாத, 2. விழமருத, 3. பதனுருவி, 4. மவதரி, 2. செதி.

## கருநொச்சி இலையின் பெயர்கள்

*என்றான, இலை நொச்சிக் காலை நொச்சி யென்றும்*
*எரிகுளிரான் என்றதற்குப் பேருண்டாச்சு*
*வன்றான, வட்டி மாமதி யென்றும் பேரு*
*வலை மண்டலி என்று மதற்குப் பேருண்டாச்சு*
*குன்றான[1] குறை நாடோ னென்றும் பேரு*
*கூப்பிடா ரொட்டி[2] யென்றுமதற்குப் பேரு*
*சன்றான, சக்கரிமா மூலி யென்றும் பேரு*
*சமத்தான, கரு நொச்சியின் பேரே. (601)*

*(உரை:)* இலை நொச்சி, காலை நொச்சி, எரி குளிரான், வட்டி மாமதி, வலைமண்டலி, குறை நாடோன், கூப்பிடாரொட்டி, சக்கிரமாமூலி என்ற எட்டுப்பெயர்கள் கருநொச்சிக்குண்டு.

## கருஞ்செம்பையின் பெயர்கள்

*சிலையான, சிற்சிழிஞ்சான், காய் தெரியானென்றும்*
*செராந்தக னென்று மதற்குப் பேரு*
*வலையான, வடசெம்மையென்றும் பேரு*
*மறுதண்ட மூலி[3] யென்று மதற்குப் பேரு*
*அலையான. அம்மானப் பூடென்றும் பேரு*
*ஆத்துமத்தை, அங்கி நீண்டானென்றும் பேரு*
*கலையான, கடைக் கிழஞ்சாமூலி யென்றும் பேரு*
*கருதினோம், கருஞ்செம்பைதீதப் பேரே. (602)*

*(உரை:)* சிற்சிழிஞ்சான், காய் தெரியான், செராந்தகன், வடசெம்மை, மது தண்டமூலி, அம்மானப்பூடு, ஆத்துமத்தை, அங்கி நீண்டான், கடைக்கிழஞ்சா மூலி என்பன கருஞ்செம்பையின் பெயர்களாகும்.

---

1 குண்டான, 2. ரோட்டி, 3. மூதண்டமூலி,

602ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

## கற்பூரவல்லியின் பெயர்கள்

கருதுமதைத் தோழி யென்றும், சூடமூலி[1] யென்றும்
கருவான, சூதத்தைக் கட்டு வாலா மூலி[2]
அருது[2], மங்கையைக் கண்ணி[3]யென்றும் பேரு
ஆணோறை[4] மயக்க மென்ற மதற்குப் பேரு
மருது[5] மனோகார மூலி யென்றும் பேரு
மாட்டுசாண மூலி யென்று மதற்குப் பேரு
பருது, பகீரதிப் பூடென்றும் பேரு
பரிவான்[6], கற்பூரவல்லியதன் பேரே. *(603)*

*(உரை:)* தோழி, சூடமூலி, கட்டுவாலாமூலி, மங்கையைக் கண்ணி, ஆணோறை மயக்கம், மனோகார மூலி, மாட்டு சாண மூலி, பகீரதிப்பூடு என்ற எட்டுப்பெயர்கள் கற்பூரவல்லிக்குண்டு.

## நரிப்பாலையின் பெயர்கள்

பரிவான, படுபாலை[7] யென்றும் பேரு
பணமாலை, சிறுபாலை[8] யென்றும் பேரு
அரிவான, கரிப்பாலை[9] யென்று மதற்குப் பேரு
அருள் பாதமூலி யென்று மதற்குப் பேரு
வரிவான[10] விழிதாடி மூலி[11] என்றும் பேரு
மகளோது என்றதற்குப் பேருண்டாச்சு
நரிவான, நஞ்சு முறி[12] என்றும் பேரு
நாம் சொன்னோம், நரிப்பாலையென்றதற்குப்
பேரே. *(604)*

*(உரை:)* படுபாலை, சிறுபாலை, கரிப்பாலை, அருள் பாதமூலி, விழிதாடி மூலி, மகளோது நஞ்சு முறி, நரிப்பாலை என்ற எட்டுப்பெயர்கள் நரிப்பாலைக்குண்டு.

---

1. துடி, 2. கருது, 3. கன்னி, 4. ஆணோரே, 5. மருகினோம், 6. பருவான, 7. பொலை, 8. கிறுபாலை, 9. பரிபாலை, 10. கரிவான, 11. விழுதபடி, 12. நஞ்சுமூரி.

## கோவையின் பெயர்கள்

சொன்னோம், நாம், மறிக்கோவை மூலி யென்றும் பேரு
சொக்கு நரிப்பூடென்று மதற்குப் பேரு
அன்னோம் நாம், மட்டரிதான்[1], வாரமூலி யென்றும்
அருளினோம், கழுதைப் பாலையென்றும் பேரு
வன்னோம் நாம், வட்டக் கோவை யென்றும் பேரு
வடக்காளி மூலி யென்றுமதற்குப் பேரு
நாடினோம் நாம், நாவல் கோவை யென்றும் பேரு
நளினமதாய் சொல்லிவிட்டோம், கோவையதன்
பேரே. (605)

(உரை:) மறிக்கோவை மூலி, சொக்கு நரிப்பூடு, மட்டரித்தான், வாரமூலி, கழுதைப்பாலை, வட்டகோவை, வடக்காளி மூலி, நாவல் கோவை என்ற எட்டுப்பெயர்கள் கோவை என்ற எட்டுப்பெயர்கள் கோவையின் பெயர்களாகும்.

## காட்டு முருங்கையின் பெயர்கள்

நளின மென்ற, பாலரசு[2], யென்றும் பேரு
நலமான[3], காரி மூலி யென்றும் பேரு
அளின மென்ற, வகனரி[4] யென்றும் பேரு
அதறஞ்சி, வட முருங்கை என்றும் பேரு
மளின மென்ற, மாதவப்[5] பரிவாளென்றும் பேரு
மணக் கோல மூலியென்று மதற்குப் பேரு
தெளினமென்று, திசை முருங்கையென்றும் பேரு
திருவான, காட்டு முருங்கையதன் பேரே. (606)

(உரை:) பாலரசு, காரிகமூலி, வகனரி, அதறஞ்சி, வடமுருங்கை, மாதவப்பரிவாள், மணக்கோலமூலி, திசை முருங்கை என்ற எட்டுப்பெயர்கள் காட்டுமுருங்கைக்கு உண்டு.

---

1. மட்டரித்தாளு, 2. பாவரசு, 3. நன்றான, 4. சுனித, 5. மந்த

## கட்டுக்கொடியின் பெயர்கள்

கட்டான, சூரியந்ததைக் கென்று[1], மலையென்று
கருவான, மலை கருக்காய்[2] யென்றும் பேரு
தட்டான சலக்கட்டென்றும் பேரு
சலாந்தர மூலி யென்றுமதற்குப் பேரு
வட்டான, மேகநாத்தி மூலி யென்றும் பேரு
வாழவாசிப் பூடென்று[3] மதற்குப் பேரு
செட்டான, செங்கதிரோன் மூலியென்றும் பேரு
செப்பினோம், கட்டுக்கொடி[4] அப்பேரே. *(607)*

(உரை:) சூரியந்ததை, மலை, மலை கருக்காய், சலக்கட்டு, சலாந்தரம், மேகநாத்தி மூலி, வாழவாசிப்பூடு, செங்கதிரோன் மூலி என்ற எட்டுப்பெயர்கள் கட்டுக் கொடிக்கு உண்டு.

## தத்துவம்

அதீதமென்ற, நூல்களெல்லாம் ஆய்ந்தாய்ந்து
அணியணியாய், போர்களெல்லாம் மணியாய் செய்து
அதீதமென்ற[5] ஓர்வகைப் பேர்களெட்டாய்
வசனித்தோம், இந்த எண்ணூறு கவியாய் சொன்னோம்
பதீதமென்ற, பரிபாஷையில்லாமல் தான்
பாடினோமகராதி, ஐந்தாம் காண்டம்
மதீதமென்ற, புலத்தியனே, உனக்காகச் சொன்னோம்
மானிடர்க்கிந்நூலை மருவிடாதே[6] *(608)*

மறிவிடா, இந்நூலைப் பார்த்துத் தேறி[7]
மகத்தான, நூல்களிட பாசை யெல்லாம்
அறிந்திடா, அறிவதனால் அடக்கம் செய்து[8]
யாருக்குண்டு, இருக்குதென்றருளவே நாம்
குருவில்லா, வித்தையெல்லாம், மனத்தால் தோற்றும்
தோற்றம் கூறினோம், என்னை வெளிவிடாதே
கருவடா[9] தொருக்காலும், பேர் சொல்லாதே
காமுகரைச் சேர்க்காதே, கடக்க நில்லே. *(609)*

---

1. சூரியந்தத்தை, 2. வருக்காய், 3. சாலாசி, 4. கட்டுக்கொடிதனுடைய, 5. வதீதம், 6. மறித்திடாதே, 7. பார்த்துக்கோ, 8. சொன்னோம்

*நில்லப்பா, மன்மதனைப் பறிவாலொட்டி*
*நீ, மகனே, பூரணம் போல் பார்த்ீராகில்*
*கல்லப்பா, வெளிவிடாப்பொருள்களெல்லாம்*
*கண்ணாடி, முகம்பார்த்த பாவனை போலத்*
*தோன்றும்*
*சொல்லப்பா, சுழி முனையுமங்கே தோன்றும்*
*சோதியொளி, சுகந்தந் தோன்றும்*
*வில்லப்பா, நாணிக் கொண்டு வாசியோட்டி*
*மேவியே, சுரூபமதை, தரிசிப்பாயே.* *(610)*

*தரிச்சிப்பாய், புலத்தியனே, அஞ்சு காண்டம்*
*தெளிவாகச் சொல்லிவிட்டோம் தேறும் தேறும்*
*பரிசிப்பாய்* [1]*, அந்தரமே, நிகண்டெண்ணூறும்*
*பார்த்தாக்கால், பரிபாசையெல்லாம் தோற்றும்*
*கரிசிப்பாய், கடைச்சரக்கின் கூறு தன்னைக்*
*காட்டினோம், கவியாகக் கருணை கூர்ந்து*
*அரி சிப்பாய்* [2]*, தினந்தோறும் அஞ்சாம் காண்டம்*
*அருளினோம், பூரம் போல அதீத முற்றே.* *(611)*

*(உரை:)* பாடம் 515 முதல் 607 வரை தத்துவக் கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. எல்லாவிதமான சித்த மருத்துவ நூல்களையும் ஆய்ந்து பெயர்களை எல்லாம் தொகுத்து, ஒரே சொல்லுக்கு, எட்டுப்பெயர்கள் வீதம், பாடல்களாகச் சொல்லியுள்ளோம். மறைத்துக்கூறாமல் வெளிப்படையாக பாடியுள்ளோம். அகராதி ஐந்தாம் காண்டம், மனிதர்களுக் காகக் கூறியுள்ளேன்.

இந்த நூலைப்படித்து, உணர்ந்து கொள்ளவும். இதில் பல சித்தமருத்துவ நூல்களின் மறைமொழிகளை எல்லாம் அறியக் கூறினோம். இந்நூலை வெளிவிடாதே. காமுகர்களைச் சேர்க்கவேண்டாம்.

---

1. மரிசிப்பாய், 2. அர்ச்சிப்பாய்.

முழுமையாகப் படிக்க, கண்ணாடியில் முகத்தைக் காண்பது போலத் தெளிவாக இருக்கும். சுழிமுனை தோன்றும். அறிவான ஒளி என்ற மணம் வீசும். உருவத்தைக் காணலாம். 5வது காண்டத்தில் தெளிவாகப் பாடியுள்ளோம். நிகண்டு எண்ணூறு பாடல்களான நூலைப்படிக்க, பரிபாசை விளங்கும். கடைச்சரக்குகளைப் பற்றி, பாடல்களாக அருள்கூர்ந்து காட்டியுள்ளோம். இதை தினமும் மலர்களைத் தூவி வணங்கவும்.

## ஆறாம் காண்டம் (மாந்திரிக காண்டம்)

### காப்புச் செய்யுள்

பூரணமாம், பராபரத்தின்[1] பாதம் போற்றி
புகழும்[2] சுழிமுனை ஆதியந்தம் போற்றி
வாரணமாம், அண்டபிண்டம் நிறைந்த சோதி[3]
மகத்தான குண்டலினித் தாய் போற்றி
ஆரணமாம், கணேசனருள்[4] போற்றி
அனுக்கிரமென்ற சிவ அம்பாள் போற்றி போற்றி
காரணமாயெந்தன்[5] குருகந்தன் போற்றி
காலவைரவன் போற்றிக் காப்புதானே. *(612)*

காப்பான பாடல் நூற்றுமுப்பதுக்குள்[6]
காண்டமொன்றில் மாந்திரிகக் கூறெல்லாந்தான்[7]
சீர்பான[8], பட்சியிடக் கருவின் கூறும்
செயலான, மிருகங்கள் பூச்சிக்கூறும்
மாப்பான, புனுகுனிட[9] மூலிக்கூறும்
மகத்தான, பறவையின் வளப்பங்கூறும்
சேர்பாகச் சொல்லுகின்றோம் ஆறாம் காண்டம்
செவியுகந்து, புலத்தியனே, சீராய்க் கேளே. *(613)*

---

1. பருவத்தின், 2. மடிகளாம், 3. தாய்போற்றி, 4. அருளாய், 5.நற்குரு, 6. பத்தாறுக்குள், 7. பேருக்கெல்லாம், 8. சிறப்பான, 9.புனுகுநிட.

சீரான, மாந்திரிக அட்சரத்தின் கூறும்
செப்பாத, சக்கரங்கள், தியானக்கூறும்
மாறாத, முன்னோர்கள் மறைத்தக்கூறும்
மகத்தான, நிகண்டு பரிபாசைக் கூறும்
மாறாத மும்மூலவாசிக் கூறும்
மவுன மெய்ஞானியிட சித்தக் கூறும்
தோராத பேர்களிடக் களவின் கூறும்
திருவான, வேதாந்தம் செப்பக் கேளே. *(614)*

செப்பார்கள், முன்னோர்கள் பாசையெல்லாம்
செப்பினதோர், நுல்களெல்லாம் திரட்டிச் சொன்னார்
ஒப்பாக பொருளெல்லாமிந்த[1] நூலில்
ஓர் கருவியிடைவிடாமல் சரியாய்ச் சொல்வோம்
தப்பார்கள், சித்தரெல்லாம் மூடிப் போட்டார்கள்
தைலங்கள், அற்றிரவதில்லை சார்ந்துபாரு
அப்பா, கேள் புலத்தியனே, காவியமஞ்சுக்கும்
அருளினோம், சவுமியத்தின் கோர்வைக்காமே. *(615)*

ஆமென்ற பாடல்[2], பதினாறு லட்சம்
அதீதத்துக்கு இந்நூலாராய்ந்து பார்த்தால்
ஓமென்ற, பொருளெல்லாமொன்றாய்த் தோன்றும்
ஒடுங்கி நின்ற தெல்லாம், வெளியாய்க்[3] காணும்
நாமென்றாது[4], நிகண்டகராதி சொன்னோம்
நலமான எண்ணூறுக் கொன்றீடில்லை[5]
போமென்ற புலையருக்கும், சூதருக்கும்
புகட்டாதே, இந்நூலை புகழ்ந்து பாரே. *(616)*

*(உரை:)* நிலையாக உள்ள முழுமுதற் பொருளின் திருவடிகளைப் போற்றுகின்றேன். எல்லா உலகங்களிலும், நீக்கமற நிறைந்த ஒளியைப் போற்றுகின்றேன். குண்டலியின் அன்னையைப் போற்றுகின்றேன். யானை முகத்தான் திருவருளை வேண்டுகின்றேன்.

---

1. பொருளெல்லா, 2. படலம், 3. நெளி, 4. வெகு, 5. காணி.

சிவனுமையின் திருவருளை வேண்டுகின்றேன். குரு சாமியான முருகனின் திருவடிகளை வணங்குகிறேன். காலனைவரவரை வணங்கி, காக்க வேண்டுகிறேன்.

130 பாடல்களில், ஒரு காண்டமென்று, மாந்திரீக காண்டம் உள்ளது. பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்ற உயிரினங்களின் இயல்புகளையும், செழுமையினையும் எடுத்துரைப்பேன், விருப்பமுடன் புலத்தியரே, கேட்பீராக.

எழுத்துகள், சக்கரங்கள், தியான முறைகள் என்ற மந்திரத்தின் வகைகள், முன்னோர்கள் மறைத்து வைத்த நிகண்டுகள், பரிபாசை, யோக முறைகள், வேதாந்தம் என்பனவற்றை எடுத்து வெளிப்படையாகக் கூறுகின்றேன்.

பரிபாசை எல்லாம், முன்னோர்கள், எடுத்துக் கூறமாட்டார்கள். மருத்துவநூல் எல்லாவற்றையும் தொகுத்துச் சொன்னார்கள். அவற்றை எல்லாம், இந்த நூலில் கூறுகின்றேன். சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். தைலங்கள், திராவகங்கள் என்பன செய்முறை கூறுகின்றேன். ஐந்து காவியத்திற்கும், அழகாக நிகண்டைத் தொகுத்துத் தொடர்ச்சியாகக் கூறுகின்றேன்.

16 லட்சமுள்ள பாடல்களுக்கு இந்நூலில் பொருள் காணலாம். இந்நூலை ஆராய்ந்து பார்த்தால், ஓமென்ற பொருள்கள் யாவும் ஒன்றாகத் தோன்றும். மறைவான பொருள்கள் எல்லாம், வெளிப்படையாகக் காட்டப் பட்டுள்ளன. நிகண்டும், அகராதியாக 800 பாடல்கள் உள்ள இந் நூலுக்கு ஒப்பு எதுவுமில்லை. இதை இழிகுணமுள்ள மக்களுக்கும், சூதாடிகளுக்கும் சொல்லாதே.

## ஆயிரத்தின் ஞானிகளின் [1] விபரத்தின் பெயர்

*புகழ்ந்துபார், புலத்தியனையா, கேளு*
*பூதலத்தில், சகலருமே, சித்தரானால்*
*நகழ்ந்து பார், ராவேது, பகல்தானேது*
*ரவிமதியொடு, மண்டலத்தில் ஆதியேது*
*எகழ்ந்துபார், ஈசுபரனெல்லாரானால்*
*எங்கிருப்போ, அகத்தியனான, ரிசிகளைக் காண*
*அகழ்ந்து பார், அணைகட்டிப்பயிரே செய்தால்*
*ஆயிரத்திலோர், கழனி விளைவு தானே.* *(617)*

*(உரை:)* புலத்தியனே, கேட்பாயாக உலகில், எல்லோரும் சித்தர்களானால், இரவு, பகல் எதுவும் இராது, சூரிய, சந்திர கோள்களுடன், உள்ள முதல் பொருள் எது? இறைவன் எங்கு உள்ளார்? என்பதை மனத்தில் ஆராய்ந்து பார்க்கவும். அணைக்கட்டி, நீர்பாய்ச்சி பயிரிடச்செய்தால், பயிர்கள், நிலத்தில் விளையும்.

## அகோர யோனியசைத் தள்ளுறுவின் பெயர்கள்

*விளைவான, வகாரமடா, விந்து*
*விந்து திக்கப் பிருதுவிதான், மண்தானாச்சு*
*அளவான, மண்ணில் விதை விந்திட்டால்*
*அதுவிளையும், பாதமடா அப்பு வாச்சு*
*பழமான நல்வினை, தீவினையினாலே*
*பன்மைபெறு, ஆண்பெண்ணு உதிப்பதாச்சு*
*உளமான, உகாரத்திலுதித்தாச்சு*
*ஓகோகோ, யோனியில் பிறவியாச்சே.* *(618)*

---

1. காணி.

குறிப்பு: ஆறாம் காண்டமான மாந்திரிக காண்டத்தை, மாந்திரிக காவியத்துடன் ஒப்பிட, இருபகுதிகளும் தனித்தனியானவை களாகவே உள்ளன.

(உரை:) வகாரத்தின் விளைவு விந்து, விந்து பிறக்க நிலம், மண்ணானது; மண்ணில் விதையைத்தூவ, விளையும் அடிப்படையானது நீரானது. நல்வினை, தீவினையால் ஆண் பெண் தோற்றம் O என்ற எழுத்தால் தோன்றியது. கருப்பையில் பிறவியாக, குழந்தையாக உண்டானது.

**தாயை அறிய விவரம்**

பிறவி யென்ற, வேதாந்தம் பார்க்க வென்றால்
பெண் வயிற்றில் உற்பவித்து, பிறகு கூடா
தாலி[1] யென்ற, பெண்ணோட கூடினாக்கால்
தாயாச்சு, உலகமெல்லாம், மாதாவாச்சு
ஓரவி[2] யென்ற, யோனி யெலா முளையதாச்சு[3]
ஓங்கார மென்று அனுக்[4] கிரகமாச்சு
சாலியென்ற, தன்னிய[5] மதுவேயாச்சு
சதாகாலந்தாயைத்தான், தரிசிப்பாயே. (619)

தாயென்றால்,தாயல்ல சுந்தரமே கேளு
தாய்ச் சுரூபம் போல் நின்றாளாத்தாள்
வாசி யென்ற கனிவாயை, மூடிக் கொண்டு
மவுனமதாய்[6], வாசியைக் கொண்டிழுத்து நீயும்
ஓமென்றாலோ, உறுதி சத்தியமாக
ஓகோகோ, வோராண்டு, வருசம் குப்பி[7]
காயான, வாசியது,நால் சாமத்துக்கும்
கனிந்து, வெட்டு நாமது, அப்பியாசம் செய்யே.(620)

அப்பியாசமோராண்டு, அனுக்கிரகமானால்
...... வாயு[8] மூலத்திலடங்கிப் போச்சு
கைப்பாகமாகவும், நீ, சுந்தரமே கேளு
கருணை பெற அதன்பிறகு, கற்பங்கொள்ளு

---

1. தரலி, 2. ஒரலி, 3. எல்லா மொன்றாச்சு, 4. சைத்தன்னிய, 5. மன்னமதாய், 6. கும்பி, 7. அபான, 8. காதலாய்.

தப்பியாசமாகப் பத்தாண்டு மட்டும்
தவறாக கற்பமுண்டு யோகம் செய்தால்
செய்யப்பா, வேகாத்தலை, சாகாத்தலைக்[1] காண்பாய்
சிவசிவா, சாகாத காலைக் காணே. (621)

காணப்பா, உயிர்நிலைப்பேர் காணும்
கருவான, மந்திரத்தி னெழுத்தும் காணும்
வேணப்பா, விருதாவில் கற்பமுண்டால்
விளங்கினோம், விந்தழிந்தோர், நாற்பதுக்கு மேல்
ஊனப்பா, முப்பூவைச் செய்துகொண்டு
மூதண்டச் சரக்கு அப்பிட்டுச்
சேணப்பா, செந்தூர லேகியங்கள் செய்து
செய்த தைத, நோயணுகாய், திரேக நில்லே. (622)

நில்லப்பா, மூன்றையுந்தான் அறிவால் கூட்டி
நிராமயம் போல், இல்லமதில் சமாதி செய்து
செல்லப்பா, ஒரு வருசத்துக்குள்ளேயே ஐயா
சடலமதை, நோயில்லா திரேகமாக்கி
அல்லப்பா, ஒரு வருச மப்பியாசம் செய்தால்
அதன் பிறகு கற்பமதையுண்ணு, உண்ணு
கல்லப்பா, பத்தாண்டுக்குள்ளே நீயும்
கனயோக சித்தராய், பொதிகைக்கு வாவே. (623)

பொதிகைக்கு, வந்தையென்றான் உபதேசம் சொல்வோமே
புகழான, சித்திசெய்து,எமன் போலாவாய்
யோகி யென்றால், வனயோக, அதிக ஞானி
உத்தம தேசிகந்தான், மவுனியாகும்[2]
விவேகி சென்றால், லட்சணவான், பரம ஞானி
விதியில்லான், மறுபிறவி பிறப்பில்லான்
போகி யென்ற, புலையருக்கு வாயாதையா
புலையருட, மாண்பரிடபுத்திகேளே. (624)

1. காதலாய், 2, மவுனியாகுமே.

புத்தியென்றும், பிறக்கச்சே, ராசியுள்ளோன்
பிறந்தானென்றால், அஞ்சாண்டுக்குள்ளேயா
வத்திப்பான், பாராசமுதல்[1] கற்பமுண்பான்
பாசி[2] யோகத்துக்கிடையாய், மாண்பர்கூடான்
அத்தியானை, பலந்தான் பதினாறுக்குள்
ஆயிடுவான், பிறவி சென்ம மற்றுக்
குற்றமற்ற, பலவானாயிருந்து வாழ்வான்
குறைவுறா, செல்வத்துக் குடைவானே. (625)

(உரை:) பாடல் 620 முதல் 626 வரை தத்துவக்கருத்துகள் இடம்பெறுகின்றன. பிறவி என்ற வேதாந்தத்தைப் பார்க்க, பெண்ணின் கருப்பையில் பிறவி எடுக்கின்றான். பின் மனைவியான பெண்ணுடன் சேர்ந்து, தாயாக்குகின்றான். உலக முழுவதும் அன்னையானது ஓம் என்ற ஒலி அருளானது. எப்போதும் அன்னையைக் காண்பாயாக.

தாய் என்றால் அன்னையல்ல, அழகரே, கேள். மூச்சுப் பயிற்சியால் வாயை மூடிக்கொண்டு, பேசாமல், மூச்சை இழுத்துக்கொண்டிருக்கவும். தாய், உருவத்துடன் நிற்பாள் உறுதியாக உண்மையாக, ஓராண்டு முழுவதும் நான்கு சாமம், யோகப்பயிற்சியை செய்யவும்.

ஓராண்டு யோகப் பயிற்சி அருளுடன் செய்தால், காற்று அடங்கும். பின்னர் கற்பமுறையைக் கடைப்பிடிக்கவும். இவ்வாறு பத்து ஆண்டுகள் தவறாமல் கடைப்பிடித்தால், வேகாத்தலையைக் காண்பாய். சித்தமருத்துவத்தில் சாகாக்கால், வேகாத்தலை போகாப்புனல் என்ற சொற்கள் பரிபாசையாக உள்ளன. வேகாத்தலை என்பது கந்தகம் என்பார்கள்.

அக்கினியில் புகையாத கந்தி வாய்த்தால் நவிலுவாய் நீ வேகாத்தலை என்றப்பா என்று மச்சமுனி 800ல் வருகின்றது.[3]

---

1. பாராச, 2. வாசி, 3. மச்சமுனி 800 பாடல் 159-ஆயுர்வேத சித்தமைய ஆராய்ச்சிக்கழகம்-புதுடெல்லி.,1985.

உய்ாநிலையைக காண்பாய் அடிப்படையான மந்திரத்தின் எழுத்துக்களைக்காணவும். பயனில்லாமல் கற்பமுண்டால, 40 வயதுக்குமேல் விந்தழியும், இதை விளக்கினோம். முப்பூசெய்துகொண்டு, அறுகை மேல் பூசி செந்தூரம், லேகியங்கள் செய்து உண்ணவும். நோய் வராது.

முப்பு லேகியம்,செந்தூரம் என்ற மூன்றையும் உண்டு, இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூச்சு பயிற்சியை அறிவால் கூட்ட, சமாதி ஏற்படும். உடல், நோயணுகாதபடி ஆகும். ஓராண்டுப் பயிற்சி செய்ய, பின்னரே கற்பமுண்ண வேண்டும். பத்தாண்டு செய்ய கனயோக சித்தராக மாறலாம்.

பொதிகை மலைக்கு வந்தால் இதுபற்றிய விளக்கங்களைச் சொல்வேன். காட்டில் உள்ள யோகி, யோகி எனப்படுவான் இவனே, அதிக அறிவுள்ளவன்.

நல்லாசிரியர் பேசாமலிருப்பார், பண்புள்ளவன், எடுத்துக்காட்டுடையவன் நல்ல அறிவுள்ளவன். இவனுக்கு பிறவியில்லை.

இன்பத்தை விரும்பும், கீழ்மக்களுக்கு இது கிடைக்காது. அறிவுடன் கேட்பாயாக. அறிவு பிறக்கும்பொழுது, நல்வாய்ப்புள்ளவன், இவன் பிறந்து ஐந்தாண்டுக்குள் முதல் கற்பத்தை சாப்பிடுவான். 16வயதுக்குள் யானையின் வலிமையைப் பெறுவான். மறுபிறப்பில்லாமல் வலிமையுடன் நிறைய செல்வமுடன் குறைவில்லாமல் வாழ்வான்.

**சித்திகளுக்கு விவரம் (சோதிடம்)**

உடையவான், துலாராசி முழுவதும் பட்சம்
உச்சத்தில் ரேவதி, மகம், பூராடம்
உடையவானிவர், மூன்று முடியில் நிற்பார்
உடன்கழுந்து உத்திரமும், மேஷமாகில்

படையவான், இரண்டாமிடம், மூலபட்சம்
பசுபதியும், குருவியாழம், கேந்திர நிற்பான்
படையவான், சரசுவதியும், சனீச்சுரன்
நிற்பானெந்நாளும், சடலமெல்லாம்
பிரும்மந்தானே. (626)

தானென்ற, சூரியனும் புருவத்தில் நிற்பான்
சந்திரனும், முகஒளிவாயெங்கும் நிற்பான்
வானென்ற, கலையெல்லாம் சந்திரகலையாகும்
மந்தசனி, செவ்வாய் கேது ராகு பாதம்
பானென்ற, பாத இதில் இவரிருப்பார்
படை வராதி வரமீதில் பார்ப்பாரையா
ஆ னென்ற இவரையல்லோர் எடுத்துக்கொண்டு
அரகரா, மவுனியது வருவார் காணே. (627)

காணப்பா, முதல் பட்சம், புதனுடைய பார்வை
கவிவராதவருக்கு இருபத்தஞ்சில்... ... ...
மாணப்பா, மண்டலங்களெல்லா மொன்றாய்
அதிபதியாய் அரசன், வானத்தின் பேரேக் கேளு
மூணப்பா, முப்பதிலே இராசயோகம் செய்வான்
முடித்த, முப்பூ முப்பத்தஞ்சில் யோகியாவான்
ஊணப்பா, நாற்பதுக்குள் ஞானவானாகி
உறுதிப்பட சாயுச்சியம் பெறுவர் தானே. (628)

பெறுவதற்கு, சிவதீட்சை, சத்தி தீட்சை
பிராணா யாமம், மூலகணேச தீட்சை
இறுவதற்கு, என்னாளும், இது மூன்றும் பெற்று
இதன் பிறகு தசதீட்சை சித்தியாவான்
வருவதற்கு முன்னம், கணேசனனாதியோகம் செய்து
வாழ்வான் அதிக சித்தும் பெற்று
எருவதற்குக் கர்த்தரிடம் தரிசிப்பான் பாரு
இருப்பார்கள், கோடானுகோடியுகங் காணே. (629)

## சிலந்தியின் பெயர்கள்

தானான, புலத்தியனையா, கேளு
தர்மபுத்தி, பேர்களிடதன்மை பாரு
ஏனான, லேகி[1], தங்கி, ரதமென்றும்
இயம்பினோம், மனோதயமென்றும் பேரு
வானான, தகித மென்றும்[2], வாமத்துக்குப் பேரு
வளமான, பூதரகித மென்றும் பேரு
ஆனான, வாத மந்தமென்றும் பேரு
அடவான, சேனைக் கிராதமென்றும்
வசனித்தோமே. (630)

(உரை:) புலத்தியரே, சிலந்தியின் பெயர்களைக் கேட்கவும். லேகி, தங்கிரதம், மனோதயம், தகிதம், வாமம், பூதரகிதம், வாதமந்தம், சேனைக்கிராதம் என்பன எட்டுப்பெயர்கள்.

## கருவண்டின் பெயர்கள்

வசனித்த, கட்டான காலென்றும் பேரு
வளமான, காரும்பதி[3], யென்றும் பேரு
மசனித்த, வாடொங்கி[4] தந்தூரூமாபதி
மகத்தான, அந்தண[5] மென்றதற்குப் பேரு
அசனித்த, வலங்கித[6] மென்றதற்குப் பேரு
அருளினோம், தேவபூதமென்றதற்குப் பேரு
துசனித்தோம்[7] மாத கரூபி யென்றும் பேரு
துதிசெய்தோம், நன்றாகக் கருவண்டின் பேரே. (632)

(உரை:) கட்டானகால், காரும்பாதி, வாடொங்கி தந்தூரூமாபதி, அந்தணம், வலங்கிதம், தேவபூதம், மாதகரூபி என்ற எட்டுப்பெயர்கள் கருவண்டுக்குண்டு.

---

1. மூலகி, 2. தவசிதா, 3. நகாரும், 4. வாடோஙங்க, 5. வந்தனம், 6. கரூபி, 7. இவ்வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

குறிப்பு: பாடல் 626 முதல் 628 வரை சோதிடம்பற்றி கூறப்பட்டுள்ளது. பாடல்629ல் பல்வேறு தீட்சைகள் கூறப்பட்டுள்ளன.

## இந்திர கோபத்தின் பெயர்கள் (ஈயல்)

வண்டான, வனமாறு [1] தம்பலப்பூச்சி யென்றும்
வளமான,சிவகுக்க மென்றும் பேரு
அண்டான, ரத்தங்கி [2] தமென்றும்
அருளினோம், வேந்தர் படையென்றும் பேரு
நண்டான, பட்டுடையாதி யென்றும் பேரு
நல்ல காமேதகமென்றதற்குப் பேரு
கண்டான, கனவாதி [3] பமென்றும் பேரு
கருவான, இந்திர கோபமதற்குப் பேரே. (632)

(உரை:) வனமாறு, தம்பலப்பூச்சி, சிவகுக்கம், ரத்தங்கிதம், வேந்தர்படை, பட்டுடையாதி, காமேதகம், கனவாதியம் என்ற பெயர்கள் எட்டும் இந்திரகோபப் பூச்சியின் (ஈயல்) பெயர்கள்

## கருங்குளவியின் பெயர்கள்

கருவான, லிங்கிதராத மென்றும்
கதிர் செங்கை ஒளிதமென்று மதற்குப் பேரு
அருளான [4], கையொத்த நாலி வாடி
ஆரென்று, மடவான மடக்கனிவா யென்றும் பேரு
எருதுவான [5], வெடையந்தக [6] மென்றும் பேரு
இயம்பினோம், முருநடை பூதி [7] யென்றும் பேரு
வருவான, ஆராட மங்க [8] மென்றும் பேரு
வகையான, கருங்குளவியதற்குப் பேரே. (633)

(உரை:) லிங்கிராதம், கதிர், செங்கை, ஒளிதம், நாலிவாடி, மடக்கனிவாய், விடையந்தகம், முருநடைபூபதி, ஆராடமங்கம் என்ற எட்டுப்பெயர்கள் கருங்குளவியின் பெயர்கள்.

---

1. மருதந்ததந்தம், 2. சங்கீதம், 3. வாதிதீபம், 4. வருளான, 5.வருவான, 6. விடையந்தகம், 7. சிறுநடை, 8. வாராட.

## செங்குளவியின் பெயர்கள்

வகையான, காவிவாசம், கடுப்புத் தோன்று[1] வானென்றும்
வசமான, மேதையந்தமென்றும் பேரு
முகையான[2], மொகத்தாருட மென்றும் பேரு
மூதண்ட முடுங்கன[3] லென்றும் பேரு
மகையான, விப்பரசங்க மென்றும் பேரு
மருளான, கொட்டு விசக்காலியென்றும் பேரு
அகையான, ஆகாமாதகமென்றும்[4] பேரு
அடவான[5], செங்குளவியதற்குப் பேரு. *(634)*

*(உரை:)* காவிவாசம், கடுப்புத்தோன்றுவான், மேதை யந்தம், மொகத்தாருடம், மூதண்ட முடுங்கனல், விப்பரசங்கம், கொட்டுவிடக்காலி, ஆகா மாதகம் ஆகிய எட்டுப்பெயர்கள்.

## சுழல்வண்டின் பெயர்கள்

குளவியதா, நீர்ச்சுழலவள், நிலை பெற்ற
கூரான[6] சல சுழலுள்ளோ ளென்றும் பேரு
கொளவி சதாம்[7], கொங்கை பவனி[8] தானென்றும்
கணித மென்ற, சராசரதாங்கி யென்றும்
களவியதாம், தண்ணீர்க் கரை தானென்றும்
கலைபவனி[9] வருவானென்றதற்குப் பேரு
நளிவியதான, நடனச் சுழலாளென்றும்
நளினமென்ற, சுழல் வண்டிதற்குப் பேரே. *(635)*

*(உரை:)* நீர்ச்சுழலவள், சலச்சுழலவள், கொளவி, சதாம், கொங்கை பவனி, சராசரதாங்கி, கலைபவனி வருவான். நடனச்சுழலாள் என்ற எட்டுப்பெயர்கள். சுழல் வண்டுக்கு உண்டு.

---

1. கெடி, 2. வரசமான, 3. முனதி, 4. செங்கனல், 5. வாகா, 6. கூறான, 7. யதாம், 8. கங்கை, 4. மதலை.

## திகைப்பூச்சியின் பெயர்கள்

வண்டினமாந்தி, மயக்கி, புத்தி மந்தமென்றும்
வசனித்தோம், குணம்பாழுடன்[1],
அடையவங்கமென்றும்
நண்டினமா, நாலடமஞ்சினென்றும்
நலமான, ஒட்டத்தாலிட[2] னென்றும் பேரு
ஒண்டின, மாமேரு புலியுடையோனென்றும்
உற்பவித்தோம், சத்தவளைய 3 னென்றும் பேரு
அண்டினமா, மகவெட்டுப்[4] பேருஞ்சொன்னோம்
அருளினோம், திகைப்பூச்சி[5] யதற்குப் பேரே. (636)

(உரை:) மாந்தி, மயக்கி, புத்திமந்தம், நாலடமஞ்சி, ஒட்டத்தாவி, உடையாள், சத்தவளையம், புலிஉடையான் என்பனவாம்.

## முட்டைச்சிலந்தியின் பெயர்கள்

பேரான முடக்கனி[6] வழியென்றும் பேரு
பேசும் மூடாதியந்த மென்றும் பேரு
பாரான, வரஒளி[7], பாசப்பதிக்கனி, மாடன்
அருளினோம், ரேகையுடையோ னென்றும்
சேரான, சடந்தாரிசை[8] யென்றும் பேரு
சீரான, முட்டைகிலோதமென்றும்
மாரான, மண்டமாருதியென்றும்
அருளினோம், முட்டை சிலந்தியின் பேரே. (637)

(உரை:) முடக்கனிவழி, மூடாதியந்தம், வரஒளி, பாசப்பதிக்கனி மாடன், ரோகையுடையோன், சடத்தாரிசை, முட்டைகிலோதம், மண்டைமாருதி என்று எட்டுப்பெயர்கள் முட்டை சிலந்தியின் பெயர்கள்.

---

1. பழு, 2. தாளியன், 3. சக்தி, 4. மாகி, 5. மந்திகை, 6. குழு, 7. வமஒளி, 8. சிடத்தாரிசை

### ஈயின் பெயர்கள்

முட்டையென்ற, ஓரெழுத்தா(ம்) ஈயென்றும்
ஓகோகோ, வாரி[1] யான வனமாலென்றும் பேரு
மட்டையென்ற, சரத்துடையா னென்றும் பேரு
மடவான, மந்திரவாதி யென்றும் பேரு
மட்டையென்ற அனந்துடையா[2] னென்றும் பேரு
மகத்தான, வெங்குமிருப்புழுகு[3] என்றும் பேரு
சட்டையென்ற சன்னதம் கொள்வாளென்றும் பேரு
சமர்த்தான பேரெட்டு, ஈயின் பேரே. *(638)*

(உரை:) ஈ என்ற ஓரெழுத்து, வனமால், சரத்துடையான், மந்திரவாதி, அனந்துடையான், வெங்கு, இருபுழுகு, சன்னதம் கொள்வான் என்ற எட்டுப்பெயர்கள் ஈக்குண்டு.

### கொசுவின் பெயர்கள்

சமர்த்தென், சட்டைப்புடும்,கன்றாவில் சூழ்ோன்
சார்வான திழவறு மங்கமென்றும் பேரு
பமத்தானப் புரைதாண்டிடுவாளென்றும் பேரு
புகழான, வரை கடந்தாதி யென்றும் பேரு
டமத்தான[4], படை முறிவாளென்றும் பேரு
பந்தியங்கள் கூறு வாளென்றும் பேரு
நமத்தான, பட்சயமாதரென்றும் பேரு
நாம் சொன்னோம், கொசுவதற் கெட்டுப்
பேரே. *(639)*

(உரை:) சட்டைப்புடு, கன்றாவில் சூழ்ந்தோன், திழவறு மங்கம், புரைதாண்டிடுவாள் வரை கடந்தாதி, படைமுறிவாள், பந்தியங்கள்கூறுவாள், பட்சய மாதர் என்ற எட்டுப்பெயர்கள் கொசுவுக்குண்டு.

---

1. வரி, 2. விந்துடையான், 3. பாழ், 4. பமத்தான.

## பசுவின் பெயர்கள்

அனேக மென்ற வரவு தயங்கம், அக்கராக்கனியா[1]
ளென்றும்
அமுர்த மூட்டுவாளென்று மதற்குப் பேரு
பனேக மென்ற, பாலமுர்தக்கனியென்றும் பேரு
பன்மை[2] பெறு, காம சுந்தர[3] மென்றும் பேரு
அனேக மென்ற, வாமத்துடையாளென்றும் பேரு
வளமான, வல்லோர்க்கனிவாளென்றும் பேரு
அனேகமென்ற, எல்லாப் புகழுடையாளென்றும்
இயம்பினோம், நன்றாகப் பசுவதுவின் பேரே. *(640)*

*(உரை:)* வரவு தயங்கம், அக்கராக்கனியாள், அமுர்த மூட்டுவாள், பாலமிர்தக்கனி, காமசுந்தரம், வாமத் துடையாள், வல்லோர்க்கனிவாள், எல்லாப் புகழுடையாள் ஆகிய எட்டுப்பெயர்கள் பசுவுக்குண்டு.

## எருமையின் பெயர்கள்

இயம்பினோம், மேதை, பெருந்தாளிச னென்றும்
இயல்பான, வேமநாருதை[4] யென்றும் பேரு
மயம்பினோம், ஆயிரமாளிகையென்றும் பேரு
மகத்தான் பேயைப்பிடுங்கியரென்றும் பேரு
புயம்பியதோர்[5] பூதலாஞ்சயனென்றும் பேரு
புகழான, காமுகன், கள்ள னென்றும் பேரு
சயம்பினதோர் சாணவாகட[6] மென்றும் பேரு
சங்கையில்லா, எருமை என்று மதற்குப் பேரே. *(641)*

*(உரை:)* மேதை, பெருந்தானிசன், வேமநாருதை, ஆயிரமாளிகை, பேயைப் பிடுங்கியர், பூதவாஞ்சியம், காமுகன், கள்ளன், சாணவாகடம் என்பன எருமையின் பெயர்கள்.

---

1. ஊகனியாள், 2. மன்மை, 3. மகசுந்தரம், 4. வேமனுருதை, 5.பயம்பிதோர், 6. சாணத்தவாக

### வெள்ளாட்டின் பெயர்கள்

எண்டமென்ற, நாடகக்கரிவாள், நீட்டுக்கதியோன்[1]
இயல்பான, அன்னத்த முதுடை யென்றும்
அண்டமென்ற, வாகைக் குழலானென்றும் பேரு
அடகான, எல்லோருமந்தகனென்றும் பேரு
கண்டமென்ற, வனக்கரி மாஎன்றும் பேரு
மருவான, சின்ன சிற்கருவென்றும் பேரு
நண்டமென்ற, மெகத்தழூவானென்றும் பேரு
நாட்டினோம், வெள்ளாட்டினதீதப் பேரே. *(642)*

*(உரை:)* நாடகக்கரிவாள், நீட்டுக்கதியோன், அன்னத்த முதுடை, வாகைக் குழலாள், மந்தகன், வனக்கரிமா, சின்னசிற்கரு, மெகத்தழூவான் என்ற எட்டுப்பெயர்கள் வெள்ளாட்டுக்குண்டு.

### காட்டெருமையின் பெயர்கள்

அட்டினமாதுண்மை, துக்களமென்றும் பேரு
அடவான, வெட்டுடையாதி, வட்டக்கோடை
நாட்டினமாம், வனந்திரிவாள், ஆயரென்றும்[2] பேரு
நல்லகாட்டோடங்கமென்றும் பேரு
மாட்டினமா, மாடகத்ததிபதியென்றும் பேரு
மகத்தான, சேனையிட கருவென்றும் பேரு
தாட்டினமா[3] மடிப்பை, ஆகதமென்றும் பேரு
அருளினோம், காட்டெருமையதீதப் பேரே. *(643)*

*(உரை:)* ஆட்டினமாதுண்மை, துக்களம், வெட்டுடையாதி, வட்டக்கோடை, வனந்திரிவாள், ஆயம், காட்டோடங்கம், மாடகத்ததிபதி, சேனையிட கரு, மடிப்பை, ஆகதம் என்பன காட்டெருமையின் பெயர்கள்.

---

1. தீட்டுக்கியோன், 2. ஆயம், 3. காட்டினமா.

பாடல் 642 அந்தாதி அமைப்பில் அமையவில்லை.

**கழுதையின் பெயர்கள்**

பெருமையென்ற தேசி, மாதவரென்றும் பேரு
மியவான, பெருவாயனென்றும் பேரு
விருமையென்று, விலாட புரணிம[1] மென்றும் பேரு
வேசிவிடையானென்றதற்குப் பேருண்டாச்சு
அருமையென்ற, வானத்தாசி, காசிகுடபதியென்றும் பேரு
அதீதமென்ற வண்ணானிடத்தி[2] யென்றும் பேரு
கருமையென்ற சகட்டுக்காட்டி, சப்பாவிளையென்றும் பேரு
சுருதிபெற்ற கழுதையினதீதப் பேரே. (644)

(உரை:) தேசி, மாதவர், பெருவாயன், விலாட புரணியம், வேசி, விடையான், வானத்தரசி, காசிகுடபதி, வண்ணானிடத்தி, சகட்டுக்காட்டி, சப்பாவிளை என்பன ஓலமிடும் கழுதைக்குண்டான பெயர்கள்.

**கலைமானின் பெயர்கள்**

அதீதமென்றலோ சமாபதி[3] யென்றும் பேரு
திருவொரு மானிடையாளென்[4]றும் பேரு
பதீதமென்ற வேகந்திரிவானென்றும் பேரு
இதகமென்ற, ஒட்டக்கா[5], கரிவளென்று[6] பேரு
கெதீதமென்ற, பாய்ந்துட நங்கையாம், சந்தழகி யென்றும் பேரு
எரிக்குற்றக்காரியென்றதற்குப் பேரு
ததீதமென்ற, தவம்புரி மாதரென்றும் பேரு
தருவென்ற கலைமானதற்குப் பேரே. (645)

(உரை:) சமாபதி, மானிடையாள், வேகந்திரிவான், ஒட்டக்கா, கரிவள், பாய்ந்துட நங்கை, எரி குற்றக்காரி, தவம்புரிமாதர் என்ற எட்டுப்பெயர்கள் கலை மானினுடையது.

---

1. பாணிமம், 2. வெண்ணுனி, 3. வெச்சமாபதி, 4. லோட்டக்கா, 5.ஒட்டவோ, 6. கரிப்பெள்.

## வேங்கைப்புலியின் பெயர்கள்

தருவான பூதவராளி தஞ்சண்டம் அறுதக்கள்[1]
தருவான, வேங்கை ஊராக மென்றும் பேரு
தருவான, ஆட அத்தாளி யென்றும் பேரு
நலமான நனிராட ஆடக் கோலமென்றும் பேரு
மருவான மாறுவாணியென்றும் பேரு
மகத்தான நரியுட ஆட மென்றும் பேரு
விருமான சிறுவாணியென்றும் பேரு
வசனித்தோம் புலியினிட அதீதப்பேரே. (646)

(உரை:) பூதவராளி, தஞ்சண்டம், அறுதக்கள், வேங்கை, ஊராகம், ஆட அத்தாளி, நனிராட ஆடகோலம், சிறுவாணி, மாறுவாணி, நரியுட ஆடம் என்பன வேங்கைப்புலியின் பெயர்கள்.

## சிம்மத்தின் பெயர்கள்

வேங்கையதாம், லோகமங்கை யென்றும்
விளங்கினோம், ஆமையோடாங்கல்[2],
வேலாயுதமான
வேங்கையதாம், வேங்கிக் குறித்தோனென்றும் பேரு
விவேகமென்றவர், தங்கமென்றும் பேரு
மங்கையமாம்[3], தர்மனோதயமா னென்றும் பேரு
மடவான, மாசி, விளக்கொளி யென்றும் பேரு
செங்கையதாம், சிங்கநாறு[4] என்றும் பேரு
செப்பினோம், சிம்மத்தினதீதப் பேரே. (647)

(உரை:) லோகவாம சங்கை, ஆமையோடாங்கல், வேலாயுதம், வேங்கிக்குறித்தோன், விவேகம், தங்கம், தர்மனோதயம், மாசி, விளக்கொளி, சிங்கநாறு என்பன சிங்கத்தின் பெயர்கள்.

---

1. மாறுததக்கள், 2. அடங்கநகல், 3. மாந்தர், 4. நாறுதம்.

646ம் பாடலில் உள்ள 5, 6 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் உள்ளன.

## செந்நாயின் பெயர்கள்

சிம்மமென்ற வன்னாகக்[1] கருணை கருணை
காட்டு வாழ் புங்கம், திருபாவநாடக மென்றதற்குப்பேரு
மய்ய மென்ற ஆடிவாலதீதமென்றும் பேரு
மியம்பினோம், தபமேத[2] மென்றும் பேரு
மம்மமென்ற★ மாடி வாதீதமென்றும் பேரு
தோன்றும் வாரிசையென்று மதற்குப் பேரு
கம்பமென்ற கண்ணாயருடமென்று[3] பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோம், செந்நாயின்
பேரே. *(648)*

*(உரை:)* செந்நாயின் பெயர்கள் வன்னாகக் கருணை, கருணை காட்டு வாழ் புங்கம், திருபாவநாடகம், ஆடிவால் அதீதம், தபமேதம், கண்ணா அருடம், மாடி வாதீதம், வாரிசை என்பனவாம்.

## கருநாயின் பெயர்கள்

கருணையென்ற, காளமோதகனம், கருவடிதாச மென்றும் பேரு
இருவான[4], நிலக்கரருட மென்றும் பேரு
அருணையென்ற, நெஞ்சைப் புகவா[5] ளென்றும் பேரு
அருளினோம், சந்திரோதய மாட[6] மென்றும் பேரு
வெருணையென்ற வஞ்சன மாலியென்றும் பேரு
வது பாரிட மென்றதற்கதீதப் பேரு
மருணை யென்ற அனந்தவேர் புயமென்றும் பேரு
மடவான, கரு நாயினதீதப் பேரே. *(649)*

*(உரை:)* கருநாயின் பெயர்கள், காளமோதகனம், கருவடி தாசம், நிலக்கரருடம், நெஞ்சைப் புகவான், சந்திரோதய மாடம், வஞ்சனமாலி, வதுபாரிடம், அனந்தவேர், புயம் என்பன.

---

1. வண்ணாக்கரு, 2. மந்தபம், 3. கண்ணு, 4. கருவான, 5. புரிவான், 6.திரேதயம்.

★இவ்வரிகள் கந்தசாமி முதலியார் பதிப்பு செய்த நூலிலிருந்து பெறப்பட்டன.

## பூனையின் பெயர்கள்

வானமாதுருவானை[1], மலடிக் காணுவான்
மகத்தான, பாவரோசனை[2] யென்றதற்குப் பேரு
மானமாம், பகத்தி[3], சனமாதென்றும் பேரு
பரிவான, வாதி வங்களமென்றும் பேரு
ஆனமாம், கோரநீடென்றும் பேரு
அரகரா, சாகாதயமென்றும் பேரு
ஞானமா, மாலாதுரிசினமென்றும் பேரு
நலமாகச் சொல்லிவிட்டோம், பூனையதின்
பேரே. (650)

(உரை:) வானமாதுருவானை, மலடிக் காணுவாள், பாவரோசனை, பகத்தி, சனமாது, வாதிவங்களம், கோரநீடு, சாகாதயம் என்ற எட்டுப்பெயர்கள் பூனைக்குண்டு.

## குதிரையின் பெயர்கள்

நலமென்ற, வேமப்பரிதமென்றும் பேரு
நாக்கிதமாம்[4], இருவானிதம்[5],
மேகப்புரவதாமென்றும் பேரு
வலமை[6] யென்ற கேசரமாருத மென்றும் பேரு
வளமான புரவாசப்பாய[7] மென்றும் பேரு
அலமையென்ற, பாயுங்கவுரி[8] யென்றும் பேரு
அருளினோம், காரி, விகாரி யென்றும் பேரு
கலமை யென்ற, கங்கொடியம்[9] என்றதற்குப் பேரு
கருதுகை யென்றதொரு, குதிரையின் பேரு. (651)

(உரை:) வேமப்பரிதம், நாங்கிதம், இருவானிதம், மேகப்புரவாதம், கேசரமாருதம், புரவாசப்பாயம், பாயுங்கவுரி, காரி, விகாரி, கங்கொடியம் என்பன குதிரையின் பெயர்கள்.

---

1. வாளான, 2. ரோணை, 3.மகத்தி, 4. நாக்கிதமாமி, 5. இருவாரிதம், 6. அலமை, 7.புறவாசபாயம், 8. பாங்கொரி, 9. ககங்கம்.

## யாளியின் ★ பெயர்கள்

கருது தைய மென்றி ராயன், அமையோர் பாரீர்
கருவாத சகமென்றுமதற்குப் பேரு
வருதையாம், ஆராட சதமென்றும் பேரு
வாலமாடிக மென்று மதற்குப் பேரு
அருதையாம், நடசபாரிடதமென்றும் பேரு
அருளினோம், செம்படாரிக மென்றும் பேரு
புருதையா, மடாதஞ்சமென்றும் பேரு
மாவடி, வாராணியென்றும், யாளியின் பேரே. *(562)*

*(உரை:)* தையம், என்றிராயன், கருவாத சகம், ஆராடாதம், வாலமாடிகம், நடசபாரிடதம், செம்படாரிகம், மடாதஞ்சம், மாவடி, வாராணி என்பன யாளியின் பெயர்கள்.

## யானையின் பெயர்கள்

யாளிமத மிருக [1] மென்று மதற்குப் பேரு
அடவான கசகம் [2], காடந்தும்பி, பித்துடாணை [3]
காளி, கரி, பதபாரி யென்றும் பேரு
கருதுகிறோம், விக்கினவினாச [4] மென்றும் பேரு
மாளி கணவதிரேவு கயமென்றும் பேரு
மகத்தான வருக்காசனென்றும் பேரு
வாளி [5] யத்திராதாளி [6] என்றும் பேரு
வசனித்தோம் ஆனையுட அதீதப் பேரே. *(563)*

*(உரை:)* யாளிமதமிருகம், கசகம், காடந்தும்பி, பித்துடாணை, காளி, கரி, பதபமாரி, விக்கின வினாசகம், கணவதி, ரோவு கயம், வருகாசம், வானித்திரா தாளி என்பன யானையின் பெயர்கள்.

---

★ இவ்விலங்கு கற்பனையான ஒன்றாதல் கூடும்.

1. மேரு, 2. கேசங்காட, 3. துடணை, 4.வினாசகம், 5. காளி, 6.காளி.

## ஒட்டகத்தின் பெயர்கள்

அதீதமென்ற,நேர்வளமென்றும் பேரு
வசனித்தோம் கழுத்தோடானி[1] யென்றும் பேரு
அதீதக்க, மனோதய அழகிணியென்றும் பேரு
அதீதப்பேர், வட்ட சிங்கித[2] மென்றும் பேரு
நதீத, வாமத்துடரியாமென்றும் பேரு
நறுவொரு, மார்புளப்பனென்றுமதற்குப் பேரு
கதீத[3], முழிக் கண்ணாடித்தீ[4] யென்றும் பேரு
கருதவென்றால், கழுநுழையா, ஒட்டையதன்
பேரே.*(654)*

*(உரை:)* நேர்வளம், கழுத்தோடாளி, மானோதயம் அழகிணி, வட்டசிங்கிதம், வாமத்துடரியாம், மார்ப் புளப்பன், முழிக்கண்ணாடித்தீ என்பன ஒட்டகத்தின் பெயர்கள்.

## குரங்கின் பெயர்கள்

கழுத்துடனாம்[5], ஆதி[6] சங்கமென்றும்[7] பேரு
சகல கராவண மோத மென்றும் பேரு
அழுத்துடன், அரா மலாதிக மென்றும் பேரு
அகலவாலி கரோத மென்றதற்குப் பேரு
நழுத்துடன், விட்ணுமாய ரச[8] மென்றும் பேரு
நலமதியோன் மறுபுற மென்றதற்குப் பேரு
மழுத்துடன் மாலை மாடப்புரவி[9] யென்றும் பேரு
மாளணாக்கா[10], அறிந்திடு[11], குரங்கின் பேரே.*(655)*

*(உரை:)* கழுத்துடனாமதி, சங்கம், கராவண மோதம், அராமலாதிகம், அகலவாலி, சுரோதம், விட்ணுமாயரசம், நலமதியான், மறுபுறம், மாலை மாடப்புரவி என்பன குரங்கின் பெயர்கள்.

---

1. கழுததாடாரி, 2. வட்டச்சிங்கிதம், 3. நதீத, 4. கதீ, 5. கறுத்து, 6.மாதி, 7. சம்புபரித, 8. மாயசம், 9.மாடப்பிறவி, 10. நாக்கா, 11.ஈந்திடு.

## அணிலின் பெயர்கள்

குரக்கான, அணியாத்தரங்க னென்றும்[1] பேரு
கூறியே[2], மாடுன்னிபாசமென்றும் பேரு
அரங்கான[3], அவரோலாலைய மென்றும் பேரு
அக்காடச் செல்வி[4] கண்ட னென்றும்
வாங்கான, அமரோத்திரச மென்றும் பேரு
வசனித்தோம், வேதியன[5] வீகமென்றும் பேரு
தரங்கான வீறு, தீங்கனிப்பூலை[6] யென்றும் பேரு
நலமான அணிப்பிள்ளை யதற்குப் பேரே. *(656)*

*(உரை:)* அணியாத்தரங்கன், மாடுன்னிப்பாசம், அவரோவாலையம், அக்காடச்செல்வி, கண்டன், அமரோத்திரசம், வேதியன், வீகம், நரங்கான வீறு, தீங்கனிப்பூலை என்பன அணிலின் பெயர்கள்.

## பச்சோந்தியின் பெயர்கள்

பேரான, பேரெல்லாம் மணிகளாகப்
பேசுகிறோம் புலத்தியனே பேணிப்[7] பாரு... ...
ஆரான, வச்சிந்தம், செந்திரதமென்றும் பேரு
மடவான, குந்திக்கரையோ னென்றும் பேரு
நாரான, மூத்தவாரை, சந்திரப்பட்சை[8] யென்றும் பேரு
நாம் சொன்னோம், சார்வாழிவாச[9] மென்றும் பேரு
மூரான, முசுடமறியோனென்றும் பேரு
வாகடப் பாரியதற்குப் பேரே. *(657)*

*(உரை:)* வச்சிந்தம், செந்திரதம், குந்திக்கரையோன், மூத்தவாரை, சந்திரப்பச்சை, சார்வாழிவாசம், முசுடமறியோன், வாகடப்பாரி என்பன பச்சோந்தியின் பெயர்கள்.

---

1. கறங்கன், 2. கூறினோம், 3. சுரங்கான, 4. அக்காச், 5. வரங்கான, 6. அளவீகம், 7. பேசி, 8. பட்சை, 9. வாளில் ரசம்.

**ஓணானின் பெயர்கள்**

ஓந்தான, ஒருபிடி வாயன், ஆலத்த கண்டன்
ஓகோகோ, கருமாடக்காரியென்றும் பேரு
காந்தான, தாய் தரா[1] மென்றும் பேரு
கருவான, தாலைய கண்டமென்றும் பேரு
சந்தானத்தரு, மடக்கனியானென்றும் பேரு
தலை நீட்டராசனென்றும் பேரு
வந்தானவழி வலிப்புடையோனென்றும் பேரு
மகத்தான, பேரிதற்கு ஓணான் பேரே. *(658)*

*(உரை:)* ஒருபிடி வாயன், ஆலத்தகண்டன், கருமாடக்காரி, காந்தான தாய், தரா, தாலைய கண்டம், சந்தானத்தரு, மடக்கானியான், தலை நீட்டராசன், வழி வலியுடையோன் என்பன ஓணானின் பெயர்கள்.

**பல்லியின் பெயர்கள்**

நதிவான மல்லிதாசி, வல்லிராசன்
நல்லிசடராச[2] மானென்றதற்குப் பேரு
அதிலான, செல்வலிசபோத[3] மென்றும் பேரு
அருளான, செண்பகவல்லியென்றும் பேரு
முதிலான, முதிரை மண்டமென்றும் பேரு
முற்க மென்ற[4], வாதிரையோனென்றும் பேரு
மதிவான, மாலைவரசெட்டியென்றும் பேரு
மகத்தான, பல்லியதற்கதீதப் பேரே. *(659)*

*(உரை:)* மல்லிதாசி, வல்லிராசன், நல்ல சடராசமான், செல்வலிசபோதம், செண்பகவல்லி, முதிரை மண்டம், முற்கம், வாதிரையோன், வாதியரையோன், மாலைவர செட்டி என்பன பல்லியின் பெயர்கள்.

---

1. தாமென்று, 2. சடரரச, 3. விசப்போ்த, 4. மூர்க்கம்.

659 ம் பாடலில் பல்லியின் பெயர் கூறப்பட்டுள்ளது. இது அந்தாதி அமைப்பில் இல்லை.

### எலியின் பெயர்கள்

மகத்தானகட்டிமாதரென்றும் பேரு
மடவான கண்டுண்மல்லி[1] யென்றும் பேரு
அகத்தான, மேதிசைக் குழலாளென்றும் பேரு
அந்தண அரூபியென்று மதற்குப் பேரு
மகத்தான, அவ்வரோதய[2] மென்றும் பேரு
மாத கரூபிதமென்றுமதற்குப் பேரு
நகத்தான, மான சராசியென்றும் பேரு
நாம் சொன்னோம், புலத்தியனே, எலியின்
பேரே. *(660)*

*(உரை:)* கட்டிமாதர், கண்டுண்மல்லி, மேதிசைக் குழலாள், அந்தண அரூபி, அவ்வரோதயம், மாத கரூபிதம், மானராசி என்பன எலியின் பெயர்கள்.

### பெருச்சாளியின் பெயர்கள்

இனமென்ற, வாளியங்க[3] ளென்றும் பேரு
இயல்பான, வயிரக்கனிந்த னென்றும் பேரு
அனமான, வாரிழைவல்லி,அம்பிகை குழலாள்
அலதாசாலி யென்று மதற்குப் பேரு
மகத்தான, மதுரை மாணிக்கமென்றும் பேரு
மகத்தான, கேசமேரு[4], விக்களமென்றும் பேரு
நகத்தான, சுரோணிதமென்றதற்குப் பேரு
நளின மென்ற, பெருச்சாளியதற்குப் பேரே. *(661)*

*(உரை:)* வாளியங்கள், வயிரக்கனிந்தன், வாரிழை வல்லி, அம்பிகை குழலாள், அலதாசாலி, மதுரை மாணிக்கம், கேசமேரு, விக்களம், சுரோணிதம் என்பன பெருச்சாளியின் பெயர்கள்.

---

1. கண்டுண்வல்லி, 2. அவரோதை, 3. கங்கன், 4.சேசமேரு.

குறிப்பு: பச்சோந்தி, ஓணான் என்பன ஓந்தியின் வகைகளைப் பிரித்துக் காட்டுகின்றன. அச்சுப்புத்தகத்தில் இப்பாடல் 675 என மாறியுள்ளது.

## அட்டையின் பெயர்கள்

சாளியென்ற, நீறுதடன்,வாழ்த்திடில்[1], கடிகன்னி[2]
சார்வான, சன்றுப்புடுங்கா[3] னென்றும் பேரு
ஆளியென்ற, சத்த நாராச[4] மென்றும்
அடவதன, சதக்கோட்டுவோ னென்றும் பேரு
வாளியென்ற, வதையுடமொடா[5] வந்துடனாதி
வசனித்தோம், புலத்தியனே, அருக்கி[6] யந்த
நாளியென்றும், பேரிதற்கு நன்றாய்ச் சொன்னோம்
நளின மென்ற, அட்டையதற்கதீதப் பேரே. *(662)*

*(உரை:)* கடிகன்னி, சன்றுப் புடுங்கான், சத்த நாராசம், சதக்கோட்டுவான், வாளி, அருக்கி, நாளி என்பன அட்டையின் பெயர்கள்.

## மீனின் பெயர்கள்

அட்டையாம், சலசாதரங்கமென்றும் பேரு
அடவான, சாத்துணிமாதா, சட்டியிலொரியோனை[7]
இரட்டையாம், சகல வாக்குதவி[8] யென்றும் பேரு
வசனித்தோம், வித்த மாதனென்றும் பேரு
நட்டையாம், வீடுண்ண சாயென்றும் பேரு
நவமான காரியம்பலத்தியென்றும் பேரு
மட்டையா, நாவளநோக்கி யென்றும் பேரு
மகத்தான, பேரிதற்கு, மச்சத்தின் பேரே. *(663)*

*(உரை:)* சலசாதரங்கம், சாத்துணி மாதா, சட்டியில் எரியோலை, சகல வாக்குதவி, வித்தமாதர், வீடுண்ணசாய், காரி, அம்பலத்தி, நாவளநோக்கி என்பன மீனின் பெயர்கள்.

---

1. வாழ்த்தி, 2. நிலக்கன்னி, 3. சதைப்புங்கான், 4. சத்தகராசம், 5.மோட்டி, 6. வருக்கி, 7. சாடியிரேரி, வியர்வை, 8. சகலவர்க்கு உதவி.

## கீரியின் பெயர்கள்

மச்சமென்று, தூட்டிய அரசனென்றும் பேரு
மகத்தான, வாலகண்டவரை, முன்கனமென்றும் பேரு
சச்சமென்ற[1] சாபத்தேகிரான[2] சார்விழி நாசம்,
சமத்தான வாரம்[3], மதபாணி யென்றும் பேரு
அட்சமென்ற, வல்லியோரம், கைசேவலம், சித்தி
அருளினோம், மணிப்பிள்ளை[4] யென்றும் பேரு
லட்சமென்ற பேர்களுக்கெல்லாமதீதம் சொன்னோம்
வளமான பேரிதுதான், கீரிப்பிள்ளையின் பேரே.(664)

(உரை:) மச்சம், தூட்டிய அரசன், வாலகண்ட வரை, முன்கனம், சாபத்தே கிரான், சார்விழி நாசம், வாரம், மதபாணி, வல்லியோரம், கை சேவலஞ்சித்தி, மணிப்பிள்ளை என்பன கீரிப்பிள்ளையின் பெயர்கள்.

## நீரின் பெயர்கள்

பிள்ளையாம், பானி,கங்காலயமென்றும் பேரு
பேரான,தண்ணி, வச்சாதி, ரசந்தேவதபவனிதமென்றும் பேரு
அன்னையாம், சலத்தமேவமதென்றும் பேரு
அருளினோம், நிர்க்கச[5] மென்றும் பேரு
வன்னையாம், தடாக கங்கை[6] யென்றும் பேரு
வசனித்தோம், நதி நீர்ப்பானி யென்றும் பேரு
நள்ளையாம், சடாக்காரி யென்றும் பேரு
நாம் சொன்னோம், தடாகமென்ற சலத்தின் பேரே. (665)

---

1. சட்சம், 2. சாபத்தே தீராண, 3.வாலம், 4.மருமணி, 5. நிதசம், 6.தாடாக.

665ம் பாடலில் பானி என்ற இந்திச்சொல் கையாளப்பட்டுள்ளது. இசுலாமியர்களின் ஆட்சிகாலத்தில் இச்சொல் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

(உரை:) பானி, கங்காலயம், தண்ணி, வச்சாதி, ரசந்தேவதபவனிதம், சலத்தமேவமம், நிர்கசவம், தடாக கங்கை, நதி, நீர்ப்பானி, சடாக்காரி, தடாகம் என்பன நீரின் பெயர்கள்.

### மரவட்டையின் பெயர்கள்

சலமான வட்டைச்சரம், அடமாதி லேபம்[1]
சார்வான கண்ட சிரட மென்றும் பேரு
அலமான, பற்சன தேற்க[2] மென்றும் பேரு
அரகரா, தூட தூலமென்றும் பேரு
வலமான வாடை, பிரளம், அங்கப் பிறளி யென்றும் பேரு
வாகான கட்டை, கலுத்தா னென்றும் பேரு
துலமான, தோதகமாய் சொன்னோம் நாமும்,
துதியான மரவட்டையினதீதப் பேரே. (666)

(உரை:) வட்டைசரம், அடமாதிலேபம், கண்டச் சிரடம், பற்சன தேற்கம், தூடதூலம், வாடை, பிரளம், அங்கப்பிரளி, வாகான கட்டை, கலுத்தான் என்பன அட்டையின் பெயர்கள்.

### செய்யான் பெயர்கள்

அதீதமென்ற வயநற்கனதுய்யோன்[3],
கடிவிசந்தானென்றுதான்
அருளினோம், அரிவிசந்தீண்டி யென்றும் பேரு
அதீதமென்று[4], எரியாருடவச[5] மென்றும் பேரு
வளமான, மறுமண்டலிக னென்றும் பேரு
சதீதமென்ற, சகலகலவாஞ்சை[6] யென்றும் பேரு
சத்தபோட மென்றதற்குப் பேரு
சதீதமென்ற குப்பக் கூளியென்றும் பேரு
துருவான, செய்யானென்றதற்குச் சொன்ன
பேரே.(667)

---

1. மடமாதி லேபம், 2. தடம், 3. வயனகன், 4. வதீதம், 5. வம்சம், 6.சககலவா

*(உரை:)* வயநற்களத்துய்யோன், கடிவிசந்தான், அரிவிசந்தீண்டி, எரியாருடவசம், மறுமண்டலிகள், சகலகல வாஞ்சை, சத்தபோடம், குப்பக்கூளி என்பன செய்யானின் பெயர்கள்.

**நல்லபாம்பின் பெயர்கள்**

சொன்னதொரு, நிலப்பாசம், அறக்கனியானென்றும் பேரு
சொல்லிவிட்டோம், அதிவிசந்தீண்டி யென்றும் பேரு
அன்னதொரு, திரும்பாக்கடி[1] யென்றும் பேரு
அடவான வருநங்கனென்றதற்குப் பேரு
வமனதொரு, விசமதிவாரியென்றும் பேரு
வசனித்தோம், பிரம சூராங்க மென்றும் பேரு
மென்னதொரு, பிடியானுழைவிழி[2] தானெ[3] ன்றும் பேரு
பேசினோம் நாகப் பாம்பின் பேரே. *(668)*

*(உரை:)* நல்லபாம்பின் பெயர்கள், நிலப்பாசம், அரக்கனி, அதிவிசந்தீண்டி, திரும்பாக்கடி, வருநங்கன், விசமதிவாரி, பிரம சூராங்கம், பிடியான், உழைவிழிக்கோன் என்பன.

**சாரைப்பாம்பின் பெயர்கள்**

நுடமான, வாலடிக்கண்டன் வடிவான
வைத்துண்மை[4], மற கந்தக் கா[5] ரனென்றும் பேரு
அடமான, வேதத்துடங்க னென்றும் பேரு
அருளினோம், இருமடமாலி[6] யென்றும் பேரு
படமான, மாருதப் பொழியானென்றும் பேரு
பரிவான, மடவாஞ்சை யென்றும் பேரு
வடமான, மாரோதியம்பனென்றும் பேரு
மகத்தான பேரிதற்குச்சாரைப்பாம்பின் பேரே. *(669)*

---

1. திருப்பாடி, 2. பிடியாலுழை, 3. கோன், 4. வைத்தன் நுண்மை, 5. கந்தக்காரன், 6. விருமடமாலி.

(உரை:) வாலாக்கண்டன், வைத்துண்மை, மறகந்தக்காரன், வேதத்துடங்கன், இருமடமாலி, மாருதப்பொழியான், மடவாஞ்சை, மாரோதியம்பன் என்பன சாரைப்பாம்பின் பெயர்கள்.

## பச்சைப்பாம்பின் பெயர்கள்

*பாம்பான செடி மீன், கரோதி, கெத்தைக்கரும்*
*பந்தனென்றும்*
*பன்மைபெறும் பச்சைவடிவாளென்றும் பேரு*
*ஆம்பான வெலையொளி யாதொன்றும் பேரு*
*அருளினோம், ஆதிவசன் நாசி [1] யென்றும் பேரு*
*அரம்பாநத்தப்பரியோ னென்றும் பேரு*
*வளமான திருவடிச [2] நிலமென்றும் பேரு*
*தேரை யென தேசரசன [3] னென்றும் பேரு*
*செப்பினோம், மகாத் தெளிவாய் பச்சைப்பாம்பின்*
*பேரே. (670)*

(உரை:) செடிமீன், கரோதி, கெத்தை, கரும்பந்தன், பச்சைவடிவாள், வெலையொளி, ஆதிவசன் நாசி, நத்தப்பரியோன், திருவடிசநிலம், தேசரசன் என்பன பச்சைப்பாம்பின் பெயர்கள்.

## கருநாகத்தின் பெயர்கள்

*பச்சையாம் [4] காலகண்டம், கருவாதி இறைஞ்சம் [5]*
*பாடினோம், வருடவாளி [6] யென்றதற்குப் பேரு*
*அச்சையா, மேகரஞ்சம், எட்டையாக [7] க்கடிப்பான்*
*அடவான, சஞ்சீவிக்கண்டமென்றும் பேரு*
*கச்சையாம், கல்கண்டு, அடர்த்திக்காளம் மேரத்தி*
*கருணைபெறச்சொல்லிவிட்டோம், கருவுள்ளோர் கேள்*
*நச்சையா, மாமுனிவன் சொன்னமொழி பாரு*
*நலமான, கருநாகத்தினதீதப் பேரே. (671)*

---

1. அந்திவசனாதி, 2. தேரியோ, 3. வசகில, 4. தேசாரம், 5. பச்சைபாம், 6. வாதிரை இறைஞ்சிரை, 7. வாருட, 8. எட்டையா.

(உரை:) காலகண்டம், கருவாதி, இறைஞ்சம், வருடவாளி, மேகரஞ்சம், எட்டுயாகக்கடிப்பான், சஞ்சீவிக் காண்டம், கல்கண்டு, அடத்திக்காளம் என்ற எட்டுப் பெயர்கள் கருநாகத்தின் பெயர்கள்.

## மூஞ்சுறுவின் பெயர்கள்

நலமான [1] உத்திரன், நங்கசம், ஓர் குயிலண்ட மென்றும் பேரு
நளினமென்றவோர், துறையானென்றும் பேரு
அவமான, மதுரை வாளியை [2] சனவென்றும் பேரு
அருளினோம், கோயில் குடியா னென்றதற்குப் பேரு
வலமான, தேவாலைமாதரென்றும் [3] பேரு
வளமான, கனவிச்சாடமென்றும் பேரு
பலமான, தேவருணனென்றும் பேரு
பாடினோம், மகாத்தெளிவாய் துஞ்சலியின்
பேரே. *(672)*

**(உரை:) உத்திரன், நங்கசம், ஓர் குயிலண்டம், துறையான், மதுரைவாளியைசன், கோயில் குடியான், தேவாலைமாதர், கனவிச்சாடம் தேவருணம் என்பன மூஞ்சுறுவின் பெயர்கள்.**

## முயலின் பெயர்கள்

தெளிவான, உசவோர்க்கமென்றும் பேரு
திருவான, வசக்காரிதம் [4], போது [5] ஒளிவீச்சு
வளவான, பொட்டகக் [6] கறுங்கமென்றும் [7] பேரு
ஆசான அனுயிரென்றுமதற்குப் பேரு
களிவான [8], பாசமுடத்தா சடமென்றும் பேரு
கருவான, பருவண்டப்பூண்டென்றும் பேரு
அளிவான, வாசளி, வாஞ்சி யென்றும் பேரு
அருளினோமதீதப் பேர், முயலின் பேரே. *(673)*

---

1. நிலமான, 2. வாளிசை, 3. மாது, 4. வசகதம், 5. பொது, 6. பொட்ட, 7.கரு, 8. முளத்தவன்.

(உரை:) உசவோர்க்கம், வசக்காரி, போது ஒளி வீச்சு, பொட்டகக்கறுங்கம், ஆசான அனுயிர், பாசமுடதாசடம், பருவண்டம் பூண்டு, வாசளி, வாஞ்சி என்பன முயலின் பெயர்கள்.

### உடும்பின் [1] (தும்பி)யின் பெயர்கள்

முயலான வலரிச போதமென்றும் பேரு
முக்கியமா மலறம்,மாதுராடமென்றும் பேரு
நெசலான, இரட்டைநாதக் கோளியென்றும் பேரு
நிலையான, புடைப்பொன், நாளில் நலிடையாள்
அசலான, மலைவன் வாசியென்றும் பேரு
அடவான மகா மன்னாட மென்றும் பேரு
மசலான [2] சிகரத [3] மோனகத்தாளென்றும் பேரு
பாடினோம், இந்தப்படியும் உடும்பின் [4] பேரே. *(674)*

(உரை:) வலரிச போதம், மாமலறம், மாதுராடம், இரட்டை நாகக்கோளி, புடைப்பொன் நாளில் நலிடையாள், மலைவன், வாசி, மகா மன்னாடம், சிகரதம், மோனகத்தாள் என்பன தும்பியின் பெயர்கள்.

### தேவாங்கின் பெயர்கள்

உ(டு)ம்பான [5] படமாடாக்கனி [6] யென்றும் பேரு
ஓர் மாந்தூங்கி, பவனிவாராடமென்றும் பேரு
அடும்பான, வாலொளி வக்காயென்றும் பேரு
அடவான, வேல் குஞ்சரரேனென்றும் பேரு
நடும்பான, வாயா லெரையுட [7] னென்றும் பேரு
நலமான, முன்பின் தொங்கலென்றும் பேரு
வடும்பான, முடிகீழா வண்ணாளெ [8] ன்றும் பேரு
வசனித்தோம், தேவாங்கின் மகத்தான பேரே. *(675)*

---

1. அச்சு நூலில் உடுப்பு என்று தவறாக உள்ளது, 2.பசலான, 3.சீககத, 4.உடும்பி, 5. உடும்பின், 6. பட்டபாடக்கனு, 7. வாயார வேரை, 8.வன்னளென்றும்.

*(உரை:)* படமாடாக்கனி, ஒருமாந்தூங்கி, பவனி வாராடம், வாலொளி வக்கா, வேல் குஞ்சரேன், வாயாலெரை, முன்பின் தொங்கல், முடிகீழா வண்ணான் என்பது தேவாங்கின் பெயர்கள்.

## நாரையின் பெயர்கள்

மகத்தான, வாராமதிக் கொங்கியென்றும் பேரு
மடிவான, நாராயணிச்சதம், மால் மருத[1] மென்றும் பேரு
அகத்தான, ஆகாசப் பறவை யென்றம் பேரு
அருளினோம், பெரும்புடசாலியென்றும் பேரு
நகத்தான, பிதுரோக மாசி[2] யென்றும் பேரு
நளின மென்ற முனை முதலாயாச மென்றும் பேரு
மகத்தான, முனிவோன், தவசியென்றும் பேரு
வாழ் மயிலே கேள், செவியால், நாரையின் பேரே. (676)

*(உரை:)* வாராமதிக் கொங்கி, நாராயணிசதம் மால் மருதம், ஆகாசப்பறவை, பெரும்புடசாலி, பிதுரோகமாசி, முனை முதலாயாசம், முனிவோன், தவசி என்பன நாரையின் பெயர்கள்.

## கொக்கின் பெயர்கள்

நாரையென்ற, கனிச்சாரி, வக்க வல்லாரி
நல்லதுக்கனாசற்றி, தூதநந்தி[3]
வாரை, என்மதுமராட மென்றும் பேரு
வளமான, வேழையா நெறு[4] தலையானேனென்றும் பேரு
வேரையான, ஓர்கொக்கினடையா[5] னென்றும் பேரு
வயல் சுற்றித் திரிவா னென்றதற்குப் பேரு
கூரை[6] யென்றும் வாராது, கும்பமுனியென்றும்
குருமுனிவ!ன், ஓதுகின்ற கொக்கின் பேரே. (677)

---

1. மருதம், 2. மீதுரோகமாசி, 3. சத்தி, 4. நாறு, 5. கோக்கிடைய, 6. குரை. 677ம் இடைச்செருகலாதல் கூடும். தன் பெயரை கொக்குக்கு, தானே வைத்தல் என்பது தமிழ் மரபுக்கு உரியதன்று.

*(உரை:)* கனிச்சாரி, வக்க வல்லாரி, நல்லதுக்கனா சற்றி (சுற்றி), வாரை, என்மதுமராடம், வேழையான், நாறுதலை யானேன், ஓர் கொக்கினடையான், வயல் சுற்றித்திரிவான், கூரை, கும்பமுனி, குருமுனி என்பன கொக்கின் பெயர்கள்.

### கருங்கூளியின் பெயர்கள்

முழியான,கோரக் கும்பங்கமென்றும் பேரு
முகருமண்டலி, முகங்காகம்மார்
வழியானப்பேரு, மாங்கிசதமோர் பிணம் பிடுங்கிகாண
வசனித்தோம், வாறு, திற மென்றும் பேரு
வழியான மடப்பகதி [1] யென்றும் பேரு
அருளினோம், இருளசாதி யென்றும் பேரு
துழியாகச்[2] சொல்லிவிட்டோம் ஆறாம் காண்டம்
தூளியென்ற, கருங்கூளியதீதப் பேரே. *(678)*

*(உரை:)* கோரக் கும்பங்கம், முகருமண்டலி முகம், காகமோர்வழி, மாங்கிசதம், பிணம்பிடுங்கி, வாறு திறம், மடப்பசுதி, இருளசாதி என்பன கருங்கூளியின் பெயர்கள்.

### வெள்ளைக் கூளியின் பெயர்கள்

அதீதமென்ற, எண்ணக்கூளி, சந்தானென்றும்
அரா, வடமாஞ்சிடம்[3], வெண் வெளியங்கம்
நதீதமென்றும்[4] தத்துவக் கூழ் மணத்தா[5] னென்றும்
நலமான, மதுங்கடமென்றும் பேரு
அதீதமெனும், வரோ வங்கான அட்டமாபதி யென்றும்
வசனித்தோம், அக்கராசங்க நந்த னென்றும்
மதீதமெனும், மாமுனிவன் சொன்ன எண்ணூறு
மகத்தான நிகண்டிதுதான், வெண் கூளியின் பேரே. *(679)*

*(உரை:)* வெண்மையான கூளியின் பெயர்கள் வண்ணக்கூளி, சந்தான், அராவமாஞ்சிடம், வெண் வளியங்கம், தத்துவக்கூழ், மணத்தான், மதுமங்கடம், வரோவங்காணம், அட்டமாபதி, அக்கரா, சங்கநந்தம் என்பன.

---

1. பசுமதி, 2. துளை, 3. அருங்கட்டாஞ்சிடம், 4. நீதீதம், 5.கூழமனந்தான்.678ம் பாடல் அந்தாதியில் அமையவில்லை.

### பருந்தின் பெயர்கள்

வெண்மான மருந்து, துணை சாதி யென்றும் பேரு
விளக்கினோம், செருதூலை பாலஞ்சத்மாலம்
அணிமான, நாரிதாப[1] மென்றும் பேரு
ஆரிய நாபமூரி, வலனாதி யென்றும் பேரு
பண்பான, பருவஞ்ச மென்றும் பேரு
பரிவான, பங்கைப் பளுவா[2] னென்றும் பேரு
கெண்பான, தெரிய சிங்கி[3] யென்றும் பேரு
கெணிதமாய் சொல்லிவிட்டோம் பருந்தின் பேரே. (680)

(உரை:) மருந்து, துணைசாதி, செருமாலை, பால சத்தூலம், நாரிதாபம், ஆரிய நாபமூரி, வலனாதி, பருவஞ்சம், பங்கைப் பளுவான் தெரியசிங்கி என்பன பருந்தின் பெயர்கள்.

### செம்பருந்தின் பெயர்கள்

பருந்தான, வம்ப காந்த மென்றும் பேரு
பண்பு பெறும், கெருட[4] காநத் கந்தும், புரோட்சம்[5]
மருந்தான, நாரத சிங்கி[6] யென்றும் பேரு
மனுக்கிறேன்[7] கலனமா[8] படையென்றும் பேரு
கெநந்தா, குலக்குரிமை[9] ஆசானென்றும் பேரு
கூரிவாளென்றதற்குப் பேருண்டாச்சு
மருந்தான, துட்டாந்ததன் என்றும் பேரு
வசனித்தோம், செம்பருந்தின் பேரே. (681)

(உரை:) வம்ப காந்தம், கருட்காந்தகந்து, புராட்சம், நாரத சிங்கி, கலனமாபடை, குலக்குரிமை, ஆசான், கூர்வாள், துட்டாந்ததன் என்பன பருந்தின் பெயர்கள்.

---

1. நாரியதாக, 2. பெறுவான், 3. தேரிய சிங்கி, 4. புராடகம், 5. நாத்த, 6. மனுக்கிரேக, 7. நலமா, 8. கோல., 9. ஆசான் என்ற பெயர்கள் சமணர் களையும், வர்ம மருத்துவர்களையும் குறிக்கும். சங்கப்புலவர்ளின் பெயர்களான முக்கல் வெள்ளையாசான் மதுரை வேளாசான் என வருகின்றன. நம்பியாண்டார் நம்பியின் தந்தை பெயர் முத்தமிழ் ஆசான். சிறுபஞ்சமூல ஆசிரியர். காரியாசான் இவர் சமணர்.

## விச்சுளியின் பெயர்கள்

அதீதமாய் சொல்லுகின்றோம், அச்சுழியாதி வச்சப்பார்
படைதானென்றும்
அருளினோம், கச்சுக்கருவலந்தானென்றும்
அதீதமாய்[1] சொல்லுகின்றோம், தூதாளோடி
மகத்தான வலம் வரும் வாண்டி[2] யென்றும் பேரு
அதீதமாய்[3] சொல்லுகின்றோம், எதிரிப்படை
முறித்தானென்றும்
வளமான கலக[4] செந்தயனென்றும் பேரு
அதீதமாய்[5], சொல்லுகின்றோம், கட்டுப்படா ரஞ்ச[6] னென்றும்
கருவான, விச்சுளிக் கெட்டுப் பேரே. (682)

(உரை:) அச்சுழியாதி, வச்சப்பார் படை, கச்சுக் கருவலந்தான், தூதாளோடி, வாண்டி, எதிரிப்படை முறித்தான், கலகசெந்தயன், ரஞ்சன் என்ற எட்டுப்பெயர்கள் விச்சுளிக்குண்டு.

## சிறுகாடையின் பெயர்கள்

எட்டான நறுங்காடை, ஞாலமென்றும்[7] பேரு
இயல்பான, திருக்கடைசிட்டு[8], நாவாஞ்சகத்தான் பேரு
நட்டான, மலர்க்குழைக்கண்ணனென்றும் பேரு
நலமான, மதுவசிய[9] னென்றும் பேரு
அட்டான[10], நலம் போதயம்[11] உதகந்தானென்றும் பேரு
அருளினோம், மலம்பான[12] சாதி யென்றும் பேரு
தொட்டான, தெறும்படி[13] மாலை யென்றும் பேரு
தெளிவாகச் சொல்லிவிட்டோம், சிறு காடையின்
பேரே. (683)

(உரை:) நறுங்காடை, ஞாலம், திருக்கடை சிட்டு, நாவாஞ்சகந்தான், மது வசியம், நலபோதயம், உதகம், மலம்பான சாதி, தெறும்படி மாலை என்பன சிறுகாடைக்குப் பெயர்கள்.

---

1. மதீதமாய், 2. வாடி, 3. வதீதமாய், 4. சகல, 5. சதீத மாய, 6. வஞ்சகன், 7. நுங்கையலம், 8. ரேகாவாந்தகன், 9. மதுவாகியர், 10. அடநலம், 11. பேய் மயந்த சுந்தரன், 12. மலப்பான, 13. தெரு.

### கட்டுக்காடையின் பெயர்கள்

கடையான வட்டு, கட்டுடாசம்[1] யென்றும் பேரு
கருவான, நட்ட விரு, தம்மானி[2] மாலைப்படை
நடையான, கட்டிவிட்ட தீயென்றும் பேரு
நலமான, விட்டொளி, விசுவனென்றும் பேரு
தடையான[3], வட்டோ பளிங்கமென்றும் பேரு
தருவான, சித்தர்க்கூனி[4] யென்றும் பேரு
வடையான, சிறுவால் பிறவியென்றும் பேரு
வளமாகச் சொல்லிவிட்டோம், கட்டுக்காடையின்
பேரே. *(684)*

*(உரை:)* வட்டு, கட்டுடாசம், நட்டவிருதம், மானிமாலைப்படை, கட்டிவிட்டதீ, விட்டொளி விசுவன், வட்டப்பளிங்கம், சித்தர் கூளி, சிறுவாசல் பிறவி என்பன கட்டுக்காடையின் பெயர்கள்.

### கருங்குருவியின் பெயர்கள்

காட்டென்றவர்க்கு[5], கருக்குறுமானென்றும்
கருவான, வழி மறிச்சானென்றும் பேரு
தொட்டானென்ற, நாட்டு உரிலி[6] யிடமென்றும் பேரு
அடமான, நால்தலைய[7] னென்றும் பேரு
சட்டென்ற[8], விந்து மழைப் பொழிக்கயன்றும்[9] பேரு
சார்வான, வெலங்கருங்குழலென்றும் பேரு
வெட்டென்ற, வெரிடக்கந்தனென்றும் பேரு
விளக்கினோம், அதீதமாய், கருக்குருவியின்
பேரே.*(685)*

*(உரை:)* கருக்குறுமான், வழிமறிச்சான், நாட்டு உரிலி, நால் தலையன், விந்து மழைப்பெழிக்கயன், வெலங்கருங் குழல், வெரிடக்கந்தன் என்பன கருங்குருவியின் பெயர்கள்.

---

1. கட்டுடாகம், 2. மணிமாலை, 3. கடையான, 4. கூளி, 5.கட்டென்ற வரு, 6. உருவி, 7. அடவான வான் நான்வத, 8. சாட்டென்று, 9. கயென்றும்.

## ஊர்க்குருவியின் பெயர்கள்

விளங்கினதோரே[1], என்றால் குருகாசியும், கருகச்சிட்டு
விசிதமென்ற மாளிகை, வாள்பன்[2] என்றும் பேரு
அளங்கினதோர் உன்று கந்தக[3]னென்றும் பேரு
அருளத்தச் சாரமென்றதற்குப் பேரு
களங்கினதோர், உச்சுக் கருவாளி[4]யென்றும் பேரு
கருவான பேச்சுக்கிடையானென்றும் பேரு
உவங்கினதோர்,மகாமேரு,சூடச்சடை அழகிபாலனென்றும் பேரு
உருவான, பெரிய பாசம், ஊர்க்குருவியின்[5] பேரே. *(686)*

*(உரை:)* குருக்காசி, கருகச்சிட்டு, மாளிசை வாழ்பவன், உன்று கந்தகன், அருளத்தசாரம், உச்சக்கருவாளி, பேச்சுக்கிடையான்,மகாமேரு, சூடச்சடை, அழகி பாலன், பெரிய பாசம் என்பன ஊர்க்குருவியின் பெயர்கள்.

## தூக்கணாங் குருவியின் பெயர்கள்

குருவான, மஞ்சலோகய[6]மென்றும் பேரு
மாலிகை[7] மாண்டக் கூன்று[8] நரம்பான்
அருவான, காதுடனிருக்கா[9]னென்றும் பேரு
அருளான[10], வாசியோடாலி[11]யென்றும் பேரு
நருவான, மகாசித்தாடன[12] னென்றும் பேரு
நாம் சொன்னோம், மாங்கியமான[13]வடி யென்றும்பேரு
மருவான, அலூரிச் சரணென்றும்[14] பேரு
மகத்தான, தூக்கணாங் குருவியதின் பேரே. *(687)*

*(உரை:)* மஞ்சலோகயம், மாலிகை, மாண்டக் கூன்று, காதுடனிருக்கான், வாசியோடாலி, மகா சித்தாடன், மாங்கியமானவடி, அலூரிச்சரண் என்பன தூக்கணாங் குருவியின் எட்டுப்பெயர்கள்.

---

1. நீர, 2. வாழ், 3. உண்டிருந்த, 4. முச, 5. முக்குருவி, 6. அஞ்சப்பினாச, 6. மாளிகை, 8. கூண்டு, 9. காதி, 10. அருவான, 11. வாசியோடாவி, 12. சித்தப்பாடான, 13. அம்மானவடி, 14. ஊசரன.

## மாந்திரிகம்

குருவியென்ற, குருமுனிவனோது, மொழிவாக்கு
கொடிய வினை செய்திடினும் குறை வராதுண்மை
மருவியெனும், மந்திரத்தின் கருவைக் காணார்
மகத்தான, பறவையுடகருவைக் காணார்
நருவியெனுமதீதயெண்ணூறு ஆறாம் காண்டம்
நாம் சொன்னோ மிந்த நூலகராதி பீடம்
மிருவியே, வேதாந்த நூல்க஌ெல்லாம்
மகா பீடமிந்த யெண்ணூறு, மாந்திரிகமாகும். *(688)*

*(உரை:)* குருமுனியான அகத்தியன் கூறிய உண்மைகள். கொடுமை தரும் செயல்களைச் செய்திருந்தாலும் குறைகள் உண்டாகாது இது உண்மை. மறை என்ற மந்திரத்தின் அடிப்படையைக் காணமாட்டார்கள். பறவைகளின் முட்டையின் கருவைப் பார்க்கமாட்டார்கள். ஆறாம் காண்டத்தில் எண்ணூறு பாடல்களுள்ள இந்த நூல் அகராதியானது, அடிப்படையாகும். மாந்திரிக காவியம் 1000க்கு பெரிய அடிப்படையாகும். இதை நான் கூறினேன்.

மந்திரமாம், வேதாந்தம் பிறந்த நேர்மை
மறைப்பெல்லாம், விதியமைப்பாலதீதமாச்சு
அந்திரமா யெழுத்ததனை யாருங்காணார்
அறிவான அட்சரத்தின்றே உயிரும் காணார்
விந்திரமா, அகராதி யெண்ணூறு பீடம்
மேலான, பரிபாசை யெல்லாந்தோன்றும்
முந்திரமாம், மும்மூல ஆதாரம்
மூதண்ட பிராணயம், முடிவைக் காணே. *(689)*

## ஐங்காய செயநீர்

காணப்பா, புலத்தியனே சொல்லக்கேளு
கருவான, பிண்டமடா, சூத்திர சாதி
ஏணப்பா, தலைப்பிள்ளை முடியை வாங்கி
எதிர்கோரை, மயிர் சவ்விசை வாய் போக்கி

காணப்பா, முடியதனைக் கல்லுரலிலிட்டு
கருங்கழுகு இரத்தமது நாழியிட்டுக்
கோணப்பா, இரு சாமம் இருப்புலக்கை கொண்டு
கூறாகச் சாடி வர, குறுமா[1] போலாமே. *(690)*

குருவான, மாவெடுத்துப் பாண்டமதிலிட்டுக்
குணமான நாட்டுப்பால், கழுதையிட பால்
அருவான பால் கறந்து, நாழியது கொண்டு
அண்டமதிலிட்டுக் கூழது போலக் கரைத்து
மருவான, கரைத்ததொரு பாண்டந்தன்னை
வளமாக எடுத்ததனைக் கலசம் செய்ய
பருவான, மண்சீலையேழும் செய்து
புகழான சுடுகாட்டு சமாதியிலே வைய்யே. *(691)*

வைய்யப்பா, நாலு முழம் குழி தோண்டி[2]
வைத்திடவே சமாதி ஒரு மேலே மூடி[3]
அய்யப்பா, மண்டலந்தான் சென்றதானால்
ஐங்காய செயநீரிறங்கும் பாரு
மெய்யப்பா, அப்பாண்டமெடுத்து நீயும்
மேல் கவச சீலை யெடுத்து நீயும்
பொய்யப்பா, சொல்லவில்லை, அச்செயநீர் வேகம்
புவன மெல்லாம் சோதியாய் பிரகாசிக்குந் தானே. *(692)*

தானான, செயநீரைப் பீங்கானில் வாங்கி
தருவான, நஞ்சுக் கொடி[4] சுண்ணாந்தானிட்டு
கோரையான முப்பும் கூடவிட்டுக்
குணமான ரவிமதியும், கூடச் சேர்த்து
தேனான வழலையுட கருவும் சேர்த்துத்[5]
தெளிவான சந்தினுப்புக் கூடச் சேர்த்து
வானான, வத்துவென்ற வழலை[6] யாகும்
வாத முறையெல்லா மிந்த செயநீராமே. *(693)*

---

1. குருமா என்ற உணவு முறை முகலாயர்கள் காலத்தில் உண்டானது. இப்பாடலில் குறு - நுண்ணிய மாவு என்று பொருள்கொள்ளல் வேண்டும். 2,நருளிக்காணோம், 3. நாடிவைத்திடவே, 4. நஞ்சுக்கொடியிலிருந்து எலும்பு மஜ்ஜையை உண்டாக்கும் மருந்து செய்யப்படுகிறது. 5. பாலையுடன், 6.வாலை.

நீரான செயநீர், மெழுகாய்ப் [1] போகும்
நேரான, ஐங்காய மெழுகதாகும்
மாரான, மாந்திரிக அட்டத் தொழிலாகும்
அறுபத்து சித்தாகும், அதனாலேயே
பேரான, தெளிக்கருவும் [2] அதுதானாகும்
போகமென்ற, நாட்டுக்கரு, வீட்டுக்கருவாகும்
ஆரான [3], காட்டுக்கு வதரணக் கருவாகும்
அருளினதோர், கருவெல்லாமிதற்குப் பேராமே. *(694)*

*(உரை:)* இதற்கான செய்முறைகள், ஆசிரியரை அணுகிக் கேட்கவும்.

**வசியமை**

ஆமப்பா, புலத்தியனே, சுந்தரமே கேள்
அருளினோம், வசியத்துக்கருளக் கேளு
நாமப்பா, சொல்லுகிறோம், ஐங்காய [4] மெழுகுதனில்
நளினமதாய், குன்றியெடை நன்றாக எடுத்து
வாமப்பா, கத்தூரி பண வெடை யெடுத்து [5]
... ... ... ... ... ... ... ... ... ... ...
தாமப்பா, உள்ளங்கையிலிது மூன்று மிட்டுத்
தருவான [6] கன்னி முலைப் பால்விட்டு
மத்தியே. *(695)*

மத்தித்துச் சுப்பிரமணியர் மூலங்கை கொண்டு
மண்டலத்திலுருச் செய்து, வசிய மாக்கி
அத்தித்து அறுகோணம் [7] சித்தியாக்கி
அருளான, லட்சம் உரு [8] தாபிதமே செய்து
கத்தித்தை, கன்னிமேலாசை வைத்தீராகில்
கடுகளவு மத்தித்த கருமையைக் கொண்டு
சத்தித்து [9], நெற்றிதனில் திலதமது தீட்டித்
தையலரை, வாவென்று பேர் குறித்தழையே. (697)

---

1. போலாகும், 2. தெளிக்கரு, 3. அருகினதோர், 4. சங்காய, 5. தான்கொண்டு, 6. தருவாத, 7. வருகோணம், 8. முறு, 9. கத்தித்து.

குறியான ஐங்காயம்[1] தனை விட்டுக்
கோதயரை, வா வென்றால் கூடத்தொடருவாள் பார்
அறியான, வாரிசையை உன்னாசையது தீர்ந்து
அதன்பிறகு அனுப்பிவிடு, அருளக் கேளயா
நறியான, மாதரவர் வசியமானால்[2]
நாட்டுவார், நீகேட்டபொருள் தருவரையா
வெறிகொண்டு, சதாக்காலமுனைப் பிரியாரையா
வெகு அளவு, இந்த வித்தை வெளிவிடாதே
பாரே. (697)

(உரை:) இவற்றையெல்லாம் வல்லார் வாய் உணர்க.

**புருச வசியம்**

**பாராப்பா, புருசரெல்லாம், வசியமாக, நிலைப் பனையைப்[3]**
**பரிவான, ஐங்காயமெழுகிடின்றி வாங்கி**
**... ... ... மகத்தான பிச்சதுவை, வாங்கிக்கொண்டு**
**ஆரப்பா, ஐங்காய மெழுகில் சேர்த்து**
**அருளான[4] கொச்சி மஞ்சள் பணமுமிட்டு**
**வாரப்பா, கத்தூரி பணவிடை தானிட்டு**
**வசனித்தோம், புனுகதிலே பண விடைதான்**
**தாக்கே. (698)**

**தாக்கியே, அளிஞ்சி முத்துத்தைலம் வாங்கித்**
**தருவான, தைலமதில் பணவிடை தானிட்டு**
**மாக்கியே, மத்தித்துச் சிமிழ்தனிலே வைத்து**
**வாலையிட, மூலமதில் இலட்சம் உருவோதி,**
**சாக்கியே, தாயாரை வசிய முதற் செய்து**
**சார்வான, முக்கோண வசிய சித்து செய்து**
**ஆக்கியே, கடுகளவு திலர் தந்துவுண்டு வீறாய்**
**ஆரணியிலுள்ளவர்கடைக்கிலும் வசியமாமே. (699)**

---

1. வங்காயம், 2. வசியமதையானால், 3. இவ்வரிகள் அச்சு நூலில் இல்லை, சரசுவதி மகால் சுவடியில் உள்ளது. 4. பருவான.

வசமாவார், சகலருமே, புருசரெல்லாம்
உன்பின், கேத்தத்தடறுவார்[1]
அசமான, புருசர்கள்தான் வசமேயானால்
அதீதமெல்லாம், வெகுவசியமாகும்
தேசமா[2], இவ்வசியமாந்தான் சொல்லார்
தெளிந்து[3], பணப்போரவறிவார் செய்து பாரு
வசமாவார், பதினாலு லட்சம் சொன்னோம்
பாடினோமிது போலப் பாய்ந்தன்னேன். (700)

## இராச வசியம்

என்றான, இராசவசியம் சொல்லக் கேளு
எடுத்துரைப்போம், மாணாக்காள் இங்கிதமாக
வண்டான, தேவாங்குப்பிச்சுக் கொண்டு
வளமான, ஆந்தையிட பிச்சுமிரண்டுமாகும்
குண்டான, ஐங்காய மெழுகில் பிச்சு வாங்கி
கூறான இருபிசினும் கூடக் கூட்டி
அண்டான, சந்தன மரத்தினாலே
அருளான தைலமதை வாங்கே. (701)

வாங்கியேத் தைலமரைப்பலந்தான் கூட்டி
வலியனுட, இரத்தம்விட்டு வளமானவயா
தாங்கியே, கத்தூரிப்புனுகு ஒவ்வொன்றும் பணம் வாங்கி
தருவான,விதமெல்லாம் ஒன்றாகச் சேர்த்து
ஆங்கியே, மத்தித்துச் சிமிழ் தனிலே வைத்து
அகோர வீரபத்திர மூலம் வசியம் செய்து
தாங்கியே, மத்தித்தமையால் கடுகளவு வாங்கி
நாட்டிலுள்ள, இராசரெல்லாம், வசியமென்று
கூறே. (702)

1. தொடருவார்கள், 2. திசை மாறி, 3. தெரிந்து.

**செக வசியம்**

கூறியே, நெற்றிதனில் திலதம் தொடுவீராய்[1]
குணமாகத் திலதமிட்டு, இராசரிடம் சென்றால்
வாளிமலர்[2], [3] பொன்மாரிப் பொழிந்தது தான் போல
வசனித்தோம், இராசரெல்லாம் உன் முகத்தைப் பார்த்து
வீறியே, பலபல வாசந்தானிட்டுப் பாரித்து
வெகுமதிகள் சித்தனிவனச் செய்து
நாரியே, கொடுத்துனக்கு தேவனிவனென்று
நமஸ்கரித்துப் பணிந்திடுவார் இராசா[4] தானே. (703)

தானென்ற, புலத்தியனே, மகாஇராசயோகி
தருவான, செகவசியம் சொல்லக்கேளாய்
நானென்ற[5], ஐங்காய மெழுகில் குன்றி வாங்கி
நல்ல உள்ளங்கையில் நலமா வைத்துக்
கானென்ற, கருங்காக்கை, செம்போத்தி இதுயிரண்டும்
கருவான[6], பிச்சதுவும் உள்ளங்கையிலிட்டுப்
பேனென்றத்தலைப்பிண்ட நெய்யில், பணவெடைதான்
பேராக, விதையிட்டு, கத்தூரி புனுகுமாமே, (714)

புனுகான, கத்தூரிப் புகலும், பணவெடைதான் ஒன்று[7]
அதுவான, புனுகதுவும் அப்படித்தான், அறிவாய் கேள்
பனுகான[8], பூமுலையாள் புகலும், சிசுப்பாலுண்ணும்
தனுவான அமிர்தம்[9] பணவெடைதானிட்டு மத்தித்து
பனுவான[10] விதமெல்லாம் பூட்டிடுவாய் மத்தித்து
வகையாக,வழித்துச் சிமிழில் வைத்திடுவாய், உத்தமர்சொல்
புனுகானப் பூமாது புவனையிட மூலமதில்
நினைவாகச் செபி[11], இலட்ச முறு நிலை பெறவே.(715)

---

1. திலதத்தோடு வீறாய், 2, 3. பழமொழியைக் கூறியுள்ளார் பொன்மலர் நாற்றமுடைத்து, வாறிமலர், 4.அரசர் தானே, 5. தானென்ற, 6. திருவான, 7.இரண்டு, 8. புனுகான, 9. விழுந்த, 10. புனுகான, 11. சேவி

செபிப்பாய்[1], சிரோமணியைச்சித்திபெற நித்த மடரம்
பாவிப்பாய், மாதுமையைப் பணிந்திடுவா, கனித்து வால்
மேவிப்பாய்[2], செகவசிய மேலான, வித்தையிது காணப்பா
நெற்றிதனில் கதிசொளியைத் தீர்த்தமது[3]
மாவிப்பா, விட்டுச் செகமனிதர், கிட்டச் சென்றாக்கால்
மோகிப்பார், மகாவசிய உலக மெல்லாம் சகலஉயிர்
ஆளப்பா, ஆய்த்திலர்[4], தம் அருளின தோராகில்
நாலிப்பார், சித்தரெல்லாம் நன்றிதுவே. *(716)*

நன்றிதுவாய், நீகேளு சொல்வோம், மாமுனிவன்[5]
நன்று கருவறிவார்கள், கனம் பெறுவார், தொண்டரெனும்
பண்டிதத்தோர், தாண்டிவர, பரிபாசை யொடுக்க மெல்லாம்
கண்டறிவார், சொர்க்க கதி காணுவார்
விண்டு முடையார், மண்டலத்தில், சித்தர்களில் மகிபூபதி
அறிவார், அண்டமெல்லாம் நிறைந்த கருவறியார்[6]
விண்டவிதி, கண்டனென்பார், உலகத்தோர், கைலாச மேரு
வைத்தான்
துண்டு துண்டாகவும், நாம் கொடுத்ததுவே[7]. *(717)*

தொடுத்தமென்ற, காமுகர்க்கென்பார் ஒருவர்
அடுத்தவரைக் காத்ததுபோல அனுசரிப்பார்,
சொந்தமதாய்
எடுத்த, வில்தொடு கறியார், இழி குலத் தோராகையால்
அடுத்தவரை, கழுத்தறுத்துப்பார், அறிந்துபார் செகமனிர்
கடுத்தசலி, கன்மிகட்கு, கடைத்தேறச் சொன்னாலும்
உலுத்தமட்டி, மாண்பருக்கு, உணர்வில் வைப்பார்
பணமாசை
கொடுத்துக் கெட்ட[8], கடன்காரன் குண்டினியாய்த்திரிவது
போல
படுத்தும், புலையர் செய்யும் தொழில்,
பதரதுவே. *(718)*

---

1. சேலிப்பாய், 2. பாவி, 3. தீற்றது, 4. அத்திவந்தம், 5. மாமுனிகன், 6. யாரறிவார், 7. கொடுத்த தொடுவே, 8. பழமொழி கையாளப்படுகிறது.

## தலை வசியம் ?

பதறில்லா, ஐங்காயமெழுகில், குன்றியெடைதான்
புறப்பருந்ததுவும், கோட்டான் பிச்சுக் கொண்டு
செய்யப்பா, வராகியுட பூசை செய்து
திலதமிட்டு, நெற்றிதனில், செகமீதில் சென்றால்
அய்யப்பா, இதனிலே போகும் மானிடர்
அவர் கொடுப்பார், வேண தெல்லாம், ஆதிகுரு வென்று
தய்யப்பா, தரணிதனிலுள்ள, மனிதரெல்லாம்
தனைக்களஞ்சியம், அங்கு நடத்திடுவாரையா[1]
மெய்யப்பா, சொல்லிவிட்டேன், தன வசியமாகும்
மேலான வித்தை, இது மேவிப்பாரென்று. *(719)*

பதறில்லா, ஐங்காயமெழுகில், குன்றியெடைதான்
புறப்பருந்ததுவும், கோட்டான் பிச்சுங் கொண்டு
கதறில்லா, பசுந்தவளைப் பிச்சும் சேர்த்துக்
கந்தூரிபண விடைதான், புனுகு பணவிடைதான்
வதரில்லாச் சந்தனத்தைலஞ் சேர்த்து மத்தித்துச்
சிமிழில் வைத்து, வராகி பூசை செய்து
அகரில்லா, மூலமதில்[2] மூலஞ் செபித்து
அகில மாதாவை[3], நீவசியது செய்யே. *(720)*

## மிருக வசியம்

பாரப்பா, சுந்தரமே, இன்னமொன்று கேளு
பாரிலுள்ள, மிருகமெல்லாம்பல[4] வசியமாகும்
சேரப்பா, செம்பருந்து, செங்கழு இரண்டும்
செயலான,[5] பிச்செடுத்து, செப்பக் கேளு
தாரப்பா, தலைப்பிள்ளை முடித்தைலம் வாங்கி
கூறுவாள்[6], ஐங்காய மெழுகில் குன்றியெடைதான்
ஆரப்பா, இது வகைகள் உள்ளங்கையிலிட்டு
ஆண் பிள்ளை குடிக்கு முலைப்பாலும்[7] கூட்டிச்
சேரே. *(721)*

---

1. மதிலட்ச,மாதரை, 2.பருவ, 3.செயலானபடி, 4.தருவான, 5.குடிக்கும்பாலுடன்,

சேருதத்தை சூரியட சாறும் கூடச் சேரு
செம்பருத்திப்பூவினிட சாறும் கூடச் சேரு
ஆருமறியாத, அருமை[1] யெனவே கூறி
அருள் பெறவே, மத்தித்துச்சிமிழ் தனிலிட்டு
தேரும் திருபுரையுடைய மூலமதில் லட்சம்
திருவொரு, மண்டலம் செபிப்பீராகில்
தூர்வாரது[2], தேவிக் கிருபையதனாலே
துருவான, மையெடுத்து, திலதலமிட்டுவீரே. *(722)*

தீட்டியே, தீவு தீப்பந்தமேகி[3] ... ... ... ...
தேவியிட, மூலமதில், நூற்றெட்டு செபி[4]
வாட்டியே, வா எனவே, சீட்டு நாடிச்[5] செய்தால்[6]
வனாந்திரத்தில் மிருக மெல்லாம் வந்துன்காலில்
பாட்டியே, பணிந்திடும், காண் மிருகமெல்லாம்
பாரினில், பலவசியம் இது போலப்
பாவிப்பாரில்லை[7]
நாட்டினிலே, இவ்வித்தை செய்தாரேயாகில்
நமனது, எமன்வாக்கு, நாடொண்ணாதே.[8] *(723)*

**உலோக வசியம்**

நாடொண்ணா, வசியமொன்று சொல்லக்கேளு
நவராச பூபதியே[9]
காட்டொண்ணா, ஐங்காய மெழுகில் குன்றி
கலைமானின் பிச்சதுவும், கடப்பைப் பிச்சுங் கூட்டி
தீட்டொண்ணாத்[10] திருமேனியழகிச் சாறுவிட்டு
சிவகரந்தைச் சாறு, அது கூட நீ சேர்த்து
பூட்டொண்ணாப் புனுகு கழஞ்சு, கத்தூரி கழஞ்சு
பூமுலையாள் நாதம் விட்டுப் புகழ்[11] மத்தியே. *(724)*

---

1. கருமை, 2. தூகுவாராது, 3. திபுத்த தீப்பாத்திரமேகி, 4. தீயுற்ற சொல்லி, 5. சிட்டு, 6. சேர்த்தால், 7. பாரிவில்லை, 8. நமனே வெடியெனவர்க்கு நாடொண்ணாதே. 9. நலரச பூபதியே லோகவசியங்கேள், 10 தீட்டொண்ணா, 11. புகழ

மத்தித்துச் சிமிழ் வைத்து அம்மா தேவி
மகத்தான மூலமதில் லட்சம் வுரு செபித்து[1]
அத்தித்து, மைதனிலே கடுகளவு வாங்கி
அருள் பெறவே, நெற்றிதனில் திலத மிடுவீராய்
நத்தித்து[2], திலர்தமிட்டு, லோகமதில் சென்றால்
நாதாக்கள், மலர்லோகம்[3] நாடலாகும்
பத்தித்து[4], தேவனிவ னென்நூல் மகிழ்ந்து
பணிந்திடுவார், லோகமெல்லாம் பல
வசியமாமே. *(725)*

## பூதவசியம்

வசியமாம், புலத்தியனே, பூதவசியந்தான்
மாணாக்காளிது அரிது வசனித்தோம்
அசியமா, ஐங்காய மெழுகில் குன்றி வாங்கி
அதீதமா, முசல் பித்து, முதலைப் பித்துஞ் சேர்த்து
வசியமாம், பேரண்ட நதியிது[5] முட்டி
பரிவான ஊமத்தஞ்சாறு தரைச்சாறுமிட்டு
நசியமாம் புனுகுகழஞ்சு, கத்தூரி கழஞ்சு
நாயகியாள் முலைப் பாலிட்டு மத்தியே. *(726)*

மத்திப்பாய், மத்தித்துச் சிமிழ் தனிலே வைத்து
மயேந்திரையின், மூலமதில் லட்சமுறு மண்டலம்
ஒத்திப்பாய்[6], உருச்செய்து மையதனை யெடுத்து
ஓகோகோ, நெற்றிதனில் திலதம் போட்டுத்
தோரீராய்
அத்திப்பா, திலதமிட்டும் மயேந்திரையினிரு நூறு[7]
அருளுவாய், வாவெனவே, அது வரும் பாரே[8]
உத்திப்பாய், லோகமதிலுள்ள பூதகணங்கள்
ஓடிவருமுன் னெதிரே, உசித மிதுவாமே.[9] *(727)*

---

1. சேர்த்து, 2. நாறித்து, 3. அலர்லோகம், 4. பற்றிற்று, 5. தைலமது, 6.சித்தி, 7. மயேந்திரை இருந்து, 8. வசிவருகும் பாரு, 9. சித்தர்வாமே.

இரசித மென்ற, பூதகண வசியம் பாரு
ஓகோகோ, விவரஞானியென்றும் பணியுமப்பா
அசிதமென்ற, ஆண்பிள்ளை நீயோ, சித்தனாகில்
ஆடலாமங்காய[1] மெழுகு குருவானாலே
வசிதமென்ற, வாய் பேசாய்[2] புலம்பித் திரிவோர்க்கு
வாயாது, இந்த வித்தை, வசனிக்கக் கேளு
கசிதமென்ற[3], கருவாளி நீயே யானால்
கருவறிந்து, இத்தொழிலைக் காணு காணு. (728)

### தேவதைகள் வசியம்

காணப்பா, புலத்தியனே, பூபதியே கேளு,
காசியிலே, தேவதை, கனதீதமாய் காணு
ஏணப்பா, இவ்வசியம் தேவதைகள் வசியம்
எல்லவரும் மன மகிழ்வாரிந்த வித்தை
ஆணப்பா, ஐங்காய மெழுகில் குன்றியிடைதான்
ஆதியென்ற, குதிரைப்பித்து, கழுதையிடபித்து
நாணப்பா[4], இந்திரகோபம், குழிப்பாலையிரண்டு
நன்றாகப் பொடி செய்து, நல்லெண்ணை தான்
வாரே. (729)

எண்ணையாம் கத்தூரிப்புனுகுஞ் சேர்த்து
இந்திரவல்லிச்[5], சாறும், சிறியாநங்கைச் சாறும்
அண்ணையமான, விந்து[6]ப் பணவிடை தானிட்டு
ஆரிழையாள், முலைப்பாலடவாக யிட்டு
கண்ணையமாம், கருவாக மத்தித்துச் சிமிழில்
கருணை பெறவைத்துச்சாமளைவிட தியானம்
நண்ணையமா முறு, லட்சம்,[7] மண்டலமே[8] செபித்து
நன்றான மை யெடுத்துத் திலதந் தீட்டிடே. (730)

தீட்டியே, தேவதைகள் மூலமதை செபித்தால்
இருநடனமாடுவார், தேவதைகள் தானும்,

---

1. ஆடவானே, 2. பேச்சால், 3. நசிதமென்ற, 4. நாணப்பா, 5. நேத்திர, 6. விந்த,
7. இலட்சம், 8. செய்து

மாட்டிலே தேவதைகள், அதீதவசியந்தான்
மாடலா இத்தொழிலால், அனேக வித்தை தானும்
நாட்டினோ மிந்த நூல், எண்ணூறாகச் சொன்னோம்
நளினமென்ற, காண்டமெட்டு, அகராதி நிகண்டு
வாட்டினோம், பலகலைகள் பண் பெற நாமும்
பரிபாசை யில்லாமல் பாடினோம் பாரே. (731)

பாரப்பா, புலத்தியனே ஆறாவது காண்டம்
பார் தனிலார் கொடுப்பார், பரிபாசை யறிந்தோர்[1]
வேரப்பா இந்நூலில் சகல துறைகளெல்லாம்
விளக்கினோம், கருக்கிடைதான், வெளியரங்கமாய் தோன்றும்
ஆரப்பா, அறிவார்கள் இந்த[2] எண்ணூறு பீடம்
ஆதியிது, குரு நூலரிதரிது, பாரீர்
தேரப்பா, சற் குருவையடுத்தால் பத்தாண்டு
கூறினோம், குறித்திடுவார்க்கு வளி குறையறு நூறென்றே. (732)

## மாந்திரிக வைப்பு

என்றான, மாந்திரிக வழலையுப்பைக் கேளு
எடுத்துரைத்தார் முன்னோர்கள் அனேகப் பேரிதற்கு
அண்டான, வண்டென்றால் தலைச்சனதாகில்
அதன் முடியைத்தள்ளி வைத்து, வங்கமதைக் கொண்டு
நண்டான[3], கால்கை, நகந்தனை வாங்கி
நாமப்பா, நரம்பதனை அணியணியாயெடுத்தப்
பண்டான, நரம்பு பதனமாகச்[4] செய்து
பரிவான, வங்கமதையுள் சுத்தி செய்யே. (733)

செய்யப்பா, வங்கமெனும் சுத்தி செய்து
செயமாக வாளப்புணங்கா[5] விடமதிலே வைத்து
விநயப்பா[6], ரவி முகத்தில் உலர் நீ செய்து[7] செய்து
நளினமதாய், மண்டலந்தான் சென்ற பிற கெடுத்து

1. அறிந்தோம், 2. கிளிகூர், 3. நண்டான, 4. நிவேதன, 5. புழங்கா, 6. தையப்பா,
7. உறுதி

கெய்யா[1] கல்லுரலிலிலங்கதை[2] யிட்டு
கருவான, சென்னலென்ற அரிசிப்படி மூன்று
மெய்யப்பா, பாண்டித்திட்டு, மன்னமதாய்[3] செய்து
மேலாக, வடித்தசல மேவக் கேள் தானே. (734)

மேவக்கேள் ஆறு மாசம் ரவிதனிலே வைத்தால்
மேன்[4] பெரும், காடியதாய் மேவுமதும் பாரு
நூவக்கேள், நுரையது போலப் பொங்கி வழிந்திடும்
நுண்மை பெறும், துறை[5] வருதல் பாகந்தனைக்
கண்டு
தாலக்கேள்[6], ஆறுமாதம்[7] காடிதனைக் கொண்டு
தழவான[8] கல்லுரலில் தனதாக விந்து[9]
... .... .... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வீரஞ்சேரிட்டு, நலமாக இருசாமம் இருப்புலகை
சாடே. (735)

கொண்டு நீ, சாடையிலே ஆவது போலாகும்
குருவான மாவதனைத் தோண்டி எடுத்தையா
பாண்டு நீ, பாண்டமதில் மாவதனையிட்டுப்
பனிக் குடத்து நீரதனிலே, படி நீர்தான் வார்த்து
அன்று, நீயதைக் கரைத்த ரவி முகத்திலோர் நாள்
அருள் பெறவே வைத்திட்டால், தெளிந்த சலமாகும்
மன்னு நீ, மறு பாண்டமதில் சலத்தைவிட்டு
மாணாக்காள் அடுப்பினில் வைத்து, வனியை
மூட்டே. (736)

மூட்டியே, இருசாமம் எரித்திரேயாகில்
முக்கியமுள்ள குழம்பாகும் மோசம் வராது[10]
ஆட்டியே, அதையிறுக்கி[11], மறுபடியும் பனி நீர்
அரைப்படி தானதிலிட்டுக் கரைத்து, ரவி வைத்தால்

---

1. கைய்யா, 2. வங்கமதை, 3. வன்மை, 4. மேன்மை, 5. பன்மை பெரு நுரை, 6. தூவ, 7. ஒருமாதம், 8. தருவான, 9. விந்துவிட்டு, 10. மோசம் வராது உண்மை, 11. இறக்க.

ஆட்டியே[1], பசும்பால் போல் தெளிந்து, தெளிந்த சலமாகும்
பரிவான, சலமதைப் பாண்டத்திலிட்டு
நாட்டியே, இந்த முறை, யார் சொல்வாரையா
நளின மென்ற, பாண்டத்தைக் கவசமது செய்யே. *(737)*

செய்யப்பா, மண்சீலை எழுபது செய்து
செழுமை, யுப்பாசதற்குப் பாண்டமதை யெடுத்து
அய்யப்பா,ஆடறுக்கும் தொட்டிக்கிட்டேச் சென்று
அருளான, சாண் குழி[2] அதற்குள்ளே மைந்தா
பைய்யப்பா[3], பாண்டமதைக் குழிதனிலே வைத்து
பன்மை பெற ஆட்டெருவு அதன் மேல் மூடி
மையப்பா[4], மண்டலந்தான் புதைத்தீரேயாகில்
மகத்தான செழுமை செயநீரதுமாமே. *(738)*

அதுவான, நாட் சென்று பாண்டமதையெடுத்த
அதன் கவச மண் சீலையேழும், அதுவாங்கி
மதுவான, செண்மை செயநீரதனை யெடுத்து
மகத்தான, பீங்கானில் அந்நீரை வார்த்து
வாரான[5], இதனிலே[6] பத்து நாள் வீதம்
நலமாக வைத்தாயானால், செயநீரது கட்டும்
பதுவான, பாகமது போலாகி விடும் பாரு
பாரதிலே நீரிறங்கக் கசுவது தானாமே. *(739)*

**வழலை நாதத்தின் பெயர்கள்**

ஆமென்ற, கசிவதனைப் பத்துநாளையா
அடவான, பீங்கானிலிறுத்திரேயாகில்
வாமென்ற, வழலை நாதமென்றதற்குப் பேரு
வானக்குமரி நாத மென்றதற்குப் பேரு
நாமென்ற, வாலையிட நாதமென்றும் பேரு
மயக்கினீர், இயக்கி நீர், பூமாது நீரென்றும்
பாமென்ற பாலை நாதமென்றதற்குப் பேரு
பறை நாதமம்மா, மாழளகி[7], வாலை நாதப் பேரே. *(740)*

---

1. பாட்டியே, 2. சாணக்குழி, 3. மையப்பா, 4. மெய்யப்பா, 5.6 நாரான ரவியிலே, 7. அழளகி.

*(உரை:)* வழலை நாதத்தின் பெயர்கள், வானக்குமரி நாதம், வாலையிட நாதம், இயக்கிநீர், பூமாது நீர், பாலை நாதம், பறைநாதம், மாழளகி வாலைநாதம் என்பன (எட்டுப்பெயர்கள்)

நாதமென்ற[1], நாதமதை மூன்று நாளிரவில்[2]
நலமாக வைத்திடவே, நாதங் குழம்பாகும்
வாதமென்ற[3], தண்டகப் பட்சணிதான்
அதற்கு மேலாயிது, நாதமாடி வருகும் பாரு
போதமென்ற, நாதமதை சீசாதனிலிட்டுப்
பைரவத்தின் பூசை செய்து, பதனம் வைத்ததனை
பூதமென்ற, சர்வத்துக்கிது[4] நாத செயநீர்
பூட்டினோம், சுந்தரமே, புலத்தியனே கேளாய்.*(741)*

கேளப்பா, பத்து நாள்குள்ளே பீங்கானில்
கிருபையதாய் பூப்பூக்கும் முப்பூவையா,
நாளப்பா[5], சொல்லாது, முருக்கம் பூ வர்ணம்
நாத உப்பினிதன், பேரை, நாதாக்கள் சொல்வார்
ஏளப்பா, உப்பெடுத்து பார்த்தீரேயானால்
என் சொல்வேன், இரு கண்கள், சோதியொளிக்காகும்[6]
வேளப்பா, எரித்த சிவனெனக்கிந்த[7] முறையை
வெளியிட்டார், கோடிக்காலம், தவசிருந்தோமிதற்கே.*(742)*

இதுவான, உப்பதனை பீங்கான் தனிலிட்டு
மேன்மை பெற, நாதசெயநீர் மூன்று பலமிட்டு
மதுவாகப் பிசைந்ததனைப் பெட்டகத்தில் வைத்து
மண்டலந்தான், இந்தப்படி நாதநீர் தெளித்தால்
பொதுவாகப் பிசைந்து வைத்துண்டை யெல்லாம் மைந்தா
பேரான நாத முப்புப் பூத்ததுவிருக்கும்
அதுவானவது ஒளிவொன்னால் ... ... ... ... ... ...
... ... ...சொல்லப் போமே... ... ... ... ... ... *(743)*

---

1. மாதமென்ற, 2. இடமாக, 3. பாதமென்ற, 4. காளப்பா, 5. வாளாகும், 6. அந்த, 7. சிவபெருமான், காமனை எரித்த புராண வழக்கு இதில் கூறப்படுகின்றது. இப்பாடல் அந்தாதி முறையில் இல்லை.

## வழலை நாத முப்பின் பெயர்கள்

நிறமான, வழலை நாத முப்பூ வென்றும் பேரு
நீலி, கருநீலி யென்றும் அதீதப் பேரதற்கு
செறமான, செங்கத்தானை யென்றும் பேரதற்கு
செந்நாவல், வெண்சாரைக் கொழுப்பென்றும் பேரு
கறமான, கருஞ்சாரைக் கொழுப்பென்றும் பேரு
கருவான, செஞ்சாரைக் கொழுப்பென்றும் பேரு
திறமான, மஞ்சட்சாரை கொழுப்பென்றும் பேரு
திருவான வழலை நாத முப்புவின் பேரே. *(744)*

*(உரை:)* வழலை நாத முப்புவின் பெயர்கள், நீலி கருநீலி, செங்கத்தாழை, (சிவப்பு நாவல்) செந்நாவல், வெண்சாரைக்கொழுப்பு, கருஞ்சாரைக்கொழுப்பு, மஞ்சள் சாரைக்கொழுப்பு என்பன.

## முப்புச்சுன்னம் செய்முறை

பேரான முப்புவை சுன்னஞ்செய்யக் கேளு
பீங்கானிலிருந்த முப்புவை, பிசகாமலெடுத்து
சார்வான, கல்வமதில் முப்புவையிட்டுக் கருவான
நாதச் செயநீர் நன்றாய் சேரதாக்கி
ஆறான, ஆண்விந்து அஞ்சு பலமிட்டு
அதைச் சாடு, இருசாமமாடினேயாகில்
நேரான, மெழுகது போலாகுமது பாரு
நிறமென்றால், சொல்லவதற்கு, நேர்மை
இருந்தென்றே. *(745)*

நேர்மையென்ற மந்திரவாதி நீயேயானால்
நிலைக்குமது, அறுபத்து நாலு சித்துமாகும்
வறுமை யென்றும் அணுகாது, இந்த மெழுகு
வழித்து, வசனித்தோம், சதுரமதாய்[1],
வில்லைபோல்செய்து

---

1. மஞ்சத்திறமதாய்.

நறுமையென்றும், சித்திரை நாள் ரவிமுன் ஏழுதனில் [1]
நல்சதுரவில்லையதை யுலர, வைத்து நீயும்
சிறுமையொன்று வராது, வில்லையதை எடுத்துச்
செழும் பருத்திச் சீலைதனில் ஏழும் செய்வாயே. (746)

செய்வாயே, புலத்தியனே, பூபதியே கேளு
சிறு காடையண்ட மதின் விந்தே கொண்டு
அய்வாயே, இவ்விந்தை சீலை தனில் பூசி [2]
அச்சதிரம் வில்லை, அதில் போல் கவசம் செய்து
பய்வாயே [3], சுண்ணாம்பு சீலையேழும் செய்து
பத்திரப் பத்திரியாக, இரண்டோடு கொண்டு
மெய்வாயே, அவ்வோட்டில் வில்லையதை வைத்து
மேலோடு மூடி, மண் சீலையேழும் செய்யே. (747)

**செந்தூரம்**

செய்யுமட மாதே கேள், செப்பரிது உலகருக்கு
எய்து மென்ற மிதி லெய்தும், புண்ணியற்குச்
செய்யுமட மாதே கேள், செப்பின தோர் வில்லையதை
உய்யற, மூன்று நாள்யுலரவை, நீ வெய்து பார்
செப்புமடமாதேகேள், சிறு மயில் புடம் போட்டு
ஆறினதோர், பிறகதனை யெடுத்துக் கவசமெல்லாம்
செய்யுமடமாதேகேள், சீலையெல்லாங் கழட்டெடறிந்து
உய்ய செந்தூரமதை யுருக்கு காணே . (748)

காண வுலகோர்களிடம், கருத்தறிய வேணு மென்றால்
வேணும், சிலயோகிகளின் விற்காந்த [4] முறுபலன்
காணி, மனவரொளிவைக் கண்டு களி கூர்ந்தவர்கள்
வேணு மென்று, மனம் வைத்தோரொருவனுண்டு
வையகத்தில் காணு ... ... ... ... ... ...
காணு மிது, நாதத்தால் கருவான முப்பூவை
ஊனுயிரு லோக பூபதிதான் செந்தூரம்
காணுமிது செந்தூரம், கடுகளவு தானெடுத்து
மான்மழுவேந்தும் கரமதில் வைத்திடே. (749)

---

1. முன்னே அழல், 2. அச்சி (அப்பி), 3. வைய்வாயே, 4. உருக்கானே.

கரமான, கரமதிலே செந்தூரம் வைத்து
கதிராவி, முகம் படவே காண பத்தீராகில்
சரமான, மண்டலரவி மதியுங் காணும்
சாலோக,சாமீப, சாரூப, சாயுச்சியங் காணும்
மரவான,சுழிக் கண்ணை, மனக்கண்ணாலோட்டிய
மதிரேசகபூரகம், ரவி, கும்பகந்தான்
திரமான, பிராணாயம், வாசியதை யொட்டிச்
சிங்கென்று, அங்கிதிலே, வங்கென்றும்
நாட்டே. (750)

நாட்டியே, செந்தூரம், நங்கென்று பார்த்தால்
நாற்சதுர, இருசால மேருவது போல்
பூட்டியே, அம்புசரந்தொடுத்த பாவியைப் போல்
பூதாதி அந்தினிட நேர்மையது காணும்
மேட்டியாம், சூட்சாதி, சூட்சபீடங்கள்
மேலான, கைலாச மேருவது காணும்
காட்டினா, மனவறிவால், கண்ணாடி வைத்து
கைபாகம், போலெண்ணூறு
கண்ணாடியாமே. (751)

ஆமேதான், புலத்தியனே, சுந்தரமே கேளு
ஆட்டினதோர், செந்தூரமதீத, மெய்யாகும்
நாமேதான், சொல்லிவிட்டோம், செந்தூரத்தை
நாடதிலே, ஒருவருக்குங் காட்டவேண்டாம்
சேமேதான், செந்தூரமதனைக் கொண்டு
சீசாவில் பதனமதாய் சேர்த்திடீர் தான்
வாமேதான், சிதம்பரத்தின் பூசை செய்து
வசனித்தோம், செந்தூரம் பதனம் பண்ணே. (752)

---

751ம் பாடல், அம்புசரந்தொடுத்த பாவி என்பது புராண வழக்கு. சிவபெருமானின் மீது மன்மதன் மலர் அம்பு தொடுத்தலைக் குறிக்கும். கண்ணாடியில் கைபுண் பார்த்தல் என்ற பழமொழி இங்கு கையாளப்பட்டுள்ளது.

**கிழிச் சுன்னம்**

பதனமிது, செந்தூர மந்திரவாதிக்குப்
பாடினோமிது போலப்பா[1], ஆதொன்றப்பா
கதனமது[2], செம்பதனையுருக்கிச் சாய்த்திட்டு
கசடெல்லாம், வாங்கியதை கன சுத்தி செய்து
ததனமெனும்[3], செம்பதனை தகடதுவாய்[4] டித்து
தருவான[5], செந்தூரமும் நீரால் குழைத்துப்
பதனமெனும், தகடது மேற்பூசி, கசபுடத்தான்
போரட்டதேயாகில், கிழிச் சுன்னமாமே. *(753)*

*(உரை:)* செம்பை உருக்கவும், உருக்கிய செம்பை மிக நன்றாகத் தூய்மை செய்து, அழுக்குகளைப் போக்கவும். பின்னர் தகடாக அடிக்கவும். செந்தூரத்தை நீரில் சேர்த்துக் குழைக்கவும். செப்புத்தகட்டின் மேலே பூசி, கசபுடமிட கிழிச்சுண்ணம் கிடைக்கும்.

சுன்னமாம், இரச[6] சுண்ணமிது பாரு
சூட்சத்தில் விளையாடும் வேதையாலே
வன்னமாம், சரக்கறுபத்து நாலும் சாகும்
அபந்தமும், உபநிதமும், உபரசங்கள் சாகும்
அன்னமாயிது சரக்கெல்லாகு, மகுட
அறுபத்து நாலு சுண்ணம், செந்தூரமாகும்
வின்னமது, வாகும்[7] சொர்ன மதினாலே
வேதைகளெல்லாம்[8], முடியு வாதி யென்னே. *(754)*

*(உரை:)* தாம்பிர சுண்ணம், நுட்பமாகச் செயல்படும் சரக்குகள் 64ம், உபரசங்கள் 120 செந்தூரமாக்கப் பயன்படும். இரசவாதத்திற்கு மணி முடிபோலத்திகழும்.

---

1. பாயாதய்யா, 2. கவுதமது, 3. பதனமெனும், 4. கட்டு, 5. கருவான, 6. தாம்பிர, 7. ஆகாது, 8. கொல்லா

**இரசித பற்பம்**

ஆதியாம், பூலோக பூபதியென்றும் பேரு
அருளினோம், சவுமியத்தில் ஆடுமிகும் சூட்சம்
வாதியெனும், வருவோர்க்கு, இரு நூறும் சொன்னோம்
வசனித்தோம், இரசிதபற்பமது வேயாகில் ?
சேதியிது, வெகுபேரென்னால் சொல்லப் போமோ ?
சேட்டுமம், கோழைபோம், மூலச்சூடும் போம்
பூதியாம், பற்பதில், பூபதியேயிட்டுப் போற்றவாய்
மண்டலந்தானுண்டு கரையே. (755)

*(உரை:)* இரசவாதிகளுக்கு, அகத்தியர் 200 என்ற நூலைக் கூறினேன். இரசபற்பம் முதன்மையான, உலக அரசன் எனப்படும். இதைப் பற்றி சவுமிய சாகரம் என்ற நூலில், நுணுக்கமாகக் கூறியுள்ளேன். இதன் அழகை, என்னால் எடுத்துரைக்க முடியுமா ? இதனால், கபம், சளி, மூலச்சூடு மண்டலம் உண்டு வர நீங்கும்.

கரையாத, கல் போலாம், திரேகமானால்
கசமான[1], மேகமெல்லாங் கழன்றே போச்சு
திரையான, காமியத்தில் வெகுசாய், நொந்தால்
திரேகம் போம், குண்டழியும், சடலம் பாழாம்
பறையான, விந்தழிந்து, சூடே[2] கொண்டால்
பாவத்தால் நோயுண்டாம்[3], தீயாலாச்சு
வரையாறும்[4], கடப்பதற்கு[5] இரசிதபற்பம்
வசனித்தோம், சுந்தரமே, வறுமை
வாராதென்றே. (756)

*(உரை:)* உடல் கல்போல வன்மையுள்ளதாகும். ஒரு மண்டலம் வெள்ளி பற்பத்தை உண்பதால் பிறமேகம் நீங்கும். மேக நோயில், ஆண் உறுப்பு வலியுடனிருக்கும் உடல் வலிமை இழக்கும். விந்து இயல்பான தன்மையிலிருந்து மாறுபடும். நோயுள்ள பெண்ணிடத்தில் இன்பம் துய்ப்பதால், மூலச்சூடு உண்டாகும். இதற்கு முதல் காரணம்,

755ம் பாடல் வரிகள் மாறியுள்ளன. 3,4 அடிகள் முன்னால் வருதல் வேண்டும்.
1. கசலான, 2. சஞ்டெ, 3. முடியுண்டாய், 4. பூரையாறும், 5. கேட்ப.

கலவியில் ஏற்படும் உடல் வெப்பமாகும். மனைவியைத் தவிர, பிற பெண்களைச் சேருவதால் ஏற்படும், பாவம் காரணமாக நோயுண்டாகும். (நூலாசிரியர் காலத்தில், மேகநோய் ஏற்படக் காரணமாக கிருமிகளைப் பற்றிய நோய் இயல் இல்லை. எனவே, இது பாவத்தைச் செய்வதால் ஏற்படுவதாகக் கூறுகின்றார்.) இந்த நோயை வெல்ல, வெள்ளி பற்பத்தை உண்ண, நோய் தீரும்.

வாரான, செந்தமிழ் மாமுனிவரோதும்
வடமொழிக் கதீத இந்நூலெண்ணூறு பீடம்
நேரான, ஏமதத்துவ மெண்ணூறுக்குள்ளே
நேர்மையாம், கருக்குருவிதிலே தோன்றும்
சேரான முப்புவும், வெளியாய்ச் சொன்னோம்
சிறப்பான, வழலையுட பேரும் சொன்னோம்
காரான, காவியந்தான் சித்தர்க்கெல்லாம்
காட்டினோம், இந்நூல் போலருளினோமே. (757)

(உரை:) செந்தமிழ் முனிவனான அகத்தியர் கூறும் இந்த நூல் 800 அடிப்படையாகும். ஏமதத்துவம் 800ல் அடிப்படையான கருப்பொருள் தோன்றும். முப்புவைப் பற்றிய செய்திகள் வெளிப்படையாகச் சொல்லியுள்ளேன். வழலையின் பெயர்களைச் சொன்னேன். சித்தர்களுக் கெல்லாம் இந்நூலை காவியமாகக் காட்டி, அருள் செய்தோம்.

அருளான, வாதியிது மாந்திரிகம்
அதனுடைய கரு, பா, வரிவாய் சொல்வோம்
ஒருளான, சகலருமே, ஒளித்த குருவிது தான்
ஓகோகோ, லோகபதி செந்தூரங் கொண்டு
வருளான, இந்திரகோப, மின்னொளிப்பூச்சி
வையகத்தில், பச்சைநாபிவீதம், விராகனெடைதான்
எருளான[1], புனுகுடனே, கத்தூரி பணவெடைதான்
இதனைத்தான், உள்[2] பண்ணி, செந்தூரமதில்சேரே. (758)

1. கருவான, 2. தூள்

சேர்த்துவரை, சொல்லுக்கொன்று, அப்பால்[1] ஓட்டி விடு
செயமான, நாத[2] செய நீரைச் சேரிட்டு
பார்த்ததை, மத்தித்து, அதன் மேலோடு மூடி
மகத்தான வெண் கருவால் கவசமது செய்து
ஆர்த்துப் பூநீறு மண்ணுச் சீலை யேழும், விறகால்[3]
ஆன பிறகெடுத்து, அதனைப் பாண்டமதிலிட்டுப்
பார்த்தொரு, பச்சைப் பாம்பை யடித்ததில் போட்டுப்
பரிவான புற்றுமண்ணும், சந்து வாய் செய்யே. (759)

செய்து, மண்டலம் சுடு காட்டிலிதைப் புதைத்துச்
செப்பினோமெடுத்துப் பார்த்தீரேயாகில்
நய்து[4], இரசப்பாண்டம், தாண்டமதாய் முழுதும்
நிற்கும், நாடதிலே, கருவறிந்தோர் நண்பாய் செய்வார்
அய்து, பாண்டமதற்குள்ளே, இருந்தக்கப்பாலோடு[5]
அதிரசமாய் முழுவதும், வாலை பத்திரமாய் காணும்
மய்ந்துக்குள்ளோன், சீலரத்தின பூபதி
மகத்தான, களைக்கொடி[6], மாணிக்கமாமே. (760)

மாணிக்கமாம், மாந்திரிகக் கருவேயாகும்
மகத்தான, கருவது போலே, யாரும் சொல்லார்
ஆணிக்கமாம், இதுவாது[7], நிமைப் போதில்[8]
அட்டமா சித்து முதலாடும்... ... ... ...
காணிக்கமாம், கருவாகச் சேயொளித்த சித்தர்[9]
கருக்குருவாம்[10], இந்த எண்ணூறுக் கவியாய்
வாணிக்கமாம், கருவாளி நீயேயானால்
வசனித்துக்கருவதனைச் சிமிழில் வையே. (761)

### சால நூல் வகைகள்

வையப்பா, சுந்தரமே, புலத்தியனே கேளு
புகழான, சிவசால சத்திச் சாலம்

1. கபால, 2. ஆனந்த, 3. விந்தால், 4. நெய்து, 5. கபால ஓடு, 6. கோடி, 7. வரதி, 8. நிலைகொள்ளும், 9. வரசித்தருக்கு, 10 குருவிந்த.

மையப்பா, சண்முக சால மதுவேயாகும்
மானதாம், சக்காதேவி, மூலமுறு லட்சம்
மெய்யப்பா, மண்டலத்தில் தேவி வசியஞ்செய்து
மகத்தான, பூசை களி கூறச் செய்து
பொய்யப்பா, சொல்லவில்லை, புலத்தியா கேள்
அகத்தியனிட, மகாசாலம் ஆயிரத்திரு நூறே. *(762)*

நூறான இந்திர சாலம், மயேந்திர சாலம்
ஓகோகோ, கெசகரணம், கோகரணந்தான்
சேரான, செப்படிச் சல்லிய சாலம்
செகசாலம், ஆயிரத்திரு நூறுக்கும்
ஆரான, அறுபத்து சாலம், அனேகவித்தை
அதுரண சாத்திரமாகில் ... ... ... ...
கோரான, சூத்திரங்கள் கோடாகோடி
கூறினோம், இந்த எண்ணூறில் குழந்தை கட்கு. *(763)*

மருவான, பூமலரின் வாசம் போல வசனித்தோம்
அகராதி[1], நிகண்டாய்ச் சொன்னோம்
அருவான, இக்குருவை அருளினோம் பார்
ஆறாவது காண்ட மதீத வித்தை,
புருவான, புண்ணியர்க்கே யெய்து மிந்நூல்
பொல்லாத, காமுகர்க்கு, புகலா தெண்ணே. *(764)*

*(உரை:)* பாடல் 762 முதல் 764 வரை அகத்தியரின் நூல் மகாசாலம் 1200 என்பது குறிக்கப்படுகின்றது. இந்நூலில் சிவசாலம், சத்திச்சாலம், சண்முகசாலம் என்ற விளையாட்டுகள் குழந்தைகளை மகிழ்விக்கக் கூறுவதாக நூலாசிரியர் விளக்குகின்றார்.

(Magic) விளையாட்டுகளாக இந்திரசாலம், மகேந்திர சாலம், கசகரணம், கோகரணம், சல்லிய சாலம் என்பனவான 64 வகை சாலங்கள் அகத்தியர் 1200ல் உள்ளன.

---

1. அருளாதி

**பஞ்சாட்சரத்தின் விவரம்**

எண்ணவே, ஐந்தெழுத்தின் விவரமெல்லாம்
எடுத்து ரைப்போம், சுந்தரமே கேளு[1]
எண்ணவே, பிருதுவியோடப்பு தேயு
பேரான, வாயாகாசத்தோடஞ்சு
அன்னவே, சத்தத்தோடு ஆறுமாகில்
ஆதாரமாறு, மாசில் மூலாதாரம்
மன்னவே[2], சுவாதிட்டானம், மணி பூரகந்தான்
அனாகதம், விசுத்தியாக்கினை யோடாறே.[3] *(765)*

*(உரை:)* ஐந்தெழுத்தான நமச்சிவாய என்ற எழுத்துக்களை எடுத்துக் கூறுகின்றேன். நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்தும் ஒலியோடு ஆறு என்ற எண்ணிக்கையில் உள்ளன. உடலுக்கு அடிப்படை யானவைகள், மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்பன.

ஆறான, பிருதுவி நகாரமாகில் மகத்தான
அப்புவுக்கு மகார மதுவாகில்
தேறான, தேயுவுக்குச் சிகாரமதுவாகில்
தெளிவான, வாயுவுக்கு வகாரமதுவாகில்
ஆறான, ஆகாசம், யகரமதுவாகில்
ஐந்தெழுத்தாலு லகம் நின்ற மகத்துவமாகும்
நேரான, பூதமைந்து, வீடேயாது[4]
நேர்மைபெறு, எழுத்தஞ்சுவோட ஒன்றாச்சே. *(766)*

*(உரை:)* நமச்சிவாயத்திலுள்ள எழுத்துக்கள் ஒன்றாக உள்ளன. ந என்ற எழுத்து நிலம், ம என்ற எழுத்து நீர், சி என்ற எழுத்து தீ, வா என்ற எழுத்து காற்று, ய என்ற எழுத்து ஆகாய வெளியையும் குறிக்கும்.

---

1. எடுத்துரைப்போம், 2. என்னவே, 3. போட்டாறே, 4. வீடேயாகும்.

### ஓங்காரத்தின் பெயர்கள்

ஆச்சப்பா, புலத்தியனே, யகார மென்றும் பெயர்[1]
அடவான, ஓங்கார மென்றும் பெயர்
வாச்சாப்பா, வைத்தமென்று, தளதமென்றும் பேரு
வசனித்தோம், அதுகஞ்ச மென்[2] றும் பேரு
நாச்சப்பா, நாவழுதமென்றும் பேரு
நளிதமென்ற, உபநிகழ்த மென்றும் பேரு
பாச்சப்பா, பதிழ்கார[3] மென்றும் பேரு
பாடினோமிந்தப்படி வோங்காரத்தின் பேரே. *(767)*

*(உரை:)* யகாரம், ஓங்காரம், வைத்தம், தளதம், கஞ்சம், நாவழுதம், உபநிகழ்தம், பதிழ்காரம் என்பன ஓம் என்ற எழுத்தின் பெயர்கள்.

### நகாரத்தின் பெயர்கள்

பேரான, பிரமழா[4] வென்றும் பேரு
வளமான, ஆராழதக வென்றும் பேரு
வேரான, நிசாரழமென்றும் பேரு
வளமான, ஆராழதக மென்றும் பேரு
வேரான, விந்துழா என்றும் பேரு
விழாச்சழ மென்றதற்குப் பேருண்டாச்சு
காரான, கலாவித மென்றும் பேரு
கருணைபெறச் சொல்லவில்லை, நகாரத்தின்[5]
பேரே. *(768)*

*(உரை:)* பிரமழா, ஆராழதகம், நிசாரழம், விந்துழா, விழாச்சழம், கலாவிதம் என்பன ந என்ற எழுத்தின் பெயர்கள்.

---

1. பேரு, 2. களஞ்சம், 3. பதழ்தராகம், 4. பித்தமழாகம், 5. மகாரத்தின்.

768ம் பாடலில் உள்ள 2ம் அடி, சரசுவதி மகால் சுவடியில் இல்லை. பாடலின் 2ம் அடி 4ம் அடியாக மீண்டும் வந்துள்ளது.

## மகாரத்தின் பெயர்கள்

நகாரமென்ற, மகாரசாதம், மடமூாதங்கம்
நலமான மணிபோதமென்றும் பேரு
அகாரமென்ற, அழல்தார[1] மென்றும் பேரு
அருளினோம், முதலாலய[2] மென்றும் பேரு
வகாரமென்ற, பழிதீதர[3] மென்றும் பேரு
வசனித்தோம், கானாதி நாத[4] மென்றும் பேரு
தகாரமென்ற, தாரநிகழ[5] மென்றும் பேரு
தருவான, அட்சரமாம், மகாரத்தின் பேரே. *(769)*

*(உரை:)* ம என்ற எழுத்தின் பெயர்கள்; மகார சாத(ம்), மடமூாதங்கம், மணி போதம், அழல் தாரம் முதலாலயம், பழிதீதரம், கானாதி நாதம் என்பன.

## சிகாரத்தின் பெயர்கள்

மகாரமாம், ருத்திராங்[6] கஞ்சி, வராங்கமென்றும் பேரு
நாம் சொன்னோம், நடுவணை பதியென்றும் பேரு
விகாரமாம், விழைசா, பாரிக மென்றும்[7] பேரு
விளங்கினோம், காயடாக[8], மென்றும் பேரு
நகாரம், நோன்புர[9] மென்றும் பேரு
நாத பாத[10] மென்றதற்குப் பேரு
நிகாரமாம், நிருவியென்றதற்குப் பேரு
நிலையான, சிகாரத்தினதீதப் பேரே. *(770)*

*(உரை:)* சி என்ற எழுத்தின் பெயர்கள், ருத்திராங் கஞ்சி, வராங்கம், நடுவணை பதி (காரணப்பெயர்) விகாரம், விழை சாபரிகம், காயடாகம், நோன்புரம், நாதபாதம், நிருவி என்பன.

---

1. வளவராரம், 2. மழு தாலையம், 3. பனி, 4. மங்கனாதி நாதம், 5. தள, 6. மருத்திராம், 7. வினைசா, பாசரிகம், 8. தாயடகம், 9. நோன்புரம், 10. நபதபாதம்.

## வகாரத்தின் பெயர்கள்

அதீதமாம், வாசிப்பிரம மெ[1] ன்றும் பேரு
அலாதி கழாம்[2], பிரகாதியட்ச மெ[3]ன்றும் பேரு
மதீதமா, மலைபடலமென்றும் பேரு
மனோராதியென்றதற்குப் பேரு
அதீதமா, வாமமர[4] ாமென்றும் பேரு
வசனித்தோம், மங்கியானதரமென்றும் பேரு
நதீத, மாலாசர[5] மென்றும் பேரு
நாம் சொன்னோம், நன்றாக வகாரத்தின் பேரே.(771)

*(உரை:)* வாசிபிரமம், அலாதி கழாம், பிரகாதியட்சம், வாமபரம், மங்கியானதரம், மாலாசரம் என்பன வ என்ற எழுத்தின் பெயர்கள்.

## யகாரத்தின் பெயர்கள்

காரமென்ற, ஆக்கினமதா, இனந்தானென்றும்
கருவாகச் சொல்லுகிறோம், நமதாய[6] மென்றும்
ஆரமென்ற, வாதி, சாயக்கின[7] மென்றும் பேரு
அடவான, வலமோச நாதி யென்றும் பேரு
வாரமென்ற, வலபநாதி[8] யென்றும் பேரு
வளமான, சுடுதாதி சாச மென்றும் பேரு
சாரமென்ற, சத்தப்பரிபூரண மென்றும் பேரு
சாற்றினேன், சுந்தரமே, யகரத்தின் பேரே. (772)

*(உரை:)* காரம், ஆக்கினமதா, இனந்தான், நமதாயம், வாதி, சாயாக்கனம், வலமோசநாதி, வலபநாதி, சுடுதாதி சாசம், சத்தப்பரிபூரணம் என்பன ய என்ற எழுத்தின் பெயர்கள்.

---

1. படிறம், 2. கனாம், 3. பிரகாதீட்சரம், 4. வாமபரம், 5. மசழரம், 6.நியரதம், 7. நாயக சினம், 8. வலபநாரி.

சுந்தரமாம், எழுத்தின் பேர் நன்றாய் சொன்னோம்
சூட்சமாய், மூன்னெழுத்தின் பேர், நன்றாய் கேளு
அந்தரமா, எழுத்ததனை யாரும் காணாரையா
அருளினோம், இந்த எண்ணூறு காண்டம்[1]
முந்தரமாம், சகல[2] பீடமது யாரு, முன்னோர்கள் சொன்ன
மொழிக்கெல்லா, மிது கருதான்
மந்திரமாம்[3], பரிபாசை மகாக்கோடி, நூலின்
மறைப்பெல்லாம், வெளியாக அருளினோமோ. *(773)*

**ஐயின் பெயர்கள்**

அருளினோம், சுந்தரமே, இன்னுங் கேளு
ஆர், பீசங்கண்ட, பீச உம்மையுமருளினோம்
அருளினோம், மீறியசையாமல், அருமையாய்
வளமான, உருப்பேதமென்றும் பேரு
அருளினோம், நரிநாம[4], மென்றும் பேரு
நாம் சொன்னோம், பவாயமென்றும் பேரு
கருளினோம், கருடாய மென்றும் பேரு
கருணை பெறச் சொல்லிவிட்டோமையின் பேரே. *(774)*

*(உரை:)* எழுத்துகளின் பெயர்களை அழகாக நன்றாகக் கூறினேன். மூன்று எழுத்துக்களைப் பற்றிக் கூறுகின்றேன். இந்த எழுத்துக்களைப் பற்றி யாரும் அறியமாட்டார்கள். இந்த 800 பாடல்கள் உள்ள ஆறாம் காண்டத்தில் அருளுடன் கூறுகின்றேன். இது அடிப்படையானது. முன்னோர்கள் கூறியவற்றிற்கு இது அடிப்படையானது. மந்திர எழுத்துக்களின் மறைவான பொருள்களை, வெளிப் படையாக எடுத்துக்கூறுகின்றேன். மேலும் கூறுகின்றேன். கேட்கவும், பீசாட்சரம் என்ற மந்திர எழுத்துக்கள், பற்றியவைகளை அருள்கூர்ந்து விளக்குகிறேன். ஐயின் பெயர்கள் உருபேதம், நரிபேதம் (அரி) பவாயம், கருடாயம் என்பனவாம்.

---

1. ஆறாம் காண்டம், 2. சகல நூல் பீடம், 3. மித்திரமாய், 4. அரிநாமம் என்றதால் கூடும்.

## சவ்வின் பெயர்கள்

ஐயான, சவழாடம்[1], பசாடமென்றும் பேரு
அடவான, பாராயணமென்றதற்குப் பேரு
வையான[2], வசிராயழமென்றும் பேரு
வசனித்தோம், பிராடாழமென்றும் பேரு
பையான, பரிமாழ[3]மென்றும் பேரு
பது மலாதீத[4]மென்றதற்குப் பேரு
துய்யான[5], கூரிதாதிழ[6] மென்றும் பேரு
துருவான, சவ்வினிடதீதப் பேரே. (775)

(உரை:) சவழாடம், பசாடம், பாராயணம், வசிராயழம், பிராடாழம், பரிமாழம், பதுமலாதீதம், கூரிதாதிழம் என்பன ச என்ற எழுத்தின் பெயர்கள்.

## கிலியின் பெயர்கள்

சவ்வான, சங்கிகில கிரா மென்றும் பேரு
சாற்றினோம், கிரிபளியமென்றும் பேரு
அவ்வான, வாழாய மென்றும் பேரு
ஆதலின்[7], புலசம்படென்றும் பேரு
நவ்வான, நிறச்சாய மென்றும் பேரு
நளினமென்ற, கியாழதமென்றும் பேரு
பவ்வான, பம்படாயமென்றும் பேரு
பாடினோமிந்தப்படி, கிலியின் பேரே. (776)

(உரை:) சிங்கிலி கிராம், கிரிபளியம், வாழாயம், புலசம்படு, நிறச்சாயம், கியாழதம், பம்படாயம் என்பன கிலி என்ற எழுத்தின் பெயர்கள்.

---

1.சவழரிடம், 2. வைபான, 3. பரியாழம், 4. பதுமலபதீதம், 5.துயகானத்து, 6. துரிதாகிழம், 7. ஆதலினாம்.

பேரான, பேர்களெல்லாம், பொறுக்கி மணிபோலப்
பேசினோம், பரிபாசை விளைவதாக
மாறாத, காண்டமிது, ஆறாங் காண்டம்
மகத்தான, நிகண்டிது தானெண்ணூறு பீடம்
வாரான, பெரியோர்கள் சொன்ன மார்க்கம்
மறைத்து வைத்தார் நூல்களிட கருவை யெல்லாம்
சீரான, என் குருவின் கடாட்சத்தாலே
செப்பினோமிந்த எண்ணூறு காண்டமெட்டே. (777)

எட்டும் பத்தும், பதிணென் சித்தர்[1] சொன்ன
இயம்பினதோர் நிகண்டு பதினெட்டதாகும்
எட்டும், பத்தும், பார்த்திட்டால், நிகண்டு பதினெட்டில்
இயல்பான, நிகண்டிதுதான், அஞ்சு எண்ணூறு
எட்டும், பத்தும் அஞ்சுக்கு நிகரொவ்வாது
இயம்பினோம், ஐயாயிரந்தான் இயல்பாய் பாரு
சட்டமுடன், என் குருநாதன் அசுவனியாந்தேவர்
சாற்றினதோர், நிகண்டதனைப் பாரே. (778)

(உரை:) பெயர்களைத் தேர்வு செய்து கோவையாகத் திரட்டி, நூலாக்கினேன். ஆறாவது காண்டம், 800பாடல்களை யுடைய நூலின் அடிப்படையாகும். முன்னோர்கள் சொன்ன வழியில் மறைத்து வைத்த, மருத்துவ நூல்களின் சாரத்தை என் ஆசிரியரின் அருளால் 800 பாடல்களில் கூறினேன்.

மேலும் பதினெட்டு சித்தர்கள் செய்த நிகண்டுகளின் தொகை 18 ஆகும். இந்நிகண்டுகளை அறிந்தால், இந்நிகண்டு பஞ்சகாவியங்களுக்கான 800பாடல்களைக் கொண்ட நிகண்டு என உணரலாம். இது 18நிகண்டுகளை விட சிறந்தது. அகத்தியர் 5000ஐ படிக்கவும். அகத்தியரின் ஆசிரியர் அசுவனிதேவர்கள். இவர்களின் நிகண்டையும் பார்க்க, விளங்கும்.

1. பதிணென்பேர், 777ம் பாடல் தலைப்பு நிகண்டஞ்சரியுப்பு என்பது பொருத்தமின்மையால் மாற்றப்பட்டுள்ளது. 18 சித்தர்கள் நிகண்டு, அசுவனி தேவர்கள் நிகண்டு என்பன இன்று நடைமுறையில் இல்லை.

பாரப்பா, புலத்தியனே, சிவயோகி நீ, கேளும்
பாடினார், சிவவாக்கியர் ஆயிரத்திரு நூறு
ஆரப்பா, அதை அறிவார், இந்நூல் பாரு
அருளினோம், நிகண்[1] டெண்ணூறு சூட்சா சூட்சம்
தேரப்பா, இராம தேவர் ஐநூறு சொன்னார்
செப்பினார் மச்சமுனி ஒரெண்ணூறு
வீரப்பா, கருவூரார் சொன்ன மார்க்கம்
விசிதமது அறிவாளி காணுமாரே. (779)

*(உரை:)* சிவயோகியான, புலத்தியரே கேளும், சிவவாக்கியர் 1200 என்ற நூல் செய்தார். இதை யாரும் அறியவில்லை. எனவே 800 பாடல்களால் உள்ள நிகண்டை நுணுக்கமாகச் செய்தேன். இராமதேவர், 500 பாடல்களாலான நூல் மச்சமுனி 800 பாடல்களாலான நூல்களைச் செய்தார்கள் கருவூராரின் வழி அறிஞர்கள் கண்டறிவார்கள். இங்கு நிகண்டு செய்த காரணம் உள்ளது.

காணுமடா, மாமயிலே, கற்பனையாய் சொல்லிவிட்டார்
தோணுமென்றுப் போகார, உறுதியினாலறிவது, கேள்
காணு மடமயிலே, காவியத்தைப் போலொரு நூல்
ஊணு; புவியில் யோதுவர் கேள் வாழ்பவர்கள்
காணுமடா, மடமயிலே, கலைக்கோட்டு மா முனிவர்
ஓ மென்று, கருக் குருவாயோதினார் ஏனென்றால்
காணுமடா, மாமயிலே, கருவான அறு நூறு
மேதினியோர், தானறியார், மேவியிதே. (780)

*(உரை:)* பெண் மயிலே, கற்பனையாக சொல்லி வைத்தார்கள். இந்த காவியத்தைப் போல் நூலைக் காண இயலாது. கலைக்கோட்டு முனிவரான ரிசிய சிங்கர் இந்த நூலை அடிப்படையாகக்கொண்டு சாரத்தை அறிந்து கொண்டார், சாரமான 600 என்ற நூலை உலகத்தில் அறியமாட்டார்கள். (அகத்தியர் வைத்திய வல்லாதி 600)

---

1. சிகட

## கனயோகி சித்தி

மேவக் கேளிது அதிகம், மேதினியில் சித்தருக்கும்
தாவக்கேள் எண்ணூறு, தந்ததாய் முந்திநூல்
மேவக்கேளாயந்த, ஆதியந்த மேலண்டஞ் சூழ்ந்து நின்ற
பாவக்கேள், பரப்பிநிற்கும்[1], சுரூப மொன்றாம் அறிவதால்
மேவக்கேள், சுந்தரமே, மேலாம் பரவாசல் சாற்றக்கேள்
படுமனமே, தவியாதே, தீவினையாம்
மேலதிகம் சாயுச்சியம், பாவக்கேள்
இது யென்றும், பயநெறியே.[2] *(781)*

*(உரை:)* உலகில் சித்தர்களுக்கு *800* பாடல்கள் உள்ள நூலை தந்தேன். இதற்குமுன் உள்ள சித்த மருத்துவ நூல்கள், பல அண்டங்களைப் படைத்த இறைவன்போல் ஒன்றாகும்.

அறிவதற்கிடமே, வாலறியும் பொருளிது மூன்றும்
குறிதாட்சி இல்லாமை, கொடுமையினால், வருங்கணங் கேள்
அறிய குருவாசனையடுத்து ஒரு மன அறிவால்
பெருமனமே, தொண்டு கொள்[3], அறிய மகராசயோக[4]
அதன் பிறகு செய்திடுவார் அக்கரையறிவார்
மறையோர்கள் கருவிது பார், உரையறியா[5]
அறிவதாகு[6] உலகத்தோர்க்கு[7] ஒவ்வாது
அதிலொருவர் கனயோக மதிவுடையோர் காணுறாதே. *(782)*

## விருத்தம்

காணப்பா, புலத்தியனே, இராசயோகி
கருவான, நிகண்டிது தானாருங் காணார்
நாணப்பா, பூரணமா, எண்ணூறு பீடம்
நாதாக்கள், தேறு, அகராதி சித்தும்

---

1. நிறம், 2. பயனினியே, 3. தொண்டுக்கு நீகேள், 4. போகமதன், 5.அறிவார், 6. அறிவதற்கு, 7. மற்றோர்க்கு,

782ம் பாடலின் அமைப்பு சரிவர அமையவில்லை.

தோணப்பா, காண்டமெட்டாயிரம் சோடகசம்
சொல்லிவிட்டோம், மாந்திரிகக் கருவைவிட்டோம்
ஊணப்பா[1], காண்ட நிறஞ்சனந்தாம்[2]
ஒரு நூற்றறுபது பாடல் மொழிகள் முற்றே. *(783)*

*(உரை:)* புலத்தியனே, இராசயோகி, கருப்பொருளைக் கூறும் நிகண்டையாரும் படித்திருக்கமாட்டார்கள். இது 800பாடல்களைக் கொண்டு முழுமையானது. எட்டுக் காண்டத்தில் 1000 பாடல்கள், கவசம் போன்று சொன்னேன். மாந்திரிக காவியத்திற்கான கருப்பொருளைச் சொன்னேன். ஆறாம் காண்டம் 160 பாடல்களால் உள்ளது.

# ஏழாம் காண்டம்

## காப்புச் செய்யுள்

மொழியெனும், சுழிநடுவில் சுடரொளியாய்
நின்ற மூலகுரு, ஆதியந்த முதலே போற்றி
வழியமெனும், மூல குரு குண்டலியின் பாதம்
வல்லபை கணேசன், கந்தன் வைரவன் போற்றி
வழியெனும்[3], ரவிமதியும், பிரகாச வழியாகில்[4]
விளங்கும், அரசமையாகில் ஐம்பூதம் போற்றி
பொழிய மெனும், பூரணமாம், வேதாந்தத்தின்
பொறி ஐந்தின், கமலபதம், ஐம்பூதங்காப்பே. *(784)*

*(உரை:)* சுழிநடுவில் ஒளியாக உள்ள மூலமான ஆசிரியரின் திருவடிகளைப் போற்றுகின்றேன். ஆசிரியரின் குண்டலிப் பாதங்களை, வல்லப கணபதி, கந்தன், பைரவர், ஐம்பூதங்களைப் போற்றுகின்றேன். வேதாந்தம், ஐம்பொறி களானது, ஐம்பூதங்களின் தாமரைகளான திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன்.

---

1. ஆறாவது, 2. சனந்தான், 3. சுழியெனும், 4. பிரகா கூவறியாகில்

பூதமெனும், பூரணமாம் ஞானபீடம்
போத வேதாந்த, சிவசக்தி காப்பு
வாதமெனும், முப்பொருளின் கருவின் பீடம்
வாசிகுருவான, சிதம்பரத்தின் காப்பு
வேதமெனும், சதுர்வேத அம்பாள் பீடம்
விளங்கு, முக்கோண வாலை, கமலங் காப்பு
நாதமெனும், விந்து நாத பீடம் காப்பு
நாதாந்த, சொரூபத்தின் ஞானம் காப்பே. *(785)*

*(உரை:)* ஐம்பூதமான, முழுமை அறிவின் அடிப்படையாகும். வேதாந்தம், சிவசக்தி காக்கட்டும். காற்று என்ற பொருளின், கருப்பீடம், பிராணாயாமம் என்ற மூச்சுப்பயிற்சி சிதம்பரத்தின் காப்பு, நான்கு வேதங்கள் அம்மையின் அரியணையாக விளங்கும். முக்கோணமான, வாலையின் பாதகமலங்கள் காப்பாற்றட்டும்.

அருவமென்று, சித்தர் பதிணென் பேர்க்காக
அருளினோம், இந்த எண்ணூறு ஆதியந்தம்
கருவமென்னும்[1], சூட்சாதி சூட்சமிந்நூல்
சுருதி முடிவான[2] யெல்லாம், தொகுப்பாய்[3] க்காண
பெருவான, பருவமிதொன்று[4], நாமும் பாடினோம்
பரிபாசை பற்று நேராய், இருவில்லா[5]
இருவமென்றும் உற்பவித்தோம் ... ... ... ...
வேதாந்த மெண்ணூறு, காண்ட மென்றே. *(786)*

**(உரை:) 18 சித்தர்களுக்காக இந்த 800 பாடல்கள் உள்ள நிகண்டை இயற்றினோம். முன்னோர் மறைத்துள்ள நுணுக்கங்களை, காதால் கேட்டு வந்ததை தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.**

---

1. கருவருமனம், 2. முடிவான, 3. தொடுப்பாய், 4. பருவழிது, 5.விரிவில்லா,

786ஆவது பாடலில் 3, 4 வரிகள் முதலாக வருதல் வேண்டும்.

காண்டம், ஏழாவதிது கருவாய் சொல்வோம்
கமலமலர், அமிர்தமெனுங்கனியாக[1]
அண்டமா[2], மருவுள்ளோரறிய வென்று
அருளினோம், இந்த எண்ணூறு, கருவைக் காணு[3]
வண்டமாம், வாசியோகம், செய்வோருக்கு
வாத சித்தியாக வேணு மில்லாவிட்டால்
நாண்டமாம், தேவசித்தி தவறிப்போகும்
ஞான மெல்லாம், வெறும் பாழாய் போச்சு
போமே. *(787)*

*(உரை:)* 7வது காண்டத்தில் கருப்பொருளைக் கூறும் 800பாடல்களில் உள்ளே இருக்கும் நுணுக்கங்களை அறியலாம். சரப்பயிற்சி செய்கின்றவர்களுக்கு, இரசவாதம் பலிக்கவேண்டும். இல்லை என்றால் தெய்வத்தின் வெற்றி கிடைக்காது. அறிவு, வெறும் வெற்றிடமாகப் போகும்.

போமென்ற, பூரணமாம், ஆத்தாள்[4] சொன்னபுத்தியை
நாம் கேட்டிந்த எண்ணூறு தன்னில்
வாமென்ற, இரத்தினம் போல் இம்மொழியைச் சொன்னேன்
வசனித்தோம், கருக்களெல்லாம் காணச் சொன்னோம்
நாமென்ற, அறுவதனில்[5] இந்நூல் பாடி
நியாயமாய் காணுவதற்கு அருளிச் செய்தோம்
காமென்ற, பரிபாசைக் கருவாய் சொல்வோம்
இரத்தின பூபதியே[6], காணு, காணே. *(788)*

*(உரை:)* அம்மை சொன்ன அறிவை, முழுமையாய்க் கேட்டு 800 பாடல்களில், சுருக்கமாகக் கூறினோம். கருப்பொருளை எல்லாம் உரைத்தோம். இந்த நூலை நன்முறையில் இயற்றி, யாவரும் அறிந்துகொள்ள, அருள் செய்தோம். அரசரே, மறைபொருளை எல்லாம் கூறுவோம் பார்க்கவும்.

---

1. கனியுள்ளாக, 2. அண்டமாம், 3. காணும், 4. பத்தர், 5. வருவதனில், 6. கனக பூபதியே.

காணுதற்கு, வாசியோகம் செய்வாராகில்
கன்னியென்ற, மாயக் கன்னி மோகமாக
வாணுதற்கு, வஞ்சியர்மேலாசை கொண்டால்
வாலை யென்ற புருவமெல்லாமழிந்து போகும்
ஓணுமென்ற, ஓர் உறுதி தவமேயாகில்
ஓடிவிடும், ஆசையது ஒழிந்து போகும்
வேணுமென்ற, காயசித்தி நிலைக்குமாறு
விருந்தாந்த பயனறிந்து, விளம்புவோமே. *(789)*

விளம்புவோம், சுந்தரமே, நன்றாய்க் கேளு
விந்தொழிய, வேதாந்தம் வேறொன்றில்லை
விளம்பக்கேள், விந்தை விட்டால் நொந்து போவாய்
விதிதவறும், மதியதனால் நோய் தானாச்சு
விளம்பக்கேள், விந்து கல்லாகும் நேர்மை
விசிதமதாய், சொல்லுகின்றேன் ஏழாம் காண்டம்
விளம்பக்கேள், ஞான காவியத்துக்காக
வெகுநலமாய், மொழியுணர்வோம், விரும்பக்
கேளே. *(790)*

*(உரை:)* சரப்பயிற்சி செய்தால், பெண்களின் மீது விருப்பம் கொள்ளக்கூடாது. பெண்கள் மீது விருப்பம் கொள்ள, வாலையென்ற மிகுதி நீங்கும் உறுதியான தவம் விலகும். உடல் வன்மை பெற, பயனை அறிந்து கூறுவோம்.

விந்து வெளிவிடாமல் இருக்க, வேறு எதுவும் இல்லை. விந்து நீங்க, வன்மை குறையும், விதிமுறைகள் யாவும் மாற்றமடையும், நோய்கள் ஏற்படும். விந்து கல் போலாக உள்ள முறைகளை உண்மையுடன் கூறுவேன். ஞான காவியத்திற்காக ஏழாவது காண்டம் கூறுவேன். நன்றாக இதை விருப்பமுடன் உணரலாம்.

## எட்டுத் திங்கள் பற்பம்

கேளப்பா, புலத்தியனே, இராசயோகி ஓர்
கணிதமதாய்ச் சொல்லுகிறோம்
கேளப்பா, எட்டு திங்கள் பிண்டம் வாங்கி
பேரான, உள்மூலஞ்[1] சுத்திசெய்து
நாளப்பா, செல்லாது[2] சவ்வைப் போக்கி
நளினமதாய், ரோமமெல்லாங் கழட்டி எறிந்து
மூளப்பா மூலஞ்சுத்தி நன்றாய் செய்து
மூதண்டப் பிண்டமதை சரக்காய்[3] செய்யே. (791)

செய்யப்பா, சுந்தரமே உலர்ந்தாரகெடுத்து
செயமான நரகத்தில் உணி பலந்தான் கொண்டு
அய்யப்பா, சரகு உணி இரண்டதுவுங் கொண்டு
அடவான கல்லுரலிலிது ரெண்டுமிட்டு
வைய்யப்பா, சாமமிரண்டு இருப்பு உலக்கையதனால்
வளமாகச் சாடயிலே மா போலதுவாகும்
மெய்யப்பா, மாவதனைத் தோண்டிப் பாண்டத்திட்டு
செயலான பனிநீர் விந்து நாதமாமே. (792)

நாதவிந்து ஒவ்வொன்று பலமைந்து வாங்கி
நளினமதாய், பனிநீர் படியொன்று விட்டு
ஆதமாங்கா, மதுவால் கலக்கியதைக் கரைத்து
அண்ணு முழுதொரு நாளுந்தெளியவைத்தீராகில்
வாதமென்ற மஸ்து வைப்போல, வாத நீராகும்
வசனித்தோம் மறு நாளில் பார்த்தீரேயாகில்
சேதமொரு நாளுமது வாராதையா
செப்பினோம், மாமுனிவன் செந்தமிழில்தாமே. (793)

செப்பினதோர் தெளிவான, பாண்டத்திலிறுத்து
செதராமலடுப்பு மேல் பாண்டமதை வைத்து
அப்பினதோர், அடுப்பேற்றியவன், பகத்தான்
அடவாக ஒரு சாமம்[4], கொதிக்க வைத்தீராகில்

---

1. உள்மூலம், 2. வாது, 3. தலை, 4. பத்து

அப்பினதோர், வெண்மைக் குழம்பாகும்
அது பாரீர் நன்றாக வைப்பாகக் கண்டிரக்கிவைத்து
வன்டினதோர் தனை வைத்துப் பார்த்தீராகில்
வாத நீராகுமது, சீசாவில் இட்டிடாயே. *(794)*

**மதனப்பூ லேகியம்**

இட்டிடாய், மனோன்மணிதன் வாலை பூசை செய்து
எய்துமென்ற கரும மெல்லாம், இதிலாட எண்ணும்
கட்டிடாய், கமலமலர்த்த, அமிர்த முண்டதது போல்
கருணை பெறு, அம்பாள் மனக்கருவின் பூசை செய்து
நட்டிடா, இவன் முருக்கை, புனல் முருக்கை[1] யாகில்
நலமான, அதனுடைய பட்டையது வாங்கு
காட்டிடாய்[2], சங்கம் பட்டை, புங்கம் பட்டையாகில்
சமர்த்தான,வெள்ளைக் காக்கண வேருமாமே. *(795)*

ஆமென்ற, பூல விருட்சம்[3], கற்பாணிப் பட்டை
ஆதண்டப்பட்டை, அதாரி, வில்வப் பட்டை
நாமென்ற, நன்னாரிவேர்ப்பட்டையாகும்
நத்தைக்கும் வேர்ப்பட்டை, நாயுருவிப்பட்டை
வாமென்ற, அத்திப்பட்டை, அழிஞ்சிப்பட்டை
வளமான அமுக்ரா[4], கருந்துளசி வேரும்
போமென்ற, பொன்னாவரை வேரதுவுமாகும்
புகழான, வாண்டு நூர், மாம்பட்டையாமே. *(796)*

பட்டையாமிது வகைகள், பலமைந்து வாங்கிப்
பாடினோம், ஒவ்வொன்றுமிந்தப் படியால்
கட்டையாம், கடுக்காய்[5] பஞ்சாதிக்காய் பலந்தான்
கற்கடக சிங்கி, பலமே, அம்பலமாகும்[6]
தொட்டையாம்[7], தேத்தாங் கொட்டை பலமதுவாகும்
தெளிவான இலவங்கப் பட்டையது பலமாகும்
வெட்டையாம்[8], வெண் கரந்தைச் சமூலம்[9]
விளங்கு நல்லமிளகு பலம், சுக்கு பலமாமே. *(797)*

---

[illegible] சமூலம்பா, 4. வமுதரோ,
[illegible] பட்டை, 9. பலமாகும்.

பலமான, சன்னதும்பராட்டம் பலந்தான்
 பரிவான, தேவதாரம், அரத்தைப் பலமாகும்
செலவான, சீரகந்தான் பலமதுவுமாகும்
 சேங்கொட்டை ஐந்துபலம், கண்டுத்திப்பிலி [1]
வலமான [2], இதுவகைகள், ரவியுலர்த்தச் செய்து
 தாரம் சென்றெடுத்த தனைக் கல்லுரலில் தாக்கி
குலமான,வெழு உலக்கை கொண்டு [3], இரு சாமங் கூறாக
 இடித்ததனை மாவு போலாக்கே. *(798)*

*(உரை:)* பாடல் *795* முதல் *798* வரை மதனப்பூலேகியம் செய்முறை கூறப்படுகின்றது. முருக்கை, புனல்முருங்கைப் பட்டை, புங்கம்பட்டை, வெள்ளைக்காக்கணவேர், பூலவிருட்சம், கற்பாணிப்பட்டை, ஆதண்டப்பட்டை, அதாரி, வில்வவேர்ப்பட்டை, நன்னாரிவேர்ப்பட்டை, நத்தை, நாயுருவி, அத்தி, அழிஞ்சி வேர்ப்பட்டைகள், அசுவகந்தி, கருந்துளசி வேர், பொன்னாவரைவேர், மாம்பட்டை, வாண்டு நார் ? - தனித்தனியே 5 பலம் சாதிக்காய், கடுக்காய், கற்கடகசிங்கி, தேற்றாங்கொட்டை, இலவங்கப்பட்டை, வெள்ளைக்கரந்தை சமூலம், மிளகு, சுக்கு, சன்னதும்பராட்டம், தேவதாரம், அரத்தை, சீரகம் - வகைக்கு *1* பலம், சேங்கொட்டை 5 பலம், கண்டத்திப்பிலி பலம் எடுத்து, சூரிய ஒளியில் வைத்து பின்னர் உரலில் இருசாமங்கள் இடித்து மாவது போலாக்கவும். *(இப்பாடலானது முழுவதுமாக இல்லை)*

**சமாதி மண்டலம்**

ஆக்கியே, மாவது போல் வருதல் வாங்கி
 அப்பாகமது கண்டு தோண்டி அம்மாவை
வாக்கியே சட்டி கொண்டு சீலை,
 வாய்கட்டி மாவதனை அரித்துப் பதமாக்க நீர்கொண்டு

---

1. பலந்தான், 2. பலமான, 3. வேரானகரை கொண்டு,

788ம் பாடலில் 1, 2வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

போக்கியே, அந்நீரிலிம் மாவையிட்டுப்
பூரணமே, மனதுக்கது கரைத்தனையா
மாக்கியே, மண் சீலைக் கவசமது செய்து
மண்டலந்தான், சமாதிக்குள், புதைத்திடு வீர்தானே. (799)

தானென்ற, மண்டலத்தின் சென்றதானால்
தரு வாயதை யெடுத்துச் சீலை மண் வாங்கி
பானென்ற, பாண்டத்தைப் பார்த்தீரேயாகில்
பரியொளுவு நிறமது போய், பண்பாய்க் காணும்
வானென்ற, வாழ் மறையோர், முன்னோர் சொன்ன
மகத்தான, நன்னூல்களிட மறைப்பையெல்லாந்தான்
தேனென்ற, மொழியது போலிந்தநூலும்
தெளிவாக, வசனித்தோம், எண்ணூறாமே. (800)

வசனித்தோம், சுந்தரமே, நன்றாயக் கேளு
வளமான, வாமத்தால் நீர்தானாச்சு
அசனிப்போமிந்நீறு கிருதம், போலாம்
அக்கிருதமெடுத்ததனைப் பதனம் பண்ணு
நசனிப்போம், நாலுகண்சட்டிதனைக் கொண்டு
நல்ல பனைவெல்லஞ்சேர், சட்டிதனிலிட்டு
புசனிப்போம், அடுப்பேற்றி, வன்னியதை மூட்டிப்
புகழான, சட்டியதை அடுப்பு மேலேற்றே. (801)

**யோக கிருதம்**

ஏற்றி அடுப்பேற்றி, தீ மூட்டியதனால்
என்ன, சொல்வோம், பாகதுபோலாக வருதலது வாகும்
பூத்தமலர் வாசமது [1] போலதுவும் வீசும்
போதரவாய், இருசாமம் பாகமது வானால்
நாற்றிசையும், கீர்த்திபெறும், இந்த கிருதந்தான் [2]
நாதாக்கள் செய்யு முறை நளினமதுவாகும்
பார்த்திபனே, இருசாமம் சென்றுதேயாகில்
பலத்தவராய் [3], ... ... ...கிருதம் பாகுதனில் [4] சேரே. (802)

1. வாசம், 2. திறந்தான், 3. பலந்தலராய், 4. வரமதில்கிருதம்பாரு

சேர்த்துக் கனலாக்கினிபோல், வன்னியதை மூட்டி
செய்பாகந்தவறாமல், செப்பினோம், கிண்டுவாய்
சேர்த்ததைக்கிண்டிடவே, செழுமைநிறங்காணும்
சிவா சிவா, செப்பவொண்ணாதே... ... ...[1]
பார்த்திந்த, கிருத தென்னால் சொல்ல எளிதோ ?
பண்புடைய புலத்தியனே, பண்பாயிதைக் கேளு
பூத்தமலர் வாசமது போல்[2] எய்தெது வீசும்
பூரணமாம், கிருதமது பூசை செய்திடீரே. (803)

செய்திடுவீர், மகராச யோக பூபதியே
செப்பினதோர், கிருதமதை இறக்கியாற வைத்திடுவாய்
செய்திடுவாய், சிதம்பரத்தின் பூசையது செய்து
செயமாக வாலை மனேன்மணி பூசை செய்து
செய்திடுவாய், சத்தி, சிவ, தவ பலங்களாலே
செப்பினோம், செய்தையாகில் சித்திக்கு முண்மை
செய்திடுவாய், கிருதமதை சீசாத் தன்னிலிட்டு
சிவயோக முன், சித்திராசயோகஞ் செய்யே. (804)

செய்யு மடமயிலே, செய் இராச யோக மதின்
உய்யக் கண்டுணர்வாய், விதியுற்பவித்தோம்
செய்ய மடமாதேகேள், செகமனிதர், சிவயோகக்
கைவல்லியமாகதன், கருதுவதனைக் கண்டுணர்வாய்
மெய்யதனால்
செய்யமடமாதே கேள், சிவயோகஞ் செய்யும் விதம் மைவிழி
சேர்மாதவன்தன், மாயையதனால் பெய்யுயிர்
செய்யமடமாதேகேள், செகமழிந்து, விந்தினதாம்
பொய்யில்லை கன்மநோய் புகலுமாறே. (805)

*(உரை:)* இராச யோகத்தைச் செய்ய, பிறவிச் சுழலிலிருந்து மீள, வழியைக் காணலாம். உலகமனிதர்கள் சிவயோகத்தை உதவியாக உணருவார்கள். உடலால் சிவயோகம் செய்யும் முறை. உணரலாம். திருமால் தன் மாயையால், உயிர்கள், உலகம் அழியும், இது பொய் இல்லை. கன்மத்தால் நோய்கள் வருவதைக் கூறுவேன்.

---

1. அதன் பெருமை, 2. போலே. பாடல் 805ல் சரசுவதி மகால் சுவடியில் 5, 6,7,8, முதலடிகளாக, 1,2,3,4 என்று வந்துள்ளன. மேலும் புராணக்கருத்து இடம்பெறுகின்றது.

## மதியறிவு அறியவும்

மாதேகேள், பூமாதே, வையகத்தில் பிறவி சென்மம்
போகமதின் அறிவுடையோர், புவிதனில் மெய்யறிவுடையோர்
மாதேகேள், மவுன குரு, வாக்கியத்தால் வசனித்த
செகமனிதர் அறியவென்று, செப்பினோம் செந்தமிழால்
மாதேகேள், துலாராசி மகத்துவத்தால் மற்றவிதி
பேதமில்லை, நல்வினையின்[1] பெண் பாவம் பூதமைந்தின்
மாதேகேள், ஆறுண்டு, மறை நாலுவேத
முதலாதியது வங்கமெனும்[2] அட்சரமே. *(806)*

*(உரை:)* பெண்ணே கேட்கவும். உலகில் பிறப்பு என்பது (போதம்) அறிவாகும். அறிவுடையோர், மெய்யறிவுள்ளவர்களான ஆசிரியர்கள் கூறியது. இதனை உலகமக்கள் அறிவதற்குத் தமிழில் கூறியுள்ளோம். துலாராசியின் பெருமையால் மற்ற விதிகளில் மாற்றமில்லை. நல்வினையின், பெண்களின் இயல்பு, ஐம்பூதத்தில் வழியுள்ளது. நான்கு வேதங்களில் ருக்வேதத்தில், வ என்ற எழுத்து முதல் எழுத்து ஆகும்.

## வாசியோகம்

சிடமான, சீல ரத்தினஞ்சொல்லக் கேளப்பா
குறிமடமாது, யோனிதனில் ஆண்டிடுவார்[3] கடிவிசந்தான்
சடமான, படுமனமே, சித்திரவதையிதற் கெதிரே[4]
படைவெல்லும், பாம்போடே பழகாதே, எனத்திரு உனக்கு
படையான, நாக சர்ப்பம், பாரிலுள்ள சிவனுக்கு[5]
மாதுவிசமே, வருஅறிவுலக விதி நடமாடும் பதுமைகளின்
நாட்டில், பேய்ச்சுடையிது[6] தான்
உதமான, யோனியை விட்டொழிந்தவர்க்கே. *(807)*

---

1. வினையும், 2.அங்கமெனு, 3.மாண்டிடுவார், 4. இதற்கெதிரோ, 5,இது அதிகம், 6. பேச்சுடை.

ஒழியாத,மாந்தர்க்கு ஒருநூறே, ஆண்டொழிய
பழிபாவத் தீவினையால், பாதியரை குறைவில்லை பார்
பழியாதே, அவர்தன் பரிபூரணமே, ஒளி மதியறிந்து
தீவினையால் வருங்கன்ம மனமறியும்
சுழியாதே, வெளிக் கண்ணால்[1] காணுவதே மெய்யொழிய
வழி பினத்[2] தையுந்தான், மேவுங்காண்,
மேவினதால்
அழியாதே, மனமறிந்து, மகிழாதே, ஆண்மை[3] விரும்பழி
பாகமதின், கூட[4] பகைவருமே. *(808)*

(உரை:) சீவரத்தினமான பெண்ணே, கேட்கவும் பெண்களின் பிறப்புறுப்பால், நஞ்சாகி யாவரும் மாளுவார்கள், துன்பமடைவார்கள். இதற்கு எதிராக உள்ளவர்கள் (மூவாசைகளில் ஒன்றாக பெண்ணாசை உள்ளது) பாம்புடன் பழகாதே பாம்பென்றால் படையும் நடுங்கும் என்ற பழமொழியைச் சுட்டுகின்றார். இங்கு பாம்பு என்பது ஆகுபெயராகப் பாம்பின் படத்தைக் குறிக்கின்றது. பாம்பின் படத்தை பெண்களின் அல்குலுக்கிணையாகக் கூறுவது தமிழ் மரபு. பாம்பின் படம் அல்குல். அதன் நஞ்சு, யாவரையும் அழிக்கும் தன்மையது. எனவே பாம்புக்கடிக்கு பெண்ணாசையைக் கூறுகின்றார். நாகம், சிவனுடைய அணி.

மனிதர்களுக்கு 100 ஆண்டுகள் வாழ்ந்து முடியலாம். ஆயின் பழி பாவத்தால் 50 ஆண்டுகள், வாழலாம். இதனைக் குறை கூறாதே. அவர் முழுமை ஒளியான, அறிவை அறிந்தால் அடையலாம். தீய செயல்களால் வருகின்ற கன்மத்தை மனதானது அறிந்து தடுக்கலாம்.

வெளிக்கண்ணால் பார்ப்பது, மெய், இருகண்களால் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடைய வேண்டாம். ஆண்மையால், வருகின்ற பழிச்சொல், பங்குடன் பகையானது சேர்ந்துவரும்.

---

1. வெளிக்கென்நூல், 2. அனையுந்தான், 3. ஆண்மை, 4. இனங்கூட

வருமதியாவவ்வு மதி, மயங்கு திறவியத்த செய்யு மதி
இந்துமதி வருகுமதி பொய்யாது, மவுன
குரு நாயனருள் பெருகுமதி யெந்தமதி [1] பிறவிச் சென்மம்
ஒருவருக்குண்டு,
தருகுமதி மெஞ்ஞானமது [2] தானாயது பூ தீயோர்யெவர்க்கு
மிந்தமதியிருந்தால் எய்துங் காண் அறுவது தான்,
புருசமதி யோனிக் குப்பிறந்தகசுமலருக்கு வருகுமயமவர்க்கு
வன்மையதே. (809)

(உரை) வருகின்ற அறிவால், அறிவு மயங்கி, திறமையானது பயனில்லாமல் போகும். இவ்வாறு செய்யும் அறிவு, தி.ங்கள் போன்று வளரும் தன்மையுள்ளது. இது தவறாமல், பேசாமலிருக்க தலைவன் அருளால் பெருகும். பிறவியானது ஒருவருக்கு உண்டு. தரும் உண்மையான அறிவு, பெறும் அளிக்கும் தலைவன் தீவினை உள்ளவர்களுக்கு, இந்த அறிவு இருந்தால், அடையலாம் பார்க்க, ஆண்களின் அறிவு, கெட்டவர்களுக்கு, ஒட்டாமல் நிற்கும் தன்மையுள்ளது.

## வேறு விருத்தம்

வன்மையென்ற, புலத்தியனே, உனக்குரை சொல்வோம்
மாதளம்பூ நிறமுடையோர், வாசியோகம்,
அண்மை என்றாவது, யோக மார் தான் செய்வார்
அருளுகின்றோம், சுந்தரமே, அடவாய்க் கேளு
உண்மையென்ற, மவுன யோகஞ் செய்வாரையா
அழிஞ்சிவ, சிப்பி நிறமுடையோர் அறிந்து கொள்ளு
நன்மையென்ற, முன் சொன்ன சிவயோகமாகும்
நாதசத்தி, யோகம் பின் சொன்னதாமே. (810)

(உரை:) புலத்தியரே, கேட்கவும், வாசியோகம் அடைந்தவர்கள், மாதுளம்பூப் போன்ற சிவந்த வண்ண

1. என்ற, 2. யோக மார்க்கந்தான்.

முடையவர்கள். இவர்கள் யோக வழியில் என்றா செல்லுவார்கள். சிப்பி போன்ற வண்ணமுள்ளவர்கள், மோன நோன்பைக் கொண்டவர்கள். இது நன்மையான சிவயோகம் ஆகும்.

### யோகிகள் நிறம்

சொன்னதொரு, வகராச[1] யோகஞ் செய்தால்
சொர்னம் போல் நிறமும்[2] உடையோரவர் தானே
அன்னதொரு, சாந்தயோகஞ்[3] செய்வோர்
அவர் வெளுமை[4], சந்திரன் போலாவாரையா
சன்னதாம், சாதி[5], யோகஞ் செய்வாருக்குச்
சமத்தான, ரவி சூரிய[6] நிறமேயாகும்
கன்னதொரு, கனயோகஞ் செய்வாரைக்
கத்தூரி நிற முடையோரவர் தானே. (811)

அவரான, குளிகை வாயிலிட்டுத்தம்பித்தால்
அருளான, குளிகையோகநிறம், பளிங்கு, போலாம்
தவறாது , ஞானயோகம் செய்தாராகில்
தரணிதனிலது அதிக மேரு நிறமுமாகும்
பவரான, பசுபதியோகஞ் செய்தால்
பஞ்சலோக மது போல நிறமாகும்
கவரான, அட்டயோகம், நவயோகம் பார்
கருணை பெறச் சொல்லிவிட்டோம்
யோகமாமே. (812)

(உரை:) பாடல்கள் 810, 811ல் யோகிகளின் நிறங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வகராச யோகம் செய்தால் தங்கம் போல் வண்ணம் உண்டாகும். சாந்த யோகிகளின் வண்ணம், வெண்மையான நிலவை ஒத்திருக்கும். சாதியோகம் செய்வாரின் நிறம், சிவப்பு நிறமாகும், கனயோகம் செய்வார், மஞ்சள் வண்ணத்தவராவர்.

---

1.மகராச யோகம், 2. நிறம், 3. இராசரந்த, 4. வெறுமை, 5. சமாதி, 6.சூனிய.

குளிகை செய்வோர் மெய்யான பளிங்கு போல இருப் ஞான வெண்மையான இமயமலை த்தை ளைவிட்டு வெள்ள. பசுபதியோகம் செய்வோர் லோகத்தின் வண்ணத்திலிருப்பார்கள். கம், செய்வோர் உளர். யோகம் பற்றி ஆராய்ந்து சொல்

## குளிகை யோகம்

யோகமாம், மற்றெல்லாம், முன் சொன்ன கிருதம்
ஓகோகோ சொல்லுகிறோம், உத்துக்கேளு
ஆகாரந்தனப்பூ[1] லேகியந்தான் ... ... ... ...
அருளினதோர், யோகத்துக்கு சமாதி[2] யாகும்
நாதமாம், வாசியோகம் செய்ய வென்றால்
நல்ல பூபதி[3], மனலேகியத்தால்[4] .... .... ...
வாகமாம், வாசியது டிப்போச்சு[5] மண்டலந்தான்
நாளொன்றிற்கு வேளையுண்டு, பாரே. (813)

உண்டுபார், குன்றியிடைப் பிரமாணங் கொண்டு
உறுதிபெறுச் சுமியத்தின் சூத்திரமிந்நூல்
கண்டுபார், கருவி மாகச்[6] சொன்னோம்
கைபாகம், பாகம், எடைபாகம் சொன்னோம்
விண்டோம் பார் மது உண்பதற்கு[7]
விளக்கி , நால்வருசம் யோகத்தோர்க்கு
தொண்டுபார், யோக திரோகமது[8] செய்தால்
துன்பவினை அணுகாது, துரைபூபதி, நீயே. (814)

நீயான, வாசியோகம் செய்ய வென்றால்
நிகரொரு லகமதில், நின்போலுண்டோ
வாயான, மாயவலை தற்குள் அகப்படாதே[9]
மாண்டிடு [10], மாய்கை, விசம் கடித்ததாகில்[11]

---

1. ஆகமமாம், 2. 3. பூபல, 4. மதன, 5. கொண்டு, 6. கருவியாக, 7. அன்பதற்கு, 8. யாகமது, 9. அகப்படா, 10. எண்டிடுவாய், 11. விசமங்கத்துத்தால் பாடல் 813ல் மதனப்பூ லேகியந்தான் என்றாதல் வேண்டும்.

காயான, கனி மரத்திலிருந்தால் கண்ணுக்கு
கனிபோலிருந்தால், கார்க்கு நிழல் மரத்தைப்
பேயாகத்திரியாதே, எடுபிணம் கோலாவாய்[1]
பெற்ற தாயுண்ட சாரம்[2], பிள்ளையுண்ணும் பாரே. (815)

(உரை:) பாடல் 813 முதல் 815 வரை குளிகை யோகம் என்ற தலைப்பில் உள்ளது. பாடல் 795ல் உள்ள மதனப்பூ லேகியத்தின் தன்மைகளும், பாடல் 803ல் உள்ள நெய்யின் தன்மைகளும் இதில் கூறப்பட்டுள்ளன. முன்சொன்ன லேகியம் யோகத்திற்கு உள்ள சமாதியாகும். வாசியோகம் செய்ய, இந்த லேகியம் 48 நாட்கள் காலை மாலை இருவேளை உண்ணவும். அளவு: குன்றி எடை, மூச்சு கட்டுப்படும். அழகான சூத்திரங்களாலான இந்த நூலில், கருப்பொருளைச் சொன்னேன். இவற்றைச் செய்து காண்பாயாக. கை முறை, மருந்துகளின் செய்முறை, அளவு என்பன கூறினோம். நெய் உண்ணும் முறை விளக்கினோம். நான்கு ஆண்டு உண்டுவர, துன்பவினை தொடராது நீங்கும்.

வாசியோகம் செய்தால். உனக்கு ஒப்பாக ஒருவரும் இருக்கமாட்டார்கள். மாயை என்ற பொறியில் அகப்படாமல் இருக்கவும். அகப்பட்டால் உயிர் இழக்க நேரிடும்.

பெண்ணாசை, மாயை என்ற நஞ்சு ஏறினால் மரணமடையும் நிலை ஏற்படும். கனி மரத்தின் காய், கன்னிப் போய் இருந்தால், கண்ணினால், நிழல் மரத்தைக் காத்து வரவேண்டும். பேய் போலப் புலனடக்கமில்லாமல் திரியாதே. திரிய பிணமெனச் செயலின்றி இருப்பாய், பெற்றதாய் தரும் தாய்ப்பாலில் அவள் உண்ட உணவின் சாரம், குழந்தைக்கும் சேரும் இங்கு குழந்தை வளர்ப்பு பற்றிக் கூறுகின்றார். எனவே தாய், குழந்தைக்கு ஏற்புடைய உணவை உண்ணல் வேண்டும். இதில் குளிகையோகம் என்ற தலைப்பு பொருத்தமில்லாமல் உள்ளது.

---

1. போலாவாய், 2. சாதம்.

பாரும, பத்தினிமாதே கேள்[1], சொன்னோம்
பாடினோம், வாசியோக மதைத்தான் கேளு
ாரு, அதான[2] லேகியந்தான், தணியுந்தன்
தேறு மாலின்[3] பால், பசலை சொன்னோம்
பேரு, முனி யோர் மகிழ் பெறவே,
பேணியே, மண்டலங்கொள்...... ... ...
ரச் சொன்னால் சென்றால், சொல்லெளிதோ
வயதோ, பதினாறு, வருகுமென்றே பார். (816)

ண்மை[4]க்கனி, மாதரசே கேள்
தாழை, நெல்லி கருந்துளசி[5]
திண்மை, மறுக்காதிது[6] மூன்றின்
திரு சாறுபிழிந்த, சிரங்கை யெனும்[7]
உண்மை யாவின் பால் நாழி
ஒக்கவிட்டுக் கலந்திராய்
நன்மையுறு, மண்டல முண்டால்
நாளு மொன்றுக் கிருவேளை
துன்மை வரு காதுண்மை வரும்
துன்பமொருநாளு மணுகாது
அன்பனெனைப் போல் நீயாவாய்
அருள் சாயுச்சியபதவி யெனும்
வன்மை பெறும், பதினாறு வாழ்வாய்
மவுன பூபதி, நீயாவாய்... ... ...
பன்மை லேகிய இரு போது, பரிவாயுண்பீர்

(உரை: பத்தினித்தன்மையுள்ள பெண்ணே, கேட்பாயாக. நன்றாகச் சொன்னேன். வாசியோகம் குறித்துப் பாடினேன். மதனலேகியத்தின் சிறப்புகள் குறித்து கூறுகின்றேன். முனிவர்கள், மகிழ, 48 நாட்கள் உட்கொள்ளவும். 16 வயதாக மாறலாம். இதை எடுத்துக் கூறுதல் எளிதல்ல.

---

1. நன்றாய், 2. மதன, 3. மாலின், 4. தன்மை, 5. குருந்து, 6. வருக, 7.இவ்வடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

817ம் பாடல் அந்தாதி முறையில் அமையவில்லை.

குளிர்ச்சியுள்ள பழச்சாறு போன்ற பெண்ணை, கேட்பாயாக; தாழை, நெல்லி, கறுப்புத்துளசி என்ற மூன்றின் சாறு எடுக்கவும். உண்மையான பசும்பால் நாழி அளவு, ஒன்றுபடக் கலந்து 48 நாட்கள், இருவேளை நிதம் உட்கொள்ளவும். துன்பம் வராது. 16 வகையான பேறுகளும் பெற்று வாழலாம்.

**மவுன யோகத்துக்கனுபானம்**

*மாலே, மவுன யோகத்தால் வாசி கொண்டு*
*இருநாழிப் பாதையது, வளிக்கரைக் காண்பாய்*
*பாலித்திருப்பாய், மாதேயிது, மவுன[1] மெனும் ஆளார்[2]*
*பாதையறுவது[3], அதையறிவோர், பாவக் குறியை*
*மாதே, மவுன யோகமதால், வாழ்வார் பண்போல்*
*வாழ்க்கை காலையறிவோர், தலை யறிவார்*
*தடந்தோள்*
*மாதே, மவுன பரிபாசையாருமறியார், கரை காணாப்*
*போத அறிந்திடும், புண்ணியர்கள்,*
*புவியிலொருவன் புகழிதுவே. (818)*

*(உரை:)* பேசாநோன்பால், மூச்சை அடக்கி இருநாழியளவு, வளியின் கரையைக் காணலாம். மவுன யோகத்தால், இசையின் பண்போல் வாழலாம். (இங்கு இசை பற்றிப் பேசுகின்றார்) வாழ்க்கையில் வளியை அறிந்தவர்கள், வாழ்க்கையின் தலையானவற்றை அறிந்து, மும்மலங்களை அடக்கி ஆண்டு, கடப்பார்கள். பேசாமல் இருக்கும் மவுன பரிபாசையான மறை பொருளை எல்லோரும் அறியமுடியாது. இதனுடைய எல்லையை யாரும் காணமாட்டார்கள். புண்ணிய, உலகில் புகழ்பெறுவார்கள்.

---

1. வளி, 2. மாளார், 3. தனை.

818ம் பாடல் அந்தாதி முறையில் இல்லை.

## நாடி விருத்தம்

புகழு, மகராச யோகம், சொல்லக் கேளு
பூபதியே பனினீரு[1], மாலின் பாலும்
வகழுஞ்சரி ஒவ்வொன்று பலந்தான் நாலு
வன்மை பெறு, கையாந்தகரை, வரிப்பொடுதலையும்
நிகழலொன்று, அதில்விதம்[2], பலமெட்டு
நேர்பெறவே, வாங்கிச் சார், பாலதனில்[3] கலந்து
மகிழும்பூபதி, மதன லேகியந்தான் குன்றி[4]
மண்டலந்தான், ஒரு போது வுண்டு[5],
பாலுண்ணே. *(819)*

*(உரை:)* மகராசயோகம் பற்றிக் கூறுகின்றேன். அரசே, பனிநீர் (பன்னீர்) ஆவின்பால், கையான், பொடுதலை 4 பலம் சாறுகள் 8பலம் பாலில் கலக்கவும். மதன லேகியத்தில் குன்றி எடை, ஒருவேளை (இரு) 48 நாட்கள் உண்ணவும். பால் அருந்தவும்.

## ஒரு முலைப்பால்

உண்ணுமொரு, முலைப்பால், மதனப்பாலும்[6]
உபாய சஞ்சீவிப்பால், வன மூலிப்பாலும்
வண்ண மகாராச யோக வாமப்பாலும்
வடவாக்கினி[7] பாலும், திரிகோணப்பாலும் மழு[8]
கண்ணிப்பாலென்றும், பேரு பேரு
கண்ணுற வாடியதோர், பாலென்றும் பேரு[9]
கண்ணுற வாடியதோர், நெற்றிப்பால்
ஒரு முலைப்பாலின் பேரே. *(820)*

*(உரை:)* தாய்ப்பாலின் பெயர்கள் முலைப்பால், மதனப்பால், உபாய சஞ்சீவிப்பால், வன மூலிப்பால், மகராச யோக வாமப்பால், வடவாக்கினிப்பால் அழுகண்ணிப்பால், தொழு கண்ணிப்பால், நெற்றிப்பால் என்பனவாகும்.

---

1. பனினீரு, 2. அத்திவிகம், 3. பாலை, 4. ஏகி, 5. இரு, 6. சொன்னோம், 7.மடவாக்கினி, 8. அழுகண்ணி, 9. பெரு

பாலான லேகிய முப்பால் தானும்
பரிவான, மண்டலம் இருபோது கொண்டால்
வாலான, வாசியதை தம்பித்தேயாகில்[1]
மகத்தான வாசியது மண்டலத்தில் கட்டும்
காலான, எமனோடிப் போவார் பாரு
கருவான, மகாராசயோகஞ்சித்தியாச்சு
மேலான, லேகியமும், பாலும் உண்ணாட்டால்
விருதாவில், சடமழிந்து, விளங்காய் நீ பாரே. (821)

(உரை:) லேகியமும், முப்பாலும் 48 நாட்கள், இருவேளை உண்ண, மூச்சுப் பயிற்சியில் காற்றைக் கட்டலாம். 48 நாட்களில் இதைச் செய்யமுடியும். எமன் வரமாட்டான் லேகியமும், பாலும் உண்ணாவிடில் வெறுமையாக உடல் அழிந்துபோம்.

## இராசானந்த யோகம் (அனுபானம்)

பாரப்பா, சுந்தரமே, இராசானந்தயோகம்
பாடுகிறோம், நமதுநிலைக்க, பணறி[2] பெறத்தானும்
காரப்பா, கற்பூர வல்லிச்சாறு பலம் நாலு
கறுப்பு வெற்றிலையின் சாறதில்[3] பலம் நாலு
தேரப்பா, வேளைச் சாறு அதில் பலம் நாலு
தெளிவான மூன்று சாறு, ஆவின் பாலில்
ஆரப்பா, ஆறுபலம் பாலமுர்தந் தன்னில்
அச்சேறவிட்டு, நாளிறு போதுண்ணே. (822)

உண்ணப்பா, லேகியந்தான் இருபோதுண்ணு
உருவான, பாலதுதான் இரு போதுண்ணு
கண்ணப்பா, மண்டலந்தானாகில் இவ்விதம் கொண்டு,
கருவான இராசானந்த யோகஞ் செய்வீராய்

1. கம்பித்தேயாகில், 2. பண்டு (பணதி என்றாதல் வேண்டும்) 3. பண்டு,

நல் [illegible] பா, [illegible][1], நாற்பது நாள்தன்னில்
தன்மையதால் கட்டுமது நாம் சொன்னோம் பாரு
என்னப்பா, இந்தபடி[2] நாளொன்றுக் கைகா [illegible]
இரண்டு அறு நாழியில்[3], மூன்று வேளை
நம்பியே. (823)

(உரை:) இராசானந்த யோகம் பற்றி என்னுடைய தொழில் நிலைக்கப்பாடுகின்றேன். கற்பூரவல்லிச்சாறு 4 பலம், கறுப்பு வெற்றிலை 4 பலம், வேளைச்சாறு 4 பலம், இவற்றைப் பசும்பாலில் கலக்கவும். பின்னர் இருவேளை குடிக்கவும். 48 நாட்கள் குடிக்க, விந்து கட்டும்.

### சமாதி யோகம் (அனுபானம்)

வேளையெனும் மூன்றுதரம், தம்பித்தாயானால்
விளங்குமந்த, வாசியது, சகல கலை விளங்கும்
நாளைவென்று, வெகுநாள் நீயிருப்பாய் தானும்
நலமான, ராசானந்த யோக மதனாலே
காளையென்ற கற்போலா மாந்திரேகம்[4]
கவர்ச்சிகரமாகு[5], காயசித்தியாச்சுதப்பா
கருவாய் நாமும் சொன்னோம், கோழை யென்ற
கோழை யெல்லாம், மண்டலத்தில் போச்சு
கூறினால் இராசானந்த யோகமதுவாமே. (824)

(உரை:) மூன்று வேளை மூச்சுப்பிடிப்பைச் செய்தால் எல்லாக் கலைகளையும் அறியலாம். நீண்டகாலம் கற்பகாலம் போல வாழலாம். உடல் கல்போல ஆகும். உடலில் உள்ள கபத்தினால் ஏற்படும் சளிக்கட்டான கோழையும், வீரமற்ற தன்மையான கோழையுணர்வும், மண்டலத்தில் உட்கொள்ள நீங்கும்.

---

1. வாலது, 2. என்னப்பா விந்து, 3. அரேநாழி வீதி, 4. திரேகம், 5. வச்சிரமாகும்.

823ம் பாடலில் ஒரு அடி அதிகம் உள்ளது.

யோகமென்ற, யோகமதுக் கெல்லாம் பேரிதையா
ஓகோகோ, சமாதியோக, உறுதிபெறச் சொல்வோம்
அகமென்ற, ஆனை நெரிஞ்சில் பலம் நாலுமாகும்
அருளினோம், சீதேவிச்சாறு பலம் நான்கு[1]
வாக மென்ற, திருமேனிச் சாறு பலம் நான்கு
வளமாக யிடித்துச் சாறுபிழிந்து, நன்மையா
ஏகமென்ற, ஆவின் பாலெட்டுப் பலமாகும்
இச்சாறு[2] அப்பாலுாமென்று[3], கத்தாக்கே. (825)

தாக்கியே, பனை சர்க்கரை பலமொன்று தாக்கித்
தருவான, சீரகத்தூள் அரைப்பலந்தானிட்டு
ஆக்கியதை, மத்தித்து, லேகியத்தையுண்டு
அதன்பிறகு, இருநாழி[4], அடவாகச் சென்றால்
பாக்கியே, பாலதனை[5], உட்கொண்டிராகில்
பரிவாகச் சடலமெல்லாம், குளிர்ச்சி போல் காணும்
வாக்கியே, இந்தப்படி, மண்டலமிருபோது
வளமாகக் கொண்டிடவே, வாயுவைக் கட்டும் பாரே. (826)

பாரப்பா, சுந்தரமே, வாசியெல்லாங் கூடி
பண்புபெறும், சிகாரவீடு, பீடமதிலொடுங்கும்
ஆரப்பா, சமாதியோகம் ஆரறியப் போரார்
அறிந்தவர்தான், சாகாத கலையறிந்திருப்பார்
ஏரப்பா, கொண்டேறிவிளையாடு[6] ... ... ...
இரண்ட ரை நாளு[7], தம்பித்து மூன்று[8] வேளை சாதி
ஊரப்பா, இடங் கொள்ளா யிந்த, வித்தை பாரீர்
ஓகோகோ, பாலையுண்டு, லேகியத்தை யுண்ணே. (827)

(உரை:) யோகமென்ற யோகத்திற்கு பெயர், சமாதியோகமாகும் இதை உறுதியுடன் கூறுகின்றேன். ஆனை நெரிஞ்சில் 4 பலம், சீதேவி செழுங்கழுநீர்ச்சாறு 4பலம், திருமேனிச்சாறு 4 பலம் இத்துடன் பசும்பால் 8 பலம், இவற்றை ஒன்றுபட கலக்கவும். பனைச்சர்க்கரை 1 பலம், சீரகத்தூள் அரைப்பலம் சேர்க்கவும். லேகியத்துடன்

1. பலகாலும், 2. மரு, 3. மொன்றாய், 4. கேள், 5. பாகத்தனை, 6.அதுவிரண்டும் பகு, 7.நாழி, 8. முன்.

உட்கொள்ளவும். இருநாழிகை சென்றபின், பால் அருந்தவும். உடல் குளுமையாக இருக்கும். இருவேளை வீதம் 48 நாட்கள் உண்ணவும்.

சரப்பயிற்சி எல்லாம் கைவசமாகும். சமாதியோகத்தை எவரும் அறியமாட்டார்கள். இதை அறிந்தவர்கள், சாகாக் கலையை அறிவார்கள்.

**கனயோகத்துக்கனுமானம்**

உண்ணயிலே, வாமநீர்[1] ஊறு மதுவாகில்
ஒட்டியந்த அழுத்த மதையுள்ளுக்கு வாங்கி
அண்ணையிலே, அவ்வமுர்த முள்ளுக்குக் கொண்டிடவே
ஆறுவகை, அதிசியமண்ணும்[2], பார்க்கலாகும்
நிண்ணயமாம், நாம் சொன்னோம், வெளியாய் தானுமே
நிர்விகர்பம்[3], இதனுடைய நேர்மை யெல்லாம்
வண்ணையிலே, முன்னோர்க ளுரைத்தா ரையா
மகத்தான, கருவை யெல்லாம்,
வெளிவிண்டேனே. (828)

வெளியாகச் சொல்லுகின்றோம், அந்தரமேகேளு
விளங்கினோம், சமாதியோகங்கேளு
அளியாமல்[4], அனேக கால[5] மிருக்கலாகும்
அடவான பிரமியிலைச்சாறு பலம் நாலு
வெளியாத விட்ணு[6] கிரந்திச் சாறு பலம் நாலு
வெங்காரம், உளளி[7]ச் சாறதுவும் நாலுபலமாகும்
எளியாத இவை மூன்று சாறதுவுங் கொண்டு
எட்டுப்பலம் பாலதனில் கலந்து நீ கொள்ளே. (829)

கொள்ளப்பா, புலத்தியனே, இராசயோகி
கொண்டுவிடு, லேகியந்தான், நாளுக்கிருவேளை
எள்ளப்பா, இதுயிரண்டு பாலிரண்டு வேளை
என் மகனே, மண்டலந்தானுண்பாயானால்

---

1. வாமநீர், 2. அதிசய முண்ணும், 3. திருவிகற்பம், 4. அழியாமல், 5. மேல், 6.விடகிரந்தி, 7. அவுரி.

வெள்ளப்பா, வெண் சாணேதேகம் போல்
விளங்கினோம், சடலமெல்லாங் கட்டிப்போகும்
சுள்ளப்பா, தேகம் வாசி போலாகும்
அறவிறந்த, சதாகாலம் வாழலாமே. (830)

வாழ்வார்கள், நாளொன்று மூன்று வேளை
வாசியற்றலெழுந்து, கனயோகஞ்செய்தால்
ஆள்வோர்கள், அதிகாலம்[1] இருக்கலாம் பார்
அருளினதோர், சட்டையெல்லாம், கழன்றே போகும்
தாழ்பவர்கள், ஒருவரில்லை, புலத்தியாகேள்
தந்தைவிதி அமைப்பிருந்தால் தானே எய்தும்
மாள்பவர்கள்[2], அதீத[3] காலமிருக்கலாம் பார்
மகத்தான, கனயோகம் செய்யலாமே. (831)

(உரை:) பாடல் 828 முதல் 831 வரை கனயோகம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. பாலையும், இலேகியமும் உண்ண, பெண்களுக்கான சுரோணிதம் ஊறும். இனிப்பான அமிர்தம் உள்ளுக்கு வாங்கி, ஆறுவகையான அதிசயம் நடைபெறும். இதைப் பார்க்கலாம். இதை வெளிப்படையாக, முன்னோர்கள், உரைத்ததாகும். இதனுடைய சாரத்தை எடுத்துக்கூறினேன்.

சமாதியோகம் பற்றி விளக்குகின்றேன். கேட்கவும், இதனால் அதிக காலம் வாழலாம். பிரமியிலைச்சாறு, விட்ணு கிரந்திச்சாறு, பூண்டுச்சாறு வகைக்கு 4 பலம், பசும்பாலில் 8 பலம் இவற்றைப்பாலில் கலந்து உட்கொள்ளவும்.

இதனைக் கொள்ள, இராசயோகி ஆவாய், லேகியம், ஒரு நாளைக்கு இருவேளை, 48 நாட்கள் உட்கொள்ளவும். உடல் இறுகும், உடல் காற்றுப்போல இலேசாகும்.

ஒரு நாளைக்கு மூன்று வேளை, மூச்சுப்பயிற்சி செய்ய, அதிக நாட்கள் வாழலாம். உடலில் உள்ள தோல் யாவும் கழன்று போகும். விதியால், இது தானே ஏற்படும். கனயோகம் செய்யலாம்.

---

1. அதிகாரி, 2. ஆள்பவர்கள், 3. அதிகாலம்.

## குளிகை யோகத்துக்கனுமானம்

செய்யலாம், குளிகை யோகம் செப்பக் கேளு
சிறுகீரைச்சாறு பலம் நாலு வாங்கி
தொய்யப்பா[1], தொட்டால் வாடிச்சாறு பலம் நாலு
துருவான, பசலைச் சாற்றில் பலம் நாலு
அய்யப்பா, இவை மூன்று சாறுதனை வாங்கி
ஆவின் பாலெட்டுப்பலமாகத்தனியாகில்
மெய்யப்பா, அச்சாறு[2] பாலில்விட்டுக் கலந்து
மேன்மை பெறும், லேகியமும் முப்பாலும்
கொண்டாடியே. *(832)*

கொண்டிடுவாய், லேகியத்தை முன்னிமையாய்
கொண்டு கூறாகயிரு நாழி, சென்றதேயாகில்
வண்டிடுவாய், பாலைக் கொண்டதன் பிறகு
வசனித்தோம், பத்தியங்கொள், அதன்பின் பையா[3]
அண்டிடுவாய், மண்டலந்தான் கொண்டா யானால்
அதன்வேகம் என் சொல்வேன், புலத்தியா கேள்
கண்டிடுவாய், தொண்ணூற்றாறு[4] சட்டையது
கழறும்[5], கைலாச தேகமதாய், கனகம்[6]
போலாமே. *(833)*

கனகமெனுமோர் ஆண்டு, இவ்விதமுட் கொண்டால்
கைபோலாம்[7], சடலமது காயம் பலப்படுங்காண்
அனக மெனு மாற்று, வாசியதற்கழிவே யில்லை
ஆதியெனு மெய்ஞானப் பதவியாவார்... ... ...
வகை யெனும்[8], குளிகை யோகம், மகனே காண்பார்
மகத்தான, ரசவாத வித்தை யெல்லாஞ் சித்தி
கனக மெனும்[9], வாலை சித்தி, வசிய முதற்சித்தி
நலமான, ரசமணிகள் சித்தியாச்சே. *(834)*

---

1. கொய்யப்பா, 2. வச்சாறு, 3. பிறகைய்யா, 4. நாற்சட்டை, 5. சுழலும், 6. கண், 7. பெறலாம், 8. வகை, 9. நகைமெனும்.

சித்தியாம் ஞானயோகம் செய்யும் பேர்க்குச்
சிதறாமல் வாசிபலம் செப்பக்கேளு
பத்தியாம், உறுதிதவ அதீத ஞானம் ... ... ...
பலப்பலவாம், சஞ்சலத்தை வென்றபேர்க்கு
புத்தியாம், புருசரத்தின மாயவரேகும்[1]
பூச்சக்கர[2], வனமெல்லாமவரே ஆவர்[3]
வித்தியாம், பிண்டவித்தை[4], அவர்க்கென்னா நெய்
வேறு பல, தொழில்களுடன், சேரொட்டா. (835)

ஒட்டாத கருமமெல்லாம், மொழிந்தாயானால்[5]
ஒருபுத்தியப்ப வல்லோ சித்தியாச்சு
விட்டாசை, அப்பவல்லோ, ஒழிஞ்சு போச்சு
வெற்றித்தலங்கள் வேறுமாச்சு
தொட்டன அப்பவல்லோ, உதயமாவார் ... ... ...
தொழிலவர்க்கு, சூரிய சந்திரன் போல் காய்வர்
ஒட்டினால், ஞானிகட்கு எட்டாது[6] வேதமெல்லாம்
அவரவர்க் காய்[7] விளம்புந்தானே. (836)

தானான, ஞானிகளாய் சென்மக்கூறு
தரணிதனில் ஆதியிலே, ஒருவருக்கு
வானான, சிவனுமையாள், பிறவிசெய்தார்
வையத்தில், ஒருவர்க்கும் வாய்க்காதையா[8]
மானான, ஞானமதைக் காணொண்ணாது
மாணாக்காள், சிவயோகம் மகிழ்ந்து செய்வார்
வேனான, மெய்ஞானம், யோகஞ் செய்தால்[9]
வெள்வேலம்பட்டைச்சாறு[10]
அத்திப்பட்டைச்சாறே. (837)

சாறான, மாம்பட்டைச் சாறெடையாம்
மகத்தான ஒவ்வொன்று, வீதம் பலம் நான்கு
வாரான, பூமுலையாள், அமிர்தம் வாங்கி
வளமாகெட்டுப்பலத்தவிராய்க் கொண்டு

---

1. அவரே, 2. புவன, 3. ஆவார், 4. மண்ட, 5. மொழிந்தாரானால், 6. ஒட்டராது, 7. மவர்க்காய், 8. வாராதய்யா, 9. செய்வார், 10. சாரத்தின்.

மாரான, சாறைவிட்டுக் கரமதுவால் கலக்கி
மண்டல நாளிரு வேளை கொண்டீராகில்
காரான, லேகியந்தான் உண்ட பின்பு
காமமென்ற, மோகமதைக்கட்டும் பாரே. *(838)*

உண்டிடவே லேகியமும், பாலுமுண்டால்
ஓகோகோ, வெகுகாலம் வாழலாகும்
அண்டிடவே, மெஞ்ஞானமவர்க்கு சித்தி
அதீதக் கோடாகோடி, யுகமே வாழ்வர்
எண் திசைக்குச் சித்தரென்றும் பேருண்டாச்சு
எல்லார்க்கும் குருவாச்சு, தீட்சையாச்சு
கண்டிடுங்காண், மண்டைதனில் கல் தானொன்று
கருவாளி யேயறிவார், அந்தக்கல்லோ.[1] *(839)*

*(உரை:)* பாடல் 832 முதல் 842 வரை குளிகை யோகம் பற்றி உள்ளது. சிறுகீரைச்சாறு தொட்டால் வாடிச்சாறு, பசலைக்கீரைச்சாறு வகைக்கு 4 பலம், 8 பலம் பசும்பாலில் கலந்து குடிக்கவும்.

லேகியத்தை முதலில் உட்கொள்ளவும். இருநாழிகை சென்ற பின்னர், பாலை அருந்தவும். பத்தியமாக இருக்கவும். 48 நாட்கள் உட்கொள்ளவும். 96 முறை தோல் உரியும். உடல் பொன் வண்ணமாய் மாறும்.

ஓராண்டு உட்கொண்டால் கை போலாகும். உடல் வன்மையடையும். நன்னிலை அழியாமலிருக்கும். ஆதியான மெய்ஞானம் கிட்டும். குளிகை யோகத்தை அடைபவர்கள், இரசவாத வித்தைகளைச் செய்து வெற்றியடைவார்கள். இரசமணிகள் செய்வார்கள்.

ஞானயோகம் செய்பவர்களுக்கு, நன்னிலை அழியாது. உறுதியான தவம், அதிக அறிவு என்று பலப்பல. தடுமாற்றத்தை வென்றவர்கள் ஆண்களில் இரத்தினம் போலாவார்கள். பிண்ட வித்தைகள் அவருக்கு எந்நாளும் வரும்; வேறு தொழில்கள் செய்யமுடியாது.

---

1. கல்லோ கல்லு.

தொழில் உள்ளவர்கள், சூரியன் சந்திரன் போல் ஒளியுடனிருப்பார்கள். அறிஞர்களுக்கு எட்டாது.

ஞானிகளாக, பிறவியில் விதி வேண்டும். சிவன், அம்மையால் பிறவி எடுப்பார்கள். இது உலகில் எல்லாருக்கும் கிடைக்காது. சிவயோகம் மகிழ்ச்சியுடன் செய்வார்கள். வெள்வேலம் பட்டைச்சாறு, அத்திச்சாறு.

மாம்பட்டைச்சாறு 4 பலம், தாய்ப்பால் எட்டு பலம் சேர்த்துக் கலக்கி இருவேளை வீதம், 48 நாட்கள் குடிக்கவும். லேகியம் தின்ற பிறகு அருந்தவேண்டும். இவ்வாறு உண்ண, நீண்ட நாட்கள் வாழலாம். மெய்ஞானம் கிட்டும். சித்தர் என்ற பட்டம் கிடைக்கும். ஆசிரியராகப் போற்றப்படுவார். மண்டையிலே கல் ஒன்று உள்ளது. அதை கரு வேலை செய்பவர்கள் அதை அறியமுடியும்.

### விசக்கல்லெடுக்க

கல்லான, கல்லதனை எவருங் காணார்
காசினியில், மானிடரில் ஒருவருண்டு
அல்லானவன், தலைச்சன், சூத்திரசாதி
அதுவறிந்து, அவர் சிரசில் கல்லைவாங்கி
வில்லான, விசக்கல் அது தானாகும்
வெல்வதற்கும், கொல்வதற்கு மதனாலாகும்
பொல்லான, பாவிகளை மரணமாக்கும்
புவிதனிலே, சமாதிதனில் வைத்தப் பேர்காணே. (840)

பேரான, அக்கினியில் வைத்துக் கொளுத்தும் போது
பலமான மண்டைதனில் சூடுகொண்டால்
பாரான படீரென்று [1], தலை வெடிக்கும்
பறக்குமப்பா, கேசரந்தானகப் படாது
மாறான, மாணிக்க மனுசரில் காணும்
மகத்தான, பாம்புக்கு மாணிக்கமுண்டோ?
ஆரான, கல்லை விழுங்கினதேயாகில்
அன்று, விந்து கட்டிப் போகும், வாத சித்தியாமே. (841)

1. படிவென்று.

*(உரை:)* விசக்கல்லைப் பற்றிய செய்திகளை யாரும் அறியவில்லை. உலகில் மனிதர்களில் ஒருவனுக்கு மட்டும் அறிய முடியும். மூத்தவனான அவன், கருப்பொருள் அறிந்தவன். அவனிடமிருந்து தலைக்கல்லைப் பெறுதல் வேண்டும். இக்கல்லால்,வெற்றியடைவதும், கொல்வதும் முடியும்.

மனிதனைத் தீயிலிட்டுக் கொளுத்தும்போது மண்டை வெடிக்கும். தலைமயிர் கிட்டாது. மாணிக்கக்கல் மனிதர்களிடம் இருக்கும். பாம்புக்கு மாணிக்கக்கல் உள்ளதா? மனிதனின் விசக்கல்லை விழுங்க விந்து கெட்டிப்படும். இரசவாதத்தில் வெற்றி கிட்டும். சீவரத்தின கல் பன்னிரண்டு ஆண்டுகள் *(பிரம்மச்சரியவிரதம் கடைப்பிடிப்பவர்களுக்கு கல்லானது ஏற்படும் என்பது இலக்கிய புராண வழக்கு)*

## அட்டமாதொழில்

***சித்தியாம் பறக்கச்சே, சித்தரெதிர்ப்படுவார்***
***சீவரத்தினமிதுவென்று, வசியம் செய்து கொள்வார்***
***அத்தியாம் அக்கினியில் இறந்த பேர்க்கு***
***அகப்படாது, மாணாக்காள் சமாதிக்கல்லைக் காணு***
***வெற்றியாம், சமாதிதனில் வைத்து, மண்டலந்தான்***
***விளங்கவே, சென்ற தென்றால், விவேகமதாய் சென்று***
***விருத்தியாம்[1], சமாதிக் குழி வெட்டிப் பார்த்திட்டால்[2]***
***விசிதமாயன்று, வைத்தப்பின்[3] பது போலாமே. (842)***

***அதுவான, விசக்கல் மூங்கில் முளைத்தது போல்***
***மகத்தான, உச்சிவழி, வாசலெதிர்படும் காண்***
***அதுவான, அக்கல்லையெடுத்துச் சிமிழில் வைத்து***
***ஆவியா, மெய்ஞான பூசை செய்து... ... ...***
***அதுவான[4], உலகமதில், மனிதர் மாண்டிட்டால்[5]***
***வளமான இக்கல்லை முலைப்பாலிலுரைத்து***
***பதுவான, பாசமதாய், மூன்று வேளை கொண்டால்***
***பத்ம, கோடாகோடி யுகம், வாழலாமே. (843)***

---

1. வாத்தியாம், 2. வார்த்திட்டால், 3. பிணபது, 4. வது, 5. ஆண்டிட்டால்

வாழ்வார்க்கு, இக்கல்லை சுன்னஞ் செய்ய
மாட்டினோம் சவுமியத்தில் வளமாய் செய்து
ஆள்பவருக்கு அக்கல்லைச் சுண்ணஞ் செய்து
ஆடுவாய், பிண்ட வித்தை, தொழிலுக்காய்[1]
வாழ்பவர்க்கு, இச்சுண்ணமதால், பனிநீர் சுத்தி
மகத்தான அண்ட சுத்தி, பனிநீர் சுத்தி
நாள்பவர்க்கு, சுத்த சலமதீத சுத்தி
நலமான தொழிலெல்லாம், குரு, விதாச்சே. (844)

ஆச்சப்பா, யோகமதின் அனுபானம் சொன்னோம்
அட்டமா, தொழிலாடக் கரவைச் சொன்னோம்
நாச்சப்பா, நன்றாகச் சொல்லிப் போட்டோம்
நாலுதிசை, சித்தர்கள், அரியதாக[2]
வாச்சப்பா[3], புலத்தியனே, இந்த எண்ணூல்
மகத்தான, ஏழாவது காண்டமாகில்
பேச்சப்பா, ஒன்றுமில்லை, மற்றதெல்லாம்
பேய் மக்காள், அலையாதே, பேணிப்பாரே. (845)

(உரை:) சித்தர்கள், செயல்கள் வெற்றிபெறும் போது எதிரே வருவார்கள். சீவரத்தினக்கல் என அறிந்து, உன்னை வசியப்படுத்திக்கொள்வார்கள். தீயிலிடப்பட்டவர்களிடம், இக்கல்லானது கிடைக்காது. எனவே, புதைக்கப்பட்டவர் களிடம் எடுக்கலாம்.

இக்கல்லின் இலக்கணம், இது மூங்கில் முளை முளைத்தது போலிருக்கும். தலையின் வழியாக பிளந்து வெளியில் வரும். கண்டவுடன், கல்லைச்சிமிழில் எடுத்து வைத்துக்கொள்ளவும். மெய்ஞான பூசை செய்யவும். இக்கல்லை தாய்ப்பாலில் இழைத்து, மூன்றுவேளை உட்கொள்ளவும். தமிழ்ப்பேரெண்களில் ஒன்றான சங்கம்,பதுமம், கற்பம், வெள்ளம் என்ற நான்கில், பதுமகாலம் வரை வாழலாம்.

---

1. தொழிலுக்கெல்லாம், 2. கரு அறியதாக, 3.காச்சப்பா.

இக்கல்லை சுண்ணமாக்கினால் பிண்டவித்தை போன்ற தொழில்களுக்கு உதவும். அண்டத்தை தூய்மைப்படுத்துதல், பனிநீரைத் தூய்மையாக்கல் என்பன செய்யக்குருப்போல் பயன்படும். யோக மதிக்கனுபானம் சொன்னேன். எட்டுவிதமான தொழில்களைச் செய்யும் அடிப்படையான கருப்பொருளைச் சொன்னேன். நான்கு புறங்களிலும் உள்ள சித்தர்கள் அறிந்துகொள்ள, நன்றாகச் சொல்லிவிட்டோம். இந்த வெண்மையான நீரை 7வது காண்டத்தில், பேசுகின்றோம். வேறு ஏதுமில்லை, பேய் போன்று அலையாமல், இந்நூலைப்பற்றி நன்றாகப் பார்க்கவும்.

**யோகங்களின் பெயர்கள்**

பாரப்பா, சுந்தரமே, இன்னும் கேளு
பாடுகின்றோம், யோகமதின் பேரைக்கேளு
தேரப்பா, வாசியோக மவுன யோகம்
தெளிவான, மகாராசம்பத்தின் யோகமாகும்
ஏறப்பா, முன்னோர்கள், பசுபதியின் யோகம்
இயல்பான, இராசானந்தயோகம், சமாதியோகம்
வேரப்பா, குளிகை யோகம், ஞானயோகம்
வேதாந்தயோகம், கவுனயோகத்தின் பேரே. *(847)*

பேரான, சிவயோகஞ் சித்தியோகம்[1]
பேசினோம், கும்பயோகம், பூர்வயோகம்
தாரானயோகம்[2], நிட்டையோகம்
தருங்கவுன அண்டயோகம் , பிண்டயோகம்
காரான, பிராணயோகமாகும்
கருயோகம், குருயோகம், தீட்சயோகம்
ஆரான அதீதயோகம், அட்டயோகம்
அருளினோம் நாம், யோக மதீதப் பேரே. *(848)*

*(உரை:)* யோகங்களின் பெயர்களைக் கூறுகின்றேன். வாசியோகம், மவுனயோகம், மகராசசம்பத்யோகம், பசுபதியோகம், இராசானந்த யோகம், சமாதியோகம், வேதாந்த யோகம், கவுன யோகம்.

---

1. தவயோகம், 2. சத்தியோகமென்றால்.

சிவயோகம், சித்தியோகம், கும்பயோகம், பூர்வயோகம், நிட்டையோகம், கவுனகண்டயோகம், பிண்ட யோகம், கருயோகம், குருயோகம், தீட்சாயோகம், நாமயோகம், அட்டயோகம் என்பனவாம்.

## மூலாதாரப் பெயர்கள்

அதீதமெனும், குண்டலிகம், கவுனலிகம்
அருளான, கும்பலிகம், பிண்டாரிலிகம்
அதீதமெனும்[1], வகண்டரசமென்றும் பேரு
வாழ்குண்ட மென்றதற்குப் பேருண்டாச்சு
மதீதமெனும், மத்தகச மென்றும் பேரு
மகராசபூபதி என்று மதற்குப் பேரு[2]
நதீதமென்றும், தாரமென்று மதற்குப் பேரு
தராதர மென்றதற்குப் பேர், மூலாதாரத்தின் பேரே. *(848)*

*(உரை:)* மூலாதாரத்தின் பெயர்கள், குண்டலிகம், கும்பலிகம், பிண்டாரிலிகம், வகண்டரசம், வாழ்குண்டம், மத்தகசம், தாரம் என்பன.

## சுவாதிட்டானத்தின் பெயர்கள்

தாரமென்ற, நிராதாரம், நிருவியென்றும் பேரு
தருவான, சது தாரமென்றும் பேரு
ஆரமென்ற, வகோரவிரம மெ[3]ன்றும் பேரு
ஆதிசார மென்றதீதப் பேரு
சீரமென்ற, சிராதாபீடமென்றும் பேரு
செயலான, சூட்சாதி சூட்சமென்றும் பேரு
சூரமென்ற, சூட சடாதாரமென்றும் பேரு
சொல்லிவிட்டேன், சுவாதிட்டானசுதீதப் பேரே. *(849)*

*(உரை:)* சுவதிட்டானத்தின் பெயர்கள்; சதுதாரம் ஆரமென்ற வகோரவிரமம், சிராதாபீடம், சூடசடாதாரம் என்பன.

---

1. வதீதமெனும், 2. மகராசபூபதி என்றதற்கு, 3. வீரம்.

### மணிபூரகத்தின் பெயர்கள்

சொல்லியதோர், சூட்சமென்றும், தூலமென்றும்[1]
சொற்பமென்றும், உருவமென்றும் பேரு
அல்லியதோர், அந்தியென்றும், சந்தியென்றும் பேரு
அர்த்தராத்திரியென்றும் மதற்குப் பேரு
வல்லியதோர், தூதுக்கருவென்றும் பேரு
வச்சிரமயமென்றதற்கு அதீதப் பேரு
நல்லியதோர், நாம பீடமென்றும்[2] பேரு
நளின மென்ற, மணிபூரகத்தின் பேரே. (850)

(உரை:) சூட்சம், தூலம், சொற்பம், உருவம், அந்தி, சந்தி, அர்த்தராத்திரி, தூதுக்கரு, வச்சிரமயம், நாமபீடம், நளினம் என்பன மணிபூரகத்தின் பெயர்கள்.

### அனாகதத்தின் பெயர்கள்

மணியான, கீதாந்திரன், வாதாந்தர மென்றும்
மகத்தான, சிவருத்திர மழுவென்றும் பேரு
அணியான, வத்தராங்கி யென்றும் பேரு
அவரூபசாங்கம் என்றுமதற்குப் பேரு
வணியான, மந்திர பீடமென்றும் பேரு
வசனித்தோம், புருசாகமென்றும்[3] பேரு
கணியான, காலை கோட்டி விகார[4] மென்றும் பேரு
காலாதீச மென்றதற்கு, அநாகதத்தின் பேரே. (851)

(உரை:) கீதாந்திரன், வாதாந்தரன், சிவருத்திர மழு, வத்தராங்கி, அவரூபசாங்கம், மந்திரபீடம், புருசாகம், காலை கோட்டி, விகாரம், காலாதீசம் என்பன அனாகதத்தின் பெயர்கள்.

### விசுத்தியின் பெயர்கள்

அநாகதமாம்[5], பூரணியுத்திரமென்றும்[6] பேரு
அடவான, வகலாதி[7] யென்றும் பேரு
பதாகதமாம்[8], சுரூபமென்றும் பேரு
பன்மையாதி யென்றும் அதீதப் பேரு

---

1. தாலம், 2. நாமீபீடம், 3. புருசரகம், 4. கீதாந்தான, 5. அனுகதமாம், 6.பூரணாதி, 7. விசுவாதி, 8. புரகரூபம்.

விநாகதமாம், வீரகங்கமென்றும் பேரு
வெட்டவெளியென்றதற்குப் பேருண்டாச்சு
மாநாகமாமது[1] வாசியென்றும்[2] பேரு
வசனித்தோம், விசுத்திக்கதீதப் பேரே. (852)

(உரை:) பூரணியுத்திரம், வசுவாதி, சுரூபம், 'பயிமையாதி, வீரகங்கம், வெட்டவெளி, மாநாகம், வாசி என்பன விசுத்தியின் பெயர்கள்.

**ஆக்கினையின் பெயர்கள்**

வசனித்தோம், யோக சுரூபமென்றும்[3] பேரு
வளமான பசும்பாலை என்றும் பேரு
வசனித்தோம், அனாகதயே மென்று மதற்குப் பேரு
அகோரமயமாதியென்று மதற்குப் பேரு
நசனித்த, நவகோசாதிபதியென்றும் பேரு
நமஸ்து வால், என்றதற்கு அதீதப்பேரு
அசநித்த தூதாதியென்றும் பேரு, துருவமென்று
அதற்குப் பேராக்கினையின் பேரே. (853)

(உரை:) யோக சுரூபம், பசும்பாலை, அனாகதயேம், அகோரமயம் ஆதி, நவகோசாதி நமஸ்துவால், தூதாதி துருவம் என்பன ஆக்கினையின் பெயர்கள்.

பேரான, பேர்களெல்லாம் பொறுக்கி மணிபோல்
பேசினோம், இந்த எண்ணூறில் பிழை வாராதையா
தேரான, செந்தமிழ் மாமுனிவர் பேர்
தட்சணாயன் வசனித்தேன், மொழிபாரிதுவும்
வாரான, சித்தர்க்கெல்லாம், குருவாய்ச் சொன்னோம்
வையகத்தோரிதைக்[4] கண்டு, வளமாய் செய்வீர்
பாரான காண்டமெட்டு, பாடலாயிரந்தான்
பன்மை பெறு, மெய்ஞானக் காண்டம்
ஏழாமே. (854)

---

1, மறுகதமா, 2. மாதுவாசி, 3. யோகசுரூபமீசம், 4. வைத்தோர்.

(உரை:) பொறுக்கிய நவரத்தின கற்களைக்கொண்டு கட்டப்பட்ட மணியைப் போல இந்நூலைப் படைத்தேன். தட்சணாயனான அகத்தியன் எடுத்துக்கூறினேன். முதன்மையான நூலாக இதைச் செய்துள்ளேன். இதைப் படித்து மக்கள் வளமாக வாழவேண்டும். எட்டு காண்டம், ஆயிரம் பாடல்கள் உள்ள நூலில், ஏழாம் காண்டம், மெய்ஞானத்தைக் கூறும்.

## ஆதியின் பெயர்கள்

ஏழான, ஆதாரமாறும் சொன்னோம்
இயம்பு கிறோமாதியின் பேரியல்பாய் தானும்
வாழான, வாமமாதினி[1], மானமாதலம் தந்தாய்
உபசாரமென்றும் பேரு ... ... ... ...
ஆழமான, உடன்தோழா, வாமழாழ
மருளான, மனபெந்த உதந்தமென்றும் பேரு
காழான, அதீதமென்றும் பேரு
கருவாகச் சொல்லிவிட்டேன், ஆதியின் பேரே. (855)

(உரை:) ஆதாரங்களைப் பற்றிச் சொன்னேன். இயல்பாக, ஆதியின் பெயர்களைக் கூறுகின்றேன். வாமமாதினி, மான மாதவம், உபசாரம், உடன் தோழா, வாமழாழ, மனபெந்தம், உதந்தம், அதீதம் என்பன ஆதியின் பெயர்கள்.

## அறத்தின் பெயர்கள்

ஆதியென்றும், சோமநாதியென்றும் வநாதியென்றும்
அடவான[2], மயநாதி, அந்த நாதி யென்றும்
பாதியென்றும், பரமனாதி, பரமாத்மாயென்றும்
பண்ணப் பெறும், காமதங்கம், ஏம்பி, மதங்க
மென்றும்[3]

1. நிமானமாதி, 2. அடவான, 3. மசங்கம்

சாதியென்றும், நாதியென்றும்[1] பேரு
சாமயேமம் என்றதற்கு அதீதப்பேரு
நாதியென்று, நாவஒயிலாதி யென்றும் பேரு
நாம் சொன்னோம், பரிபாசையந்த அறத்தின[2] பேரே. *(856)*

*(உரை:)* ஆதி, சோமநாதி, வநாதி, மயநாதி, அந்தநாதி, பாதி, பரமனாதி, பலமாத்மா, காம தங்கம், ஏம்பி, மதங்கம் சாதி, நாதி, சாமயேமம், நாவ ஒயிலாதி என்பன அறத்தின் பெயர்கள்.

**விதியின் பெயர்கள்**

அந்தமென்ற ஆயாசம்[3] நியாய சங்கதி[4] யென்றும்
ஆலோசம், பாசலோந்தம், தந்தைலோசமென்றும்
விந்தமென்றும்[5], இருநியாச[6], மேவியந்திரனென்றும்
வினாயாசமென்றதற்கு அதீதப் பேரு
சொந்தமென்ற, சுலோக நாதியென்றும் பேரு
சுகநியாதி யென்றதற்குப் பேருண்டாச்சு
நந்த மென்ற, நவமியாதி யென்றும் பேரு
நாம் சொன்னோம், கருக்கிடையாய்விதியின்பேரே. *(857)*

*(உரை:)* விதியின் பெயர்கள், ஆயாசம், நியாய சங்கதி, ஆலோசம், பாசலோந்தம், தந்தைலோசம், இருநியாசம், மேவியந்திரன், வினாயாசம், சுலோக நாதி, சுகநியாதி, நவமியாதி என்பன.

**மதியின் பெயர்கள்**

விதியான, சுருதியாமம், நிருதியாம மென்றும்
விளக்கினோம், புட்பபண்ணியரென்றும் பேரு
பதியான, வேறு, மதிகாலனென்றும் பேரு
பட்சனக, சத்திராபதி[7], பலவகை தானென்றும்

---

1.வனாத, 2. அந்தரத்தின், 3. வாயாசம், 4. சந்தான், 5. வந்தம், 6. விரு, 7.சந்திராதி.

*சதியான, நாதமாய், கைமதிதானென்றும்*
*சாற்றினோம், சாங்கமதி பீடமென்றும் பேரு*
*கதியான, முடி வாழமென்றும் பேரு*
*சொல்லிவிட்டோம், ஒளியாக, மதியின் பேரே. (858)*

*(உரை:) மதியின் பெயர்கள், சுருதியாமம், நிருதி யாமம், புட்ப பண்ணியர், மதிகாலன், பட்சனக, சத்திராபதி, நாதம், கைமதி, சாங்கமதிபீடம், முடிவாழ் என்பன.*

**புத்தியின் பெயர்**

*மதியான புகழ்யென்றும், மகிழ்தானென்றும்*
*மறப்பென்றும், திறப்பென்றும், அடைப்பென்றும் பேரு*
நதியான, நன்மை சாத்திரமென்றும் பேரு
நட்சலாதி, இங்கிதமென்றுமதற்குப் பேரு
*அதியான, அலங்கார*[1] மென்றும் பேரு
**அதன்புத்தி, அதீத புத்தி, நல்லபுத்தி யென்றும்**
**கதியான,ஓரேபுத்தி, பொல்லாமை யென்றும் பேரு**
**கருணை பெறச் சொல்லிவிட்டோம், புத்தியின்**
**பேரே.(859)**

(உரை:) புகழ், மகிழ், மறப்பு, திறப்பு, அடைப்பு, நன்மை, சாத்திரம், நட்சலாதி, இங்கிதம், அலங்காரம், அதன்புத்தி, அதீதபுத்தி, நல்லபுத்தி, ஓரே புத்தி, பொல்லாமை என்பன புத்தியின் பெயர்கள்.

**அறிவின் பெயர்கள்**

புத்தியெனும், வாஞ்சையொடு,
பொறுமை அறிவென்றும், போதமய அறிவென்றும்
*அத்திஎனமாதி அறிவென்றும்*[2]
அனவறிவு, உதைறிவு[3], நிதவறிவென்றும்

---

1. வலங்காரம், 2. வந்த அறிவென்றும், 3. சுதையறிவு.

அறிவின் பெயர்கள் என்று தலைப்பிடப்பட்டிருந்தாலும், வகைகளே பாடலில் கூறப்பட்டுள்ளன.

பத்தியென்றும், விட்டறிவு, தொட்டறிவு என்றும்
பராபரத்தின் அறிவென்றும், பாடினோமிப்படித்தான்
சித்தியெனும், மெத்தறிவு, மன அறிவுதான்
செயம் பெறவே சொல்லிவிட்டோம், அறிவின்
பேரே. (860)

(உரை:) பொறுமை, அறிவு, போதமய அறிவு, மாதி அறிவு, உதைறிவு, நித அறிவு, விட்டறிவு, தொட்டறிவு, பராபரத்தின் அறிவு, மெத்தறிவு, மன அறிவு என்பன அறிவின் பெயர்கள்.

**தீட்சையின் பெயர்கள் (வகைகள்)**

அறிவான, கணேச தீட்சை, குண்டலிதன்[1] தீட்சை
அருவான சிவதீட்சை, சத்தி தீட்சை
அறிவான, எண்ணதீட்சை, சிதம்பரவாலை தீட்சை
அழகான, ஆறுமுகத்தோன், வயிரவன் தீட்சை
திருவானயோக தீட்சை, மெய்ஞான தீட்சை
தெளிவான, சித்தர்தீட்சை, லோக தீட்சை
கருவான, சரியை தீட்சை, கிரியை தீட்சை
சார்பான நவக்கிரக, வாம தீட்சையின் பேரே. (861)

வாம முனி[2], முன்னோர்கள், மறைத்த சூட்சம்
மாணாக்காள், இந்த எண்ணூறில் வசனித்தோம் நாம்
காமமெனும், காமுகர்க்கு, வாயாதையா
கருமிகளுக்கென்ன வரும் கருக்காணாது
நேமமெனும், கருக்களெல்லாம், வெகுவாய்க் கண்டு
நிறமுடையார், உலகருக்குக் காணச் சொன்னோம்
ஏமமெனும், சிவசொத்து யாருங் காணார்
எல்லோரும் கண்டதினால் எவர் எடுப்பாரறியே? (892)

(உரை:) கணேச தீட்சை, குண்டலிதீட்சை, சிவதீட்சை, சத்திதீட்சை, எண்ண தீட்சை, சிதம்பரவாலை தீட்சை, ஆறுமுகன் தீட்சை, வயிரவர் தீட்சை, யோக தீட்சை, மெய்ஞான தீட்சை, லோக தீட்சை, சரியை தீட்சை, கிரியைதீட்சை, நவக்கிரக தீட்சை, வாம தீட்சை என்பன தீட்சையின் வகைகள்.

---

1. குணமடந்தன், 2. வாமம் எனு.

முன்னோர்கள், மறைத்த நுணுக்கங்களை, 800 பாடல் களில் கூறினோன். இது காமுகர்களுக்குக்கிட்டாது. கருமிகளுக்கு கிட்டாது. அடிப்படையாக எல்லாவற்றையும் கண்டு, உலகத்தில் உள்ள மக்களுக்குச் சொன்னோம். சிவனுடைய சொத்தை எவரும் காணமாட்டார்கள். எல்லோரும் கண்டால், யார் பெறுவார்கள்.

## இரேசகத்தின் பெயர்கள்

அறிவான,சுந்தரமே, நன்றாய்க் கேளும்
அருளுகின்றோம், மாமுனிவனருளே காணும்
விரிவான தொன்றில்லை,மேலாம்பதியென்றும்
மேலான, சத்திரமென்றும் அதற்குப் பேரு
விரிவான, வேதமென்றும், விந்துவென்றும் பேரு
விகதி சமன்[1], நிகழாசமென்றும்[2] பேரு
அறிவான[3], வாதஉற்பகமென்றும்[4] பேரு
வாமசதா, பூமலிகம்[5] ரேசகத்தின் பேரே. *(863)*

(உரை:) இரேசகத்தின் பெயர்கள், பதி, சத்திரம், வேதம், விந்து, விகதிசமன், நிகிழாசம், விலாசம், போசம், வாத உற்பகம், வாமம், பூமலிங்கம் என்பன.

## பூரகத்தின் பெயர்கள்

ரேசகமாம், சுழிமை, நடுக்கமலபீடம்
நிலையற்ற, உபாய நிச மென்றும் பேரு
வாசமறு, கோணபதி, நாதக மென்றும்
வடகோண, அட்ட கோண[6], வாலையந்த[7] மென்றும்
பாசகமாம், பரை புருவமென்றும் பேரு
பாரமென்றும், பிரமாண்ட மென்று மதற்குப் பேரு
கோசமென்றும், பீச மென்றுமதற்குப் பேரு
கூறினோம், பரிபாசை பூரகத்தின் பேரே. *(864)*

---

1. விகதச, 2. மன நிகழாசம, 3. வரி, 4. உற்பதம், 5. மாமலிங்கம், 6.சட்டக்கோண, 7. யந்தரம்.

(உரை: பூரகத்தின் பெயர்கள், சுழிமை, நடுக்கமல பீடம், உபாயநிசம், கோணபதி, நாதகம், வடகோணம், அட்டகோணம், வாலையந்தம், பரை புருவம், பாரம், பிரமாண்டம், கோசம், பீசம் என்பன.

**கும்பகத்தின் பெயர்கள்**

பூரணமாம், அந்து[1] பந்தி, பாவநச மென்றும் பேரு
புகழான, மனோசக்தி பீடமென்றும் பேரு
காரணமாம், காவியமென்றதற்குப் பேரு
கருக்குருவுரு என்றதற்குப் பேரு
கிரணமா, மூலபதியென்றும் பேரு
சிவானந்த அனாதீதமென்றும் பேரு
பேரணமாம், பிண்ட உருவாதியென்றும் பேரு
பேதமய, நிராமயமாம், கும்பகத்தின் பேரே. (865)

(உரை:) அந்து பந்தி, பாவநசம், மனோசக்தி பீடம், காவியம், கருக்குரு, உரு, மூலபதி, சிவானந்த, அனாதீதம், பிண்ட உருவாதி, பேதமயம், நிராமயம் என்பன கும்பகத்தின் பெயர்கள்.

கும்பகத்தின் விழியே[2], கூறக்கேளனை வரும் துன்பமைந்த
பண்போர்கள், சொன்னவிது, பயனறிவார்
வம்பகத்தினோர், விதியே, வையகத்து மனிதருக்கு
நம்பா[3] சொன்ன நடையறியார், விண் பரவே
உம்பகத்தினோர், விழியே, உலகமதில் வாய் பினத்தி
நத்திநம்பவைத்து, கழுத்தறுத்திடுவார் நரசென்மம் நம்பாதே
அம்பகத்தினோர் விழியே, அயனாதி நிலை வேரறிவார் ?
பண்புடைய, புண்ணியவானொருவனுக்கே. (866)

(உரை:) கூறக்கேட்பாயாக, இதனால் பயனடைவார்கள், உலகில் உள்ள மனிதர்கள். நடைமுறைகளைக் கடைப்பிடிக்கமாட்டார். வாய் பிதற்றுவார்கள். மனிதர்கள் நம்பமாட்டார்கள். நல்லவினை செய்த ஒருவனுக்கே, இது கிடைக்கும்.

---

1. மந்த, 2. தீயேற்றிய விழி, 3. நம்பற. நம்பவைத்துக் கழுத்தறுத்தல் பழமொழி இப்பாடலில் உள்ளது.

## நாடிவிருத்தம் மண்டலத்தின் பெயர்கள்

வானான, சுந்தரமே, புலத்தியா கேள்
மண்டலத்தின் பேர்களெல்லாம், வசனிப்போம் பார்
நானான, ஆணவத்தால் சொல்லிப்போட்டேன்
நாடுதனில், ஒருவனுக்கு நல்ல சித்தி
வேனான, வெட்ட வெளியாகச் சொன்னோம்
வேதாந்த எண்ணூறின் பீடம்
மானான பூ மலரின்[1] வாசம் போல
வசனிப்போம், அதீதமெல்லாம் வசனிப்போமே. *(867)*

(உரை:) புலத்தியரே, கேட்கவும். மண்டலங்களை சூரிய சந்திர அக்னியின் பெயர்களை ஆணவத்தால் கூறுவோம். இதை நாடினால் வெற்றி கிடைக்கும். திறந்த மனதுடன் எடுத்து, நிகண்டு 800இல் அடிப்படையாகக் கூறினேன். இது பூவுக்கான மணம் போல உள்ளது.

## சூரிய மண்டலத்தின் பெயர்கள்

வசனிப்போம், பரமண்டலம், சதுர் மண்டலமென்றும்
வளமான, நதிமண்டலம், திருமண்டலமென்றும் பேரு
வசனிப்போம்[2], கண்ட[3] மண்டலமென்றும் பேரு
அருளினதோர், சாரூப மண்டலமென்றதற்குப் பேரு
துசனிப்போம், துதிநாத மண்டலமென்றதற்குப் பேரு
தோதமாம்[4], ரவிமண்டலமதற்குப் பேரு
நிசனிப்போம், நிராமய மண்டலமென்றும் பேரு
நிகரான, அநிய, மண்டலமதுவின் பேரே. *(868)*

(உரை:) பரமண்டலம், சதுர்மண்டலம், நதிமண்டலம், திருமண்டலம், கண்டமண்டலம், சாரூப மண்டலம், துதிநாத மண்டலம், ரவி மண்டலம், நிராமயமண்டலம், அநிய மண்டலம் என்பன சூரியமண்டலத்தின் பெயர்கள்.

---

1. பூநிலன், 867ம் பாடலில் நாடி என்றிருந்தாலும் நாடியைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. 2. அசனிப்போம், 3. அகண்ட, 4. தோதககார்.

## சந்திரமண்டலத்தின் பெயர்கள்

மண்டலமா, மதிமண்டலம், சத்தி மண்டலமென்று
மகத்தான, நீலாம்பரி மண்டலமென்றும் பேரு
அண்டலமா, ஆதி மண்டலமென்றும் பேரு
அருளினோம், வாசியதன் மண்டலமென்றும் பேரு
பெண்டலமாம், பிராண மண்டலமென்றும் பேரு
பேரான, வருணமண்டலமென்றும் பேரு
குண்டலமாம், பூதாதி [1] மண்டலமென்றும் பேரு
கூறினோம், சந்திர மண்டலமதுவின் பேரே. *(869)*

*(உரை:)* மதி மண்டலம், சத்தி மண்டலம், நீலாம்பரி மண்டலம், ஆதிமண்டலம், வாசியதன் மண்டலம், பிராண மண்டலம், வருண மண்டலம், பூதாதி மண்டலம் என்பன சந்திரமண்டலத்தின் பெயர்கள்.

## அக்கினி மண்டலம்

மதுவான, பகிரண்ட மண்டலமென்றும் பேரு
மகத்தான, நவகண்ட, திசைகண்ட மென்றும் பேரு
அதுவான, வான மண்டலமென்றும் பேரு
அருளினோம், கவுன மேகமண்டலமென்றும் பேரு
வதுவான, கருடமண்டல மென்றும் பேரு
வசனித்தோம், பரபிரம மண்டலமென்றும் பேரு
செதுவான அங்கியடர் 2 மண்டலமென்றும் பேரு
செப்பினோம், மும்மண்டத்தின் அக்கினி மண்டலப்
பேரே. *(870)*

*(உரை:)* பகிரண்ட மண்டலம், நவகண்டம், திசைகண்டம், வானமண்டலம், கவுன மேக மண்டலம், கருடமண்டலம், பரபிரமமண்டலம், அங்கிஅடர் என்பன அக்கினி மண்டலத்தின் பெயர்கள்.

---

1. பூபதி, 2. நடச இடிசக.869ம் பாடலில் 2,3வது அடிகள் சரசுவதி மகால் சுவடியில் மாறியுள்ளன. 3வது அடியானது 2வதாகவும்,2வது அடி 3வதாகவும் வந்துள்ளன.

## பிராணயம் பெயர்கள்

மண்டலமாம், சுக சீவாத்தும மென்றும் பேரு
மகத்தான, மனபூரணமென்றதற்குப் பேரு
அண்டலமா, மனப்பொறி[1] மய, ஆனந்த மென்றும் பேரு
அருளினோம், தயாநிதி என்றதற்குப் பேரு
கண்டமாம், கரணாதியென்றும் பேரு
கருவிநாச மென்றதற்கு அதீதப் பேரு
பிண்டமாம், பேசாதி காயமென்றும் பேரு
பேசினோம், அதீதமதால், பிராணயத்தின் பேரே.(871)

(உரை:) பிராணயத்தின் பெயர்கள்: சுகசீவாத்துமம், மனபூரணம், மனப்பொறி, மயம், ஆனந்தம், தயாநிதி, கரணாதி கருவி, நாகம், பேசாதிகாயம்.

## அவத்தைகள்

### சாக்கிரம் (நனவு)

மதீதமெனும், யாசகம்[2], வினாத மென்றும் பேரு
மகத்தான, நிராச மென்றும், கனயேக மென்றும்
அதீதமெனும்,அராதி[3], அனஉயிர்தானென்றும் பேரு
அருளுகின்றோம், சூரிய நாழாய[4] மென்றும் பேரு
அதீதமெனும், வாமரோதய மென்றும் பேரு
வளமான, குருநகாரியென்றதற்குப் பேரு
பதீதமெனும், பராபர மென்றதற்குப் பேரு
பாடினோம், இந்தப்படி சாக்கிரத்தின் பேரே. (872)

(உரை:) சித்த மருத்துவத்தில் எண்ணத்தின் நிலை (அவத்தை - நிலை) அவத்தைகள் எனப்படும் ஆறுவகைகள், நனவு, கனவு, சுழுத்தி, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம், இதில் நனவு நிலையின் பெயர்கள். யாசகம், வினாதம், நிராசம், கனயோகம், அராதி, அனஉயிர்,சூரிய நாழாயம், வாம ரோதயம், குருதகாரி, பராபரம் என்பன.

---

1. மன்பபோறி, 2. ஆசகம், 3. வராதி, 4. நானாயம்.

## கனவு (சொப்பனம்) பெயர்கள்

சாக்கிரமாம், பசுப்பவநீத மென்றும் பேரு
சயனாதி,லோப நாதி யென்றும் பேரு
வாக்கிரமாம், மதி, சாமழாடம்[1], நிகரென்றும் பேரு
வசனித்தோம், புசாம்பரி யென்றும் பேரு
ஆக்கிரமா, மவுட மாழி[2] யென்றும் பேரு
அடவான, பதுமராக[3] மென்றும் பேரு
நாக்கிரமா, நாறு புன்ன[4] மென்றும் பேரு
நாம் சொன்னோம், நளினமதாய் சொப்பனத்தின்
பேரே. *(875)*

*(உரை:)* பசுப்பவநீதம், சயானாதி, லோபநாதி, மதி, சாமழாடம், நிகர், புசாம்பரி, மவுடமாழி, பதுமராகம், நாறு புன்னம் என்பன கனவின் பெயர்கள்.

## சுழுத்தியின் பெயர்கள்

சொப்பனமாம், அஞ்சுகபோதம்[5], அயாநதிதானெ[6]ன்றும்
துஞ்சுகபேழா, நாகமென்ற[7]தற்குப் பேரு
நிற்பனமா, நிலையாதியென்றும் பேரு
நிசபோகமென்றதற்கு அதீதப் பேரு
கற்பனமாம், கருநாழி, வருவநாதியென்றும்
கலிபோக, புத்திராசமென்ற அதீதப்பேரு
அற்பமென்று, நினையாதே, ஆழிசங்கமென்றும்
அருளினோம், அதீதமதாய், சுழுத்தியதன்
பேரே.*(874)*

*(உரை:)* அஞ்சுகபோதம், அயாநதி, துஞ்சுகபேழா, நாகம், நிலையாதி, நிசபோகம், கருநாழி, வருவநாதி, கலிபோகம், புத்திராசம், ஆழிசங்கம் என்பன சுழுத்தியின் பெயர்கள்.

---

1. வாலைபட வகர மழாட, 2. மாட, 3. மதுனராகம், 4. நாழி, 5.சுகபோத, 6.மறைந்திதான், 7. நாசமென்றதற்கு.

## துரியத்தின் பெயர்கள்

*சுழியான வாய்விடம், மதிநாயகம், தூலசரம்*
*சர்மயோக விதமென்றும் பேரு*
*வளியான, வாலவிடம்[1] குமரிட போதவம்[2]*
*அக்கமாசி, இரசனைபூரம்[3] மென்றதற்குப் பேரு*
*தழியான,தலைவிதி, பாராயணமென்றும் பேரு*
*உளியான,உருவுயர்த்த,மதவாசியாகும்*
*உளகாதி, மேலுயர் துரியத்தின் பேரே. (875)*

*(உரை:)* வாய்விடம், மதி நாயகம், தூலசரம், சர்மயோகவிதம், வாலவிடம், குமரி, போதவம், அக்கமாசி, இரசனை பூரம், தலைவிதி, பாராயணம், மதவாசி என்பன துரியத்தின் பெயர்கள்.

## துரியாதீதத்தின் பெயர்கள்

*துரியமாம், கருணாபதி, பூசமாபதி, தோதனாபதி, மதனாபதி*
*துய்யபதியென்றும், ஆரியமாம் வஞ்சவதி,*
*ராசபதியென்றும்*
*வீரியமாம்[4], வஞ்சவதி ராச பதி யென்றும்*
*வாலைபதி, சுக விசுவாச பதி யென்றும்,*
*தருணாதபதி பூசாபதி யென்றும் பேரு*
... ... ... ... ... .... ... ... ... ... ... ... ... ... ...
*தனபதி, செயபதி,குருபதி, மதிபதி, சாயுச்சியபதி*
*யென்றும் பேரு*
*மாநாபதி[5], கனயோக பதிதான், கைலாயப் பேரு*
*முடி துரியாதீதத்தின் பேரே. (876)*

*(உரை:)* துரியாதீதத்தின் பெயர்கள்; கருணாபதி பூசமாபதி, தோதனாபதி, மதனாபதி, துய்யபதி, வஞ்சவதி, ராசபதி, சுகவிசுவாசபதி, தருணாதபதி, பூசாபதி, தனபதி, செயபதி, குருபதி, மதிபதி, சாயுச்சியபதி, மாநாபதி, கனயோகபதி என்பன.

---

1, மேலாவிடம், 2. குமரிடத, 3. சிரனை, 4. இவ்வரி சரசுவதி மகால் சுவடியில் உள்ளது. ஓர் சீர் குறைவாக உள்ளது. 5. கரிமானாதிபதி.

பேரென்ற, பேர்களெல்லாம், வெளியதாகப்
பேசுகின்றோம், சுந்தரமே, பேணிப்பாரு
ஆரென்ற, ஆதியந்த உருவாய் நின்ற
அண்டபிண்டத்தன, பரகதிவீரதுதான் பாரு[1]
வேரென்ற அச்சடரில் சுரூபம் தோன்றும்
மேலான பரகதி வீடது தான் பாரு ... ... ...
சீரென்ற, மேலாறு சனபயமுண்டு
செயசபையோரையா, வருத்தும்[2]
சீவனொன்றே. (877)

ஒன்றான, சுரூபமதையாருங் காணார்
ஒடுங்குது காண், நங்கெனவே ஒரெழுத்தாய்க் காணும்
அன்றான, வங்கமதி லெங்கும், உயிராய்
அதீத, சொரூப, வாசியதாய், சடமெல்லாம்
என்றான, எண்சாண்வீட்டுக்குள்ளே
எங்கையுந்தான் ஒருவாயு வாயுவாயிருக்கும் பாரு
நன்றான, நாபியடா, கமல பீடம்
நாற் பங்கு இப்பீடம், சுழிதானே. (878)

*(உரை:)* பெயர்கள் எல்லாவற்றையும் வெளிப் படையாகக் கூறுகின்றேன். முதலும், முடிவுமான உருவத்தை, ஆகாயத்தில் உள்ள பல்வேறு கோள்கள் பற்றியும், சுழல்வது பற்றியும் பார்க்கலாம். ஒளியுடன் உருவம் தோன்றும். மேலே வழியுள்ள சபை உள்ளது. வெற்றியுள்ள சபையது. உயிர்களை துன்பமுண்டாக்கும்.

ஒரே உருவத்தை யாரும் அறியமாட்டார்கள். இது ஒரே எழுத்தில் (ஓம்) இருக்கும் வளைவில் எங்கும் உயிராக, அதிகமான உருவமுடன், எண் சாணுள்ள உடலில் காற்றாக இருக்கும். தொப்புள்கொடி, தாமரையுள்ள சுழியான அடிப்பகுதியாகும்.

---

1. சச்சுடவில் மருநேர்மை, 2. தகும்.

**யோக நிலையறிய**

சுழியான, சுழிதனிலே மனக் கண்ணாட்டிச்
சொக்கியதோர், வெளிக் கண்ணாலுருட்டி நீயும்
வழியான, சூரியவாசல், சந்திரவாசல்
வடகலை, இடைகலையுமொன்றாயாச் சேர்த்து
அழியாத, வாசியினால் தம்பித்து நீயும்
மனக் கண்ணால், சுழினையோடு,
கும்பித்தாயானால்
விழியான, பிராணவழியங்கே காணாமல்
வாசல் ஆதார வீடுங் காணே. *(879)*

வீடான, ஆதாரவீடதாகும், மேவிநிற்கும்
வடகலையுமிட கலையுந்தான்
வீடான, வீடதுவும், கண்டாயானால் மெய்
சித்தி, மனஞ் சித்தி, அறிவுஞ் சித்தி
பாடான, எப்பாடு மொழிந்தே, போச்சு
பரமான கைலாயபீடங்காணலாச்சு
பூட்டான, பூட்டதுவும் தெறித்துப் போச்சு
பூரணமாம், தீபவொளி காணலாச்சே. *(880)*

(உரை:) தத்துவம் கூறப்படுகின்றது. சுழிமுனையில், மனத்தை ஒருமுகப்படுத்தவும். சூரியவாசல், சந்திரவாசல் என்பனவற்றைச் சேர்க்கவும். காற்றை நிறுத்தி சுழிமுனையுடன் ஒன்றவும். மூலாதாரம் முதலான வீட்டைக் காணவும்.

ஆறு ஆதாரங்கள் வீடாகும். இதில் வடகலை, இடகலையும் காணவும். கண்டால் மனத்தின் வெற்றி, அறிவின் வெற்றி கைலாசத்தின் இருப்பிடம் காணலாம். பூட்டுகளான தடைகள் நீங்க, தீபமான ஒளியானது உள்ளொளி தோன்றும். "ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கி" மணிவாசகர்.

**(சூரிய) கலை - வகைகள்**

காணுதற்கு, வீரக்கலையாதி, கலையாங்கு
கைலாயமேரு, கலைவாலை, கலையாகும்
வாணுதற்கு,வாமக்கலை, வஸ்துக் கலையாகும்
வாதகலை,பூதக்கலை, மவுனக் கலையாகும்
ஆணுதற்கு அவகண்டகலை, பிரும்மக் கலையாகும்
அருளான வாசிக்கலை, கவுனக் கலையாகும்
நாணுதற்கு, ஞானக்கலை, யோகக் கலையாகும்
நலமான வடகலைதான், சூரியகலையின் பேரே. *(881)*

*(உரை:)* சூரியகலையின் பெயர்கள், வீரக்கலை, ஆதிக்கலை, கைலாயமேரு, கலைவாலை, வாமக்கலை, பூதக்கலை, மவுனக்கலை, அவகண்ட கலை, பிரும்மக்கலை, வாசிக்கலை, கவுனக்கலை, ஞானக்கலை, யோகக்கலை என்பன.

**சந்திரகலையின் பெயர்கள்**

சூரியனாம், சோதிக்கலை, சுரூபக் கலையாகும்
சூட்சக் கலை, அந்தக்கலை, பிண்டக் கலையாகும்
அரியானம்[1], வர்ணக் கலையண்டக் கலையாகும்
அடவான பொறிக்கலை, பஞ்சக் கலையாகும்
ஆரியனாம்[2], குளிகைகலை[3], ஆதிக்கலைதான்
மாயக்கலை[4], போதமய விடக்கலை தானாகும்
தூரியனாம், துருவக் கலை, தீட்சைக் கலையாகும்
சொல்லிவிட்டோம், சூட்சமதாய், சந்திரகலையின்
பேரே. *(882)*

*(உரை:)* சோதிக்கலை, சுரூபக்கலை, சூட்சக்கலை, அந்தக் கலை, பிண்டக்கலை, வர்ணக்கலை, அண்டக்கலை, பொறிகலை, பஞ்சகலை, குளிகைக்கலை, ஆதிக்கலை, மாயக்கலை, போதமயவிடக்கலை, துருவக்கலை, தீட்சைக்கலை என்பன சந்திர கலையின் பெயர்கள்.

---

1. ஆரியனும், 2. வாரியனும், 3. கணிகாயதி, 4. மயக்கலை.

## வேதாந்திகள் பெயர்கள்

கலையான, காபிதமாம், பிதாவானென்றும்
கருவான, வேதமயவானென்றும் பேரு
அலையான, பூரணவிசனாத, பிசனதாவென்றும்
அருளினோம், மதிபாடா[1] என்றும் பேரு
பலையான, பதம் பாசுவா னென்றும் பேரு
பத்திரா மூர்த்தியென்று மவர்க்குப் பேரு
வலையான, வாக்கிய வேதாந்தி யென்றும் பேரு
வசனித்தோ மிந்தப்படி, வேதாந்திகளின் பேரே. *(883)*

*(உரை:)* வேதாந்திகளின் பெயர்கள்; காபிதம், பிதாவான், வேதமயவான், விசனதா, பிசனதா, மதிபாடா, பதம்பாசுவான், பத்திரா மூர்த்தி, வாக்கிய வேதாந்தி என்பன.

## வேதமுனிகள் பெயர்கள்

வேதமெனும், தபசி, சந்நியாசி, ரிசிகளென்றும்[2]
விளங்கும், தபோதனரென்றும்,
பெரியோரிவரென்றும்
ஆதமெனும், சாதிபர் என்ற வர்க்குப் பேரு
அண்டதாசியனென்றும், அனேக பேரவர்க்கு
பூதமெனும், பரசுரூபம் என்றவர்க்குப் பேரு
புகட்டினோம், மாதவ முனி யென்றும் பேரு
பேதமாம், தபோதனர்களென்றும் பேரு
பேசினோம், அதீதமாய், வேதமுனிவர்களின்
பெயரே. *(884)*

*(உரை:)* வேதம் கற்றவர்களின் பெயர்கள்: தபசி, சந்நியாசி, ரிசிகள், தபோதனர், சாதிபர், அண்டதாசியன், பரசுரூபம், மாதவமுனி என்பன.

---

1. அதிபாடா, 2. அந்தப்படி

### மவுனிகளின் பெயர்கள்

*பேரான, பேர்வாழி[1] பண் வயா குலவான், ஈசன்[2]*
*பலத்த, குருநாதன் என்று மவர்க்குப் பேரு*
*வாரான, வசிய செக மவுனியென்றும் பேரு*
*வளமான, மனமுடையா ரென்றவர்க்குப் பேரு*
*காரான, கடவுளென்றவர்க்குப் பேரு*
*கர்த்தனென்றும், மூப்பனென்று மவர்க்குப் பேரு*
*ஆரான, பாலை பசுபதியென்றும் பேரு*
*அருளினோம், புலத்தியனே, மவுனியின் பேரே.(885)*

*(உரை:)* வாரபன், வயா குலவான், ஈசன், குருநாதன், வசியசெகமவுனி, மனமுடையார், கடவுள், கர்த்தன், மூப்பன், பாலை பசுபதி என்பன பேசாமையைக் கடைப்பிடிக்கும் மவுனிகளின் பெயர்கள்.

### யோகிகளின் பெயர்கள்

*மவுனமென்ற சுத்தவான்; சுருதிமுடி என்று*
*மகத்தான, செயவாலை, யோகியென்றும் பேரு*
*அவுனமென்ற, அங்கவானென்றவர்க்குப் பேரு*
*அப்பினாசவானென்று அவர்க்குப் பேரு*
*கவுனமென்ற, காயாவானென்றவர்க்குப் பேரு*
*கற்பவானென்றவர்க்கு, கனப்பேரையா*
*பவனமென்ற[3], மனோதயவானென்றும் பேரு*
*பன்மைபெற, சொல்லிவிட்டோம்,யோகிகளின்*
*பெயரே.(886)*

*(உரை:)* சுத்தவான், சுருதிமுடி, செயவாலை, யோகி, அங்கவான், அப்பினாசவான், காயவான், கற்பவான், மனோதயவான் என்பன யோகிகளின் பெயர்கள்.

---

1. வாழபன், 2. உயர்குல வானீசன், 3. புவனமென்ற.

## ஞானிகளின் பெயர்கள்

யோகியெனும், பூசலாமனென்றும் பேரு
ஒரு மனவான், இருவாசானென்றும் பேரு
வாகமெனு, மனது சஞ்சலிக் கானென்றும் பேரு
வாது, வசிய[1] யோச னென்று மவர்க்கு அதீதப்பேரு
பாகமெனும், பதுவான்[2] இவனென்றும் பேரு
பரமாத்தும[3] னென்றவர்க்கதீதப் பேரு
ஆகமெனு, மெய்ஞானி, பரஞானி, தானென்றும்
அருளினோம், சுந்தரமே, ஞானிகளின் பெயரே. (887)

*(உரை:)* பூசவாமனன், ஒருமனவான், இருவாசன், மனது சஞ்சலிக்கான், வசியயோசன், பதுவான், பரமாத்துமனன், மெய்ஞானி, பரஞானி என்பன ஞானிகளின் பெயர்கள் (சங்கப்புலவர் ஒருவரின் பெயர் "கருவூர் ஓதஞானி") ஆகும்.

## சித்தர், தேறினவர் (வகைகள்)

ஞானமென்ற, மாய்கை வல்லவரென்றும் பேரு
நளினமெனும், தோல்சட்டை[4] யுரியோனென்றும் பேரு
வானமெனும் தேறுவான், பண்புடையானென்றும்
வசனித்தோம், நாதனென்றும், கெவுனியென்றும் பேரு
மானமென்ற, வாசிசித்தன், மவுன சித்தனென்று
மகத்தான, யோக சித்தர், குளிகை சித்தரென்று
மானமெனும்[5], கண்டசித்தர், பிர்ம்ம சித்தர்[6]
அருளான, ஞான சித்தர்,தேறினவர் பெயரே. (888)

*(உரை:)* மாயைவல்லவர், தோல்சட்டை உரியோன், தேறுவான், பண்புடையான், நாதன், கவுனி, வாசிசித்தன், மவுன சித்தன், யோக சித்தன், குளிகை சித்தர், கண்டசித்தர், பிர்மசித்தர், ஞான சித்தர் என்பன சித்தர்களின் வகைகளாகும்.

---

1. வாய, 2. வாணிபன், 3. பரமாதமனன், 4. சடையுரியோன், 5.ஆனமெனும், 6. மர்மசித்தர் என்றும்.

## புலவரின் பெயர்கள்

தேறினதால், மதிவாணர், சித்தாந்த வாணர்
தெளிவான, நிவாணர்[1], புத்திவாணர்
ஏறினதால்[2], இலக்கணவான், கயவானென்றும்
இயம்பினோம்,கவிவாணர், சீவவாணர்
ஆறினதா அம்மேறதன[3], தனக் களஞ்சி வாணர்
ஆயிழையாள், வெகுவாயன், பாலனென்றும்[4] பேரு
வீறினதால்[5], லோக அஞ்சானென்[6]றும் பேரு
விளக்கினோம், வித்துவானார்[7], புலவரின் பெயரே.(889)

(உரை:)புலவரின் பெயர்கள், மதிவாணர், சித்தாந்த வாணர், நிவாணர், புத்திவாணர், இலக்கணவான், கயவான், கவிவாணர், சீவவாணர், தனக்களஞ்சிவாணர், வெகுவாயன், பாலன், லோக அஞ்சான் வித்துவான் என்பன.

## சோதிடரின் பெயர்கள்

வித்தையாம், பாஞ்சாலன், வீரகங்கனென்றும்
வீறு மாபதி,உலக லட்சணவான்,பிரியவானென்றும் பேரு
அத்தையா, அரியானம் அருளியாசனம்[8]
அடவான, மூர்த்திபங்கன், சுயகரதீதன்[9]
கத்தையாம், அருநாம மே பழக[10]னென்றும் பேரு
கல்விமான், வாக்கனென்று, பாக்கியனென்றும் பேரு
சத்தையாம், குருதிவானென்றும் பேரு
தரணி, வாலை பதி[11], சோசியன் பெயரே. (890)

(உரை:) சோதிடரின் பெயர்கள், பாஞ்சாலன், வீரகங்கன், உலக லட்சணவான், பிரியவான், அரியானம், அருளியாசனம், மூர்த்திபங்கன், சுயகரதீதன், அருநாமமே பழகன், கல்விமான், வாக்கியன், பாக்கியன், குருதிவான், தரணி, வாலைப்பதி என்பன.

---

1. அறிவாணர், 2. ஊறினதால், 3. மடுபரதன், 4. பாலஎன்றும், 5. நேரினதால், 6. கஞ்சான், 7. சித்துவான், 8. அருளியா எனும், 9. சுயகரதீசன், 10.மேகப்பழகன், 11. தேவாலை.

### முப்புவாதிகள்

பதியர்ன மூலகுரு, ஆசானென்றும் பேரு
பரமான, திருபீடன் என்றவர்க்குப் பேரு
அதியான, வலமதியுடை யானென்றும் பேரு
அதி ரூபபீட குரு என்றவர்க்குப் பேரு
சதியான, சாதிபுத்திர, வாதலோப னென்றும்
சாற்றினோம், மருவாசனென்றவர்க்குப் பேரு
நதியான, நான்மறையோன் என்றும்
நாம் சொன்னோம், முப்புவாதிகளின் பெயரே. *(891)*

*(உரை:)* மூலகுரு, ஆசான், திருபீடன், வலமதியுடையான், அதிரூப பீடகுரு, சாதிபுத்திரன், வாதலோபன், மருவாசன், நான்மறையோன் என்பன முப்புவாதிகளின் பெயர்கள்.

### தீபார்ச்சனையின் பெயர்கள்

பேரான, கானியாசம், கரணியாசம்
பேசுகின்றோம், பிணியாசம், நவுனியாசம்
வாரான, கனியாசம்[1], கவனியாசம்[2],
வாமன்னியாசம், வத்துநியாசம், ஆத்மநியாசம்
பாரான, பவுன்னியாமம், கனிராசம்
பரிவான யோக நியாசம், தரணியாசம்
காரான, பிரமதியாசம்,விட்ணு யாசம் பரிருத்திர
மயேநியாசம்[3], சாதநியாசம், தீபாராதனையின்
பெயரே. *(892)*

*(உரை:)* கானியாசம், கரணியாசம், பிணியாசம், நவுனியாசம், கனியாசம், சுவனியாசம், வாமன்னியாசம், வத்துநியாசம், ஆத்ம நியாசம், பவுன்னியாசம், கனிராசம், யோகநியாசம், தரணியாசம், பிரமநியாசம், விட்ணு நியாசம், பருத்திரமயே நியாசம், சாதநியாசம் என்பன தீபாராதனையின் பெயர்கள்.

### தூபாராதனையின் பெயர்கள்

சதமான, பிரிதிவியானம்[1], அப்புநியானம்
சார்வான, தேயுநியானம், வாயு நியானம்
அதமான, ஆகாசபூதநியானம், மாதிநியானம்[2]
அந்த நியானம், அகஞ்ச ரூபமென்று
மந்தபான, நமத்துநியாசம், சதுர்பாலமென்றும்
வதமான சரண பதவிச்சார மென்றும் பேரு
... ... ... ... ... ...... ... ... ... ... ... ... ...
விளக்கினோம், தூபாராதனையின்
அதீதப்பேரே. (893)

(உரை:) தூபாராதனையின் பெயர்களாவன; பிரிதிவியானம், அப்புநியானம், தேயுநியானம், வாயு நியானம், ஆகாச நியானம், மாதிநியானம், அந்த நியானம், அகஞ்சரூபம், நமத்துநியாசம், சதுர்பாலம், சரணபதவிச்சாரம்.

### சோடசத்தின் பெயர்கள்

அதீதமதாம், கமலப்பியம்[3], அமலதாசனென்றும்
அடவான, சுருதி நமமென்றும் பேரு
வதீதமா, மூல வன மென்றும் பேரு
வசனித்தோம், முபதா[4] மென்றும் பேரு
சதீதமாம் சாபநாசம், விதிநாசமென்றும்
சாற்றினோம், நின்னூறுதி, சாந்தமென்றும் பேரு
பதீதமாம், வேததெய்வர் கருவாணிதமென்றும் பேரு
பாடினோம், பெரியோர்வணக்கம், சோடசத்தின்
பெயரே. (894)

(உரை:) கமலப்பிரியம், அமலதாசன், சுருதி நமம், மூலவனம், முபதாம், சாபநாசம், விதிநாசம், நின்னூறுதி, சாந்தம், வேததெய்வம், கருவாணிதல் என்பன சோடசத்தின் பெயர்கள்.

---

1. பிரிதிவாயானம், 2. பதநியானம், 895ம் பாடல் சரிவர இல்லை. 3.கமலப்பீலம், 4. மழுப

## வேதாந்திகளுக்குப் பெயர்

சேடமாம், புலத்தியனே, சுந்தரமே கேளு
சொல்லுகின்றேன், வேதமய உபதேசம் கேளு
ஆடகமாம், சிவஅவ்வும்[1], கிறீமென்றும்
அருளுகின்றோம், நங்கென்றும், அரிஓம் வேதாயா
வாடகமாம், வசிய நமவாவாவென்றும்
அர்ச்சிப்பாய், மண்டலந்தான் முழுது[2] நின்று
நாடகமாம், உருலட்சம் செய்தீரேயாகில்
நளினமெனும், வேதாந்தி, வசியமெனுமாமே. *(895)*

*(உரை:)* புலத்தியரே, மீதியைக் கேளுங்கள், அழகுடன் சொல்லுகின்றேன். சிவ அவ், கிறீம் நங்கென்றும், அரிஓம் வேதாயா, வசியநமவாவா என்னும் இதை 48 நாட்கள், லட்சம் முறை செபித்தால் வசியமாகும்.

## மவுனிகட்கு உபதேசம்

ஆமப்பா, சுந்தரமே, மவுனிகளுக்கையா
அருளுகின்றோம், வசிய உபதேச மதைக் கேளு
நாமப்பா, சொல்லுகின்றோம், நயவசியமென்று
நளினமெனும், மவ்வும், சிவ்வும், வம், யங்
அரிவோமென்று
வாமப்பா, வசிய, நமவென்றுந்தான்
வாட்டுவாய், மவுனதே வாயாயென்று
பாமப்பா, மண்டலந்தான், லட்ச உரு செபித்தால்
பரிவான, மவுனமது வசியமாமென்றே. *(896)*

*(உரை:)* பேசாமலிருக்கக்கூடிய மவுன மந்திரம் நயவசிய மவ்சிவ்வம் யங் அரிஓம் வசிய நம மவுனதேய என இங்கு கூறப்பட்டுள்ளது. இதை லட்சம் முறை செபிக்க, வெற்றி கிடைக்கும்.

---

1. மயநமசிவ, 2. முத்து.

## ஞானிகளுக்கு உபதேசம்

வசியமாம், ஞானிகட்கு உபதேசம் கேளு
வசியமென்று, நீ, மாட்டு மாட்டு
நசியமாம், நங், மங்,யவ்வும், சிறிம், வய்யும்
ஓம் வாவசியவென்று, ஒருமண்டலஞ்செபி[1]
வசியமாம், லட்சமுரு தாபித்தே[2] யாகில்
மறைநாலு, வேதமுதல் வசியமையா
அசியமாம், ஞானதேவாயா என்று
அருளுவாய், சிவஞான உபதேசமாமே. (897)

*(உரை:)* ஞானிகளுக்கான அறிவுரை கூறப்படுகின்றது. இலட்சம் முறை செபிக்கும் மந்திர எழுத்துகளும் இதில் கூறப்பட்டுள்ளன.

## யோகிகளுக்கு உபதேசம்

ஞானமாம், யோகிகளினுபதேசங் கேளு
நாம் சொல்வோமெண்ணூறு, ஞான பீடந்தான்
வானமாம், வய நமசி, ஓமென்று மையா[3]
வசனிப்பாய், சிவ்வும், மன்றி, மயங், வய்யுமென்றும்
ஆனமாம், ஓம் நமச்சிவாய மெனுமையா
அருளுவாய், யோகதேவாயாவா, வசிய[4]
... ... ...[5] ஒருலட்ச முருமண்டலம் நாட்டவே
யோக மெனுவசியம் ஆகுமன்றே. (898)

*(உரை:)* இதில் யோகிகளுக்கான மந்திர எழுத்துக்கள் கூறப்பட்டுள்ளன. 48 நாள், இலட்சம் முறை செவிக்க வெற்றி கிட்டும்.

## குண்டலத்தின் பெயர்கள்

வசியமெனும், பெரியோர்கள் விருதின் பெயர்கள்
வசனிப்போம், சுந்தரமே, வளமாய்க் கேளு
நசியமெனும், அபிலதம், சபநகம், உலகநாதனென்று
நளினமெனும், வாலரிசி[6], தரணி[7], கங்கமென்றும்

---

1. சேவி, 2. செபி, 3. மையப்பா, 4. அவர்வசியம், 5. ஞானமாநமா. 6. வாலறி, 7. சதரணி,

மசியமெனும் அண்டரச மென்றும் பேரு
 ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வசியமெனும் யோகிகளின் பெயர்கள்
 ... ... ... ... விளம்பினோம், பரிபாசை
 குண்டலத்தின் பெயரே. *(899)*

*(உரை:)* குண்டலத்தின் பெயர்கள், அபிலதம், சபநகம், உலகநாதன், வாலரிசி, தரணி, கங்கம், அண்டரசம் என்பனவாகும்.

**கவசகுண்டலம்**

பாசையெனும், மகாத்மாக்கள், பெரியோர் வாக்கியம்
 பயனறிவார், அடையோர் பார்த்துக்கரு காண்பார்
ஆசையெனும், தூத்தல், துருமதுரம்[1],
 வடிவக்காலையென்றும் பேரு
 அந்தபஞ்ச மென்பதற்கு அதீதப் பேரு
வாழையெனும், பதுமள்ளமென்றும் பேரு
 வசனித்தோம், பரிமாண்ட[2] மென்றதற்குப் பேரு
ஏழையெனும், அங்குவட்சக் குண்டநிலைப்பாதியென்று
 இயம்பினோம், குண்டலமதற்குப் பேரே. *(900)*

*(உரை:)* காதில் அணியும் குண்டலத்தின் பெயர்கள் மகாத்மாக்கள், பெரியோர் வாக்கியம், பயனறிவார், அடையோர், பார்த்துக்கருக்காண்பார், தூத்தல், துருமதுரம், வடிவக்காலை, பதுமள்ளம், பரிமாண்டம், அங்குவட்சக் குண்டம், நிலைபாதி என்பன.

**மாத்திரைக்கோல் (தண்டம்)**

குண்டலமாம், மங்கலா, ஆகாசமறிது வாடமென்றும் கூறினோம்
 ... ... ...மதுக, நிசதமென்றும்[3] பேரு
அண்டலமாம், அலைவட்டி[4] மானென்று பேரு
 அருளினோம், கனிமாடி யென்றும் பேரு

---

1. உருமாதுறம், 2. பண். 3. துக,நிசதம், 4. அசவாட்டிவா.

வண்டலமாம், ஊனிச்[1]சஞ்சமென்றும் பேரு
வசனித்தோம், முப்பத்திராமமென்றும் பேரதற்கு
வெண்டலமாம், வேதக்கோலென்றும் பேரு
வேதாந்த, மாத்திரைக் கோலதுவின் பேரே. *(901)*

*(உரை:)* மாத்திரைக் கோலின் பெயர்கள்; குண்டலம், மங்கலா, ஆகாசம், அறிதுலாடம், மதுகனிதசம், அண்டம், அலைவட்டி, மான், கனிமாடி, ஊனிச்சஞ்சம் என்பன.

**யோகதண்டின் பெயர்கள்**

கோலான, ஆலத்திண்டு, நத்திடாங்கி
கூரான பதமாலை, பலகையென்றும்
அலவான, சோறு, குடமென்றும் பேரு
அடவான, சுகநாத மென்றும்[2] பேரு
மலவான அடவாசி யென்றும் பேரு
மகத்தான அமருந்தமென்றும்[3] பேரு
வலவான யோகிகளின், விருது மார்க்க மனேக முண்டு
வெளிதல்லோ[4], யோக தண்டதின் பேரே. *(902)*

*(உரை:)* ஆலத்திண்டு, நத்திடாங்கி, பதமாலை, பலகை, சோறு, குடம், சுகநாதம், அடவாசி, அமருத்தம் என்பன.

**காவிவேட்டியின் பெயர்கள்**

திண்டான, துருசீலை, துருவான பஞ்சாதிபாட சீலை
… … … … … … … … … … … … …
அண்டான அருஞ்சித்தியென்றும் பேரு
அருளான, நாளாவி, தாசி[5] யென்றும் பேரு
வண்டான, புரு[6] சீலையென்றும் பேரு
வளமான, கருவேட்டியென்றும் பேரு
கண்டானயிதன் பேரு என்னால் சொல்லக்

1. ஊனி, 2. சுனதம், 3. அடருந்தம், 4. வெளிதல்லோ, 5. நாதாவிதால, 6. ஒரு. 902ம் பாடலில், சரசுவதி மகால் சுவடியின் அடிகள் 5, 6 என்பன, 7,8அடிகளில் உள்ளன. 903ம் பாடலில் கடைசி அடி காணப்படவில்லை.

*(உரை:)* காவிவேட்டியின் பெயர்கள்; துருசீலை, பஞ்சாதி பாடசீலை, அருஞ்சித்தி, நானாவிதாகி, புருசீலை கருவேட்டி என்பன.

**கௌபீனம் (கோவணம்)**

காவியாம், அபினவீடாம், நாண்மின் சுடரென்றும்
அடவான, இயலாடி யென்றும் பேரு
ஆவியா, இங்கிதமாலா யென்றும் பேரு
அடவான, புருசகண்ட மென்றும் பேரு
தாவியாம்[1], புது லிங்கக்காடை யென்றும் பேரு
கருவான, குய்யக் கோடகமென்றும் பேரு
மாவியாம், குறும்படிதமென்றும் பேரு
மகத்தான, ஞானிகளின் கௌபீனத்தின் பேரே. *(904)*

*(உரை:)* அபினவீடு, நாண்மின் சுடர், இயலாடி, இங்கிதமாலா, புருசகண்டம், புதுலிங்கக்காடை, குய்யக் கோடகம், குறும்படிதம் என்பன.

**காசாங்கம் (காவியுடை)**

கபீனமாம், ஆசாதிகரம், நீலாம்புரி
கருவான, வாசிபுட்டமென்றும் பேரு
அபீனமாம், மாருதக் கருவானென்றும் பேரு
அடவான, பிடி, துபினமென்றும் பேரு
நபீனமாம், பேச்சிக் கபீனமென்றும் பேரு
நலமான, மூல சித்தஞ்சமென்றும் பேரு
விபீனமாம்,ஆத்திவடி, நாலமென்றும் பேரு
விளக்கினோம், வேதாந்திகளின் காசாங்கத்தின்
பேரே. *(905)*

*(உரை:)* ஆசாதிகரம், நீலாம்புரி, வாசிபுட்டம், மாருதகருவான், பிடி, துபினம், பேச்சிக்கபீனம், மூலசித்தஞ்சம், ஆத்திவடி, நாலம் என்பன காவியுடையின் பெயர்கள்.

---

1. காவியாம்.

### கஞ்சாக்குடுக்கை

சாங்கமெனும், குழப்படகம், பிரமமெனும் பேரு
சமர்த்தான, சுரூப நிலை, போதகந்தானென்றும்
ஆங்கமாமலே, கரியாசான், மவுனக் குடுக்கை
அருளான, ஞானக்குளம், யோக பாண்டமென்றும்
வாங்கமாம், பூட்டுப்பாண்டமென்றும் பேரு
வளமான, பஞ்சரூபமென்றும் பேரு
பாங்க மாபரன் சொன்னார், இந்த பாசை
பயனறிந்து, நாம் சொன்னோம், கஞ்சாக்
குடுக்கையின் பேரே. *(906)*

*(உரை:)* கஞ்சாக் குடுக்கையின் பெயர்கள். சாங்கம், குழப்படகம், பிரமம், சுரூபநிலை, போதகம், கரியாசான், மவுனக்குடுக்கை, ஞானக்குளம், யோகபாண்டம், பூட்டு பாண்டம், பஞ்ச ரூபம் என்பன.

### பாதக்குறடு (மரக்கட்டைச் செருப்பு) பெயர்கள்

குறடான, பரக் குறடென்றும் பேரு
கூரான, வாதக்குறடு, நேத்திரக் குறடென்றும்
அறடான, நத்திக் குறடென்றும் பேரு
அருளான, வச்சிராட மென்றும் பேரு
மறடான, ஆழக் குற[1] டென்றும் பேரு
மகத்தான, பவனக் குறடென்றும் பேரு
வறடான, மூலக் குறடென்றும் பேரு
வசனித்தோம், பிரமக்குறடு, பாதக்குறட்டின்
பேரே. *(907)*

*(உரை:)* மரக்கட்டை செருப்பின் பெயர்கள் பரக்குறடு, வாதக்குறடு, நேத்திரக்குறடு, நத்திக்குறடு, வச்சிராடம், ஆழக்குறடு, பவனக்குறடு, மூலக்குறடு, பிரமக்குறடு என்பன.

---

1. ஆழச

**குளிகையின் வகைகள்**

குன்றன்றும், இரசக் குளிகை, கவுனக் குளிகை யென்றும்
கூறறிய, யோகத்தின் குளிகை யென்றும் பேரு
அன்றன்று, மவுனத்தின் குளிகை யென்றும் பேரு
… … … … … … … … … … … … … …
அன்றென்று [1], ஞானத்தின் குளிகை யென்றும் பேரு
வளமான, பிராணச[2] க் குளிகை யென்றும் பேரு
பற்றென்றும், வாலைக் கேசரக் குளிகை யென்றும் பேரு
பரிவான, குளிகை யென்ற வகையின் பேரே. *(908)*

*(உரை:)* குளிகையின் வகைகள், இரசக்குளிகை, கவுனக்குளிகை, யோகக் குளிகை, மவுனக்குளிகை, ஞானக்குளிகை, பிராணசக்குளிகை, வாலை கேசரக்குளிகை என்பன.

**நாதாக்களின் சட்டையின் பெயர்கள்**

வகையான படாமென்றும்[3], பதனமென்றும் பேரு
வசனித்தோம், முசரிடமென்றும்[4] பேரு
அகையான, உபசரிதமென்றும் பேரு
அடவான, மதிவாயிபமென்றும்[5] பேரு
நகையான, ரிவிக்கஞ்சமென்[6] றும் பேரு
நளினமென்ற, வாதிவனயாமென்றும் பேரு
பகையான, அந்தலோபமென்றும் பேரு
பாடினோம், நாதாக்கள், சட்டையின் பேரே. *(909)*

*(உரை:) படாம், பதனம், முசரிடம், உபசரிதம், மதி, வாயிபம், ரிவிக்கஞ்சம் (ரிசிக்கஞ்சம்?) வாதி யவனாம், அந்தலோபம் என்பன துறவிகளின் சட்டைக்குப் பெயர்கள்.*

---

1. வற்றென்று, 2. பிராணயக் குளிகை, 3. படசம், 4. முதாசரிடம், 5. வாலபம், 6.சிலப்பதிகாரத்தில் கஞ்சுகம் என அழைக்கப்பட்டது.சட்டையை அணிந்ததால் சட்டைமுனி எனவும், கம்பளிச்சட்டை கயிலாசமுனி எனவும் சித்தர் ஒருவர் அழைக்கப்பட்டார்.

## புலியாசனத்தின் பெயர்கள்

சட்டையெனும், பாசியாசன மென்றும் பேரு
சார்வான, தணவாசி யாசன மென்றும் பேரு
அட்டையெனும், பூதவாசனமென்றும்[1] பேரு
அடவான, பரவாசனமென்றும் பேரு
பட்டையெனு, முருகாசன மென்றும் பேரு
பரிவான விருதாசன மென்றும் பேரு
முட்டையெனும், சிவசத்தியாசன மென்றும் பேரு
முக்கியமாய் சொல்லிவிட்டோம், புலியாசனத்தின் பேரே.(910)

*(உரை:)* புலித்தோல் இருக்கையின் பெயர்கள்; பாசியாசனம், நணவாசியாசனம், பூதவாசனம், பரவாசனம், முருகாசனம், விருதாசனம், சிவசத்தியாசனம் என்பன.

## பஞ்சாட்சரம் பெயர்கள் (ஐந்தெழுத்து)

ஆசனமா, மாதியானியாசனம், மண்டநியாசனம்
அடவான, தீவாச்சரமென்றும்[2] பேரு
……… அஞ்சட்சர மென்றும் பேரு
பரிவான, பதுமாசரமென்றும் பேரு
வாசனமாம், நமச்சிவாய மென்றும் பேரு
வளமான, சீதாயதமென்றும் பேரு
போசனமாம், பூதாயத மென்றும்[3] பேரு
பொருளான, கருவை விண்டோம், பஞ்சாட்சரத்தின் பேரே. (911)

*(உரை:)* ஐந்தெழுத்தான நமச்சிவாய என்பதின் பெயர்கள்; மாதியாசனம், மண்டநியாசனம், தீவாச்சரம், அஞ்சுஅட்சரம், பதுமாசரம், நமச்சிவாயம், சீதாயதம், பூதாயதம் என்பன.

---

1. பதவாசனம், 2. தீவச்சரம், 3. பதாயதம்.

## அனுட்டானத்தின் பெயர்கள்

*சரமான, நேத்திரசம்[1], விச்சநேமதவமென்றும் பேரு*
*சாற்றினோம், பத்தியாய், சனமென்றும்[2] பேரு*
*வரமான, உறுதியான மென்றும் பேரு*
*வளமான, நிட்டையான மென்றும் பேரு*
*கரமான, மெய்யாயன மென்றும் பேரு*
*கருமான, மெய்யாயனமென்று[3] பேரு*
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
*அருளினோம், அதீதமாய், அனுட்டானத்தின்*
*பெயரே.* ***(912)***

*(உரை:)* நேத்திரசம், விச்சநேம தவம், சனம், தியானம், நிட்டையாயனம், மெய்யாயனம், மெய்யானம் என்பன அனுட்டானத்தின் பெயர்கள்.

## செபத்தின் பெயர்கள்

**மதீதமெனும், பதவிகம், மனோவலிக மென்று**
**வானசல், புத்தியுபாயமென்றும் பேரு**
**வதீதமெனின், கங்காயன[4] னென்றும் பேரு**
**வசனித்தோம், சரூபயமென்றும்[5] பேரு**
**நதீதமெனும், பணியாதடமென்றும்[6] பேரு**
**நலமான, மவுனவுருதமென்றும் பேரு**
**கதீதமெனும், ஞானவுருதமென்றும் பேரு**
**கருவான, யோகாந்திர உருத செபத்தின் பேரே. *(913)***

***(உரை:)*** **பதவிகம், மனோவலிகம், வானசல், புத்திஉபாயம், கங்காயனம், சரூபயன், பணியாதடம், மவுன உருதம், ஞான உருதம் என்பன செபத்தின் பெயர்கள்.**

---

1. சம உச்சசம், 2. கனம், 3. மூலத்தியானம், 4. செங்காயனம், 5. சுருபாயன, 6.பணிபாதடம்.

## பூசை வகைகள்

செபமான, அங்கபூசை, ஆத்மபூசை யென்றும் பேரு
செயலான, வாசிபூசையென்றும் பேரு
நலமான, காயபூசை யென்றும் பேரு
நலமான, மூலபூசை யென்றும் பேரு
கபமான, உள மூலபூசை யென்றும் பேரு
கருவான, கணேசபூசை, சிவசத்தி பூசை
மபமான, பிராணயபூசை, பிண்டபூசை யென்று
அருளினோம், சடத்தின் பூசையின் பெயரே. *(914)*

*(உரை:)* பூசையின் வகைகளாவன; அங்கபூசை, ஆத்ம பூசை, வாசி பூசை, காய பூசை, மூல பூசை, உள மூலபூசை, கணேச பூசை, சிவசத்தி பூசை, பிராணய பூசை, பிண்ட பூசை என்பன.

## வஸ்து பாத்திரத்தின் வகைகள்

பூசையாம், இரச பாத்திரம், காந்தத்தின் பாத்திரம்
பிண்டப்பாத்திரம் அண்டப்பாத்திரம், கபாலபாத்திரம்
வாசையாம், துத்தநாகப் பாத்திரமென்றும் பேரு
வளமான, அயபாத்திரமென்றும் பேரு
நாசையாம், தாம்பிரபாத்திரமென்றும் பேரு
நலமான, வங்க பாத்திரமென்றும் பேரு
ஆசையாம், வெண்கலப்பாத்திரமென்றும் பேரு
பொன், வெள்ளிப்பாத்திரம்,
அருவான வாம, வத்துப் பாத்திரத்தின் பேரே. *(915)*

*(உரை:)* இரசபாத்திரம், காந்தப்பாத்திரம், பிண்டப் பாத்திரம், அண்டப்பாத்திரம், கபாலப்பாத்திரம், துத்தநாகப் பாத்திரம், அயப்பாத்திரம், செம்புபாத்திரம், வங்க பாத்திரம், (ஈய) வெண்கலப்பாத்திரம், தங்கப்பாத்திரம், வெள்ளிப் பாத்திரம் என்பன சத்தி பூசைக்கான பாத்திரங்களாகும்.

---

914ம் பாடலில் உள்ள 7, 8 வரிகள் சரசுவதி மகால் சுவடியில் 3, 4 வரிகளாக மாறியுள்ளன. 5, 6 அடிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

### பூசையின் வகைகள்

பாத்திரமாம், சிதம்பரபூசை, வாலைப் பூசை
பரிவான, நவக்கிரகபூசை யென்றும் பேரு
தாத்திரமாம், தீட்சைபூசை, அட்டமா பூசை
தருவான, சித்தர் பூசை, லோகபூசை யென்றும் பேரு
வாத்திரமா, முப்புவின் வாதபூசை மணி மந்திர
வைத்தியபூசையென்றும்
ஆத்திரமாம், சமாதிபூசை, கும்பத்தின் பூசை
அடவான, மவுனமதின், பூசையதின் பேரே. (916)

(உரை:) சிதம்பரபூசை, வாலைபூசை, நவக்கிரகபூசை, தீட்சைபூசை, அட்டமாபூசை, சித்தர்பூசை, லோகபூசை, முப்புவின் வாதபூசை, மணிமந்திர வைத்தியபூசை, சமாதிப் பூசை, கும்பத்தின் பூசை என்பன பூசையின் வகைகள்.

பூசையெனும், சகலக் கரு வெளியதாக
புகட்டினோம், ஏழாங்காண்டம், புதுமை பாரும்
வாசையெனும், பரிபாசையுரையதாக்கி
வசனித்தோம், செந்தமிழால் சித்தர்க்கெல்லாம்
ஆசையெனும், மெய் ஞானக் கருவை விண்டோம்
அடவான, பேர்களெல்லாம் வெளியாய் விண்டோம்
பாசையெனும், ஞானகாண்ட மேழாம் பீடம்[1]
பாவித்தோம், முழுதும், ஆதியந்த முற்றே. (917)

(உரை:) பூசையின் முறைகளை எல்லோரும் எளிதில் அறியும்படி, செந்தமிழில் ஏழாம் காண்டத்தில் உரைத்தோம். இது புதுமையானது; மறைவான சொற்களுக்கு, தமிழில், சித்தர்களுக்குக் கூறினோம். உண்மையான அறிவுமான அடிப்படைக் கருத்துக்களை வெளியிட்டோம். ஏழாம் காண்டமான, ஞான காண்டத்தில், துவக்கம் முதல் கடைசிவரை அனைத்தும் எடுத்துக்காட்டினோம்.

---

914ம் பாடலில் பூசை வகைகள் கூறப்பட்டுள்ளன. 1. ஏழாம் பீடம் காண்டம்.

# எட்டாம் காண்டம்

## காப்பு

*ஆதி, பரிபூரணத்தின் சோதிபாரம்[1] ... ... ... ... ...*
*அகண்ட[2], பல சிவனுமையாள் அயனும் போற்றி*
*சோதியெனும், பூரணமாம்[3], வாத[4] சுரூபசக்தி[5]*
*முடிவான, சர்வாணி போற்றி ... ... ... ... ...*
*வேதியெனும், விசுமனுட கமலம் போற்றி*
*விதியான, நான் மறையோன், வேதம் போற்றி*
*பாதிபூரண, சிவகாமிபாதம் (போற்றி)*
*பண்புடைய, முன்னோர்கள் பாதங் காப்பே. (918)*

*(உரை:)* முதல் முழுதுடையான ஒளியின் அடிப்படையைப் போற்றுகின்றேன். அகலமுள்ள பல, சிவன், உமை, பிரம்மன் ஆகியோரைப் போற்றுகின்றேன். கலைவாணியைப் போற்றுகின்றேன். வேதத்தைப் போற்றுகின்றேன். முன்னோர்களான மருத்துவர்களின் திருவடிகளைப் போற்றுகின்றேன்.

*முன்னான, கரிமுகவன், கந்தன் பாதங் காப்பு*
*மொழிநாலு, வேத மறை முன்னோர் காப்பு*
*அன்னான, நவசித்தரான ஐவர் காப்பு*
*அருளான பஞ்சபூதந்தான் காப்பு*
*கண்ணான, சிதம்பரத்தின் கருவின் காப்பு*
*கைலாச மூர்த்தி, அருள் கமலங் காப்பு*
*சன்னான, பிரமசர, சோதித்தாய் காப்பு*
*சண்முகன், சடாதர கமலங் காப்பே. (919)*

*கமலமெனும், இலட்சணநூல் அதீதமானம்*
*கருவான, பாசையதன் கருவை யெல்லாம்*
*வமலமெனும், கமலம் போல் எண்ணூறிந்நூல்*
*வசனித்தோம், காண்டமெட்டும், கடைக்காண்டமிது பார்*

---

1. பாதயை, 2. கண்ட, 3. பூரணமாய், 4. வந்த, 5. சுருதி.

அமலமெனும், எட்டாவது காண்டம் பாரீர்
அருளான, இலட்சணத்தின் உயிரெல்லாந்தான்
நமலமெனும்[1], பாசையென்ற, மறைப்பை யெல்லாங்
காண்
நன்றாகப் பார்ப்பவர்க்குச் சொன்னேன், காணே. *(920)*

காணப்பா, சுந்தரமே, புலத்தியா கேள்
கருவான, முப்பிண்ட இலட்சணத்தின் கூறும்[2]
வாணப்பா, வாத்தி இலட்சணத்தின் கூறும்[3]
வைத்திய, மாந்திரிகத்தின், இலட்சணத்தின் கூறும்
நாணப்பா, ஞானவேதாந்தத்தின் கூறு
நலமான, யோகமதின், இலட்சணத்தின் கூறும்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ...அட்டவசியக் கூறும்[4] அருளுவோமே. *(921)*

**(உரை:) 920-921ல் 8ம் காண்டம் பற்றிய செய்திகள் உள்ளன. 800 பாடல்களால் ஆன நூலின் கடைசியாக உள்ள காண்டம், மறை பொருள்களை நீக்கி, நன்றாகக் கூறியுள்ளேன். முப்பிண்ட இலக்கணம், மருத்துவ, மந்திர, இலக்கணம், ஞானம், வேதாந்தம், யோக இலக்கணம், எட்டுவகையான வசியம் பற்றியவைகளைச் சொல்லு கின்றேன்.**

அருளுவோம், நாதவிந்தின் இலட்சணத்தின் கூறு
அடவான, வாதபித்த சிலேத்பனத்தின் கூறு
மருளான, மவுனத்தின் லட்சணத்தின் கூறும்
மகத்தான, காயாதி கற்பத்தின் கூறும்
வருளுவோம், புருசலட்சணக் கூறுந்தான்
வசனிப்போம், வாதமதின்[5] லட்சணக் கூறுந்தான்
நருளுவோம், அண்டலட்சணத்தின் கூறும்
நளினமாம், பிண்ட லட்சணத்தின் கூறாமே. *(922)*

---

1. கமலமெனும், 2. இலட்சண, 3. நாத, 4. அட்டமாவசியமா, 5. வாம.

கூறான, அத்தினியின், சங்கினியின் கூறும்
கூரரிய, சித்தினி, பத்மினியின் கூறும்
நாரான,நாற்சாதி லட்சணத்தின் கூறும்
நாதாக்கள், மறைந்த பரிபாஷைக் கூறும்
வாரான,லோகசித்தர் கருவின் கூறும்
வளமான, லோக லட்சணத்தின் கூறு
ஆரான, ஐம்பூதக் கருவின் கூறும்
அதீதமெனும், இலட்சணத்தின் கூறு,
சொல்லுவோமே. **(923)**

சொல்லக்கேள், புலத்தியனே, இராசயோகி
சூட்சாதி சூட்சமத்தின் கருவைக் கண்டு
வல்லக் கேனிந்த, எண்ணூறு காண்டமெட்டும்
வசனித்தோம், சகல நிகண்டாய்ச் சொன்னோம்
அல்லக்கேள், மாமறையோர் மறைந்த சூட்ச மெல்லாம்[1]
அறுபத்து நாலு கலைபாசை சொன்னேன்[2]
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வெளியாகச் சொல்லிவிட்டேன் இந்த நூற்
கருகாணே. **(924)**

கருவான முன்னோர்கள், பாடியதோர் நூல்கள்
கண்டதின், கருவறிவரிது பாரீர்
கருவான, நூலிது பார், அகராதி நிகண்டு காணரிது
கருமிகட்குக் காணாது, கருவிடயம் பார்த்தால்
கருவான கருக்களெல்லாம் அவர்க்கே எய்தும் பாரு[3]
காணரிது அருள் செய்யது வாக்கில்[4]
விரிவான, விரிவையெல்லாமிந்தநூலில் காணும்
வேதாந்திகட்காக, விளம்பினோம்[5] பாரே. **(925)**

*(உரை:)* **922, 923, 924** ஆகிய பாடல்களில் பொருள் களுக்கான இலக்கணம் கூறப்படுகின்றது. நாதவிந்து இலக்கணம்,வாதபித்த கபமாகிய முக்குற்றங்களின் இலக்கணம், பேசாமையின் இலக்கணம், உடல்

---

1. வல்லக்கேள், ஆயிரத்து அறுபதுக்குள், 2, 3, 4 இவ்வரிகள் சரசுவதி மகால் சுவடியில் உள்ளன, 5. விளம்பினேன்.

அழியாதிருக்க உண்ணும் கற்பங்களின் இலக்கணம், ஆண் இலக்கணம், காற்றின் இலக்கணம், உலகத்தின் இலக்கணம், உயிரின் இலக்கணம் என்பனவற்றை இக்காண்டத்தில் கூறுகின்றார்.

பெண்களின் வகைகளான, அத்தினி, சங்கினி, சித்தினி, பத்மினி என்ற நான்கின் இலக்கணம் இயம்புகின்றார். சித்தர்கள் மறைத்த, மறைபொருள்,லோக சித்தரின் கருவின் கூறு, உலக இலக்கணம், ஐம்பூதத்தின் கருவின் கூறு என்பன சொல்லுகின்றேன்.

இராசயோகியின் நுணுக்கங்களை புலத்தியரே நான் சொல்ல,கேட்பீராக. 800 பாடல்கள் கொண்ட நிகண்டாகச் சொன்னேன்.இதில் பல்வேறு கலைகளைப்பற்றிக் கூறியுள்ளேன். பெரியோர்கள் மறைத்தவற்றை, வெளியிட்டுள்ளேன். இந்த நூலில் அவற்றின் உட்பொருளைக் காணலாம்.

முன்னோர்கள் சொல்லிய நூல்களை கண்டுபிடித்து, உட்பொருளை அறியவும். உட்பொருளை அறிந்து கொள்ளும், நூல் இது; இதைப் பெறுதல் அருமையானது. கருமிகளுக்கு இது கிடைக்காது. விரிவாக, இந்நூலைச் செய்துள்ளேன் வேதாந்திகளுக்காக, இதைச் செய்துள்ளேன்.

## சையோக இலட்சணம்

**விளம்பக்கேள், சுந்தரமே, விந்துதனில் ஆண்பெண்[1]**
**உனம்பக் கேள், உற்பவித்த, உறுதியைக் கேளு வீரவாழ்க்கை**
**விளம்பக்கேள், சுந்தரமே, விந்தொன்று ஆணியப்பந்து**
**ஒளி ஞானமதில், பந்தென்றால், சுரோணிதந்தான்**
**விளம்பக்கேள், சுந்தரமே, விந்து பெரிதாகியது**
**அகண்டவாசல் கடந்து சென்றால் கருப்பற்றும்**
**விளம்பக்கேள், விந்து விதமென்றால்,புருசர்சையோகப்**
**புணரிதுவே.(926)**

1. ஆனமென்னும் பாடலில் உள்ள 2,3 வரிகல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

(உரை:) அழகரே, விந்துவிலுள்ள ஆண் அணு பெண் அணுவுடன் இணைந்து பதிய, விரிந்து கரு ஏற்படும். இது ஆண்களின் சேர்க்கை இலக்கணமாம்.

இதுவான, இலட்சணந்தான், அவரறியும் சிவயோகி
அதுவான, அமுர்தமது, பூரணத்தாலியல் பானது
இதுவான, புருசதி இழைந்துப் புணர்ந்தாயானால்
அதுவான,சுவாசமொன்றில் அறுலீலை[1],காம இயலதிகார
இதுவான, சுவாசமொன்றமுந்தி, கூத்தாடி நின்றால்
பவனி, தவஅமிர்தமும் பொங்கி பக்க அறுமிட[2] பக்கம்
இதுவான, செயலறிந்து[3], ஏந்திழையேநீகேளாய்
பக்கம்[4], கரமது நால் வாச[5] முமக்கே. (927)

(உரை:) இந்த இலக்கணத்தை எவர் அறிவார். அவரே சிவயோகி, மருந்து (சாவா) முழுமையான தன்மையது. ஆண், பெண் சேர்க்கை மூச்சு ஒன்று உலாவாகும் விளையாட்டு, காமநூலில் உள்ள இயல்படி, காற்று எழுந்து, அசைந்தாட, தவமான மருந்து பொங்கி, இடப்பக்கம் செயலறிந்து நிற்கும். இதை நீ அறிவாயாக. வலதுபுறம், கையில் நான்கு வழி இருப்பிடம் உங்களுக்கே.

மதனான, புருசரைத்தான் இவ்விதஞ்செய் மாதரசே[6]
கபடமான, சூதறிவாய், கன்னியே கேள் உன்னிதமாய்[7]
மதனான, திரேக மெல்லாம் மகிழ்ந்து தொண்ணூற்றாறு கருவி
உதமாக விந்தில் வருமோ, வாய்வு[8]
மதனான, வாவொன்று, மனபூதமைந்து போற்றி
மண்டியிசமாக[9] விந்தில் வருதன்மையறி உண்மையிது
மதனான, வாழ் மயிலேட்டு[10] தட்டினாக்கால்,
சதமான, லிங்கமதில் சுழன்றிடுமே[11]. (928)

---

1. இருவினை, 2. வருமிடது, 3. சொல், 4. வலது பக்கம், 5. வால்வாசம், 6.மாதர், 7. நிதமாய், 8. வாயுகேள்அபான, 9. தசமாக, 10. மண்டியிட்டு, 11. சுழன்றிடுமே, அகன்றிடுமே என்றாதல் வேண்டும்.

(உரை:) காமவேள் போன்ற ஆண் மகளை இவ்விதம் பெண்ணரசியே நடத்துவாய். கள்ளமனம் படைத்த, மனத்தை அறிவாயாக. பெண்ணே மிகவும் கூர்மையாகக் கேட்கவும். உடல் 96 கருவிகளால் ஆனது. இது மகிழ்ச்சியடைய ஆண்மையில் வருமா? காற்று ஒன்று. ஐந்து வகையான பூதம் ஐந்தையும் போற்றவும். மயிலே, கபம் வந்தால் நிலையான ஆண் குறியானது சுழலும்.

**சுவாச லீலை**

அகன்றபோதே, மயிலே காணி[1], சுவாசமது
அண்டத்தனு, நீண்டு வருந்தோணியது போல வில்லாணி
அகண்ட பருவதம் போல் அபானவாயுட்[2] சேர்ந்து
உகாந்த கால வரும், ஆண்மையுடனாகி விதம் கேளு
புகன்ற, கருமாதிபனகம் புக்கின் தோரமாகில்
மனமுவந்து[3] ரதி பேரில் மனம், புகழாரம் , காமமயம்
நயன்ற மயன்மதாதியு[4] நன்முயல் போழுதிதமிட்டு
மருவி, விளையாடிடுவார்[5], மகிழ்ந்தே. *(929)*

(உரை:) ஆண்குறியானது நீண்டு, விரியப் பெண் மயிலே, காணலாம். காற்று அண்டமென்றவில் நீண்டு வரும்; படகு போல வில்லாணி, பெரியகுன்றம் போல் அபானவாயு உடன் கலக்கும்; புகம் காலம் வரை இருக்கும் ஆணினுடைய இயல்பு வருகின்ற வகையைக் கேட்பாயாக.

**வேறு**

மணமான, புருசருக்கு அபான வாயு எழுந்தால்[6]
மகத்தான, லிங்கமது போல்[7] நீளும்
அனமான, மயாசக்தி, மையல் பாரதீதம்
அச்சணமே, (ஸ்) தீரிமோகி[8], சுவாசலீலையாகும்

---

1. காணீரே, 2. உடன், 3. முன்வந்து, 4. மன்மதன் ரதியும் போல, 5.விளையாவோர், 6. கருவான, வரவெழுந்தால், 7. தனு 8. மோகித்து.

கனமான, கபிலீலை செய்யலாம்மாள்[1]
கன்னியர், கெட்டங்குலத்[2] தட்டு மைலாகி
நனமான, உனதான்[3], உட்ப்பார்வையானால்[4]
நாட்டலாம், தனுவாலே, நாதக் கனியாமே. (930)

*(உரை:)* மணமான ஆண்களுக்கு, அபானவாயு எழ லிங்கம் நீளும், மாயையான சக்தி மயக்கும். பருமையான காந்தலுடன், அந்த வினாடியிலேயே பெண்களின் மேல் விருப்பம், காற்றின் விளையாட்டாகும். கனமுள்ள குரங்கு விளையாட்டு விளையாடலாம். உதான வாயு, உடலில் பார்வையானால், வில்லாக நாட்டலாம். நாதமான பழமாகும்.

## மருந்து செய்முறை (நெய்)

கனியாமவள் நாதம், கழலுமதையாக்
கருவான, நூலதனில் நாதம் வாங்கிப்
பணியமாம், பீங்கானில் பிழிந்திருபலந்தான்
பலமான, இரசபற்பந்தான் வராகனெடையிட்டு
வனியமாம்[5], செவ்விளநீர், நாழி சலம் விட்டு
வளமான, ஆவின் வெண்ணை இருபலத்தானிட்டு
மனியமாம்[6], நாற்பதின் மேல்[7], மேகக் கூறுதான்
மாதுரதிலே[8] சடலம் நொந்ததாமே. (931)

*(உரை:)* கன்னியான அவளுடைய (மாதவிலக்கு) வெளியாக, அதை எடுத்துக்கொள்ளவும். பீங்கானில் இரண்டு பலம் எடுத்து, வராகன் இரசபற்பம், செவ்விளநீர், நாழிநீர் வெண்ணெய் இரண்டுபலம் கலந்து உண்ணவும் மேக நோயின் பாதிப்பு, 40க்கு மேல் பெண்ணில் உடல் நோதல் செய்யும்.

---

1. யார், 2. கேட்ட, 3. உனதான், 4. ஊவை பார்பருமை, 5. வாணிகமாம், 6.மாணி, 7. நாற்பதின், 8. ரதியாலே.

குறிப்பு: புருசக்கிருவம், மண்டலத்தில் விந்து கல்லாகும் ஒருவருக்குச் சொன்னால், நரகத்தில் வதைபட வேண்டும.

சடலமான மேக மிருபத்தொன்றும்
செப்பினேன்வான மண்டலத்திலோடிப்போகும்
அடமான விதமெல்லாம், மத்தித்தாயானால்[1]
அருளினோம், புருசயோக கிருதமதுவாகும்
வடமான, இம்முறைதான் பலதமதுவாகும்[2]
வஞ்சியர், மேலாசைவிட்டு, கிருத மதையுண்ணு
நடமான, நாளொன்றுக்கே, இருநேரமைய்யா
நாட்டுவோம், கச்சக்காய் பிரமாணந்தானே. *(932)*

*(உரை:)* மேகநோய் 21 வகையும் உடலில் தாக்கும் வானவெளியிலோடிப் போகும். புருசயோக கிருதம் இதுவாகும். இம்முறை வெற்றியை உண்டாக்கும். பெண்கள் மேலே காதலை விட்டு, நெய்யை உண்ணவேண்டும். நாள் ஒன்றுக்கு இருமுறை குடிக்கவும். இதனளவு கச்சக்காயாகும். 48 நாட்கள் உண்ணவேண்டும்.

தானென்ற, மண்டலந்தானிப்படியுண்டால்
தப்பாது, விந்து, கல்லாகி விடுமைய்யா
ஏனென்ற, இரண்டு[3] மண்டலமிதைக்[4] கொண்டால்
இளகி விட்ட, முட்டெல்லாமெழுகது போலாகும்
நாளென்ற, ஆணவத்தால் சொல்லிவிட்டோமிதனை
நாடதிலே, காமுகர்க்கு, நாடினதோ என்றால்
வானென்ற, மாமறையோர், சாபமது எய்தும்
மகத்தான, வித்தையெல்லாமழிந்து[5]
போமென்றே. *(933)*

*(உரை:)* மண்டலம் உண்ண, விந்தானது கல்போல இறுகும். இரண்டு மண்டலம் உண்ண, கால்மூட்டுகள் மெழுகுபோல இளகிவிடும். நான் என்ற தற்பெருமைக்காக இதைச் சொன்னேன். காம வெறியர்கள் உண்டால், மாமறைவர்களான பெரியோர்கள் சாபம் கிடைத்து. இக்கலையானது அழிந்துவிடும்.

---

1. மடுத்தாய, 2. வீமமுமாதானம், 3. வீரண்டு, 4. இதனை, 5. மவிந்து.

என்றான போகிகளுக்கடுத்ததே இக்கிருதம்
என்னாணை, புலத்தியனே, இதை வெளியிடாதே
அன்றான, கிருதமதையுண்டு, சதாகாலமருள் பெறவே
வாசியதை, அண்டக்கல்லாகி ... ... ... ... ...
சண்டான, மௌனயோகம், இராசயோகஞ்செய்வீர்
சமர்த்தான, இராசானந்த யோகஞ்செய்வீர்
நன்றான,மகாராச யோகமது செய்வீர்
நலமான, சமாதியோகம், குளிகையோகஞ் செய்யே. *(934)*

செய்யப்பா, சவுமியத்தின், சூத்திரம் எண்ணூறில்
செப்பினோம், அறுபத்து நான்கு யோகஞ் சொன்னோம்
அய்யப்பா, அறுபத்து நான்கு யோகத்திற்கு
அருள் பெறவே, செய்ய இயல்பாய்ச் சொன்னோம்
மெய்யப்பா, இதற்கெல்லாமிந்த கிருதங் கொண்டால்
மேலான, பரகதியில் மேலாம் பாரு
பொய்யப்பா, சொல்லவில்லை, பூபதியே கேளு
புகழான, சித்தர்க்கெல்லாங் குரு, கிருதமாமே. *(935)*

*(உரை:)* யோகிகளுக்குத் தேவையானது இந்த நெய் ஆகும். இதைக் கூறவேண்டாம். நெய்யை உண்ண, எல்லாக் காலமும், அருள் கிடைக்கும். இராசயோகம், மவுனயோகம், இராசானந்த யோகம், மகாராசயோகம், சமாதியோகம், குளிகையோகம் என்பன செய்ய உதவும்.

அழகான பாடல்கள் கொண்ட, 800 நிகண்டில் 64 வகையான யோகங்களை எடுத்துக் கூறினோம். மேலான, இந்த நெய்யை உண்ண வானவர்களுக்கான தகுதி கிடைக்கும். பொய் சொல்லவில்லை. சித்தர்களுக்கு இது முதன்மையானது.

கிருதமதில், உலகமதில்[1] தேறும் பேராகில்
கணிதமதாய், சொல்லுகின்றோம் கேள்
வருதமெனும்[2], வேதநூற் பாசையறிந்து
வசனித்த, சாகரத்தின் வன்மை[3] யதைக் கண்டு

---

1. ஆருலக, 2. விரதமெனும், 3. வளமை. “யோகிகளுக்கு” என்றாதல் வேண்டும்.

விரதமெனும், பெரியோர்கள், விஞ்சையறிந்து
விளக்கினோம், நல்வினை, தீவினையைக் கண்டு
மிருதமெனும், பாவபுண்ணியவிகிர்தமதை யறிந்தேன்
மிகவும், பண்போர்களுக்[1] கதிக மவர்தானே. *(936)*

*(உரை:)* உலகத்தில், நெய்யை உண்ணும் வாய்ப்புள்ள மனிதருக்குக் கூறுகின்றேன். கேட்கவும், வேத நூல்களின், மறைமொழிகளை செழுமையை அறிந்து விளக்கினேன். பெரியோர்கள், மந்திரத்தை அறிந்து, நல்வினை, தீவினை அச்சத்தால் பாவ, புண்ணிய வேறுபாடுகள் அறிவார்.

அதிகமாம், சிவயோகி அவர்க்குப்பேர், நாமம்
அவர், சரிதையோகமதில் அடிபட்டவராகில்
அதிகமாம், கிரியைதனில், மாந்திரிகமாய், மாய்ந்த[2]
அந்த மட்டுப்படா, வசியமதை[3] வளமாய்க் கட்டி
மதிகமாம், பஞ்சலட்சணமதை ஆய்ந்து
அறுபத்து நான்கு கலை சித்து விளையாடி
பதிகமாயிக் கிருதம், பஞ்சபூதயத்துக்கு[4]
… … … … … குரு கிதமாமே. *(937)*

*(உரை:)* சிவயோகி என்று அவர்களுக்குப் பெயர், அவர்களுடைய வரலாறு, யோகமாகும். அதில் பயின்றவரானால், அதிகமாக சடங்குகள், மந்திரம் மாயை என்று வசியம் செய்து செழுமையுடன், ஐவகையான இலக்கணங்களையும் தேர்வு செய்து, 64 கலைகளையும் வெற்றியுடன் விளையாட, இந்த நெய் உதவும்.

**உணவு**

ஆமப்பா, சுந்தரமே, சகல கலையறிந்து
அதிகமா, மெய்ஞான வேதமயமாகி
வாமப்பா, பலபல சஞ்சலத்தை விட்டு
மண்டல நாளிருவளமாய்க் கொண்டால்
போமப்பா, வெள்ளரிசி நாழி கொண்டு ஓகோகோ
கழுதைப் பாலரைப் படிதான் கொண்டு
பாமப்பா, பசும்பால் அரைப்பாடிதான் சேர்த்து
பனிநீர், நாலுபலம் பரிவாயதில் சேரே. *(938)*

1. பணிப்போர், 2. மாய, 3. வாசி, 4. பதாதிகிருதம்.

*சேர்த்து சலமரைப்படி தானிட்டதிலாக்கி*
*செயமான, வெள்ளரிசி ஏழுதரம் கழுவி*
*ஆர்த்துவ, பாண்டமதில் அரிசியதைவிட்டு*
*அடுப்பின் மேலேற்றி, வன்னியக்கினியை மூட்டி*
*நார்த்ததைச் சமைத்து[1], அன்னமாறி வைத்தையா*
*நாளொன்றுக்கிருவேளை, கொடுக்காய் புளி கூட்டி*
*பார்த்துக்கறி யுப்புதனை, மூன்று தரம் காய்ச்சிப்*
*பன்மை பெற, சுத்தகரியுப்புதனைக் கொள்ளே.(939)*

*(உரை:) நெய் கலந்து உண்ணுவதற்கான உணவு இங்கு கூறப்படுகின்றது. அதிகமாகக் கலைகளைக் கற்றுணர்ந்து மெய்ஞான வேதத்தை அறிவார். அலையும் மனத்தை நிறுத்தி, நெய்யை செழுமையுடன் இருவேளை மண்டலம் உண்ணவும். இதற்கான பத்திய உணவு, நாழி, வெள்ளரிசி, கழுதைப்பால் அரைப்படி, பசும்பால் அரைப்படி, பனிநீர் 4பலம் என்பனவற்றை எடுத்துக்கொள்ளவும். பின் வெள்ளரிசியை ஏழுமுறை கழுவி, தூய்மையாக்கி அரைப்படி நீரில் சேர்த்து, அடுப்பில் வைக்கவும். சமையல் செய்யவும். சோறு வெந்தவுடன், இறக்கவும். கொடுக்காப்புளி, மூன்று முறை வறுத்துக் கரியுப்பைச் சேர்த்துக்கொள்ளவும்.*

*கொள்ளப்பா, சிறு பயறு குழம்பதுவாகும்*
*கூறான, பத்தியமது, குணமுள்ளோர் செய்வார்[2]*
*அள்ளப்பா, கிருத முண்ணும் பண்போர்கள்,*
*அடவான, பத்தியது, யாருக்கும் விள்ளலாகா*
*அள்ளப்பா, அபினி, கஞ்சா, வஸ்துவை நீ தள்ளு[3]*
*ஆயிழையார்[4], சையோகப்புணர்ச்சி தள்ளு*
*விள்ளாதே ஒருவருக்கும், சுந்தரமே கேளு*
*விளக்கினோம், பத்தியத்தால் வெகு சித்தியாமே.(940)*

---

1. நாற்றுவகை, 2. யாருக்கும் விள்ளலாக, 3. இவ்வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை. 4.மடாராசை. "வன்னியக்கினி" என்ற இரட்டைக் கிளவியைக் கையாண்டுள்ளார். கொடுக்காய்புளி தமிழ்நாட்டுத் தாவர வகையைச் சேர்ந்ததல்ல. 942ம் பாட்டிலும் இரட்டைக்கிளவி பயன்படுத்தப் பட்டுள்ளது.

(உரை:) சிறுபயறால் ஆன குழம்பு பத்தியத்திற்கு நல்லது. இதை யாருக்கும் கூறலாகாது. அபின் கஞ்சா என்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. பெண்களின் கலவியும் கூடாது. பத்தியமுறையால், வெற்றியானது கிடைக்கும்.

## ஆண்சாதி நான்குக்கான இலக்கணம்

*சித்தியென்ற, ஆண்சாதி நாலுண்டு கேளு*
*செப்புகிறோம், புலத்தியனே, அந்தெண்ணூறில்*
*வித்தியெனும், விதவஸ்தச் சுபசாதி யென்றும் பேரு*
*விவேக முள்ள, பயிர்பதி சாதி யென்றும் பேரு*
*சுத்தியெனும் சாம சாதி யென்றும் பேரு*
*சைத்தன்யப்பிரகாச சாதியென்றும் பேரு*
*முக்தியெனு மாண்சாதி நான்கின் பெயர்கள்*
*முக்கியமாய், சொல்லிவிட்டோம், ஆண் சாதி நாலே.* **(941)**

(உரை:) ஆண்களின் வகைகள் நான்கு; அவற்றின் பெயர்கள், 1. விதவஸ்சசுபசாதி, 2. பயிர்பதி, 3. சாமசாதி, 4.சைத்தனியப் பிரகாச சாதி என்பன.

*நாலான, ஆண்சாதி நான்கினுட் பேர்கள்*
*நளினமதாய், சொல்லுகின்றோம், ஒவ்வொன்றாய் கேளும்*
*காலான, கருக்குருவாயிந்த எண்ணூறில்*
*கருணை பெறச் சொல்லுகின்றோம், கடைக்காண்டமிதில்*
*ஆலான, பரிபாசைய தீதமெல்லாங் கண்டு*
*அன்னவர்க்கே, மகாத் தெளிவாய், அருளுவோம் நாமும்*
*தூலான, தூலமதின் பூட்டெல்லாம், சொல்லுவோம்*
*துதிபெறவே, அகத்தியன் சொல்லும் கவியாமே.* **(942)**

---

942வது பாடல், முத்திரைப்பாடல் அல்லது நாந்திக்கவியாகும். இது நூலாசிரியன் பாடலில் கூறுவதாக அமையும்.

*(உரை:)* ஆண்களின் வகைகள் நான்கு, ஒவ்வொன்றாகக் கேளும் சொல்லுகின்றேன். கடைக்காண்டம், நிகண்டு 800ல் அருள்கூர்ந்து கூறுகின்றேன். மறைபொருளை நீக்கித் தெளிவாக அகத்தியன் நான் பாடலாகக் கூறுகின்றேன்.

**அதீத சுகசாதியின் வேறு பெயர்கள்**

கவியான, பிரமேக சாதி [1] யென்றும் பேரு
கருவான, தீப நாத சாதியென்றும் பேரு
பலியான, மதி நில சாதி யென்றும் பேரு
பவழங்க, உபசாந்த சாதியென்றும் பேரு
பலியான [2], பதிபால சாதியென்றும் பேரு
பரிவான, குமணதனு [3] சாதியென்றும் பேரு
தவியான, தவபோத சாதி [4] யென்றும் பேரு
தருவான, அத்தசுகசாதி [5] இலட்சணத்தின் பெயரே. *(943)*

**பயரபதி சாதி இலக்கண வேறு பெயர்கள்**

சாதியெனும், பரித முயல் [6] சாதியென்றும் பேரு
சார்வான, வீரபோக சாதியென்றும் பேரு
ஆதியெனும், மறவசாதியெனும் பேரு
அந்தப்பரிமள சாதி, விநோத சாதியென்றும் பேரு
பாதி [7] யெனும், பாங்கிவிம்பசாதியென்றும் பேரு
பாடினோமிந்தப்படி, பதமோதக [8] சாதி
வேதியானு [9], விகளோங்க சாதியென்றும் பேரு
விளம்பினோம்,பயரபதிசாதி இலட்சணத்தின்பேரே. *(844)*

*(உரை:)* பயரபதியின் இலக்கண வேறு பெயர்கள் முயல் சாதி, வீரபோக சாதி, மறவசாதி, பரிமளசாதி, விநோத சாதி, விம்பசாதி, பதமோதக சாதி, விகளோங்கசாதி என்பன எட்டுப்பெயர்கள்.

---

1. மோக, 2. இவ்வரி சரசுவதி மகால் சுவடியில் இல்லை, 3.குணமதனால், 4..தபோதன, 5. வஸ்து, 6. பரிவுயல, 7. வாதி, 8.பதமோக, 9.வேதியெனு.

அதீத சுகசாதியின் வேறு பெயர்கள் பிரமேக சாதி, தீபநாதசாதி, மதி நிலசாதி, உபசுகசாதி என்பனவாகும்.

பேரென்ற பதி, சுரோத சாதி யென்றும் பேரு
பேசினோம், முயல் காம சாதி யென்றும் பேரு
வாரான, பாலை நிதம்பசலை சாதி[1] யென்றும்
வசனித்தோம், தன் வட புகழ் சாதி[2] யென்றும்
காரான, சுனபேதம், நிப்பான சாதியென்றும்
கருவான, நிகழ்சாதி யென்றும் பேரு
தேரான, நிசனித[3] சாதியென்றும் பேரு
தெளிவான சாதி இலட்சணத்தின் பெயரே. (945)

(உரை:) பயரபதி வகுப்பின் வேறு பெயர்கள் சுரோத சாதி, முயல் காம சாதி, நிதம் பசலை சாதி, தன்வட புகழ் சாதி, நிப்பான சாதி, நிகழ் சாதி, திசனித சாதி என்பனவாம்.

**சைதன்ய பிரகாத வகுப்பு இலக்கணப் பெயர்கள்**

தெளிவான, மருழோத சாதியென்றும் பேரு
திருப்புவன சாதியென்றும், அவைமா சாதியென்றும்
வளிவான[4], நாத சாதியென்றும் பேரு
வசனித்தோம் மெய்ஞான உபதேச மென்றும் பேரு
களிவான, கண்ணாத சாதியென்றும் பேரு
கருணைபெறும், சிகரந்த சாதியென்றும் பேரு
நளிவான, விந்துவாதி, நாதி யென்றும் பேரு
நாம் சொன்னோம், சைதன்ய, பிரகாதசாதி
லட்சணமே. (946)

(உரை:) சைதன்ய பிரகாத சாதி இலட்சணப் பெயர்கள், மருழோதசாதி, திருப்புவன சாதி, அவைமாசாதி, நாதசாதி, மெய்ஞான உபதேசம், கண்ணாத சாதி, சிகரந்த சாதி, விந்துவாதி, நாதி என்பன.

---

1. பசிமா, 2. மதனவடம்புகள், 3. நித்த, 4. தயான
பாடல் வரிகள் 1, 2 சரசுவதி மகால் சுவடியில் 3, 4 என்பதாகவும், சரசுவதிமகால் சுவடியில் உள்ள 3, 4 அடிகள் மாறி 1,2 என்பதாகவும் உள்ளன.

பேரென்ற, ஆண்சாதி நாலிடப்பேர்கள்
பேசினோம், ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் பரிபாசை
ஆரென்ற, யோக சித்தான வருமே[1], தேற
அருளினோமிந்த எண்ணூறு, அதீத நிகண்டாக
வாரென்ற, புருசலட்சணமதியே ஆனால்
வசனித்தப் பொருளறிந்து, வளமாய் செய்வீர்[2]
தேரென்ற, நிகண்டிதுதான், ஆயிரமும் பார்த்தால்
நிகரில்லா, பொருள்களெல்லாம் நேராய் தெரியும்
பாரே.(947)

(உரை:) ஆண்களின் 4 வகையான, வகுப்புகளைத் தனித்தனியாகப் பிரித்துச்சொன்னோம், சித்தர்கள் தேர்ச்சி பெற 800 பாடல்களாலான, நிகண்டாகக் கூறினோம். ஆண்களின் இலக்கணத்தை அறிந்துகொள்ள நிகண்டு 1000 என்ற நூலைப் படித்து அறியலாம்.

நேரா மர்ம மெல்லாம்[3], நிகண்டு தனிலறியும்
நிகரில்லாப் பொருள்களெல்லாம், நிராமயம்
போற்றோ முற்றும்
வாரான, மறையோர்[4], முன்னோர்கள் சொன்னார்
மகத்தான நிகண்டெல்லாம் ஆய்ந்து கணக்கிட்டால்
வேரான, வித்துவான்களின்[5], மார்க்க மெல்லாந் தோன்றும்
விசித முள்ள, யோகியென்றால், விதமறிவார் பாரு
ஆரா அகத்தியன மா முனிவனுடைய வாக்கியம்
அருளினோம், செந்தமிழால் இந்தெண்ணூறே. (948)

(உரை:)மறைத்துச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தெளிவான விளக்கங்கள் இந்த நிகண்டில் உண்டு. நோயின்மை பற்றிய முன்னோர்கள் சொன்ன ஒப்பிடமுடியாத பொருள்களை ஆராய்ந்து, கணக்கிட வழிகள் தோன்றும். யோகிகள் வழிகளை அறிவார்கள். 800 பாடல்கள், அகத்திய

---

1. வந்தேற, 2. சொல்வீர், 3. நேராமல் மறைப்பதெல்லாம், 4.மாமறையோர், 5.விந்துகளின்.

குறிப்பு: இதுவும் முத்திரைக்கவி என்ற நாந்திக் கவியாக உள்ளது.

முனிவரின் கருத்துகளை கூறினேன்(அகத்தியரே கூறியதாக இப்பாடலில் வரவில்லை. அவருடைய கருத்துகளை 800பாடல்களின் வேறு ஒருவர் கூறியதாக வருவது முரண்பாடாக உள்ளது. இது இடைச்செருகலாதல் கூடும்.)

### பெண்களின் வகுப்பு - நான்கு

நூறான[1], ஆண் சாதி நாலுண்டு, பேர்கேளு
ஓகோகோ, சொல்லிவிட்டோம், உண்மையிது பாரு
வாரான, பெண் சாதி நாலுண்டு கேளு
வசனிப்போம், மத்தினி, சந்தினி[2] தானென்று
தேரான, சித்தினி, பத்மினி தானென்றும்
செப்பினோம், மகாத்தெளிவாய் சேர்ந்தோருக்கும்
காரான, சாதியிலே பெண் சாதி நாலு
கருவாகச் சொல்லிவிட்டோம், ஒவ்வொன்றாய்க்
கேளே.(949)

(உரை:) ஆண்களின் நான்கு இனத்தைக் கூறியது போல பெண்களின் நான்கு இனத்தைப் பேசுகின்றோம். மத்தினி, சந்தினி, சித்தினி, பத்மினி என்பன. இவற்றைப்பற்றி, நுட்பமாகச் சொல்லுகின்றேன். ஒவ்வொன்றாகக் கேட்கவும்.

கேளப்பா, சுந்தரமே, புலத்தியனே கேளு
கேவலமாய், சொல்லுகின்றோம், மவுனமாய்[3]
நாமும்
கேளப்பா, எரித்த சிவன், கனவோருக்கும்[4]
விந்துதனில், உற்பவித்தார், வேறொன்றில்லை
கோளய்யா, வாராது, கொடும்பாவியல்ல
குருபுத்திரனான, தன்னா இலட்சணமாய்
சொன்னோம்
ஆளப்பா, எனையாண்டகர்த்தன் சொல்ல
அறிந்து, மனதறிவதனால் அருளினோமே. (950)

---

1. வேறான, 2.சிங்கினி, 3. மவுனமாக, 4. நயனவோருக்கும் புராண வழக்கு, சிவன் காமனை எரித்தது கூறப்படுகின்றது.

*(உரை:) புலத்தியரே,கூறுகின்றேன், காமனை எரித்துச் சாம்பலாக்கிய சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து பறந்த தீப்பொறிகள் விந்தாக மாறி, பொய்கையை அடைய, அங்கு முருகப்பெருமான் தோன்றினார், என்பது புராணவழக்கு. தட்சணாமூர்த்தியான என்னால் இதன் இலக்கணத்தைக் கூறினேன். என்னுள் உள்ள இறைவன் ஆணைப்படி, அறியும்படி அருளினேன்.*

### சத்தினி இனத்தின் பெயர்கள்

அருளினோம், உத்தம தேசி யென்றும்
ஆதிபரிபூரணமாம், சமமென்றும் பேரு
முருளுவோம், பதசகமென்[1] றும் பேரு
மூலாவிம்பமென்றதற்குப் பேரு
வருளுவோம், விபரீத சாதி யென்றும் பேரு
வளமான, வருலிங்க சாதி யென்றும் பேரு
பருளவோ[2], முதல்மறசாதி[3] யென்றும் பேரு
பரமனே, சத்தினி சாதி இலட்சணத்தின் பெயரே.(951)

*(உரை:) சத்தினி இனப்பெண்களின் பெயர்கள்; ஆதிபரிபூரணம், சமம், பதசகம், மூலாவிம்பம், விபரீதசாதி, வருலிங்க சாதி, முதல்மறசாதி என்பன.*

### சங்கினி இனத்தின் பெயர்கள்

சாதியெனும், வினோத விம்பகும் பதி[4]
சாபரதி தீதமெனும்[5] சாதியென்றும் பேரு
வாதியெனும், மருரத்தான விசேசணி[6] யென்றும் பேரு
வதனநிஞ்ச[7] சுந்தரமெனுஞ்சாதி யென்றும் பேரு
வேதியெனும், விடை[8] காலி[9] ரதனோ சாதி யென்றும்
விரும்பும் பசுங்கிளி, மாது சாதி யென்றும் பேரு
நீதியெனும், ஞானமறிந்த பரிபாசை
நிலைபெறுங்காண், சங்கினி லட்சணத்தின் பெயரே.(952)

---

1.சகம், 2. மருளவோ, 3. பதுமற, 4. விம்பகும்சாதி, 5. சாபரத்தி, 6. இரத்தனா விசேடசன்னி, 7. வதனி, 8. விட, 9. இரதன.

(உரை: சங்கினி இனத்தின் பெயர்கள்; விநோத விம்பரும்பதி, சாபரதி, மருரத்தான விசேசணி, வதனநிஞ்ச சுந்தரம், விடைகாலி, ரதனோசாதி, பசுங்கிளி, மாதுசாதி என்பன.

**சித்தினி இனத்தின் பெயர்கள்**

சங்கமெனும், மதன சம்போகி யென்றும் பேரு
சாரஓயில்[1], நேத்திரவிழி, சாதுனிதானென்றும்
அங்கமெனு, மான்மாற்று, மசியோதி என்றும் பேரு
அச்சுக் குயில் மாதரென்றவர்க்குப் பேரு
சுங்கமெனும், காமாதி, விமோத மென்றும் பேரு
காமியதி, மோகசித்தினி, லட்சணத்தின் பேரே. *(953)*

*(உரை:)* மதன சம்போகி, நேத்திர வழி, சாதுனி, மான்மாற்று, மசியோதி, அச்சுக்குயில், மாதர், காமாதி, விமோதம் என்பன சித்தினி வகைப்பெண்ணின் பெயர்கள்.

**பத்மினி இனத்தின் பெயர்கள்**

அதீதமெனும், பதுராந்தமாதென்றும் பேரு
அபிநித[2] பாதுஇது, பீதந்தானென்றும் பேரு
வதீதமெனும், பரிமாதென்றும்[3] பேரு
மதீதமெனும், விசிதமாதென்றும் பேரு
வாதப சிரோண்மணி யென்றதற்குப் பேரு
மதீதமெனும், விசித பராயணிதானென்றும்
மறஞ்சனு சாதி யென்றவர்க்கு நாமம்[4] பதீதமெனும்
பதிவிரத மாதென்றும் பேரு பாடினோம் வசமாய்
பத்மினி சாதி லட்சணத்தின் பெயரே. *(954)*

*(உரை:)* பத்மினி இனத்தின் பெயர்கள்; பதுராந்தமாது, அபிநீதமாது, பீதம்,பரிமாது, வாதப சிரோண்மணி, விசிதபராயணி, மறஞ்சனு சாதி, பதிவிரதமாது என்பன.

---

1. வாய், 2. அபிநீதம், 3. அதுபரிமாது, 4. பேரு, 953ம் பாடலில் இருஅடிகள் இல்லை. 954ம் பாடலில் சரசுவதி மகால் சுவடியில் வரிகள் மாறியுள்ளன. 3ம் அடிக்குப்பின் 5ம் அடிவருவதாக உள்ளது. இப்பாடல் அந்தாதியில் அமையவில்லை.

பாடினோ, மிந்தப்படி எண்ணூறு தனில்
பரிபாசை, அதீதமெல்லாம் பார்த்தாய்ந்து
ஓடினோம், உமை, தீமை, இவ்விரண்டுந்தான்
நாம் சொன்னோம், ஆயிரமாய், காண்டமெட்டாம்
சாடினோமப் பொருளை, அறிந்தாராகில்
சமர்த்தென்ன, மெய்ஞானி அவர்க்கீடுண்டோ ?
பேடியாய், திரிந்ததனாலாவதென்ன ?
பேய் மக்காள், இதையறிந்து பேசுவீரே. (955)

பேசுவாம், சகல கலைஞான மெல்லாம்
பேரான, இந்நூலின் கருவியெல்லாம்
நாசுவோம், மகராதி[1], வேதாந்த பாடம்
நண்பான, சிவயோகி நலமாய்க் காண்பார்
மூசுவோம்[2], முப்புவின் சாதி நாலு ஊனியே
சொல்லுகின்றோம் உண்மையாக
வாசுவோம்[3], வாசிமலர், பரிமளங்கள்
வசனிப்போம், வழலையென்றும் பெயரே. (956)

## பூநீறு பெயர்கள்

வாலையென்ற, பூநீறு இது மூன்றாகும்
வாத்தி[4], துக்காதியெனும் சமத்தாம் பேரு
காலையெனும், சாதி மூன்று பேரு
முப்பு, வாச்சர[5], காயங்கள் முதலான நீதமாச்சு
நாலை யென்ற[6], பொருளெல்லாம் மூலமாச்சு
நியாயமாறாக யென்றால் முப்புதானும்
ஆலையென்ற, கன்னிமது, சலம் பொசிப்பார்
ஆத்துமாவின் நிலையறிந்தோராமே. (957)

(உரை:) பூநீறு என்ற வாலை மூன்றாகும். வாத்திதுக்காதி எனவும் முப்பு, வாச்சரகாயம், கன்னி மது, சலம் பொசிப்பார் என்பன வேறு பெயர்கள்.

---

1. கருதி, 2. மேகவோம், 3. வாசுவோம், 4. வாதத்து, 5. சராசர, 6.நாளை.
957ம்பாடல் அந்தாதியில் இல்லை.

# முப்பு

அறிவோர்கள், முப்புவையறியவேண்டும்[1]
அதையறிந்து, சிவயோகஞ் செய்ய வேண்டும்
அறிவோர்கள், அதன் பிறகு, வாசி காண வேண்டும்
மகத்தான, அப்பியாசஞ் செய்ய வேண்டும்
அறிவோர்கள்[2], அதன்பிறகு கற்பமுண்ண வேண்டும்
அதன் நல்கலியறிய, கிருத முண்ண[3] வேண்டும்
நறிவோர்கள், மவுன நிலை அறிய வேண்டும்
ஞான, வேதாந்த மெய்ஞான பரகதியே. (958)

(உரை:) முப்புவைப்பற்றி தெரிந்துகொள்ளுதல் தேவை, பின்னர் சிவயோகம், காற்றைப் பற்றிய பிராணாயாமம் செய்யவும். வாசியைப்பற்றிய பயிற்சி பின்னர் கற்பம், அடுத்து நெய் என்பன தொடர்ச்சியான வகைகள் இவற்றை அடைய பேசாமை வேண்டும்.

## பூநீரின் பெயர்கள்

பரமான, குருபத மென்றும்[4], சம மென்றும் பேரு
பரிவான, பூதநிசிசைய மென்றும் பேரு
அரமான[5], அசிதமயப் பூவென்றும் பேரு
அக்களவு என்றதற்கதீதப் பேரு
சரமான, சாத்திரவசமென்றும் பேரு
சமர, பரிவான, பூதகலைய மென்றும் பேரு
துறமான, சாத்திரச் சன்னி யென்றும் பேரு
துருவான, பூநீறு இலட்சணத்தின் பேரே. (959)

(உரை:) பூநீரின் பெயர்கள், குருபதம், சமம், அசிதமயப்பூ, அக்களவு, சாத்திரவசம், பூதகலையம், சாத்திரசன்னி என்பன.

பேரான, வாமப்பூ, வாழ மணத்தானென்றும் பேரு
பேசினோம், சங்காதியெனும் பேரு
வாரான, ரவிசஞ்ச மென்றும், பேரு
வளமான, சிவபோதமென்றும்[6] பேரு

---

1.வேண்டுமே, 2. புரிவோர்கள், 3. எனை, 4. அம்மான் கரு, 5. அறமான 6.சீவபோதம்.

தேரான, சிரோதயலமென்றும் பேரு
தெளிவான, கருவடமென்றும் பேரு
ஆரான, ஆத்திரோடமென்றும் பேரு
அருளினோம், பூநீரின் இலட்சணத்தின் பெயரே. *(960)*

*(உரை:)* வாமப்பூ, வாழமணத்தான், சங்காதி, இரவி சஞ்சம், சிரோதயம், கருவடம், ஆத்திரோடம் என்பன பூநீரின் பெயர்கள்.

**வாலைப்பூநீறு**

பூரணமெனும்,பூபதி, நீர்க்காதுடமென்றும்
போதகமா, என்றதற்குப் பேருண்டாச்சு
வாணமெனும், வாஞ்சை யென்றும் பேரு
வளமான, பீசமெனுமதற்குப் பேரு
தானமெனு, மணரும்[1], வேத வித்தார மென்றும்[2] பேரு
தாசவகை, வினோத பூச மென்று மதற்குப் பேரு
ஆன மெனும், ஆதவாழ் பூடென்றும் பேரு
அருளினோம், வாலைப்பூநீரின் இலட்சணத்தின்
பெயரே[3]. *(961)*

*(உரை:)* வாலை பூநீரின் வேறு பெயர்கள், பூபதி, நீர்க் காதுடம், போதகமா, வாஞ்சை, பீசம், வேதவித்தாரம், வினோத பூசம், ஆதவாழ்பூடு.

**வெண்பா ?**

பூநீறது, மூன்றினுட போதகமே[4]
சொல்லிவிட்டோம், மாதரசே, நீகேளாய்
மதியறிவை, சாதனை செய்து, பூநீறது
மூன்றினுட, புகழதனயே ... ... ...
யாரறிவார்[5], பேணியது போலே
இயம்பினோம் உண்மையறி

---

1. பணமே, 2. வினத்தாம், 3. இப்பாடலின் கடைசிவரி முதலடியாக இருக்கவேண்டும். அந்தாதி அமைப்பு அப்போதுதான் கிடைக்கும்.4. பாறிய மூன்றினுட பாதகமே, 5. பூ,

பூநீறது, மூன்றினுக்குப் போதமயமாகில்
வாதமெலாம், மனதறிவால் வணங்கானப்பா[1]
பூநீறு மூன்றினுட பொருளதனையே, நாமறிந்தோம்
கேதியிது[2], மாமயிலே செப்பு. *(962)*

## கவி இலட்சணவாணர் வேறு

செப்புவோம், சுந்தரமே, நன்றாய்க் கேளு
திருவருளாம் உருவ அருளாம் குருவருளா ரென்றும்
அப்புவேகம், அயமான ரென்றும் பேரு
அருளான, லட்சணவாள்[3] என்றும் பேரு
நப்புவோம், நயபுருகோதனென்றும் பேரு
நாதனிசைய, லட்சணவானென்றும் பேரு
தப்புவோம், லோக சன நாதரென்றும் பேரு
சாற்றினோம், இலட்சணவாணரின் பெயரே. *(963)*

*(உரை:)* இலட்சயவாணரின் பெயர்கள், திருவருள், உருவ அருள், குரு அருள், அயமானர், இலட்சணவான், நயபுருகோதன், லோக சனநாதன் என்பன.

## பண்டிதர் இலட்சணம்[4]

வாணராம், புனரோதயம், இமவாரி, சென்றும்
வருசரிகம், அண்டித லட்சணவானென்றும்
ஆனராம், மடங்கப் பண்படிதரென்றும் பேரு
அனோதலட்சணமரென்றும், அவர்க்கு நாமம்
காணராம், கருவாளி, புருநீத மென்றும்
கருநாத பண்டித லட்சணவானென்றும் பேரு
பூரணராம், புவனோத விபரோதமென்றும்
புகட்டினோம், பண்டித லட்சணத்தின் பெயரே. *(964)*

---

1. வணங்கப்பார், 2. சேதியிது, 3. இலட்சணவான், 4. இப்பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

962ம் பாடல் வெண்பா என்ற தலைப்பிடப்பட்டாலும், இது வெண்பா அல்ல. இப்பாடல் பொருத்தமின்றி அமைந்துள்ளது.

(உரை:) மருத்துவர்களின் பெயர்கள்; வாராணராம், புனரோதயம், அமவாரி, வருசரிகம், அண்டித லட்சணவான், மடங்கப்பண்டிதர், அனோத லட்சணமர், கருவாளி, புருநீதம், கருநாத பண்டிதலட்சணவான், புவனோதவிபரோதம் என்பன.

### கல்வத்தின் லட்சணம்

பண்டிதராம், பரிமள குணகந்தா னென்றும்
பாடினோம், சூரியாதமென்றும் பேரதற்கு
அண்டிதமா, மண்டலவாரு என்றும் பேரு
அடவான, பூதவேணு என்றும் பேரு
கண்டிதமாம், கபாடலாடமென்றும் பேரு
கலகண்டமென்றதற்கதீதப் பேரு
மண்டிதமாம், இராசிதக மென்றும் பேரு
மகத்தான, பேரிதற்கு, கல்வ லட்சணத்தின்
பேரே.(965)

(உரை:) கல்வத்தின் பெயர்கள்; பரிமள குணகந்தான், சூரியாதம், மண்டலவாரு, பூதவேணு, கபாட லாடம், கலகண்டம், இராசிதகம் என்பன.

### சாத்திரலட்சணம்

மதுவான வேத பூத மயமென்றதற்குப் பேரு [1]
மகத்தான ஞான போதக மென்றும் பேரு
அதுவான, மவுன பத பாசை யென்றும் பேரு
ஆரியம், சராரிய மென்றதற்குப் பேரு
ததுவான, சலவித்தமென்றும் பேரு
சத குஞ்சரமென்றதற்குப் பேரு
வதுவான, வாலாமயமென்றும் பேரு
வருசித்தோம் சாத்திர லட்சணத்தின் பெயரே. (966)

---

965ம் பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

1. முதலடிகள் மாறியுள்ளன.

*(உரை:)* கலைகளின் இலக்கணப் பெயர்கள், வேத பூதமயம், ஞான போதகம், மவுன பதபாசை, சராரியம், சலவித்தம், சத்தகுஞ்சரம், வாலாமயம் என்பன.

வருசமெனும், பூதாதி அந்தத் தருவினாலே
வசனித்தோம், சுந்தரமே, சொல்லக்கேளு
திருசித்த, நிராமயத்தின், அனுக்கிரகத்தினாலே
நிகழ்த்தினோம்,சித்தருக்கு, நெகிழ்[1] பந்தமாக
அருட்சித்தோமறிவார் அந்த எண்ணூறுக் கருவை
அறிந்த சிவயோகி, அறிவார் பாரு
செனித்த நிகண்டு, அகராதியாகச் சொன்னோம்
தெளிந்த, பண்பேயறியும், வெகுசித்தி முத்தியாமே. *(967)*

*(உரை:)* ஆண்டு என்ற பூதத்தின் மரத்தால் கூறினோம். நோயற்ற அருளாலே, சித்தர்களுக்கும், தளரும்படியான கட்டுகளை நிகழ்த்தினோம். 800 பாடல்களை பூசை செய்வார்களே அறிந்துகொள்ள முடியும். சிவயோகிகள் அறிந்துகொள்ளுவார்கள். அகராதியாக நிகண்டை சொல்லியுள்ளேன்.

முத்தியெனும், சித்தியதை யறிய வேண்டும்
முதலாறுவரை, ஏற வேண்டும்
சித்தியெனு, மாயத்தினாசை தள்ள வேண்டும்
சாமீபப் பதவியிலே சார்வாராகில்
அத்தியெனும், வாசியது அப்புறம் போகாது
ஆனை, மதயானை பலம் அருள் உனக்கையா
நித்தியெனும், வேதாந்தி நீயே யானால்
நிராசையற்று, நேமநிட்டை செபதபங்கள் செய்யே. *(968)*

செய்யும், செபதீட்சை, பெரு, சத்தியுட தீட்சை
ஏதசதீட்சை, நயனதீட்சை தியான சித்தி வேண்டும்
ஐயும், சிவயோகம், சத்தியோகஞ் செய்யவேண்டும்
அருளினதோர், மகராச யோகஞ் செய்யவேண்டும்

1 நிகழ், 968ம் பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

பைய முடல் கூறு, தத்துவமதனையறிய வேண்டும்
பண் போர்கள், செய்பாகம், கைபாகம் வேண்டும்
மையும், அகாரதி நிகண்டதுவும் வேண்டும்
மகராச யோகியென்று இத்தனையும் காணே. (969)

*(உரை:)* மகராசயோகியின் இலக்கணம் இங்கு கூறப்படுகின்றது.

காணப்பா, சுந்தரமே, இந்த எண்ணூறு தான்
காமுகர்க்கும்,கள்ளருக்கும் காண்பித்தாராகில்
ஏனப்பா, இடி சிதற, முடிமேல் விழும்,
எய்து மென்ற, கருமமெல்லாம் எய்தாது பாரீர்
வாணப்பா, இந்த நூல் அறிவுள்ளோர் பார்த்தால்
வாதியெனு ஞானியவர், வளமாக வாழ்வார்
நாணப்பா, சடலமதில்,கருவதனைக் கொண்டு
நளினமதாய், சொல்லிவிட்டோம், நியாயமதாய்
நாமே. (970)

*(உரை:)* இந்த நூல் தக்கவர்கள் கையில் கிடைத்தால் உலகத்தோர்க்கு நன்மையுண்டு. இந்நூலை காமுகர்க்கும், கள்ளருக்கும் காட்டினால் தலையில் இடிவிழும்.

**விந்துவிட்டால் யோகம் கெடும், வெளிவிடாதே.**

நாமென்ற, இந்த நூலெண்ணூறு தன்னை
நாடதிலே, ஒருவர்க்கும் நாட்டிடாதே
வாமென்ற, புருசரத்தினம் நீயே யாகில்
வாதமென்ற, கருக்குருவை வளமாய்க் காண்பாய்
ஏமென்ற, இந்த நூலெட்டாம் காண்டம்
இயம்புகிறோம், இலட்சணமாய் கருவைக் கேளு
வேமென்ற, புலத்தியனே, இராசயோகி
விருதாவில், இந்நூலதனை விளம்பிவிடாதே. (971)

விளம்பக்கேள், இலட்சமவான் நீயே யானால்
விந்ததனை விட்டிடாய், விட்டாயானால்
விளம்பக்கேள், யோக மென்ன, மவுன மென்ன
வேதாந்த, சித்தாந்த ஞானமென்ன

விளம்பக்கேள், வாதமென்ன, விருதாவாகும்
வேதாந்தமிதுக்கு, நடுமையாகும்[1]
விளம்பக்கேள், விவேக மென்ன, சுகந்தானென்ற
வேதாந்தி, நீயேயானால், விளங்குஞ்சித்தே. *(972)*

**கலிப்பா - விருத்தம்**

சித்தாகிய, வெகுலட்சணக் குருவாகிய குறிகள்[2]
செயலும், சுழிமவுனக் கரு, சுழியாகிய சடலம்
வித்தாகிய, விரை கண்டனர், விந்தாகிய… … …
நாதமிது,லட்சணமொழி நூலது மேன்மை படுமாகில்
சத்தாகிய, பூநீர் தனில் சாரசலமாகில்
சார்வாயத்தில், பனி நீர் விடு, சமர்த்தாய் புலத்தியனே
நெத்தாகிய, விந்தார் சலநேர்மைபடுமாகில்
நிகழும், வெகு குழி கேளுறு நிலை கண்டனறியே. *(973)*

**குருபதிக் கட்டு**

நிலையாகிய, நாதமதி நீரைக் கலக்கிடவே
நகமும், சலமது போலது நேர்மைப்படுமாகில்
விலையாகிய, பூநீர் குழம்பது போலதுவாகும்
விந்தால்,இரச மேவும், ரவி வித்தாலதைக்கட்டும்
அலையாகிய, இது தானறி அருளும் பெரியோர்கள்
அவர்தானருள், குருவாகிய, பூநீர் சவர்க்காரம்
கலையாகிய, மனமாலிகை காணப்படும் மறுமை
கருணைபெறு, படுமொழி போலது கட்டும்
குருபதியே. *(974)*

*(உரை:)* பாடல் 973, 974ல் மருந்து முறையானது கூறப்பட்டுள்ளது. கட்டுமுறையானது சொல்லப்படுகிறது. இம்முறைகள் தற்போது செய்வாரில்லாமல், அருகிவிட்டன. பூநீர் சாரம், நீராக இருந்தால் பனிநீரைச் சேர்க்கவும். கலக்க, வைக்க, குழம்பு போலாகும். இரசத்தை, சூரிய வித்தால் கட்டவும். பூநீர், சவர்க்காரம், குருவான பதிக்கட்டாகும்.

---

1.மைய்யமாகும், 2. அமுரி. 973, 974ம் பாடல்கள் சரசுவதி மகால் சுவடியில் சரிவர இல்லை.

## முப்புக்குரு

பதிமேவுதல், மெழுகாமிது, பன்மைக் கரமதனால்
பரிவாகிய, உரமேவுதல், பலகையது போல
அதில் மேவுதல், கருவாகிய பூநீர், சவர்க்காரம்
ஆறுமறிதல் ஆகிய தேறுமிது குருவால்
மதிமேவுதல்[1], பொதிகைப்பதி, மவுனக் கருவாகில்
மனமேறி, கனந்தனைக் குணமாகக் காண்பீரிதை
நதிமேவுதல், லோகந்தன்னில், ஞானியறிவார் காண்
நலமாம், புலத்தியனே, நளினமாயிதறியே. (975)

## சவர்க்காரச் சுண்ணம் (செய்முறை)

கருவாகிய, பூநீர், சவர்க்காரமிதுவாகில்
கவி, விந்துடை நாதம் விடு, கருவாகிய சீலை
மருவாகிய[2], மண்டலக் கருமுண்டு, ஒருவிடையதன்
மேலருள் பதியேமுடன்[3] மருவாலதைச் செய்வீர்
அருவாகிய[4], அதன் மேலிரு கவசந்தனைச் செய்து
அடவாய், இரவியில் உலர்ந்த[5]தனில துபாகமாகில்
குருவாகிய, மயிற் மேற்புடம் குறிகண்டுடன் செய்தால்
கூராகிய, மதிமேவுதல், நிறமத்தினைப்[6] பாரே. (976)

(உரை:) பூநீர், இரசம், கந்தகம் இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும். அரைத்துக் கவசம் செய்து, சீலைமண் சுற்றி, சூரிய ஒளியில் வைக்கவும். உலர்ந்த பின்னர், மயில்புடம் வைத்து எடுக்க, சுண்ணமாயிருக்கும்.

## விருத்தம் - இதற்கு சூட்சம் சௌமியசாகரம்

பாரப்பா, புலத்தியனே, மெய்யாய் சொன்னோம்
பாகமறி, சௌமியத்திலிதுதான் சூட்சம்
ஆரப்பா, சொல்வார்கள், சொல்லதைய்யா
மகத்தான, சுண்ணமிதால், வேதை கோடி

---

1. அதல, 2 பருவாகிய, 3.பதியேனுடன், 4.கருவாகிய, 5. உவர்ந்த, 6. நிறமதனை. இச்சுண்ணம் செய்முறையானது, அகத்தியர் சவுமிய சாகரம் என்ற நூலில் உள்ளது. அது இங்கு சுக்கமாகக் கூறப்படுகின்றது.

கோரப்பா, தவப்பாலன்தான் அதிகமாகில்
குருசுத்தி யா குமப்பா, கொடிதான் சுண்ணம்
காரப்பா, இச்சுண்ணம், சவர்க்காரச் சுண்ணம்
சாயுச்சிய பதவியில், சேர்ந்து [1] நில்லே. (977)

நில்லப்பா,சுந்தரமே, ஒரு நிலையாய்த் தான்
நிச்சயமாய், கருக்களெல்லாம், நிலையாய்ச் சொன்னோம்
கல்லப்பா, மன்மதனையிழுத்து, நுணுக்கி [2]
கசடான, கோழையெல்லாம் கட்டினாக்கால்
சொல்லப்பா, சுந்தரம் போல அமுர்தமாகும்
சோதித்தாரும் [3], செய்யார் [4], சுரூபநிலை கண்டு
புல்லப்பா, சவர்க்கார மறிந்தா ரானால்
புலத்தியனே, உனக்கொவ்வாம், புகழ்ந்து பாரே. (978)

(உரை:) சவர்க்காரச் சுண்ணத்தின் பெருமைகள் 977, 978 ஆகிய பாடல்களில் விளக்கப்படுகிறது. பாடல் 978ல் மன்மதனின் புராண வரலாறு இடம்பெறுகின்றது. தவ நிலையிலுள்ள சிவபெருமானைத் தன் மலரம்புகளால் எய்த மன்மதன், எரிக்கப்படுகின்றான். மன்மதனின் சாம்பல் இங்கு சுண்ணத்திற்கு ஒப்பிடப்படுகின்றது.

புகழ்ந்துபார், அதீத நூலெண்ணூறு பீடம்
பூநீர், சவர்க்காரக் களவினாலே
அகழ்ந்து பார், தாம்பரஞ் சேர், உருக்கில் நீயும்
அதில்பாய்ச்சு, இச்சுண்ணம் கடுகளவு பட்டால்
நகர்ந்து பார் இராச யோக தங்கமாகும்
நலமான, வங்க மதில் கடுகளவு பாய்ச்சு
அகழ்ந்து பார், வங்கமெல்லாம் தங்கமாகும்
மகத்தான வெள்ளி தனிலாக்கி [5] ப்பாரே. (979)

தாக்கினால், ரசித, தங்க மாற்றோ கோடி
தவறாது, சூதமதைச் சுத்தி செய்து
வாக்கினால், சொன்னதென்று மலையாதே, மக்காள்
வாலை ரசம், ரவியில் வைத்துச் சுன்னம் கடுவிட்டால்

---

1. சார்ந்து, 2. எழுதுணாக்கி, 3. சோரமது, 4. செய்யார்கள், 5. தாக்கி.

நீக்கினால், கர்மவினை[1] நீங்காதையா
நிசமான ரசமதுவும் கட்டிப் போகும்
பாக்கிய வான் செய்தாரென்றால், பழுதேயில்லை
பறைமக்கள் செப்பும் வித்தை பலிதமென்றே. (980)

(உரை:) பாடல் 979, 980 என்பவற்றில் சுண்ணத்தால் செய்யப்படும் செயல்கள் கூறப்படுகின்றன. செம்பு சோ அளவுக்கு எடுத்து கடுகளவு சுண்ணம் சேர்த்து உருக்கத் தங்கமாகும். ஈயம் தங்கமாகும்.

வெள்ளி, தங்கமாகும், ரசத்தை தூய்மையாக்கிச் சுண்ணம் சேர்த்து, சூரிய ஒளியில் வைக்கக்கட்டும்.

**அத்தினி புருச லட்சணம்[2]**

பலிதமென்ற, அத்தினியின் லட்சணத்தைக்கேளு
பன்மை, பெரியோர்கள் சொல்லும் பழமையாலே
அவிதமென்ற, முடி, மயிர்[3], தங்கம் போல் நிறமாம்
அகண்ட மெல்லாம்,கோழியென்ற முட்டைச் சவ்வினால்
கவிதமென்ற, கண்ணொளியும், ரவிபோலச் சுந்தரமே
காந்தியிலே, யிது, அதிகம் புருவம் குலவாலாம்
சவிதமென்ற, சந்திரன் தானே, திர[4] நேர்மை
சைத்தனிய, கண்டங்கடைவாய் கோவை எண்ணே.(981)

கோவைக்கனி, வாயு தரு மேல் கீழாகும்
குருந்த வடை, பரியோம், உருளையாகில்
பாவையிலே, இது அதிக அத்தினி சாதி
பாரிதனில் மானிடரில் பிறவிதீரும்
நாவையிலே, இருகருமவிரல் பத்தாகும்
நட்சத்திரசோதியொளி, நடையிதுவாகும்
ஆவையிலே, அவன் பாதமலர், தாமரைக்கஞ்சது
நடுவில் விளையில்லா, இதழ் பாழாமே. (982)

---

1. தாம்வினை, 2. அத்தினி வகுப்புப் பெண்களின் இலக்கணம் என்றாதல் வேண்டும், 3. மயிரில், 4. நேத்திர.

### கலிப்பா விருத்தம்

*மலராகிய, கரமாகுதல், விரல் கந்தமுமாகில்*
*மதனப்படுமலர், மல்லிகை நிறமாகுதல் பாரீர்*
*கலராகிய, வெகுலட்சணமிகு, சுந்தரமாகில்*
*சுவை, பாரித்துடையதனைக் கதலிக் காணுவாழை*
*அலராகிய, வெகுபாரிது, அழகத்தனையிது தான்*
*ஆருமறியார்கள், இதனருள் அத்தினி சாதி*
*வலராகிய, வசியந்தனில், ஞானக் கருமேவுமது*
*காவிடை, புரியாரிட மகிபூபதி அறியே.* *(983)*

(உரை:) அத்தினி வகுப்புப் பெண்களின் இலக்கணம், 981, 982, 983 ம் பாடல்களில் உடலமைப்பை வைத்துக் கூறப்படுகின்றது. மயிரானது பொன்நிறமாயிருக்கும். கண்ணிலே ஒளி அதிகம் காணும். சிவந்து, கோவைப்பழம் போல வாயும்; உதடும் இருக்கும் (கொவ்வைச் செவ்வாய் என்பது மணிவாசகர் பாடல்) தாமரை போல சிவந்த காலடிகள், மல்லிகைப் பூப்போன்ற மணமிக்கவிரல்கள், ஒத்த தொடை, வாழையைப் போன்றுள்ளது. இது அத்தினி வகுப்புப் பெண்களின் இலக்கணம்.

### விருத்தம்

*பதியான தொடை பவனி, யோனி சிறுவாசல்*
*பளிங்கு நிறமது, போலாகும், பாரீர்*
*சதியான, அத்தினி சாதியிதுவும்*
*சாயலறிவால், ஆருமறிதலபிதாகும்*
*நதியான சங்கினியின் லட்சணங் கேளு*
*நாம் சொன்னோம், லட்சண காவியமதனைப் பாரு*
*ஆதியான அறிவுடையோர், அறிதலிதுவாகில்*
*ஆசானையடுத்துக் கருவறிந்து பாரே.* *(984)*

(உரை:) யோனி, சிறு புழையாக இருக்கும். பளிங்கு போல் ஒளியுடன் காணப்படும். இது அத்தினி வகுப்புப் பெண்களின் இலக்கணம். இனி சங்கினி வகுப்புப் பெண்களின் இலக்கணம் கூறுகின்றேன்.

## சங்கினி வகுப்புப் பெண்களின் இலக்கணம்

அறிந்திடுவீர், சங்கினிமுடி லட்சணங்கேளு
ஆரணியில் பிறக்கரிது, பிறந்தாயாகில்
கறிந்திடுவீர், முடிமயிர்தான், கருமஞ்சள் போலாகும்
கண்டுபிடி, மூன்று மயிர்துடிக்கும் பாரீர்
அறிந்திடுவீர், வாதியென்றால், மயங்காதே கேளு
அவளுடைய, அண்டமுடி, ஆமைமுட்டை
போலாம்
சறிந்திடுவீர், சடலமெல்லாம், பூவாசம்[1]
சங்கினியின், கண்ணொளிவு[2], சந்திர
கலையாமே. (985)

களையான[3], புருவமது, கருக்குருவி வாலாம்
கடைராச, மிளகதுபோல் ஒளிமுக நிறந்தான் மஞ்சள்
தளையான தரிப்பாச்சல் மேருவது போலாம்
தருவான, புங்கமதின் காதொளிவுமாகில்
பனையான, பழையிது பாரீர் பண்பான
பரிவான மூக்குநிறக் கிளிமூக்கு மாகும்
எளையான, இந்திரகோபமும் முகநிறமாகும்
எலுமிச்சம் பழநிறமது போல், தனபாரமாளே. (986)

ஆமென்ற, தந்தமிருகீழே உதடாகில்
அருமதென்ன, வா இழவ பாளையத்தின் குரும்பி
நாமென்ற, நாவொளி, அரசயிலை போலாம்
நயன மிருவிழி, செவ்வாணை, நகில்களாகில்
வாமென்ற, இடைப்பிடி, கடையான மேலப் பிதான்
வாய்திறந்தவன், பாடுங்குயிலோசை, கணீர்
என்னவென்ற
இது இலட்சணக் குறியிதுவாகில் மேலான
இருதுடையும், கதவின் நடுத்துண்டா மென்றே. (987)

---

1. பூவரசம்பூ வாசம், 2. கண்ணொளி என்றாதல் வேண்டும், 3.கானான.

நன்றான கணுக்காலும், பசும் பொன் நிறமாகில்
இயல்பான, பாதமது,மருக்கோவை நிறமாம்
நன்றான, நாபி வெண் தாமரையினொளி போல்
நளின ஒயில் நடையதுவும், நாரை நடை போலாம்
அண்டான[1], பவனிவாசல், யோனி, சிறு குழையாய்
அடையாளம், சங்கினி சாதி, அக்குரலோசை[2]
கண்டாயே, கால்விரல்,கைவிரல் பத்தாங்கு[3]
காணீரோ, பண்போரே, சங்கினி சாதியாமே. (988)

காணீரோ, மாமயிலே, கருவினிலுதித்த விதம்
நாணயமாய், சொல்லிவிட்டோம், நளினமாய்க் கண்டு
காணீரோ, இக்குறியைக் காசினியில் மானிடர்கள்
வேணுமொன்றுவோர், உறுதிவிபரமதாய் அறிவதானால்
காணீரோ, சங்கினியில் கரு வதனைக் கண்டுணர்ந்து
மூலப்பொருளான விந்து, முப்பறிவார், யோகிகள் தாமே
காணீரோ, மாமயிலே, காவியந்தா னைந்தினுக்கும்
பயனறியும், பரிபாசைப் பாடினதே. (989)

(உரை:) 985 முதல் 989 வரை இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சங்கினி இனப்பெண்களின் இலக்கணம், தலை முடியானது கருப்பு மஞ்சள் வண்ணத்தில் இருக்கும். அண்டமுடி, ஆமை முட்டைபோல மென்மையுடன் இருக்கும். புருவம், கருப்பான குருவி வால் போல் நீண்டு இருக்கும். முகமானது மஞ்சள் வண்ணம், மூக்கு கிளியைப் போல வளைவாக இருக்கும். மார்பகங்கள் எலுமிச்சங்கனி போல இருக்கும். பல், உதடு பாளையைப் போலிருக்கும். நாக்கு அரசஇலை, விழிகள் செவ்வாலரணை, குரல் குயில் போலிருத்தல், தொடைகள் வாழைமரத்துண்டு, கணுக்கால் பசும்பொன் நிறம், காலடிகள் மருக்கோரையின் நிறம், கொப்பூழ், வெள்ளைத்தாமரையின் ஒளி, நாரையின் நடை, யோனி சிறுமையானது என்பன சங்கினி இனப்பெண்களின் இலக்கணம். இவை ஐந்து காவியங்களுக்கும் பரிபாசைக்காக பாடப்பட்டது.

---

1. விண்டான, 2. அதிகக் குரலோசை, 3. பத்தாகும்.

## கலிப்பா விருத்தம்

பாடுங்கவி, அறிவாகிய பாசையிது போல் பாடார்
பொருள் மூலத்ததனை, பண்[1] போரறிவார் தானும்
நாடும், பதிணென் பேருட நூலதனைக் கண்டால்
நவிலுமவர், வெகுபாரிது, ஞானமதுவாகில்
தேடுமறை, முறையாகிய, பொதிகை தனில் மேவும்
செயமான, முனியுரை, பாரிது தெளியுங் கவியாகில்
கூடும், ரவிமதியாகிய, வித்தாலுலிராகில்
குருலட்சண, வேதாந்ததனைக் கூறுமுயிராமே. (990)

உயிராகிய,குருபாரிது, உலகந்தனில் மனிதர்
மூலந்தனை யறியார், வெகு கூரந்தனைப் பாரு
உயிராகிய, கருக்கண்டனவுரு உலகத்தனி அரிது
உண்மை படு, தண்மைக்கு கருஉறுதிப்படுமாகில்
பயிராகிய, செனனங்களை வித்தாலுயிராகில்
படரும் சுரைக் கீரைப் போலவும், பத்து விதியதனால்
உயிராக்கிப் பத்தினி, சடமதனால் குறி கேளு
எத்தனையோ, பேயாகுதல், மதி தீவினையாமே. (991)

மதியால் வரும், கருமங்களை அறிவாலறிந்திடார்
மனமாக அறி, கொலைபாதகம், மறையாகிய சடலம்
ததியாகிய, பருவந்தனில் உறைவார்,பொருளாகில்
தசமாவது, சிசுபாதம், கொலை கூறிது காணீர்
விதியால் வரும், வினையந்தனை, மதியாலுரையாமோ ?
விழிமாதர்கள், கருவாகிய, வித்தாலுயிர் நாதம்
சதியாகிய, ஸ்திரியத்தனைக் கூறாய், வருஞ் செனனம்
சத்தானது, வித்தாலதை,சவரட்சணையாமே. (992)

இணையாகிய, வரையாரிது, துறை கண்டனர்
பெரியோரின, மாமது குணலட்சண இச்சையாகும்
துணையாகிய,துருகந்தனிலேறி, விளையாடும்
துதி, பூபதி, கனசத்தியில், துறை கண்டவராகில்

---

1. நண்பன்.

அணையாகிய, வாதந்தனையறிவால், அறிவார் காண்
அதனாபதி, மகிபூபதி, அமராபதியவர் தான்
கணையாகிய, புலவாணரில், கவிவாணர்களவர் தான்
கரை கண்டனர், வெகுலட்சணக்கரு கண்டனராமே. *(993)*

## கவிவாணர்

கருக்கண்டார், உரு உலகந்தான், காணப்படு பருமை
கண்கொடியில், ஒரு மானிடன், கருக்காணுவதருமை
அருக்கண்டனர், ஆராகும் முதல் கவியாகி
யாரும் அறியார்களிது, அது காணுவ தருமை
கருக்கண்டனர், கருதிமுடி, சுழியாகிய சூட் சஞ் சொல்லார்
பெரியோர்களது, துதியாது, அருமை
குருக்கண்டனர், ஏமச்சார்வனி குடிகொண்டவராகில்
கூறுங்கவி, செயலாரிது, குணலட்சணமொன்றே. *(994)*

குணலட்சணமறியாதவர், குலதீவினையாகில்
குறிவாசியில் உண வராமலும், கூர்காணுவதருமை
கல லட்சணக் கவியாகிய, மவுனப் பொருளாது
கருணை படு, சிவயோகிகள், கருச் சொல்வது அருமை
மருனமென லட்சணமிது, இது போலவும் இயல்பாவது
மனதால் வரும் கருமங்களை வஞ்சிப்பதும் அருமை
அருமையியல், வஞ்சகக் குலை காமுகர்க்கு
... .... ... ... இது லட்சணமொன்றே. *(995)*

இது வாகிய, மடமாதரில் நடையாகிய குறிக்கோள்
இலவக்கிளி, குறிலட்சண அகப்பட்டுதேயாகில்
இதுவாகிய, ஸ்திரீ சாதியில் விஞ்சிப்பதும் விரல்தான்
இயல்பாமிது, வீழ்பாவையில் ஒருவர் பேரிலுமையலாம்
இதுவாகிய, இடைக் குஞ்சரத் தொடைபாரிது மெதுவாம்,
விசையாடையும், மறுபாரிது விசையாகிய
குறிக்கோள்
இதுவாகிய, அதனாகிரிப் பொதிகை தனில் மேவும்
இயல்பாமுனி மொழி, பாரிது, லட்சணமிதுவே. *(996)*

இதுவாகிய, உலகந்தனிலவர்தான், மையல்[1] மாது
இனி வாழ், குயில் தொனிபோல இனி வாளுயல்வாக்கு
மெதுவாகிய, மதுவத்தினிவர், சாதியின் குறி காண
மேன்மைபடும் அங்க இலட்சணமேலாகிய புலவோர்
மதுவாகிய, அமுர்தந்தனை, மறுவால் சகிப்பார் காண
மனத்தாலறி, நிழல், பாருவை மதியாவது குறிக்கோள்
அதுவாகிய, தவ சிந்தனை எக்காலமும் மறவார்
அவர் காணு உருசியாகிய அமிர்த பதியொன்றே. (997)

பதியாகிய, வெகு சுந்தரர் பாடுங் கவியாகில்
பன்மை பெறு உலகந்தனில், பழுதொன்றுமே வாயார்[2]
அதியாகிய, மொழி நூலது, வியாலப்பாகி
அதில் பாரிது, கருக்கண்டன அவர் காணு வார் குருவை
சதியாகிய, மதியால் வரும் சகியே, சசியார் காண்
சற்றாலகிலும், கனபாக அஞ்சாரவர்[3] குறி காண்
விதியால், அவர்உரு, காணுவார், மொழிபாசையாகில்[4]
வித்தால், சட மொத்தால், குறி, வெகுலட்சணமிதுவே. (998)

சடமாகிய, வித்தாலெடு சன்னமதுவாகிச்
செயலம்பலது யரங்களைச் சினேகிப்பது மதிதான்
சடமாகிய, படையானது, குடைகாத்தமதிதான்
சவரட்சணை, சற்றாகிலும் சகியாமலும் மதிதான்
நடையாகிய, விழைதாரியில் மையமானமதிதான்
நாமிச்சையில், பொருளத்தனை, இகழுமனமதிதான்
எவராகிலும், நமதாகுவர், இயலப்பது மதியே. (999)

மதியால் வரும், கருமங்களை, வசனிப்பது மதிதான்
மனவேத, பெருளாகையால், வர்ணிப்பது மதிதான்
கெதியால் வரும், கன ஆண்மையும், கொடி பாதக மதிதான்
கெருவங்களைப் பகை போலவும், கெருவிப்பது மதிதான்
ஆதியால் வரும் போதக, அருளித்தது மதிதான்
அருவந்தனில், உருவானது, மகமானது மதிதான்
விதியாய் வரும், பதிவாதிகள், வெகுலட்சணமதியால்
இருபண்டிதர் உலகந்தனில் வெகுஉத்தமராமே. (1000)

---

1. பழ, 2. வார், 3. பாதகம் சாவார், 4. பாசை களாவில், 999ம் பாடலில் ஒரு அடி குறைவாக உள்ளது.

**வெரு லட்சணமாகில் ★**

உலகந்தனில், மொழி மாதவராயில், சங்கினியாகில்
உயிர்க்குண், மிரு லட்சணம் சிதமி, வாராகில்
உலகந்தனில், வெகுருத்தனில் உற்பத்தின் மாது
உயலோவர், மதியால் வராகிய, உழியோ
விழிப்பார்வை
உலகந்தனில், அவராண்மை மகள் வெகுபாரிது குறி, கேள்
உயலோ அவர், நடை குஞ்சர முயலாவது ஒன்றே. *(1001)*

முயலாவது, இனிக் காணுவார், தொனிசங்கதுபோல
மொழியாவது இடிபோலவும், உதிருமழை மாரி
முயலாவது இடிபோலவும், முதிருமழைமாரிபது மாதிவர்[1],
விழியோ சுழிமஞ்சள்
மேல்பாரிது வடமாருவை விழியோ கண்களுமாகில்
முயலாவது, கழியா, சடலமுதவாததுபாரு
உலகந்தனில் சங்கினி மூலக் குறியிது தான்
முயலாவது, இரு காணிரு[2], புரு சாத்தும யோகி[3]
முயலாடையில் வெகுமஞ்சளாய்[4],
முதலட்சணமாமே. *(1002)*

முதலாகிய கபாலந்தனிலுணர்வார் அவராகில்
முதி சுந்தரமோகக்கனி, முயல் பாதிவன்காணும்
முதமாகிய கடைவாயிதழ் உதிரும் பளபளென
முதலிஞ்சையில்,துயிலஞ்சுடன், முவாடைவள் குறிகாண்
விதமாகிய, விவர் சாடையில் பரிபாசை களயலம்
வெகுசித்திரப் பதுமைக்கினிமேவும் வடிமாது
சதமாகிய உயர் சங்கினி சாதிவராகில்
சார்வாயறி, கனயோகிகள் சாய் விதை காணே. *(1003)*

சயலான, சிவயோகிகள், சாயவிதைக் கேளும்
சற்றாகிலும், மனவேகஞ் சகியார், ஒரு நாளும்
பயலாது, மவுனந்தனி நிற்ப, கருங்குறியதனால்[5]
பரிபாசைகளறிவாரவர், பண்போரவர் தானும்

---

★இப்பாடலில் இரண்டு வரிகள் இல்லை.
1. பதிமாதிவர், 2. இருகாணிது, 3. புருசத்தின, 4.கச்சுவாய், 5. பகருவ.

மையாகிய, உலகந்தனில், மடவார் கனயோகி
மகழ்பாரிது, கணவன் மெய்யும், மதியுண்மை மறவாத
புயலானது, வடபாரிசம், விழியாகிய[1] நேர்மை
புவனங்களின், வருத்தமா, புகழத்தனையாமே. (1004)

புகழாகிய விழி, நேர்மையின் போதந்தன்னை கேளும்
புலவோர்களில் அவராகுவர், பொதுமை தனையாகில்
அகழாகிய, விழி சோதியில், மருங்கன ரவபோலச் சாந்தியில்
வெகுலட்சணமறியப்படுமாகில், ... ... ... ...
புகழாகிய, மவுனங்களையறிவார் ஒரு நாளும்
ஆனதொரு வாசிதனில், மருவாரவர் காணும்
நகழாகிய, தொடை பாரிது, வெகு பாச்சலுமாகில்
நமனாகிலுமவர் பேரிலே, தாடாரிக்[2] குறியே. (1005)

நாடாகிய, உலகோர்களில் நாமத்தைக் கேளும்
நஞ்சாகிய, விசம் போலவு, நகையாரவர், சேரார்[3]
காடாகிய, கிரிச் சாரலில், திரிவார், பெரியோர்கள்
கனகந்தனை, வேண்டாரவர், கருமங்களில் சேரார்
பாடாகிய, சிவவேடமே, பல நாளும் புகழ்வார்
பருமாதரை, வரு கோலுடன், படிலிங்க மேயுணர்வார்
கோடாகிய, குறிலட்சணயோகி, குறிபாரார்
குறி குண்டல, மகிபூபதியவரே. (1006)

★அவராகிய, செயந்தனில், பண்மை பெறும் குருடாம்
பகலாகிய, ரவி நேர்மையில் பற்றும் கனல் போல
மவராகிய, கலையாசன மறவார், பெரியோர்கள்
மடிமீதிலே, வெகு நீறுடன் மனையும், செபமாலை
நவராகிய, நாமங்களைக் குறிலட்சணமாக
நவிலும் பதி[4] பொதியைக் கருஞான குருபதியே. (1007)

பதியானது, வெகுஞானிகள், பரஞானிகள் குறிகோள்
பகரும் குறி, குணலட்சண பறியும், கலையறிவாய்
விதியதனால், சடலந்தனை, விலக்காமலும், தடுப்ப
வித்தாலுயர், விரதங்களை மேவார் பரதேசி

---

1. விளி, 2. நாடாரிது, 3. சோரார், 4. பத்தி. ★இப்பாடலில் 2 வரிகள் இல்லை..

சதிமானது, எவர்பேரிலும், குற்றங்களை நினையார்
சதாகாலமும், உலகந்தனில் ஒளியோரவராகில்
மதியானதே, படிலிங்கமாய், மவுனந்தனில் செவிபார்
மணிமந்திர அவிழ்தந்தனை மதிஞானிகள் குறியே. *(1008)*

குறியத்தனை, மிகுலட்சண, பரதேசியுமவர்தான்
குளகம்[1], பரை, வரமாலிய சுரமீதிலே[2] உணர்வார்
குறியத்தனை, எழுவச்சிரக் கூறதனைச் சடவார்
குலவாக் கதி, வெகுஞானிகள் குரு பக தருமவர் தான்
குறியத்தனை, அவர் கைத்துடல், சடலமே தவறாகில்
குறிலட்சணமிது போலவும், குறியாய் உணரார் காண்
மறியத்தனை, பொதியைத்தனில் மகிழு முனி நாதன்
வசனிப்பது, நூலிது அறிவிப்பது என்றே. *(1009)*

என்றாகிய, சடையொன்றுடனிருப்பார், அவரருண்மை
இமைச்சாரலில் வலமாகிடு இது கேசரக் குளிகை
நன்றாகிய, குருநந்தியின் ஆகந்தனைக்காண்பார்
நமனாகிய அவர், அபிமானிகள் எதிராளிகள் உண்டா?
வண்டாகிய, வங்களை, வரையாறுமோ, காண்பார்
வசியந்தனை, நசியங்களை மறவார் ஒருக்காலும்
கண்டாயிது, மிஞ்ச சுந்தரக்கவி, பாரிதுவசனம்
கருவாளிகள், அறிவார், கமலக் கலை யென்றே. *(1010)*

கலையானது, துரியந்தனில் கதறாமலும்
கல் போலும் வெகுவித்துடன் கட்டும் குகைவாசல்
மலையாதிரு, புனல் மாதரில், மைய வாகிய மனிதர்
மவுனந்தனில் சாராக் குறிமளிப்பாள் ரதி மாது
குலையாதிரு, கொண்டன் குலை மாதகராவார்
குருநிந்தனை, சிரமீனிவிடி, போலவுமாகில்
துலையாதகமினோ, பாதகம் புலையவராகில்
துருமார், பகையொரு, நாளுமேது சனிப்
பதுவிதியே. *(1011)*

---

1. குலகப்பரை. 2. கர்மத்திலே.

விதியால் வரும், விசிதங்களைப் பதிமேவுதல் போல
இவராசரகன்று, வானில் புலவோரிவராகில்
மதியாலுணர், வெகுலட்சணக் குறிபார், புலத்தியனே
மவுனந்தனில், கருவாளிகள் வர்க்கந்தனைக் கேளும்
சதியாலவர், ஒரு நாளுமே, சாராரவர், காணும்
சடை மூன்றுட, செபமாலை களா, ஆசனமாகில்
பதியால் வரும், இரசபாத்திரம், கவுனக் குளியாகில்
படைபோலவும், எதிர்பார்வை, பரமாத்துமவரே. *(1012)*

படையாகிய, மனவாசுயில்[1], பகருமவராகில்
பலனாவித, யுக கால, மவுனந்தனையறிவார்
சடையாகிய, சிவயோகிகள், குருவாகிய ஆசான்
சதமாகிய, புலவோர்களில், சார்வித்தனையாகில்
நடையாரவர், துறைக்கண்டனர் … … … … …
நலபிரம்மமுமவர் தான், சார்வித்தனையாகில்
நாள்தோறும் மேய, அப்பியாசமாய் நல்குமவராகில்
கடையாகிய மவுனக் குறி கண்டவர் வசனம்
கர்மத்[2] தொழில் உணர்வதனை
கலையாதிருமனமே. *(1013)*

## சத்தினி வகுப்புப் பெண்கள் இலக்கணம்

திருவான, மருவக் குயிலரு, சித்தினி சாதி
செயலட்சண, குறிக்கோள் மனத் தெளிவத்தனையாகில்
மருவான, முகலட்சணதிற, கோபதி நிறமாம்
மவுனக்கிளி, இருவாசியில் மகிழ்வதனைப்[3] போல்
அருவானது, அவர் சாதியில் வெகுலட்சணமாகில்
ஆடை, தொடை மிகு பேடியாம்[4], அவர்
சேதியைக்கேளும்
குருவானது, சிரமோ, முடி பருவந்தனை மாது
குமிழோ, முகம், விழியோர இக்குண இத்தனை
மனமே. *(1014)*

---

1. ஏழும், 2. காமத்தொழில், 1013ம் பாடல் ஓர் அடி மிகுந்துள்ளது. 3. உத்தக,
4. பேடியாவர்.

(உரை:) சித்தினி வகுப்புப் பெண்களின் இலக்கணம், வெள்ளை நிறமாம் (கோ-பசு, பதி-சிவன், கோபதி-காமதேனு) பெண்கள், பேடியைப் போல இருப்பார்கள்.

குணமாகிய ரதி, மன்மதக் கூறாகிய சென்மம்
குலமோ, அவர் மனமிச்சையில், குயிலோ அவள்
குரல்தான்
மனமாகிய மயிரே, நிறம், வைடூரியம் போலாமவர்
சுந்தரவாயோ அக்கினி, மாதந்தனைக் குறி காண்
செனமாகிய, சென்மச் செவியோயிலே அவள் நடைகேள்
செயலான தையின், குறிகாணிது, செயல் சித்தினிரா
கனமாகிய, கடைவாயிதழ், ஏக முகத்தினை நிறமாம்
கதிராக்கினி, கோவைப்பழங்கண், சாயல் கேள்
மனமே. (1015)

(உரை:) ரதி மன்மதனின் பகுதியான பிறவி, குயில் போல் குரல், மயிரின் நிறம் வைடூரியம், தீயைப் போன்ற செவ்வாய், முகம் கதிராக்கினியின் கோவைப்பழச் செந்நிறம்.

செயலான வரிவராகுதல், சசியோயிவராகி லட்சணம்
போதினி, வெகுலீலைகள் சசிவாளிவார் மாது
மயிலாகிரி, துயில் சாரிடுங்குயிலோ இவள் வாக்கு
வலமோ, இடம், புசபாரிச மயிலே, ஒளிவாகில்
நயலா, மதிகளை, சுந்தரமொழியோயுரை யெட்டு
மயிரோ, கணுப்பாதம் வரை நாடியு மயிர் மான்
பயலான, வளதி, மோகினி, பாளையிவராகில்
பரிவித்தனை, குறிலட்சணம் பண்மை
பெறுமனமே. (1016)

(உரை:) தலைமயிரானது கணுக்கால்வரை நீளமாக இருக்கும்.

பண்மை பெறு, பனமாமிது, பரி லட்சணமாகில்
பண் போரிதை, யறிவார், செல்[1] பரிபாசையுமாகி
உண்மைக் குரு திறமாகிய உலகந்தன்னில் பற்றே
ஒருமைப்பாடு அவர், சாதியில் குறி இத்தனை
விதமாம்

1. சொல்.

தண்மைக் கரு, புசத்தன மருவித்தவராகில்
மைந்தன் பிதிர்போலவும், தருவார் சுகபோகி
உண்மைக் குறி, பொதியை தனில் வளருங் குருநாதர்
மனமால்,மகிழுரையாகிய வசனிப்பது மனமே. (1017)

வசனிப்பது, மது சித்தினி, கை சாடையுமாகில்
வருசிப்பது, மயில்பாசையும், விழிப்பார்வை யுமாகில்
துசனிப்பது, துயிலாடையும், கரநீக்கு வதாகில்
துயரங்களும், விசனங்களும், தோன்று மடராகில்
தசனிப்பது மேல்,பார்னர், உதயன, சுழலாகில்
நரமானியறியவர், காணக் குறி நவசித்திரமா
வசனித்ததனை, குணலட்சண இத்தனை மனமே (1018)

மனமித்தனை, முன்லட்சணவிதமெத்தனைகுறி காண்
மதுபற்பிணியுருலட்சண நிறமொத்தவராகில்
குணமொத்தனையவர், சாயலின் கூறதனைக் கேளு
குலவர்க்கமுமது, சத்தது குலமித்ததனை விதமாம்
சுனமித்ததனை, அவளுக்குத்தமி, பத்தினியாகில்
சடமானிடவர், சேரிடம் கலவானிவள்
தனமித்தனக் குறிமாறிட, வெகுநித்தம்மறவாள்
தலமாகியது சிந்தனை, தன வாளிரு மனனே[1]. (1019)

மனமாலிகை, காணப்படு, மறையோரிட வாக்கிய
மதியால் பழு, சிதறாதிரு, மறவாதே கேள் மனமே
புனமாதிவள், அரவு குஞ்சகி, துயிலாடை இனி நிறங்கேள்
பனைனக்கறி, கருநீலியின் புகழ், சாயலின் குறி காண்
அனமாழிதை, அறியப்படும், பொறுமைப்பது, மாது
அவள் போறதோ, ஒயில் சாடை கேள்
சல்மானக்கலையாகில்
எனமானது, முடி சித்தி நிறமோவது பச்சையியல்
போரசக் கவுனக் குறி முடி யறி மனமே. (1020)

அறியாதவரிது, நூல் அறிவத்தனை கண்டாலவர்
அவர் ஞானிகள், மிக உத்தமர் ... ... ... ...
அறிவார், பரிபாசை குறியா, தவமிருவாதவர் குடைமத்தனை
அறியார் குகைச் சாரலில் மருவாத அவர் சித்தரு மல்ல

---

1. வாளிருமனெனே. 1018ம்பாடல் ஒரு அடி குறைவாக உள்ளது.

பரியாநதி மணி வாசலின் தசையாகிய மற்றும்
பலநாடியின் குறி காணுவர், பர[1] ஞானிகளாகும்
மறியாத, அவரவர் போலவும், புரியாத உலகத்தில்
மயிலேறி, அறிவாகர மகிழ்வீர் குருமனமே. (1021)

**விருத்தம்**

அறிவாகச் சொல்லிவிட்டோம், புலத்தியனேகேள்
அருளினோம், நாம், சாதிலட்சணத்தைச் சொன்னோம்
சரிவாகச் சொல்லவில்லை, இவ்வெண்ணூறு பீடம்
சாற்றினோம், அகராதி நிகண்டிதாகும்
வரிவில்லாக் காண்டமெட்டு, லட்சணமாய்ச் சொன்னோம்
விளம்பினோம், யோகிகளுக்கு நாமும்
திருவான, மருவுருவின் வாசம் போலத்
திரட்டிக் கருக்கிடையாய் செப்பினோமே. (1022)

செப்பினோம், அதீத நற்சேதி யெல்லாம்
செயலான பரிபாசை யெல்லாந் தேறி
செப்பினோம், அதனுடைய கருவைக் கண்டால்
இருக்கலாம், இமையச் சாரலில் கற்பங் கொண்டு
ஒப்பினோம், கவுனங்கொண்டு, ஓடலாகுமோ
கோரசக் குளிகை போடலாம் பார்
வெப்பினோம், இந்த நூலை … … … … … …
வெளிவிட்டால், தீநரகில் விழுவார் தாமே. (1023)

தாமென்ற, இந்த நூலைப் பதனம் பண்ணு
தப்பாமல் சிவ; சத்தி பூசை பண்ணு
வேனென்ற, கணேசன், கந்தன் பூசை பண்ணு
மகத்தான பயிரவத்தின் பூசை பண்ணு
வேமென்ற, வேதாந்த பூசை பண்ணு
மேலாதார அதன் பூசை பண்ணு
நாமென்ற ஆணவத்தைத் தள்ளிப் போடு
நாற்பது நாள் கற்ப முண்டால், நரை தான் போச்சே. (1024)

---

1. புற. 1023ம் பாடலில் இமைச்சாரலில் என்பது இமயச்சாரலில் என்று இருத்தல் வேண்டும்.

(உரை:) புலத்தியரே, அறிவுள்ளதான நூலைச் சொன்னேன். இலக்கணம் கூறினேன். 800 பாடல்களைச் சொன்னேன். எட்டு காண்டமுள்ளதாக, யோகிகளுக்கு நாம் சொன்னோம் தெளிவாக. அதிகமான நூல்களின் கருத்துகள் மறைவானவைகள், எல்லாம் தெரிந்து சொன்னேன், கற்பம் உட்கொண்டு, மணியைச் செய்தும், குளிகை தயாரித்தும் பார்க்கவும். எல்லாருக்கும் கூறினால் தீயுள்ள நரகத்தில் விழுவாய்.

இந்த நூலை காப்புடன் வைக்கவும். சிவ சக்தியின் பூசை, கணேசன், முருகன், பயிரவத்தின் பூசை, வேதாந்த பூசை என்பனவற்றைச் செய்யவும். தான் என்ற எண்ணத்தை நீக்கவும். 40 நாள்கள் (மண்டலம்) கற்பம் சாப்பிட, நரைதிரை என்பன நீங்கும்.

போச்சென்ற, கற்பமுண்ண, முன்பதாகப்
புகழாக, நோயணுகா, அவிழ்தமுண்ணு
வாச்சென்ற, மேற்சூடு அற்றுப் போனால்
மகத்தான, மேகச்சூடற்றுப் போகும்
நோச்சென்ற, நோயணுகாமல் தானே
உறுதிபடும் வச்சிரம் போல, தேகமதாகும்
காச்சென்ற, கன்மநோயதனால்
கைலாயத்தேகமதாய் காணும் பாரே. (1025)

(உரை:) கற்ப அவிழ்தங்களை சாப்பிடுவதற்கு முன்னால், நோய் தடுக்கும் மருந்துகளை உண்ணவும். உடல் சூடு குறைய, மேகத்தால் ஏற்படும் வெப்பமும் குறையும். உடல் இடிபோல உறுதியாக இருக்கும்.

காணப்பா, சுந்தரமே சொல்லக் கேளு
கழன்ற தென்றால், சட்டையது, காயம் புலப்படுங்காண்
ஆணப்பா, நீயானால், இந்த நூலில் பாரு
அசடரென்ற, மாந்தரென்றால், அடுத்திடாதே
நாணப்பா, சிவதீட்சை, சத்தி தீட்சை
நாள்தோறும், மறந்திடா, நளினமாகக்
கோணப்பா, குறையேது, வறுமை யேது
குருவான, ஆசான் அனுதினமே கொஞ்சுவாரே. (1026)

1026ம் பாடல் சரசுவதி மகால் சுவடியில் இல்லை.

(உரை:) மேலும் கூறுகின்றேன். கற்ப அவிழ்தங்களை உண்ண, உடலின் தோல் உரியும், உள் உறுப்புகளைக் காணலாம். சிவதீட்சை,சத்தி தீட்சை என்பன தினமும் செய்யவும். வறுமை, குற்றம் வராது.

வாரான, நாசி, பல நன்றாய்க் காணும்
வாசியிலே, சுவாசமதினோடுங் காணு
மாறாதப் பிராசமம், மகத்துவம் காணும்
மகத்தான ரசக் குளிகை, வளமாய்க் காணும்
பேறான, பஞ்ச காவியமும் காணும்
பேசினதோர், இந்நூலின் பெருமை காணும்
தோறாத, கருக்களெல்லாம் தெரிந்து தேறு
தெய்வத்தின் செயமாகில், தேறுவாயே. (1027)

(உரை:) மூச்சு காற்றை நன்றாக இழுத்துக் கொள்ளும் அதிகமான காற்று இருக்கும். மாறாத எழுத்தோசை ஒற்றுமை, புகழ் ஏற்படும். ரசக்குளிகை செழுமையுடன் காணப்படும். பெருமையுள்ள ஐந்து காவியங்களும் இருக்கும். இந்நூலின் புகழைக் காணலாம். கருப்பொருள்கள் யாவும் தெளிவுடன் அறிந்துகொள்ளலாம். இறையருளால் வெற்றி பெறலாம்.

தேறுதற்கு, யோனியாசை, விடாதே பாரு
திண்டியிலே, மனம் வைத்தால், சிதறிப்போகும்
வீறுதற்கு,விந்தாலே, மதியைக் கூடு
விந்ததனால், நாதமதைவிதமாய்க் கட்டும்
கோருதற்கு, சற்குருவை, தானிரண்டனாலே
கோடான கோடி, விந்தைத் தொழிலேயாடும்
மேருவைத் தானீறாக்கும், இந்த வித்தை
மேலான, சித்தர் செய்யும் விதமதாமே. (1028)

(உரை:) பெண்களின் மேல் விருப்பமும், தன்னைப் பற்றிய தம்பட்டமும் மனதைக் கெடுக்கும். பெண்ணாசையை விட்டு, அறிவை, ஆண்மையுடனிருக்கப் பெருக்கலாம். கந்தகத்தால் ரசத்தைக் கட்டலாம். ஆசிரியரை மதித்து, வணங்க வெற்றிபெறலாம். இது சித்தரின் செயல்முறைகளாகும்.

விதமான, பண்டிதர்க்கீடோ, சொல்வோம்
மேலான, ஈடதற்கு ஈடுண்டாமோ ?
அதவார், சத்துரு, மித்துருக்களெல்லாம்
அட்டவசிய மாடும், தலை வசியமாடும்
செதமாவார்(ஸ்)திரீ வசியம், புருசவசியந்தான்
செக வசிய உலகமெல்லாம், மிருகவசியந்தான்
உதமாகும், மகாராச[1] வசியந்தாடும்
உல[2] வசியம், பூதகணவசியமதுவாமே. (1029)

(உரை:) மருத்துவர்களுக்கு யாரும் ஈடாக உள்ளார்களா? நண்பர்கள், பகைவர்கள், எட்டுவிதமான (வசியம்) தன்வயப் படுத்தல், பொருட்களை தன் வயப்படுத்தல், பெண்கள், ஆண்கள், உலகத்தோரை தன்வயப்படுத்தல், விலங்குகள் உயிரினங்களைத் தன் வயப்படுத்தல், அரசர்களை, பூதக் கூட்டங்களை தன் வசமாக்கல் என்பன மருத்துவர்களால் இயலும்.

### சர்வ வசிய ஈடு - செய்முறை

வசியமாம், ரதி[3] மாது, பிரவிடை நாத மாகில் எட்டு
பலம் வாங்கிப் பாண்டமதிலிட்டு
அவசியமா[4], ஆண்பிள்ளை, பிறந்தேயாகி[5]
அதன்மேல், மாக்கருத் தாண்டிப்படியும்[6] பாரு
மசியமாக் கருகில், நான்கு பலம் வாங்கி
மகத்தான நாதம் விட்டப்பாண்டமதில் தாக்கி
பசியமாம், பேய்க் கருப்பஞ்சாறு படிவிட்டுப்
பனங்கள் ஒருபடிதான் பாண்டமதில் வாரே. (1030)

வாரப்பா, வெள் வேலம்பட்டைச்சாராயம்
வாரப்பா, ஓர் படிதான் வளமாய் நீயும்
வேரப்பா, வெண்சாவல் உதிரம்படி வாரு
வெள்ளைப்பாடாணமதில் எட்டுப் பலந்தாக்கு

1. மச்சவசியம், 2. சுகவசியம், 3. இரவி, 4. நசி, 5. மருந்தே, 6. படரும்.

தாரப்பா, காட்டெருமைக் கொழுப்பு சேர்தாக்கு
கருவை, ரத்தம் பிச்சுக் கருவாகப் போடு
ஆரப்பா, ஆந்தை கோட்டான் பிச்சதனில் போடு
அருளினோம், இந்திர கோபம் அரைச் சேர் போடே.*(1031)*

போடப்பா, புலத்தியனே, இராச யோகி
பிண்டச் சரக்கதிலே, பலந்தான் போடு
நாடப்பா, நாதவிந்து, இருபாகந்தான் வாரு
நளினமெனும், கத்தசலமெண் பலந்தான் வாரு
பாடப்பா, கவிழ்தும்பை, நன்னாரி ... ... ... ... ... ...
படரழிஞ்சி, தசமூலம் எண்பதலந்தான் போடு
பருவான, வேல்வீதம், பலந்தான் போடு
தேடப்பா, கழுதை நெய்தான் ஐம்பலந்தான் வாரு
கட்டுக்கொடிச்சாறு, அரைப்படிதான் வாரு. *(1032)*

தானான, இவ்வகைகள் வீதம் குறையாகா
தப்பாமல் எடைதவறா, பாண்டமதில் தாக்கி
வானான, சாணக்கை[1], அதன்மேல் மூடி
அண்டக்கரு, மெழுகதனால், சந்து வாய் செய்து
கோனான, கோழி விந்தால், சீலை யேழும் செய்து
குருக்கல்லு, மண்ணதின் மேல் குறுங்கவசம் செய்து
ஆனான, மண்டலந்தான் பூமிக்குழி தன்னில்
அப்பாண்டம், வைத்ததன் மேல், சமாதி எரு மூடே.*(1033)*

மூடியே, மண்டலந்தான், பூமிதனிலிருந்தால்
மூதண்டவானால், குமரிநாத மிறங்கும் பார்
நாடியே, ஐயநாடியில், செழுமை மாக்கருதான்
நலநீ பாகமது போல், நலமாய்க் காணும்
தேடிய, ஐயபாகம்[2], செய்பாகமானால்
தெளிவான, பாண்டமதையெடுத்து நீ ஐயா
பேடியாய், திரியாதே, மண்கவசம் வாங்கி
பேறான, சீலையெல்லாம், கழல் நெறிந்து[3]
போடே.*(1034)*

---

1. உரக்கை, 2. அப்பாகம், 3. எறிந்து.

போடந்த, பாண்டமதைப் பார்த்தீரேயானால்
பூதகண, வேதாளம் அதனருகே காணும்
நாட்டந்தவான், குமரி நாதமதையப்பா
நலமான, சீசாவில் தெளிவை மிகவாரு
சாட்டுநீ, அடியில் நின்ற, பாகதனை யெடுத்து
சார்வான, கல்வமதில், சம்பிரதாய் நாடி
ஆட்டியந்த, நாதமதை, ஆறு பலமிட்டு
அடவாக, வற்ற, ஆறு நாள் தானாட்டே. (1035)

ஆட்டினால், கருமெழுகுபோலாகும் பாரு
அம்மெழுகை வழித்துக் குன்றியிடைய, தான்பாகம்
நாட்டியே, இடு குளிகை, மாத்திரையாய்ச் செய்து
நாதாந்தா[1], சிரோன்மணியின் வாலை பூசை செய்து
காட்டிடாய், இக்குளிகை, கருணை பெறவேண்டும்
கலியுகத்து மாந்தரெல்லாம், கைவசமா ? என்னும்
பாட்டியே, பண்டிதரே, கேளு, மதிதனிலே யுலர்த்தி
பதனமாய், கரைச்செப்பில் குளிகைதனை
வையே. (1036)

குளிகையா, இக்குளிகை, கைவசமானால்
குருவென்ன, இதற்கீடு கூறப்போமோ ? தான்
நளியாதே, லோகமதன், பண்டிதரே, கேளும்
நாட்டிலே, மனிதருக்கு, நோய் வருமே யானால்
அளிகையாம், விசமிதில் ஒரு குன்றியில் கடுகு
அதில்கலந்து, நோயாளிகட் கீந்தாயானால்
உளிகையா 2, நோயெல்லாம், உடலை விட்டோடும்
ஓகோகோ, அனைவரும், அவனருக்கு
ஒருமைப்படுவாரே. (1037)

ஒருவனும் சதா, காலமுனை விட்டுப் பிரியார்
உயிர்போகும் நாள், வரைக்கு உனதிடமே இருப்பார்
அருமையெனு, அவ்வீரியார் மக்களாவார்
அறிந்தவர்கள், இம்முறையைத் தொழிலாகச் செய்வார்

1. காந்த, 2. உளிகையப்பா.

வறுமையெனு, உந்தனுக்கு வராதிது
குளிகை,மண்டலமெல்லா, அதனால் வசியமையா
சிறுமை, வராதுனக்கு, அதீத ஈடுபாடும்
செப்பினோம், திரவியங்கள் கொடுப்பார், செகத்தீரே. (1038)

ஓரான[1], ஈடுபாகம், செய்யக் கேளய்யா,
ஓகோகோ, மனிதருக்கு அவிழ்தமதில் கொடுப்பாய்
பாரப்பா, இடுமருந்து, பரிட்சையது பாரு
பனைவெல்லம், காசெடையில் குன்றி, இரு கடுகு
ஆரான, தூள் செய்து, சுன்னமதில் கலந்து
அவ்வெல்லா, அதில் சேர்த்து, நாயின் முன்னேவைத்து
ஊர்தோறும், திரியும், கருநாயது உண்ணும்
ஓகோகோ, வெகு மயக்கம், உன்பிறகே வரும்.(1039)

**ஸ்ரீ வசியம்**

வருகுமென்று, நாயகனை,வர வழைத்தால்
வாய் திறக்கும், போதிலது, வரும் பாரையா
தருகுமென்றவிடு குறியை, நன்றாய்ச் சொன்னோம்
நாட்டிலே, மனிதருக்கு, நாட்டினாலையா
உருகு மென்ற, என்சிரக படிரென்று வெடிக்கும்
ஓகோகோ, பொதியை நாயகன், சொன்னஉறுதி வாக்கு
அருகுமென்ற, ஆரிழையார் ஸ்ரீ வசியங்கேளு
அண்டங் காக்கை யண்ட வித்தில், உரைத்ததுதாக்கு.(1040)

தாக்கியே,வா வென்று ஸ்தனத்தைத் தொட்டால்
தப்பாமல், உன் பிறகே, தையல் வருவாள் காண்
தாக்கிய, உந்தனுக்கு வேணதெல்லாம், கொடுப்பாள்
நாடதிலே, மனிதருக்கு நல்ல ஈடுயிது தான் வாக்கில்
சொல்லிவிட்டோம், பின்னொரு வசியம்
வசனிப்போம், புலத்தியனே, புருசவசியந்தான்
போக்கிலே
சொன்னதெல்லாம், மலையாதே மக்காள்
புருச ரத்தினமா, இப்பொடி, அறிவாய் நீயே. (1041)

---

1. விலங்குகளைக் கொண்டு ஆய்வு செய்யும் முறை தொன்மைக்காலத்தே இருந்துள்ளதை இப்பாடலில் காணலாம்.

### புருச வசியம்

பொடி, அரியகத்தூரி புனுகுவிதம் உளுந்து
போத, அரவாய், எடுத்துக் கரம் நடுவில் வைத்து
அடி அரியச் செவ்வாலரணைப் பித்தும் சேர்த்து
அரகரா, இவ்வீட்டில் கடுகுவீதம் சேர்த்துக்
கடினக்குள், கன்னிமுலைப்பாலிடை தானிட்டு
கரமது வால், மத்தித்துக் கருணை பெற வழித்து
நொடிக்குள், நெற்றிதனில், திலதந் தானிட்டுச்
செயம் பெறவே, வீதிநகர், சுத்திவா யென்னே. *(1042)*

சுத்திமா, நகரை வருகையிலப்பா
சுருதியாம், புருசரெல்லா எதிர் கொண்டு பணிவார்
அத்தி, மதயானை போல் வட்டமிட்டுச் சென்றால்
அவரவர்கள், திரவியங்கள், கொண்டுனக்குத்தருவார்
புத்தியுள்ள, சுந்தரமே, புலத்தியனேயப்பா
புரச ரெல்லாம், இவ்வீட்டில் போதம்ப மாவார்[1]. *(1043)*

### கலிப்பா

குருவாகிய மொழி நூலது, குணலட்சணமாகில்
குறிபார், சிவகனயோகிக் கூற, தயை அதனால்
மருவாகிய, மலார[2] வாடையின், வாசமதமயனால்
மதியாகிய, கலைசந்திர அதிஅந்திரமாகில்
திருவாகிய, கருவாளிகள், அறியப்படும் இந்நூல்
தெளிவாமிது, அமிர்தக் கவி, புலவோரருளுறைதான்
சருவாகிரி, சாரலின்[3] சார்வதனைக் கண்டோர்
சமாதிக் குறி மிகு, லட்சணவெகு உத்தமர்
மொழியே. *(1044)*

மொழியாகிய, வழிப்பாதைகள் முதலாய்[4] குறி கூறினோம்
முனையாகிய, சுழியாதல், மூலவரையதனால்
வழியாகிய[5], சலமாகுதல், மொழியுமருபொதிகை
வளரும், எழு[6], தமிழாகிய வரையும் கவி, புலவர்

---

1. போதை மயமாவார், 2. மாற், 3.அருவாகியகரி சாலையின், 4. முதல்மாய,
5. வளி, 6. செழு.

தமிழாகிய, சேனாபதி, தழையும் குருமார் சரணம்
பணி, விழ லொன்றுள், தருவித்தது மருவால்
சுழிவாகிய, சடலந் தன்னைக் காராமல் ஐங்காயம்
கனவாதைகள், கனமானதால், கருவானதும்
சடமே. *(1046)*

**கலிவெண்பா**

சடமா, முது மாமயிலே, செப்பக்கேள் காண்டமெட்டும்
மருவளஞ்சித்தருக்கு, வசனித்தோம் அதீத நூல்
சடமுழுது மாமயிலே, செகமதிலே மானிடர்கள்
நடவழியினாசை விட்டு நல்வினையாய்,
நல்மனதாய்
சடமுழுது மாமயிலே, தெளிந்து, பஞ்சகாவியமும் பலிதா
சித்திபெற, பல்கலையும் பாடினோம்
சட முழுதுமாமயிலே, செனித்தெண்ணூறு
ஆயிரந்தான், அவர் கவியோ, சொன்ன இந்த [1]
வாக்கிலே. *(1046)*

வாக்கான, இந்நூலில் வசனிப்பதெல்லாம் மருந்து
போக்கான, பாதந்தன்னில் போட்டு வைப்பாய்
எட்டெட்டில்
நாக்கான லட்சணமோ, நாலு திசை புலவருக்கு
சாக்காகச் சொல்லவில்லை, கார் குழலே நீ கேளு
போக்கா தெல்லாம், மருந்து புகட்டிவிட்டோம் இந்நூலில்
வாக்கான, வரிசையுள்ளோர், வசனிப்பார்,
கருக்களெல்லாம்
தேக்கான, தென் பொதிகை, தட்சாணமூர்த்தி [2] அருள்
மொழிதான்
பாகு பெறச் சொல்லிவிட்டோம், பயனறியே. *(1045)*

---

1. இந்த வாக்கிதுவே, 2. தட்சணாயன்.

1046ம் பாடலில் 6, 7 வரிகள் சரசுவதி மகால் சுவடியில் இல்லை. இது கலி வெண்பா இல்லை.

### விருத்தம் - காண்டம்

பயனறியா, வாதத்தின் கருவை விண்டோம்[1]
பாடினோம், மூன்று காண்டம் முழுவதும் சொன்னோம்
அயனறிய, வைத்தியத்திலிரண்டு காண்டம்
அருளினோம், சொச்சமில்லை[2], முழுவதுஞ்
சொன்னோம்
மயமறிய, மாந்திரிக காண்டம் முழுவதும் சொன்னோம்
மருன மெய் ஞான, ஒரு காண்டம் சொன்னோம்
சயவறிய, பஞ்ச லட்சணத்திலொரு காண்டம்
சொன்னோம், பண் பாரே, சார்ந்தாரே. (1048)

### தொகுப்பறியவும்

சார்ந்துபார், பஞ்சலட்சணங்கள் பார்ப்போர்
சாத்திரத்தின், வடசார்வு கண்டோர்
சார்ந்துபார், சிவயோகி, மெய்ஞானத்தோர்
சமாதிக் குகைபார்த்த தபசி, சித்தரெல்லாம்
சார்ந்து பார், வேதாந்தம் கற்றோர்
பண்போர், தவசி முனி, ரிசி, மவுனி
சார்ந்தோர்க்கெல்லாம்
சார்ந்து பார், இந்நூலதீத பீடம்
சகல கலை, அறுபத்து நாலு சித்தே. (1049)

சித்தான அறுபத்து நாலு கலை ஞானம்
செப்பினோம், அதனுடைய
தெளிவைச்சொன்னோம்
முத்தான, பதினெண்சித்தர் சொன்ன மொழிகளெல்லாம்
குரு நூலாய் மொழிந்தோம் நாமும்,
கற்றாலும், இது, பொருளைக் கூற வேணும்
கைலாச மூர்த்தியருள், இருக்க வேணும்
சுத்த பரியுத்தமனாய் இருக்க வேணும்
சூட சடாதர பீட முழுவதுங் காணே. (1050)

---

1. விண்டுரம், 2. சோடச.

காணுதற்குப் பரிபாசை பேர்கள் சொன்னோம்
கடைக்காண்டமெட்டாகில், கருவுஞ் சொன்னோம்
வேணுதற்கு, பஞ்சகாவியத்தின் சூட்சம்
வெளியிட்டோம், இந்நூலின் விளக்கமடா
வேணுமென்று, கருவியெல்லாம், நன்றாய்ச் சொன்னோம்
உத்தமர்க்கே, அதீதசித்த உண்மையாகும்
தோணுமது, அமர்ந்தநந்நீதம் போலத்
திரட்டினார் நிகண்டுரைத்தார், அகராதியாமே. *(1051)*

ஆமென்ற, அகராதி சொச்சமெல்லாம்
அருளினோம், ஆயிரத்தறுபதுக்குள்
காமென்ற, கருக்களையெல்லாம், வசனித்தோம்பார்
கடைத்தேற, சடலமெல்லாம், பலப்படுமென்று
நாமென்ற, மாமுனிவருரைத்த நூல்
நளினமெனும் பதினாறு லட்சக் கவியாகில்
வேமென்ற, காவிய நிகண்டாய்ச் சொன்னோம்
இது களெல்லாந் திரட்டி, இந்நூலின் மொழி
சொன்னோமே. *(1052)*

சொன்ன வாக்கியங்கள், பாசத்தால்
சொரூப நிலைதான் இந்நூல், வெளிவிடாதே
அன்ன மொழி, பஞ்ச காவியமும் இந்நூல்
அருளினதோர், சவுமியத்தோடே ஏழுநூலின்
பின்னமில்லா, சூத்திரங்களனந்தம் சொன்னோம்
பிறழாமல், இதுகளிட கருவைச் சொன்னோம்
கன்னல் மொழி, சிதம்பரமாம்வாலை பீடம்
கமலபத சரண மென்ற, எண்ணூறு முற்றே. *(1053)*

# உயர்திணைப்படலம்

## தெய்வ வர்க்கம்

| வ. எண் | பெயர்கள் | பாடல் எண் |
|---|---|---|
| *1.* | *சிவன்* | *1* |
| *2.* | *உமையாள் (பார்வதி)* | *1, 132* |
| *3.* | *மான் மழுவேந்தும் தேவர்* | *1* |
| *4.* | *கணபதி* | *1, 132* |
| *5.* | *கந்தன்* | *1, 132* |
| *6.* | *பசுபதி* | *132, 133* |
| *7.* | *கனவீரபைரவர்* | *1* |
| *8.* | *நந்தி* | *1* |
| *9.* | *தன்வந்திரி* | *1* |
| *10.* | *அசுவினி* | *1* |
| *11.* | *அம்பாள்* | *1* |
| *12.* | *கமலி* | *2* |
| *13.* | *சதுர்முகன்* | *2* |
| *14.* | *உருத்திரன்* | *2* |
| *15.* | *வாணி* | *2, 132, 3* |
| *16.* | *மகேஸ்வரன்* | *2* |
| *17.* | *பரமேஸ்வரி* | *2, 3* |
| *18.* | *வல்லபை* | *2* |
| *19.* | *சதாசிவம்* | *3* |

| வ. எண் | பெயர்கள் | பாடல் எண் |
|---|---|---|
| 20. | சித்தர் | 4, 12, 1028 |
| 21. | புலத்தியர் | 4 |
| 22. | ஈசன் | 14 |
| 23. | தட்சணாயன் | 4 |
| 24. | கைலாசபதி | 140 |
| 25. | மன்மதன் | 143 |
| 26. | பிரமன் | 262 |
| 27. | சூரியன் | 28 |
| 28. | சந்திரன் | 28 |
| 29. | சாமீபம் | 20 |
| 30. | மேரு | 140 |
| 31. | ஆதியந்தம் | 3 |
| 32. | சடாதர பீடம் | 3 |
| 33. | யோனி | 3, 242 |
| 34. | அம்பாள் | 1 |
| 35. | ஈசன் | 14 |
| 36. | மேகம் | 259 |
| 37. | வடபூமி நீர் | 253 |
| 38. | தென்பூமி நீர் | 254 |
| 39. | மேல்பூமி நீர் | 255 |
| 40. | கீழ்பூமி நீர் | 256 |
| 41. | கவி வாணர் | 994 |
| 42. | கவி லட்சணவான் | 963 |
| 43. | நீர் | 667 |

# மானிட வர்க்கம்


| வ. எண் | பெயர்கள் | பாடல் எண் |
|---|---|---|
| 1. | நாற்திசை மனிதர் | 16 |
| 2. | நூல் சாதிக் கரு | 21 |
| 3. | பிரம்ம குலம் | 22 |
| 4. | வைசியர் | 24 |
| 5. | பல்வேறு பெயர்கள் | 148 |
| 6. | பெண்களின் பிரிவுகள் | 265, 949 |
| 7. | வண்ணங்கள் | 266 |
| 8. | அத்தினி | 267 |
| 9. | சித்தினி | 258, 953 |
| 10. | பத்மினி | 269, 888 |
| 11. | ஞானிகள் | 619, 887 |
| 12. | தாய் | 621 |
| 13. | கனயோகி | 781 |
| 14. | யோகிகள் | 871, 886 |
| 15. | வேதாந்திகள் | 883, 895 |
| 16. | வேத முனிகள் | 884 |
| 17. | மவுனிகள் | 885 |
| 18. | சித்தர் | 1028 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.